# AMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY 1st DECEMBER 1973

Volume CXIII—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1973

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 Paise]

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-SIXTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

1st, 3rd, 4th and 5th December 1973.

Volume CXIII (Nos 1 to 4)

TABLE OF CONTENTS

*Saturday,* 1st *December* 1973.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | ix–xi |
| I. Questions and Answers ... ... ... | 1–17 |
| II. Announcement *re* Message from the Assembly | 17 |
| III. Calling attention to matters of urgent public importance— | |
| (1) Non-payment of salary for October 1973 to teachers of Singanallur Municipality, Coimbatore district ... ... ... ... | 18–19 |
| (2) Labour dispute and consequent distress to workers of Nagapattinam Steel Rolling Mill ... | 19–20 |

63107

PAGES

*Saturday, 1st December 1973—cont.*


IV. Government Motion *re* Suspension of Rule 21 (3) of the Council Rules ... ... ... ... 20

V. Government Bills—

(1) The Tamil Nadu Local Authorities Finance (Second Amendment) Bill, 1973 (L.A. Bill, No. 33 of 1973) ... ... ... ... 20–23

(2) The Tamil Nadu State Housing Board (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 30 of 1973) ... ... ... ... ... 23–48

(3) The Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 37 of 1973) 49–50

VI. Statement under Rule 82 *re* President's assent to the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Landowners' Rights) Bill, 1973 ... 48

VII. Papers laid on the table of the House ... 50–51


*Monday, 3rd December 1973*


I. Questions and Answers ... ... ... 55–71

II. Announcements—

(1) Message from the Governor ... ... 72

(2) Message from the Assembly ... ... ... 72

III. Nomination of Members to the Business Advisory Committee ... ... ... ... 72–73

IV. Government Motion *re* Suspension of Rule 42 (5) of the Council Rules ... 73

V. Calling attention to matters of urgent public importance—

(1) Situation created by Order of Director of School Education about applications for transfer of Teachers appointed in Government High Schools (B Wing) 73–76




PAGES

*Monday, 3rd December 1973—cont.*


V. Calling attention to matters of urgent public importance—*cont.*

(2) Fasting by college students in Vellore and consequent closure of High Schools and Colleges 76–77

(3) Closure of Sri Rani Lakshmi Ginning, Spinning and Weaving Mills Private Limited, Coimbatore and consequent distress to workers ... 78

(4) Non-regularisation of services of B.T. Assistants in Government High Schools (former District Board High Schools) appointed from 1st April 1970 ... ... ... ... ... 79–80

VI. Presentation of the Report of the Rules Committee of the Council ... ... ... 80–81

VII. Government Bills—

(1) The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 28 of 1973) ... 81–85

(2) The Tamil Nadu Hackney Carriage (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 34 of 1973) ... 85–93

(3) The Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill, 1973 (L.A. Bill No 31 of 1973) ... ... ... ... ... 95–114

(4) The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 40 of 1973) ... ... ... ... ... 115–119

(5) The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 39 of 1973) ... ... ... ... ... 120–127

VIII. Statement under Rule 82 of the Council Rules *re* Institution of Government Servants' Family Welfare Fund ... ... ... ... 94–95

IX Papers laid on the table of the House ... 127–129

*Tuesday, 4th December 1973*


| | PAGES |
|---|---|
| I. Questions and Answers ... ... ... | 151–162 |
| II. Announcements— | |
| (1) Nomination of Members to the Committee on Government Assurances ... ... ... | 162–163 |
| (2) Meeting of the Council on the 5th ... | 163 |
| III. Government Bill— | |
| The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 38 of 1973) ... ... ... | 163–163 |
| IV. Papers laid on the table of the House ... | 184 |


*Wednesday, 5th December 1973*


| | |
|---|---|
| I. Questions and Answers ... ... ... | 191–197 |
| II. Announcement *re* Message from the Assembly ... | 197 |
| III. Calling attention to matters of urgent public importance— | |
| (1) Allocation of fewer posts to Panchayat Union Elementory Schools than to Private Schools under Half-a-Million Job Scheme ... ... | 198–199 |
| (2) Non-grant of preference in appointment under Half-a-Million Scheme to B.T. Teachers in Secondary Grade posts in 'B' Wing Government and Private High Schools ... ... ... | 199–200 |
| (3) Hardship caused to teachers in Koradacheri, Thalainayiru and Muthupettai Panchayat Unions consequent on implementation of G.O. Ms. No. 1324, Education, dated 27th July 1973. | 200–202 |
| IV. Government Bill— | |
| The Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1973 (L.A. Bill No. 24 of 1972) ... ... ... ... ... | 202–318 |
| V. Papers laid on the Table of the House ... | 318–319 |
| Index ... ... ... ... ... | 345–381 |


## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration. Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Public Relations, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. S. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. The Hon. Thiru A. P. DHARMALINGAM, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. The Hon. Thiru MANNAI P. NARAYANASAMI, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. The Hon. Thiru K. RAJARAM, Minister in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. The Hon. Thiru O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. The Hon. Thiru S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. The Hon. Thiru M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

**தமிழ்நாடு ஆளுநர் :**

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்.**

1. **மாண்புமிகு டாக்டர்** மு. கருணாநிதி **(முதலமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர்** இரா. நெடுஞ்செழியன் **(கல்வி அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட மன்றம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. **மாண்புமிகு திரு.** க. அன்பழகன் **(நல்வாழ்வுத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்-குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு.** என். வி. நடராசன் **(பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி விளம்பரம், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சேரணி, இளைஞர் அணி, பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி** சத்தியவாணிமுத்து **(அரிசன நலத் துறை அமைச்சர்) :** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகித கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (வருவாய்த் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், வீட்டுவசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், குடிசை மாற்று வாரியம்.



13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக்கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

### சட்டமன்ற மேலவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

### சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. எஸ். டி. ஆதித்தன்.

திரு. என். வில்சன் அப்பலோஸ்.

திரு. எஸ். நாராயணசாமி.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்.

### சட்டமன்றச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 1 அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றம். |
| 3 அறிவழகன், கே., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஒ. .. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இராசகோபால், சி. வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 11 இராணி அண்ணாதுரை .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 13 இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமனம். |
| 14 இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராஜா அய்யர், எம்., எம்.ஏ., எல்.டி. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 16 இராஜு, ஜி. என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்). | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 18 கணபதி, கே. எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள். |
| 19 கணேசன், சா. .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 20 காட்டூர் கோபால் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 22 குன்றக்குடி அடிகளார், தவத்திரு. | நியமனம். |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 23 கோலப்பா, சி. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 24 சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 25 சங்கரலிங்கம் பிள்ளை, எம். .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 26 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள். |
| 27 சாம்பசிவம், இரா. .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 28 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 29 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 30 சுந்தரேசத் தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி .. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 32 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 33 தங்கப் பாண்டியன், வி., பி.ஏ.,பி.டி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 34 தாமோதரன், ஏ. ஆர்., பி எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள். |
| 35 திருஞானசம்பந்தம், பி. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 36 தென்னரசு, எஸ்.எஸ். .. .. | நியமனம். |
| 37 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 38 நடராசன், என். வி. (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 39 நடராசன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நாராயணசாமி, பி. (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 41 நாராயணசாமி, டி. வி. .. .. | நியமனம். |
| 42 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 43 பகவதி, டி. கே. .. .. | நியமனம். |
| 44 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 45 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா). | மாநிலச் சட்டப் பேரவை. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 46 பலராமன், எல். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 பொன்னுவேலு, டி. கே. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 48 மணி, கே. எஸ். .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 மாசிலாமணி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 50 முத்து, பி. டி. .. .. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துசாமி, எஸ். .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 54 ரசல்ராஜ் .. .. .. | நியமனம். |
| 55 வசந்தபாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 56 வில்சன் அப்பலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஜனார்த்தனம், ஏ.பி. .. .. | நியமனம். |
| 61 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 62 ஜெயராம் ரெட்டியார், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் .. .. .. | |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் நாற்பத்தி ஆருவது கூட்டத்தொடர்.

சனிக்கிழமை, 1973 டிசம்பர், 1.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினுக்கள்—விடைகள்.

உடுக் குறியிட்ட வினுக்கள்.

*Sample Survey conducted by the State Institute of Education.*

*170. THIRU N. WILSON APPOLLOS(on behalf of THIRU S. VELLAPANDIAN).—Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any sample survey has been conducted by the State Institute of Education into the Educational Structure at Sriperumbudur, in Chingleput district ; and

(*b*) if so, the details thereof ?

மாநிலக் கல்வி நிலேயம் நடத்திய மாதிரி ஆய்வு.

திரு என். வில்சன் அப்பலோஸ் (திரு எஸ்.வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில், கல்வி அமைப்பு குறித்து, மாநிலக் கல்வி நிலேயம், மாதிரி ஆய்வு ஏதும் நடத்தியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) செங்கல்பட்டு மாவட்டத்தில் 1964-65 முதல் 1968-69 முடிய ஐந்து ஆண்டுகளில் ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் பத்து தொடக்கப் பள்ளிகளில் ஆண்டுதோறும் ஒவ்வொரு வகுப்பிலும் எத்தனை மாணவர்கள் மேல்வகுப்புகளுக்குச் செல்லாமல் பள்ளியைவிட்டு நீங்கி விட்டனர் என்ற புள்ளி விவரங்கள் குறித்து மாநிலக் கல்வி நிறுவனம் ஆய்வு செய்தது.

திரு எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இந்த ஆய்வின்படி, மாணவர்களுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டு போவது எந்த விகிதத்தில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒன்றாவது முதல் ஐந்தாவது வகுப்பு வரையிலும் கணக்கு எடுத்ததில், ஒன்றாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வகுப்பில் நின்று விடுகிற மாணவர்கள், ஆண்களில் 24.72 சதவீதமும், பெண்களில் 24.1 சதவீதமும் என்று தெரிகிறது. ஸ்டாக்னேஷன் என்கிற அளவிற்கு 5-வது வகுப்பிற்கு மேல் தாண்டாமல் நிற்கிறவர்கள் 20·88 சதவீதம் ஆண்களிலும், 22·22 சதவீதம் பெண்களிலும் இருக்கிறது.

திரு எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, இதற்குக் காரணம் என்ன என்பதை ஆய்வில் சொன்னார்களா? ஏழ்மைதான் காரணமாக இருந்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த ஐந்தாண்டு காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் காரணமாக சில பல காரணங்கள் தெரிய வந்திருக்கின்றன. அதிலே அவர்கள் குறிப்பாக இந்த ஆய்வின் மூலமாகக் கண்டறிந்தது: பெற்றோர்கள் இடம் விட்டு இடம் பெயர்வதன் காரணமாக ஓரளவிற்குக் குறைந்திருக்கிறார்கள். எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று பார்த்தால் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாகவும், அதற்கு அடுத்தபடி பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். அதிலேயும், விவசாயத் தொழிலிலேயும், வேறு பல தொழில்களிலேயும் ஈடுபட்டிருக்கிற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குறைந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, ஒன்றாவது, இரண்டாவது வகுப்பில் குறைகிறவர்கள் எண்ணிக்கை 3, 4, 5 வது வகுப்புகளில் குறைகிறவர்களுடைய எண்ணிக்கையை விடக் கூடுதலாக இருக்கிறது. குறைந்த வருமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் நின்றிருக்கிறார்கள். மிக வறுமையுடைய பெற்றோர்கள் காரணமாக அந்த மாணவர்கள் நின்றிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் குடியில்லாத ஊர்களிலே அதிகமாக நின்றிருக்கிறார்கள். எந்தெந்த இடங்களில் ஆசிரியர்கள் குடியிருக்கிறார்களோ அங்கே இந்த நிலைமை இல்லை. இந்தக் கண்டுபிடிப்புகள் இதன்மூலம் தெரிய வருகிறது.



திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதிலிருந்து ஒவ்வொரு ஊரிலும் உள்ள பள்ளி ஆசிரியர்கள் அந்தந்த ஊரில் குடியிருக்க வேண்டுமென்று கண்டிப்பாக வற்புறுத்தி உத்திரவிட அரசு உத்தேசிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பல் வேறு காரணங்களில் இதுவும் ஒன்று. இதைக் கட்டாயப்படுத்துவோமானால், அவர்களுக்கு வசதிகளைத் தேடித் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். கூடுமான வரையில் அந்தந்த ஊரில் இருப்பதன் மூலமாக பெற்றோர்களோடு தொடர்பு கொண்டு, மாணவர்களின் நிலையை அறிவதன் காரணமாக, இந்த நின்று விடுதல் ஓரளவிற்குக் குறைவாக இருக்கிறது. ஆகவே தான், அவர்களுக்கு கிராமப் புறங்களில் வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. நாம் போடுகிற திட்ட அளவைப் பார்த்தால், ஓரளவுக்குத் தான் சரிக்கட்ட முடிகிறது. முதலில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தராவிட்டாலும் கூட, அந்தந்த ஊர்களில் பெற்றோர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு, ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலே, வீடுகளை ஒதுக்கித் தந்து, வசதிகளை ஏற்படுத்தித் தருவார்களானால், இப்படி ஊர் பொது மக்களே அக்கறை கொண்டு ஏற்பாடு செய்தால், இந்தக் குறையை ஓரளவிற்கு நீக்கலாம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் கூறியதிலிருந்து ஊரை விட்டுக் குடிபெயர்ந்தவர்களில் தாழ்த்தப்பட்ட மக்களும், பின்னடைந்த வகுப்பினரும் தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அவர்கள் பிழைப்பிற்கு வழி இல்லாமல், வேலை இல்லாமல் இருந்ததனால் தான் நகரப்புறங்களைத் தேடிப்போய் விடுகிறார்கள் என்று தெரிவதால், அந்தந்த ஊர்களில் சிறிய கைத் தொழில்களை ஏற்படுத்த திட்டம் போடுமாறு கல்வி இலாகா கைத் தொழில் இலாகாவிற்குப் பரிந்துரைக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது மிகப் பெரிய பொருளாதாரத் திட்டம். இந்தப் பொருளாதாரத் திட்டம் நடைபெறவேண்டிய ஒன்று தான். ஆனால், இப்போது பெற்றோர்களின் வறுமை காரணமாக, தொழில் காரணமாக இருக்கிற நிலைகளை ஓரளவிற்குக் குறைப்பதற்குத் தான் முடியுமே தவிர முழுமையாக நீக்குகிற சூழ்நிலை இப்போது இல்லை. எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறுவது போன்று, இப்படிப்பட்ட முயற்சிகளைச் செய்துகொண்டு வருகிறோம் என்றாலும் கூட, நம் நாட்டினுடைய சூழ்நிலையைப் பொறுத்து இவைகள் தவிர்க்க முடியாதவைகளாக இருக்கின்றன. இந்த எண்ணிக்கையை எவ்வளவு குறைக்கலாம் என்பதில் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கு அவர்கள் 5, 6 யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். பெற்றோர்கள்—ஆசிரியர்கள் தொடர்பு கொள்கிற பழக்கத்தை ஏற்படுத்தலாம். பெற்றோர், ஆசிரியர் சங்கங்கள், மாதம் ஒரு முறை கூடிக் கலந்து பேசுவதன் மூலமாக, இந்தத் தன்மைகளைக் குறைக்கலாம். 1-வது, 2-வது வகுப்பு மாணவர்கள்

அதை விட்டு நின்று விடாத அளவிற்கு அவர்களுக்குக் கவர்ச்சிகரமான பாடங்களைச் சொல்லித் தருவதன் மூலம் ஊக்கம் தரலாம். தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மாணவர்களைப் பொறுத்த வரை, ஆசிரியர் அதிக அக்கறை காட்டுகிற அளவிற்கு அவர்களோடு நெருங்கிப் பழகுகிற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். மதிய உணவு, இலவச உடை, இலவசப் பாடக் கருவிகள் அளிப்பதன் மூலமாக இந்தத் தன்மைகளை நிறுத்தலாம் என்று அவர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள். கூடுமான வரை எவ்வளவு பின்பற்ற முடியுமோ அவ்வளவுதூரம் பின்பற்றுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

திரு செ. முத்துசாமி: தலைவரவர்களே, பிள்ளைகளை கிராமங்களில் அழைத்து வருவதற்கு ஜில்லா போர்டு காலத்தில் கண்டக்டர்ஸ் பதவியில் பெண்களைப் போட்டு ஏற்பாடு செய்திருந்தார்கள். இப்போது பஞ்சாயத்து வந்த பிறகு, பண நெருக்கடி காரணமாக அவர்களைப் போடாத காரணத்தினால், பிள்ளைகளை அழைத்து வருகிற வாய்ப்பு நின்று விட்டது. கண்டக்டர்ஸ் இருக்கும்போது, ஆசிரியர்கள் குடியிருக்காத ஊர்ப் பள்ளிகளில் கூட அவர்கள் வீடுகளுக்குச் சென்று பிள்ளைகளை அழைத்து வந்ததால், வருகை கூடியிருக்கிறது. ஆகவே, எல்லாப் பள்ளிகளுக்கும் கண்டக்டர்ஸ் போட்டு, பிள்ளைகளை அழைத்து வருவதற்கு ஏற்கெனவே இருந்த நடைமுறையை அமுல்படுத்த அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது இது பற்றிய விவரக்குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஏற்கெனவே இருந்தது, தனிச் சம்பளம் கொடுத்து வந்தார்கள் என்கிறார்கள். அப்படி இப்போது கொடுக்க இயலாதவர்களாக இருக்கிறோம். அப்படிப் பொறுப்பேற்றுக் கொள்கிற நிலைமை இருந்தாலும், ஓரளவிற்குத் தான் செய்ய முடியும், அதனால் பிள்ளைகள் வருகிற சூழ்நிலை கூடத் தான் செய்யும். ஆனால் எல்லா ஊர்களிலும் எல்லாப் பள்ளிகளுக்கும் செய்வதென்றால், அதற்கு நிதி வசதி அதிகம் தேவைப்படும்.

திரு. எம். சங்காலிங்கம்: தலைவாவர்களே, இந்த மாணவர்களுடைய எண்ணிக்கை வீழ்வது சம்பந்தமாக, முதல் வகுப்பிலும் இரண்டாம் வகுப்பிலும் உள்ள மாணவர்கள் எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறது என்று தெரிகிறது. வறுமையுடைய குடும்பங்களிலிருந்து அவர்களில் பெரும் பகுதி இருப்பதால், அந்தக் குழந்தைகள் பள்ளியில் போனவுடன் அவர்களுக்கு கவர்ச்சி தருகிற அளவிற்கு பாடத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும். விளையாட்டு அடிப்படையிலே கல்வி முறை இல்லாததினாலே, அவர்கள் பாடத் திட்டத்தில் வெறுப்பு அடைகிறார்கள், பள்ளிகளை விட்டு ஓடிவிடுகிறார்கள். பெற்றோர்கள் அவர்களைத் திரும்பப் பள்ளிகளுக்குக் கொண்டுவிட பொருள் வசதி அற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு பாடத் திட்டங்களை மாற்றியமைக்க முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உறுப்பினர் கூறுவது போன்ற யோசனையை இந்த ஆய்வுக் குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களை அச்சுறுத்தி அவர்கள் பயப்படுகிற அளவிற்கு ஆளாக்காமல் கவர்ச்சிகரமாக பாடங்களை மாற்றி, மேற்படி ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கிற முறையில் அக்கறை காட்ட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் இலவச உடை, பாடக் கருவிகள், மற்றவைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. மதிய உணவைப் பொறுத்த வரையில், மதிய உணவை மூன்றில் ஒரு பகுதியினர் பெறுகிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் மூன்றாம் வகுப்பு வரையிலும் கரும் பலகைகள், பாடப் புத்தகங்கள், ஆங்கிலம், தமிழ், கணக்குப் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். கிட்டத்தட்ட இதற்காக 18 லட்ச ரூபாய் செலவாகிறது. அப்படியிருந்தும் கூட இன்னும் இந்த விகிதத்தைக் குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்.

## *Mauryan Pottery.*

*171. THIRU N. WILSON APPOLLOS (on behalf of THIRU S. VELLAPANDIAN) :—Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether Mauryan Pottery has been unearthed at Korkai on the banks of River Thambaraparani recently;

(b) if so, the details thereof ?

## மௌரியர் காலத்திய மட்பாண்டம்.

திரு என். வில்சன் அப்பலோஸ் (திரு எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மௌரியர் காலத்தைச் சேர்ந்த மட்பாண்டம் கொற்கையில் தாமிரவரணி ஆற்றுக்கரையில் அண்மையில் அகழ்ந்தெடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) கொற்கையில் அகழ்வாய்வு செய்தபோது ஒரு மௌரியப் பானை ஓடு கண்டுபிடிக்கப்பட்டது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, தற்காலம் இருந்து வருகின்ற மண் பானைக்கும் கண்டுபிடிக்கப்பட்ட பானைக்கும் என்ன வித்தியாசம் ? அவைகள் மௌரிய காலத்துப் பானைகள்தான் என்பதற்கு அறிகுறிகள் ஏதாவது உள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கொற்கை பாண்டிய மன்னர் காலத்தில் தலைநகரமாக இருந்துவந்த ஒரு பழம் பெரும் நகரமாகும். இதைப்பற்றி சங்க இலக்கியங்களின் மூலமும் அறிந்துகொள்ளலாம். நாம் அதனுடைய வரலாற்றுச் சிறப்பைக் கருதி 1968–69–ஆம் ஆண்டில் ஒரு முறையும், 1971–72–ஆம் ஆண்டில் இரண்டாம் முறையாகவும் அகழ்வாய்வு செய்தோம். அந்த வகையில் சில பல முதுமக்கள் தாழிகள், மண் பாண்டங்கள், வளையல் துண்டுகள், சங்குகள், பானை ஓடுகள் முதலியவை கிடைத்திருக்கின்றன. சிகப்பு, கறுப்பு நிறமுள்ள வழவழப்பான பானை ஓடுகளும், வண்ணம் பூசிய பானை ஓடுகளும் மிகுதியாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வடநாட்டிலிருந்த பண்டைய வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்களான மகதம், ராஜகிரிகம், வைசாலி, பாடலிபுத்திரம், கௌசாம்பியம் முதலிய நகரங்களை அகழ்வாய்வு செய்தபோது கிடைக்கப்பெற்ற பொருள்களோடு ஒத்திருக்கின்ற காரணத்தினால் அவ்வாறு கூற இடமிருக்கிறது. கௌசாம்பியில் கண்டுபிடிக்கப்பட்ட ஓட்டின் காலம் கி.மு. 500 என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தக்ஷண சீலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஓட்டின் காலம் கி.மு. 400 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், நாம் இரண்டு முறை கொற்கையில் அகழ்வாய்வு செய்தபோது, சில கரித்துண்டுகள் கண்டெடுக்கப்பட்டு அவைகளை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் அவை கி.மு. 785–ஆம் ஆண்டைச் சேர்ந்தவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே கி.மு. 785–லிருந்து கொற்கையில் மக்கள் வசிக்கத் தொடங்கினர் என்று அறிய முடிகிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, சாதாரணமாக இந்த மண் பானைகள் சந்திரகுப்த மௌரியர் காலத்துப் பானைகளாகத்தான் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. அவர்கள் பாடலிபுத்திரம்—தற்போது பாட்னா என்று அழைக்கப்படும் இடத்திலிருந்துதான் ஆண்டார்கள் என்று தெரிகிறது. ஒருக்கால் இங்கேயிருந்து, தமிழ் நாட்டு நாகரீகம் அங்கே சென்றிருக்கிறதா அல்லது அங்கேயிருந்து இங்கே வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவை எல்லாம் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிக்க வேண்டிய விஷயங்கள். இப்பொழுது தெரிந்துள்ள வரையில் மகதம், ராஜகிரிகம், வைசாலி போன்ற நகரங்களோடு கொற்கையும் சேர்ந்திருக்கிறது, தொடர்பு கொண்டிருக்கிறது என்பதைக் காண்கிறோம். இந்தக் கொற்கையை "கரோய் நாடு" என்று தாலமி குறிப்பிட்டிருக்கிறார். கொல்சிக் வளைகுடாவில் முத்துக்குளித்த இடத்தை ஸோரிஸ கௌரை என்று குறிப்பிட்டார்கள் என்றும், கொற்கை வாணிபத்தில் சிறந்த மையமாகவும், சோலன் ஆற்றுக்கு முகத்துவாரமாகவிருந்தது என்றும் பெரிபிளஸின் நூலில் காணப்படுகிறது. தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைக் கொண்டு முத்துக் குளிப்பு நடந்ததாகக் கருதப்படுகிறது. அது முத்துக்குளிப்பதற்கு ஒரு முக்கிய நகரமாக இருந்தது. ஒரு தலைநகரிலிருந்து இன்னொரு நகரத்திற்கு தொடர்பு ஏற்படுவதற்கு முயற்சி நடந்திருக்கிறது என்று தெரிகிறது. எங்கிருந்து எங்கே நாகரீகம் சென்றது என்று இதன் மூலம் கூறுவதற்கில்லை.



திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, அங்கு கண்டுபிடிக்கப்பட்ட பானைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றபோது கறுப்பு—சிகப்பு போடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனால் அந்தச் சின்னம் திராவிட நாடு தனியாக இருந்து மௌரிய நாட்டோடு வாணிபத் தொடர்பு கொண்டிருந்தது என்பதைக் காட்டுகிறதா ? இரண்டு நாடுகளுக்கும் ஏதோ தொடர்பு இருந்திருக்கிறது. அந்தக் காலத்திலேயே கருப்பு—சிகப்பு ஒரு நாட்டுச் சின்னமாக இருந்திருக்கிறதா என்பதை அரசு ஆராய்ச்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் சிறப்பாகச் செய்ய வேண்டிய ஆராய்ச்சிகள். கறுப்பு சிகப்பு நம் வீட்டுப் பானைகளிலே கூட பார்க்கலாம். மிக அதிகமாக சூடு ஏறினால் கறுப்பு நிறம் வரும். அதிகமாகச் சூடு ஏறாவிட்டால் சிகப்பு நிறம் வரும். அங்கே கண்டுபிடிக்கப்பட்ட பானைகளில் சில ஸ்வஸ்டிகா போன்ற வடிவிலும், திரிசூலம், சூரியன் போன்ற வடிவிலும் இருக்கின்றன.

## *Post-Graduate Examination in Tamil.*

172. * THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether there is any proposal with the Government to make provision for the professors with post-graduate qualification in Science to appear for the Post-graduate examination in Tamil without involving any loss in emoluments or break in service ; and

(*b*) if so, the details thereof ?

தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பு.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அறிவியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்ற பேராசிரியர்கள், தமிழ் முதுகலைப் பட்டப் படிப்புக்குப் பயில விரும்பினால் ஊதியம்—பணி இழப்பில்லாமல் பயில அரசு வகை செய்யும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1973 டிசம்பர் 1

*Murder by Naxalites.*

* 168. Q THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any person was killed by Naxalites on or about February 8, 1973, in Nagarasampatti in Dharmapuri district; and

(b) if so, the action taken thereon ?

நக்சல்பாரிகளால் கொலை.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 8-ஆம் நாளன்று அல்லது அந்த நாள் அளவில் தருமபுரி மாவட்டம், நாகரசம்பட்டியில் நக்சல் பாரிகளால் எவரேனும் கொல்லப்பட்டாரா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். கிருஷ்ணகிரி வட்டம், நாகரசம்பட்டியைச் சேர்ந்த திரு. என். வி. தர்மலிங்கம் செட்டியார் என்பவர் 8-2-1973-ல் நாகரசம்பட்டியில் உள்ள முக்கிய சாலையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். சடலத்தின் அருகே, "மா" வின் பொன் மொழிகளும் "மக்கள் நீதி மன்றத்தின் தீர்ப்பு" என்று எழுதப்பட்டுள்ள கையெழுத்து பிரதி வெளியீடுகளும் காணப்பட்டன.

(இ) இ.பி.கோ. 302-வது பிரிவின் கீழ் வழக்கு ஒன்று காவலரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் இருவர் குற்றஞ் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமறைவாகவுள்ள எஞ்சிய மூன்று பேரைத் தேடிப்பிடிக்கும் முயற்சியில் காவலர் இடையறாது ஈடுபட்டு வருகின்றனர்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, நக்சலைட்டுகளின் நடவடிக்கைகள் தமிழ் நாட்டிலிருந்து மறைந்து விட்டன என்று நாம் எண்ணிக்கொண்டிருந்தோம். இப்பொழுது இந்தக் கேள்வியைப் பார்த்தால், பிப்ரவரி 1973-ல் கூட அவர்கள் நடவடிக்கை இருந்திருக்கு அவர்களுடைய நடவடிக்கை இப்பொழுது எப்படி இருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அறவே மறைந்து விட்டது என்று சொல்ல முடியாது. குறைந்துகொண்டிருக்கிறது. அது தொடங்கிய நேரத்திலிருந்த தீவிரம் இப்பொழுது இல்லை. அதிலும் குறிப்பாக அவர்களுடைய தலைவர் சாரு மஜூம்தார்



1973 டிசம்பர் 1]

காலமான பிறகு, அந்த இயக்கமே மெல்ல, மெல்ல—வேகமாகக்கூட என்று சொல்லலாம், மறைந்து கொண்டு வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, சமீபகாலத்தில், இரண்டு மூன்று ஆண்டுக்காலத்தில் தமிழகத்தில் நக்சல்பாரிகளால் ஏற்பட்ட கொலைகள், கொள்ளைகள் எவ்வளவு ? இன்றையதினம் நக்சல் பாரிகள் என்ற பெயரால் தமிழக சிறைச்சாலைகளில் எத்தனை கைதிகள் இருக்கின்றார்கள் என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த நக்சல் பாரிகள் இயக்கத்தின் சம்பந்தமாக நடைபெற்ற கொலைகள் ஏழு, கொள்ளைகள், பெரிய கொள்ளைகள் நான்கு. சம்பந்தப்பட்ட 67 பேர் இரண்டு மாதங்கள் முதல் 7 வருஷம்வரை தண்டனை பெற்று, இப்பொழுது சிறைகளில் இருக்கிறார்கள். இந்தக் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களில் 6 பேர் மரண தண்டனை பெற்றிருக்கிறார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, தமிழகத்தில் இந்த நக்சலைட் இயக்க தினுடைய பெருந் தலைவர் என்று சொல்லப்பட்ட கலியபெருமாள் மரண தண்டனை பெற்று அதை இந்த அரசு ஆயுள் தண்டனையாக மாற்றியிருப்பது, அந்த இயக்கத்தை இங்கே வளர்த்துவிட உதவிவிடுமா? அதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஆயுள் தண்டனை என்றால், உடனடியாக விடுதலை செய்து விடுவது என்பதல்ல. மனம் திருந்துவார் என்ற நம்பிக்கையோடு அந்த மாற்றம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

புலவர் ஒ. அறிவுடைநம்பி: தலைவரவர்களே, நக்சல்பாரிகளால் பழி வாங்கப்பட்ட அல்லது அவர்களுடைய தாக்குதலுக்கு ஆளான காவல் துறையினருக்குப் பரிசு வழங்க அரசிடம் ஏதாவது செயற் குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது போன்ற வீரச் செயல்களில் ஈடுபாடு கொண்ட காவல் துறையினருக்கு கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக அறிஞர் அண்ணா பிறந்த நாள் அன்று தமிழக முதலமைச்சர் பதக்கம் என்ற பெயரால் பதக்கமும் பொற்கிழிகளும் அளிக்கப்பட்டு, வருகின்றன. அந்தப் பட்டியலில் இது போன்ற செயல்கள் இருந்தால், சேர்க்கப்படுவார்கள்.

*Tamil Nadu Forensic Science and Chemical Laboratory.*

* 169. Thiru. N. Sundaresa Thever (On behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Tamil Nadu Forensic Science and Chemical Laboratory has rendered any assistance to the Interpol Projects; and

(b) if so, the details thereof ?

தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் இரசாயன ஆய்வுக் கூடம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல்-இரசாயன ஆய்வுக்கூடம் அனைத்து நாட்டு காவல் துறை திட்டங்களுக்கு ( Interpol Projects ) ஏதேனும் உதவி புரிந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) குற்றஞ்சார்ந்த வழக்குகளில் கண்ணாடித்தூள்கள் பரிசோதனையில் தமிழ் நாடு குற்றஞ்சார்ந்த அறிவியல் இரசாயன ஆய்வுக் கூடம் அனைத்து நாடுகள் காவல் நிறுவனத்தின் ( Interpol ) உடனுழைப்புடன், ஆராய்ச்சியினை மேற்கொள்ள கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. ஆராய்ச்சித் திட்ட விவரங்கள் தயாரிக்கப்படவில்லை. இது வரையில் எந்த விதமான உதவியும் அளிக்கப்படவில்லை.

### *Deep X-Ray Therapy Unit.*

*173. Q. THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a Deep X-ray Therapy Unit is to be purchased for installation at Rajah Mirasdar Government Hospital Thanjavur ; and

(*b*) if so, the reason for purchasing the same instead of a Cobalt Therapy Unit ?

நுணுக்கமான எக்ஸ் கதிர் சிகிச்சை இயந்திரப் பிரிவு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர், ராஜா மிராசுதார் அரசு மருத்துவமனையில் நிறுவப் படுவதற்காக நுணுக்கமான எக்ஸ் கதிர் சிகிச்சை இயந்திரப் பிரிவு வாங்கப்படவிருக்கிறதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், கோபால்ட் சிகிச்சை இயந்திரப் பிரிவுக்குப் பதிலாக மேற்சொன்ன இயந்திரப் பிரிவை வாங்குவதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.



(இ) இத்துறையில் இந்த கருத்துப் பரிசீலனையிலிருந்தபோது ஆழ் கதிர் வீச்சுச் சிகிச்சைக் கருவி வாங்குவதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுவிட்டது.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I know whether the same has been installed and when it is going to be opened for the use of the public at Rajah Mirasdar Hospital Thanjavur ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, 22—3—1973 இந்த ஆலோசனை—டீப் எக்ஸ்ரேக்குப் பதிலாக கோபாட்ல் யூனிட் வாங்கு வது நல்லது என்று தெரிவிக்கப்பட்டது. அந்த ஆலோசனை மருத்துவக் கல்வித்துறை இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு முன்னாலேயே டீப் எக்ஸ்ரே பிரிவு வாங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்ட காரணத்தால் அதை மாற்றுவதற்கு இயலாத நிலை ஏற்பட்டது என்று சொல்லிவிட்டார் கள். அது அண்மையில் ஏற்படுத்தப்பட்டு நடைமுறைக்கு வரக்கூடும், என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் அந்த நிலைமையில் மேலும் அதை ஏற்படுத்தி முடித்துவிட்டதாக இன்னும் செய்தி கிடைக்கவில்லை.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I know whether there is any proposal to purchase a rotating Cobalt unit for the Thanjavur Medical College Hospital, Thanjavur ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கோபால்ட் யூனிட் வாங்குவதில் இன்னும் கூட சில சிக்கல் இருக்கிறது. கன்வென்ஷனல் கோபால்ட் யூனிட் வாங்குவதாக இருந்தால், ஏறத்தாழ 6 லட்சத்திலிருந்து 8 லட்சம் ரூபாய் வரை தேவைப்படுகிறது. ஏற்கெனவே எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு வாங்குவதற்கு 6, 7 ஆண்டுகளாக முயற்சித்து அண்மையில்தான் மத்திய அரசின் வெளிநாட்டுச் செலாவணிக்கு ஒப்புதல் கிடைத்தது. ஆனால், ஜேனஸ் யூனிட் என்ற ஒன்று அண்மையில் பம்பாயில் கிடைக்கக் கூடும் என்றும், அது பாபா ஆட்டாமிக் ரிசர்ச் சென்டரோடு தொடர் புடையவர்களால் உருவாக்கப்படுகிறது என்றும், இனி எதிர்காலத்தில் டீப் எக்ஸ்ரே தொபி யூனிட்டுகள் வாங்கத் தேவையில்லை என்றும், இனி வாங்கக்கூடியது எல்லாம் கோபால்ட் யூனிட்டாக இருந்தால், அது ஜேனஸ் கோபால்ட் 60 என்ற அந்த யூனிட்டாக, இருக்கலாம் என்றும் இந்தத் துறையில் முடிவெடுக்கப்பட்டு, ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இந்த டீப் எக்ஸ்ரே சிகிச்சை யை விட கோபால்ட் சிகிச்சை சிறந்தது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். சிறந்தது என்று தெரிந்தும்கூட, ஏன் டீப் எக்ஸ்ரே இயந்திரங்கள் வாங்கியிருக்க வேண்டும்; இப்போதாவது அந்த ஆர்டரை ரத்துச் செய்துவிட்டு, கோபால்ட் சிகிச்சைக்கான இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு முன் வருமா ? இல்லையென்றால், அதை வேறு ஏதாவதற்குப் பயன்படுத்த முடியுமானால், அப்படிச் செய்துவிட்டு, தஞ்சையிலும் கோபால்ட் யூனிட் மூலம் சிகிச்சை செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் இடையில் அந்தக் கருத்தைக் குறிப்பிட்டேன். இந்த ஆலோசனை வழங்கப்பட்ட நேரத்தில், அதுபற்றி இரண்டு விதமான கருத்து அந்தத் துறையினரிட மிருந்து வந்தது. டீப் எக்ஸ்ரே யூனிட் தான் சிறந்த முறையில் சிகிச்சை வழங்குவதற்கு ஏற்றதாக இருக்கும் என்ற கருத்தும், கோபால்ட் தரபி யூனிட் அந்த அளவு எளிதாகப் பயன்படுத்த முடியாது என்ற எண்ணமும் இருந்தது. மற்றும் அது இந்தியாவில் கிடைக்காது என்ற நிலையும் அது வரையில் இருந்தது. வெளி நாட்டுச் செலாவணிக்கு மத்திய அரசு 6, 7 ஆண்டு காலம் கழித்துத்தான் சம்மதம் வழங்குகின்ற நிலைமை ஏற் பட்டது. ஏற்கெனவே மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனைக்குக் கேட்கப்பட்ட ஒன்றுக்கு 63-ல் வேண்டுகோள் தொடங்கி, 1965–66-ல் ஏற்றுக்கொள்ளப் பட்டு, 1968ல் வற்புறுத்தப்பட்டு, 1973-ல் தான் அனுமதி கிடைத்திருக்கிறது. இந்தச் சிக்கல் காரணமாக கோபால்ட் தெரபியூனிட்டுக்கு அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால், அண்மையில் பாபா அட்டாமிக் ரிசர்ச் சென்டர் தருகிற கோபால்ட் ரிசோர்ஸஸைப் பயன்படுத்தி பம்பாயிலுள்ள இண்டர்நேஷனல் ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி, இந்த ஜெனஸ் கோபால்ட் தெரபியூனிட்டை உருவாக்கிய காரணத்தால், இதைப் பயன்படுத்தலாம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தத் துறை யைச் சேர்ந்த, மருத்துவக் கல்லூரிகளில் போஸ்ட் கிராஜுவேட் படிப்பு உள்ள கல்லூரிகள் உள்ள மருத்துவ மனைகளில் கோபால்ட் தெரபி யூனிட் ஏற்படுத்தப்படவில்லை. அதைத் தொடர்ந்து மற்ற இடங்களில் ஏற்படுத்த முயற்சிக்கப்படும்.

*Nuisance of Pigs in Residential Areas in Madras City.*

*174. THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the nuisance of pigs in residential areas in Madras City ; and

(*b*) if so, the steps taken to eradicate this health hazard ?

**சென்னை மாநகர் குடியிருப்புப் பகுதிகளில் பன்றிகளின் தொல்லை.**

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில், குடியிருப்புப் பகுதிகளில் காணும் பன்றி கள் தொல்லையை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், சுகாதாரக் கேடான இதனை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.



(இ) சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றி களைப் பிடிப்பதில் பயிற்சி பெற்ற குழுவின் மூலம் பன்றி வேட்டை நடத்துகிறது. பொது மக்களின் புகார் உடனடியாகக் கவனிக்கப்படுகிறது. மாநகராட்சி எல்லா வட்டங்களிலும் கால முறைப்படியான பன்றி வேட்டை களை நடத்தி அதன் மூலமாகக் கட்டுப்படுத்திவருகிறது. பன்றிகள் முறைப் படி பிடிக்கப்பட்டு சாகடிக்கப்படுகின்றன.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பன்றிகள் மட்டுமல்லாமல்; நகரங்களில் இன்னும் தொல்லை கொடுக்கும் மிருகங்கள்—நாய் போன்றவை —இருக்கின்றன. பன்றிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதை விட்டு, மற்றவகைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுமா என்ற அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாநகராட்சியோ அமைச்சரோ இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கேள்வி கேட்ட அங்கத்தினர் முக்கியத்துவம் கொடுத்துக் கேட்ட காரணத்தினால், பதில் தரப்பட்டுள்ளது.

புலவர் திரு. ஓ. அறிவுடைநம்பி : உயிர் வதை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். 10 அவதாரங்களில் ஒன்றாக வராக அவதாரம் உள்ளது. அதை, உயிர்வதை செய்வதிலிருந்து தடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த அவ தாரம் அதற்குப் பின்னாலே இருந்ததாகச் செய்தியில்லை. அதுவும் ஒரு கால கட்டத்தில் முடிந்து இருக்கிறது. ஆகவே, முடிந்துபோன அவதாரங் களை வைத்துக்கொண்டு இருக்கின்ற எல்லா உயிரினங்களையும் காப்பாற்ற முடியாது.

*Thanjavur Medical College.*

@93. Q. THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to stat—

(*a*) the number of Assistant Professors and Tutors working in the English and Statistics Departments of the Thanjavur Medical College ;

(*b*) the total work-load of the Departments -;

(*c*) whether the staff in each Department is in excess, when compared to the work-load ; and

(*d*) if so, the action proposed to be taken by the Government in the matter ?

---

@ 24—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

## தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியின் ஆங்கிலத் துறையிலும், புள்ளி விவரத் துறையிலும் பணியாற்றிவரும் உதவிப் பேராசிரியர்கள் எத்தனை பேர்? நெறிமுறை ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) இத்துறைகளின் மொத்தப் பணிச்சுமையின் அளவு யாது ?

(உ) பணிச் சுமையுடன் ஒப்பிடுகையில் இத்துறைகள் ஒவ்வொன்றிலுமுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளதா ?

(எ) ஆமெனில், இது தொடர்பாக அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே,

(அ) உதவிப் பேராசிரியர்கள் ஆங்கிலத் துறையில் இருவர், புள்ளி விவரத் துறையில் இருவர். உதவி ஆசிரியர் ஆங்கிலத் துறையில் இல்லை. புள்ளிவிவரத் துறையில் ஒருவர்.

(இ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் உள்ள ஆங்கிலத் துறையிலும் புள்ளிவிவரத் துறையிலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட பேராசிரிய பதவிகள் எவையுமின்றி, உதவிப் பேராசிரியர்களாலும், உதவி-ஆசிரியர்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. சாதாரணமாக அவர்களது பணி நேரம் ஒவ்வொரு வேலை நாளிலும் காலை 9 மணி முதல் மாலை 4-30 மணி வரையாகும்.

(உ) இல்லை.

(எ) இந்த வினாவுக்கு இடமில்லை.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I seek a clarification ? The Hon. Minister said that there were two Assistant Professors and he has omitted to say how many Tutors there are in the Department.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, உதவிப் பேராசிரியர்கள் என்பது அஸிஸ்டெண்ட் புரபொசர்ஸ்; உதவி ஆசிரியர் என்பது டியூட்டர். ஆகவே உதவி ஆசிரியர் என்ற முறையில் டியூட்டராகப் புள்ளி விவரத் துறையில் ஒருவர் மட்டும் இருக்கிறார். ஆங்கிலத் துறையில் யாரும் இல்லை.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, there are three Tutors and two Assistant Professors in the Thanjavur Medical College. As regards their period of work the work they do from morning to evening, all of them put together have got only six hours of work and they are correcting only 150 note-books, while in Arts Colleges each Assistant





Professor has got sixteen hours of work and 200 note-books to correct. While there is a lot of difficulty in getting people for the Arts Colleges, why are these people being wasted in the Medical Colleges ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியை அனுப்பி அதற்காகக் கிடைத்த விவரத்திலிருந்து, டியூட்டர் புள்ளிவிவரத் துறையில் மட்டும் ஒருவர் இருக்கிறார். உதவிப் பேராசிரியர் என்பது அசிஸ்டன்ட் புரொபசர்—அவர்கள் புள்ளிவிவரத் துறையில் இரண்டு பேர்களும், ஆங்கிலத் துறையில் இரண்டு பேர்களும் இருக்கிறார்கள் என்று கூறினேன். ஆகவே, இப்போது நியமிக்கப்பட்ட எண்ணிக்கை அதிகம் இல்லை என்பதற்கு எத்தனை மாணவர்கள் இருக்கிறார்கள், எத்தனை வகுப்புகள் இருக்கின்றன, அவர்களுக்குரிய பாடக் கடமை என்னவென்பது தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையில் தேவைக்கு அதிகமாக நியமிக்கப்படவில்லை என்று தான் தெரிவிக்கப்படுகிறது. டியூட்டர் ஒருவர் மட்டும்தான் இருக்கிறார். ஒரு வேளை திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்லுவது போல், அதிகமாக இருந்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எனக்கு இந்தச் செய்தி கிடைத்து 3 மாதமாகிறது. அதன்படி இரண்டு உதவிப் பேராசிரியர்களும், மூன்று டியூட்டர்களும் அங்கே இருந்தார்கள் என்று தெரியவந்தது. அவர்கள் எல்லோருக்கும் சேர்ந்து 6 மணி நேரம்தான் வேலை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். 150 நோட்டுப் புத்தகங்கள்தான் திருத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால், கலைக் கல்லூரியில் உதவிப் பேராசிரியர் ஒருவர் 16 மணி நேரம் ஒரு வாரத்திற்குப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும். டியூட்டராக இருந்தால், 200 நோட் புத்தகங்கள் திருத்த வேண்டும். அதை அனுசரித்து மருத்துவக் கல்லூரிகளில் ஆங்கிலத் துறையில் அதிகம் பேர் இருந்தால், அவர்களை வேறு கல்லூரிக்கு மாற்றலாம். புள்ளிவிவரத் துறையைப் பொறுத்த வரையில், அதிகம் பேர் இருக்கிறார்கள் என்பது அரசின் கவனத்துக்கு வந்தால், அவர்களை வேறு கல்லூரிக்கு மாற்றலாம் என்று உத்தரவு போட்டிருப்பதாக அறிகிறேன். ஆங்கிலத் துறையில், அமைச்சர் அவர்கள் அதே போன்று நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, எனக்குக் கிடைத்த விவரம் சரியாக இருக்குமானால், அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது சரியில்லை. The Director of Medical Education has reported that though there are three sanctioned posts of Tutors in the English Department, all these posts are vacant for the past six months and that the work is being managed by the two Assistant Professors only....என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, டியூட்டர்கள் என்பது ஒருவேளை ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையில் குறிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், பணியில் யாரும் இல்லை. ஆகவே, [illegible] தேவையா இல்லையா என்பது இப்போது தரப்பட்ட விவரத்தைக் [illegible]ண்டு பரிசீலிக்கப்படும். இப்போது அங்கே பணியில் டியூட்டர் இல்லை [illegible]தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[1973 டிசம்பர் 1

*Inclusion of "Mukkur" Community in Kanyakumari District in the list of Scheduled Castes.*

*175. Q. THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government received any representation from the Mukkur Community in Kanyakumari District to include them in the Scheduled Caste list; and

(*b*) if so, the action taken by the Government thereon?

**குமரி மாவட்ட "முக்கூர்" இனத்தை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்.**

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) குமரி மாவட்டத்தில் வாழும் "முக்கூர்" இனத்தை, தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில், அந்தக் கோரிக்கையின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும்.

*Grants to the Association of Trained Social Workers, Madras.*

*176. Q. THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Association of Trained Social Workers, Madras, has been given grants by the State during the years 1970–71 and 1971–72; and

(*b*) if so, the details thereof?

சென்னை, பயிற்சி பெற்ற சமூகப் பணியாளர் சங்கத்திற்கு மானியம்.

திரு. என்.சுந்தரேசத் தேவர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை பயிற்சி பெற்ற சமூகப் பணியாளர் சங்கத்திற்கு அரசு 1970–71, 1971–72-ஆம் ஆண்டுகளில் மானியம் வழங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?



1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

***Report of the Working Group on Electronic Industry Expansion.***

*177. Q. THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Industries be pleased to place on the Table of the House a copy of the Report of the Working Group on Electronic Industry Expansion in the State set up by the Government?

மின்னணுவியல் தொழில் வளர்ச்சி பற்றிய பணிக்குழு அறிக்கை.

திரு. என்.சுந்தரேசத் தேவர்: (திரு. எஸ.வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழில் வளர்ச்சி பற்றி ஆய்வு செய்வதற்காக அரசு நியமித்த பணிக்குழு அறிக்கை நகல் ஒன்றை மாண்புமிகு அமைச்சர் மேலவை முன் வைப்பாரா?

மாண்புமிகு திரு செ. மாதவன்: @ அறிக்கையின் நகல் அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பேரவையிலிருந்து செய்திகள்.

MR. CHAIRMAN: I have received a message from the Hon. Speaker Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Entertainments Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 37 of 1973), as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council, and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting the copies of the following bills, as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council:—

(1) The Tamil Nadu Local Authorities Finance (Second Amendment) Bill 1973 (L.A. Bill No. 33 of 1973);

(2) The Tamil Nadu State Housing Board (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 30 of 1973).

@ அச்சிடப்படவில்லை.

## 3. கவன ஈர்ப்பு.

(1) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் நகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்காமை.

4.30 பி.ப. திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் நகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, 1973-ஆம் ஆண்டு, நவம்பர் திங்களில் வழங்கப்பட வேண்டிய, 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்கான சம்பளம் வழங்கப்படாதது குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சிங்காநல்லூர் நகராட்சியின் ஆரம்ப கல்வி நிதி நிலைமையை சரிக்கட்ட கீழ்க்கண்ட தொகை 1973-ஆம் ஆண்டில் நகராட்சிக்கு வழங்கப்பட்டது. 31—3—1972-வரை உள்ள மொத்தப் பற்றுக் குறையினை நீக்குவதற்காக, மானியமாக ரூபாய் 2,19,000, அரசு நிலை ஆணை எண். 1254, கல்வி, நாள் 10—7—1973-ல் வழங்கப்பட்டது. 31—3—1972-வரை உள்ள மொத்தப் பற்றுக்குறையினை நீக்குவதற்கான கடனாக ரூபாய் 1 லட்சம் அரசு நிலை ஆணை எண். 2265, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, நாள் 17—10—1973-ல் வழங்கப்பட்டது.

அரசு நிலை ஆணை எண். 650, ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, நாள் 31—3—1973-ல் நகராட்சிகள், தங்களுக்குச் சேர வேண்டிய 1972–73ஆம் ஆண்டுக்கான 1920-ஆம் ஆண்டின் ஆரம்பக் கல்விச் சட்டம், பிரிவு 37-ன் கீழான முன் மானியத்திற்கும், மற்றும் பற்றுக்குறை மானியத்திற்குமான விண்ணப்பங்களை 20—4—1973-க்குள் அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. சிங்காநல்லூர் நகராட்சியின் 1920-ஆம் ஆண்டின் ஆரம்பக் கல்விச் சட்டம், பிரிவு 37-ன் கீழான முன்மானியத்துக்கான விண்ணப்பம் அரசால் பெறப்பட்டு அரசு நிலை ஆணை எண். 1096 கல்வி, நாள் 18—6—1973-ல் இந்நகராட்சிக்கு ரூபாய் 1,55,091 மானியமாக வழங்கப்பட்டது. 1972–73-ஆம் ஆண்டுக்கான பற்றுக்குறை மானியத்துக்கான விண்ணப்பத்தை இந் நகராட்சி முன்பே அனுப்பி அரசின் ஆணையினை பெறத் தவறிவிட்டது. நகராட்சி ஆணையரின் விண்ணப்பம் 24—11—1973 அன்றுதான் அரசுக்கு வந்து சேர்ந்துள்ளது. இது குறித்த ஆணைகள் விரைவில் வழங்கப்படும். பற்றுக்குறை மானியமாக ரூபாய் 2,15,909 வழங்கிய பின், சிங்காநல்லூர் நகராட்சி ஆசிரியர்களுக்கு அக்டோபர் மாதச் சம்பளம் அளிப்பதற்கு ஏதுவாகும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நகராட்சியின் ஆணையாளர் அவர்கள், உரிய தேதியில் அரசுக்கு விண்ணப்பத்தை அனுப்பாத காரணத்தால், ஆசிரியப் பெரு மக்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் நின்றிருக்கிறதென்பதை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அது மட்டுமல்லாமல், இன்னும் சில நகராட்சிகளில் நிரந்தரமாக 1-ஆம் தேதி சம்பளம் கொடுக்காத வழி முறை இருந்து வருகிறது. 22—5—1972-ஆம் நாளிலே அமைச்சரவர்களிடத்திலே உட்கார்ந்து ஆசிரியர் கூட்டணி பேசிய நேரத்திலே, பஞ்சாயத்து யூனியன்களிலே பணி



புரிகின்ற ஆசிரியர்களுக்கு 1-ம் தேதி சம்பளம் அளிப்பதற்காக நிரந்தரமான சட்டம் இயற்றப்பட்டதுபோல, நகராட்சிகளுக்கும் செய்யப்படுமென்று கூறினார்கள். அந்த அடிப்படையில் விதி முறைகளைத் திருத்துவது எந்த நிலையில் உள்ளதென்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அது சட்டரீதியாக மாற்றியமைக்கப்பட்டு, எல்லா நகரசபைகளிலும் 1-ஆம் தேதி சம்பளம் வழங்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1-ஆம் தேதி சம்பளத்தை வழங்குவதற்கான முயற்சிகளைப் பற்றி ஆராயும்படியாக அந்தத் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். அது பற்றி உள்ளாட்சித் துறை முடிவு எடுக்க வேண்டும். அதனுடைய நிலைமைகளை ஆராய்ந்துதான் சொல்ல முடியும். எனவே தனிக் கேள்வி போட்டால், நிலைமைகளை ஆராய்ந்து சொல்லப்படும். மேலும் அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

(2) நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிற்சாலையில் எழுந்துள்ள தொழில் தகராறு காரணமாக தொழிலாளிகள் பாதிப்பும், பெரும் கிளர்ச்சிகளுக்கு சூழ்நிலைகள் உருவாகி வருவதும்.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில் தொழிற்சாலையில் எழுந்துள்ள தொழில் தகராறு காரணமாக பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதும், தற்போது நிலவி வருகிற பதட்டமான நிலைமையும், அதனையொட்டி பெரும் கிளர்ச்சிகளுக்கு சூழ்நிலைகள் உருவாகி வருவதும் குறித்து."

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நாகப்பட்டினத்திலுள்ள இந்திய ஸ்டீல் மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 600. மேற்படி தொழிலாளர்கள் நாகப்பட்டினம் ஸ்டீல் ரோலிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம் மூலமாக, கடந்த ஆண்டுக்குக் கொடுத்த தொகைக்குக் குறையாமல் 1972–73 ஆண்டுக்கு மிகை ஊதியம் (போனஸ்) கொடுக்கவும், தற்போது அகவிலைப்படி கணக்கிடும்முறையை மாற்றி அமைக்கக்கூடாது என்றும் ஒரு தொழில் தாவா எழுப்பியுள்ளனர். மேற்படி தொழிலாளர்கள் தாமதமாக வேலை செய்வதாகக் குற்றம் சாட்டி, நிர்வாகம் 4—11—73 முதல் கதவடைப்பு செய்துள்ளது. சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் நிர்வாகத்தையும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்து 7—11—73 & 8—11—73 தேதிகளில் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். சமரசப் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெறவில்லை.

எல்லைமீறி தொழிற்சாலைக்குள் சென்றதற்காக 16—11—73-ம் தேதி [illegible] நபர்கள் கைது செய்யப்பட்டனர். நாகப்பட்டினம் கோட்டாட்சித் தலைவரின் அலுவலகத்திற்கு முன் மறியல் செய்ததற்காக (17—11—73 முதல் 24—11—73 முடிய 18—11—73 நீங்கலாக) நாளொன்றுக்கு

12 பேர் வீதம் 84 நபர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 102 பேர்களையும் நாகப்பட்டிணம் குற்ற இயல் நீதிபதியின் முன்பு நிறுத்தப்பட்டது.

இது சம்பந்தமாக மேலும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்துமாறு தொழிலாளர் துறை ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை எவருடையதென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலை திரு. ராஜம் ராமசாமி அவர்களுடையதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்.

விதி 23 (1) நிறுத்தி வைக்கப்படுவது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை, 1973-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ஆம் நாள், சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை —

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இந்த அவை, 1973-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 1-ஆம் நாள், சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 33/73).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

---

@ 51-ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 52/1961) 5-வது பிரிவு, ஓர் உள்ளாட்சி அதிகார மன்றம், அரசின் முன் அனுமதி பெற்று ஒரு கேளிக்கை அல்லது கேளிக்கையின் வகை மற்றும் திரைப்படக் காட்சி அல்லது திரைப்படக் காட்சியின் வகைக்கான நுழைவுக் கட்டணங்களைப் பொறுத்த வரையில், மேற்படிச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் முறையே (a) and (b) பகுதிகளின்கீழ் வரி செலுத்துவதற்கான பொறுப்பினின்றும் விலக்களிக்க அதிகாரம் அளிக்கிறது என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன். தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 8-வது பிரிவு, கேளிக்கை வரியைப் பொறுத்த வரையில் விலக்கு அளிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. ஆனால், தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டத்தின் 3 வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a), (b) பகுதிகளின் கீழ் வரி விதிப்பிலிருந்து அரசு தானே விலக்கு அளிக்க அதிகாரம் வழங்கும். அதேபோன்ற விதித் துறை எதுவும் 1961-ம் ஆண்டுச் சட்டத்தில் இல்லை. இப்பொழுது 1961-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் இதேபோன்ற விலக்குகள் அளிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவைத் திருத்தக் கருதியுள்ளது.

இச் சட்டவரைவின் நோக்கம், தற்போது தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டம் 3, 2 பிரிவினைப் போன்ற விதித் துறை எதுவும் தமிழ்நாடு உள்ளாட்சித் துறை விதிச் சட்டத்தில் இல்லை. தமிழ்நாடு உள்ளாட்சி மன்றங்கள் விதிச் சட்டம் 5-வது பிரிவின்கீழ் கேளிக்கை வரியின் மீதான மேல் வரி அல்லது காட்சி வரி மீதான வரி செலுத்துவதினின்று விதிவிலக்கு அளிக்கும் அதிகாரம் உள்ளாட்சி மன்றங்களுக்கு இருக்கிறது. இப் பிரிவுகளின்கீழ் அரசும் அதிகாரங்களை மேற்கொண்டால் தமிழ்நாடு உள்ளாட்சி விதிச் சட்டத்தின்கீழ் காட்சி வரி மீதான மேல் வரி விதிப்பினின்றும் குறிப்பிட்ட வகை கேளிக்கைகளுக்கு அரசே விதி விலக்கு அளிக்கலாம். தற்போதுள்ள முறையின்கீழ் சிறிய அளவிலுள்ள காட்சி வரிகள் மீதுள்ள மேல் வரித் தொகையை வசூலிப்பதற்காக கேளிக்கை வரி விதிப்பு அதிகாரிகள் கல்வி நிறுவனங்களின் பின் செல்ல வேண்டியுள்ளது. மேற்சொன்னவாறு அரசும் அதிகாரம் பெற்றால் நடைமுறை எளிதாகும். மேற்சொன்னவாறு கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் படக் காட்சிகள் கல்வி அறிவு புகட்டத் தக்கவையென்ற காரணத்தால் குறிப்பிட்ட காட்சிகளுக்கு அரசு வரி விலக்கு அளிக்கின்றது. எனவே பேரவையில் நிறைவேறிய இச் சட்ட வரைவினை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 33/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

4.40 பி.ப. * திரு கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, நமது உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தற்போதுள்ள வருவாயில் இது ஒரு முக்கியமான வருவாய். அதுவும் சினிமாக்கள் அதிகமாகப் பெருகி உள்ளதனால், இந்தக் கேளிக்கை வரியின் மூலம் கிடைக்கும் வருமானம் முக்கியமான வருமானமாக இப்போது இருக்கின்றது. ஏற்கனவேயுள்ள ஷரத்தை இப்போது புதிதாக இரண்டு வரிகள் சேர்த்துத் திருத்தம் செய்யப் பட்டிருக்கின்றது.

**Notwithstanding anything contained in this Act, the Government or any local authority with the previous sanction of Government, may exempt. . . .**

என்று புதிய ஷரத்து வந்திருக்கின்றது. ஏற்கெனவே அரசாங்கத்துக்கு இருந்த ஒரு உரிமை — ஏதாவது நல்ல காரியத்திற்கு யாரேனும் ஒரு சினிமாக் காட்சி அல்லது வேறு ஒன்றை நடத்தினால், கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்க அரசாங்கத்துக்கு உரிமை உள்ளது. இப்போது ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் அந்த உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்களாகவே செய்யக்கூடாது, அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றுச் செய்ய வேண்டும் என்று இந்த திருத்தம் வந்திருக்கின்றது. நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றுதான். அம்மாதிரி யாரேனும் அந்த வரி விதிப்பிலிருந்து விலக்கு வேண்டுமென்று மனுச் செய்தால், அரசாங்கமே ஒரு உத்தரவைப் போடுவதைவிட, ஸ்தல ஸ்தாபனங்களைக் கலந்துகொண்டு உத்தரவு போடவேண்டும் என்ற ஒரு பழக்கத்தைக் கொண்டுவந்தால், நலமாக இருக்கும். சில பேர்கள் அங்கே இருக்கின்ற நகராட்சி மன்றத்திலோ அல்லது பஞ்சாயத்து யூனியனிலோ அனுமதி வாங்காமல், புறக்கணித்து, நேரடியாக அரசாங்கத்திடம் உத்தரவு வாங்கி வருகின்றார்கள். அரசாங்கத்திடம் வாங்குவதுபற்றி ஆட்சேபனை ஒன்றும் நான் சொல்லவில்லை. ஆனால் உத்தரவு போடுவதற்கு முன்பே சம்பந்தப்பட்ட முனிசிபாலிடியையோ, பஞ்சாயத்தையோ கலந்துகொண்டு செய்ய வேண்டும். "விதிவிலக்கு நாங்கள் கொடுக்கப்போகிறோம், அதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேளுங்கள். அப்படி அவர்கள் உள் சச்சரவுகளின் காரணமாக, வேண்டுமென்றே அளிக்கக்கூடாது என்று சொன்னாலும்கூட, அதை நிராகரித்து, அரசே உத்தரவு போடுவதற்கு அதிகாரம் இருக்கட்டும். ஆனால் அரசாங்கம் நகராட்சிகளை, பஞ்சாயத்துக்களை, முனிசிபாலிடிகளை ஒரேயடியாகப் புறக்கணித்துவிட்டு, சென்னையிலிருந்துகொண்டு எல்லா உத்தரவுகளையும் போடவேண்டுமென்ற பழக்கத்தை விட்டுவிட வேண்டும். **"in consultation with the concerned local authority"** என்ற வார்த்தைகளை சேர்த்துவிட்டால் நலமாக இருக்குமென்று நம்புகிறேன். திருத்தம் வேண்டுமென்றாலும், திருத்தம் நிறைவேறாது என்று எனக்குத் தெரியும். நல்ல ஒரு பழக்கத்தை உண்டுபண்ண வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்லுகின்றேன். கூடிய சீக்கிரத்தில் இது பழக்கமாக வரவேண்டும் அல்லது திருத்தமாவது கொண்டுவந்து நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுகொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கெனவே 1961-ஆம் ஆண்டுச் சட்டத்தில் ஊராட்சி மன்றங்களையும் ஊராட்சி ஒன்றியங்களையும் அரசாங்கம் கலந்து கொண்டு செய்ய வேண்டும்



என்றுதான் இருக்கிறது. அதில் இருக்கிற இடர்ப்பாடுகளையும் சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டதுபோல, இருக்கிற ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியங்களிலே பொதுவான நல்ல காரியங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று ஒன்றியங்களின் சிபாரிசைக் கேட்கின்ற போது அவைகள் அதை மறுத்து, கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ் விதிவிலக்கு கேட்கின்றவர்கள் அதிகாரிகளை அணுகுகின்றபோது தாமதம் ஏற்படுகிறது என்ற காரணத்தினாலேதான், அரசாங்கத்திற்கு இந்த அதிகாரம் வேண்டுமென்று கருதப்படுகிறது. ஏற்கெனவே கலந்துகொண்டு செய்ய வேண்டுமென்று அதிகாரம் இருந்தாலும், அதிலே அரசாங்கமும் அளிக்கலாம் என்ற இந்தத் திருத்தம் இப்போது கொண்டு வரப்படுகிறது. இது நடைமுறை வசதிகளுக்காக செய்யப்படுகிறதே தவிர, ஊராட்சி மன்றங்களுக்கோ, ஊராட்சி ஒன்றியங்களுக்கோ கொடுக்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, கொண்டுவந்திருக்கின்ற திருத்தத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்துக்களும் அடங்கியிருக்கின்ற காரணத்தினாலே, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 33/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை, ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, "சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 33/73) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (இரண்டாம் திருத்த) சட்டமுன் வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 33/73) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 30/73).

[1973 டிசம்பர் 1

மாண்புமிகு திரு க. இராசாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட "தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன் வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவு மூலச் சட்டமான தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியத்தின் சட்டம் 4-வது பிரிவைத் திருத்த வழிவகை செய்கிறது. மூலச் சட்டத்திலுள்ள தற்போதைய 4-வது பிரிவின்படி தலைவர் ஒருவரும், அரசு சார்பில்லாத 4 உறுப்பினர்களும், அரசு அலுவலர்கள் 12 பேர்களும் ஆக மொத்தம் 17 உறுப்பினர்கள் வாரியத்திலுள்ள குழுவில் அங்கம் வகிக்கின்றனர். அவ்வாறு 17 பேர்கள் அங்கம் வகிக்கும் இந்தக் குழு அமைப்பெற்றும் மிக விரைவானதாகவும், அங்கத்தினர் அளவின்றிருந்து அமையப்பெற்றும் வாரியம் நன்கு நடைபெற, செயல்பட உகந்ததாக இல்லாத காரணத்தினால் குழுவினரின் எண்ணிக்கையைக் குறைக்க வழிவகை காணப்பட்டது. அந்த அடிப்படையில் வாரியத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 10 ஆக குறைத்து, தலைவர் நீங்கலாக அரசு சார்பற்ற மூவரையும், அரசு அலுவலர்கள் ஆறு பேர்களையும் நியமிக்க முடிவு காணப்பட்டது. அந்த முடிவிற்கு இணங்க குழுவின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கையை மாற்றியமைக்க மூலச் சட்டத்தின் 4-வது பிரிவை திருத்தியமைக்க இந்தச் சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட குழுவில அங்கத்தினர்கள் பதவி ஏற்கும் காலத்தில், தற்போதைய வாரியத் தலைவரும் மற்ற இரு அங்கத்தினர்கள் பதவியும் முடிவடைய வழிவகை செய்யப்பட்டிருக்கின்றது. சட்ட முன்வடிவின் நோக்கம் வாரியம் மேலும் நல்ல முறையில் செயல்பட குழுவை மாற்றி அமைப்பதாகும். எனவே இந்தச் சட்ட முன்வடிவை இந்த மன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—
"சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 30/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

* **Thiru A. R. Damodaran**: Hon. Chairman, it is very rarely Sir, that this House gets an opportunity to discuss the affairs of the State Housing Board, although we refer to it briefly during the Budget debates and perhaps during the debates on the Supplementary Demands I am glad that this amending Bill has given us an opportunity today to review some of the activities of one of the premier Boards in our State and also to express our opinions on this very important matter.

@ 51-52-ஆம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1973 டிசம்பர் 1] [Thiru A. R. Damodaran]

Sir, the activity of the State Housing Board, is, in my opinion, one of the most important activities of the State and we expect a great deal from this Board, considering the fact that in our country today, we have considerable shortage of housing accommodation and we expect this Board, with the resources it receives from the nationalised banks as well as from the Life Insurance Corporation as well as perhaps from the Government of India, to undertake this activity in as constructive a manner as possible with the least amount of wastage and with the greatest degree of efficiency. Well, Sir, the amendment sought to be made is innocuous and can be accepted without any comment. I do not think it will matter whether the number of Members is 17, 7 or even 5. But, reading what the Public Undertakings Committee has had to say about the State Housing Board, I must confess with a feeling of acute dismay and distress that the affairs of the State Housing Board require review at a very high level.

Sir, I have referred in the past to the fact that our Public Undertakings and more particularly, our Boards should be very prompt in submitting their accounts to the Legislature for scrutiny and I have also pointed out how under the Company Law, under which many companies function, companies with as high a capital as Rs. 50 and Rs. 100 crores and with transactions running into hundreds of crores of rupees, have the statutory obligation to finalise the accounts and place the accounts before the shareholders within six months after the end of the financial year of that particular company. I do not know exactly, Sir, how many crores of rupees the State Housing Board runs into in its transactions. But, I was aghast, Sir, to read from the Report of the Public Undertakings Committee the following paragraph in regard to the submission of accounts by this premier body. The Report of the Committee says: "The Committee understands that the accounts for 1964-65 with the Audit Report thereon were laid on the Table of the House in April 1970 and the accounts for the year 1965-66 with the Audit Report thereon were laid on the Table of the House in April 1973". Following this example, I would expect that the accounts of the State Housing Board for 1972-73 would be laid on the Table of the House some time in 1978 when I would possibly not be here to comment upon it. May I remark, Sir, that from the point of view of accounting, I am not trying to criticise any particular person of the Housing Board, but, I think the whole system requires reviewing, because there must be something radically wrong with the accounting procedure, if the premier Board is not able to place its accounts before the Legislature, let alone within six months, but not even within a period of five years? The Committee on Public Undertakings further goes on to say that the assets and liabilities statements of the Board have not been prepared for many years, that important registers 4·50 பி.ப.

ike Rent Registers and Hire Purchase Instalment Registers have not been maintained properly by the Board. If that be the case, Sir, may I ask how the Housing Board is able to collect rent, prepard Demand Collection and Balance Statement , review the progress of rent collection, find out how many debts have become time-barred and review the progress of Hire Purchase Instalments paid ? If this is the chaotic state of affairs in the Board, then, I am afraid that we are in for very serious trouble. The Committee has also pointed out that if such a state of affairs is allowed to continue, a situation would soon arise when the Legislature may not be in a position to vote any grants at all to the Housing Board in view of this very ineffective functioning in so far as its accounting is concerned.

While I have referred to many of the defects and the lapses of the State Housing Board, I would not like to refer to the various individual lapses, excepting to point out one or two important matters that have been highlighted in this report. Paragraph 21 deals with the loss of about Rs. 1 lakh due to delay in handing over a site to the allottee of the Housing Board. The site was ready for being handed over on 26th August 1965, but the site was actually handed over only on 5th October 1966. The allottee was Oberoi Hotels, (Private) Limited. Because of the late execution or improper execution of some documents, Messrs. Oberoi Hotels, (Private) Limited, have paid rent neither for this period nor for the period 1966 to 1970 for which they had agreed to pay such rent. According to my calculation, the loss to the Housing Board on this account alone, taking into account the interest charges, would be more than Rs. 4,60,00. No rent has been recovered so far from this allottee. If this is the position in regard to one allottee of the Housing Board, my imagination boggles at the thought of the huge amounts that are likely to be left without collection from other persons who have entered into contracts with the Board.

Sir, while I was Member of the Public Accounts Committee, we frequently used to come across the deficiency in the maintenance of stores ledgers and accounts by the Public Works Department and by the Highways Department and the Committee was often finding fault with and making criticism on, the accounting procedure that was being followed by the Government Departments. We do not seem to realise, Sir, that the transactions of today are enormous when compared to the transactions of 20 years ago. We seem to think that we can still continue to meander along the same old ways of accounting by having an army of clerks to maintain our ledgers and our day-books and the various forms and registers that are to be maintained. We do not bring to the task the modern conception of materials-management accounting procedure. If I may make a suggestion to the Hon. Minister, I think it is high time that the Housing Board consulted experts in the field of accounting technology. I am referring to computer



xperts and I would request him to kindly have a three-hour dicsussion ith the officers of the State Housing Board and the computer experts find out whether some radical change in accounting procedure could ot be prescribed and followed by the Board. One of the reasons why ur Corporation is in such a mess today is that we have entrusted the ntire task of preparing the demands for property tax, the demands r water tax, etc., to an army of inefficient clerical persons who either devote their time nor their attention to the proper preparation of these accounts, resulting in such a chaotic affairs, in the orporation. As has been pointed out by the Public Undertakings ommittee, such a situation exists in the State Housing Board also. As said, Sir, the State Housing Board has a great responsibility in the iture. In Town Planning, in Metropolitan Area Development, in e selection and development of house-sites, in the building of houses r low and middle income-group persons,enormous funds are going to be ven to the Board and I do not see, Sir, how such funds can be granted by the financial institutions if such a report is placed on its working id on its accounting management. That there is something seriously rong in the internal accounting procedure in the Board is evident from e report that has been placed. In fact, the Public Undertakings ommittee has gone so far as to say that the position requires urgent view ; and I would like to take this opportunity of requesting the on. Minister to kindly inform the Members of this House what steps has taken in this regard. I do not blame the Minister personally, ecause these lapses have occurred over the past 12 or 14 years. It a Herculean task to clean the Augean stables of the Housing Board id it will require a modern Hercules. Let me express the hope that the on. Minister Thiru Rajaram will prove himself to be the modern ercules to clean the Augean stables and bring some system of accounting procedure, by the adoption of modern technological innovation. et him at least strike out a new leaf and see that the affairs of the Board e brought to order at a very early date. Thank you, Sir.

திரு எஸ்.ஏ. ராஜமாணிக்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, வீட்டு சதி வாரிய நிர்வாக சீரமைப்பு குறித்து இங்கே கொண்டுவரப்பட்டுள்ள சோதாவினை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள ிரும்புகிறேன்.

இப்பொழுதுள்ள வாரியத்தின் அமைப்பு பெரிய அளவில் இருப்பதால், தைச் சிறு அமைப்பாக மாற்றுவதற்கான இந்த ஏற்பாட்டை நான் ாராட்டுகின்றேன். ஏற்கனவே வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்ட ாலத்தில் மிகக் குறைவான வீடுகளையே கட்டி வந்தது. நமது அரசு ந்த ஆறு ஏழு ஆண்டுக் காலத்தில் ஏராளமான வீடுகளைக் கட்டக்கூடிய ாய்ப்புகளை உருவாக்கி, இப்போதெல்லாம் வீட்டு வசதி அமைச்சகத்தில் ப்பொழுது பார்த்தாலும், "வீடு வேண்டும், வீடு வேண்டும்" என்று ட்கக் கூடியவர்களுடைய எண்ணிக்கை மிக ஏராளமாகப் பெருகிக் ாண்டே இருக்கும் நிலையை நான் பாராட்டுகிறேன். என்றாலும் கூட

[திரு எஸ். ஏ. ராஜமாணிக்கம்] [1973 டிசம்பர் 1]

இந்த வீட்டு வசதி வாரியம் மக்களுக்கு மிக வேகமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும். ஆயிரக்கணக்கில் கட்டிக்கொடுத்து அவர்களுக்கு வாழ வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று எந்த வேகத்தில் அவர்கள் திட்டமிடுகின்றார்களோ அந்த வேகத்தில் அவர்களால் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முடியாத நிலையில், நில ஆர்ஜிதம் போன்ற வகைகளில் பெருமளவிற்கு ரெவின்யூ மற்றும் சட்ட இலாக்காக்கள் குறுக்கிடும் நிலைகளைத் தான் பார்க்கிறோம். கோவை, சேலம், மதுரை, திருச்சி, மற்றும் சென்னை போன்ற பெரிய நகரங்களிலே புதிய புதிய நகர்ப்புறங்களை உருவாக்குவது என்று வாரியம் திட்டமிட்டிருந்தாலும், அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்யக்கூடிய நேரத்திலே, அது ஒவ்வொரு கட்டமாக மாறி கடைசியாக அனுமதி வாங்குவதற்குள் இரண்டு அல்லது மூன்றாண்டு காலம் ஆகிவிடுகின்றது. அதனால் அரசாங்கம், வாரியம் எந்த வேகத்தில் வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டும் என்று எண்ணு
5—00 பி. ப. கிறதோ, அந்த வேகத்தில் செயல்பட முடியாத நிலைமை ஏற்படுகின்றது.

(திரு. எஸ். நாராயணசாமி தலைமை)

அரசாங்கம் இதைக் கவனித்து இந்த நில ஆர்ஜிதங்களுக்காக தனியான ஒரு ஏற்பாட்டைச் செய்தால், மிகவும் நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அதைப் போலவே வீட்டு வசதி வாரியம் கட்டிய இடங்களிலே எல்லாம், அது சென்னை கார்ப்பரேஷனாக இருந்தாலும், கோவை நகரசபையாக இருந்தாலும், மதுரை கார்ப்பரேஷனாக இருந்தாலும், எல்லா நகரங்களிலும், ரோடுகளை யார் போடுவது, லைட்டுகளை யார் போடுவது, சாக்கடை வசதி யார் செய்வது, தெருவை யார் சுத்தம் செய்வது போன்ற தகராறுகள் இருந்து கொண்டே இருக்கின்றன. பல பகுதிகளில் இன்னமும் இருக்கிறது. ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை இந்தப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இருந்துகொண்டு வருகிறது. எந்த நகர சபையாக இருந்தாலும், வீட்டு வசதி வாரியம் கட்டிய இடங்களில் ரோடுகளைப் போடுவதில்லை. நகரசபைச் சட்டமும், வீட்டு வசதி வாரியச் சட்டமும் இரண்டும், ஒன்றுக்கொன்று ஒத்து வருவதில்லை. இதனால் பல நகரங்களிலே சுகாதாரக் கேடுகள் மலிந்து காணப்படுகின்றன. இதை நம்முடைய அமைச்சரவர்களும், அரசும் உடனடியாகச் சிந்தித்து, எந்தெந்த நகரங்களில் இப்படிப்பட்ட நிலை இருக்கிறதோ அதை உடனடியாக மாற்றுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வீட்டு வசதி வாரியம் கட்டியிருக்கக்கூடிய பகுதியில் இருக்கக்கூடிய ரோடுகள் அனைத்தையும் அந்தந்த நகரசபையிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்குத் தேவையானபடி நகராட்சிச் சட்டத்தில் இடையூறுகள் இருந்தால், அவைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று நம்முடைய அரசை இந்த நேரத்தில் வேண்டிக்கொள்கிறேன். அதைப் போலவே இந்த வீட்டு வசதி வாரியம் கட்டக்கூடிய வீடுகளில் ஏதோ ஒரு சில பகுதி தான் மாதம் 50 ரூபாய், 60 ரூபாய் வாடகை கொடுக்கக்கூடிய அளவிலே இருந்து கொண்டிருக்கிறது. மாதம் 30 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை வாடகை கொடுக்கக்கூடிய சக்தி உள்ளவர்கள்தான் நாட்டிலே ஏராளமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு குடியிருப்பதற்கான வீடுகளை பெருமளவில் கட்டிக் கொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டு இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.



1973 டிசம்பர் 1]

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே வீட்டு வசதி வாரியத்தினுடைய நிர்வாகத் திருத்தத்தைப் பற்றிய மசோதாவில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் வீட்டு வசதி வாரியத்தினுடைய வளர்ச்சியிலே அவருடைய பாராட்டைத் தெரிவித்து, நடைபெறுகிற வேலைகளிலே இந்த அரசு கவனிக்க வேண்டிய பல்வேறு பிரச்சினைகளை இங்கே மிகச் சிறப்பான முறையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த மட்டில், இந்த அரசாங்கம் வீட்டு வசதித் துறையில் மிக அதிகமாகக் கவனம் செலுத்தி இருக்கிறது. பெரிய நகரங்களில் வாழுகிற நடுத்தர மக்கள், ஏழை மக்கள், அரசு அலுவலர்கள் போன்றோருக்கு இட நெருக்கடியைப் போக்குவதற்கும், அதோடு மட்டுமல்லாமல் நவீன முறைப்படி சுகாதார வசதியோடு கூடிய வீடுகளை உருவாக்குவதற்கும் இந்த வாரியம் மிகச் சிறப்பான பணியில் ஈடுபட்டிருக்கிறது. சென்னையைப் பொறுத்த மட்டில், இந்த வாரியத்தினுடைய சாதனைகளைப் பல்வேறு குடியிருப்புகளில் நாம் காண்கிறோம். புதிதாக உருவாகியிருக்கிற அண்ணா நகர் இந்த வீட்டு வசதி வாரியத்தினுடைய தலை சிறந்த சாதனைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. சென்னையை அடுத்து, திருச்சி, கோவை, மதுரை போன்ற இடங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அமைக்கப்பட்ட வீடுகள் நம்முடைய வீட்டுப் பிரச்சினையை ஓரளவிற்குப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பாக இருக்கிறது. ஆனால் இங்கே உறுப்பினருடைய எண்ணிக்கையை நிர்வாக உறுப்பினர் எண்ணிக்கையை 15-லிருந்து 10 ஆக மாற்ற வேண்டுமென்ற திருத்தம் நிர்வாக வசதிக்காகக் கொண்டு வரப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த மட்டில், இந்த வாரியம் மிகப் பெரிய வாரியமாக, மிகப் பெரிய ஸ்தாபனமாக வளர்ந்திருக்கின்றது. தலைநகரில் இருக்கிற இந்த வீட்டு வசதி வாரியத்தை, தென் மண்டலத்திற்குத் தனி வீட்டு வசதி வாரியத்தை உருவாக்கி, இரண்டு பிரிவாகப் பிரித்தால் அதனுடைய நிர்வாகம் மிகச் செம்மையாக நடைபெறும் என்று என்னால் நம்ப முடிகிறது. குறிப்பாக, திருச்சி, தஞ்சை, மதுரை, வேறு பல நகரங்களில், இப்படி மாவட்டங்களுடைய தலைநகரங்களில் உருவாகி வருகிற இந்த வீட்டு வசதி வாரியத்தின்கீழ் கட்டப்படுகிற வீடுகள் தாலூகா நகரங்களிலும் கட்டப்பட வேண்டுமென்று பல்வேறு இடங்களில் இந்த வேலைகள் துவங்கியிருக்கின்றன. இது மிகப் பெரிய வேலையாகவிருக்கிற காரணத்தினால், இவைகளை நேரடியாகக் கண்காணிக்கவும், தவறுகளைத் தடுத்து நிறுத்துவதற்கும் இப்பொழுதே "டிசென்ட்ரலைசேஷன்" செய்வது நிர்வாகத்திற்கு வாய்ப்பாக இருக்குமென்ற கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினால், இது பற்றி இந்த நேரத்தில் அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தமட்டில், ஒரு கருத்து சொல்லப்பட்டது. பல அரசு அலுவலர்கள் பல மாதங்களாக, ஏன் பல வருடங்களாக, தாங்கள் குடியிருக்கிற வீடுகளுக்கு வாடகை கொடுக்காமல் இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த நண்பர்கள் சொல்கிறார்கள். அவர்கள் கேட்கவில்லை, நாங்கள் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். நம்முடைய அரசாங்கம் கோடிக்கணக்கான பணத்தைப் போட்டு அவர்களுக்கு வீடு கட்டிக்

கொடுத்திருக்கிறது. அவர்களுடைய மாதாந்திர சம்பளத்தில் பிடித்துக் கொள்வதற்கான ஒரு புதிய முறையை நாம் கையாள முடியும். ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் அங்கே குடியிருப்புகளில் குடியிருந்தால், அவர்கள் சம்பளப் பட்டியலிலிருந்தே வீட்டு வாடகையைப் பிடித்துக்கொள்வதற்கு வசதியிருக்கிறது. அந்த முறையை இங்கே பயன் படுத்தலாம். இதைச் சொல்லுவதற்குக்காரணம் இப்போது ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பொறுப்பேற்றிருக்கிற வீட்டுவசதி வாரியத் தலைவர் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தார். அவர் அங்கே மனு நீதி நாளை அறிமுகப்படுத்தினார். மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டு அந்த இடத்திலேயே பரிகாரம் காண்கிற முறையைக் கடைப்பிடித் தார். அவர்களுடைய குறையைக் கேட்டறிந்தார், தக்க நடவடிக்கைகள் எடுத்தார். இப்போது கூட பத்திரிகையில் பார்த்தேன். சென்னையில் இருக்கிற வீட்டு வசதி வாரியத்தினுடைய குடியிருப்புகளுக்கு அதிகாரி களோடு மாதம் ஒரு முறை சென்று அந்தக் குடியிருப்பு வாசிகளிடம் அவர்களுக்கு என்னென்ன தேவைகள், என்னென்ன குறைகள் என்று கேட்டு எப்படி நிவர்த்திக்க வேண்டுமென்று முடிவு காண்பதாக பத்திரி கையில் படித்தேன். இது நல்ல முறை. இது எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். சென்னையில் நடைபெறுகிற இந்தச் சீர் திருத்தம், மதுரையிலும், கோவையிலும், திருச்சியிலும் நடைபெற்றால் அங்கே தவறுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை. நான் ஒன்று இந்த நேரத்தில் சொல்வது கடமை என்று கருதுகிறேன். இந்த வீடு கள் கட்டுவதற்கு ஏராளமான பொருள் தட்டுப்பாடு இருக்கிறது. சிமெண்ட், கம்பி போன்ற பொருள்களை மதுரையிலே கொண்டுவந்து சேர்த் திருந்தார்கள். அவைகளை அங்கே முறைப்படி கண்காணிக்காமல், அப்படி சேமிக்கப்பட்ட கிடங்குகளில் பொருள்களுக்கு நஷ்டம் உண்டாகிற அளவுக்கு அல்லது கவனிப்பாரற்றுக் கிடக்கிற அளவிற்கு இருப்பதை மதுரையில் எங்களால் காண முடிகிறது. இந்தப் பிரச்சினையை நாம் உன்னிப்பாக கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு எண்ணம் இருக்கிறது. இது பொது ஸ்தாபனம், இதிலே யாருக்கு அக்கறை இருக்கிறது என்கிற நினைப்பு கீழ் மட்டத்தில் பணியாற்றுகிற பல்வேறு அதிகாரிகளுக்கு இருக் கிறது. அவர்களுக்கெல்லாம் இந்த அரசின் மூலமாக, அல்லது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, அதன் தலைவர் மூலமாக கடுமையான சுற்றறிக்கைகள் விடுவதன்மூலம் எந்த பொருளுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும், அதற்குப்பொறுப்பாக இருக்கிற அதிகாரிகள்தான் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று அந்த ரெஸ்பான்சிபிலிடியை அவர்கள் மீது ஃபிக்ஸ் பண்ணினால், இந்தத் தவறுகளைக் களைந்தெறியலாம். மிகப் பெரிய பட்டணங்களில் இட நெருக்கடியைப் போக்குவதற்கும், நடுத்தர மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் இந்த அரசாங்கம் ஒவ் வொரு தாலுகாவிலும் வீட்டு வசதி வாரிய வேலைகளைத் தொடங்கியாக வேண்டும். எனக்கிருக்கிற குறையெல்லாம், சென்னையைச் சுற்றி நடக்கிறது, திருச்சியைச் சுற்றி, கோவையைச் சுற்றி நடக்கிறது. இந்தக் காரியங்களெல்லாம் தென் பகுதியில் உள்ள தாலுகா நகரங்களுக்கும் வர வேண்டுமென்பதுதான். இதிலே இந்த அரசு சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் சிவகங்கையில் மட்டும் இந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது. காரைக் குடி, அருப்புக்கோட்டை, திருவில்லிபுத்தூர், ராஜபாளையம் போன்ற



நகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும். இந்த நிர்வாகம் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமானால், இந்த வாரியம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தெற்குப் பகுதி, வடக்குப் பகுதி என்று பிரிக்கப்பட்டு, இங்கே வேண்டுமானால் தலைமையகம் அமைச்சர் பொறுப்பில் முழுப் பொறுப்பு வகிக்கலாம் என்று சொல்லி இதை ஆலோசிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த வீட்டு வசதி வாரியப் பொறுப்பேற்றிருக்கிற தலைவர் மிக சுறுசுறுப்பாகநடவடிக்கை எடுப்பதாகக் கேள்விப்பட்டேன். பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு வாரியத்திற்குச் சேர வேண்டிய கடன்களை சில வாரங்களில் பெற்றிருப்பதாகவும், மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் அறிகிறேன். அந்த வாரியத் தலைவருக்குப் பாராட்டுதலைத் தெரிவித்து பொறுப்பேற்றிருக்கிற அமைச்சரவர்களுக்கும் பாராட்டு தெரிவித்து எங்களையும், எங்கள் பகுதி யையும் இந்த விஷயத்தில் கவனிக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*THIRU G. VASANTHA PAI : Mr. Deputy Chairman, I thank you very much for giving me this opportunity. I was provoked into speaking by Mr. Damodaran's speech that computers should be introduced even into the accounting system and procedure of the Housing Board. As a person who feels that clerical labour should not be unduly taxed and made to run out of employment, I have always opposed the introduction of computers for everything under the Sun and especially in the matter of clerical work. Sir, I do feel that the accounting system prevailing in the Housing Board and many other public undertakings is not up to the mark, but that is no reason why the vast majority of unemployed people, should, by entrusting everything to machines, remain out of employment. Sir, I know machines can also make mistakes. For instance, I went to a shop in Grand Canyon and made purchases for 2 dollars 40 cents, and I found that the lady incharge, after punching the bill told me that I had to pay 12 dollars 40 cents. I had to go to the topmost person in the shop to get it corrected as others could not calculate even for 2 dollars 40 cents. It was because the computer put the figure 1 by the side of the figure 2 and every-one of them did not know how to count and arrive at the correct total figure 2 dollars 40 cents. Sir, it is not persons alone, human element alone, that makes errors, but machines also do make errors. I do not appreciate that in every walk of life , machines should be introduced in the place of the human beings who are so much in abundance in our country. When we have got 500 million and many of them are trying to eke out their livelihood, we cannot substitute them by robots and computers and I beg to differ from Mr. Damodaran though I have got very high regard for the sentiments expressed by him on the floor of the House that the Housing Board accounts as old as 1955 or 1956 have to be brought up-to-date up to this year, 1973. Something radical must be done to effect 5.0 பி.

improvement in this state of affairs and I hope the Hon. Minister would attend to this Herculean task with the characteristic zeal which he brings to bear on all his projects.

Another thing I want to tell, Sir, though it may not be apposite to the matter under discussion. There have been a lot of complaints that persons who have been allotted house-sites suddenly find that the sites have already been in the hands of another and he has started construction and that the allotment of the plots allotted to them had been made to somebody else. I have experience of several such people coming to me, especially from the lower rungs of the ladder, who have no strings to pull, who have no god-fathers in the hierarchy, and complaining to me that such things are happening and asking my advice whether they can defend their rights by fighting in Courts and I have always advised them not to go to Courts because they cannot afford the cost of litigation. I am saying this because during the course of the past 6 or 7 years, at least ten such cases have occurred and most of the persons belong to the very low cadre and I have advised them not to fight in Courts but to approach the authorities directly. This is probably due to the fact that the accounts are very old, as old as 1963 or 1965 and persons are not able to find out from the registers whether their nemes have been registered. It may not be due to any act of favouritism or things like that, that this is happening, but it may be due to sheer lapse in the accounting system, in getting the register of applicants up-to-date and I give the benefit of doubt to the authorities. I do hope that this accounting system would be made proper and appropriate in the circumstances. Something must be done in this matter and I do not want public sector undertakings which are doing many good things to be criticised in public that their accounting is very much antiquated and ante-diluvian.

I hope, Sir, that the Hon. Minister till take steps to bring his energy to bear in this matter and next year we will see the 1973 account of the Housing Board on the table of the House.

Thank you.

*திரு காட்டூர் கோபால்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தினுடைய சீரமைப்பு மசோதாவின்மீது பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த நிர்வாக அமைப்பினுடைய் அளவைக் குறைப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதனுடைய அலுவல்கள் இப்போது இருப்பதை விடப் பெருமளவில் பெருக வேண்டிய அவசியத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தமிழ் நாட்டில் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். சுதந்திரம் அடைந்து 26



ஆண்டுக் காலம் ஆகி விட்டது. தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலையில் இருக்கின்ற காலம் வரையில் தான், என்கிற நிலையில் தொழிலாளர் காலனிகள் தற்போது அமைந்துள்ளன. தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் பல ஆண்டுக்காலம் பணியாற்றிவிட்டதற்குப் பின்னாலும், தங்களுக்குச் சொந்தத்தில் வீடு இருக்கிறது என்று சொல்லிக் கொள்வதற்கு, 26 ஆண்டுக்கால சுதந்திரத்திற்குப் பிறகு, இப்பொழுதும் கூட, இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, வீட்டு வசதி வாரியம் ஏற்கெனவே செய்த பணிகள் பாராட்டத்தக்கவை என்றாலும், இன்னும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் வசதியில், வாய்ப்பில், வேலைப் பொறுப்புகளில், பல்வேறான வகையில், வித்தியாசப்பட்டு வேற்றுமையான நிலைமையில் இருக்கிறார்கள். குறைந்த மாத ஊதியம் பெறுகின்றவர்கள் இருக்கிறார்கள். நூற்றுக் கணக்கில் மாதச் சம்பளம் பெறும் பெரிய அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஒரு ஒற்றுமை இருந்து வருகிறது. எந்த ஊதியத்தில் உள்ளவர்களாக இருந்தாலும், கடன்காரர்கள், கடன் பட்டவர்கள் என்கின்ற பட்டியலில் எல்லா ஊழியர்களும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். அவர்கள் எதனால் கடன் பட்டிருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்க்கின்றபோது ஒரு இருபது ஆண்டுகாலம் அந்தத் தொழிலாளர்களுடன் தொடர்பு இருக்கின்ற எனக்குத் தெரிந்த வரையில் அந்தத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மாதத்திற்கு ஒரு முறை ஊதியம் பெறுகின்றவர்கள் என்றாலும், முக்கால் பாகத்திற்கு மேல் கழிவு படுகின்ற தொகையாகப் போய், கால் பங்குதான் சம்பளமாக, பணமாகக் கடைசியில் வாங்குகிறார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் 26 ஆண்டுக்கால சுதந்திரத்திற்குப் பின்னால், கலைஞர் அரசு காலத்தில்தான், கழக அரசு காலத்தில்தான் இப்பொழுது அமைச்சர் திரு. ராஜாராம் அந்தப் பொறுப்பில் இருக்கின்ற காலத்தில்தான், தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தருகின்ற, சொந்த வீடு அமைத்துத் தருகின்ற திட்டத்தை அவர் ஆராய்ந்து கொண்டிருக்கிறார். அறிவிக்கின்றபோதே நான் இந்த நிலைமைகளைத் தெரிவிப்பதற்குக் காரணம் தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் தங்களுடைய வருமானத்தை அறிந்து, வருவாயை அறிந்து செலவு செய்கின்ற, குடும்ப பட்ஜெட் போட்டு செலவு செய்கின்ற அந்த நல்ல பயிற்சி முறைக்கு இன்னமும் ஆளாக்கப்படவில்லை. வீட்டு வசதி வாரியத்தினுடைய அமைச்சர் அவர்களே தொழிலாளர் நல அமைச்சராகவும் இருந்து வருகிறார். இந்த அரசு தொழிலாளர் நல அரசாகவே இயங்கி வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தத் தொழிலாளர் நல அரசு தொழிலாளர் தன் சம்பளத்தை பட்ஜெட் போட்டு, வரவை அறிந்து செலவு செய்கின்ற ஒரு நல்ல பயிற்சிக்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைப் பற்றி ஒரு சீரிய சிந்தனை செய்து அதற்கும் ஒரு உரிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கு 207க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் இருக்கின்றன. இந்தப் பஞ்சாலைத் தொழில்

45 வருடங்களாக இருந்து வருகின்ற மூத்த பெரும் தொழிலாகும். அவைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் லட்சக் கணக்கில் இருந்தாலும், அவர்களுக்குக் கூட சொந்தத்தில் வீடுகள் இல்லை. இன்ஜினீயரிங் தொழில்கள் பல நூற்றுக் கணக்கில் இருக்கின்றவைகளில், வேலை செய்கின்றவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருக்கின்றார்கள். பிரதி மாதமும் சில நூற்றுக்கணக்கான ரூபாய் சம்பளம் பெறுகின்றார்கள். அவர்களுக்கும் சொந்தத்தில் வீடு இல்லை. இந்த அரசு தொழிலாளர்களுக்காகவே இருக்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தினால், எப்படியாவது வரவை அறிந்து செலவு செய்கின்ற ஒரு பயிற்சியை அவர்களுக்கு வழங்கி, குறிப்பிட்ட திட்டத்தைச் சொல்லி, குறிப்பிட்ட ஆண்டுகளுக்குள்ளாக இவ்வளவு ஆயிரம் வீடுகள், இவ்வளவு லட்சம் வீடுகள் என்கின்ற வகையில் திட்டம் போட்டு, அவர்கள் சொந்தத்தில் வீடுகள் கட்டிக்கொள்ளும் திட்டத்தைத் தர வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தருவதற்கு ஒரு தனி வாரியமே அமைத்துச் செயல்படுவது அவசர அவசியம் என்பதை நான் இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு எ.ஆர். தாமோதரன் அவர்கள் பப்ளிக் அண்டர்டேகிங்ஸ் கமிட்டியினுடைய குறிப்புகளைச் சொல்லி, சில ஆலோசனைகளைச் சொன்னார்கள். இந்த வாரியத்தின் கணக்குகள் 1964-65 ஆண்டுக்குச் சம்பந்தப்பட்ட வரைதான் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. 1967 ஆம் ஆண்டுக்குப் பின்னர், இந்த அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னர், அதனைக் கண்டு பிடிக்கவும், சீரமைத்திடவும் எடுத்துக் கொண்ட பணிகளைப் பற்றி, நான் அந்த வீட்டுவசதி வாரியத்தினுடைய ஊழியர்களின் சங்கத் தலைவர் என்ற காரணத்தால் மாதத்திற்கு ஒரு முறை அந்த வாரியத்தினுடைய தலைவர் அவர்களோடு நடத்துகின்ற பேச்சு வார்த்தையின்போது எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற தகவல்களின்படியும், அங்கேயுள்ள ஊழியர்களின் சங்கத்தை நடத்துகின்ற காரணத்தாலும், தற்போது அங்கே இருக்கின்ற கணக்குகளை சீராக அமைக்கக் கூடிய முறையில் ஒரு குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு, வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தற்போது அமுலாகி வருகின்ற மனுநீதித் திட்டம் என்ற வகையில் இந்த வீட்டு வசதி வாரியம் இருக்கின்ற இடங்களில் வீடு அமைத்துக்கொண்டிருக்கின்றவர்கள் தங்களுடைய குறைகளைச் சொல்லிக் கொள்வதற்கு ஏற்பட்டிருக்கின்ற அந்தச் சீரிய திட்டம் வரவேற்கத்தக்கது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கோவையிலும், சேலத்திலும் குறைந்த ஊதியம் உள்ள மக்கள் அனுபவிக்கத்தக்க அளவுக்கு வீடுகள், குறுகிய காலத்தில் பாராட்டத்தக்க வகையில் ஏற்பட்டிருக்கின்றன. அந்தப் பணிக்காக நான் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தினுடைய பணிகள் பாராட்டத்தக்கவை என்றாலும், இந்தச் சந்தர்ப்பத்தில், அங்கு இருக்கின்ற அநேக ஊழியர்களுடைய சங்கத்தின் தலைவர் என்ற வகையில், அங்கே இருக்கின்ற சில நிலைமைகளைச் சொல்வது என்னுடைய கடமையாகும்.



இந்த அரசு கழக அரசாக இருக்கின்ற காரணத்தால், கழகத் தலைவர்கள் கழகத்தினுடைய முன்னணி ஊழியர்கள் பொறுப்பேற்றிருக்கும் சங்கங்களுக்குத் தனியான ஆதரவு தருவதாக மற்றவர்களால் குற்றம் சுமத்தப்படுகிறது. அங்கே நான் தலைவராக இருந்து வருகிறேன். அங்கு பெரும்பாலான ஊழியர்கள் உறுப்பினர்களாக இருக்கிற சங்கம் என்னுடைய தலைமையிலே இயங்கி வருகிறது. அந்தச் சங்கத்தை அங்கீகரிக்கும்படி நியாயபூர்வமாகவும், சட்ட பூர்வமாகவும் நான் முயற்சி செய்துகொண்டிருந்தாலும், தொடர்ந்து காலதாமதம் ஆகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அமைச்சர் அவர்கள் இந்த நியாயமான கோரிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஊழியர்களும் அதிகாரிகளும் வீட்டு வாரிய அமைச்சர் அவர்களும் தற்போது செய்து வருகின்ற சிறப்பான பணிகளைப் பாராட்டி, இந்த மசோதாவை வரவேற்று விடைபெறுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை

5-20

திரு. சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு அவைத்தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரிய சீரமைப்பு மசோதாவின் மீது எனக்கு பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். வீட்டு வசதி வாரிய சீரமைப்பு மசோதாவில், மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் மற்றவர்களுக்கும் வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறார்கள். அதுபோலவே சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய முடி திருத்துவோருக்கும் சலவையாளர்களுக்கும் ஐந்து சதவிகிதம் வீட்டு வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நமது பின்தங்கிய சமுதாயத்தில் உள்ள மக்கள் எல்லாம் மிகவும் வரவேற்று இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். குறிப்பாக, இப்போது கூட நகர்ப்புறங்களில் வாடகைக்கு வீடு வேண்டுமென்று கேட்டால், நீங்கள் என்ன "வர்ணம்" என்று கேட்டுத்தான் வாடகைக்கு விடுகிறார்கள். இந்த நிலை சென்னை நகரத்தில்கூட இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம், இப்போது வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக அவர்கள் குடியிருப்பதற்கு வீடு கிடைத்து மிகவும் மகிழ்ச்சியடைகிறார்கள். அது மட்டுமல்ல. சலவைத் தொழிலாளர்களுடைய குடியிருப்பு வசதிக்கு இந்த அரசு திட்டம் தீட்டியிருப்பது குறித்து உள்ளபடியே நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நன்றியைக் கூற விரும்புகிறோம். வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக நகரங்களில் ஆங்காங்கே ஒரு சலவைத் துறையை அமைத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, நமது அமைச்சர் அவர்கள் மாபெரும் நமது தந்தை பெரியார் அவர்களிடம், பேரறிஞர் அண்ணா அவர்களிடம் இருந்தவர், அதன் காரணமாகத்தான், இந்த தாழ்ந்த சமுதாயத்தின்மீது பற்று கொண்டு, அவர்களுக்கு ஐந்து சதவிகிதம் வீட்டு வசதி அளிக்கவேண்டுமென்ற ஒரு நிலையை உருவாக்கி, நமது கலைஞர் அவர்களுக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். இந்த அரசுக்கு என்னுடைய சமுதாயத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவரவர்களே, நமது மாநிலத்திலுள்ள பொது நிறுவனங்கள், அரசுடைமை நிறுவனங்களில் மின்சார வாரியத்திற்கு அடுத்தபடியாக வீட்டு வசதி வாரியம்தான் மிகவும் பெரியது, அதிகமான மூலதனம் இதில் முடக்கப்பட்டுள்ளது. வெளியிலிருந்து நிறைய கடன் வாங்கியும் போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி நிறுவனங்களில் மேற்பார்வை போதுமானதாக இல்லை. இதில் நல்ல மேற்பார்வை இருக்க வேண்டும். நிதியை ஒதுக்கும் சட்டசபைக்கு இதில் பொறுப்பு இருக்க வேண்டும். ஆகவே பொது நிறுவனங்களைக் கவனிக்கக்கூடிய ஒரு குழுவை இரண்டு சட்டசபைகளும் சேர்ந்து நியமிக்க வேண்டும் என்று 2, 3 அண்டுகளாகவே பட்ஜெட் கூட்டத்தில் நான் வற்புறுத்தி வருகிறேன். இதை, சட்ட அமைச்சர் என்ற ரீதியில் தொழில் அமைச்சர் அவர்கள் இந்த வருஷம்தான் ஒப்புக்கொண்டு, 1973–74-க்கு ஏப்ரல் மாதத்தில் ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவின் முதல் கூட்டத்திலே அவ்வேளையும் ஒரு உறுப்பினராக இருப்பதைப்பற்றி மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நான் அந்தக் குழுவின் உறுப்பினராக இல்லையெனில், இவ்வளவு விவரங்களைத் தெரிந்துகொண்டிருக்க முடியாது. இந்தக் குழு அமைக்கப்படாமல் இருந்திருந்தால், இவ்வளவு விவரங்கள் நண்பர் திரு. தாமோதரன் அவர்களுக்குக்கூட கிடைத்திருக்காது. அந்தக் குழு மிக நல்ல வேலை செய்திருக்கிறது. இப்போது அவை முன் விவாதத்தில் இருக்கும் மசோதா மிகச் சுருக்கமான ஒரு காரியத்திற்காக இருந்தாலும் கூட, நான் இந்த மசோதாவுக்கு வெளியே சென்று சில பொது விஷயங்களையும் பேச விரும்புகிறேன். பொதுவாக நமது வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி பேசுவதற்கு வேறு சந்தர்ப்பம் இல்லாததனாலே, இதைப் பற்றி விவரமாகப் பேசவேண்டுமென்று விரும்புகிறேன்.

முதலில் இந்த மசோதா பற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். இந்த வீட்டு வசதி வாரியம் விரிவாக பெரிதாக இல்லாமல் சிறிதாக இருக்க வேண்டும்; இதிலே தலைவரைத் தவிர மற்றும் ஆறு மெம்பர்கள் உத்தியோகப் பற்று உள்ளவர்களாகவும் மூன்று மெம்பர்கள் உத்தியோகப் பற்றற்றவர்களாகவும் இருக்கவேண்டுமென்று மசோதாவில் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டு மெம்பர்கள் சட்டசபையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்று காலையில் பேரவையில் நடந்துகொண்டிருந்த விவாதத்திலிருந்து எனக்குத் தெரிந்தது. அவர்கள் பேசியது என் காதில் விழுந்தது; அதை அறையில் இருந்துகொண்டு கேட்டேன். இரண்டுபேர் சட்டசபை அங்கத்தினர்களாக இருந்தால், அதில் ஒருவர் மேலவை அங்கத்தினராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் இந்த மேலவைக்குள்ள உரிமையை நான் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. அந்த விஷயத்தைப்பொறுத்த வரையில், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், நாங்கள் 63 பேரும் ஒன்றுதான். யாரைப்போட்டாலும், அதைப்பற்றிக் கவலை இல்லை. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, மேலவையிலிருந்து ஒருவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக, எதிர்க்கட்சியிலிருந்து ஒருவரை நியமிப்பதுதான் வழக்கம். (சிரிப்பு) அப்படியே செய்யவேண்டுமென்று கூட வற்புறுத்தவில்லை.........

திரு எம். சங்கரலிங்கம் : 63 நாயன்மார்களும் ஒரே கட்சியாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள்......



திரு. கே. ராஜாராம் : யாரைப் போட்டாலும் எனக்குச் சம்மதம் என்று சொல்லிவிடுகிறேன். பொதுப் பழக்கத்தைச் சொன்னேன். அவையில் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவரைப் போட்டால், இந்த அவையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவரைப் போடுவது நலம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். எப்படிச் செய்தாலும் சரி, ஒரு உறுப்பினர் இந்த அவையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நமது வீட்டு வசதி வாரியத்தின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளைப் பார்த்தால் தான், இவ்வளவு குறைபாடுகள் எப்படி வந்தன என்று தெரியும். முதலில், சிறிய அளவில் "சி.ஐ.டி." என்று ஆரம்பிக்கப்பட்டது. அது, வீட்டு வசதி வாரியம் என்று இவ்வளவு பெரிய ஸ்தாபனமாக வரும் என்று அப்போது யாரும் நினைக்கவில்லை. "சிட்டி இம்ப்ரூவ்மெண்ட் டிரஸ்ட்" என்று நகரத்தில் ஒரு சிறிய அமைப்பை வைத்து வீடுகளைக் கட்ட வேண்டுமென்று ஆரம்பித்தோம். முதலில் ஆரம்பித்தது 1951-இல் என்று நினைக்கிறேன். ஞான ஒளிவு அவர்கள் காலத்தில்தான் கட்டிடங்கள் அதிகமாகக் கட்டப்பட்டன. அப்போது சிறிய வாரியமாக இருந்தது. கணக்கு வழக்குகளைச் சரியாக வைத்துக்கொள்ளவில்லை. லோக்கல் பண்ட் கணக்கு பரிசோதகர் அந்தக் கணக்கைச் சரிபார்த்துக்கொண்டிருந்தார். அப்போது கணக்குப் புத்தகங்கள் சரியாக வைத்துக்கொள்ளவில்லை. அப்போதே அரசாங்கம் இதைக் கவனித்திருக்க வேண்டும். வேலை பெருகப் பெருக, நிதி அதிகமாக அதிகமாக, கணக்குகளைச் சரியாக வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதற்குத் தகுந்தபடியாக, அக்கவுண்ட்ஸ் மெம்பரை எலெக்ட்ரிசிட்டி போர்டில் போட்டது மாதிரி, போட்டிருக்க வேண்டும். தற்போதுள்ள வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த வரையில், உத்தியோகஸ்தர்கள்—தலைவரும் மற்றவர்களும்—துடிப்பாக இருக்கிறார்கள். இளைஞர்கள், சீப் இஞ்சினியரும் சரி, சேர்மனும் சரி, நாங்கள் கேட்கும் தகவல்களை நொடிக்குள் கொடுத்துவிட்டார்கள். அதனால்தான் இந்த ரிப்போர்ட் இவ்வளவு சீக்கிரம் கொடுக்க முடிந்தது.

தலைவரவர்களே, இந்த வாரியத்திற்கு எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன, எத்தனை வீடுகள் இருக்கின்றன, எங்கெங்கே நிலம் இருக்கிறதென்று எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டால், அதற்கு ரிக்கார்ட் கிடையாது. இப்போதுள்ள வாரிய நிர்வாகஸ்தர்கள், அவைகளைச் சேகரித்து எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். இன்னும் முடியவில்லை. 1969–70-ம் ஆண்டுக் கணக்கிலிருந்துதான் அக்கவுண்டண்ட்–ஜெனரல் பார்க்க ஆரம்பித்திருக்கிறார். அதற்கு முன்னாலெல்லாம் லோகல் பண்ட் கணக்குப் பரிசோதகர் பார்த்துக்கொண்டிருந்தார். அக்கவுண்டண்ட்–ஜெனரல் கணக்கை மேற்பார்வையிட ஆரம்பித்த பிறகு, அதைப் பரிசீலித்து, ரிப்போர்ட் ஒன்றும் வந்து சேரவில்லை. 1965–66-ம் ஆண்டு வரைக்கும்தான் நமக்குக் கணக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே இதை மிகவும் தீவிரமாக அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும்.

இப்போது கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு நிதி சம்பந்தப்பட்டிருக்கிற அந்த வாரியத்தில் இவ்வளவு குறைபாடுகள் இருக்கும்படியாக விட்டு வைப்பது மிகவும் தவறு. இதில் உடனடியாக சரியான நடவடிக்கை

.பி.ப. எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, "பிசினஸ் லைக்" ஆக இல்லை. ஒரு டெண்டர் கேட்கிறார்கள். சாமான்களை சப்ளை செய்யவேண்டுமென்று டெண்டர் கேட்கிறார்கள். 10 லட்சம், 20 லட்சம் ரூபாய்க்கு ஜி.ஐ. பைப்ஸ் வேண்டுமென்று டெண்டர்கள் கேட்கி றார்கள். இந்த டெண்டர்கள் 4 மாதங்களில் முடிவு செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால் தான் இந்த விலை என்று ஒருவர் டெண்டர் கொடுக்கிறார். 4 மாதம் அவகாசம் கொடுத்திருக்கிறபோது, அதை 4 மாதங்களுக்குள் உடைத்து, டெண்டரை ஒப்புக்கொள்ளுகிறேன் என்று சொல்ல வேண்டாமா? டெண்டரை 4 மாதங்களுக்குள் முடிவு செய்யவில்லை. இதனால் இந்த வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டம் 75,000 ரூபாய்.

"Am ng various items, a case of extra expenditur of Rs. 75,000 in purchase of Galvanized Iron Spunp'p s due to delay in deciding the tender" என்று சொல்லப்பட்டிருக்கிறது. டெண்டர் குறித்த தேதிக்குள் முடிவு செய்யப்படுவதில்லை. ஊழல் என்பதற்கு எங்கேயோ போய்ப் பார்க்க வேண்டாம். சாதாரணமாக ஒரு கிளார்க் டெண்டரை மேசையில் வைத்துக் கொண்டு, 4 மாதத் தவணை முடியும் வரையில் போட்டு வைத்திருந்தால் போதும். பல லட்சக் கணக்கில் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும். முனிசிப்பல் கார்ப்பரேஷனிலும் இப்படித்தான் ஊழல் வந்தது. இதைப் பற்றி, யாரும் எந்தக் காலத்தில் நடந்தது, எந்த அரசாங்கத்தில் நடந்தது என்று கேட்கக்கூடாது. நாம் வீட்டு வசதி வாரியத்தைப்பற்றி விவாதிக்கின்றோம். இந்த வாரியம் இதுவரை நடந்துகொண்டுள்ள நடப்பு சரியில்லை. சரியாக நடக்க வேண்டுமென்று வாரியத்தின் குழு சிபாரிசு செய்திருக்கிறது. நிறைய ரிக்கார்டில் இருப்பதால், இதைப்பற்றி அதிகமாகப் பேச வேண்டியதில்லை. அச்சடித்து கையில் கொடுத்திருக்கிறார்கள். இதில் நல்ல திருப்பு முனை இப்போது ஏற்பட்டிருக்கிறது. இதைச் சரியானபடி அமைத்திட வேண்டும். இப்போதுள்ள நிர்வாகஸ்தர்கள் எல்லாம் நல்ல அக்கவுண்ட்ஸ் மெம்பர் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அக்கவுண்டண்ட்-ஜெனரல் மாதிரி ஒரு ஆள் இருந்து, கணக்குகளைச் சீர் செய்துவிட்டால், இரண்டு வருடங்களுக்குள்ளாக இந்த வாரியத்தைச் சீர் செய்து விடலாம். அதிலே கோடிக்கணக்காகப் போட்டிருக்கிறோம். எல்.ஐ.சி-யிலிருந்தும் கடன் வாங்குகிறார்கள். எனவே இதை உடனடியாகச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டுவது சம்பந்தப்பட்ட ஒரு கூட்டுறவு சங்கத்தின் தலைவன் என்ற முறையில் ஒன்றைக்கூற விரும்புகிறேன். 25 ஆண்டுகளாக திருமங்கலம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் தலைவனாக நான் இருக்கிறேன். 25 ஆண்டு—வெள்ளி விழாகூட கொண்டாடினோம். வேறு யாரையும் அதற்குக் கூப்பிடவில்லை. நமது அமைச்சரவர்களையும், வீட்டு வசதி வாரியத்தின் தலைவரையும் அழைத்துக் கொண்டு போய்க் கொண்டாடினோம். அந்தச் சங்கத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கத்திலிருந்து கடன் கொடுத்து வந்தார்கள். "லோ இன்கம் குரூப்", "மிடில் இன்கம் குரூப்" என்ற அளவில் வீடுகளைக் கட்ட 10 அல்லது 20 பேர்களுக்கு கடன் சேங்ஷனாகி, கடனும் கொடுத்து வந்தார்கள். திடீரென்று கடன் கொடுப்பதை அரசாங்கம் நிறுத்தி விட்டது. அதற்கு ஒரு வகையில் நானும்தான் காரணம். நாங்க



ளெல்லாம் இருந்து, இனிமேல் கூட்டுறவு அபெக்ஸ் சொசைட்டிக்கு இவைகளை மாற்ற வேண்டுமென்று சொன்னோம். அதை அரசாங்கம் ஒத்துக்கொண்டது. அதைக கூட்டுறவு மத்திய வீட்டு வசதிச் சங்கத்திற்கு மாற்றிய பிறகு, கடன் தொடர்ந்து கொடுக்கிறார்கள். திருமங்கலம் சொசைட்டியைப் பொருத்தவரையில், அதற்குமுன் சேங்ஷன் செய்யப்பட்டவர்கள் 20 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. 20 ஆயிரம் ரூபாய் சேங்ஷன் ஆன ஒருவருக்கு 5 ஆயிரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 15,000 ரூபாய் கொடுக்கப்பட ல்லை. இப்படி அரைகுறையாக இருக்கிறது. நான் இதுபற்றி ஜாயிண்ட் ரிஜிஸ்டிராரிடம் கேட்ட போது, அரசாங்கத்திடமிருந் பணம் கொடுக்கப்படவில்லையென்று சொல்லி விட்டார்கள். அப்படியென்றால் கூட்டுறவு மத்திய சங்கத்திற்கு மாற்றி விடுங்கள்; அங்கிருந்தாவது வாங்குவதற்கு ஏற்பாடு செய்யலாமென்றால், அதுவும் முடியவில்லை. நாங்கள் புதிய கடன்கள்தான் கொடுக்க முடியும்; அரைகுறையாக, அரசாங்கத்திடமிருந்து வாங்கிய நபருக்கு எப்படிக் கொடுக்க முடியுமென்று சொல்கிறார்கள். வீடுகள் கட்டுவது அப்படியே நின்றுவிட்டது. "அமைச்சர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று ஜாயிண்ட் ரெஜிஸ்டிரார் அவர்கள் சொன்னார்கள். மேலும் முந்தா நாள் நிறைவேறிய சப்ளிமெண்ட்ரி டிமாண்டில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கும்; அதன் மூலம் நாங்கள் கொடுத்துவிடுகிறோம் என்றும் சொன்னார்கள். அப்படியிருந்தால், அந்த வீட்டு வேலைகளை முடிக்க பாக்கிப் பணத்தை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. அடக்கமாக ஒரு புதிய வாரியத்தை அமைத்து, நல்ல முறையில் செயல்பட இது வழி செய்யும். இந்த வாரியத்தில் இப்போது குறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன. இதைச் சீர்திருத்துவதற்கு மு னைந்து வேலை செய்ய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு க. இராசாராம்</u> : தலைவரவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தின் பேரில் அளிக்கப்பட்ட மசோதாவை அநேகமாக எல்லாக் கட்சி உறுப்பினர்களும் ஆதரித்திருக்கிறார்கள். அதற்காக நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதிலே உறுப்பினர் திரு எ.ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், இதன் கணக்கு வழக்குகளில் குறைபாடுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்தக் குறைபாடுகள் போக்கப்பட வேண்டுமென்பதை அழுத்தம் திருத்தமாக எடுத்துத் தெரிவித்தார்கள். இந்த வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு, 1964-65-ம் ஆண்டுவரைதான் வந்திருக்கின்றன என்பதை நீங்களெல்லாம் நன்றாக அறிவீர்கள். இந்தப் பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டக் காலத்திலிருந்து, அவைகளை வேகமாக முடிக்க வேண்டுமென்றும், அதன் மூலம் அந்தக் கணக்குகளைச் சரியாக வைக்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தூண்டும் வகையிலேயும், அந்தக் காரியங்கள் தற்போது சரிவர நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதையும் திரு ராஜாராம் அவர்கள் இங்கே விளக்கி, எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

1965–66-ம் ஆண்டு முதல், 1968–69 ஆண்டுவரை, 4 ஆண்டுகளுக்கான கணக்குகள் சரிபார்க்கப்பட்டு, ஆடிட் செய்யப்பட்டு, ஒப்பளிக்கப்பட்டிருக்கின்றன. அதோடு 1967–68 ஆண்டு வரையிலும் ஆடிட் முடிந்து லோகல் பண்ட் கமிஷனருக்கு அவைகள் அனுப்பப்பட்டாகிவிட்டன. 1969–70 ஆம் ஆண்டுக்கான கணக்குகள் சரி பார்க்கப்பட்டு அக்கவுண்டெண்ட்-ஜெனரல் ஆபீசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதேபோல் 1970–71, 1971–72, 1972–73 ஆம் ஆண்டுகளின் கணக்குகள் இப்போது சரி பார்க்கப்பட்டிருக்கின்றன. 1973-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி வரையில் கணக்குகள் சரிபார்க்கப்பட்டதில், இதிலே இருக்கின்ற நிலுவை, வாடகை பாக்கி வசூல் எல்லாம் சரிவரக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கம்ப்யூட்டர் உபயோகிக்க வேண்டுமென்று நம்முடைய அங்கத்தினர் திரு தாமோதரன் அவர்களும், கம்ப்யூட்டர் வைத்தால் வேலைக் குறைப்பு ஏற்பட்டு விடும் என்று நம்முடைய திரு வசந்த பாய் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். கம்ப்யூட்டர் உபயோகிக்கின்ற அளவுக்குத் தேவையான காரியங்கள் இல்லையென்று சொன்னாலும், இந்தக் கணக்குகள் பல ஆண்டுகளாக சரிவர கவனிக்கப்படாத காரணத்தினாலே, டேடா கம்ப்யூட்டர் என்ற ஒரு நிறுவனத்தினை அணுகி அதனுடைய உதவியைக் கூட இப்போது வீட்டு வசதி வாரியம் கோரியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி கோரியிருக்கின்ற காரணத்தினாலே, எதும் வேலைக் குறைப்பு ஏற்பட்டு விடாது என்பதையும் திரு வசந்த பாய் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒபேராய் நிறுவனத்திற்கு ஒரு இடம் அளிக்கப்பட்டு, அந்த இடம் அளிக்கப்பட்டதன் காரணமாக ஏறக்குறைய 70 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். ஒபேராய் அவர்கள் கடற்கரைக்கு எதிரேயுள்ள ஒரு இடத்தை 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 5-ம் தேதியில் வாடகைக்கு எடுத்திருக்கின்றார்கள். அது விஷயமாக நீண்டகாலமாக கடிதப் போக்குவரத்துக்கள் ஏற்பட்டு, அவர்களுடைய ஆர்கிடெக்ட் அந்த இடம் தேவையில்லை என்று சொல்லி அதற்குப் பிறகு அவர்கள் எடுத்த டெண்டர் 1970-ம் ஆண்டு மே மாதம் 14-ம் தேதியில் 'கேன்சல்' செய்யப்பட்டு அதன் காரணமாக பாக்கி ரூ. 70 ஆயிரம் இருக்கின்றது. இன்னும் அவர்களிடமிருந்து வரவேண்டிய பாக்கிக்காக நோட்டீஸ்கள் எல்லாம் அனுப்பப்பட்டு, அதற்கான காரியங்களை வீட்டு வசதி வாரியம் மேற்பார்வையிட்டுக்கொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Thiru G. SWAMINATHAN Mr. Chairman, may I know whether the mistake regarding the delay in entrustment of the site was on the part of Oberoi or on the part of the Housing Board ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, ஒபேராய் அவர்களே இந்த இடத்தை விரும்பி முதலிலே எடுத்தார்கள். அவருடைய ஆர்கிடெக்ட் அந்த இடத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்று



சொல்லி இடத்தை விட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு, ஒபேராய் அவர்களே அந்த இடத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டு, வேறு இடத்திற்கு மீண்டும் டெண்டர் போட்டு அவர்களே எடுத்திருப்பது மாண்புமிகு உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். சென்னையிலேயே ஓட்டல் கட்ட வேறு ஒரு இடத்தை எடுத்திருக்கின்றார்கள். அந்த வகையிலே அவர்களே அதில் பின்வாங்கியிருக்கின்றார்களே தவிர, அதன் காரணமாக அவுசிங் போர்டினால் எந்த விதமான தவறும் ஏற்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman Sir, there seems to have been a delay of over a year—from 1965 to 1966. Since the site was uot handed over to Messrs. Oberoi, they thought of taking up another place. If the site had been given to Messrs. Oberoi in time, as they asked for, there would not have been a loss.

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, எனக்கு வந்திருக்கக்கூடிய தகவலின்படி "Delay in the execution of agreement by Oberoi" என்பதுதான் அதிலே ஏற்பட்டுவிட்ட சிக்கல் என்பதை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்களிடத்திலேதான் இந்தத் தவறுகள் இருக்கின்றன. ஒபேராய் ஓட்டல் கட்டுகின்ற எல்லா இடத்திலேயும் அதைச் செய்வார்கள். அது வேறு விவகாரம். அதை இந்த மன்றத்திலேயே வெளிப்படையாகச் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அவர்கள் இப்போதுகூட தமிழகச் சட்ட மன்றத்தின் பொறுப்பில் இருக்கின்ற நிலத்தைத்தான் டெண்டர் போட்டு எடுத்திருக்கின்றார்கள். அதிலே விரைவிலே ஓட்டல் கட்டுவதாக என்னிடத்திலேகூட தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே வரவேண்டிய பணம் எங்கும் போய்விடாது. அநேகமாக வீட்டு வசதி வாரியத்திற்கு வரவேண்டிய பணத்தை நம்மாலே திருப்பப் பெற்றுவிட முடியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

THIRU A R. DAMODARAN : M.. Chairman Sir, may I know from the Hon Minister whether the lease of the new land by Government is to Messrs. Oberoi Hotels Ltd. and if so, why attempts should not be made to collect the previous balance before this lease is finalised ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அது வேறு இலாகாவிலே டெண்டர் கொடுக்கப்பட்ட நிலம். இது வேறு இலாகாவிலே டெண்டர் கொடுக்கப்பட்ட நிலம். ஆகவே, அதற்கும் இதற்கும் முடி போட்டுப் பேச வேண்டாம். திரு. தாமோதரன் அவர்கள் எந்தெந்த இலாகாவிலே எப்படி வேலை நடக்கிறது என்று அறிவார்கள். வெவ்வேறு இலாக்காக்களில் டெண்டர் விடப்படுகிறது. டூரிஸ்ட் இலாகாவிலே

அந்த இடம் டெண்டருக்கு விடப்பட்டது. டெண்டர் விடப்பட்டதிலே அவர்கள் எடுத்திருக்கின்றார்கள். அது அவுசிங் போர்டுக்குச் சொந்தமான இடம். அவுசிங் போர்டு "அடானமஸ் பாடி" என்பதை அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள். அது தனிப்பட்ட விவகாரம். திரு. ஒபேராய் அவர்களிடமிருந்து வரவேண்டிய பணம் எங்கேயும் போய்விடப் போவதில்லை. அவர் இரண்டு இலாக்காக்களிலே தனிப்பட்ட தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர் தமிழ் நாட்டிற்கு வரப் போகின்றவர். அவர் இங்கு பெரிய முதலீடுகள் செய்யப்போகின்றார். அவருடைய பணத்தைப் பொறுத்தவரையில், நமக்குத் திரும்ப வந்துவிடும் என்ற நம்பிக்கையிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அது விஷயத்தில் வீட்டு வசதி வாரியம் கவனமாக இருக்கின்றது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தக் கணக்குகளைச் சரி பார்ப்பதற்கு என்று ஓய்வு பெற்ற அக்கவுண்டண்ட்-ஜெனரல் தலைமையில் ஒரு குழு போடப்பட்டு, அந்தக் குழுவும் பொறுப்பேற்றுக்கொண்டு காரியங்களை வீட்டு வசதி வாரியத்திலே செய்து கொண்டு வருகிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I seek an information from the Hon. Minister ? What the Public Accounts Committee has stated is this : "The Committee regrets to observe that there has been a delay at every stage in dealing with the case, resulting in heavy loss to the Board. The Committee cannot help feeling that the delay might have been engineered by interested persons. It therefore suggests that the circumstances under which the delays occurred may be investigated and appropriate action taken if any foulplay has been discovered". I was a Member of the Public Accounts Committee. Since the Committee feels that some persons within the Board themselves have engineered all these things and that, therefore, action should be initiated on them, may I know whether the Government are going to take action against those persons ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்த விவகாரத்தைப் பொறுத்த வரையில், அதற்குத் தக்க நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் எடுத்துக்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலே எந்தவிதமான தவறுகள் நடைபெற்றிருந்தாலும் கூட, யார் அந்தத் தவறிலே ஈடுபட்டிருந்தாலும் கூட, இது சில ஆண்டுகளுக்கு முன்னாலே நடைபெற்றிருக்கின்றது—எந்தெந்த ஆண்டுகளில் தவறுகள் நடைபெற்றிருக்க வேண்டும், எந்தெந்த ஆண்டுகளில் இருந்தவர்கள் எந்தெந்தத் தவறான காரியங்களில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் இருந்த குழுவே ஆராய்ந்திருக்கின்றது. அதிலே எந்தத் தவறு ஏற்பட்டிருந்தாலும், எப்படி மாநகராட்சியைப் பொறுத்து இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றதோ அதுபோல நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தமிழக வீட்டு வசதி வாரியத்தினுடைய வேலைகள் அதிகமாக ஆகிக்கொண்டிருக்கின்றன என்பதை அங்கத்தினர்கள் பல



முறை சுட்டிக்காட்டினார்கள். அப்படி வேலை அதிகமாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான், வீட்டு நில விற்பனையினின்று வரவேண்டிய பணம், வீடு கட்டப்பட்டு வரவேண்டிய பணம், வீட்டு வாடகை மூலம் வரவேண்டிய பணம் ஆகியவை நிரம்ப நிலுவையாக இருக்கின்றன. அவைகளையெல்லாம் கண்காணிக்க வேண்டுமென்பதற்காக இப்போது அஸிஸ்டெண்ட் ரெவின்யூ ஆபீசர்கள் 6 பேர் போடப்பட்டிருக்கின்றார்கள். 15 இடங்களில் பணம் வசூல் பண்ணுவதற்கான நிலையங்கள், அலுவலகங்கள் இன்றைக்கு சென்னையிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இந்த வீட்டு வசதி வாரியத்தில், நம்முடைய தொழிலாளர் தலைவர் திரு. காட்டூர் கோபால் அவர்கள், தொழிலாளர்களுக்காக வீடு கட்ட வேண்டுமென்பதை எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே பல பொது இடங்களிலும், சட்ட மன்றப் பேரவையிலும், மேலவையிலும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்துக் கொண்டிருக்கின்றேன். அந்த வகையில் இன்றைக்கு பல தொழிற் சங்கத் தலைவர்கள் வீடுகளைக் கட்டவேண்டுமென்று முன் வந்திருக்கின்றார்கள். தொழிலாளர்களுடைய போனசைக் கொடுத்தாலும் சரி, அவர்களுடைய பிராவிடெண்ட் பண்டைக் கொடுத்தாலும் சரி, மற்ற எந்த வகையிலே அவர்கள் வீடு கட்டிக்கொள்வதற்கு எவ்வளவு தொகை ஒதுக்க முன் வந்தாலும், தொழிலாளர்களுக்காக எந்த அளவுக்குக் கட்டித்தர இயலுமோ அந்த அளவுக்கு அரசு வீடுகளைக் கட்டித்தரத் தயாராக இருக்கின்றது. இந்த வீட்டு வசதி வாரியம் நிலங்களை வாங்குவதிலே கூட, சில குறைபாடுகள் இருப்பதாக அடிக்கடி பேசப்படுகிறது. அந்தக் குறைபாடுகளை நீக்க, நான் தொழிற் சங்கத் தலைவர்களையெல்லாம் சந்தித்துப் பேசிய நேரத்தில், அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தேன். "நீங்களே நிலங்களை வாங்கிக் கொள்ளுங்கள், அந்த நிலங்களிலே எங்களுடைய பொறியாளர்களை அனுப்பி "லே அவுட்" எல்லாம் பார்த்து சரியாகப் போட்டு அதன் மூலமாக நல்ல வீடுகளைக் கட்டித் தந்துவிடுகிறோம்" என்று சொல்லியிருக்கின்றேன். அதை ஒப்புக் கொண்டு சென்னையிலே கூட சில தொழிற் சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான நிலங்களை இப்போது ஆர்ஜிதம் செய்துகொண்டிருக்கின்றார்கள், விலைக்கும் வாங்கிக்கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். விரைவிலே தொழிலாளர்களுக்கான காலனிகள் தமிழகம் பூராவிலும் பல்வேறு இடங்களில் தொழில்கள் பெருத்த நகரங்களிலே எல்லாம் உருவாக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த வீட்டு வசதி வாரியத்திற்கு எவ்வளவு சொத்து இருக்கின்றது, எவ்வளவு தூரம் அது வியாபாரம் செய்திருக்கின்றது என்ற கணக்குகளெல்லாம் சரிவர நமக்குக் கிடைக்கவில்லை என்பதை திரு. ராஜாராம் அவர்கள் சுட்டிக்காண்பித்தார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுவரையில் நாலாயிரம் ஏக்கர் அளவு நிலங்கள் பல்வேறு இடங்களிலே மொத்தம் ரூ. 1,874.36 [illegible]திற்கு வாங்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலம் பல்வேறு பகுதி

களாகப் பிரிக்கப்பட்டு, இதுவரையில் 40 ஆயிரம் ப்ளாட்டுகளாக விற்கப் பட்டிருக்கின்றன. இது மட்டுமின்றி, இப்போது இந்த வாரியத்தின் மூலம் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக பாங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் இந்தியன் பாங்க், இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க், மதுரை பாங்க் போன்ற பல வங்கிகள் [illegible]கு நமக்குப் பெருமளவிற்கு நிதி உதவிகளை அளித்து வ[illegible] முதலில் 10,000 ரூபாய் அளவில் வீடுகளைக் கட்ட வேண்டுமென்[illegible] திட்டமிட்டோம். முதலில் ஒரு ஆயிரம் ரூபாய் கொடுப்பவர்களுக்கு 400 சதுர அடியில் 10,000 ரூபாய் அளவில் வீடுகளைக் கட்டிக் கொண்டுவரு கிறோம். தமிழ்கத்தில் பல்வேறு மாவட்டத் தலைநகர்களிலே, குறிப்பாக சென்னை, திருப்பூர், கோவையில் பீளமேடு, சிங்காநல்லூர், இன்னும் தருமபுரி, கோயம்பத்தூர், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற எல்லா இடங்களிலும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு நூறு நூறு வீடுகள் என்ற அளவில் கணக்கிட்டு அவற்றை வரும் பொங்கல் தினத்திற்குள் முடித்து பொங்கல் பரிசாக அளித்திட வேண்டும் என்று வெகு வேகமாக வேலை செய்து வருகின்றது நமது வாரியம். இந்த வீடுகளுக்கான செங்கற்களை வேகமாகப் பெற வேண்டும் என்பதற்காக செங்கற் சூளையும் போடப்பட்டு, இப்பணிகள் நாம் திட்ட மிட்டபடி மிக வேகமாக நடந்து வருகின்றன.

50 ப. அடுத்து, இப்படி புதிதாகக் கட்டப்பட்டுவரும் குடியிருப்புப் பகுதிகளை மாநகராட்சி மன்றங்கள் கவனிப்பதில்லை, முறையாக துப்புரவு செய்வ தில்லை, இந்தப் பகுதிகளைக் கவனிக்க மறுக்கின்றார்கள் என்று திரு. இராஜமாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தப் பகுதிகளை இப்படிப் புறக்கணித்துவிடுவதால், அங்கே பல சுகாதாரக் கேடுகள் இருக் கின்றன என்றும் சொன்னார்கள். இது போன்ற குறைகளைக் கவனிப் பதற்காக வீட்டு வசதி வாரியத் தலைவர், “மாஸ் காண்ட்டேக்ட் ப்ரோக்ராம் ” என்ற ஒரு திட்டத்தினை—மனுநீதி திட்டம் போன்று—உருவாக்கி மாநகராட்சித் தலைவர்கள், கமிஷனர்கள், சுகா தார அதிகாரிகள், மற்றும் ட்ரான்ஸ்போர்ட் அதிகாரிகள், மின்சார இலாகா அதிகாரிகள் இவர்களையெல்லாம் அழைத்து என்னென்ன குறைபாடுகள் எங்கெங்கே இருக்கின்றன என்று பார்த்து இவற்றைப் போக்குவதற்கான முயற்சிகளைத் தனியாகச் செய்து கொண்டிருக்கிறார். திரு. தங்கப் பாண்டியன் அவர்கள் இப்படிப்பட்ட “மாஸ் காண்ட்டேக்ட் ப்ரோக்ராம்” திருச்சி, மதுரை, கோவை, இன்னும் மற்ற மற்ற மாவட்டத் தலைநகரங்களிலேயெல்லாம் செயற்படுத்தப்பட வேண்டும் என்று சுட்டிக் காண்பித்தார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுவேன், இந்தத் திட்டம் ஏதோ சென்னை நகருக்கு மட்டும் என்று உருவாக்கிய திட்டமில்லை. இது வீட்டு வசதி வாரியத்தின் ஒட்டு மொத்த திட்டமாகும். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் வீட்டு வசதி வாரியத்தின் அதிகாரிகள் எல்லா இடங்களுக்கும் சென்று இப்படிப்பட்ட காரியங்களைக் கவனிப்பார்கள்.

அடுத்துக் கேட்டார்கள், சிமெண்ட், இரும்பு போன்ற பொருள் களுக்குச் சரிவர கணக்குக் காட்டப்படாமல் இருக்கின்றது என்ற குறை பாட்டை திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் சுட்டிக்காண்பித்தார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்தப்





பொருள்கள் விஷயத்தில் எந்தவிதமான முறைகேடுகளும் நடந்ததாகத் தெரியவில்லை. ஏனென்றால், தமிழகத்தில் வீட்டு வசதி வாரியத்தின் ழ் நடைபெறும் பல்வேறு வேலைகளை அவை எங்கே நடந்தாலும் அப்படிப்பட்ட இடங்களுக்கு நான் வேறு அலுவல்கள் காரணமாகச் சென்றாலும், நேரிலே சென்று பார்த்து வருகின்றேன். இதுவரையில் நான் சென்ற எந்த இடத்திலும் இப்படிப்பட்ட முறைகேடுகள் அல்லது குறைபாடுகள் இருப்பதாக என்னிடம் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. தங்கப்பாண்டியன் அவர்கள் மேலும் குறிப்பிட்டார்கள், ஒவ்வொரு தாலுக்கா தலைநகரிலும் இந்த வாரியத்தின் வேலைத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட வேண்டும் என்று. நமது வீட்டு வசதி வாரியமானது கிராமப்புறங் களிலே தன் பணிகளைத் தொடங்க இருக்கின்றது என்று நாம் ஏற் கெனவே விளம்பரப்படுத்தி வருகின்றோம். அந்த அடிப்படையில் பூம்புகார் பகுதியிலே மீனவர்களுக்காக 350 வீடுகளைக் கட்டுவதற்காக பொறியாளரோடு கலந்து பேசி, அவர்களுக்கு வீடுகள் கட்டித்தரப் பட வேண்டும், புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டித்தர வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ ஒரு ஆயிரம் ரூபாய் என்ற அளவிலே அவர்களுக்குச் சலுகையளித்து அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து, ஆகும் செலவினை அவர்களிடமிருந்து சிறு சிறு தவணைகளாக மாதாமாதம் வாங்கிக் கொண்டு கடைசியாக அந்த வீடுகளை அவர்களுக்கே உரித்தாக்கிவிடுவது என்ற ஒரு திட்டத்தின் ழ் 350 வீடுகள் அங்கே கட்ட திட்டமிடப்பட்டிருக்கின்றது. இது போன்றே நெசவாளர்களுக்காக வீடுகளைக் கட்டித் தருவது என்ற திட்டம் அருப்புக்கொட்டை, மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் சில இடங்களிலே உருவாக்கப்பட்டிருக் கின்றது. ஆசிரியர் பெருமக்கள் இப்படிப்பட்ட திட்டங்களிலே தங்களுக்கு என்ன பங்கு இருக்கின்றது என்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அவர்களுக்கும் இன்று திட்டங்கள் போடப்பட்டு, அவர்களை நிலத்தை வாங்கச் சொல்லி, பின்னர், அவர்களுக்காக நாலாயிரம் அல்லது ஆறாயிரம் ரூபாய் வரையில் செலவழித்து வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு, அது செயல்படுத்தப்பட்டிருக்கின்றது. அந்த வீடுகளும் ஒரு நூற்றாண்டு காலம் நல்ல முறையில் இருக்கத்தக்க வீடுகளாகக் கட்டப்படுகின்றன. வீடுகள் 250 சதுர அடியில் 2,500 ரூபாய் செலவில் கட்டப்படும் “ப்ரீஃபேப் ஹௌஸ்” என்று சொல்லப்படும் வீடுகளாகும். அதே போல “கன்வென்ஷனல் டைப்” வீடுகள், அதாவது ஓட்டு வீடுகள் பம்பாய் கழிவிடம் தவிர மற்ற வசதிகளோடு மாதிரி வீடுகள் மாதவரத்தில் கட்டப்பட்டு, அவர்கள் தங்களுக்கு எது தேவை என்று சொல்லு கின்றார்களோ அந்த மாதிரியில் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. [illegible]றைக்குத் தமிழகத்தில் இப்படிப்பட்ட வீடுகளை வாங்கிக் கொள்ளு [illegible] பலர் முன்வந்திருக்கின்றார்கள். இப்படி எல்லாத் [illegible]லுமுள்ள மக்களுக்கும் ஏற்றவாறு வீட்டு வசதி வாரியம் நல்ல [illegible] பணியாற்றி வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் [illegible]த்துக்கொள்ளுகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. ராஜாராம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள், "டெண்டர்கள் காலாகாலத்தில் முடிவு செய்யப்படாமல் பல காரியங்கள் கெட்டுப்போய் விடுகின்றன" என்று. இந்தக் காலத்தில் அப்படியெல்லாம் நடைபெறுவதில்லை என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இப்போதுள்ள வீட்டு வசதி வாரியத்தின் தலைவரும் முன்னால் இருந்த தலைவர்களும் மிக ஜாக்கிரதையாக, பொறுப்புணர்ச்சியோடு நடந்திருக்கின்றார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்று வீட்டு வசதி வாரியத்திலே ரூ. 4,000 முதல் ரூ. 80,000 வரையில் வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. அறுபதாயிரம் ரூபாய், இன்னும் சொல்லப்போனால் லட்ச ரூபாயில் வீடுகளைக் கட்டிக்கொள்ள விரும்புகின்றவர்கள்கூட வீட்டு வசதி வாரியத்தினரை அணுகுகின்றார்கள். இன்று பெஸண்ட் நகர் பகுதியிலே பெரிய பெரிய வீடுகளை, மூன்று படுக்கையறைகள், வரவேற்பறை, சமயலறை, மூன்று கழிப்பிடங்கள் கொண்ட வசதியான வீடுகளை ரூ. 60,000 செலவில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டு, அப்படிப்பட்ட வீடுகளை முழுத் தொகையாகக் கொடுத்து வாங்கிக்கொள்ள பலர் முன்வருகின்றார்கள். இப்படிப்பட்ட பணிகளை நமது மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு அங்கத்தினர்களும் நிச்சயமாகப் பாராட்டுவார்கள் என்று எண்ணுகிறேன். அந்த அளவிற்கு வீட்டு வசதி வாரியம் நல்ல பல பணிகளை ஏற்று நடத்திவருகின்றது. இன்று கோட்டூர்புரத்தில் பங்களாக்கள் போன்ற வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. நீதிபதிகளுக்கென்று நல்ல வசதிமிக்க வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் மாவட்டத் தலைநகர்களிலே நீதிபதிகளுக்கும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள் என்று சொல்லும் நேரத்தில், அந்த வீடுகள் எல்லாம், எடுப்பாக, அழகாக, நல்ல தோற்றத்துடன் கட்டப்பட்டு வருகின்றன.

இன்னும் எதிர்க்கட்சித் தலைவரவர்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையாகக் கடன்கள் கிடைப்பது நிறுத்தப்பட்டுவிட்டது, இப்போது கடன்கள் கிடைப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புவது, "அபெக்ஸ் ஸொஸைடிகள்" உருவானால் தான் எல்.ஐ.சி.–யிலிருந்து கடன் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டது. அந்தச் சூழ்நிலை ஏற்பட்ட பிறகுதான் குஜராத்தோடு போட்டியிட்டு, இந்த ஆண்டு நான்கு கோடி ரூபாய்க்கு மேலே கொடுத்தாகி விட்டது. இதற்கு மேலும் பெற வேண்டும் என்று நானும் நமது திரு. பழனிவேல் ராஜன் அவர்களும் பம்பாய் சென்று எல்.ஐ.சி. அதிகாரிகளை அணுகி மேலும் மூன்று கோடி ரூபாய் பெற வேண்டும் என்று இருக்கிறோம். இந்த வகையில், "அபெக்ஸ்" ஸொஸைடிகள் என்று ஏற்பட்ட பிறகுதான் தமிழகத்தில் வேலையற்றிருந்த சுமார் 300 சங்கங்கள் இன்றைக்கு மீண்டும் வேலை செய்ய ஆரம்பிக்கப்பட்டு, பரவலாகப் பல பகுதிகளிலே இன்று பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, "அபெக்ஸ்" ஸொஸைடி மூலம் கடன்கள் இப்போது கொஞ்சம் தாராளமாகவே கிடைக்கின்றன. இப்போதுகூட என் ஸொஸைடிக்கு ரூ. 2·5 லட்சம் வாங்கியிருக்கின்றேன்.



ஆனால் இதுவரையில் அரசாங்கத்திலிருந்து நேரடியாகக் கொடுத்து வந்த கடன்கள் இப்போது திடீரென்று நிறுத்தப்பட்டு விட்டன. ஒரு இன்ஸ்டால்மென்ட் கொடுத்துவிட்டு இன்னும் மூன்று இன்ஸ்டால்மென்ட்கள் கொடுக்கப்படாமலிருக்கின்றன. இதைத்தான் குறையாகச் சொன்னேன். இதற்கு பதில் அளித்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, சில இடங்களிலே தான் அப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன. இந்தக் குறைகளை இந்த ஆண்டு நிவர்த்திப்பதற்கான ஆவன செய்து கொண்டிருக்கின்றது அரசு. அரைகுறையாக எந்தக் காரியத்தையும் நமது அரசு விட்டுவிடாது. எது ஒன்றையும் முழுமையாக முறையாகச் செய்யும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்னும் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்போது இந்த வீட்டு வசதி வாரியம் புதிதாக ஒரு திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றது. ஒரு நபர் தினசரி ஒரு ரூபாய் சேமித்தால், அவர்களுக்கு ஐந்தாண்டுக் காலத்தில் பத்தாயிரம் ரூபாய் செலவில் வீடுகளைக் கட்டித் தருவது என்றதொரு திட்டத்தினை ஆரம்பித்திருக்கின்றது. இதற்கு சிண்டிகேட் பாங்க் பெரும் உதவியாக உறுதுணையாக நின்று அந்தப் பணத்தை வசூலிப்பதில் ஈடுபட்டுள்ளது. ஏழை மக்கள், குடிசைகூட இல்லாத பாமர மக்கள் வாழ்வுபெற இந்தத் திட்டத்தினை வீட்டுவசதி வாரியம் மேற்கொண்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மூன்று உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர்களைப் போடுவதில் இருவரில் ஒருவர் மேலவை உறுப்பினராகவும் ஒருவர் சட்ட மன்ற உறுப்பினராகவும் இருக்க வேண்டும், மேலவையிலிருந்து ஒருவர் கண்டிப்பாக அதில் இருக்கவேண்டும் என்று மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். அந்த வகையில் அதை வரவேற்கிறேன் என்று தெரிவித்துக் கொண்டு, வீட்டுவசதி வாரியத்தின் பணிகளுக்கு நல்லாதரவு தெரிவித்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி இந்த மசோதாவினை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, "சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு மாநில வீட்டுவசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/73) நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 30/73) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 6. 82-வது விதியின்படி அறிக்கை.

### பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வழங்கும்) சட்டவரைவு குறித்து ஜனாதிபதியின் ஒப்புதல் குறித்தது.

MR. CHAIRMAN : The Hon. Minister for Revenue will now make a statement under rule 82 of the Tamil Nadu Legislative Council Rules.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே 30—11—1973 அன்று திரு. சுவாமிநாதன் அவர்கள் தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வழங்கும்) சட்ட வரைவு (சட்ட மன்றப் பேரவை சட்ட வரைவு எண் 11/1973) ஜனாதிபதி ஒப்புதல் பெறுவதற்கு எடுத்திருக்கும் நடவடிக்கை பற்றி கேட்ட விளக்கத்திற்கு நான் பதிலளிக்கையில் மத்திய அரசிடமிருந்து கடிதங்களுக்கு ஏதாவது பதில் வந்து விளக்கங்கள் கேட்டால் விளக்கங்கள் கொடுக்கலாமென்றும், இதுவரையில் அந்த விளக்கங்கள் கொடுக்கவில்லை என்றும் கூறினேன். பிறகு நான் இதுபற்றி வருவாய்த் துறையில் விசாரித்ததில் மத்திய அரசிடமிருந்து ஏற்கனவே இந்தச் சட்டவரைவு பற்றி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மனுக்களை இந்த அரசுக்கு அனுப்பி இந்த அரசின் கருத்தைக் கேட்டிருக்கிறார்கள். அவை பரிசீலனையில் உள்ளன. விரைவில் மத்திய அரசுக்கு இந்த அரசின் விளக்கம் அனுப்பப்படும். இந்தத் தவறு ஏற்பட்டதற்கு வருந்துகிறேன்.



## 5. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (3) தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 37/73).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, கேளிக்கைவரி (திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 4-ஏ பிரிவின்கீழ் சென்னை மாநகரம், நகராட்சிகள் போன்ற பல்வேறு இடங்களில் நடைபெறும் திரைப்படக்காட்சிகள்மீது பல்வேறு வீதங்களில் காட்சி வரி விதிக்கப்படத்தக்கதாகும். மதுரை நகராட்சி மாநகராட்சியாகி விட்டதனால், மதுரை மாநகரில் நடைபெறும் திரைப்படக் காட்சிகள்மீது, சென்னை மாநகரில் நடைபெறும் திரைப்படக் காட்சிகளுக்கு விதிக்கப்படும் வீதத்திலேயே, காட்சி வரி விதிக்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கு வகை செய்ய, தமிழ்நாடு 1939-ம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தைத் திருத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் தற்போதைய விதித்துறைகளின்கீழ், வரி ஏய்ப்பு அல்லது குறைவான வரி விதிப்பு கண்டுபிடிக்கப் படும் நேர்வுகளில், வரி விதிப்பு அதிகாரி, மேற்படி சட்டத்தின் 7–பி பிரிவின் விதித்துறைகளைப் பயன்படுத்துகையில், ஒவ்வொரு வாரத்திற்கும், வரி விதிப்பு அல்லது மறுவரி விதிப்பிற்காகத் தனித்தனி ஆணைகள் பிறப்பிக்க வேண்டியுள்ளது. ஆனால் ஒரு நிதி ஆண்டு குறித்து அல்லது அதன் ஒரு பகுதி குறித்து ஒரே ஒரு ஆணை பிறப்பிக்க இயலுமாயின், அதனால் வரி விதிப்பு அதிகாரிக்கு, நேரமும் உழைப்பும் ஏராளமாக மிச்சமாகும். எனவே, மேற்படி சட்டத்தின் 7–பி பிரிவின் விதித்துறைகளைப் பயன்படுத்துகையில், ஒரு நிதி ஆண்டு அல்லது அதன் ஒரு பகுதிக்காக ஒரே ஒரு வரி விதிப்பு ஆணை அல்லது மறு வரி விதிப்பு ஆணையைப் பிறப்பிக்க வகை செய்யக் கருதப்பட்டுள்ளது.

4. ஆவணத்தில் வெளிப்படையாக தெளிவாகத் தெரிகிற தவறு எதையும் சரி செய்ய, தமிழ்நாடு கேளிக்கை வரியின்கீழ் வரி விதிக்க அதிகாரமுள்ள அதிகாரிக்கோ அல்லது மேல்முறையீட்டு அதிகாரிக்கோ அல்லது மறுவிசாரணை அதிகாரிக்கோ இயலும் வகையில் மேற்படி சட்டத்தில் விதித்துறை எதுவும் இல்லை. எனவே, ஆவணத்தில் வெளிப்படையாகத் தெரிகிற தவறு எதனையும் மூன்று ஆண்டு கால அளவிற்குள் சரிசெய்ய மேற்படி அதிகாரிகளுக்கு இயலும் வகையில் மேற்படி சட்டத்தில் அவசியமான விதித்துறை செய்யக் கருதப்பட்டுள்ளது.

இம்மேலவை முன் உள்ள சட்டவரைவு, மேலே குறிப்பிட்டுள்ள நோக்கங்களை எய்த விழைகிறது.

@ 52–53 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 டிசம்பர் 1

இப்பிரேரணையை எற்று நிறைவேற்றித் தருமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(பரிந்துரைகள் எதும் இல்லை.)

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா**: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்." என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 37/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்**: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் திங்கட்கிழமை (3—12—1973) பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

## 7. அவைமுன் வைக்கப்பட்டுள்ள எடுகள்.

### A *Statutory Rules and Orders.*

Nil.

### B. *Reports, Notifications and other Papers.*

*46. The Tamil Nadu Local Authorities Finance (Second Amendment) Bill, 1973 (L. A. Bill No. 33 of 1973) as passed by the Legislative Assembly.



1973 டிசம்பர் 1]

*47. The Tamil Nadu State Housing Board (Amendment) Bill, 1973 (L. A. Bill No. 30 of 1973), as passed by the Legislative Assembly.

*48. The Tamil Nadu Entertainment Tax (Amendment) Bill, 1973 (L. A. Bill No. 37 of 1973), as passed by the Legislative Assembly.

## இணைப்பு I

(21 ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### L. A. BILL NO. 33 OF 1973.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Local Authorities Finance Act*, 1961.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Local Authorities Finance (Second Amendment) Act, 1973.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 5, Tamil Nadu Act 52 of* 1961.—In section 5 of the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961), in the opening paragraph, for the expression "any local authority may, with the previous sanction of the Government, exempt", the expression "the Government, or any local authority with the previous sanction of the Government, may exempt" shall be substituted.

## இணைப்பு II

(24 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### L. A. BILL NO. 30 OF 1973.

(As passed by the Assembly.)

*A Bill to amend the Tamil Nadu State Housing Board Act*, 1961.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Housing Board (Amendment) Act, 1973.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

* Circulated to all M.L.C.'s on 30th November 1973.

2. *Amendment of section* 4, *Tamil Nadu Act* 17 *of* 1961.—For section 4 of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961) (hereinafter referred to as the principal Act), the following section shall be substituted, namely :—

" 4. *Constitution of the Board.*—The Board shall consist of—

(*a*) a Chairman appointed by the Government who possesses such qualifications as may be prescribed ;

(*b*) (i) Official members not exceeding six ; and

(ii) non-official members not exceeding three, appointed by the Government ".

3. *Existing members to cease to hold office.*—Notwithstanding anything contained in the principal Act, with effect on and from the date specified in sub-section (2) of section 1, the Chairman and the members of the Tamil Nadu State Housing Board, holding office as such on the said date, shall cease to hold office and appointment of the Chairman and the members of the said Board on and after the said date shall be made in accordance with the provisions of the principal Act, as amended by this Act.

## இணைப்பு III

(....ஆம் பக்கத்தில் இனம் 5 (3)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.)

### L. A. BILL NO. 37 OF 1973.

(As passed by the Assembly).

*A Bill further to amend the Tamil Nadu Entertainments Tax Act,* 1939.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Entertainments Tax (Amendment) Act, 1973.

2. *Amendment of section* 3, *Tamil Nadu Act X of* 1939.—In section 3 of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939) (hereinafter referred to as the principal Act), in clause (6), for sub-clause (*a*), the following sub-clause shall be substituted, namely :—

" (*a*) in the City of Madras, the Municipal Corporation of Madras and in the City of Madurai, the Municipal Corporation of Madurai ; "



3. *Amendment of section* 4-*A*, *Tamil Nadu Act X of* 1939.—In section A of the principal Act, in sub-section (1), in item (i) after the words City of Madras ", the words " or in the City of Madurai " shall be serted.

4. *Amendment of section* 7-*B*, *Tamil Nadu Act X of* 1939.—In section B of the principal Act, after sub-section (3), the following sub-section iall be inserted, namely :—

" (3-A) Notwithstanding anything contained in sub-section (1) ' sub-section (2), in making an assessment or re-assessment under sub-ction (1) or sub-section (2), as the case may be the authority prescribed ıder sub-section (1) of section 7-A, may pass a single order in respect of financial year or any part thereof ".

" *Insertion of new section* 15-*A in Tamil Nadu Act X of* 1939.—After ection 15 of the principal Act, the following section shall be inserted, amely :—

" 15-A. *Power to rectify any error apparent on the face of record.*—(1) he authority competent to assess tax under this Act or any appellate revising authority may, at any time, within three years from the date any order passed by it, rectify any error apparent on the face of the ecord :

Provided that no such rectification which has the effect of ıhancing an assessment or any penalty shall be made unless such ıthority has given notice to the proprietor and has allowed him a asonable opportunity of being heard.

(2) Where such rectification has the effect of reducing an assessment or penalty, the authority competent to assess tax under this Act ıall make any refund which may be due to the proprietor.

(3) Where any such rectification has the effect of enhancing an ssessment or penalty, the authority competent to assess tax under this ct shall give the proprietor a revised notice of assessment or penalty nd thereupon the provisions of this Act and the rules made thereunder ıall apply as if such notice had been given in the first instance. "

I certify that this is a Money Bill.

ort St. George,
Madras,

K. GOVINDAN,
Speaker,

ate : 30-11-1973. Tamil Nadu Legislative Assembly.

[1973 டிசம்பர் 3

*Recruitment of Headmasters in Government (A Wing) High Schools.*

* 179. *Q.*—Thiru V. Isvarmurti : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether Headmasters of Aided High Schools are taken into Government (A Wing) High Schools as Headmasters of the latter; and

(*b*) if so, the policy thereof?

**அரசினர் உயர்நிலைப்பள்ளி (A-பிரிவு) களில் தலைமையாசிரியர்கள் நியமனம்.**

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தனியார் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள், அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் (A-பிரிவு) தலைமையாசிரியர்களாக நியமிக்கப் படுகின்றனரா?

(இ) ஆமெனில், அதன் கொள்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (ஆ) தனியார் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களை அரசு உயர்நிலைப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக நியமனம் செய்வதற்கு தமிழ்நாடு கல்விப் பணிநிலை பணியின் தனி விதிகளில் இடமில்லை. எனினும் தனியார் பள்ளிகளை அரசு நிர்வாகத்தின் கீழ் எடுத்துக்கொள்ளும் பொழுது அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் அவர்களின் கல்வித் தகுதிகளுக்கு ஏற்றவாறு முடிந்த அளவு விதிகளைத் தளர்த்தியும் அரசு பணியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இப்போது ஏ-பிரிவு, பி-பிரிவு, தனியார் பள்ளி ஆகிய மூன்று பிரிவிலும் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் ஒரு பிரிவை விட்டு மற்றொரு பிரிவுக்குச் செல்கிறார்கள், அவர்களுடைய தேர்வு நிலை ஊதியத்திற்கு பணியின் காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. இனி மேலாவது அவர்களுடைய பணியின் காலம் தேர்வு நிலை ஊதியத்திற்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியாக ஆராய வேண்டும்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, சில நேரங்களில் விதிகளைத் தளர்த்தி, தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்குச் சென்று அவர்களுக்கு வேலை போனால், திரும்பவும் வேலை தருகிறார்கள். அது நல்ல முறையாகும். ஆனால், தனியார் பள்ளிகளிலே வேலை பார்த்து, அரசுப் பள்ளிகளுக்கு வந்தாலும், அது



1973 டிசம்பர் 3]

*Rationalisation of Entertainment Tax.*

* 185. *Q.*—Thiru V. Isvarmurti (on behalf of Thiru G. Swaminathan) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the film industry has suggested a new pattern for rationalisation of Entertainment Tax;

(*b*) if so, the nature of the suggestions; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

**கேளிக்கை வரியைச் சீர்படுத்துதல்.**

திரு வ. ஈஸ்வரமூர்த்தி (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கேளிக்கை வரியைச் சீர்படுத்தும் புதியதோர் முறை குறித்து திரைப்படத் தொழில் அமைப்பு அரசுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அவ்வாறு தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் எத் தகையவை?

(உ) இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். சென்னை தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகக் கழகத்திடமிருந்து இது தொடர் பாகக் கருத்துரைகள் வந்துள்ளன.

(இ) ஒவ்வொரு காட்சிக்கும், நிலையான திரைப்பட அரங்குகளுக்கு, கொட்டகை நிறைந்த காட்சி வருவல் அளவில் 12 சதவீதமும் "டூரிங்" திரைப்பட அரங்குகளுக்கு 10 சதவீதமும் ஒருமொத்த வரியாக விதிக்கலாம் என்று தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகக் கழகம் தெரிவித்துள்ளது. கேளிக்கை வரி, காட்சி வரி, இந்த இருவகை வரியின் மீதும் விதிக்கப்படும் கூடுதல் மேல்வரி, மற்றும் கூடுதல் மேல்வரி ஆகிய வரிகளுக்குப் பதிலாக ஒருமொத்த வரி விதிக்கப்படும்.

(உ) இப்பொருள் குறித்து, வாணிக வரிச் சட்டங்களை ஒழுங்குபடுத்திச் சீரமைக்கும் சிறப்புக் கடமையில் உள்ள அதிகாரியின் கருத்துக்கள் தெரியும் வரையில், இந்நேர்வில் அரசு தனது முடிவை ஒத்திப் போட்டுள்ளது.

*District Marketing Society Election.*

* 186. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a riot broke out during District Marketing Society Election in Kurichikottai Village near Udumalpet, Coimbatore District ;

(*b*) whether the two parties attacked each other with rifles ; and

(*c*) the action taken by the Government in this regard?

**மாவட்ட மார்க்கட்டிங் சொசைட்டி தேர்தல்.**

திரு பி. திருஞானசம்பந்தம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டையை அடுத்த குறிச்சி கோட்டை கிராமத்தில் மாவட்ட மார்க்கட்டிங் சொசைட்டி தேர்தலில் கலவரம் ஏற்பட்டது உண்மையா ?

(இ) அதில் இரு கோஷ்டியினர் துப்பாக்கி கொண்டு தாக்குதல் நடத்தினரா ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) ஆம்.

(உ) பிரிவு 307 ஐ.பி.சி.யின் கீழ் தளி ( Dhali ) காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

*Post-graduate Courses in Seed Technology.*

*187 *Q.* THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any Post-graduate Courses in Seed Technology are to be started in this State ; and

(*b*) if so, the details thereof ?



**விதை தொழில் நுட்பவியலில் பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள்.**

திரு வ. ஈஸ்வரமூர்த்தி (திரு எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், விதை தொழில் நுட்பவியலில் பட்ட மேற்படிப்புப் பாடமுறைகள் ஏதேனும் தொடங்கப்படவிருக்கின்றனவா ?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) 1973–74-ஆம் ஆண்டிலே எம். எஸ்ஸி. அக்ரிகல்ச்சர் மேல் பட்டப்படிப்பு தொடங்கப்பட்டிருக்கிறது. ஆறு மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

திரு எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, எம். எஸ்ஸி. அக்ரிகல்ச்சர் மதுரையிலே இருக்கின்ற விவசாயக் கல்லூரியிலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதா அல்லது கோயம்பத்தூர் விவசாயக் கல்லூரியில் மட்டும் செயல்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, 6 மாணவர்கள் என்று இருக்கிறது. எந்த ஊரில் எத்தனை மாணவர்கள் என்ற குறிப்பு என்னிடம் இல்லை.

*Strikes in Coimbatore Mills.*

***188 Q.—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—**

(*a*) whether any strikes have taken place in Coimbatore Mills run by Tamil Nadu Textiles Corporation during this month ; and

(*b*) if so, the duration of the strikes and the methods by which these strikes have been settled ?

**கோவை பஞ்சாலைகளில் வேலை நிறுத்தங்கள்.**

திரு காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு ஜவுளி கார்ப்பரேஷன் ஏற்று நடத்துகிற கோவை பஞ்சாலைகளில் இந்த மாதத்தில் வேலை நிறுத்தங்கள் ஏதும் நடைபெற்றனவா ?

(இ) ஆமெனில், எவ்வளவு நாட்கள் நடைபெற்றன? ... தீர்வு காணப்பட்டது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ... கோவை பஞ்சாலைகளை 1973 ... வேலை நிறுத்தங்கள் எதுவும் நடைபெறவில்லை.

*Labour Education Institute.*

*189 *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the activities to be taken up under the auspices of the Labour Education Institute, recently opened at Nandambakkam, Madras; and

(*b*) whether there is any proposal with the Government to open such Institutes in the headquarters of the Districts of Coimbatore, Madurai and Tiruchirappalli?

**தொழிலாளர் கல்வி நிலையம்.**

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில், சென்னை நந்தம்பாக்கத்தில், திறந்து வைக்கப்பட்டுள்ள தொழிலாளர் கல்வி நிலையத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் யாவை?

(ஆ) இது போன்ற கல்வி நிலையங்களை கோவை, மதுரை, திருச்சி ஆகிய மாவட்டத் தலைநகரங்களிலும் ஏற்படுத்துகிற உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) தொழிற் சங்கத் தலைமையை உருவாக்குதல், தொழிலாளர் நல அதிகாரிகளுக்கும், பணியாளர் நிர்வாக அதிகாரிகளுக்கும் பயிற்சியளித்தல், துறை அதிகாரிகளுக்கு நினைவூட்டுப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு தொழிலாளர் கல்வி நிலையத்தைத் (Institute of Labour Studies) தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

தொழிற் சங்கங்களுக்கு தொழிலாளர்களிடையேயிருந்து தலைமையை உருவாக்குவது குறித்து உரிய முக்கியத்துவம் அளித்து தற்போது செயலிலுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களின் பல்வேறு கூறுகள் குறித்து தொழிற் சங்கத் தலைவர்களுக்குத் தெரிவிக்கவும், தற்காலத்தில் தொழிலதிபர்—தொழிலாளர் உறவில் மாறுதல்கள் ஏற்பட்டு வருகிற போக்கைப் பற்றி அவர்கள் உணரச் செய்யவும் வேண்டி,



தொழிற் சங்கத் தலைவர்களின் நலனுக்காகவே பயிற்சித் திட்டங்களை இந்த நிலையம் வகுக்கவேண்டும். நிர்வாகிகளுக்கு அதிலும் குறிப்பாக தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் உள்ள தொழில் நிறுவனங்களில் தொழிலாளர் நலனுக்கும் பணியாளர் நிர்வாகத்திற்கும் பொறுப்பு வகிக்கிற நிர்வாகிகளுக்குப் பயிற்சியளிப்பது குறித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணியிலும் இந்த நிலையம் தனது கவனத்தைச் செலுத்தும்.

(ஆ) அத்தகைய செயற்குறிப்பு எதுமில்லை.

திரு. காட்டூர் கோபால்: தலைவர் அவர்களே, கோவையிலே ஏற்கெனவே அமைந்திருக்கின்ற தொழிலாளர்களுடைய கல்வி மண்டலத்தில் இத்தகைய பயிற்சித் திட்டங்கள் ஏதாவது அமுலாக்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, கோவையில் அந்த மாதிரி பயிற்சித் திட்டங்கள் தற்போது அமுலாக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தொழிலாளர்கள் கல்வி நிலையங்கள் வாயிலாக தொழிலாளர்களுக்கு மாத்திரம் கற்பிப்பதைப் போன்று தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் தொழிலாளர்களுடைய கடமைகளும் உரிமைகளைப் பற்றி உணர்த்துவதற்கு ஏதேனும் சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இப்போது அரசினிடத்தில் இல்லை.

THIRU V. ISVARMURTI: Mr. CHAIRMAN, Sir, there is already a scheme operated by the Central Board of Workers Education. May I know whether the same Board is operating this also?

மாண்புமிகு திரு க. இராசாராம்: தலைவர் அவர்களே, கோவையிலே இருப்பது மத்திய அரசினுடைய நிறுவனம், சென்னையிலே இருப்பது தமிழக அரசைச் சார்ந்த நிறுவனம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Appointment of a Trustee in Arulmigu Anjaneyar Swami Devasthanam, Villupuram, South Arcot District.*

*190 *Q.*—THIRU K. ARIVAZHAGAN: (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any representation was made to the Government complaining about the appointment of a Trustee in Arulmigu Anjaneyar Swami Devasthanam, Villupuram, South Arcot District ; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

**தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி தேவஸ்தானத்தில் அறங்காவலர் நியமனம்.**

திரு. க. அறிவழகன் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் அருள்மிகு ஆஞ்சநேயர் சுவாமி தேவஸ்தானத்தில் அறங்காவலர் நியமனம் பற்றி அரசுக்கு புகார் விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) சட்டப்படி தகுந்த அறங்காவலர்களை நியமிக்க கடலூர் உதவி ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

*Recognition given to Saint Theresa's High School, Ootacamund.*

1 *S.N.Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether recognition given to St. Theresa's High School, Ootacamund in the Nilgiris District has been withheld from June 1973 ; and

(*b*) if so, the reasons therefor ?

**உதகமண்டலத்திலுள்ள புனித தெரசா உயர்நிலைப் பள்ளிக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம்.**

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்திலுள்ள புனித தெரசா உயர் நிலைப் பள்ளிக்கு (St. Thersa's High School) அளிக்கப்பட்ட அங்கீகாரம், 1973-ஆம் ஆண்டு ஜூன் திங்களிலிருந்து நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா ?





(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இப் ள்ளி 1962–63ம் ஆண்டு துவக்கப்பட்டது. கல்வி ஆண்டு 1972–73 வரை இப்பள்ளிக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டது. தற்போது ள்ளியை நிரந்தரமாக அங்கீகாரம் செய்யவேண்டும் என்னும் கோரிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது. இருப் பினும், அப்பள்ளிக்கு டிசம்பர் 1973 வரை பணியாளர் மானியம் கொடுக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, அங்கீகார விண்ணப்பத் தில் ஏதோ காரணம் காட்டி தற்காலிக அங்கீகாரமாவது பள்ளிக்குக் கொடுக்க வேண்டுமென்று பள்ளி கேட்டுக்கொண்டிருக்கின்றது. ஆகவே நிரந்தரமான அங்கீகாரம் வழங்குவதற்கு முன்பாக ஒரு ஆண்டோ, இரண்டு ஆண்டுகளோ, மூன்று ஆண்டுகளோ நிபந்தனையோடு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்படுமேயானால், நிரந்தர அங்கீகாரத்திற்கு வேண்டு மான விவரங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கத் தயாராக இருக்கின்றார் கள். அதை அரசு பரிசீலித்து தற்காலிக அங்கீகாரம் வழங்க முன் வருமா என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1962–63-ஆம் ஆண்டில் இந்தப் பள்ளி துவக்கப்பட்டாலும் ஆண்டு தோறும், ஒவ்வொரு ஆண்டாக தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட் டிருக்கிறது. அதே முறையில்தான் தற்காலிக அங்கீகாரம் வழங்கப் படுகின்றது. டிசம்பர் இறுதிக்குள்ளாக, கொடுக்கப்பட வேண்டிய விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, நீலகிரி டையோசிசன் சொசைடி சார்பாக என்டோமெண்ட், அறக் கட்டளை ஏற்படுத்தப்பட்டிருக் கின்றது. அதைப் பள்ளியினுடைய பெயரிலே மாற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் அவர்கள் சொசைட்டியின் பெயரிலே காட்டியிருக்கின்றார்கள். இதை உயர்நிலைப் பள்ளியின் பெயரிலேயே காட்ட வேண்டுமென்பது ஒன்று. உரிமம் பெற்ற பொறியாளரின் சான்றிதழ் கட்டிடத்திற்காக ஒன்று கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்கப் பட்டிருக்கின்றது. நிர்வாகக் குழுவில் இருக்கின்ற உறுப்பினர்களின் விவரம் கேட்கப்பட்டிருக்கின்றது. இந்த மூன்று விவரங்களும் கொடுத்து விடுவார்களானால், அதற்குத் தற்காலிக அங்கீகாரம் அளிப்பதில் எந்த விதமான ஆட்சேபணையும் இராது. அங்கீகாரம் பெற விவரங்கள் தர வேண்டும். விரைவிலே விவரங்கள் வராவிட்டால், எப்போதும் கொடுக்கப் படுகின்ற தற்காலிக அங்கீகாரம் தான் தரவேண்டி வரும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, சொத்தை மாற்றி எழுது வதிலேதான் கால தாமதம் ஆகின்றது. ஏனென்றால் அந்த சொசைட் டியினுடைய கவுன்சிலில் உள்ளவர்களுடைய தீர்மானத்தைப் போட்டுத் தான் எழுத வேண்டுமென்று சொல்லுகின்றார்கள். ஆகவே அந்த ஒரு நிபந்தனையை நிறைவேற்றும்வரை ஒரு ஆண்டுக்கு தற்காலிக அங்கீகாரம் வழங்கலாமென்ற முடிவை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 டிசம்பர் 3

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த நிலைமையை விளக்கி அவர்கள் தற்காலிக அங்கீகாரம் வழங்க வேண்டுமென்று ஒரு விண்ணப்பம் செய்து கொண்டு, அதன்மீது தற்காலிக அங்கீகாரம் தரலாம். அதற்குள்ளாக கேட்கின்ற திருத்த விளக்கங்களை அவர்கள் தர வேண்டும்.

*Complaint against a Sub-Judge of Thanjavur.*

2 *S.N.Q.*—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a letter of complaint about the behaviour of a Sub-Judge at Thanjavur was submitted to the Hon. the Chief Minister, by two Legislators during the beginning of the year ;

(*b*) if so, the nature of the complaint ; and

(*c*) the action taken thereon ?

**தஞ்சாவூர் துணை நீதிபதி ஒருவரின் மீது புகார்.**

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரிலுள்ள துணை நீதிபதி ஒருவரின் நடத்தை குறித்து இந்த ஆண்டின் தொடக்கத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரால், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குப் புகார்க் கடிதம் ஒன்று பணிந்தனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அப்புகாரின் தன்மை யாது?

(உ) எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இவரது நடத்தை குறித்துச் சில குற்றச்சாட்டுகளை அவர்கள் செய்துள்ளனர்.

(உ) இதுபற்றி அரசு விசாரணை செய்து வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் மனு கொடுத்தார்கள் என்று இருக்கின்றது. அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் யார் யார்? நடத்தையில் சொல்லப்பட்ட கோளாறு எத்தகையது?



73 டிசம்பர் 3]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: டாக்டர் எச். வி. ஹண்டே, ரு. கே. டி. கே. தங்கமணி ஆகிய இருவர், ஒரு துணை நீதிபதியைப் ற்றி. அதாவது சப்-ஜட்ஜ், தஞ்சை மாவட்டத்திலே பணியாற்றுபவரைப் ற்றிக் கேட்டிருக்கின்றார்கள்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, அது அவருடைய தொழில் சம்பந்தப்பட்ட புகாரா? அல்லது சொந்தத்திலே அவருடைய சொந்த நடவடிக்கைகளைப் பற்றிய புகாரா என்பதைப் பற்றி அறிய ரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நீதித் துறையினுடைய பணிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி.

*'nclusion of Manapparai taluk in the proposed Pudukkottai district.*

3 *S.N.Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister r Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to include Manapparai Taluk the proposed new District Pudukottai after bifurcating Tiruchirappalli istrict ;

(*b*) whether there is any objection from the public of Manapparai aluk to the proposed inclusion of their taluk in the proposed district Pudukottai ; and

(*c*) if so, the action taken thereon ?

**அமையவிருக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மணப்பாறை வட்டத்தைச் சேர்த்தல்.**

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பிரித்த பிறகு, தனியாக அமைக்கக் கருதியுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில், மணப்பாறை வட்டத்தைச் சேர்ப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

(இ) தனியாக அமைக்கக் கருதியுள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் மணப்பாறை வட்டத்தைச் சேர்க்கக் கருதியிருப்பது குறித்து, மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து மறுப்பு ஏதும் வந்துள்ளதா?

(உ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜெ. சாதிக்பாட்சா: (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) மணப்பாறை வட்டத்தை புதுக்கோட்டை மாவட்டத்துடன் இணைக்கத் தேவையில்லை என அரசு தீர்மானித்துள்ளது.

*Representation of Labourers Munnetra Sangam in the Tripartite Discussions being held in Delhi on the fixation of salaries for the labourers in Sugar Mills.*

4 *S.N.Q.*—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have received any representation on the imperative need for the representation of the Labourers Munnetra Sangam, the Central Association of Trade Unions, having the majority of labourers working in Sugar Mills in Tamil Nadu as member, in the Tripartite Discussions being held in Delhi on the fixation of salaries for the labourers working in sugar mills ;

(*b*) if so, the action taken thereon ; and

(*c*) the benefits thereof ?

**டெல்லியில் நடைபெற்று வருகிற சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் ஊதிய நிர்ணயம் குறித்த முத்தரப்புப் பேச்சு வார்த்தையில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கு பிரதிநிதித்துவம்.**

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) டெல்லியில் நடைபெற்று வருகிற சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் ஊதிய நிர்ணயம் குறித்த முத்தரப்புப் பேச்சு வார்த்தையில் தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்களில் மிகப் பெரும்பான்மையானவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகிற தொழிற்சங்கங்களின் மத்திய நிறுவனமாகிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டாக வேண்டியதன் அவசியம் குறித்து அரசுக்கு முறையீடு ஏதும் வரப் பெற்றதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாது ?

(உ) அதனால் ஏற்பட்ட பலன்கள் என்ன ?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) & (உ) சமீபத்தில் நான் புதுடில்லிக்குப் போயிருக்கும்பொழுது இதைக் குறித்து மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சரிடம் பேசினேன். இதைத் தொடர்ந்து மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சரவர்களுக்கு நான் ஒரு நேர்முகக் கடிதமும் அனுப்பியிருக்கிறேன். மத்திய அரசின் முடிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு. காட்டூர் கோபால் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொழிலாளர்களுடைய ஊதியக் குழு பேச்சுவார்த்தைகள் நடந்தபோதும், இது மாதிரி பேரவையினுடைய பிரிதிநிதித்துவம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. இதில் அரசியல் நோக்கம் இருப்பதாக தொழிலாளர்கள் கருதுகின்றார்கள். இதில் அரசாங்கம் ஆய்வு நடத்துமா ? இதற்கு அரசாங்கம் என்ன செய்ய இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்தப் பேச்சு வார்த்தைகளிலே ஆய்வுக்கு அனுப்ப வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு எழுதியிருக்கின்றோம். இதில் அரசியல் நோக்கு எதுவும் இருப்பதாக எனக்குப் படவில்லை. எப்படியும் நம்முடைய முயற்சியிலே வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசியல் நோக்கம் இல்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் இன்றையதினம் தினப் பத்திரிகையில் மத்திய தொழிலாளர் சம்மேளன சங்கங்கள்—இரண்டு சங்கங்களுக்கு இடையிலே எந்தச் சங்கம் சொல்கிறபடி ஊதியம் அளிப்பது என்பதிலே சர்ச்சை இருக்கின்ற காரணத்தினாலே, இதிலே ஆய்வு நடத்தமுடியாமல் இருக்கின்றது என்ற செய்தி வெளியாகியிருக்கின்றது. இதுபற்றி நம்முடைய அரசுக்கு ஏதேனும் தெரியுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தினப்பத்திரிகையில் வருகிற எல்லாவற்றையும் நம்பிவிட முடியாது.

திரு. காட்டூர் கோபால் : இந்தச் சேதி பற்றி அரசாங்கத்துக்கு ஏதாவது தகவல் வந்துள்ளதா ? அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதனை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதுவரையிலே அப்படிப்பட்ட தகவல்கள் எதும் அரசுக்கு வரவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும். உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

## 2. அறிவிப்புகள்.

### 1. ஆளுநரிடமிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have received messages from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill, 1973 and the Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1973.

### 2. பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have also received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 40 of 1973) and the Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 39 of 1973) as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bills are Money Bills within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Assembly and signed by him for the concurrence of the Council :—

1. The Motor Vehicles (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 28 of 1973) ;
2. The Tamil Nadu Hackney Carriage (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 34 of 1973);
3. The Tamil Nadu Town and Country Planning (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 31 of 1973);
4. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L.A. Bill No 38 of 1973).

### 3. அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

MR. CHAIRMAN : I have to announce to the House that, under rule 166 (1) of the Council Rules, I have nominated the following Members to be the members of the Business Advisory Committee of the Council for the year 1973–74 :—

1. Hon. Chairman (Chairman).
2. Hon. Dr. M. Karunanidhi, Chief Minister (Leader of the House-Council).
3. Thiru M. P. Sivagnanam, Deputy Chairman.
4. Thiru K. Rajaram.
5. Thiru G. Parangusam.



6. Thiru Saw. Ganesan.
7. Thiru A.R. Damodaran.
8. Thiru S. Jayaram Reddiar.
9. Thiru L. Balaraman.

Hon. the Leader of the House(Assembly) will be a permanent invitee.

## 4. அரசின் தீர்மானம்.

### மேலவை விதி 42 (3)-ஐ நிறுத்தி வைத்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 42-வது விதி அதன் (3) துணை விதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்"
என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—
"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை விதிகளின் 42-வது விதி அதன் (3) துணை விதியில் கொடுத்துள்ள வரம்பைப் பொறுத்த வரையில் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதுடன் அவ்விதியின்படி இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை இன்று எழுப்ப அனுமதிக்கப்பட வேண்டும்"
தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 5. கவன ஈர்ப்பு.

### (1) அரசாங்க உயர்நிலைப்பள்ளி (பி பிரிவு) ஆசிரியர்கள் மாறுதல் செய்யப்பட்டால் பதவியிலிருந்து நீக்கி, புதிய நியமன உத்தரவு பிறப்பித்தல். பி. ப 4-20

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவையின் 42-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து திரு. வே. தங்கப்பாண்டியன் அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்:—

"கல்வி இயக்குநரின் உத்திரவு எல். டிஸ். 121469/73 தேதி 1—4—1970-ன் படி தமிழ் நாட்டில் அரசாங்க உயர்நிலைப் பள்ளி (பி பிரிவு)-யில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் மாறுதல்கள் மனுவை ஏற்றுக் கொள்ளக்கூடாதென்றும், மாறுதல் செய்தால், பதவியிலிருந்து நீக்கி, பின் புதிய நியமன உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்ற உத்திரவின்படி "பி" பிரிவு பள்ளிகளில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசாணை எண். 761, கல்வி, நாள் 16—5—1970-ன்படி 1—4—1970க்குப்பின் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படும் நிரந்தரமான பதவிகளை, மாவட்டக் கழக பணிவிதிகளின்படி நிரப்ப முடியாமல் இருக்கும் இடங்களையும் புதிதாகத் தோற்றுவிக்கப்படும் பணி இடங்களையும் முறையான அரசு பணி (அ) பிரிவு பணியிடங்களாகக் கருத வேண்டும் என்பது ஆணை. அதன்படி அந்தப் பள்ளிகளில் ஏற்படும் இடங்களை அரசு பணியாளர் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைக் கொண்டுதான் நிரப்ப வேண்டும். "அ" பிரிவு விதிகளின்படி அந்த பணியிடங்களை நிரப்ப காலதாமதம் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டு 1970–71, 1971–72 மற்றும் 1972–73 இந்த மூன்று ஆண்டுகளிலும் "பி" பிரிவு பள்ளிகளில் ஏற்பட்ட புதிதான இடங்களை தற்காலிகமாக நிரப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அவ்வாறு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் சிலர் ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாறுதல் கேட்டிருந்தனர். மேலும், நிர்வாக வசதிக்காக சில மாறுதல்கள் செய்ய நேரிட்டது. இவ்வாறு தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை மாற்றும்பொழுது சில பிரச்சினைகள் எழுந்தன. அவர்களை ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்ற எந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று முதன்மைக் கல்வி அலுவலர்களால் இயக்குநரிடம் விளக்கங்கள்கோரப்பட்டன. மேற்கண்ட நிலைமையை ஆராய்ந்து கீழ்க்கண்ட அறிவுரைகள் இயக்குநரின் செயல் முறைகள் ஒ. மு. எண். 121469/எக்ஸ்/1/73-நாள் 21—9—1973-ல் வழங்கப்பட்டன.

1—4—1970-க்குப் பின் தற்காலிகமாக அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் மாறுதல்கள் மிகக் குறைந்த அளவில்தான் செயல்படுத்தப்பட வேண்டும். சில தவிர்க்க முடியாத காரணம் ஏற்பட்டால், கீழ்க்கண்ட முறையைக் கையாள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. 1—4—1970-க்குப் பின் நியமிக்கப்பட்ட இவ்வாசிரியர்களை "அ" பிரிவு ஆசிரியர்களாகத்தான் கருத வேண்டும் என்றும் அவர்களை "அ" பிரிவு விதிகளின்படி தற்காலிக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு "அ" பிரிவைச் சேர்ந்த அரசுப் பள்ளிகளில் எவ்வாறு மாறுதல்கள் அளிக்கப்படுகிறதோ அதே முறையைக் கையாள வேண்டும் எனவும் கருதப்பட்டது.

1. தற்காலிக ஆசிரியர்கள் ஒரு பள்ளியிலிருந்து பணி நீக்கம் செய்யப்படின் மற்றொரு பள்ளியில் மறு நியமனம் செய்யப்பட வேண்டும்.

2. அவ்வாறு மாற்றப்பட்ட தற்காலிக ஆசிரியர்களுக்கு மாறுதல் பயணப்படியோ அல்லது பணியில் சேரும் காலமோ (ஜாயினிங் டைம்) கிடையாது.

3. அவ்வாசிரியர்களுக்கு விடுமுறை சம்பளம் பெறுவதில் தடை ஏற்படும் என்பதால் அவர்களுக்கு பணி முறிவு ஏற்படக்கூடாது என்று



கருதி அவர்களை பழைய பள்ளியில் பிற்பகலில் விடுத்து புதிய பணியிடத்தில் மறுநாள் முற்பகலில் சேரும்படி அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து தற்காலிகமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் மாறுதல் மனுவை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றோ அல்லது பரிசீலனை செய்யக்கூடாதென்றோ எவ்வித அறிவுரையும் சார்நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, இது ஒரு சிக்கலான பிரச்சினை. தலைவரவர்களின் அனுமதியோடு, ஒரு சிறு விளக்கத்தினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளித்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றுள்ள நிலையில், கழக உயர்நிலைப் பள்ளிகளில், அரசு உயர்நிலைப் பள்ளிகளில் இதனால் மிக பாதகமான நிலைகள் உண்டாகும். 1—4—1970-லிருந்து பணியாற்றும் ஆசிரியர்களை மூன்றாண்டுகளாக இன்னும் தற்காலிகமாக வைத்திருப்பது தவறாகும். இதனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்குக் கோடியிலுள்ள இராமேஸ்வரத்தில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் தமக்கு மாற்றம் வேண்டும் என்று, கேட்டு சாத்தூர் அல்லது இராஜபாளையம் போலுள்ள இடத்தில் காலியாக இருந்து அங்கே மாற்றப்பட்டு, அவர் அங்கே செல்ல வேண்டுமானால், அவர் அங்கே பிற்பகலில், மாலையில் விடுவிக்கப்பட்டு, மறுநாள் முற்பகலில் காலையில் அங்கே போய்ச் சேர வேண்டுமானால், நிச்சயமாக முடியாது. முறையாக இவர்கள் நிலைகளைக் கவனித்து இவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும். அல்லது "ஏ" பிரிவு பள்ளிக்கூடங்களுக்குள்ள விதிகளை "பி" பிரிவு பள்ளிக்கூடத்திற்கும் புகுத்த முடியுமா என்று அரசு பரிசீலனை செய்ய வேண்டும். முன்பிருந்த "ஸ்டேடஸ்–கோ" இருப்பதற்கான முறையில் அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும். இப்போது கல்வி இயக்குநரிடமிருந்து திடீர் திடீரென்று வரும் பல உத்தரவுகள் பெரும் குழப்பத்தினை உண்டாக்குகின்றன. இதைத் தவிர்ப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1—4—1970-ல் போடப்பட்டு அமுல்படுத்தப்படும் இந்த உத்தரவிற்குப் பிறகு இதில் மீண்டும் மாற்றம் கொண்டுவரவேண்டுமென்றால், இதில் பல புதிய சிக்கல்களே வரும். ஒரு சிக்கலை அவிழ்க்க மேலும் இரண்டு மூன்று சிக்கல்களைக் கொண்டு வருவது ஏற்றதல்ல. நாம் இப்போதுள்ள சிக்கல்களையே குறைக்க வேண்டும் என்றுதான் முயற்சித்து வருகிறோம். கூடுமான வரையில் சிக்கல்களைக் குறைக்கவும், இதிலே குறைபாடுகள் ஏதேனும் இருந்தால் அவற்றைப் பரிசீலித்து, அவற்றைப் போக்கவும் தான் நாம் முயற்சிக்கிறோம். இதிலே ஏதாவது சங்கடங்கள் இருந்தால்,

முறைப்படி பள்ளிக் கல்வி இயக்குநருக்கு எழுதினால், அவர் முறைப் போக்க முயற்சிக்கலாம். எனவே சிக்கல்கள் ஏற்பட வேண்டாம் என்று ஒரே முறையைக் கையாள வேண்டும் என்று முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, "ஆன் எ பாயிண்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன்." . . .

MR. CHAIRMAN : Only the Member who called the attention of the Minister can seek clarification and no other Member can speak. The hon. Member may please resume his seat.

## (2) வேலூர் நகரத்தில் கல்லூரி மாணவர்கள் வேலூர் கோட்டை வெளியில் உண்ணாவிரதம் இருப்பது.

திரு. கே. ராஜாராம், திரு எல். பலராமன் சார்பில் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் நகரத்தில் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் வேலூர் கோட்டை வெளியில் 100 பேர் உண்ணாவிரதம் இருப்பதையும், அதனால் சில மாணவர்கள் மயக்க நிலை எய்தியும், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டும், பல மாணவர்கள் மேலும் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்துகொண்டு இருப்பதையும், இதனால் கல்லூரிகள் மூடப்பட்டும், உயர்நிலைப் பள்ளிகள் மூடப்பட்டும் இருப்பதால், அங்கு வேறு நிலைகள் ஏற்படுமோ என்ற ஐய நிலை இருப்பதையும் குறித்து".

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, இக் கவன ஈர்ப்புத் தீர்மானம் சில அரிசன மாணவர்கள் வேலூரில் நடத்திய ஆர்ப்பாட்டம் பற்றியது. எனினும், அவ்வார்ப்பாட்டத்தின் மூலகாரணம் திருச்சியில் சென்ற 12—11—73 அன்று சில அரிசன மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் தொடர்பானதினால் அதைப்பற்றி முதலில் கூற விரும்புகிறேன்.

அண்மையில் 12—11—73 அன்று திருச்சியில் சில அரிசன கல்லூரி மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குவது சம்பந்தமாக சில கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. இது சம்பந்தமாக அங்கு சில மாணவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கிளர்ச்சி செய்தனர். அதுபற்றிய விவரத்தைச் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

கல்லூரியில் படிக்கும் இந்து அரிசன மாணவர்களுக்கு மத்திய அரசு விதி முறைகளின்படி உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இவ்வுதவித் தொகையில், உண்டு, உறைவிடக் கட்டணமும், புத்தகங்கள்



நோட்டுகளுக்கான செலவும் அடங்கியது. இம்மாணவர்கள் அரிசன நல விடுதிகளில் தங்கினால் அவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையிலிருந்து உண்டு, உறைவிடச் செலவுத் தொகை போக மீதியைத்தான் விதிமுறைப்படி அவர்களுக்கு அளிக்க வேண்டும். இவ்விதி முறையைச் சரிவரச் செயற்படுத்தும்படி எல்லா மாவட்ட நல அலுவலர்களுக்கும் அறிவுரைகள் அரிசன நல இயக்குநரால் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் திருச்சி மாவட்டத்தில் இவ்விதி முறையைச் சரிவர செயல்படுத்தாமல், அத்தகைய மாணவர்களுக்கு உணவு விடுதியில் தங்கிப் படிக்காத மாணவர்களுக்கு வழங்கும் விகிதத்தில் உதவித் தொகை தவறுதலாக வழங்கப்பட்டு விட்டது. இத்தவறை உணர்ந்த பின்னர், மாவட்ட நல அலுவலர் விதி முறைகளைச் சரிவரச் செயல்படுத்த முயன்ற போது, இதை ஆட்சேபித்து அங்கு சில மாணவர்கள் கிளர்ச்சி செய்தனர். இது சம்பந்தமாக எனக்குத் தகவல் கிடைத்தவுடன் திருச்சி மாவட்ட ஆட்சியாளருடன் தொலைபேசி மூலம் கலந்து பேசினேன். என்னிடம் இதுபற்றி தொலை பேசி மூலம் தொடர்பு கொண்ட மாணவருடனும் நிலைமையை நன்கு விளக்கிப் பேசிய பிறகு மாணவர்கள் கிளர்ச்சியைக் கைவிட்டனர். பின்னர் சில மாணவர்கள் சென்னை வந்து நேரில் என்னைச் சந்தித்தனர். மாணவர்கள் உள்ள நிலையைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட கூடுதல் உதவித் தொகையைத் திரும்பப் பெறுமலிருக்க வேண்டுமென்று கோரினர். அவர்களது கோரிக்கை அனுதாபத்துடன் கவனிக்கப்படும் என்றும் மாணவர்களுக்குக் குந்தகம் ஏற்படாத வகையில் முடிவு எடுக்கப்படும் என்றும் கூறினேன். மாணவர்களும் திருப்தியுடன் திருச்சிக்குத் திரும்பிச் சென்றனர்.

திருச்சி மாவட்டத்தில் நடந்த இக்கிளர்ச்சிதான் அண்டை மாவட்டங்களில் கிளர்ச்சி நடக்கக் காரணமாக அமைந்தது. இச் சூழ்நிலையில்தான் 19—11—73 அன்று வேலூரிலும் சில அரிசன மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அவர்களது முக்கிய கோரிக்கை தங்களுக்கு உதவித் தொகையில் உண்டு உறைவிடச் செலவைக் குறைக்காமல் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

விதி முறைகளை மாணவர்களுக்கு விளக்கி, உள்ள நிலைமையைப் புரிந்து கொண்டு கிளர்ச்சியைக் கைவிட மாணவர்களுக்கு அறிவுரை வழங்குமாறு மாவட்ட ஆட்சியாளருக்குத் தொலைபேசி மூலம் கூறினேன். என் அறிவுரைப்படி மாவட்ட ஆட்சியாளர் முயற்சியினை மேற்கொண்டார். இதற்கிடையில் 20—11—73 அன்று சில மாணவர்கள் பசிக் களைப்பால் மயக்கமடைந்து, அவர்களுக்கு உடனே மருத்துவ வசதி அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியாளரின் விளக்கத்தைக் கேட்டு மாணவர்களும் 21—11—73 அன்று கிளர்ச்சியைக் கைவிட்டனர். பசிக் களைப்பால் மயக்கமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் 21—11—73 அன்று குணமடைந்தபடியால் திரும்பிப்போனார்கள்.

இக் கிளர்ச்சியின் விளைவாக வேலூரில் கல்லூரிகளோ உயர்நிலைப் பள்ளிகளோ மூடப்படவில்லை. அங்கு அமைதியான நிலைமை நீடித்து வருகின்றது.

(3) **கோயம்புத்தூரிலுள்ள ஸ்ரீராணி லெக்ஷ்மி பஞ்சடித்தல்—நூல் நூற்றல்—நெசவு ஆலை தனியார் லிமிடெட் மூடப்பட்டது.**

திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கோயம்புத்தூரிலுள்ள ஸ்ரீராணி லெக்ஷ்மி பஞ்சடித்தல்-நூல் நூற்றல் நெசவு ஆலை தனியார் லிமிடெட்டின் நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே எந்தவித தகராறுமின்றி, ஆனால், தொழிற் சங்கங்களுக்கிடையேயுள்ள தொழிலாளர்களுக்குள் ஏற்பட்ட குறிப்பிட்ட சிலதகராறுகள் காரணமாக மேற்படி ஆலை மூடப்பட்டதும், அதன் விளைவாக அந்த ஆலையில் பணிபுரியும் 175 தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடு குறித்தும், உற்பத்தி இழப்பு குறித்தும், தேவையான நடவடிக்கையை அரசு விரைந்து எடுக்க வேண்டிய அவசியம் குறித்து."

மாண்புமிகு திரு க. இராசாராம் : தலைவரவர்களே, மேற்படி பஞ்சாலையில் 180 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர்.

மேஸ்திரிகள் செய்து வந்த வேலையாகிய கமான் அடித்து மிஷின் விடும் வேலையை அறியாத் தொழிலாளர்களைச் செய்யச் சொல்லியதால், அதை மறுத்து தொழிலாளர்கள் முன்னறிவிப்பின்றி 20—8—73 முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். மேஸ்திரிகள் இதுவரைக்கும் அவ்வேலையைச் செய்து வந்ததாக தொழிலாளர்கள் நாட்டில் விவாத மாகும். தொழிலாளர்கள் வேலையிழந்த காலத்திற்கு கூலி தரப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டது.

இது சம்பந்தமாக கோவை தொழிலாளர் துறை உதவி ஆணையர் சமரச பேச்சு வார்த்தைகள் நடத்தி 22—10—73-ல் அவரது அறிக்கையை அனுப்பினார். கமான் அடித்து மிஷின்விடும் வேலையை யார் செய்வது என்ற வழக்கு 16—11—73 நாளிட்ட அரசு ஆணை 2362 (தொழிலாளர் நல வேலை வாய்ப்புத் துறை)-ல் கோவை தொழில் நீதிமன்றத் தீர்ப்பிற்காக விடப்பட்டுள்ளது. ஆனால் பஞ்சாலை வேலை செய்யாதிருந்த காலத்திற்குரிய கூலி கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைத் தீர்ப்பிற்கு விட அரசு மறுத்து விட்டது. மேற்கூறியவாறு வழக்கை தீர்ப்பிற்காக அனுப்பியும் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை.

கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் இவ்விஷயத்தைத் தொடர்ந்து பரிசீலித்து தொழிலாளர்கள் வேலைக்கு திரும்புவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார். அவருடைய முயற்சிகள் பயனளிக்கவில்லை. தொழிலாளர் துறை ஆணையர் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.



(4) **அரசு உயர்நிலைப் பள்ளிகளில் (முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகள்) 1—4—1970 முதல் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன் முறைப்படுத்தப்படாதது.**

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to an urgen t matter of public importance, namely,

" the non-regularisation of the services of thousands of B.T. Assistants in Government High Schools (former District Board High Schools) appointed from 1st April 1970 despite the Government Order mentioned by the Hon. the Minister for Education on the floor of the Legislative Council on the 3rd March 1973 and the consequent distress caused to them."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் (பி. பிரிவு) 1—4—1970 முதல் 3—3—1973 வரை நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் பணி, தனி வகையாக (as a special case) முறைப்படுத்தப்படும் என்று 3—3—73 நாளிட்ட கல்வித் துறையின் அரசாணை எண் 351-ல் ஆணையிடப்பட்டது. அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் பதவி தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் (Tamil Nadu Public Service Commission) வரம்பிற்குள் இருக்கிறது. அக்குழுவின் விதி 16 (பி)-ன் பின் பகுதிப்படி, அதன் ஒப்புதல் பெற்ற பின்னரே மேற்கண்ட ஆணையைச் செயல்படுத்த முடியும். மேலும் "பி—பிரிவு" அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணியாற்றிவரும் பட்டதாரி ஆசிரியர்கள் உட்பட 3,087 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு ஆணைக்குழுவால் அண்மையில் நேரடித் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த 3,087 ஆசிரியர்களில் 2,292 ஆசிரியர்கள் ஏற்கனவே பி. பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகப் பணியிலிருப்பவர்கள். 144 ஆசிரியர்களே 'ஏ' பிரிவில் தற்காலிகப் பணியிலிருப்பவர்கள். எஞ்சிய 651 நபர்கள் அவ்வாறு தற்காலிகப் பணியில் இல்லாதவர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா ஆசிரியர்களிடமிருந்தும் அவர்களைப் பற்றிய முழு விவரங்கள் குறிப்பிட்ட படிவத்தில் கேட்கப்பட்டன. இப்படிவங்கள் சென்ற அக்டோபர் மாதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு வந்து சேர்ந்தன. ஏற்கனவே பணியில் இல்லாத 651 நபர்களுக்கு மாவட்ட வாரியாக பதவி நியமன ஆணை இயக்குநரால் வெளியிடப்பட்டு வருகிறது. விரைவில் அவர்கள் எல்லோருக்கும் ஆணைகள் அனுப்பப்பட்டு விடும். அதன்பின் ஏற்கனவே தற்காலிகப் பணியிலிருக்கும் மற்ற 2,436 ஆசிரியர்களது பணியும் இயக்குநரால் வரன்முறை செய்யப்படும்.

3—3—73 நாளிட்ட அரசாணை எண் 351-ன்படி பணி முறைப்படுத்தப்படவேண்டிய பட்டதாரி ஆசிரியர்களின் பெயர் முதலிய விவரங்களும், தளர்த்தப்பட வேண்டிய விதிகளைப் பற்றிய விவரங்களும் பள்ளிக் கல்வி இயக்குநரிடமிருந்து கேட்கப்பட்டிருக்கின்றன. தேர்வு ஆணைக் குழுவால்

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் 3,087 பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் முறையாக நியமனம் செய்யப்பட்ட பின்னரே, மேற்குறிப்பிட்ட விவரங்களை இயக்குநரால் அனுப்ப முடியும். அவ்விவரங்கள் அரசுக்கு கிடைத்த உடன் 1—4—1970 முதல் 3—3—1973 வரை அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிக நியமனம் செய்யப்பட்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களில் எஞ்சியுள்ளோர்களின் பணியை வரன் முறைப்படுத்துவதற்கு தேர்வு ஆணைக் குழுவின் ஒப்புதலைப் பெற அரசு தேர்வு ஆணைக் குழுவைக் கலந்து ஆலோசிக்கும்.

விதிகளின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் மூலமாகவே அரசு உயர்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் பதவிக்கு நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்தத் தேர்வில் சற்று மாறுபட்ட ஒரு வழி முறையைக் கையாள இருப்பதால் சிறிது தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும் என்றும் இப்பொழுதன் நிகழ்வதற்கு அவ் வாசிரியர்களின் தற்காலிகப் பணி கூடிய விரைவில் தேர்வாணைக் குழுவின் ஒப்புதல் பெற்று முறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, what the teachers would like to know is whether their services will be regularised from the date of their first appointment because they have been several times ousted and then reposted.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றிய விளக்கங்கள் தெரியவில்லை. ஆனால் ஏற்கெனவே இருக்கிற ஆணைப்படி முறைப்படுத்தப்படும். சிக்கல்கள் இருக்குமானால், தனியாகக் கவனிக்கலாம்.

## 6. மேலவை விதிக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இவ் வவையினால் அமைக்கப்பட்ட மேலவை விதிக் குழுவின் பரிந்துரைகள் கொண்ட அறிக்கையினைக் குழுவின் சார்பில் இம்மன்றத்தின் முன் வைக்கின்றேன். இக் குழு தங்களது தலைமையில் எவ்வளவு சீரிய முறையில் இயங்கியது என்பதற்கு இவ்வறிக்கையும், குழுவின் அன்றாட நடவடிக்கைக் குறிப்புகளுமே சான்றாகும். மேலவை விதிகளின் தமிழாக்கத்திலேயே குழு தன் முழு கவனத்தையும் செலுத்தியது. அவ்வாறு விதிகளை ஆயும்போது, மிகவும் தேவைப்பட்டதெனக் கருதப்பட்ட சில மாற்றங்களை, குழுவின் அறிக்கையில் 7, 8-வது பத்திகளில் கண்டுள்ளபடி செய்துள்ளது. இக்குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் மிகுந்த ஆர்வத்துடன் பணிபுரிந்ததன் விளைவாகவே, தமிழாக்கத்தை மிகவும் சீரிய முறையில், தலைவரவர்களே, தங்களது தலைமையில், குழுவினால் செய்ய முடிந்தது. இதைத் தமிழாக்கம் என்று சொல்வதைவிட, விதிகள் தமிழிலேயே இயற்றப்பட்டன என்று சொன்னால் அது மிகையாகாது. விதிகள் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு தனியே கூடிய விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.





இச்சமயத்தில், தலைவரவர்களே, தங்களது அலுவலகம் ஆர்வத்தோடு ழுவினருக்குத் தேவையான உதவியினை அளித்தது என்பதை நான் சால்லத் தேவையில்லை. அவர்களது பணியின் விளைவாகவே தமிழாக் த்தை நல்ல முறையிலும் விரைவாகவும் செய்ய முடிந்தது என்பதை ம் சொல்லி அதற்காகப் பெருமைப்படுகிறேன். அவர்களுக்குப் பாராட்டு லையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையை இந்த அவை முன் வைக்கிறேன்.

## 7. அரசின் சட்ட முன்வடிவுகள்.

**(1) 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) ட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/73).**

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, மோட்டார் வண்டிகள் சட்டத்தில் இது இரண்டு ருத்தங்களைக் கொண்டு வருகிறது. ஒரு திருத்தம், எஸ்.டி.ஏ.டி.-யில் ல் சொந்தக்காரர்களுக்கு சாதகமோ அல்லது பாதகமோ ஏற்படு ) போது அவர்கள் உயர் நீதி மன்றத்திற்குப் போகிற வகையில் ந திருத்தத்தை ஏற்கெனவே இந்தச் சட்ட மன்றத்தின் மூலம் நாம் றைவேற்றி இந்தச் சட்டத்தில் வகை செய்திருக்கிறோம். அப்படி வர்கள் உயர் நீதி மன்றத்திற்குப் போகிறபோது, குறிப்பிட்ட கட்ட த்தை வசூல் செய்வதற்கு ஏற்ற வகையில் விதிகளை உருவாக்கு தற்கு, உருவாக்குகிற அந்தப் பிரிவின் கீழ் அதிகாரம் அளிக்கிற கையில் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இரண்டாவது திருத்தம் ற்கெனவே சட்ட மன்ற மேலவையின் மூலம் மோட்டார் வண்டிகள் ாகன சட்டத்தில் 68—எச் என்ற ஒரு செக்ஷனைக் கொண்டு வந்திருக் றோம். அதற்குப் பிறகு டெல்லி சர்க்கார், அதே சட்டத்தில் 68-எச். என்ற ந பிரிவினைக் கொண்டு வந்து விட்டார்கள். ஆகவே இந்தச் சட்டப் ரிவை 68-எச். என்று போடுவதற்குப் பதிலாக 68-எச். எச். என்று ற்றிக்கொள்ள வகை செய்கிறோம். ஆகையினால் இந்தச் சட்டத் நத்தத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* 129-ஆம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, I have just to make a few points on this Bill and generally on the Motor Vehicles Act.

For a long time, the lorry-owners have been complaining that if their lorries contain passengers not only is the driver held responsible, but also the owner of the lorry. I would, therefore, request the Hon. Minister in view of the representations that have been received, to see whether an amendment to the Motor Vehicles Act could be carried out fixing the responsibility for the carrying of passengers on the drivers of such vehicles instead of assuming vicarious responsibility on the owner also. Sir, ther are some practical difficulties in holding the owner of the vehicle responsible. If you take a National Highway, when a lorry starts from Madras the owner may be somewhere in Coimbatore. All along the route, the drivers of these vehicles pick up passengers and when they are checked by the Motor Vehicles Inspectors as well as by the Police, not only is the driver fined but the owner of the vehicle is also in danger of losing the licence for his vehicle, resulting in either a heavy fine or suspension. I would, therefore, suggest that, since the major responsibility for the loading of passengers in such lorries is that of the driver, the Act may be amended to ensure that the drivers are punished for this offence, and their licences may even be cancelled or may be kept in abeyance or suspended for a period of two or three months, so that the pernicious practice of carrying passengers in goods vehicles may be stopped.

Sir, there is also another aspect of the difficulties experienced by lorries, particularly in Madras City, where the Mobile Courts are extremely active. Unfortunately, it is very difficult for the owners to make any sort of defence against the charges that are made against them. There is a regular target for the Police to book these cases and I have known of cases where in the bright noon of sunlight, certain lorries have been booked because their windscreen wipers did not work -- the windscreen wiper is expected to work during rains. Some charges of this sort are being made by the Police and many of the lorries have to pay regular "mamools" to get out of this vicious practice of being charged before the Mobile Courts. The problem has assumed vast proportions, Sir, in the sense........................

MR. CHAIRMAN: "Mamools" to whom ?

THIRU A.R. DAMODARAN : "Mamools", naturally to the Police Department, Sir, which is charging these vehicles. In fact, it has reached such proportions that there is a regular gang operating in Madras City



and these lorries have to pay a regular monthly subscription to this clique. Otherwise, lorries will be regularly booked once a week. Therefore, Sir, I would like the Hon. Minister to kindly go into this question, because when these owners are booked before these Mobile Courts—they are all Honorary Magistrates—for traffic offences and speeding offences, these people are not allowed any defence and they are straightaway fined by the Mobile Courts. It may seem very successful as far as the Mobile Court is concerned, but if you take the opinion of the lorry-driver, Sir, I am afraid, they are reaching a stage where open defiance of authority and law may result if they are going to be harassed in this fashion. Everybody agrees that there should be a certain amount of traffic regulations—that we should observe the speed-limits in the City and that we should keep our exhaust completely free or comparatively free from smoke, but the whole trouble in this charge is that there is no actual proof and the unfortunate owner or the driver invariably shells out Rs. 15 or Rs. 20. I would, therefore, like the Hon. Minister kindly to consider this question, as motor vehicles pay the Government a substantial amount of tax and the drivers and owners are entitled to protection from the Minister for Transport by seeing that they are not unneces- 4 40
sarily harassed in his fashion. பி. பா.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்கு இடமில்லை என்றாலும் கூட, அவர் எழுப்பிய இரண்டு பிரச்சினைகளைப் பற்றியும் தெளிவுபடுத்துவது என் கடமை என்று எண்ணுகிறேன்.

முதலாவதாக, டிரைவர்கள் தவறுகள் செய்கின்றார்கள், எனவே டிரைவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இரண்டாவதாக, டிரைவர்களை அனுவசியமாக மொபைல் கோர்ட்டுகளில் தொந்தரவு செய்கின்றார்கள் என்று கூறினார். ஆகையினால் டிரைவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இரண்டையுமே உணர்வின் அடிப்படையில் பார்க்கின்றபோது, ஒன்றுக்கொன்று முரண்பட்டிருக்கின்றதோ என்று நான் அஞ்சுகிறேன். ஆனால் உண்மை என்னவென்றால், ஒரு லாரி பர்மிட்டைக் கொடுக்கின்றபோது, அந்த லாரியை எப்படி ஓட்ட வேண்டும் என்பதற்கு பர்மிட் ஹோல்டர் என்று யார் அனுமதிக்கப்பட்டிருக்கிறாரோ, அவர்தான் அதற்குரியவர் ஆகின்றார். ஆகையினால் ஒழுங்கு முறைகளை நிர்ணயிக்கவோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவோ, சட்டம் எப்படி இருக்கிறதென்றால், யார் அனுமதி பெற்றிருக்கிறாரோ அவர்தான் உரிமையாளர்; அவர் யாரை நியமித்து வண்டியை ஓட்டச் செய்தாலும், அப்படி நியமிக்கப்படுபவர் தவறுகள் செய்தாலும்கூட, உரிமையாளர்தான் பொறுப்பாளி.

As for as the Motor Vehicles Act is Concerned, the permit-holder is liable for the orderly enforcement of rules and regulatious.

இந்தச் சட்டத்தினுடைய நிலைமை இப்படி இருக்கின்ற காரணத்தாலே தான், டிரைவர்கள் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போகிறார்கள் என்பது போன்ற குற்றச்சாட்டுகள் வந்தாலும்கூட அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள இயலவில்லை. இதைப் பற்றிக்கூட லாரி உரிமையாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சில கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன.

இரண்டாவதாக, மொபைல் கோர்ட்டைப் பற்றிச் சொன்னார். மொபைல் கோர்ட்டுகளைப் பொறுத்தவரையில், போக்குவரத்தில் ஏற்படுகின்ற ஒழுங்கு மீறிய செயல்களை உடனடியாகக் கவனித்து, தவறு செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்த வழக்குகளை அப்போதே 'டிஸ்போஸ்' பண்ண வேண்டும் என்ற அடிப்படையில், மொபைல் கோர்ட்டுகள் போடப்பட்டிருக்கின்றன. அப்படி இல்லாமல் அவர்கள் சாதாரண நீதி மன்றங்களுக்குச் சென்று காத்துக் கிடக்கின்ற சூழ்நிலை ஏற்படுமேயானால், நிச்சயமாக அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்குச் சீக்கிரமாகச் செல்வதற்கோ, மேற்கொண்டு ஆகவேண்டிய பணிகளைக் கவனிக்கவோ, முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். அதைத் தவிர்க்கும் வகையில் இந்த மொபைல் கோர்ட்டுகள் நம்முடைய மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

அடுத்து, நம்முடைய சென்னை நகரத்தில் மாமூல் முறை இருக்கிறது என்று சொன்னார்கள். மாமூல் முறை இங்கே இருக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. அப்படிக் கொடுக்கின்ற சூழ்நிலை இருப்பதாக உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கின்ற காரணத்தால், அதைப்பற்றி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சிறு, சிறு சங்கடங்கள் ஏற்படுகின்ற காரணத்தால் "The concept of Mobile Court need not be dispensed with" என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன் வடிவு, பிரிவு வாரியாக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2, 3 அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.



பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/73) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்."

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—
"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1973-ஆம் ஆண்டு, மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/73) நிறைவேற்றப்பட வேண்டும்."

## தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73,

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு 4.50 பி. ப.
வாடகை வண்டிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்." என்று முன் மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவு உண்மையில் ஒரு நல்ல சீர்திருத்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தைப் பொறுத்த வரையில், பல்வேறு சட்டங்களை ஏழைகளின் நல்வாழ்வுக்காக இயற்றி பெருமை தேடிக்கொண்ட மன்றமாகும். அதே வகையில் மேலும் ஒரு நல்ல மனிதத் தன்மையோடு கூடிய ஒரு சட்டத்தை நிறைவேற்றி மேலும் புகழைச் சேர்த்துக் கொள்ளுகின்ற வகையில் இந்த சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. மனிதனை வைத்து மனிதன் ரிக்ஷா மூலம் இழுத்துத் தான் வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற நிலை மனிதனுடைய வறுமையை மட்டும் குறிப்பிடுவதில்லை; மனித சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற இழிவின் சின்னமாகவும் அது இருக்கிறது. ஆகையினால், இந்த இழிவினைத் துடைத்து விடவேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டு, அனைவரும் இன்றைய தினம் இந்த நடவடிக்கையை வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை).

இந்தச் சட்ட முன்வடிவில், கை ரிக்ஷாவை வைத்து இழுப்பதற்கு உள்ள சூழ்நிலையை யார் உருவாக்கினாலும், அவர்களுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை அல்லது 500 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து அவர்களுக்குத் தண்டனையாகத் தரவேண்டும் என்று இந்தச்

* 130 ஆம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு ச. இராமச்சந்திரன்] [1973 டிசம்பர் 3

சட்டத்திருத்தம் வகை செய்கிறது. ஏன் இவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறதென்றால் காலத்தினுடைய கோலமாக இது இன்னும் நம்முடைய தமிழ்நாட்டிலே நிலவி வருகிறது என்பதால் அதைத் தடுப்பதற்காகத்தான். ஆனால், இந்தச் சட்டத்தின் மூலம், இந்தத் தடையின் மூலம், இன்றைய தினம் தமிழ்நாட்டில் யாரும் பாதிக்கப்படமாட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நிதி சேர்த்து அதோடு நல்லெண்ணம் கொண்டவர்களின் பொருள் உதவியையும் நிதியையும் சேர்த்து, கை ரிக்ஷாக்களை ஒழிப்பதன் காரணமாக தங்களுடைய வாழ்க்கையில் பாதிக்கப்படுபவர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்களை ஏற்கனவே வழங்கி விட்டார்கள். ஆகவே, இந்தத் தடையைக் கொண்டுவருவதன் மூலம் கை ரிக்ஷா இழுத்து வாழவேண்டுமென்ற நிலையில் உள்ள ரிக்ஷா தொழிலாளர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அதேபோல், கை ரிக்ஷாக்களைச் சொந்தமாக வைத்து, அதை வாடகைக்கு விட்டு வாழ்ந்தவர்கள் கூட பாதிக்கப்படாமல், அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா லைசென்ஸ் தரப்பட்டு, அவர்களுடைய கை ரிக்ஷாக்களுக்கு நஷ்ட ஈடும் தரப்பட்டு அவர்களும் இன்றைக்கு சைக்கிள் ரிக்ஷா வாங்கி, எந்த வாழ்க்கைக்கு கை ரிக்ஷாக்களை பயன்படுத்தி வந்தார்களோ அதே வாழ்க்கைக்கு உறுதியளிக்கின்ற வகையில் அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷா லைசென்ஸ் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, கை ரிக்ஷா சொந்தக்காரர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அதோடு மட்டும் அல்லாமல், மாநகராட்சியில் மாநகராட்சி ஊழியர்கள் கை ரிக்ஷாக்களைப் பயன்படுத்தி வந்தார்கள். அவர்களுக்கும், கை ரிக்ஷாக்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற அடிப்படையில் அந்த கை ரிக்ஷா ஒன்றுக்கு 200 ரூபாய் நஷ்ட ஈடும், 250 ரூபாய் முதல்வர் நிதியிலிருந்து மானியமாகவும், ரூபாய் 500 மாநகராட்சியிலிருந்து கடனாகவும், ஆக ரூபாய் 950 ஒரு மொத்தத்தில் வருகின்ற தொகையின் அடிப்படையில் ஒவ்வொருவருக்கும் சைக்கிள் ரிக்ஷா வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் தடைச் சட்டம் கொண்டு வருவதன் மூலம் கை ரிக்ஷாவை வைத்துப் பிழைக்கின்றவர்களும், அதை இழுக்கின்றவர்களும் நிச்சயமாகப் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம் இனிமேல் யாராவது மீண்டும் கை ரிக்ஷாக்களைக் கொண்டுவந்து ஓட்டுவார்களோ என்ற ஐயப்பாட்டின் அடிப்படையில், அப்படி கொண்டுவந்து விடக்கூடாது என்ற நோக்கத்துடன் தான் இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் இந்தியாவிலே முதன்முதலாக தமிழ்நாட்டிலே தான் நாம் கை ரிக்ஷாக்களை இழுக்கின்ற முறைக்கு தடை கொண்டு வந்திருக்கிறோம் என்ற வகையில், மேலும் நாம் ஒரு முதல் தரமான மாநிலம் என்பதை எடுத்துக் காட்டுவதற்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக இருக்கின்றது. ஆகையினாலே, இந்த மன்றத்திலுள்ள அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் இதை ஏகமனதாக வரவேற்று நிறைவேற்றித் தருவதன் மூலம் மேலும் பெருமை சேர்ப்பார்கள் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—



1973 டிசம்பர் 3] [மேலவைத் துணைத் தலைவர்]

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, வாடகை வண்டிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். "

THIRU A. P. JANARDHANAM : Hon. Deputy Chairman, Sir, I was pleasantly surprised and I welcome the reference made by our Transport Minister in the other House that the last remaining two rickshas would be sent to the Museum. Generations to come will find that such obnoxious things have been completelygiven up by our regime. The Chief Minister who has not a degree, having risen from humble origin,has very rightly ear-marked his birth-days for the alleviation of the sufferings of the poor and the downtrodden.

THIRU G. VASANTHA PAI : On a point of clarification, Sir. The Hon. the Chief Minister is a Doctor, Sir.

THIRU A. P. JANARDHANAM : Yes, Sir. Reading a book about China, I was very much struck by the statement that they observed the days when they were very much downtrodden during the pre-liberation days and when they had to eat wasps and take roots and herbs. Every year now in China, there is a meal prepared by old men, namely, the meal of barks, roots, and other things, made into a soup, and given to children. Wherever you go in China, there are huge boards displayed for children to see and understand : " Here we were suffering during the pre-liberation days. Now you do not suffer." In that way, they are given two pictures, one dismal picture of what tribulations they underwent and the other happy picture as to how they came to enjoy so many things. So also, I suggest that in the newly created fine houses built in the place of slums, photographs may be displayed to show the squalor the people were living in and also the fine place they have now come to. So also, in all hospitals where the blind are treated, pictures may be displayed to show how their sufferings were brought to an end. This Government are doing wonderful things and the Chief Minister, having had the experience of poverty to the marrow of his bones, is naturally concerned with the poor and the downtrodden. I am glad the Hon. the Chief Minister and his young and dynamic colleague the Transport Minister have brought this measure Every year we can look forward to such measures being brought by the enlightened administrators. Thank you.

* புலவர் ஓ. அறிவுடை நம்பி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கொண்டுவந்திருக்கின்ற கை வண்டி இழுக்கக்கூடிய தடைச் சட்டத்தை வரவேற்று, நானும் பாராட்டி சில பல வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

[புலவர் ஓ. அறிவுடைநம்பி] [1973 டிசம்பர் 3

உழைப்போரிடம் கத்தி நீட்டுவதும், பெரும்பொருள் செல்வர்களுக்கே நலன் கூட்டுவதுமாகவிருந்த ஒரு பழையச் சமுதாயத்தினுடைய பழக்கத்தை மாற்றியமைத்து, இன்றைய தினம் சமுதாயத்தில் ஏழைகளாய், பொட்டுப்பூச்சிகளாய், புன்மைத் தேரைகளாய் வாழ்கின்ற மனிதர்களை, மனிதரில் நீயும் ஓர் மனிதன், மண்ணன்று! இமைதிற எழுந்து, நன்றாய் எண்ணுவாய் தோளை உயர்த்து, சுடர் முகம் தூக்கு மீசையை முறுக்கி மேலேற்று! விழித்த விழியினில் மேதினிக்கு ஒளிசெய், நகைப்பை முழக்கு, நடத்து உலகத்தை, இது உனது சொத்து என்று அறிவித்த அரசுதான் தமிழக அரசாகும்!—திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையாகும்.

மனிதனை வைத்து மனிதன் இழுப்பதோ மடமை, உடைமைபொது செய்யக்கூடிய இந்த நாளில் இது முறையோ என்று கேட்டு, கலைஞர் அவர்கள் கொண்டு வந்தது தான் இந்த மாபெரும் திட்டமாகும்! முதல்வர் அவர்கள் தன்னுடைய நாள்மங்கல விழாவின்போது எல்லாம், புகழ் பூக்கின்ற பொன்னேடு ஒவ்வொன்றை தன்னுடைய வாழ்க்கையிலே நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் ஒன்று கை வண்டி ஒழிப்பு என்று இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொன்னால், அதனை எதிர்க்கட்சியில் இருக்கின்ற அத்தனை பேரும் வரவேற்பர் என்று நம்புகிறேன்.

ஒரு சிலர் இது ஒரு பெரிய காரியமா என்று எந்த ஒரு சாதனையைச் செய்கின்ற நேரத்திலேயும் கேட்கின்றார்கள். அவர்களுக்கு நான் சொல்லுவேன். அறிஞன் 'காதே' சொன்னான்: "செயல் பெரிதோ, சிறிதோ, தன்னால் செய்யக்கூடியவற்றை சலிப்பின்றி செய்பவர்கள் இருக்கின்றார்களே, அவர்கள் போற்றுதற்குரியவர்" என்று. அந்தக் கருத்தை நான் இங்கே எடுத்துச் சொல்வது நலம் என்று கருதுகின்றேன். பாரதி கண்ணனை பல்வேறு வடிவத்திலே கண்டான், தாயாகக் கண்டான் தந்தையாகக் கண்டான், சேவகனாகக் கண்டான். அப்படி தந்தையாக காணுகின்ற நேரத்தில் ஓரிடத்தில்

5.00 "ஏழைகளைத் தோழமை கொள்வான்,
பி.ப. செல்வம் ஏறியவர் தமைக் கண்டு சீறி விழுவான்"

என்று சொன்னான். அதுபோல ஏழைகளைத் தோழமையாகக் கொள்ளக் கூடிய முதல்வர் அவர்களை நாம் இன்றையதினம் பெற்றிருக்கின்றோம். இன்னொன்றை நான் இங்கே சுட்டிக் காட்டுவது நல்லது என்று சொல்லிக் கொள்கின்றேன். சமதர்மம் மலர வேண்டிய நிலையாக இன்றைய உலகம் அமைந்திருக்கின்றது.

'எப்பதம் வாய்த்திடுமேனும் நம்மில்
யாவர்க்கு இந்த நிலை பொதுவாகும்
முப்பது கோடியும் வாழ்வோம், வீழின்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்"



1973 டிசம்பர் 3] [புலவர் ஓ. அறிவுடைநம்பி]

என்று பாடினான் பாரதி. அந்த விதத்தில் இன்றைய தினம் ஆதி திராவிட சமுதாயத்தில் 90 விழுக்காட்டிற்குட்பட்டவர்களை தாழ்த்தக்கூடிய ஒரு செயலாக, தாழ்த்தப்பட்டோர் இனமே ஒடுக்கப்படக்கூடிய ஒரு செயலாக இந்த கை ரிக்ஷா இழுக்கும் நிலை இருந்தது. அது நாட்டின் அவமானச் சின்னமாகத் திகழ்ந்தது. அதை மாற்றிய பெருமை நம்முடைய தமிழக அரசையே சாரும் என்று நான் சொல்லி பெருமை கொள்ள ஆசைப்படுகின்றேன். குறிப்பாக நான் சொல்வேன், நாளெல்லாம் ஒரு சாதனை செய்துகொண்டு வரக்கூடிய ஒரு நல்ல அரசாக இந்த அரசு திகழ்கின்றது. கடந்த வாரத்திலே நான் பார்த்தேன். மாணவர்கள் ஆத்திர மிகுதியால் துண்டறிக்கைகளை சட்டப் பேரவையிலே எடுத்து வீசிய நேரத்திலே நம்முடைய முதல்வர் அவர்கள் அதை அந்த இடத்திலேயே மன்னிக்கக்கூடிய அளவுக்கு மன வளர்ச்சி பெற்றவராக இருக்கின்றார்கள். அவர் நாளும் செய்கின்ற சாதனைகளையெல்லாம் பாராட்டிப் புகழ்கின்றோம். அந்தப் பாராட்டுகளெல்லாம் நம்மைப் பாராட்டிக் கொள்வதற்குச் சமமாக இருக்கின்றதே தவிர, அந்த முதல்வர் அவர்களைப் பாராட்டிக் கொள்வதற்கு சமமாக இருக்கின்றதா என்று நான் எண்ணுகின்றேன்.

நேற்றைய தினம் உறக்கம் வராத நிலையில் புத்தகம் ஒன்றினைப் புரட்டினேன். ஒரு "வைர அடி" வந்தது. அதை இங்கே சொல்லலாம் என்று நினைக்கின்றேன். திரு அருட்பாவிலே ஓரிடத்தில் வள்ளலார்

"பழுத்த மரம் வளையாத கணக்கும் உண்டோ" என்று பாடியிருக்கின்றார். "பழுத்த மரம் வளையாத கணக்கும் உண்டோ" என்பதை நினைத்துப் பார்க்கின்றபோது, நாமே முதல்வரைப் பாராட்டுவது நம்மையே பாராட்டுவதாக இருக்கிறது. அவர் பழுத்த மரம் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இவ்வளவு துணிவோடு பல நல்ல காரியங்களைச் செய்து கொண்டு வரக்கூடியவர் நம்முடைய முதல்வர் அவர்கள் போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். கை ரிக்ஷா இழுத்தவர்கள் இன்றைய தினம் பாறை வண்டியை இழுத்துக் கொண்டு போகின்றார்கள். அது கொடுமையாக இருக்கின்றது. அந்தப் பாறை வண்டியை நிறுத்தக்கூடிய அளவுக்கு ஏதேனும் தடைச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். அதே நேரத்தில் சமுதாயத்தில் அவர்களுக்கெல்லாம் மாற்று வேலையைச் செய்யக்கூடிய ஒரு திட்டத்தை வழங்குதல் வேண்டும். காலப்போக்கில் மனிதன் தன் சக்தியின் மூலமாகவே இந்தக் காரியங்கள் செய்வதிலிருந்து விடுபட்டு பொறிகளின் மூலமாகவே அந்தக் காரியங்களைச் செய்வதற்கான சக்தியை, சாதனங்களைப் பெருக்கிக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். இறுதியாக இவ்வளவும் செய்துகொண்டு வருகின்ற நம்முடைய முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துச் சொல்வதற்கு பலபேர் இருக்கிறார்களா என்று கேட்டால், எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள் நாட்கணக்கை எண்ணிக் கொண்டிருக்கின்றோம்

என்று சொல்லுகின்றார்கள். 1976-ஆம் ஆண்டு வரை இந்த ஆட்சி நீடிக்குமா என்று கேட்கின்றார்கள். எனவே நான் இந்த நேரத்தில் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிலே இருக்கின்ற நல்லவர்களுக்காகச் சொல்வேன், ஒரு இடத்திலே புறநானூற்றிலே ஒரு புலவன் ஒரு வள்ளலைப் பாராட்டுகின்ற நேரத்திலே எடுத்துச் சொன்னான் "யான் வாழ்நாளும் வாழிய பண்ணன்" என்று. அந்த விதத்திலே மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் தமிழ் உணர்ந்தவர்கள், உங்கள் மூலமாக என் வாழ்த்தைச் சொல்லிக்கொள்கின்றேன் முதல்வர் அவர்களுக்கு" யான் வாழ்நாளும் முதல்வர் அவர்கள் வாழ்க" என்று சொல்லி முடிக்கின்றேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கை ரிக்ஷா இழுப்பதைத் தடை செய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கின்றேன். கை ரிக்ஷா இழுக்கும் வழக்கம் நீண்டகாலத்திற்கு முன்பே ஒழிக்கப்பட்டிருக்க வேண்டிய ஒன்றாகும். அது 50 ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும். இதுவரை ரிக்ஷா இழுத்துக்கொண்டு மனிதர்கள் தமிழகத்தில் இருந்து வந்தது தமிழகம் செய்த துரதிர்ஷ்டம் என்றே சொல்வேன். நமது அன்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய ஒவ்வொரு பிறந்த தின விழாவிலேயும் ஒரு புதிய திட்டம் கொண்டு வரும் முகத்தான், மூன்றாவது திட்டமாக கை ரிக்ஷா இழுப்பதைத் தடை செய்யும் நோக்கத்துடன் இனிமேல் கையால் ரிக்ஷா இழுக்காத வகையில் தடைச் சட்டமே கொண்டு வந்திருக்கின்றார்கள். கை ரிக்ஷா இழுப்பதற்குத் தடை போட்டு அவர்களை வீதியிலே விட்டுவிடாமல் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வழி செய்தது மிகவும் பாராட்டுதலுக்குரிய ஒரு அம்சம். மனிதனை மனிதன் இழுப்பது காட்டுமிராண்டித்தனமான ஒரு அம்சம் என்றுதான் சொல்வேன். இங்கே கை ரிக்ஷா ஒழிப்புச் சட்டம் பற்றிப் பேசும்போது ஒரு 30 ஆண்டுகளுக்கு முன் ஒரு பெரியவர் சொன்ன சம்பவம் நினைவுக்கு வருகிறது. முத்தமிழ் காவலர் திரு. கி.ஆ.பெ. விஸ்வநாதம் அவர்களை அறியாதவர் யாரும் இந்தச் சபையில் இருக்கமாட்டார்கள். அவர் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு சமயத்தில் சொன்னார்கள். "சென்னைக்குப் போகும்போதெல்லாம், கை ரிக்ஷாவைப் பார்த்தால், இதிலே உட்காரும் மனிதன் எந்த இதயத்துடன் உட்காருகிறானோ ? மனிதனை மனிதன் இழுக்கும்போது மனம் ஒப்பி உட்காருகின்றார்களே என்று எண்ணியிருந்தேன். கை ரிக்ஷாவில் உட்காரக்கூடாது என்பதைக் கொள்கையாகக் கொண்டிருந்தேன். ஆனால் ஒரு நாள் எக்மோர் ஸ்டேஷனில் இறங்கி குதிரை வண்டியை நோக்கிப் போகும்போது ஒரு கை ரிக்ஷாக்காரன் அழைத்தான். என் கொள்கைப்படி ரிக்ஷாவில் உட்காரமாட்டேன் என்று குதிரை வண்டிக்குப் போனேன். "வாயில்லாப் பிராணி அக்குதிரைக்கு வாழ்வு கிடைக்கும்போது வாயுள்ள மனிதன் பட்டினியால் சாகவேண்டுமா என்றான்" என்றார். அதிலிருந்து ரிக்ஷாவில் போனால் மனிதருக்கு உதவி செய்யக்கூடிய நிலையிருக்கக்கூடும் என்று தன் கொள்கையை மாற்றிக் கொண்டதாக அவர் சொன்னார். அத்தகைய பரிதாபகரமான மனிதன் நிலையை மாற்றி ஒரு நல்ல நிலையை உருவாக்க தமிழக அரசு மேற்கொண்டதற்கு பாராட்டு தெரிவித்து இந்தச் சட்ட முன்வடிவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து அமர்கின்றேன். வணக்கம்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை இம்மன்றத்திலுள்ள அனைவரும் வரவேற்று இருக்கின்றார்கள். இங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. அறிவுடைநம்பி அவர்கள் பேசுகிறபோது, எப்படி கைரிக்ஷாக்கள் இன்றைய தினம் ஒழிக்கப்பட்டிருக்கின்றனவோ, அதே போல் சுமை வைத்து இழுக்கின்ற கை வண்டிகளையும் மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். மனிதன் செய்ய வேண்டிய தொழில்கள் என்று வரையறை செய்யக்கூடிய சில தொழில்கள் வரக்கூடாது என்ற அடிப்படையிலே, இத்தகைய தொழில்களெல்லாம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் விரும்பி, தனது பிறந்தநாளில் இத்தகைய பெரும்பணிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். சான்றாக பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்துவது, மனிதனை உட்கார வைத்து இன்னொரு மனிதன் இழுத்துச் சென்று வாழ்க்கை நடத்துவது, மலத்தைச் சுமந்து மனிதன் தன்னுடைய வாழ்க்கையை நடத்துவது, வெயில் என்றும் மழை என்றும் பாராமல் வேறு வழியில் வாழ வழியின்றி கை வண்டிகள் இழுப்பதன் மூலமாக தன் வாழ்க்கையை நடத்துவது இது போன்று மனிதர்கள் செய்து வருகின்ற தொழில்களெல்லாம் தமிழகத்திலேயிருந்து அகற்றப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் செயலிலே ஈடுபட்டு வருகின்றோம். அடிமையிலும் மிதிக்கப்பட்டிருக்கின்ற, இழிவான தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான், தனது பிறந்த நாளையொட்டி இந்த நல்ல திட்டங்களையெல்லாம் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிக்கொண்டு வருகின்றார்கள். அந்த வரிசையில், நிச்சயமாக வருகின்ற ஆண்டுகளில நமது முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாக்கள் பெருகும் வாய்ப்பு காரணமாக, அவர்களுக்கெல்லாம், அத்தகைய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

5—பி.

முஸ்லீம் லீக் கட்சியினைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மையிலே மிக உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். "வாயற்ற பிராணிகளுக்குக்கூட வாழ்வினை அளிக்கும் சூழ்நிலை இருக்கும்போது, ஆறறிவு படைத்த மனிதனுக்கு வாழ்வினை அளிக்க முடியாத நிலைமை இருக்கின்றதை" எண்ணி தமிழ்ப் பேராசிரியர், பெரியவர் ஒருவர் தமது கொள்கையையே மாற்றிக்கொண்டது பற்றி உருக்கமாக அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அப்படிப்பட்ட பெரியவர்களுடைய வருத்தத்தினையெல்லாம் தீர்த்திடும் வகையில் இன்று நாம் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகின்றோம் என்றால், அப்பணிகள் பாராட்டுக்குரியவையாகும். எனவே தான் நான் துவக்க உரையிலேயே குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட பணிகளையெல்லாம் முறையாக மேற்கொண்டு செயற்படுத்தி வருவதற்கான வாய்ப்பினை உருவாக்கித்தந்த நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

இந்த மறுவாழ்வு நிதிகள் கூட அரசு நிதியிலிருந்து செலவழிக்கப்படவில்லை. நமது மாண்புமிகு முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழாவினையொட்டி, திரட்டிய நிதியிலிருந்து கிட்டத்தட்ட ரூ. 25,82,340.79 கொடுக்கப்பட்டது. இதிலே இந்த கை ரிக்ஷா இழுப்பவர்களுடைய மறுவாழ்விற்கு எனவும், கை ரிக்ஷாக்களை வைத்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்கு நஷ்ட ஈடாகத் தருவதற்கும் இதில் மாநகராட்சியிலே பணிபுரிந்தவர்களுக்கு ரூ. 250 மானியமாகவும் ஆக மொத்தம் ரூ. 12,97,208.00 கொடுத்திருக்கிறோம். மிச்சம், ஆக ரூ. 12,85,132.79 இருக்கின்றது. இன்னும் இது போன்று வாழ்வின்றி வறுமையில் உழன்று கொண்டிருப்பவர்களுக்கு மறு வாழ்வு அளிக்கப்படவில்லை என்றால், மீண்டும் அவர்கள் கை ரிக்ஷாக்களை இழுப்பதற்குப் போய்விடுவார்களோ என்ற சூழ்நிலை இருப்பதால், அவர்களுக்கு மறு வாழ்வு அளித்திட வேண்டும், வேலை வாய்ப்புகளை அளித்திட வேண்டும் என்ற முறையில், இப்படி மிச்சமுள்ள நமது முதலமைச்சர் அவர்களுடைய இந்த நிதியிலிருந்து "ஆயிரம் நாள் திட்டம்" என்ற ஒரு புதிய திட்டத்தின் அடிப்படையிலே மேலும் 1500 பேருக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை இப்போது வழங்குவது என்றும் அவர்கள் நாள்தோறும் தங்கள் உழைப்பிலிருந்து நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு ஆயிரம் நாட்கள் செலுத்துவார்களானால், இறுதியில் இந்த சைக்கிள் ரிக்ஷாக்கள் அவர்களுக்கே சொந்தமாகி விடும் என்ற திட்டத்தினையும் உருவாக்க இருக்கின்றோம்.

இப்படி அந்த வண்டிகள் அவர்களுக்கே சொந்தமாகி விடுமானால், உண்மையிலேயே இப்படி மிகவும் வறுமையில் வாடி அவதியுறும் ஏழை மக்கள் புதியதொரு வாழ்வினைப் பெறுவர் என்ற கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் பேரிலே நாங்கள் இந்த ஒரு திட்டத்தினைத் தயாரித்து வருகின்றோம். கூடிய சீக்கிரத்திலே அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட இருக்கின்றன. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் "வறுமை ஒழிய வேண்டும்" என்று பலரும் பேசும் இக்காலத்தில், வறுமையால் சமுதாயத்தில் பல கொடுமைகள் நடைபெறுகின்றன, எனவே, "வறுமை ஒழிக்கப்படவேண்டும்" என்று வெறும் கோஷங்களை மட்டும் எழுப்பிக் கொண்டு, ஆனால் அதே நேரத்தில் அதற்காக முறையாக ஏதொன்றும் செய்யாதிருக்கும் இந்தக் காலத்தில், அவர்கள்பால் மனமார வருத்தப்பட்டு, அவர்களுக்கு நல் வாழ்வளிக்க வேண்டும் என்றும் முறையாக, அதே நேரத்தில் திறமையாகத் திட்டமிட்டு பேச்சுக்களில் மட்டுமல்லாமல் அதைச் செயல்படுத்தும் தமிழக அரசையும் அதை நடத்திச் செல்லும் நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களையும் பெரிதும் பாராட்டி, அவர்களுக்கு நன்றி செலுத்தி, இப்படிப்பட்ட பணிகளை மேலும் மேலும் ஊக்குவிப்பதற்கு இம்மாமன்றம் பெரிதும் கடமைப்பட்டு இருக்கின்றது என்ற அளவில் இம்மாமன்றத்தின் சார்பிலே அவர்களுக்கு நன்றி தெரிவித்து, இந்தச் சட்டத்திருத்தத்தினை நமது மாமன்றத்திலுள்ள அனைவருமே வரவேற்றிருப்பதால், இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/73) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/73) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ம் ஆண்டு, வாடகை வண்டிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண். 34/73) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8. மேலவை விதி 82-ன் கீழ் அறிக்கை.

அரசு ஊழியர்கள் குடும்ப நல நிதித் திட்டம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்ட மேலவை விதி 82-ன் கீழ் ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாநில அரசு ஊழியர்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு செயற்படுத்தி வருகின்றது என்பதை இந்த அவை அறியும். பணியிலிருந்து ஓய்வு பெறும்போது அல்லது பணியாளர் இறந்துவிடுங்கால், உதவி அளிக்க வேண்டிய அவசியம் குறித்தும் சில செயற்குறிப்புகள் அரசின் ஆய்வில் இருந்து வந்துள்ளன. அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்றை அரசு செயலுக்குக் கொண்டு வரவேண்டுமென, அரசிதழ் பதிவில்லாத அரசு ஊழியர்களின் சங்கமும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. அரசு ஊழியர்கள் குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் கட்டி, பணியிலிருக்கும்போதே, அரசு ஊழியர் இறந்து விட்டால், அவருடைய குடும்பத்திற்கு இந்த உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும் என்றும், அல்லது அரசு ஊழியர் ஓய்வு பெறும்போது இத்தொகை அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஊழியர்கள் சங்கம் கோரியுள்ளது. இக்கருத்துக்களை மனதில் கொண்டு அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளது.

திட்டத்தின் விவரங்கள் வருமாறு.

இப்புதிய திட்டம் "தமிழ்நாடு அரசு ஊழியர்கள் குடும்ப நல நிதித் திட்டம்" எனப் பெயர் பெறும். இத்திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்கள் அனைவரும் ஒவ்வொரு மாதமும் ரூ. 10 செலுத்த வேண்டும். இத் தொகை அவர்கள் மாதச் சம்பளப் பட்டியலில் இருந்து பிடித்துக் கொள்ளப்படும். இத்திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டபின், பணியில் இருக்கையில் ஊழியர் ஒருவர் இறந்து விட்டால் அவர் ஆற்றிய பணிக்கால அளவு எவ்வளவாக இருந்தபோதிலும் அவரது குடும்பத் திற்கு ரூ. 10,000 கொடுக்கப்படும். தொகை செலுத்தும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது அல்லது அவர்கள் பணியிலிருந்து விலகிச்



செல்லும்போது அவர்களுக்கு இந்நிதியிலிருந்து அவர்கள் செலுத்தி உள்ள தொகை அதற்கேற்ப அரசு செலுத்தும் தொகை (காண்ட்ரிப்யூஷன்) ஆகியவை அவர்களுக்குக் கொடுக்கப்படும். எடுத்துக் காட்டாக, இத்திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு பத்து ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர் ஒருவர் இந்த நிதிக்கு ரூ. 1,200 செலுத்தியிருப்பார். அரசு அளிக்கும் தொகை உட்பட அவர் மொத்தம் ரூ. 1,600 பெறுவார். அதேபோல, இருபது ஆண்டுகள் கழித்து பணியிலிருந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர் மொத்தம் ரூ. 4,000 பெறுவார். இதில் அவர் செலுத்திய தொகை ரூ. 2,400 அரசு அளிக்கும் தொகை ரூ. 1,600. முப்பது ஆண்டுகள் கழித்துப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர் ரூ, 7,200 பெறுவார். இதில் அவர் செலுத்தும் தொகை ரூ, 3,600. அரசு செலுத்தும் தொகை ரூ. 3,600. அரசு ஊழியர்களுக்கு கணிசமான அளவு நன்மை பயக்கும் இத்திட்டத்தினை இம்மன்றம் வரவேற்குமென நான் நம்புகிறேன். இத்திட்டம் 1974 ஜனவரி முதல் செயலுக்குக் கொண்டு வரப்படும்.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் திட்டத்தினை வரவேற்கிறேன். அரசு ஊழியர்களுக்கு என கொண்டுவரப்பட்டுள்ள இந்த அருமையான திட்டம் ஆசிரியப்பெருமக்களுக்கும் உண்டா என்று, காலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதை அறிவித்த நேரத்தில், பலருக்கும் இதுபற்றிச் சந்தேகம் ஏற்பட்டது. எனவே ஆசிரியப் பெருமக்களுக்கும் இத்திட்டம் உண்டா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து ஆசிரியர்கள் சமுதாயத்திற்கு அப்படிப்பட்ட மகிழ்ச்சி தரத்தக்க அறிவிப்பினைச் செய்து அவர்களை வாழ்விக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசு ஊழியர்கள் என்றால், ஆசிரியர்களும் அடங்க வேண்டும்.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசு ஊழியர்கள் என்று சொல்லும்போது, தனியார் பள்ளி ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாகக் கருதப்படுவதில்லை. எனவே, இதை விளக்கமாக அறிவித்து, கல்வித்துறையிலிருந்து அரசு ஆணை வரும்போது "ஆசிரியர்களுக்குத் தனியாக வரும்" என்று போடப்படுவதால் ஆசிரியர்களுக்கு இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகம் அடிக்கடி ஏற்படுகிறது. ஆகவே இதை நிவர்த்தி செய்ததற்காக மீண்டும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை]

7. அரசின் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

3) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/73).

*மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே. "சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு,

நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1973) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

பி. ப, 5—20 இந்தத் திருத்தச் சட்டத்தைப் பற்றிய [illegible] விளக்கத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை பெருநகர் சீரமைப்புக்காக 1971–1991 கால அளவிற்கு வரையப்பட்டுள்ள சென்னைப் பெருநகர்ப் பகுதியின் [illegible] மேம்பாட்டுக்கான நீண்ட காலத் திட்டம் பற்றி [illegible] போக்குவரத்து, செய்தித் தொடர்பு, [illegible] மற்றும் கல்வி வசதி ஆகிய [illegible] சமூக வசதிகள் உருவாகுமாறு [illegible] பெருநகர் பகுதியில் விரைவான [illegible] தேவைகளின் இடைவெளியை நிறைவு செய்வது [illegible] நோக்கமாகும். பெருநகர் சீரமைப்பு [illegible] நிலையில் சுமத்தப்பட்ட பெரும் தேவைகளை, நிர்வாக [illegible] வசதியிலும் ஒருங்கிணைக்கும் அதிகாரத்துடன் [illegible] பிறல், தேவைகள் நிறைவேறி மக்களுக்கு மன நிறைவளிக்கும் வகையில் முழு அளவில் திட்டமிட்டு நிறைவேற்ற [illegible] வகை [illegible] பல்வேறு நிருவாக அமைப்புக்களின் [illegible] ஒருங்கிணைப்பதன் மூலம் "திட்டத்தின்" நோக்கங்களை [illegible] செம்மையாகவும் நிறைவேற்றவியலும். [illegible] நோக்கமாகக் கொண்டு அரசு, "சென்னைப் பெருநகர் சீரமைப்புப் பணி மன்றம்" என்றதோர் அதிகார மன்றம் ஒன்றினை அமைத்துள்ளது. [illegible] அதிகார மன்றத்திடம் மற்றப் பணிகளுடன் சென்னைப் பெருநகர் திட்டப் பகுதிக்கான வளர்ச்சித் திட்டங்கள் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ தயாரிக்கும் பணியும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் கீழ் [illegible] வளர்ச்சித் திட்டங்களில் வகை செய்யப்பட்டுள்ள பொருள்கள் யாவற்றிற்கும் அல்லது அவற்றில் எதற்கேனும் வகை செய்யப்படும்.

இதையே வேறு வகையாகச் சொன்னால் சென்னை பெருநகர் சீரமைப்பு மன்றம் சென்னை பெருநகர் திட்டப் பகுதிக்கு திட்ட அதிகார மன்றமாக தனிப்பட்ட முறையில் உரிமையோடு செயல்படும். இது தொடர்பாக சில காலத்திற்கு முன்னர் இச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட 1971-ம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்பு சட்டத்தைப் உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்னை பெருநகர்ப் பகுதி தவிர மாநிலம் முழுவதிலும் 1973-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் தேதியிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ள மேற்படி சட்டம் மாநிலத்திலுள்ள கிராமப்புற, நகர்ப்புற நிலங்களில் மேம்பாடு, பயன் ஆகியவற்றைத் திட்டமிடுவதற்கு வகைசெய்கையில், மேற்குறிப்பிட்ட திட்டமுள்ள அதிகார மன்றங்களின் அதிகார வரம்பின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ள வட்டார திட்டப் பகுதிகள், உள்ளூர் திட்டப் பகுதிகள், புதிய நகர்ப் பகுதிகள் ஆகியவற்றின் வளர்ச்சியைத் திட்டமிடுவதற்காக முறையே வட்டார வளர்ச்சி அதிகார மன்றம், உள்ளூர் வளர்ச்சித் திட்ட அதிகார மன்றம்,

@ 131-132ஆம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



புதிய நகர் வளர்ச்சித் திட்ட அதிகார மன்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு வகை செய்கிறது. இவ்வாறாக மாநிலத்திலுள்ள நிலங்களின் மேம்பாடு, பயன் ஆகியவற்றுக்காக, சட்டப்படிக்கான 3 அதிகார மன்றங்கள் வெவ்வேறு அளவிலும், மட்டத்திலும் ஏற்படுத்தப்பட்டிருக்கையில் சென்னைப் பெரு நகர் திட்டப் பகுதி சம்பந்தப்பட்ட வரையில் இதேபோன்று செயல் நோக்கங்கொண்ட சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் தனிப்பட்ட அடிப்படையில் மட்டுமே செயல்படுகிறது. மேற்படி சட்டத்தைப் பொருத்தமான வகையில் திருத்துவதன் மூலம் மேற்படி சென்னை பெருநகர் வளர்ச்சி திட்ட அதிகார மன்றத்திற்கு, சட்டப்படிக்கான ஒரு நிலையை வழங்க வேண்டியது அவசியமெனக் கருதப்படுகிறது.

மேலும் பொதுப் பணியைக் கவனிக்கிற பொதுப் பணித்துறையின் செயலாளரை தமிழ்நாடு நகர-நாட்டுப்புற அமைப்பு வாரியத்தின் உறுப்பினராக நியமிப்பதற்கு வகை செய்து மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவைத் திருத்தவும், மேலும் வட்டார வளர்ச்சி திட்டப் பகுதிகள், உள்ளூர் வளர்ச்சி திட்டப் பகுதிகள் ஆகியவற்றை அறிவிப்பதில் சரியான வழிமுறைகளை வகுக்க மேற்படி சட்டத்தின் 10-வது பிரிவைத் திருத்தவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது விரும்பத்தக்கது என்றும் கருதப்படுகிறது.

[illegible] அதிகாரங்களைப் போலவே [illegible] அதிகாரங்களை [illegible] அதிகாரமளிப்பதற்கான [illegible] ஏற்படுத்தக் கருதப்படுகிறது. [illegible] தேவையான [illegible] திருத்தம் இச்சட்ட முன்வடிவில் கொண்டுவரப்படுகிறது.

எனவே, இம்மாமன்றம் இதனை [illegible] ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 31/1973) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* THIRU A. R. DAMODARAN: Hon. Chairman, Sir, this is an enabling Bill which visualises the formation of the Madras Metropolitan Development Authority and some of the functions of the Development Authority have been mentioned in the proposed section 9-C of the Bill that has been introduced by the Hon. Minister. Firstly, I would like to speak about the composition of the Metropolitan Authority. It has been stated that it shall consist of 12 persons appointed by the Government, of whom one shall be the Chairman, one shall be the Vice-Chairman, six shall be officers of the Government, two shall be Members of the State Legislature, one shall represent trade and industry and one hall be the member-Secretary, in addition to the other ex-officio

members like the Chairman of the Tamil Nadu State Housing Board, the Tamil Nadu Slum Clearance Board, etc. I wish to state that it might be useful if the Government could also think of having representatives from among the Town Planners and Architects on the Metropolitan Authority. It does not seem to be visualised here. They have stated that they would only take one representative from trade and industry. It would be helpful if they could recruit one or two Town Planners and Architects who are interested in such development projects, because they can be in a position to advise the Madras Metropolitan Authority on various developments that have taken place in other parts of the world. Perhaps they would have practical experience and knowledge and it might be useful if such persons are also included in the composition of the Metropolitan Development Authority.

The other point here is that if there are two or more local authorities functioning in the Metropolitan Planning area, such persons not exceeding four in number may be appointed by the Government who are members of such local authorities. Now, Sir, I do not know and I cannot see from the Bill what would be the area of the Metropolitan Development Authority. Probably the Government may fix it at a later stage. It may even be 15 miles, having the centre in Madras City or perhaps it may be 20 miles, and new satellite towns that are being planned may be brought into this. I would like to state that in choosing representatives of the local authorities, it may perhaps be more in the fitness of things if the Mayor of Madras Corporation and the Presidents of the respective Panchayats or the Chairmen of the Municipalities or the local authorities which are involved, are chosen instead of selecting any particular member of such local bodies. It may be better to choose the President or the Chairman or the Mayor, because then the decisions of the Metropolitan Authority would be translated into action and it might help the Metropolitan Authority itself in carrying out many of its objectives.

Sir, mention has been made about the functions of the Metropolitan Authority and they seem to be purely of a planning character. I am not able to visualise as yet what powers will be given to the Metropolitan Planning Authority to enforce its decisions. That has not been made clear in the Bill and all that has been stated here is that it will be in charge of planning and the preparation of comprehensive development plans which they expect the Madras Corporation and the local authorities to carry out. Sir, our experience of Corporation and local authorities is not very encouraging as far as town planning work is concerned. I have faced these problems in my own Municipality, Cuddalore, where almost 14 or 15 years ago, the Director of Town Planning was good enough to prepare certain schemes. These were placed before the Council and they were adopted. But, unfortunately, in seeing that the plan was executed according to the scheme that



was prepared by the Director of Town Planning, very little authority could be exercised by the Director of Town Planning, with the result that local bodies allowed non-residential buildings to be put up in residential areas and residential buildings in non-residential areas, creating absolute chaos in the town planning field.

I hope, Sir, that such a conflict of interest will not arise and the Madras Metropolitan Authority which has very important functions, will not find itself frustrated because the local bodies do not give that amount of co-operation which one would normally expect. I hope that is a problem which the Government will look into and if more powers are required for the Metropolitan Authority to enforce its decisions regarding the new areas that have been demarcated by the preparation of residential and non-residential areas development of parks, playgrounds, etc., sufficient authority should be given to the development authority by the Government.

Sir, the problems in the metropolitan area are so vast nowadays that unless we move energetically in the matter, we will be facing absolute chaos in the very near future. We know the problems of our metropolitan areas especially of cities like Calcutta where the entire development of the State can be hampered because of the confusion that arises out of the lopsided or ill-considered development of the bigger metropolitan area. To my knowledge, Sir, the only town which has developed along fairly decent and well-imagined lines is the City of Delhi.

THIRU K. RAJARAM : New Delhi.

THIRU A. R. DAMODARAN : The Delhi Development Authority are dealing both with New Delhi and Old Delhi because the differenciation of Old Delhi and New Delhi no longer exists. Perhaps 25 years ago, the Purana Kila, the Red Fort side wouldbe Old Delhi and the line on this side would be New Delhi. The new City of Delhi has grown to such an extent that we cannot recognise it. The Delhi Development Authority is in charge of the entire zoning of the City, planning of the roads, demarcation of residential and non-residential areas, etc. It is a Herculean task as far as the Madras City is concerned and I do not know how we are going to get rid of the over-crowded and virtually slum areas in Chintadripet or George Town. Seven or eight families will be living in small tenements in extraordinarily difficult circumstances. If the town planning authorities are going to prepare new plans, it may mean that some of the older buildings will have to be completely demolished and as far as I can see from this Bill, no mention has been made of the financial implications of re-zoning or re-planning certain crowded areas in the City. After pulling down old buildings, we have to make up our mind to see that sufficient funds are available to the owners of

the buildings demolished, to construct new buildings in keeping with the plans that are prepared by the Metropolitan Authority. The Government will so bear this in mind, and instead of merely preparing a Master-Plan and saying that a particular portion of the town should be demolished within a particular date or that the owner of a building will not be allowed to use the building either for residential or non-residential purposes it is necessary for us to find the finance required and I hope that the Government will be able to get such authorities as the L.I.C. and other statutory financial bodies to help the Metropolitan Authority to carry out its ideas in this regard.

Sir, in the City of Madras we have recently seen how one small over-bridge or sky-way, or whatever it is called, near Gemini has been able to solve a great deal of traffic problems. There are a number of such crowded areas in our City and I hope, Sir, the Metropolitan Authority will also bear in mind that not only have we to think in terms of easing the congestion on the roads as at present constituted, but we have to think in terms of having a circular roadway or circular tubeway on the radial pattern and this would help in organising the great flow of traffic. If we merely try to remove the congestion in Central Station or George Town, you may find in 5 or 6 years the same situation arising in Mambalam. I hope the Metropolitan Authority will bear in mind that in our country, the development of roads the development of transport and the development of civic amenities like parks, play-grounds, schools, libraries in residential and non-residential areas will have to be seriously considered and that is where I anticipated that there would be some difficulty between the Metropolitan Authority and the Corporation of Madras and other local bodies that might be involved in this. I do not know that actually the Government have in their mind or what power they are going to give to these bodies and I hope it will be subtantial so that they may get things done. I know that very able persons are connected with this but they do not have the authority to push through their ideas and this is one of the serious difficulties that may be encountered by the Government in the near future.

Sir, we have been just discussing a Bill where hand-rickshaws are to be eliminated. It is a good decision of the Government of Tamil Nadu. But, at the same rime, the removal of garbage, rubbish and night-soil by our municipalities and even our Corporation is practically awful. Everday, when we drive along the roads, if you happen to be at the rear of the Corporation vehicle—the rubbish is carried and heaped in the vehicle—it invariably leaves a trail of the rubbish on the road as it passes on and I am surprised that such a thing should not be prevented, because you can solve the problem by having a closed type of vehicle, So, even the removal of garbage and rubbish poses a great problem. I only want to mention this, Sir, because this is where the conflict between



63107

the local authority and the Metropolitan Authority may arise and I hope the Government will bear this in mind and see that insuch conflicts they are ready with plans and measures to ensure that both the local bodies as well as the Metropolitan Authority may work in unison and in co-operation and see that the people living in these cities get better deal.

Sir, while we think of Madras City only as a Metropolitan area, I believe, the Government of India have recently, two or three days ago, classified certain towns in the southern parts into A class towns, etc. We must also remember that town planning depends largely on how these new cities develop. In places like Madurai, Tiruchirappalli, Salem and Coimbatore, these are four premier cities, instead of waiting for 10 or 15 years when buildings go up in a haphazard way, we can tackle the problem at this stage by an extension of the Metropolitan Authority or by creation of a new Metropolitan Authority in largely urbanised areas. Madurai has already a population of 4 lakhs or has crossed 4 lakhs, and in another 10 or 15 years these cities are going to be as big as Madras was in 1950 or 1960 and so many buildings will come up in such a haphazard way that it will be very difficult to tackle this problem. Therefore, it would be better to have an authority even now. I hope the Goverument will consider the creation of such authorities in towns having a population of over 2 lakhs and I think there are about only 9 or 10 towns in Tamil Nadu. I hope this aspect will also be looked into and we will have similar bodies constituted in these areas which may work in harmony with the municipalities and corporations. Thank you.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I shall be very short in my speech. I would like to supplement the suggestions made by my hon. Friend, Thiru A. R. Damodaran in his thought-provoking speech as to how the Madras Metropolitan Authority should function in the areas assigned to it.

Sir, I have a feeling that the Madras City has vast potentialities to have a sea-world as well as a bird-sanctuary, a deer-sanctuary, zoo and museum in its campus.

MR. CHAIRMAN : A snake-park too.

THIRU G. VASANTHA PAI : Sir, I am not a prowler by night; so I do not know much about the value of a night-park. But as regards snake-park, it is already there and Mr. Vitekar is in charge of it. I have visited that place very often. But, I feel that these have to be spread

out. For example, I find that the Guindy Deer Sanctuary which was in an excellent condition about three or four years ago has now become a victim of persons who are cutting trees and shrubs and the deer are running to the I.I.T. campus. As a result of this, I find that the sanctuary which was meant to be a sort of "Visitors' Paradise" has ceased to be so and the condition of the roads as well as the condition of the poor deer there is rather pitiable. Referring to the snake-park, about which you mentioned, Sir, it is getting on fine and Mr. Vitekar is taking a large amount of interest in its upkeep. Recently, he has brought some black cobra or black serpent from outside and he is himself air-conditioning the place by putting 'thatties' and watering them. But, Sir, all these things have a knack of getting congested in one and the same place. Such of those who would have gone abroad, would have seen the vast playgrounds, parks and things like that. For example, in a place like Washington, you have got a creek—you have got a rock-creek which runs to about 40 miles full of forests and parks on either side as well as places for picnic. Similarly, in a place like Dallas you have got a turtle-creek which has got a white rock lake in it. A place like Poondi Reservoir or Red Hills could be well brought within its campus and beautified. Similarly in a place like Santiago, there is a sea-world which attracts tourists in large numbers from all parts of the world. They charge about three dollars for admission to these places, like our Mahabalipuram. There you find dolphins, sharks and other animals—mammals as well as fish—being made to perform acrobatics and tricks and there are shoals which give a good income. The whole place is almost a desert prize. They meet the whole cost of the arrangements by the collections made from tourists.

Sir, I feel that there is a vast deal of campus in the beautiful space between Mahabalipuram and Thiruvanmiyur or even beyond, up to Ennore, where we can bring this about. As my hon. Friend, Mr. Damodaran said, this can be planned at a higher level and a giant plan can be prepared. As the hon. Member, Thiru A. P. Janardhanam was saying, as is being done in China, a giant plan can be made available for inspection by the public in some central place. In that case, ideas will creep in and persons having those ideas would suggest them to the Metropolitan Authority who could implement the same. Sir, I join with the hon. Member, Thiru Damodaran in his suggestion that architects should be there. I am sure there are a lot of architects in this country who have got very good ideas and who could give valuable suggestions to the Government. They should also be taken in, as a group of persons who could advise and render assistance to the Government in this behalf.



Sir, one of the Bills which came up today before the House was the Hackney Carriages Bill and one of the hon. Members went into raptures of poetry at the time the Hackney Carriages Bill was moved and I did not think that a Hackney Carriage Bill would produce such poetry of great dimensions.

MR. CHAIRMAN : That was over thirty minutes before.

THIRU G. VASANTHA PAI : Sir, I was only referring to the poetry. The Bill which was moved in the House related to the banishment of hackney carriages. But one would find even bigger bullock-carts with tyres, and with loads of materials made to go down an under-bridge and again up the bridge, and that is really a pitiable sight. I wish the Government should also ban traffic by bullock-carts with such big tyres, as their next step.

Recently, we had a Seminar under the auspices of the Mylapore Academy in which many of the important persons in the City took part. In that Seminar which was held at "Hemamalini" in Lloyds Road and in which a group of persons belonging to different professions including the Police Commissioner participated, we discussed about the problems affecting transport in the City. We came to the conclusion that the following were the important things which affected the traffic and which spoilt the beauty of the City:—Lack of co-ordination between the Electricity Department, the Corporation and the other authorities which rendered roads being cut, both crosswise and lengthwise and the Electricity cables being put both on the top as well as in the bottom. There being absolutely no co-ordination, the roads are being cut and that is responsible for the pot-holes. Recently, an experiment has been made by putting welcome-arches in tubs or drums and if that system is adopted, the roads would not be dug. But, it is often found that every time the 15th of August or the 26th of January comes, in our entire Marina the pavement is being dug for putting casuarina poles and it is being re-done every year. No doubt, it provides employment and it means circulation of money—all that is true. But the beauty of the City goes away at least for six months and the same thing is repeated often, year after year. So, I would suggest that there should be co-ordination between the Electricity Department, the Corporation and also the Railway authorities.

Sir, I am told that a large-scale metropolitan Railway Scheme for introduction of rapid transit, on the model prevailing in Chicago or other American cities, or tube-railways on the model prevailing in the London tube or the Paris tube, is under contemplation, and that surveys have already been made. These Town Planning authorities should co-

ordinate with the authorities concerned with that Railway Scheme and something should be done for that purpose also in a Bill of this nature. I am only drawing attention to this by way of supplementing the suggestions of my hon. Friend, Thiru Damodaran so that, at an early date, all these things could be thought of and hurdles got over. I wish the Government great success in this venture.

Lastly, I want to say about the wide express roadways that should connect our cities—one city from another. It is a pleasure to drive through express roadways in foreign countries where you have got six-lane roadways—three on the one side and three on the other, large overbridges at intervals of nearly five miles and also by-ways and by-passes which come from the main roads and radial roads, as suggested by my hon. Friend, Thiru Damodaran. These should be an example for those persons who have gone abroad and I am sure the Hon. Ministers who have themselves gone and seen these things would put them into practice in this fine metropolis of ours which has a charm of its own and a beauty which has been commended by the tourists from all countries and of all clans.

0 ப. ப.

*திரு கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, அவை முன் விவாதத்தில் இருக்கும் திருத்த மசோதா, இது சம்பந்தப்பட்ட 1971ஆம் வருஷத்தில் நாம் இயற்றிய சட்டம், இவைகள் எல்லாம் பொதுவாக இந்த மாநிலத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவக்கூடிய நல்ல சட்டங்கள் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இடையாது. இது போன்ற பல சட்டங்களை நாம் நிறைவேற்றுகிறோம்; ஆனால், செயல்படுத்துவதில்தான் தவறுகள் பல ஏற்படுகின்றன. சட்டங்களைப் பற்றிப் பிரேரேபிக்கும்போதும் அதைப் பற்றி விமர்சிக்கும்போதும், உண்மையில் நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பேசுகிறோம். இப்போது அவையின் முன் வைக்கப்பட்டிருக்கும் திருத்தம் அதேமாதிரிதான். நல்ல ஒரு சட்டம், நல்ல ஒரு திருத்தம். இப்போது சென்னை நகரமும், மதுரை போன்ற பெரிய நகரங்களும் கடந்த 10 ஆண்டுகளாக விரிவடைந்து வருவதைப் பார்த்தால், இதைத் தடுத்து நிறுத்தி நல்ல முறையில் திட்டமிட்டு நகரத்தை விரிவடையச் செய்வதா இல்லையா என்ற மனக்கவலை ஏற்பட்டிருக்கிறது. அதைப்போக்க இந்தச் சட்டம் வழி செய்யும். இந்த மாதிரிச் சட்டத்தை நாம் நிறைவேற்றுவது மட்டும் போதாது. பணியையும் நிறைவேற்றுவது முக்கியம். சரியான அலுவலர்களை, உத்தியோகஸ்தர்களைக் கொண்டு நிறைவேற்ற வேண்டும். எனக்கு முன் பேசிய திரு. வசந்த பாய் அவர்களும், திரு தாமோதரன் அவர்களும் பல அரிய பெரிய யோசனைகளைச் சொன்னார்கள். வெளிநாடு சென்று வந்தவர்கள் அவர்கள். அந்த நாடுகளில் திட்டமிட்டு நகரங்கள் வளர்ச்சியடைவது பற்றியும் சாலைகள் வளர்ச்சியடைவது பற்றியும் சொல்லும்போது, நாம் ஏக்கத்துடன் பார்க்கவேண்டியிருக்கிறது. நாமும் அப்படி செய்யலாம். வெளிநாடுகளுக்கு நல்ல நிபுணர்களை அனுப்பி அதையெல்லாம் பார்த்து வரச்செய்து இங்கும் அம்மாதிரி வளர்ச்சி அடையச் செய்வதில்



கஷ்டமில்லை. அரசாங்கம் அதை துணிச்சலோடு செய்ய வேண்டும். எனக்கு இருக்கும் மனக் கஷ்டம் எல்லாம் வேறு ஒன்றும் இல்லை. நமது மாநிலத்தில் பல நல்ல திட்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக, பால் வழங்கும் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திற்கு முதலில் வெளிநாடு சென்று படித்து வரவேண்டுமென்று நிபுணர்களை வெளிநாட்டுக்கு அனுப்பினோம். அங்கே போய் அவர்கள் படித்து விட்டு வந்து ரிப்போர்ட் கொடுத்து முடித்து, மூன்று மாதம் ஆவதற்குள் அவர்கள் அந்தப் பால் வழங்கும் திட்டத்தில் இல்லை. அவர்களை வேறு இலாகாவுக்கு மாற்றி விட்டார்கள். லட்சக் கணக்கில் பணம் செலவழித்து அந்நிய நாடுகளுக்குச் சென்று, படித்து விட்டுத் திரும்பி வந்ததும், அந்த நிபுணர்களின் பணி வீணாகி விடுகிறது. அந்த மாதிரியில்லாமல், அமைச்சர் அவர்கள் பொறுக்கியெடுத்து இந்தத் திட்டங்கள் நீட்டுவதற்கு வழி செய்யவேண்டும். இந்தச் சமயத்தில் மகா கவி பாரதி சொன்னது நினைவுக்கு வருகிறது. "நாம் ஒரு விதி செய்வோம் அதை எந்த நாளும் காப்போம்". திட்டம் என்றால் நாம் நல்ல திட்டமாக போட வேண்டும். அந்தத் திட்டத்தைக் காக்க வேண்டும், அதன்படி நிறைவேற்ற வேண்டும். இப்போது என்ன நடக்கிறது. நினைத்தபடி ஒரு லட்சம், இரண்டு லட்சம், மூன்று லட்சம் என்று செலவழித்து நகரத்துக்குப் பக்கத்தில் ஒரு வீடு கட்டி விடுகிறார்கள். இரண்டு வருஷம் கழிந்து முனிசிபாலிட்டியில் அல்லது கார்ப்பரேஷனில் ரோடு போட்டால் நடுரோட்டில் வீடு வருகிறது. இது எல்லாம் திட்டமிடாமல் செய்ததால் ஏற்பட்ட தவறுகள். அதற்காகத்தான் இந்தத் திட்டம். இந்தத் திட்டமிடும் குழு, "அத்தாரிட்டி." நாம் நியமிப்பவர்கள், யாராவது தவறாக வீடு கட்டக்கூடாத இடத்தில், சாலை வரக்கூடிய இடத்தில் வீடு கட்டினால் ரொம்ப விழிப்புடனாக, ரொம்ப உஷாராக இருந்து, அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். நிறுத்தி விட்டு அந்த வீட்டை எந்த இடத்தில் வீடு கட்டுவதற்காக ஒதுக்கியிருக்கிறோமோ அந்த இடத்திலேதான் கட்டவேண்டும். அது கார்ப்பரேஷனாக இருந்தாலும் சரி, எந்த அதாரிட்டியாக இருந்தாலும் சரி, அதை மனதில் கவனமாகக் கொண்டு செயல்பட வேண்டும். முன் காலத்திலெல்லாம். நான் சொல்லுவது 500, 600 ஆண்டுகளுக்கு முன்னால்கூட, நம் முன்னோர்கள் நல்லபடியாக நகரங்களைத் திட்டமிட்டு கட்டியிருக்கிறார்கள். நான் இந்தியா பூராவிலும் உள்ள பல பெரிய நகரங்களுக்கெல்லாம் சென்றிருக்கின்றேன். மதுரை போன்று திட்டமிடப்பட்டு கட்டப்பட்ட நகரம் வேறு எங்கேயும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவ்வளவு அழகாக தெருக்கள் இருக்கின்றன. ஒரு வீட்டுக்கு ஒரு வீடு முன்னுக்குப் பின் இராமல் இருக்கின்றன. சித்திரை வீதிகள் என்றால் 4 சித்திரை வீதிகள் இருக்கின்றன. அதேமாதிரி ஆவணி வீதிகள், அதே மாதிரி மாசி வீதிகள் அதேமாதிரி வெளி வீதி என்றெல்லாம் திட்டமிட்டு 500, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே நம் முன்னோர்கள் நல்ல வழியில் செயல்பட்டிருக்கின்றார்கள். இப்போது நாம் போடும் திட்டம் பின்னால் குலைந்து விடாதபடி பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அளவில் இருக்கவேண்டும். அதுவும் தேர்தலில் கார்ப்பரேஷனுக்கு, முனிசிபாலிட்டிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றவர்களுக்கு இந்த உணர்ச்சி இருக்க வேண்டும்; குறுக்கிட்டு இதர அதிகாரிகள் காரியங்களை நிறைவேற்ற விடாமல் அதைக் கெடுப்பதற்கு முனையக்கூடாது. ஆகவே இது ஒரு நல்ல சட்டம். நல்ல திட்டம். இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதைச் செயல்படுத்தும்போது

மட்டும் கொஞ்சமும் தாட்சண்யம் இல்லாமல் போடுகின்ற திட்டப்படி காரியங்கள் நிறைவேறும்படியாக நாம் எதிர்காலத்திலே பார்த்துக்கொள்ள வேண்டும்.

இனி அங்கத்தினர்கள் நியமிக்கும்போது, சட்ட சபைகளிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் என்று இருப்பதில் மேலவையின் பங்கை அமைச்சர்கள், அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. பேரவையில் ஒரு உறுப்பினரும் மேலவையில் ஒரு உறுப்பினரும் இருக்க வேண்டும். நேற்றுகூட அவுசிங் போர்டு சட்ட முன்வடிவின்மீது பேசும்போது சொன்னேன். அண்மையில் சில கமிட்டிகள் போடும்போது, இரண்டு உறுப்பினர்களையும் பேரவையிலிருந்தே போட்டுவிட்டார்கள். அப்படி இல்லாமல் இந்த சபைக்கு ஒரு உறுப்பினர், அந்த சபைக்கு ஒரு உறுப்பினர் என்று போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் இந்தத் திருத்தத்தை மனப்பூர்வமாக வரவேற்கின்றேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சென்னை பெரு நகர வளர்ச்சி அமையக்கூடிய முறையில் வரையறுப்பதற்காகவும், முறைப்படுத்துவதற்காகவும், ஒரு அதிகாரம் பெற்ற குழு அமைத்து தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு, சட்டப்படி அந்தக் குழுவிற்கான ஒரு உரிமையை வழங்குவதற்காக இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்தத் திருத்தச் சட்டத்தின்மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. தாமோதரன் அவர்களும், திரு. வசந்த பாய் அவர்களும் எடுத்துச் சொன்ன கருத்துக்களையாவும் பொதுவாகவே இந்தச் சட்டத்தைப் பற்றி ஆலோசனைகள் நடைபெற்ற நேரத்திலே, எண்ணிப் பார்க்கப்பட்டவைதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரம் வேறு பல நகரங்களைவிட ஒரு தனி முக்கியத்துவத்தைப் பெற்ற பெருநகரமாக வளர்ந்து வந்திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். தமிழ்நாட்டிலேயுள்ள மற்ற நகரங்களிலேயுள்ள வளர்ச்சிகளையும் சென்னை நகரின் வளர்ச்சி வேகத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்த்தால், மற்ற நகரங்களின் வளர்ச்சியைவிட ஏறத்தாழ 2 மடங்கு 3 மடங்கு வேகத்தில் சென்னை மாநகர மக்கள் தொகை பெருகிக் கொண்டு வருகின்றது. ஒரு மாநிலத்தின் தலைநகரமாக இருக்கின்ற காரணத்தினாலேயும், பெருகி வருகின்றது. பொதுவாகவே ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட நகர நாட்டுப்புற சட்டத்தில் வட்டார வளர்ச்சித் திட்ட அமைப்புகள், உள்ளூர் வளர்ச்சித் திட்ட அமைப்புகள், புது நகர வளர்ச்சித் திட்ட அமைப்புகள் என்று பல அமைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, லோகல் பிளானிங் அத்தாரிடி, ரீஜனல் பிளானிங் அத்தாரிடி, நியு டவுன் டெவலப்மெண்ட் அத்தாரிடி என்னும் பெயருடன் அமைக்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஒரு மன்றம் அமைத்து சென்னை நகர வளர்ச்சிக்கான பணிகளை நிறைவேற்றுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. அதை வகையாகச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்காது என்ற காரணத்தினாலே, இந்தச் சட்டத்தின் மூலமாக சென்னை மாநகரத்தின் பெருநகர வளர்ச்சித் திட்டத்தினை எப்படிப்பட்ட அதிகாரமுள்ள ஒரு



மன்றத்தின் மூலமாக தகுந்த வளர்ச்சியை ஏற்படுத்த முடியுமோ அப்படிப்பட்ட மன்றம் இச்சட்டம் மூலம் உருவாக்கப்பட்டிருக்கின்றது.

நகர அமைப்பு, டவுன் பிளானிங் பற்றிய நுண்ணறிவாளர்கள் இந்த அதிகார மன்றத்திலே இடம் பெற வேண்டுமென்று திரு. தாமோதரன் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த மன்றத்தினுடைய செயலாளராகவும் உறுப்பினராகவும் இருக்கின்ற ஒரு அதிகாரி அந்தத் துறையில் தேர்ச்சி பெற்றவர். அது மட்டுமல்ல. நகர அமைப்புத் துறை இயக்குநர் அவர்களும் இதிலே இடம் பெறுகின்றார்கள். இந்தப் பெரு நகர சீரமைப்பு அதிகாரக்குழு எந்த ஒரு பணியை நிறைவேற்றுவதாக இருந்தாலும், அதைப்பற்றி முன் கூட்டியே வரைவு செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட நகர அமைப்பு திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு மெட்ராஸ் மெட்ரோபாலிடன் பிளான் என்று வழங்குகின்ற திட்டம்கூட, ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு முன் இருந்த உள்ளாட்சித்துறைச் செயலாளர் அவர்கள் தலைமையில், வேறு பல துறை செயலாளர்களைக் கொண்ட ஒரு குழு, அதற்கு முன்னணிக்குழுவாக, ஸ்டீரிங் கமிட்டியாக பணியாற்றியுள்ளது. அதில் டிரான்ஸ்போர்ட் அண்ட் கம்யூனிகேஷன் துறையிலே அனுபவம் பெற்ற வல்லுநர்கள் பல பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். வீட்டு வசதித் துறையிலே இருக்கும் வல்லுநர்கள் இடம் பெற்றிருக்கின்றார்கள். வாட்டர் சப்ளை அண்ட் டிரெயினேஜ் துறையிலே இருக்கும் வல்லுநர்கள் இடம் பெற்றிருக்கின்றார்கள். ஹெல்த் எஜுகேஷன் அண்ட் ரிக்ரியேஷன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அத்துடன் இந்தக் குழுவில் தொழில் வளர்ச்சி பற்றிய துறையைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டிருந்தார்கள். இப்படிப்பட்ட "ஸ்டடி குரூப்" வழங்கிய கருத்துக்களின் அடிப்படையில் அமைந்தது தான் இந்த மெட்ராஸ் மெட்ரோபாலிடன் குழுவின் அமைப்பு. நகரச் சீரமைப்பு எப்படி அமையவேண்டுமென்று தீர்மானிக்கப்பட இப்போதுங்கூட தமிழ்நாட்டு அரசாங்கத்தினுடைய நகர அமைப்புத் துறை அந்தப் பணியினை மேற்கொண்டு வரைப்படங்களைத் தயாரிக்கிறது. ஆனால் அதற்கு என்று தனியாக ஒரு சிறப்பு அதிகாரத்தைப் பெற்ற குழு மூலம் இந்தப் பெரு நகர வளர்ச்சித் திட்டத்தைத் தனியாகக் கவனிக்கின்றபோதுதான் அதில் ஏற்படுகின்ற குறைபாடுகள் ஏற்படாமல் தடுத்து அந்த சிறப்புப் பணியை நிறைவேற்றலாம் என்ற காரணத்தால்தான், இந்தப் பெரு நகர சீரமைப்பு அதிகாரக் குழு உருவாக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டுமல்லாமல், பல ஆண்டுகளாக கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் ஏற்பட்ட வளர்ச்சியினுடைய விளைவாக இன்றைக்கு ஏற்பட்டிருப்பது போன்று நெருக்கடிகளை நாம் முன்கூட்டியே உணர்கின்ற வாய்ப்பினை பெற்றிருக்கின்றோம். அதுபோன்ற சிக்கலான நெருக்கடிகள் ஏற்பட நாம் இடம் தந்துவிடக் கூடாது. திரு. தாமோதரன் அவர்கள் டெல்லியின் நகர அமைப்பு பற்றியும், அதன் வளர்ச்சியைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் மதுரை நகரம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்டது பற்றியும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே உருவாக்கப்பட்ட அந்த நகரம் பெற்றிருக்கின்ற அழகான அமைப்பு பற்றியும் சொன்னார்கள். இன்றைக்கு டென்சிடி ஆப் பாபுலேஷன் உள்ள பகுதியிலே மக்கள் எவ்வளவு நெருக்கமாக வாழ நேரிடுகிறது என்பதையும் எவ்வளவு பேர் தினந்தோறும் வந்து போகிறார்கள் என்பதையும்

எவ்வளவு சுற்றுப்புறப் பகுதியிலுள்ள மக்கள் மிக நெருக்கமாக தொடர்பு கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் அடிப்படையாகக் கொண்டுதான் நகரங்கள் அமைக்கப்பட வேண்டியிருக்கின்றன. அந்த முறையிலே அன்றைய மதுரை நகரம் அமைக்கப்படும்போது, மதுரையிலே இருந்திருக்கக்கூடியவர்களும் நாளும் வந்து போனவர்களுமான மக்கள் சுமார் 50 ஆயிரம் பேர் தான். அப்போது மதுரை மாவட்டத்திலே இருந்திருக்கக்கூடிய மக்கள் தொகை 3 லட்சம் அல்லது 4 லட்சம் பேர்கள் தான். மதுரை நகரத்திற்குள் திருவிழாவிற்கு வந்துபோகின்றவர்கள் அதிகமாக இருந்தால் 5, 6 ஆயிரம் பேர்கள் இருந்திருப்பார்கள். இன்றையதினம் ஒரு நாளைக்கு மதுரைக்கு வந்து போகக்கூடிய மக்கள் மட்டும் 1 லட்சம் முதல் 2 லட்சம் வரை இருப்பார்கள்.

டெல்லி நகரம் சிறப்பாக அமைந்ததற்கு முக்கியமான காரணம் ஏற்கெனவே பழைய டெல்லி தான் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு முன்னர் புது டெல்லியில் ஆட்சிப் பீடம் உருவாக்கவேண்டுமென்று கருதி, பெரும்பாலும் காட்டுப் பகுதியாக இருந்த அந்த பாகத்தை—குடியரசுத் தலைவர் அரண்மனை, அன்றைக்கு வைஸ்ராயினுடைய பேலஸ் இருந்த பாகத்தை பாராளுமன்றக் கட்டிடம் ஆகியவைகளையெல்லாம் அமைப்பதற்காக எடுத்துக்கொண்டு புதிய முறையிலே அந்த நகரத்தை உருவாக்கினார்கள்.

பொதுவாகவே நம்முடைய நகரங்களிலே எல்லாம் சாலைகளில் குறுக்குச் சாலைத் திருப்பங்கள் வருகிறபோது 90 டிகிரி என்ற அளவிலே தான் இடது பக்கம் அல்லது வலது பக்கம் திரும்புவதாக அமைந்துள்ளன. அங்கே புதுடெல்லி நகரத்திலே சாலைகள் அமைத்திருப்பவர்கள் சரியாக இடது பக்கம் அல்லது வலது பக்கம் என்று திரும்புகின்ற முறையிலே, இல்லாமல், ஏறத்தாழ 60 டிகிரியிலே திரும்புகிற முறையிலே, ஒவ்வொரு இடத்திலேயும் நடுவிலே ஒரு வட்டம் அமைத்து அந்த வட்டத்திலிருந்து வெவ்வேறு கோணத்தில் அங்கேயிருந்து சாலைகள் திரும்புகின்ற முறையில்தான் அமைத்திருக்கின்றார்கள். ஒரு வட்டத்திலேயிருந்து 6 பக்கங்களில் சாலைகள் செல்லும். தமிழ் நாட்டு நகரங்களில் வீதிகள் அமைத்திருந்தால், திருப்பு மையத்தில் 4 பக்கங்களில் போகிற முறையிலேதான் அமைத்திருப்பார்களே தவிர, ஹெக்சகன் முறையிலே அந்தச் சாலைகள் பிரியுமிடம் அமைந்திராது. மேலும் மேல் நாட்டிலே, அமெரிக்கா முதலான பிற நாடுகளிலே எவ்வளவோ அருமையான வளர்ச்சி இருக்கின்றது என்று திரு. வசந்த பாய் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வளர்ச்சியை இங்கே எதிர்பார்க்கவும் முடியாது, கூடவும் கூடாது. அப்படிப்பட்ட வளர்ச்சியினை இங்கே எதிர்பார்ப்பதற்கே இடமில்லை. காரணம், அமெரிக்கா போன்ற வேறு மேலை நாடுகளிலுள்ள நிலைமையைப் போன்றே இங்கே அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு அமெரிக்க நிபுணரையே அழைத்து வந்தாலும், இங்குள்ள மக்கள் தொகையினையும் தேவையினையும் கண்டால், அவர் கண்டிப்பாக இராஜிநாமாவே செய்துவிட்டுப் போய் விடுவார். இங்குள்ள மக்கள் தொகைக்கு அங்குள்ளது போன்ற திட்டங்களைப் போட முடியாது. சென்னைக் கடற்கரையினைப் போன்று அங்கே அமெரிக்காவில் இருந்தால், ஒரு நாளைக்கு ஐயாயிரம்-பத்தாயிரம்



பேருக்கு மேலே செல்ல மாட்டார்கள். ஆனால் நமது சென்னைக் கடற்கரையில் ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் பேருக்கு மேலே வருகின்றார்கள். ஆகவே அமெரிக்க நகரங்களிலுள்ள வளர்ச்சியினை, வாஷிங்டன் போன்றுள்ள பெரிய நகரங்களிலுள்ள வளர்ச்சியினை இங்கே எண்ணிப்பார்ப்பதும் முடியாத காரியமாகும். அந்த நாட்டில் சதுர மைலுக்கு சராசரி 56 அல்லது 58 பேர்தான் இருக்கின்றார்கள். ஒப்புமை நோக்க, அமெரிக்காவில் மக்கள் தொகை ரொம்பவும் குறைவு. ஆனால் இந்தியாவிலோ சதுர மைலுக்கு 380 பேர் என்ற அளவில் இருக்கின்றார்கள். ரஷ்யாவில் 26 அல்லது 28 பேர்தான் இருக்கின்றார்கள் சதுரமைலுக்கு. சீன நாட்டிலே 190 பேர்தான் சதுர மைலுக்கு. முன்பே குறிப்பிட்டதைப் போல அமெரிக்காவில் 56 அல்லது 58 பேர்தான் இருக்கின்றார்கள். ஆனால் நமது இந்தியத் திருநாட்டிலே 380 அல்லது 390 பேர் இருக்கின்றார்கள் சதுர மைலுக்கு. அதிலும் சென்னையைப் போன்றுள்ள பெரிய நகரில் குறிப்பாக ஜார்ஜ் டவுன் போன்ற நெருக்கமுள்ள பகுதிகளில் சதுர மைலுக்கு ஏறத்தாழ இருபதாயிரம் பேருக்கு மேல் இருப்பார்கள். சென்னையில் மையத்தைவிட்டு சற்று அப்பால் சென்றால், பத்து அல்லது பதினைந்தாயிரம் பேர் என்ற வீதத்தில் இருப்பார்கள் சதுர மைலுக்கு. இன்னும் சற்றுத் தொலைவாகச் சென்றால், ஆறு அல்லது ஏழாயிரம் பேர் சதுர மைலுக்கு என்ற அளவிற்குக் குறையக்கூடும். ஆனால் நகரின் மையத்திலே ஏறத்தாழ இருபதாயிரம் பேர் என்ற அளவிலே இருக்கின்றார்கள் சதுர மைலுக்கு.

மக்கள் தொகை நெருக்கம் வளர வளர ஏற்படும் பிரச்சினைகளும் மிகப் பல. அது குடிநீர் பிரச்சினையாக இருந்தாலும், போக்குவரத்துப் பிரச்சினையாக இருந்தாலும், அல்லது அருமையான பறவைகளைத் தங்கச் செய்வதற்கான இடத்தினை உருவாக்கும் திட்டமானாலும் சரி, இப்போதுள்ள மக்கள் தொகை நெருக்கம் இவற்றுக்குத் தகுந்த இடம் தராது. இங்குள்ள மக்கள் தொகையைப் பார்த்து, பறவைகளே பாதுகாப்புத் தேடி வேறு எங்காவது போகவேண்டுமே தவிர, இவ்வளவு மக்கள் தொகை இருக்கும் இடத்தில் காகம் போன்ற பறவைகள்கூட வருவதற்கு அஞ்சும். அப்படிப்பட்டதொரு நெருக்கடி வளர்ச்சியினை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நெருக்கடியினால் ஏற்படும் தீய விளைவுகளுக்குச் சென்னை நகரம் ஆளாகிவிடக் கூடாது என்று இந் நகரத்தினைத் தகுந்த முறையில் விரிவுபடுத்த, நகர்ப்புறத்தினை வளர்ச்சியுறச் செய்ய, ஏறத்தாழ 450 சதுர மைல் பரப்பளவு சென்னை நகரைச் சுற்றியுள்ள பகுதி இதில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த நகரின் வளர்ச்சிக்கு உதவும் "அர்பன் நோட்ஸ்" (Urban Nodes) இவை எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரின் தெற்குப் பக்கத்தில் ஆலந்தூர், தாம்பரம், மேற்குப் பகுதியில் ஆவடி, அம்பத்தூர், வடக்குப் பகுதியில் மீஞ்சூர், எண்ணூர் ஆகிய நகரங்கள் திட்டமிட்ட வளர்ச்சிக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. இப்பெருநகரின் மக்கள் தொகை நெருக்கம் வேகமாக வளராமல் தவிர்ப்பதற்காக செங்கற்பட்டு, திருவள்ளூர், பொன்னேரி போலுள்ள பகுதிகள் இப்பெருநகரின் வளர்ச்சியினைத் தாங்கும் துணை நகர்ப்பகுதிகளாக அவை அமையும் என எதிர்பார்க்கப்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கெனவும் திட்டமிடப்பட்டிருக்கின்றது. கும்மிடிபூண்டி என்பதற்குப் பதில் பொன்னேரி என்று சொன்னேன், இப்படிப்பட்ட பகுதிகள் வளர்ச்சியுறும்

என எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படிப்பட்ட வளர்ச்சி பெறுவதற்கு முன்னர், அவற்றுடன் எதிர்காலத்தில் எப்படிப்பட்ட போக்குவரத்து வசதி இருக்கவேண்டுமென்றும் சிந்தித்துப் பார்த்தால், அது இப்போது சில இடர்பாடுகளுக்கு ஆளாகித்தான் இருக்கின்றது. சென்னையில் பெருகி வரும் மக்கள் தொகை, அதனால் ஏற்பட்டுள்ள நெருக்கம், எனவே இடர்பாடு. கும்மிடிபூண்டி போன்ற நகரப் பகுதிகளிலே நகரமைப்புத் திட்டம் ஏதும் ஏற்படாததால் நெருக்கடி. திருவள்ளூர் பகுதியில் அங்கே இருக்க வேண்டிய அளவிற்கு வசதிகள், போக்குவரத்துக்குத் தேவையான சாலைகள் அங்கே ஏற்கெனவே அமையாத காரணத்தினால் நெருக்கடி. ஆக இப்படி ஒவ்வொரு பகுதியிலும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய போக்குவரத்து வளர்ச்சி நெரிசல் குறித்தும், பெருகக்கூடிய மக்கள் தொகையால் ஏற்படும் நெருக்கம் குறித்தும் வளர்ச்சியுறும் நகரின் தேவைகளை எண்ணிப்பார்த்தும் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்குத் தக்க அளவிற்கு தேவைகளும் அதிகரிக்கும் எனக் கருதி அவற்றைப் பெற இப்போதே நாம் செயல்பட வேண்டும் எனக் கருதி இந்தத் திட்டத்தின் வேலைகள் துவங்கப்பட இருக்கின்றன.

அதுபோன்றே சென்னையிலுள்ள போக்குவரத்து மிகவும் அதிகமாகும். பல பகுதிகளிலே, ஒரு மணி நேரத்தில் எவ்வளவு பேர், எவ்வளவு கார்கள், மற்ற மற்ற வாகனங்கள் மூலம் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் செல்லவேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்ற போக்குவரத்து விவரங்கள் எல்லாம் சேகரிக்கப்பட்டு, அது காரணமாக திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூர் வரையில் "ட்யூப் ரெயில்வே" ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற ஆலோசனையும் இந்தக் குழுவின் சார்பில் சொல்லப்பட்டிருக்கின்றது. இதுபற்றி மத்திய அரசிலுள்ள ரெயில்வே துறை அமைச்சர் அவர்களிடத்தில "எப்படியும் சென்னை நகர பெருவளர்ச்சிக்கு ஏற்ப ட்யூப் ரெயில்வே அமைக்க மத்திய அரசு ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே அதற்கு நிதி ஒதுக்கித்தர வேண்டும்" என்றும் கேட்கப்பட்டிருக்கின்றது.

"இந்து" பத்திரிக்கை என்று எண்ணுகிறேன். அதில் "சென்னை மாநகரின் பெரு வளர்ச்சிக்கு இப்படிப்பட்ட ட்யூப் ரெயில்வேயைவிட பல்வேறு முக்கிய பிரச்சினைகள் இருக்கின்றன" என்று ஒருவர் எழுதியிருந்தார். அவை அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்று அவர் சொல்லுவது போன்று இதைவிட முக்கியமான பணிகள் இருக்கின்றன என்பதை அரசு உணராமல் இல்லை. ஆனால் இன்றைக்கு இந்த "ட்யூப் ரெயில்வே" பற்றி கவனம் செலுத்தப்படவில்லை என்றால், இன்னும் பத்தாண்டுகள் கழித்து போக்குவரத்தில் ஏற்படக்கூடிய பெரும் தேவைகளை அப்போது ஏராளமான பஸ் போக்குவரத்தால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை, அப்போது எண்ணிப்பார்த்து எந்தத் திட்டம் போட்டாலும் சமாளிக்கமுடியாது போய்விடும். இன்றைக்கு நகரின் வடக்கேயுள்ள திருவொற்றியூர், எண்ணூர்–மணலி போன்றுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கைப் பெருக்கத்தாலும், சென்னையின் தெற்கே ஏற்பட்டுள்ள தொழில் பெருக்கத்தாலும் எதிர்காலத்தில் தங்கள்



பல்வேறு கடமையை நிறைவேற்ற மக்களுக்கு சென்னையின் வடக்கு-தெற்கு திசையில்தான் மிகுந்த போக்குவரத்து வசதி தேவைப்படும். அதற்கு ஏற்பத்தான் வடக்கு-தெற்கு திசைகளை நோக்கிச் செல்லும் போக்குவரத்துத் தேவைகளைச் சமாளிக்க புதிய திட்டங்களை இப்போதிலிருந்தே உருவாக்க வேண்டியிருக்கிறது. சென்னையில் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள், அடையாறு திருவல்லிக்கேணி, ஜார்ஜ் டவுன், வண்ணை போன்ற பகுதிகளில் வாழும் பெரும்பாலான மக்கள் மிகக் குறைந்த நேரத்தில் நகரின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குச் சென்று தங்கள் பணிகளை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால்தான் இப்போதே மத்திய அரசு அதற்கான ஆலோசனைகளை முழு அளவிற்கு ஆராய்ந்து ஏற்ற திட்டங்களை உருவாக்குவதை ஒப்புக்கொள்வார்களானால், பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் கழித்து, 1886-லேயே 1991-ம் ஆண்டிலேயே சென்னை நகரின் நிலைமைகளை நாம் சமாளிக்கக் கூடிய நிலைமையில் இருப்போம் என்று அறிந்தே இதை வலியுறுத்தி வருகின்றோம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது மட்டுமில்லாமல், இந்தக் குழு நிறைவேற்றுவதற்கான பணிகள் இன்னின்னவை என்று வரையறுக்கப்பட்டு, எந்தெந்தப் பகுதிகள் எந்தெந்த வளர்ச்சியைப் பெற வேண்டியவை என ஆராய்ந்து தொழில் அதிபர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியவர்களுடன் கலந்து பேசி, அவர்கள் ஆலோசனைகளைப் பயன்படுத்திகொள்ள இருக்கின்றோம்.

அண்மையில் செங்கற்பட்டுப் பகுதியில் பரந்ததொரு பகுதியைத் தேர்ந்தெடுத்து, நியூ டவுன் டெவலப்மெண்ட் என்ற முறையில் மெட்ரோபாலிடன் அதாரிட்டி அதை உருவாக்க இருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் செங்கற்பட்டுக்கு அருகாமையில் மறைமலை நகர் என்ற புது நகரை உருவாக்கி அங்கே தொழில் வளர்ச்சி ஏற்படவும் அதற்கான தண்ணீர் வசதி செய்து தரப்படவும் திட்டங்கள் தீட்டி அங்கே ஒரு புது நகரமைப்பு உருவாக்கப்படும் பணி நடைப்பெறுகின்றன. இதற்கென அங்கே காட்டு இலாகாவிற்குச் சொந்தமான நிலங்களையும், மற்றும் கிராமப் பகுதிகளுக்குச் சொந்தமான நிலங்களையும் சேர்த்து புதிய நகர் அமைப்பு காணப்படுகிறது. அப்படி உருவாக்கப்படும் இந்த அடிப்படைப் பணிபோன்ற பணிகளையே மெட்ரோபாலிடன் அதாரிட்டி உருவாக்கும். அன்றாடம் நடைமுறையில் ஏற்படும் சிக்கலைத் தீர்க்க மாநகராட்சி மன்றமோ அல்லது நகராட்சியோ அல்லது ஊராட்சியோ அல்லது அது வீட்டு வசதி வாரியத்தின் பணிகளுக்கு உட்பட்டதாக இருந்தால் அந்த வாரியமோ அல்லது குடிசை மாற்று வாரியத்திற்கு உட்பட்டதாக இருந்தால் "ஸ்லம் போர்டோ" அல்லது அது போன்ற அமைப்புகளோ தான் நிறைவேற்ற வேண்டும்.

THIRU A.R. DAMODARAN: Sir, we are interested in hearing the Hon. Minister's speech and there is a disturbance.

<u>மாண்புமிகு திரு க. அன்பழகன் :</u> ஆகவே பல்வேறு பணிகளை வேறு வேறு அமைப்புகள் தங்கள் தங்கள் நிலைமைகளுக்கு ஏற்றவாறு நிறைவேற்றுவதற்கு இந்தச் சென்னைப் பெருநகர் சீரமைப்பு குழு பயன்

படுகிற நிலைமையில் அந்தப் பல்வேறு அமைப்புகளும் தங்கள் பணிகளை நிறைவேற்றுவதில் எல்லா விதத்திலும் ஊக்குவிக்கப்படும். சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் இதில் இடம் பெற வேண்டுமென்று தெரிவித்தார்கள். மேயருக்குரிய மரியாதையைத் தருவதில் நமது அரசு என்றும் பின்

6–10 பி. ப. வாங்கியதில்லை. ஆனால் ஒரு ஆண்டிற்குமட்டும் அந்தப்பொறுப்பில் இருப்பவர்களுக்கு நகரத்தினுடைய பல்வேறு விதமான வளர்ச்சிப் பணிகள், நீண்ட காலத் திட்டங்கள் ஆகியவைகளைப்பற்றி ஆலோசனை கூறுவது கடினம் என்ற காரணத்தினால், மாநகராட்சி மன்றத்திலேயுள்ள உறுப்பினர்களிலே நீண்ட காலத் தொடர்பு உள்ளவர்கள் இடம் பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு இரண்டு பேர்களை இடம்பெறச் செய்யலாம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல நகரசபைத் தலைவராக உள்ளவர்களோ, உறுப்பினராக உள்ளவர்களோ, யாருக்கு அந்த வட்டாரத்திலே அதிக அனுபவமும் அந்தப் பகுதியைப் பற்றிய தெளிவும் இருக்கிறதோ அவர்களில் ஓரிருவர்களை இடம் பெறச் செய்ய வேண்டுமென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வகையில் மாநகராட்சியில் உள்ளவர்களோ அல்லது நகரசபையில் உள்ளவர்களோ இடம் பெறுகிறார்கள். அதேபோல சட்ட மன்றத்திலிருந்து இருவர் இடம் பெற வேண்டுமென்ற கருத்து பொதுவாகத் தான் கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர, லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி என்று குறிப்பிடப்படவில்லை. "Two representatives from the Legislature என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே, யாரை எடுக்க நேரிடுகிற என்பதில் வேற்றுமை இருக்கலாமே தவிர, இந்த அவை ஒதுக்க பட்டிருக்கவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல நிபுணர்களாக உள்ளவர்களின் அட்வைசரி கவுன்சில் என் அமைப்பும் இதனுடைய தொடர்பாக ஆலோசனை வழங்குவதற் இருக்கிறது. இந்த அட்வைசரி கவுன்சிலில் பல நிபுணர்கள் ப துறையைச் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்க ஆலோசனை கிடைக்கும். இதை யார் உருவாக்கித் தர வேண்டுமே அந்த நிபுணத்துவம் உள்ளவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். இந் மாதிரி வரைவு திட்டத்தினுடைய அடிப்படையை நகரமைப்பு துறையினரே வழங்குகிறார்கள். இதை ஆராய்கிறபோது, ஊராட் மன்றத்தார் ஆலோசனை வழங்குவதையும் ஏற்றுக் கொள்ளுகிறார்க மேலும் கருத்து மாறுபாடு இருக்குமானால், பரிசீலனை செய்யலா திருவொற்றியூர் நகரசபைப் பகுதி, ஆலந்தூர் நகாசபைப் பகுதி, சென் மாநகராட்சிப் பகுதி ஆகிய எந்தப் பகுதி பற்றி ஒரு திட்டம் வருமானாலு அது பற்றி முதலில் அறிவிக்கப்படும். அறிவித்த இரண் திங்களுக்குள்ளாக அந்த ஊர் மன்றத் தலைவரோ, உறுப்பினரோ அங்கேயுள்ள பொது மக்களோ, வேறு பொது அமைப்பைச் சேர்ந்தவர்களோ இந்தத் திட்டம் இந்த வகையில் ஏற்றதல்ல என்று அவர்களுக்கு தோன்றுமானால் அதை அவர்கள் தெரிவிக்கலாம். அப்படித் தெரிவிக் கருத்தை மெட்ரோபாலிடன் அத்தாரிட்டி பரிசீலனைசெய்யும். அவ்வா செய்த முடிவு அவர்களுக்கு உடன்பாடு இல்லை, அல்லது உடன்பாடு காண முடியவில்லையென்று சொன்னால், அரசாங்கம் பரிசீலனை செய்யும். எனவே அரசாங்கம் பரிசீலனை செய்யுமென்று சொன்னால், மறுபடியும்



அதிகாரிகள்தான் ஆராய்ந்து பார்ப்பார்கள். அதிகாரிகள் மூலமாக அந்த மறுப்புகள் பரிசீலனைசெய்யப்பட்டு நமக்கு போதுமான காலம் தரப்பட்டு, ரெப்ரசன்டேஷன் யார் செய்ய வேண்டியிருந்தாலும் செய்வதற்கு இடம் தந்து, அதற்குப் பின்னர்தான் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டமாக ஏற்றுக்கொள்ளப்படும். நிறைவேற்றப்படுவது என்பது அதற்குப் பின்னும் தொடர்ந்து செய்ய வேண்டிய வேறு பல கடமைகளால் உருவாகும். ஆனால் இப்படித்தான் நிறைவேற்றப்படும் என்று ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டமாக அது உருவாகும்.

இதைப்போல ஜார்ஜ்டவுன் போன்ற நெருக்கம்மி குந்த பகுதிகளிலே புதிய திட்டமிடுகிறபோது, அங்கேயிருக்கிற வீடுகளை, கட்டிடங்களை இடித்து, புதிய சாலைகள் அமைக்க வேண்டிய நிலைமைகள் ஏற்படுமானால், அது சரியல்ல என்ற கருத்து பேசப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை வந்து விடக் கூடாது என்ற கருத்தில் பேசப்பட்டது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை வராது. ஏற்கனவே இருப்பதை மாற்றுகிறபோது, ஏற்பட்டு விட்டதை பெருமளவிற்கு அழிக்காமல், பெருமளவிற்குசிக்கல் ஏற்படுத்தாமல், அதிலே எங்கே கட்டாயமாக இடித்துக் கட்டவேண்டிய நிலைமை ஏற்படுகிறதோ அந்தக் கட்டிடங்கள் மட்டுமே பாதிக்கப்படும் அளவில்தான் வரையறுக்கப்படுமே தவிர, ஒரு பழைய நகரத்தைப் புதுப்பிக்கிறபோது நினைத்தபடி பிளான் போட்டு புதுப்பிக்க கருதப்படமாட்டாது. எந்த அளவிற்கு வளர்ச்சிக்கு இடம் தருவதாக இருக்கிறதோ அந்த அளவிற்குப் பயன்படுத்தப்படும். வேண்டுமானால் ஒரு கட்டிடம் இடிந்து போகக் கூடிய கட்டிடமாக இருந்து, ஒரு வேளை டவுன் பிளானிங் அதாரிட்டி ஏற்கனவே அங்கேயிருக்கின்ற கட்டிடங்கள் இடிந்து போனதால் வேறு கட்டிடம் அந்த இடத்தில் வரக்கூடாது என்று முறைப்படுத்துவார்களானால் அப்படி ஏதாவது செய்யலாமே தவிர, இருப்பதை அடியோடு மாற்றுவது என்பது இதன் நோக்கம் அல்ல. போக்குவரத்து அடிப்படையிலேயும், மக்கள் தொகைப் பெருக்கத்தின் அடிப்படையிலேயும், தேவைகள் பெருகி வருகின்றன என்ற அடிப்படையிலேயும், தொழில்கள் வளருகின்றன என்ற முறையிலேயும் சென்னை நகரத்தில் பெருகிடக்கூடிய மக்கள் நகரத்திற்குள்ளே நல் வாழ்வு வசதியை எதிர்காலத்தில் பெறமுடியாது என்பதால் நகரத்திற்கு அப்பாலே உள்ள பகுதிகளிலேதான் பெருகிவரும் சென்னை பெரு நகர மக்களுடைய எதிர்காலத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற முறையிலே, ஏறத்தாழ 450 சதுரமைல் பரப்பளவில் இந்த எதிர்கால விரிவாக்கப் பணிகளை உருவாக்குவதற்கான திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்தச் சட்டம் மறுபடியும் 10 ஆண்டுகள் கழித்து எதிர்கட்சித் தலைவர் அவர்கள், "எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்காக ஒரு சட்டத்தை நிறைவேற்றினீர்கள். இன்னும் நிறைவேறவில்லையே" என்று கூட கேட்க நேரலாம். இந்தச் சட்டம் நிறைவேற்றுவதன் மூலம் தகுந்த துவக்கப் பணியைத் தொடங்குவதற்கும் செய்வதற்கும் தான் என்று நான் சொல்ல விரும்புகிறேன். பிளானிங் என்று போடப்படுகிற திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட முடிவதில்லை. அதுவும் டவுன் பிளானிங்கைப் பொறுத்த வரையில், ஒழுங்கு படுத்துகிற

வேலையைச் செய்கிறோம். அதற்குப் பிறகு ஏற்படுகிற வளர்ச்சிக் கேற்ப இந்தத் திட்டத்தினுடைய நோக்கம் தடைப்படாது நிறைவேறு மானல், நம்முடைய லட்சியம் நிறைவேறியதாக ஆகும். எனவே அந்த முறையில் திரு. காமோதரன் அவர்கள் கூறியது போன்று அதற்கான சட்ட வடிவம் பெறுவதை இது "எனேப்லிங் அமெண்ட்மெண்ட் ஆக்ட்" என்று சொன்னார்கள். அந்த முறையில் சென்னை பெருநகர்ப் பகுதி பெற வேண்டிய சில சீரமைப்பு வசதிகளைப் பெறச் செய்வதற்காக, இந்த அடிப்படையான வளர்ச்சியை உள்ளத்தில் கொண்டு அதற்குத் தேவையான அதிகாரத்தைப் பெற்று ஒரு மன்றம் செயல்படுவதற்காக இந்தத் திருத்த மசோதா இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவரவர்களும் தெரிவித்த கருத்துக்களுக்கு நான் இயன்ற அளவிற்கு விளக்கங்களைக் கூறியிருக்கிறேன். எல்லா விளக்கங்களையும் கூறுவது என்பது இந்தக் குறைந்த நேரத்தில் இயலாத காரியம். எனவே, இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று அவையோரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன்னுள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/73) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந் தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/73) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, நகர-நாட்டுப்புற அமைப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 31/73) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



## (4) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/73).

மாண்புமிகு திரு எஸ்.ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு @ சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"
என்று முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1/1959) கோதுமைப் பொருள் விற்பனை மீது பல முனையில் விதிக்கப்படும் 1 சதவிகித வரிக்குப் பதிலாக முதல் விற்பனை முனையில் 2 சதவிகித விற்பனை வரி விதிப்பதென அரசு முடிவு செய்தது. இம்மாநிலத்தில் முதல் கொள்முதல் முனையில் வேர்க்கடலை மீது விதிக் கப்பட்ட $1\frac{1}{2}$ சதவீதத்திற்குப் பதிலாக மூன்று சதவீத வரி விதிப்பதெனவும் அரசு முடிவு செய்தது.

1972-ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி (திருத்த) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 61/1972) மூலம் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 14, 15-வது பிரிவுகளில் செய்யப்பட்ட திருத்தங்களின் விளைவாக மேற்சொன்ன மாநிலச் சட்டத்தில் தகுந்த திருத்தங்களைச் செய்யவேண்டியதும் அவசியமாயிற்று.

அதற்கிணங்க, மேற்சொன்ன நோக்கங்களை எய்தும் பொருட்டு, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) அவசரச் சட்டம் சாற்றுரைக்கப்பட்டது. மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்ட மன்றத்தின் சட்டம் ஒன்றைக் கொண்டு வர மேலவைமுன் தற்போது வைக்கப்பட்டுள்ள சட்ட வரைவு விழைகிறது.

மேல் முறையீட்டு உதவி ஆணையாளர்கள் தற்போது விற்பனைவரி மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரது நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர். இச்சட்டத்தின் 34 ஏ பிரிவின் கீழ் மேல் முறையீடுகளை மாற்றுவதற்கான அதிகாரம், வருவாய்த் துறை வாரியத்திற்குப் பதிலாக, விற்பனை வரி மேல் முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரால் செலுத்தப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. எனவே, இச்சட்டவரைவின் மூலம் மேற்படி சட்டத்தின் 34 ஏ பிரிவைத் தகுந்தவாறு திருத்தக் கருதப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் மீது ஒரு முனையில் விதிக்கப்படும் வரி வீதத்தையும் $5\frac{1}{2}$ சதவீதத்திலிருந்து $8\frac{1}{2}$ சதவீதமாக உயர்த்த முடிவு செய்யப்

@ 142-148ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1973 டிசம்பர் 3

பட்டது. அதற்கிணங்க மேற்படி சட்டத்தின் முதல் விவர அட்டவணையின் 35-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள வரி வீதத்தைத் திருத்தி, இச் சட்டத்தின் 59 (1) பிரிவின்கீழ் அறிவிப்பு ஒன்று 16—11—1973 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப் பட்டுள்ளது. மேற்சொன்ன அறிவிப்பில் கண்டுள்ளதை இச் சட்ட வரைவின் மூலம் சட்டத்தில் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

இச்சட்ட வரைவு மேற்படி சட்டத்தின் 7-வது பிரிவில் சொல் திருத்தம் ஒன்றைச் செய்யவும் விழைகிறது.

தலைவரவர்களே, இப்பிரேரணையை இம் மாமன்றம் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன் மொழியப்பட்ட தீர்மானம்:— " சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/73) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

***THIRU A. R. DAMODARAN**: Sir, I have nothing very much to say on this Bill excepting to comment that petroleum products seem to be under the shadow of Saturn planet at the present moment with both the Central and the State Governments deciding to tax them heavily out of existence.

Sir, we have all been considerably troubled over the recent hike in the price of kerosene on which the Central Government had first levied an excise duty of Rs. 280 and then reduced it, I think, to Rs. 180. I realise that if the Tamil Nadu Government are raising the sales tax on kerosene from 5½ per cent to 8½ per cent, it is to fulfil one of the important objectives of the Government of India which was desirous of seeing that kerosene was no longer used as a fuel in motor vehicles. Even today, Sir, after having raised this tax from 5½ per cent to 8½ per cent, may I bring to the notice of this Government that the ex-installation price of kerosene in Madras today is Rs. 802·89 per kilo litre as against the price of Rs. 857 and odd for high speed diesel oil. There is still a difference of Rs. 55 per kilo litre which has to be evened out in some way. Either the Government may reduce the price of high speed diesel oil or reduce the tax on high speed diesel oil, or possibly in the next Budget they may come forward with a little further increase in the duty on kerosene. I am not going to analyse all these, excepting to state that the price of both the commodities should be, as far as possible, equal, to prevent the continuous misuse of kerosene as fuel in motor vehicles. The Government of India have advised all the State Governments, I believe, to bring parity in prices of high speed diesel and kerosene,



1973 டிசம்பர் 3] [Thiru A. R. Damodaran]

They have also made arrangements to see that kerosene is distributed in many centres of distribution and, therefore, realising that this is under extraordinary pressure, I do not wish to protest over this increase of Rs. 4 per kilo litre that the Tamil Nadu Government have effected, considering the massive increase that has been made by the Government of India. Few people realise, Sir, that although the members of Parliament and the Legislatures state that an essential commodity which is required by the common people should be taxed to the minimum possible extent, the excise revenue from kerosene alone to the Government of India, according to the Budget Estimates for 1973-74, is of the order of Rs. 245 crores per annum. In the case of other products like petrol, high speed diesel, the taxation is about Rs. 500 to 600 crores and the Government of India make a total revenue of Rs. 871 crores out of tax on petroleum products. I mention this to point out that kerosene takes away a massive slice amounting to Rs. 250 crores.

Sir, what is the alternative for the poor man to use if kerosene is going to be taxed out of existence? There is no other fuel available. All other fuel from our own State like groundnut oil and gingelly oil are no longer available for lighting purposes. If we are going to increase the price of products only because certain people misuse such products, at that stage, the price of practically every petroleum product will have to be equal to the price of petrol which is at present Rs. 2·71 per litre. I request the Government to show some mercy, because I come from a rural area where kerosene is predominantly used for lighting and also used for cooking purposes as fuel.

In this connection, may I also make a request to the Civil Supplies Minister, because he is intimately connected with kerosene? According to the old order, kerosene was given at 3 litres per month to those earning below Rs. 300 a month; and to those who earned above Rs. 300 per month, the quantity that the Civil Supplies Department has authorised is 6 liters per month. These rules were made a long time ago when kerosene was used only in hurricane lamps. In view of the fact that we have been using kerosene for cooking, the consumption of kerosene is very much more than the three or six litres which the Hon. Minister is pleased to give the consumers. An ordinary household requires at least 10 to 12 litres of kerosene per month and I would strongly urge upon the Government considering the present availability of kerosene which seems to be quite satisfactory and which will continue to be so for the next two or three months at least, to liberalise the orders and see that in urban areas where kerosene is used predominantly as cooking fuel, the amount of kerosene supplied to the household is increased depending on the number of people in the household. What is the point

in giving a bachelor six litres and giving a person who has 10 children also six litres ? Obviously the quantity of food that has to be cooked for the entire family must depend upon the number of members in the family as indicated in the Family Card and I would request the Civil Supplies Department to alter the method of allocating kerosene on the basis of income which is one of the criteria and see that kerosene is given on the basis of the number of persons in the household.

Regarding the other matters mentioned in this Bill, they are all very minor provisions and I do not wish to take the time of this House by referring to them excepting to reiterate that as far as possible we should try to bring down the price of kerosene to a level which will be acceptable to the common people of our country. It is exceedingly difficult in rural areas where they get only one or two litres of kerosene per month for which they have to spend an amount of Rs. 1·60 or Rs. 2 which is approximately 10 per cent of their total household consumption. I would, therefore, stress this point of view although the Government may have other views in this regard. Thank you, Sir.

6-20 மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே,
பி.ப. இந்த கெரோசின் வரியைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் சட்ட மன்றப் பேரவையில் 1973 ஆம் ஆண்டு நவம்பர் 29 ஆம் தேதி அன்று ஒரு அறிக்கை கொடுத்தார்கள். அந்த அறிக்கையில்

On 9th November 1973 the Government of India notified a reduction in the basic selling price of kerosene at Madras Port bringing it to Rs. 727·1 per kilo litre. The Government of India have also authorised the Indian Oil Corporation to levy a surcharge of Rs. 10 per kilo litre. It means that the ex-refinery price will be Rs. 737 per kilo litre. With the levy of existing sales tax of 5·5 per cent, with a surcharge of 5 per cent and the grant of margins to whole-salers and retailers, already fixed by the Government of India and the State Government, the retail sellingprice ofkerosene per litre works out to about 83 paise. As the usual practice is to fix the price of kerosene at multiples of 10 paise or 5 paise (i.e. rounding up) the retail price of kerosene was rounded off to 85 paise per litre in Madras City. This additional margin of 2 paise per litre has been absorbed in the sales tax by raising the sales tax on kerosene from 5·5 per cent to 8·5 per cent with a surcharge of 5 per cent.

எனவே இந்த விலை நிர்ணயம் செய்கின்ற போது, லிட்டருக்கு 83 காசு என்று வருகின்றபோது, அது பக்கத்தில் ஐந்து பைசா, பத்து பைசா என்று கொண்டு வருகின்ற நிலையில் 85 காசாக ஆகிறது. இது விற்பனையாளர்களுக்கு எதிர்பாராத லாபமாகிறது (அன்இன்டெண்டட் பெனிபட்)



இந்த இரண்டு பைசா அதிகமாகக் கிடைக்கின்ற நிலையில் 5.5 சதவீதம் என்று இருந்தது 8·5 சதவிகிதம் ஆக உயர்த்தப்பட்டது. அதற்குள்ளேயே இந்த 8·5 சதவிகிதம் வரியும் சேர்ந்திருக்கிறது. 85 பைசாவுக்கு அதிகமாக விற்பதற்கு வாய்ப்பு இல்லை,

**There is no increase in the retail price of kerosene—it is 85 paise per litre—as a result of the increase in the tax from 5½ per cent to 8½ per cent. It is only to take away the unintended benefit of 2 paise per litre that has been going to the retailer that the rate has been increaseid to 8½ per cent. The Government has already made it clear that ths increase in the rate does not increase the retail price of 85 paise. It does not at all affect the consumer.**

இந்தக் கிரோசினைப் பற்றித்தான் மாண்புமிகு உறுப்பினர் கருத்து சொன்னார். மற்றவற்றையெல்லாம் ஒத்துக்கொண்டதாகக் கருதுகிறேன். எனவே, இந்த மாமன்றம் இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது சட்ட முன்வடிவு பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(பரிந்துரை எதுமில்லை).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, " சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த ) சட்ட முடிவடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 40/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**(5) தமிழ் நாடு, 1973-ஆம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/73).**

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

தமிழ் நாடு 1951-ஆம் ஆண்டு சம்பளங்கள் கொடுத்தல் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 20/1951) 7-ஆவது பிரிவின்படி, அமைச்சர்கள், சட்ட மன்றப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்றப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவர், சட்டமன்ற மேலவையின் எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்றப் பேரவையின் அரசுத் தலைமைப் பாகர் (சீப் கவர்மெண்ட் விப்) சட்டமன்ற மேலவையின் அரசுப் பாகர் முதலியோர்க்கு அளிக்கப்பட்டுள்ள மோட்டார் வண்டிகளைப் பேணிவரல்—பழுதுபார்த்தல் முதலிய பணி, அரசாங்க விதிகளால் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இம் மோட்டார் வண்டிகளுக்குப் பெட்ரோல் வழங்குவதும் மாநில அரசினால் செய்யப்பட்ட விதிகளால் முறைப்படுத்தப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, அமைச்சர்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் தலைவர், துணைத் தலைவர், சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்ற மேலவையின் எதிர்க் கட்சித் தலைவர், சட்டமன்றப் பேரவையைச் சேர்ந்த அரசுத் தலைமைப் பாகர், சட்டமன்ற மேலவையைச் சேர்ந்த அரசுப் பாகர் ஆகியோருக்கு மோட்டார் வண்டிப் படி அனுமதிக்கப்படமாட்டாது. எனவே, அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டு வந்த மோட்டார் வண்டிப் படி தொடர்பான குறிப்புகளை இச் சட்டத்தில் நீக்கிவிடக் கருதப்பட்டுள்ளது.

இப்பிரேரணையை இம்மேலவை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம்—
" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் இரண்டாவது (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ".

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பாகர் என்று சொல்லப்படுகிறது. அது என்னவென்று தெரியவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பாகர் என்றால், கொறடா அல்லது "விப்" என்பது.

---

@ 149–150-ஆம் பக்கங்களில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இன்று காலை நாளிதழ் ஒன்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மாதந்தோறும் சராசரியாக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்பதை விவரமாகக் கொடுத்திருந்தது. அந்த அளவுக்கு பாராளுமன்ற உறுப்பினருக்குச் செலவழிக்கப்படும் தொகை நியாயமானது என்பதை ஆதரிப்பவன் நான். ஏனென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுவாழ்க்கையில் ஈடுபடுகிறார்கள் என்ற காரணத்தாலே, அவர்கள் தங்கள் சௌகரியங்களைக் குறைத்துக்கொண்டாக வேண்டும் என்பது நியாயமற்றது. அவர்களது நியாயமான தேவை யாவும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதன் அடிப்படையில் என்னுடைய யோசனைகள் ஒன்றிரண்டைக் கூற விரும்புகிறேன்.

தமிழ் நாடு சட்ட மன்ற உறுப்பினர்களைப் பொறுத்த மட்டில், பல வசதிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவற்றை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையிலிருக்கிறோம். குறிப்பாக, லெஜிஸ்லேட்டார்ஸ் ஹாஸ்டலில், நாங்கள் கூட்டத்திற்கு வரும்போது இலவசமாகத் தங்க வசதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், இடைக்காலத்தில் வெளியிலிருந்து வருபவர்கள் அதைப் பயன்படுத்துகின்ற நிலைமையுள்ளது. அங்கேயிருக்கின்ற சோபா-கம்-பெட் மற்றும் பர்னிச்சரைப் பார்த்தால், பிளேடு வைத்துக் கிழித்திருக்கிறார்கள். யார் கிழித்தார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் வரும்போது, அவை உபயோகத்திற்கு ஏற்றதாக இல்லை. எனவே, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு அறையை இலவசமாகக் கொடுத்துவிடலாம். அவ்வாறு செய்வதில் மற்றொரு பயனும் உள்ளது. அதனால் லெஜிஸ்லேட்டார்ஸ் ஹாஸ்டலை மெயின்டெயின் பண்ணும் செலவு வெகுவாகக் குறைக்கப்படும். ஆகவே, அந்த முறையில் ஒவ்வொருவருக்கும் ஒரு அறையை இலவசமாக வழங்க தமிழ் நாடு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்; அல்லது மிகவும் எளிமையான வகையில் சிறிய சிறிய வீடுகளாக, நான்கு நான்கு வீடுகளாகக் கட்டிக் கொடுத்து விட்டு, தற்போது உள்ள கட்டிடத்தினை ஏதேனும் ஹோட்டலுக்கு வாடகைக்கு விட்டால் கூட, பயனுள்ளதாக இருக்கும்.

அடுத்து, தொலைபேசி விஷயத்திற்கு வந்தால், அந்த வசதியைப் பெற்றுள்ள உறுப்பினர்களுடைய செலவு வேகமாக அதிகரித்துள்ளது. உண்மையில் நான் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கு முன்னால், தொலைபேசிக்கு மூன்று மாதத்திற்கு ரூ. 200 செலவு செய்து கொண்டிருந்தேன். இப்போது 560 ரூபாய் செலவழிக்கிறேன். இது வேண்டுமோ வேண்டாமோ, அந்த அளவு செலவு ஏற்பட்டுவிடுகிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மாதத்திற்கு "லம்ப் சம்" ஆக டெலிபோன் அலவன்ஸ் ரூ. 50 கொடுக்கப்படுமானால், மிகவும் வரவேற்கத்தக்க முடிவாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன். இது ஆசிரியர் குறையல்ல, சட்டமன்ற உறுப்பினர் குறை. அதிகமான கோரிக்கைகள் இல்லை. இதை அனைத்து உறுப்பினர்களும் வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். ஆளுங் கட்சி உறுப்பினர்கள் கூட இதைச் சங்கடமாக நினைத்து எடுத்துக் கூற முன்வருவதில்லை. அவர்களும் இந்தத் தீர்மானத்தை வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன். வட இந்திய மாநிலங்கள் சிலவற்றில் உறுப்பினர்களுக்கு, ரெயில்வே பாஸ்

வழங்கியிருக்கிறார்கள். குறிப்பிட்ட கிலோ மீட்டர் தூரம்வரை பயன்படுத்தலாம் என்று கூறி, அதுமாதிரி ஒரு ரயில்வே பாஸ் வழங்க வேண்டு மென்று அரசைக் கேட்டுக்கொண்டு, இதை வரவேற்று அமைகிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இதில் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக நான் முதலில் மகிழ்ச்சியடைகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னால், முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர் பிரதிநிதிகள் ஆசிரியர் பிரச்சினைகளையே பேசிக்கொண்டிருக்கிறார்கள், மற்ற பிரச்சினைகளைப் பற்றி பேச வேண்டு மென்று சொன்னார்கள். முதன் முதலில், ஆசிரியர் பிரச்சினையை விட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் பிரச்சினையை எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். காலையில் சட்டமன்ற நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன். லவுஞ்சு ரூமிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில், சட்டமன்ற உறுப்பினர்களுடைய வசதியை இன்றைக்குள்ள விலைவாசிக்கு ஏற்றாற்போல் அதிகமாக்கித் தரவேண்டுமென்று சொன்னபோது, ஒரு உறுப்பினர், முதலில் முதல்வர் அவர்களுடைய பெயரைச் சொல்லி, கருணையும் நிதியும் அவர்களுடைய பெயரில் இருக்கிறது, இரண்டையும் அவர்கள் தருவார்கள் என்று சொன்னார்கள். அதற்கு முதல்வர் அவர்கள் கருணை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். சட்ட அமைச்சர் அவர்கள் பேசி முடித்த பிறகு, நிதி தருகிறேன், ரூ. 25-லிருந்து ரூ. 35 தருகிறேன் என்று சொன்னார்கள். அந்த அவையிலே சொன்னதற்குக் காரணம், பணத்தைப் பாஸ் செய்யக்கூடியவர்கள் அங்குள்ளவர்கள். அது நிச்சயம் நமக்கும் வந்துவிடும் என்று எனக்குத் தெரியும். சட்ட ரீதியாக அவர்களுக்கு என்னென்ன வசதிகள் உண்டோ, அவையெல்லாம் நமக்கும் உண்டு. அதற்காக அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : ஆசிரியர் பிரதிநிதிகளுக்கும் உண்டு என்று சொல்லுகிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : அரசு ஊழியர்களுக்கு ஒரு சலுகை என்று சொல்லும்போது ஆசிரியப் பிரதிநிதிகளுக்கும் உண்டு. அது தனியார் பள்ளி ஆசிரியர் பிரதிநிதிகளுக்கும் உண்டு என்று சொல்லுகிறார்கள். அதேபோல்தான் அரசு ஊழியர்கள் என்றால், அதில் ஆசிரியர்களும் அடங்க வேண்டு மென்று சொல்கிறோம். அரசு ஊழியர்கள் என்ற ஒரே தலைப்பில் அவர்களையும் கொண்டுவாருங்கள் என்ற கோரிக்கையை வைக்கிறோம். இப்போது, ஒரே தலைப்பில், இரண்டு தலைப்பு இல்லை, என்ற அளவில் இந்தச் சலுகை இருப்பதற்காக அதை நான் வரவேற்கிறேன். அடுத்து, நண்பர் திரு. கணபதி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக வீடு ஒன்று வழங்க வேண்டு மென்று கேட்டார்கள். இன்று நாட்டிலுள்ள ஏழைகளுக்கு வீடு கட்டித்தர வேண்டிய திட்டம் இருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்குப் பொருளாதார ரீதியில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அம்மாதிரி நேரத்தில் புதிதாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்டி, அதையும் இலவசமாகத் தருகின்ற சக்தி தமிழ் நாடு அரசுக்கு இப்போது இல்லை என்பதைத்



தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1967-ம் ஆண்டு வரை இருந்த நிலை வேறு. அப்போது சட்டமன்றம் கூடுகின்ற நாட்களிலேகூட தங்கியிருக்கின்ற அறைகளுக்கு அங்கத்தினர்கள் வாடகை கொடுக்க வேண்டுமென்ற நிலை இருந்தது. அறிஞர் அண்ணா அவர்கள் வந்த பிறகுதான் சட்டமன்ற அங்கத்தினர்கள் சட்டமன்றம் கூடுகின்ற காலத்திலே இலவசமாகத் தங்கியிருக்கலாம் என்று அறிவித்தார்கள். அவர்களுடைய வழியிலே நிற்கக் கூடிய கலைஞர் அவர்கள், பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடியவர்கள், அவர்களை விட வேகமாகச் செயல்படக்கூடியவர்கள் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கத்தினர்கள் இலவசமாகத் தங்கியிருப்பதற்காகத்தான் கேட்கிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தனித் தனி வீட்டைக் கொடுக்கின்றார்கள். நாங்கள் வீடுகூட கேட்கவில்லை. ஒரு அறை தான் கேட்கிறோம். அன்றைக்கு இருந்த நிலைமை வேறு. இன்று நாங்கள் அறைக்கு, அலுவலகத்திற்கு வந்தால், பிரச்சினைகள் வருகின்றன. அவைகளைக் கவனிக்க வேண்டிய நிலைமைகள் கூடிக்கொண்டே இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, வருகிற போகிற மக்கள் தொகை 2 லட்சம் இருக்கின்றது. அவர்களில் பலர் பிரதிநிதிகளைப் பார்க்க வருவதும், பிரதிநிதிகள் அவர்களை அழைத்து வருவதும், அந்த மக்கள் மத்தியிலே எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று பிரதிநிதிகள் வருவதும் இந்தக் காலத்தில் வளர்ந்து கொண்டிருப்பதையும், அதற்காக அடிக்கடி வந்து போகவேண்டிய அவசியமும் அங்கத்தினர்களுக்கு இருக்கின்றது. இதையெல்லாம் முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக அறிவார்கள். என்னைப் பொறுத்த அளவில் நான் சட்டமன்ற உறுப்பினராக ஆனதிலிருந்து எனக்கு இருக்கின்ற பிரச்சினை வாடகை செலுத்துவதுதான். மாதத்தில் அநேக நாட்கள் இங்கு இருக்க வேண்டியிருப்பதால் அறையைக் காலி செய்யாமலேயே வாடகை தந்து கொண்டிருக்கின்றேன் என்பதையும், என்னுடைய பணியைச் செம்மையாகச் செய்வதற்கு இந்த வசதி தேவைப்படுகிறது என்பதையும், அதற்காக இதுவரையிலும் நான் வாடகை செலுத்தி வருகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அறைகள் இலவசமாகத் தருவதன் மூலம் என்னுடைய பணியை இன்னும் மகிழ்ச்சியோடு செய்வதற்கும், பொருளாதாரக் கஷ்டத்தைத் தீர்ப்பதற்கும் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 6-30 பி

அடுத்து, நான் ஆசிரியாராக இருக்கும்போது, எனக்கு மருத்துவச் சலுகை இருந்தது. இப்போதும் இருக்கிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக ஆகிவிட்ட பிறகு எனக்கு மட்டுமே சலுகை இருக்கின்றது. ஆனால் என் குடும்பத்திற்கு இப்போது இல்லை. அதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதிலே ஒன்றும் பெரிய பிரச்சினை வந்துவிடாது. நான் சட்ட மன்ற உறுப்பினராக இருக்கும்போது, எனக்கு மட்டுமே மருத்துவச் சலுகை தந்துவிட்டு என்னுடைய குடும்பத்திற்கு இல்லாமல் இருக்கின்றது. நான் ஆசிரியராக இருந்தபோது பொருந்திய மருத்துவச் சலுகை நான் சட்ட மன்ற உறுப்பினரான பிறகு பொருந்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சட்ட மன்ற உறுப்பினராக வந்த காரணத்தினால், அந்தச் சலுகையில்லையா ? அந்தச்

சலுகையை அளிப்பதனால் என்றும் கஷ்டம் வந்துவிடாது. அங்கத்தின ராக இருக்கும் பீரியட் வரைக்கும் தானே தரப்போகிறோம். சட்ட மன்ற உறுப்பினர்கள் குடும்பத்திற்கும் அந்த மருத்துவச் சலுகை அளிக்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

**அடுத்து, இலவச ரயில் பாஸ்.**

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, சட்ட மன்றம் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்கு இப்போது இருக்கின்ற இடத்திலேயே இலவசமாக இடம் அளிக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கின்றது. அதைப்பற்றி நான் ஒன்றும் இப்போது சொல்வதாக இல்லை. அதைப்பற்றி யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அதற்கு முன்பு மாண்புமிகு அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்வது ஒன்று. இப்போது அவர்கள் அறைகள் சட்ட மன்ற உறுப்பினர்கள் பெயரில் எடுக்கப்பட்டு வேறு சிலர் அந்த அறைகளிலே தங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அது செம்மையானது அல்ல, நேர்மையானது அல்ல. அதுபற்றி சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒரு நல்ல முடிவிற்கு வந்தால் அதை மெச்சுகிற அளவிலே இந்தப் பிரச்சினைகளை ஏற்பது பற்றிப் பரிசீலிக்கலாம்.

<u>திரு. செ. முத்துசாமி</u> : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அப்படி இருக்கக்கூடியவர்கள் இருக்கின்ற காரணத்தினாலே, அவர்கள் அப்படி வேண்டிக் கொள்கிறார்கள். என்னைப பொறுத்த வரையில் நான் சொல்வேன். வேறு யாருக்கும் நான் விடுவதில்லை. முதலமைச்சர் அவர்கள் அந்த நிபந்தனையைச்சொல்லும்போது, அந்த நிபந்தனைகளை உடனடியாக ஏற்கிறோம் என்பதைச் சொல்லி, முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதற்கான முறைகளிலே பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, பஸ்களிலே பிரயாணம் செய்வது. எல்லா இடங்களுக்கும் எல்லோருக்கும் பஸ் பிரயாணம் செய்ய இயலுவதில்லை. என்னைப் போல் இருக்கக்கூடிய இளைஞர்கள், இரவில் பல கூட்டங்களுக்குச் சென்று திரும்ப, பல நேரங்களில் ஆசிரியப் பெருமக்களைச் சந்தித்து, அவர்களைப் பார்த்துக் குறைகளைக் கேட்டு வருவதற்கு சங்கடமாக இருக்கின்றது. ஆகவே ரயில் பிரயாணம்தான் வசதியாக இருக்கும். பலர் அண்மையில் நடைபெற்ற "ஸ்பீக்கர்ஸ்" மகாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் உத்தர பிரதேசத்திலிருந்து, இன்னொரு மாநிலத்திலிருந்து வந்தவர்கள், எம்.எல்.ஏ.க்கள் எம்.எல்.சி.க்கள் வந்தவர்கள் இரண்டு பேர்கள் தங்களுடைய டோக்கனைக் கொண்டுவந்து காட்டினார்கள், எஸ்டேட் ஆபீஸர் அலுவலகத்தில். அது என்ன டிக்கட் என்றால் ஆயிரம் கிலோ மீட்டர் டிக்கட், 200 கிலோ மீட்டர் டிக்கட், 50 கிலோ மீட்டர் டிக்கட், 10 கிலோ மீட்டர் டிக்கட் என்று வைத்திருக்கிறார்கள்.



அதைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பிரயாணம் செய்துவிட்டு மீண்டும் சென்று வாங்கிக் கொள்ளுகின்றார்கள். அத்தகைய பாஸ் வசதி அவர்களுக்கு வைத்திருக்கின்றார்கள். அது நமக்கும் வசதியாக இருக்கும். பொதுவாழ்விலே இருப்பவர்கள் உடல் நலம் எப்படியெல்லாம் பாதிக்கப்படும் என்பதைப் பற்றி முதல்வர் அவர்கள் அறிவார்கள். அவர்களே என் உடல் நலம் பற்றி விசாரிக்கும் போது, உடல் நலத்தை சற்றே கவனித்துக் கொள்ளுங்கள், எப்போதுமே பொதுவாழ்வில் இருக்கக் கூடியவர்களுக்குச் சங்கடங்கள் இருக்கும். கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். ரயிலிலே பிரயாணம் செய்வது கொஞ்சம் உடல் நலம் காத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஆகவே ரயிலில் செல்வதற்கு பாஸ் அளிக்க வேண்டுமென்று நான் அன்போடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன். அதை உடனடியாக வழங்க வேண்டும். ஓரிரண்டாண்டுக்கு முன்னால் பஸ்ஸிலே செல்வதற்கான வசதியைத் தந்தீர்கள். இப்போது காலம் விரைந்து செல்கிறது. நம் தேவையும் அதிகரிக்கிறது. ஆகவே ரயிலில் செல்வதற்காக சற்றே முன்னேற்றமானதாக இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பினை அளித்ததற்கு நான் நன்றி கூறிக்கொள்கின்றேன். முதல்வர் அவர்கள் அறைகள் வாடகையின்றி இலவசமாகக் கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். அது பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லி விட்டார்கள். அப்படிப் பரிசீலனையில் இருந்தாலும், நிச்சயமாக வந்துவிடுமென்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. அத்துடன் முதல்வர் அவர்கள் ஒரு நிபந்தனையைச் சொன்னார்கள். அந்த நிபந்தனையை இங்கு இருப்பவர்களும், சட்டப் பேரவையில் இருப்பவர்களும் நிறைவேற்றித் தருவோம் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்ததாக, பட்ஜெட்டிலே ஊதியப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். ஆசிரியர்களுக்கு ஊதியம் வேண்டுமென்று கேட்டுப் பழக்கப்பட்டவன் என்றாலும்கூட, சட்ட மன்ற அங்கத்தினர்களுக்கே சற்று ஊதியம் தேவை, கொஞ்சம் ஊதியத்தை நீங்களும் கேட்க வேண்டுமென்பதற்காக பல அங்கத்தினர்கள் கண்ணால் அசைத்துக் காண்பிக்கும் அறிகுறிகள் எல்லாம் நம் அங்கத்தினர்கள் மத்தியிலே தென்படுகின்றன. ரூ. 350-லிருந்து அதை எவ்வளவு அளவுக்கு உயர்த்தித் தரமுடியுமோ அந்த அளவுக்கு உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இதைக் கேட்பதிலே நான் வெட்கப்பட வேண்டுமென்ற அவசியமில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையிலே, மற்ற ஊழியர்களுக்கெல்லாம் நாம் தருகிறோம். ஆசிரியர் பிரதிநிதிகளாக வருபவர்கள், மக்கள் பிரதிநிதிகளாக வரக்கூடியவர்கள் தாங்கள் வாழ்க்கையையும் நாணயமாக, நாகரீகமாக வாழ்ந்து மற்றவர்களுக்கு பொதுவாழ்விலே சேவை செய்வதற்கு, அவர்களுக்கு இருக்கவேண்டிய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய அளவுக்கு ஊதியம் தேவை. சென்னையிலே எந்த அளவுக்குத் தேவை என்பதை நான் சொல்லத் தேவையில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். நிதித் துறைச் செயலாளர் அவர்களுக்கும் தெரியும். அவரும் சென்னையில்

இருக்கின்றவர்தான். அது மட்டுமல்ல, முதல்வர் கருணையை உள்ளத்திலே வைத்திருக்கக் கூடியவர்கள். அந்தப் பெயரையும் அவர்களுக்கு வைத்திருக்கின்றார்கள். ஆரம்ப காலத்திலே அவருடைய பெற்றோர்கள் முதல்வராக வருவார்கள் என்று எண்ணி வைக்கவில்லை. அவர்கள் குழந்தை மேலுள்ள அன்பினால் வைத்தது. ஆனால் அவர் இன்றைக்கு இரண்டினையும் தரக்கூடிய ஒரு சக்தி பொருந்திய இயக்கத்தினுடைய தலைவராகவும் முதலமைச்சராகவும் இருந்து தரக்கூடிய சக்தியோடு இருக்கின்றார்கள். அவர்களிடத்திலே அந்த சக்தி இருக்கின்றது. அந்தச் சக்தியை நாங்கள் கேட்கிறோம். அவர்கள் கொடுப்பவராக இருக்கின்றார்கள். நாங்கள் கேட்பவர்களாக இருக்கிறோம். நாங்கள் கேட்டுவிட்டோம், இனி அவர்கள் நிச்சயமாக மறுக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு நன்றி கூறி நான் விடை பெறுகிறேன்.

மாண்புமிகு செ. மாதவன் : தலைவர் அவர்களே, பெரும்பாலும் இந்த மசோதாவை வரவேற்று சட்ட மன்ற அங்கத்தினர்களுக்குச் சில வசதிகள் தேவை என்று பேசப்பட்டது. இது பெரும்பாலும் நிதிநிலை அறிக்கை வரும்போது, இந்தத் துறையைப் பற்றிப் பேசும்போது கூற வேண்டிய கருத்து. இதைப்பற்றி அப்போது பரிசீலிக்கப்படும் வாய்ப்பு ஏற்படும் என்று கருதி இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை, மேலவை நடைபெறும் நாட்களிலே உறுப்பினர்களுக்கு இப்போது நாட்படியாக தரப்படும் ரூ. 25 இனி ரூ 35 ஆக ஆக்கப்படும் என்று அறிவித்தேன். இதை நம்முடைய நண்பர் திரு முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டுவிட்டார்கள். சட்டப் பேரவையில் குறிப்பேட்டிலிருப்பது போல, இது மேலவையிலும் பதிவாக்கப்பட வேண்டும் என்ற சம்பிரதாயத்திற்கு ஏற்ப பேரவையில் அறிவித்த அந்த அறிவிப்பு இங்கே குறிப்பேட்டிலும் பதியப்பட வேண்டும் என்று இதை அறிவிக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, சம்பளம் வழங்குதல் இரண்டாவது (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

(பரிந்துரை எதும் இல்லை).



மாண்புமிகு திரு செ. மாதவன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் இரண்டாவது (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் இரண்டாவது (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/73) திருப்பியனுப் பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

## அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutery Rules and Orders

104. Notification issued with G.O. Ms. No. 169, Co-operation, dated the 30th April 1973 in regard to an amendment to Rule 85-N of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [*Laid on the table of the House under section* 119(4) *of the Tamil Nadu Co-operative Societies Act*, 1961 (*Tamil Nadu Act* 53 *of* 1961)]. பிற்பக 6 5

105. Notification issued with G.O. Ms. No. 2384, Rural Development and Local Administaration, dated the 2nd November 1973 in regard to exclusion of the (Nachimuthugoundenpudur and Samathur Villages) areas in S.F. Nos. 187 to 191 and 393 to 400 from the jurisdiction of Dharapuram Municipality. [*Laid on the table of the House under section* 304(d) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920.)]

106. Order uissued with G.O. Rt. No. 1814, Revenue, dated the 4th October 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge for the benefit film shows organised by the Student Activities Fund, Indian Institute of Technology, Madras on 4th and 5th October 1973. [*Laid on the table of the House under section* 16(4) *of the Tamil Nadu Entertainments Tax Act* 1939 (*Tamil Nadu Act X of* 1939)].

107. Order issued with G.O. Rt. No. 1790, Revenue, dated the 27th September 1973, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surchage for the benefit film show irganised by the Arjuna Scout Group, Madras at 10 a.m. on 14th October 1973 at Kamala Theatre, Madras. [*Laid on the table of the House under section* 16(4) *of the Tamil Nadu Entertainments Tax Act* 1939 (*Tamil Nadu Act X of* 1939)].

108. Order issued with G.O. Rt. No. 1778, Revenue, dated the 25th September 1973 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge for the benefit film show organised by the Indo-Nippon Cultural Exchange Society at Rajeswari Kalyana Mandapam on 22nd and 23rd September 1973. [*Laid on the table of the House under section* 16(4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939).]

109. Notification issued with G.O. Ms. No. 1782, Rural Development and Local Administration, dated the 30th August, 1973 in regard to extension of term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board. [(*Laid on the table of the House under section* 29(3) *of the Tamil Nadu Khadi and Village Industries Board Act*, 1959 (*Tamil Nadu Act* 18 *of* 1959)].

110. Notification issued with G.O. Ms. No. 369, Excise and Prohibition ,dated the 6th November 1973 in regard to an amendment to the Notification II-1 No. 780 dated the 4th February 1972 published at pages 229—230 in Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette dated 1st March 1972. [*Laid on the table of the House under section* 34(5) *of the Tamil Nadu Excise Act*, 1971 (*Tamil Nadu Act* 34 *of* 1971)].

111. Notification issued with G.O. Ms. No. 1405, Rural Development and Local Administration, dated the 17th July 1973 making the rules in regard to the Co-option of women and members of the Scheduled Castes and Scheduled Tribes to Panchayat Union Council. [*Laid on the table of the House under section* 199(2) *of the Tamil Nadu Panchayats Act* ,1953 (*Tamil Nadu Act XXXV of* 1958)].

112. Notification issued with G.O. Ms. No. 131, Excise and Prohibition, dated the 12th April, 1973, read with the Government Memorandum No. 6319/E and P. II/73-3, Excise and Prohibition, dated the 15th June 1973 in regard to an amendment to the Madras Liquor (Licence and Permit) Rules, 1960. [*Laid on the table of the House under section* 34(5) *of the Tamil Nadu Excise Act*, 1971(*Tamil Nadu Act* 34 *of* 1971)].



113. Notification issued with G.O. Ms. No.2339,Public (Elections-IV) dated the 30th August 1973 in regard to amendments to the Tamil Nadu Legislature Travelling Allowance Rules, 1955. [*Laid on the table of the House under section* 14(3) *of the Tamil Nadu Payment of Salaries Act*, 1951 (*Tamil Nadu Act XX of* 1951)].

B. Reports, Notifications and Other Papers.

49. Notification issued with G.O. P. No. 597, Labour and Employment, dated the 12th September 1973 in regard to an amendment to Schedule II of Workmen's Compensation Act, 1923 (Central Act VIII of 1923).

50. Report and Proceedings of the Rules Committee of the Tamil Nadu Legislative Council Rules.

*51. The Motor Vehicles (Tamil Nadu Amdendment) Bill, 1973 (L.A. Bill No. 28 of 1973), as passed by the Legislative Assembly.

*52. The Tamil Nadu Hackney Carriage (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 34 of 1973) as passed by the Legislative Assembly.

---

* Circulated to all M.L.Cs. on 1st December 1973.

## இணைப்பு I

[81 ஆம் பக்கத்தில் இனம் 7 (1)-க்கான அடிக் குறிப்பைக் காண்க.]

L.A. BILL No. 28 OF 1973.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Motor Vehicles Act*, 1939, *in its application to the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title, extent and commencement.*—(1) This Act may be called the Motor Vehicles (Tamil Nadu Amendment) Act, 1973.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) Section 3 shall be deemed to have come into force on the 1st October 1970.

2. *Amendement of section* 68, *Central Act IV of* 1939.—In Section 68 of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939) (hereinafter referred to as the principal Act), in sub-section (2), after clause (*bb*), the following clause shall be inserted, namely :—

"(*bbb*) the fees to be paid in respect of revision petitions under section 64-B ;".

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தப் பஞ்சாயத்து அதிக கம்போஸ்ட் உரம் தயாரிக்கிறதோ, அதற்கு ரூபாய் 250 பரிசு அளிக்கப் பட்டு வருகிறது.

### *Labour Courts*

*** 200 Q.—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Labour be pleased to state—**

**(a) whether any representation has been received by the Government about the hardships experienced by the Labour Unions and Labourers due to the shifting of Labour Courts from High Court, Madras to Nungambakkam ; and**

**(b) if so, the steps taken thereon by the Government ?**

### தொழிலாளர் நீதி மன்றங்கள்

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழில் நீதி மன்றம், சென்னை உயர் நீதி மன்றத்தில் இருந்து வந்தது மாற்றப்பட்டு தற்போது நுங்கம்பாக்கத்தில் உள்ளதால், தொழிற் சங்கத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளது என்று முறையீடுகள் ஏதேனும் வரப்பெற்றுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) அனைத்து இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கே. எம். சுந்தரம் கருத்துத் தெரிவித்ததன்படி நுங்கம்பாக்கத்திலிருந்து தொழிலாளர் நீதி மன்றங்களை வட சென்னையில் ஜார்ஜ் பகுதியில் அமைந்துள்ள ஒரு கட்டிடத்திற்கு மாற்றுவது பற்றி 1973 ஜூலையில் குற்றாலத்தில் நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் 26-வது கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. விவாதத்தின் போது, இது பற்றி உயர் நீதிமன்றத்துடன் கலந்தாலோசித்துப் பரிசீலிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர், உயர் நீதிமன்றத்துடன் இதுபற்றிக் கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டது. உயர்நீதி மன்றத்தைச் சுற்றியுள்ள பகுதியில் தகுந்த தோர் கட்டிடத்தை ஏற்பாடு செய்யும் முயற்சியில் உயர்நீதிமன்றம் தற்போது ஈடுபட்டுள்ளது.

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, தற்போது நடைபெற்று வருகின்ற இந்தத் தொழில் நீதிமன்றக் கட்டிடத்தில் மூன்று தொழில் நீதிமன்றங்கள் அமைந்து விசாரணை நடத்துகின்ற காரணத்தால், தொழில் தகராறுகள் விரைவில் தீர்வு செய்யப்படாமல் இருக்கின்றன. இதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இதிலே உள்ள சிரமங்களை இந்த இலாகாவினர் அறிந்திருக்கிற காரணத்தால் பல கட்டிடங்களைப் பார்த்தார்கள். நீதிமன்றங்கள் வைப்பதற்கான வகையில் அந்தப் பகுதியில் கட்டிடங்கள் கிடைக்கவில்லை. ஆகையினால் இப்பொழுது உள்ள நீதிமன்றக் கட்டிடத்திற்குள்ளேயே ஒரு கட்டிடம் கட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. Chairman : Questions 191 and 192 are postponed.

Questions are over.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

(1) அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர் நியமனம்.

Mr. CHAIRMAN : I have to announce to the House that under Rule 175 (1) of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members to be the Members of the Committee on Government Assurances for the year 1973–74 :—



[Mr. Chairman]

1 Thiru C. R. Kolappa.
2. Thiru Era. Sambasivam.
3 Thiru M. K. D. Natarajan.
4 Thiru R. Sakthi Mohan.
5 Thiru K. S. Ganapathy.
6 Thiru K. Rajaram.
7 Thiru N. Wilson Appollos.

Under rule 176 (1) of the Council Rules, I have nominated Thiru K. Rajaram to be the Chairman of the Committee on Government Assurances.

(2) அவை 5-ந் தேதி கூடுவது.

Mr. CHAIRMAN : As the consideration of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972 is not yet over in the Legislative Assembly and as the Hon. the Minister for Education will be replying to the debate now, the Bill will be taken up in the Council tomorrow.

The other items in the name of the Hon. the Minister for Education today will also be taken up tomorrow.

The House will be meeting tomorrow at 3 p.m.

## 3. அரசின் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1973.)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மேலவைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1973) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

@190-ஆம் பக்கத்தில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. மு. கண்ணப்பன்]

தமிழ்நாடு, 1959-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 117-வது பிரிவின்படி தமிழ்நாட்டில் செயலில் உள்ள ஏதேனும் ஒரு சட்டத்தில் அல்லது அத்தகைய சட்டத்திற்குக் கீழ் செய்யப்பட்டு இம்மாநிலத்தில் செயலிலுள்ள ஓர் அறிவிப்பு, ஆணை, திட்டம், விதி, படிவம் அல்லது துணை விதியில் கண்டுள்ள வாரியம் அல்லது அதன் தலைவர் அல்லது அதன் ஆணையாளர் ஒருவர் பற்றிய குறிப்பீடு எதுவும், 1951 செப்டம்பர் 30-ஆம் நாள் முதற் கொண்டு அச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டுள்ளதாக கருதப் படும் ஆணையாளர் பற்றிய குறிப்பீடாகக் கருதப்பட வேண்டும்.

சென்னை, உயர்நீதி மன்றம், 1970-ஆம் ஆண்டில் 1016-ஆம் எண் ரிட் மனு குறித்து தனது தீர்ப்பில் அச்சட்டத்தின்படி மேற்படி 117-வது பிரிவின் செயல் வரம்பினைப்பற்றியும் பரிசீலித்தது. 117-வது பிரிவின் கீழ், ஆணையாளர் மட்டுமே வாரியத்திற்குப் பதிலாகச் செயல்பட முடியும் என்றும், பரம்பரை அறங்காவலர் அல்லாத அறங்காவலர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோர உதவி ஆணையாளருக்கு முதற்கண் அதிகாரம் இடையாது என்றும் உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. எனவே அந்த நேர்வுகளில் அறங்காவலர்களை நியமிப்பதற்கு ஆணையாளரே அதிகார முடையவராவார். பட்டியலில் சேராத பல கோவில்கள் இத்தகைய விதித்துறைகளைக் கொண்ட திட்டங்களை வைத்திருக்கலாம். இந்த நேர்வு கள் அனைத்திலும், ஆணையாளரே விண்ணப்பங்கள் கோர முடியாது. எனவே, இத்தீர்ப்பினால் ஏற்பட்ட இடர்ப்பாட்டினைத் தீர்ப்பதற்காக இந்து சமய அறக்கட்டளைகள் துறை ஆணையாளர், தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் எதையேனும் துணை ஆணையாளருக்கு அல்லது உதவி ஆணையாளருக்கு பிரித்துக் கொடுக்க அதிகாரம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு 22-வது சட்டத்தில் 117-வது பிரிவைத் திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது.

இதை மேலவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: முன் மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1973) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

*<u>தவத்திரு குன்றக்குடி அடிகளார்</u>: மேலவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தை திருத்துவதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன ஏற்புரைகள் பொதுவாக வரவேற்கத் தக்கவை. ஆனாலும், திருக்கோவில்களுக்கு அறங்காவலர்களை நியமிப்பதில் நம்முடைய அரசு போதிய கவனம் எடுத்துக் கொள்கிறது



[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

என்று நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டாலும், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள், திருக்கோவில் வழிபாட்டு முறையில் நம்பிக்கை இல்லாத வர்கள் நிர்வாகத்தில் நியமிக்கப்படுகிறார்கள் என்று பரவலாக இருக் கின்ற புகார்களை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு சமயம் இந்த அவையில் ஏற்பட்ட வினா—விடையில்கூட "கோவில் வேறு, நிர்வாகம் வேறு" என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். உணர்வு பூர்வமாக ஒரு தத்துவத்தில், ஒரு கொள்கை யில் நம்பிக்கை உடையவர்கள்தான் நிர்வாகத்தையும் சிறப்பாகச் செய்ய முடியும். நிர்வாகமும், உணர்வும் பிரிக்கப்படுமானால், என்ன இருந் தாலும், அந்த நிர்வாகம் தளர்ச்சி அடையும். எனவே இந்தச் சட்டத்தை அமுல்படுத்துகின்றபோது கூடுமானவரையில் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள், அதுமட்டுமல்ல, திருவுருவத்தில், திருக்கோவில் வழி பாட்டு முறையில் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்படி நம்பிக்கை உள்ளவர்களுடைய மனம் புண்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய மிகுந்த பொறுப்பு அரசுக்கு உள்ளது. அது கடமையுமாகும். சாதாரண அரசு பணியாளர்களை நியமிக்கக்கூட, எழுத்தர்களை வைக்கக்கூட ஒரு பொதுக்குழு அமைத்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பல கோவில் களின் நிர்வாகத்தைக் கவனிக்க அறங்காவலர்களை நியமிக்கும்போது, அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு குழு நியமித்து,மாநில அளவில் ஒரு குழு அமைத்து விண்ணப்பங்கள் வரவழைத்து பரிசீலித்து எடுப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்வதால் வேண்டு மென்றே செய்யப்படுகின்றது என்று ஒரு குறை கூறக்கூடிய வாய்ப்பைத் தடுத்தது போல் ஆகும். நான் ஏதோ குறைகள் இருக்கின்றன என்பதாலே தான் சொல்கிறேன் என்று கருதாமல், தவறுகள் நடைபெறாமல் தடுப்பதற் கான முயற்சியில் இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். மாநில அளவில் ஒரு எழுத்தரைத் தேர்ந்தெடுப்பதற்குக் கூட ஒரு பொதுக்குழு இருக்கிறது. சமய சார்பற்ற அரசு நடைபெறுகின்ற இடத்தில் சமய நிறுவனங்கள், திருக்கோவில்கள் நிர்வாகம் செய்யப் படுவதற்கு அறங்காவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு அறக்குழு அமைத்துத் தேர்ந்தெடுத்தால், எந்தவிதமான புகார்களுக்கும் இட மில்லாத அளவுக்குச் செய்ய முடியும் என்பதைத் தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்கு எடுத்துச் சொல்லி அந்த வகையில் அரசு அக்கறையும் கவனமும் செலுத்த வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, I am grateful to the Hon. Minister for placing this amendment before the House for its approval, because it gives me an opportunity to speak on the administration of the Hindu Religious Endowments Department and more particularly on one aspect of it to which I would like the Hon Minister to reply. 4-20 பி ப

[Thiru A. R. Damodaran]

A week ago, or almost ten days ago, I saw a notification in the newspapers that all properties belonging to Hindu Temples and to the Charitable Endowments administered by the Hindu Religious Endowments Department were released from the provisions of the Rent Control Act and that henceforth the provisions of the Act would not apply to such properties. Sir, only six months ago, the Rent Control Act was passed by this very Legislature and a Select Committee went into the various provisions of the Act and debated on whether such charitable institutions and endowments should be exempt form the provisions of the Rent Control Act. Various amendments were carried out, whereby the rate of return for residential properties was increased from 6 to 9 per cent of the capital value of the buildings and for non-residential buildings, the rate of return was raised from 9 to 12 per cent. Even at that stage, in the Select Committee, some Members asked whether it would be possible to exclude the properties of Hindu Temples and Hindu Charitable Endowments and it was made quite clear by the Hon. Minister who was the Chairman of the Select Committee—Thiru Rajaram—that it was not proposed to exclude the properties of temples from the provisions of the Rent Control Act. I wish to bring to the notice of the Hon. Minister that one swallow does not make Indian summer and if there was a tenant in Kapaleeswarar Temple who was enjoying certain temple-property for a number of years at a highly concessional rate, it does not mean that thousands of tenants of temples should be put to difficulties all over the State by the relaxation from rent-control of such properties belonging to temples. There are thousands of persons who live in the houses belonging to temples—not only residential houses, but there are thousands of shopkeepers also who happen to occupy such buildings. Particularly in Thanjavur District where the temples own a lot of properties in the bazaar areas, a number of small shopkeepers are involved. Therefore, the exemption from the provisions of the Rent Control Act is likely to prove a great hardship and difficulty to such tenants.

Sir, having had no other opportunity in this session to seek a clarification from the Hon. Minister on this subject, I take this opportunity to request him to elucidate whether this was done on the spur of the moment and on what basis it was done and, if the Government felt that it should be done, why it had not come in the form of an amendment to the Rent Control Act. Sir, although I know that Government have powers—under certain rule-making powers—to exempt a class of institutions, yet I think that such an important decision should not have been announced by means of a Government Order, but should have been debated fully in both the Houses of the Legislature before



[Thiru A. R. Damodaran]

a major policy decision was taken to exempt such properties from the provisions of the Rent Control Act. I would also like to state, at this stage, that if it is felt that some degree of concession should be shown to such institutions, the Hon. Minister could very easily have brought an amendment and stated that the charitable institutions or such religious bodies might be given a preferential rate of fair rent, to the extent of 50 per cent of the fair rent and even that might have been accepted by the House. Sir, the important point to be borne in mind is that I do not think that such important policy decisions should be taken by using the rule-making powers of Government and introduced by a notification, but should have been brought before the House for its consent. Thank you.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி : தலைவரவர்களே, இந்து சமய அறக்கட்டளை இரண்டாவது திருத்தத்தை வரவேற்று, அதையொட்டி சில வார்த்தைகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். முன்பு பேசிய நமது தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் சொன்ன கருத்தைத் தான் நானும் கூற விரும்புகிறேன். கோவில் டிரஸ்டிகளாக நியமிக்கப் படுபவர்கள் எல்லாம் தெய்வ வழிபாட்டிலும், பக்தியிலும் நம்பிக்கை யுள்ளவர்களாக இருக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் தெய்வீகத் தன்மையோடு, பக்தியோடு, பயத்தோடு அங்கே நிர்வாகம் நடைபெறும். அதற்கு மாருக நியமிக்கப்பட்டால், அலட்சியப் போக்கினுல், பலவித கோளாறுகளும், நிர்வாகத் தவறுகளும் ஏற்படும். இதை ஏதோ குறிப் பாக சிலரை நீக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. யார் நம்பிக்கையோடு அந்த நிர்வாகத்திலிருந்து செய்வார்களோ, அப்படிப் பட்டவர்களைப் பார்த்து நியமிக்க வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப் படுகிறேன். பல காலம் பலர், இந்தக் கோயிலுடைய சொத்துக்களை எல்லாம் அவரவர்கள் டிரஸ்டிகள், தர்மகர்த்தாக்கள் என்று சொல்லிக் கொண்டு, அவர்களுடைய ஏகபோக உரிமையாகப் பாவித்து நடத்திக் கொண்டு வருகிருர்கள். ஆனுல், இன்றையதினம் அரசு அவைகளை யெல்லாம் அநேகமாக நீக்கி விட்டது. நீக்கிக் கொண்டும் இருக்கிறது. அதே சமயத்தில் முன்பு என்ன தவறுகள் நடந்தனவோ அவை மீண்டும் தொடர்ந்து நடக்காமல் கவனத்தோடு, எச்சரிக்கையோடு அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதை நான் ரொம்ப வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். கோவிலுக்கு எவ்வளவோ பேர்கள் தங்களுடைய சொத்துக்களை எழுதிக் கொடுத்திருக்கிருர்கள். அதற்கான திருவிழாக்கள், பூஜைகள் இன்னும் பல நல்ல காரியங்களுக்காகச் செலவு செய்கிருர்கள். அம்மாதிரிச் சொத்துக்களை கொடுத்தவர்களின் பரம்பரையினர் இருந்தால், அவர்களுக்கு தர்மகர்த்தா வேலைகளில் ஒன்றைக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்,

[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி]

குறிப்பாக ஒரு விஷயம், அது சம்பந்தம்கூட இல்லாமல் இருக்கலாம். காலம் கடந்த நிகழ்ச்சியாகக்கூட இருக்கலாம். இருந்தாலும் இதை அரசாங்கம் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். தென்னார்க்காடு ஜில்லாவில் சிதம்பரத்தில் பிச்சவரம் என்ற ஒரு பெரிய ஜமீன் சமூகத்தைச் சேர்ந்தவர் ஒருவர் இருந்தார். அந்தக் காலத்தில் நடராஜர் கோயிலுக்கு இடமும், கோவிலுக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுத்தவர். பரம்பரையாக ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இன்றைக்கும் அந்தப் பரம்பரைக்கு கோயிலில் நடராசர் விக்கிரகத்துக்குப் பக்கத்தில் உட்கார வைத்து கோவில் மரியாதை, அபிஷேகம் முதலியவற்றில் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு பரம்பரை, அவர்கள் பெற்ற கடன் பாக்கிக்காக, அந்தக் கடனை ஒருவருக்கு "மேட் ஓவர்" செய்து கொடுத்திருக்கிறார்கள். அவர் பெயர் சுப்பிரமணியபிள்ளை என்று நினைக்கிறேன். இது 40 வருஷத்திற்கு முன்பு நடந்த விஷயம். அந்தக் கடனை அந்தப் பிள்ளையவர்கள், ராஜா சர். அண்ணாமலைச் செட்டியாருக்கும் அவருடைய சகோதரர் ராமசாமி செட்டியாருக்கும் "மேட் ஓவர்" செய்து கொடுத்து, அந்தக் கடனை வசூல் செய்து, சாமிக்கு ஏதோ சில சொத்துக்களை எழுதி வைத்துவிட்டு, இவர்களிடத்தில் பொறுப்புகளை ஒப்படைத்து விட்டு அவர் இறந்து விட்டார். ராஜா சர். அண்ணாமலை செட்டியாரும் அவருடைய சகோதரர் ராமசாமி செட்டியார் அவர்களும், வெள்ளையர்கள் காலத்தில் அவர்களுக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த ஜமீனைச் சேர்ந்த 400 எக்கருக்கு மேல் உள்ள நஞ்சை நிலங்களையும் மற்ற சொத்துக்களையும் ஏலத்துக்குக் கொண்டு வந்து, போலீஸ், ரிசர்வ் எல்லாம் வைத்து எடுத்து விட்டார்கள். அவ்வளவு பெரிய அரச பரம்பரையைச் சேர்ந்த குடும்பம், கோவிலுக்கு நல்ல காரியங்களைச் செய்த குடும்பம், இன்றைக்கு அந்த ஊரை விட்டுப் போய் மாயவரத்திற்குப் பக்கத்திலுள்ள குத்தாலத்தில் குடியேறி விட்டார்கள். அங்கே அந்தக் குடும்பத்தினர் ரொம்பக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அந்த ஜமீன்தார், கல்யாணம் பண்ணிக்கொண்டபோது
4 30 பி.ப. அவர் மனைவிக்கு உடையார்பாளையம் ஜமீன்தார் கொடுத்த சில சீதனங்களை வைத்துக்கொண்டு, மூன்று நான்கு குழந்தைகளோடு அந்தக் குடும்பம் ரொம்ப அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நான் இந்த மசோதாவின் நோக்கத்தை மாற்ற வேண்டும், அவர்களுக்கு நிலத்தை உரிமையாக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இன்றைக்கு ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு இந்தச் சொத்து தேவையில்லை, நிலம் தேவையில்லை. அவருக்குப் பல கோடிக் கணக்கான பணம், சொத்துக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற அந்தக் குடும்பத்தாரின் நிலையை பரிதாபத்தோடு, அனுதாபத்தோடு கவனித்து மீண்டும் அந்தக் குடும்பத்திற்கே இந்தப் பொறுப்பைக் கொடுத்து, அறக் கட்டளைகளையும் உற்சவங்களையும் செய்யும்படி செய்தால், ரொம்பவும் நன்றாக இருக்கும். ஏதோ இந்தச் சட்டத்தை மாற்ற வேண்டும், சட்டத்தில் இருக்கின்றதற்கு மாறாக ஏதும் செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதை அரசாங்கம் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்துச் செய்ய வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கின்றேன், அந்தக்



[திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி]

குடும்பம் பெரிய பூசைக்குரிய குடும்பமாக அப்போது இருந்தது. தெய்வீகமான குடும்பமாக இருந்த குடும்பம். இன்றைக்கு மிக ஏழை எளியவர்களாக ஒரு சிறு கிராமத்திலே நலித்துக் கொண்டிருப்பதாக நான் கேள்விப்படுகின்றேன். அந்தக் காலத்தில் 300 ஏக்கர், 400 ஏக்கர் நிலம் என்றால், இந்தக் காலத்தில் அந்த நிலங்களுக்குள்ள மதிப்பு என்ன இருக்கும் என்பதையெல்லாம் எண்ணிப் பாருங்கள். கடனுக்காக அந்த ஜமீனுடைய அத்தனை சொத்துக்களும் ஏலத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அவர்களே அந்தச் சொத்தையெல்லாம் ஏலத்தில் எடுத்து அந்த அறக் கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அறக் கட்டளையை நிறைவேற்றுவதை நான் குறை சொல்லவில்லை. குற்றம் சொல்லவில்லை. ஆனால் அந்தப் பரம்பரை பரிதாபத்திற்குரிய நிலையிலே இருக்கின்றது. தில்லையை ஸ்தாபகம் செய்த குடும்பம் இந்த நிலையில் இன்றிருக்கின்றது. அரசாங்கம் இதை அனுதாபத்தோடு கவனித்து, பொறுப்பை மாற்றிக் கொடுக்கச் செய்ய வேண்டும். அப்படி இல்லாவிட்டால், கணிசமான ஒரு தொகையையாவது இப்படிப்பட்ட நிலையிலே நிற்கின்ற குடும்பத்திற்குக் கொடுத்து உதவி செய்ய வேண்டும். இந்த ரிலிஜியஸ் எண்டோமெண்ட் சட்டம் காரணமாக இந்த ஏழ்மை நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதை இந்த நேரத்திலே அரசாங்கத்தின், அங்கத்தினர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன். கொஞ்சம் அனுதாபத்துடன் அவர்களைக் கவனித்து அதற்கான நடவடிக்கை ஏதாவது எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ராஜா சர் முத்தையா செட்டியார் குடும்பத்திற்கு, எந்த நிர்வாகப் பொறுப்பும் தேவையில்லை. எந்தச் சொத்தும் தேவையில்லை. ஆனால், அரசு இந்தக் குடும்பத்தினர் விஷயத்தில் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அதில் தலையிட்டு இந்த நிலைமையைக் கொஞ்சம் மாற்றி நிர்வாகத்தைக் கொடுக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கேட்டுக்கொண்டு, இதுவரையில் எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்த மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இங்கு கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் 42-வது விதியின் கீழ் மூன்று போடப்பட்டிருந்தன. அவை எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்திலே நானும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். தமிழகத்திலுள்ள திருக்கோயில்களிலே தர்மகர்த்தாக்கள் நியமனத்திலே பலவிதமான ஊழல்கள் நிறைந்திருக்கின்றன. தர்மகர்த்தா ஒருவரை நியமிக்கும்போது, அந்த தர்மகர்த்தா [illegible] பதவியில் இருப்பவர், தர்மகர்த்தாவாக நியமிக்கப்படப்போகின்றவர்

[1973 டிசம்பர் 4

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

எப்படிப்பட்டவர்—மத நம்பிக்கை உள்ளவரா, அந்தக் கோயிலிலே அவருக்கு என்ன பொறுப்பு இருக்கின்றது, தர்மகர்த்தாவாக நியமித்தால் சரியான முறையிலே, முழு நேரம் அல்லது பார்ட் டைம் ஆகவாவது அந்த வேலையைச் செய்யக் கூடியவரா, இந்தத் தர்மகர்த்தா வேலையை இந்தக் கோயிலிலே பார்ப்பதனாலே ஏதாவது சலுகைகள் நிறையப் பெற முடியுமா என்று எதிர்ப்பார்ப்பவரா என்பதையெல்லாம் கவனித்துப் பார்க்க வேண்டும். அப்படி கவனித்துப் பார்த்து, தர்மகர்த்தா வேலைக்குப் போட்டால்தான், அவர் நல்லவிதமாக அந்தக் கோயில் நிர்வாகத்தை நடத்த முடியும். பரம்பரையாக தர்மகர்த்தாக்களாக, டிரஸ்டிகளாக, பல பேர்களைப் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு முன்னால் அவர்கள் வேலைகள் எப்படியிருந்தன என்று பார்க்க வேண்டும். தர்மகர்த்தாவாக இருந்தபோது சரியான முறையிலே கோயில் குழுக் கூட்டங்களை அவர்கள் ஒழுங்காக "அட்டண்ட்" பண்ணியிருக்கின்றார்களா என்று கூடக் கவனித்துப் பார்ப்பதில்லை. இதற்கெல்லாம் காரணம் என்ன? கட்சிக் கண்ணோட்டம் இதிலே இருக்கின்றது.

முக்கியமாக திருச்சியை எடுத்துக்கொள்வோம். திருச்சியிலே மூன்று பெரிய கோயில்கள் இருக்கின்றன. ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், மலைக்கோயில் இப்படிப் பெரிய கோயில்கள் இருக்கின்றன. இன்னும் பல சிறிய கோயில்களும் இருக்கின்றன. இந்தக் கோயில்கள் நிர்வாகத்திலே முழுக்க முழுக்க கட்சிக் கண்ணோட்டத்துடனேதான் அந்த டிரஸ்டிகள் நியமனத்தைப் பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். அதன் காரணமாக கோயில்களுடைய நிலைமை மாறிவிட்டிருக்கின்றது. இப்போது அங்கே ஜனங்கள் கூட்டம் கோயில்களில் எப்படி இருக்கின்றது? இதர மாநிலங்களில், திருப்பதி இருக்கின்றது. அங்கு மக்கள் நிறைய கூடுகிறார்கள். அந்த மாதிரி குருவாயூர் கோயில் இருக்கின்றது. அங்கும் நிறைய ஜனங்கள் கூடுகின்றார்கள். ஆனால் நம் மாநிலத்தில் அப்படி இல்லை. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் ஸ்ரீ ஐயப்பன் கோயில் இருக்கின்றது. இந்தக் கோவில்களுக்கெல்லாம் ஒரு பெரிய பாரம்பரியம் இருக்கின்றது. ஆனால் தமிழகத்தில் பழனி ஒன்றுதான் இருக்கின்றது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற கோயில்களெல்லாம் சாமான்யமாகத்தான் இருக்கின்றன. நம்முடைய கோயில்களைப் பார்க்கும்போது, அவைகளை விட ரொம்ப சாமான்யமான, ரொம்பக் குறைந்த வருவாய் உள்ளவைகளாகத்தான் இவை இருக்கின்றன. இந்த நிலையில் அதற்காக தமிழ் நாட்டில் ஏதாவது விளம்பரம் இருக்கின்றதா என்றால், இல்லை. அதற்கு நம் டிரஸ்டிகள் எல்லாம் சரியான முறையிலே விளம்பரங்கள் செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். மத நம்பிக்கை வரவரக் குறைந்து வருகின்றது. இந்தக் கோயில்களைக் கண்டு தரிசித்தால், பதம் கிடைக்கும், கெடுதலே வராது, நூறு ஆயுசு இருக்கலாம், சதா ஆயுசு, சிரஞ்சீவியாக இருக்கலாம் என்றெல்லாம் சொல்லி, கோயிலுக்கு வந்தால் உங்களுக்கு வேதனையோ, குறைவோ இருக்காது என்றெல்லாம் விளம்பரப்படுத்



1973 டிசம்பர் 4]

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

தினால் நல்லது. இந்தக் கோயில்கள் இருப்பதே யாருக்கும் தெரிய மாட்டேன் என்கிறது. மத நம்பிக்கை குறைந்து கொண்டிருக்கின்றது. இப்படித்தான் கொஞ்சம் கொஞ்சமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சரியாகவோ, தவறாகவோ விளம்பரப்படுத்தச் சொல்கிறீர்களா?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: பயன்தரத் தக்கதாக இருக்க வேண்டும். இந்தத் தடவை யாத்ரீகர்கள் ஆயிரம் பேர்கள் வந்தால், அடுத்த தடவை கோயில்களுக்கு லட்சம் பேர்கள் வரவேண்டும். அந்த அளவிற்கு விளம்பரம் இருக்க வேண்டும். கோயிலுக்கு வந்த உடனே டிரஸ்டி தன் பெயர் கோயில் வாசலிலே எழுதப்பட்டிருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளும்படியானவர்களை நியமித்தால், எப்படி இருக்கும்? அந்தக் காலத்திலே நல்ல பல இனாம்களை ஏற்படுத்தினார்கள். இன்னும் பல கோயில்களிலே அந்த இனாம்கள், சொத்துக்கள் எல்லாம் எப்படி இருக்கின்றன? ஊழிய இனாம், பெர்சனல் இனாம் இப்படி எத்தனையோ வகை இனாம்கள் இருக்கின்றன. அதெல்லாம் எடுக்கப்படாமல் கண்ணுக்குத் தெரியாமல் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவரவர்களுக்குப் பட்டா பண்ணிவிட்டபோதும், உபயம் உற்சவங்கள் ஏதாவது இருக்கிறதா என்று கூட கவனிப்பதில்லை. நூற்றுக் கணக்கான உபயங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் அந்தச் சொத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். கோயிலுக்கென்று ஒன்றுமே நடக்காமலிருக்கின்றது. உற்சவம்கூட நடக்காமல் இருக்கின்றது. அதை நிர்வகிக்கின்றவர்கள் அவரவர் இஷ்டம் போல் நடப்போம் என்று இருக்கிறார்கள். இப்படித்தான் காலம் போய்க்கொண்டிருக்கின்றது. இந்த மாதிரித் துறையிலே, திருக்கோயில்களை நல்ல முறையிலே நிர்வகிக்க வேண்டும். அப்படி நிர்வகிக்கின்றவர்கள் சலுகைகளை அடையாமல் இருப்பவர்களா என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். இரண்டொரு டிரஸ்டிகள் பற்றி இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் பட்ஜெட்டிலே பேசுகின்ற மாதிரி பேசக்கூடாது. இந்த பில்லை கரெக்டாகப் படித்துக் கொண்டு என்ன பேசவேண்டும் என்பதைச் சுருக்கமாகப் பேச வேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: எங்களுக்கு இதுதான் பேச வேண்டிய சந்தர்ப்பம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் இஷ்டம் போல் கோயில்களைப் பற்றிப் பேசுகின்றார்கள். ஸ்ரீரங்கத்திலேயிருந்து, திருவானைக்காவலுக்குப் போய், மதுரைக்கும் போனால் என்ன ஆவது? அங்கேயே இருங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : நீங்கள்தான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கின்றீர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : என்னென்ன பேச வேண்டும் என்பதை முதலிலேயே பார்த்துக் கொள்ள வேண்டும். பில்லைப் பார்த்த பிறகு அது தொடர்பாக என்ன பேச வேண்டும் என்று இருக்கின்றதோ அதைப் பற்றிப் பேசவேண்டும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இன்னொரு கருத்தும் இருக்கின்றது. சிலர் அப்ளிகேஷனை நேராக்வே கமிஷனருக்குப் போட்டு விடுகிறார்கள். அதற்காக நோட்டிபிகேஷன் சரியாகப் போடுவதில்லை. காலியிடங்கள் பற்றி சரியாகத் தெரியமாட்டேன் என்கின்றது. நோட்டிபிகேஷன் போட்டு டைம் சொன்னாலும் கூட, அப்ளிகேஷன் வாங்கிக்கொள்ளலாம். டைம் எக்ஸ்டெண்ட் பண்ணலாம். அப்படி எக்ஸ்டண்ட் பண்ணுவது ஜனங்களுக்குத் தெரிவதில்லை. இந்த மாதிரி தப்பெல்லாம் நடக்காமல் நல்ல முறையிலே இருக்க வேண்டும். இந்து மதத்தைப்பற்றிக் குறை சொல்கிறார்கள். இங்கே இருந்து கொண்டே அதைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். மற்ற மதத்தைப் பற்றிக் குற்றம் சொல்வதில்லை. நாம் எது நடந்தாலும் கேட்பதற்கில்லை. இந்த மாதிரித் தப்பெல்லாம் நடக்காமல் நல்லபடியாக நடப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்து மதத்தில் சாமியை இப்படித் தான் கும்பிட வேண்டுமென்று ஒன்றும் கிடையாது. மற்ற மதத்திலே எப்படி என்று சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தாங்கள் தேவாரம், திவ்யப் பிரபந்தம் எல்லாம் தெரிந்தவர். நீங்களும் நானும் கடவுள் பற்றி வாதம் தொடங்கினால் போய்க்கொண்டேயிருக்கும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் இருக்கும்போது நாம் பேசக்கூடாது.

* திரு கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.
4-40 ஒரு முக்கியமான திருத்தத்தை இரண்டு அவைகளிலும் விவாதிக்காமல்
பி. ப. அரசு உத்தரவாகப் பிறப்பித்தது தவறென்று குறிப்பிட்டார்கள். அதை முழு மனதுடன் நான் ஏற்றுக்கொள்கிறேன். இனிமேல் அப்படிப்பட்ட உத்தரவுகள் இடும்போது, அதுபற்றி இரண்டு அவைகளிலும் விவாதித்த பிறகு, உத்தரவுகள் இடுவது சிறப்பாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல திருக்கோயில்களில், அவற்றின் சொத்துக்கள் மிகக் குறைந்த குத்தகைக்கு—வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எனக்குத் தெரிந்தவரையில், 100 ரூபாய் பெறுமானமுள்ள இடங்கள், ஐந்து அல்லது பத்து ரூபாய்க்கு,



[திரு. கே. எஸ். கணபதி]

வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையைத் தடுப்பதற்காக உத்தரவு இட வேண்டியது அவசியமென்று கருதுகிறேன். இதனால் 100 அல்லது 1,000 பேர்கள் பாதிக்கப்படுகிறார்களென்றாலும், அதனால் அடையக் கூடிய பலன் பொதுமக்களுக்குப் போய்ச் சேருகிறதென்பதால், இந்த உத்தரவு கட்டாயம் போட வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இப்படிப்பட்ட காரியங்கள், இந்த அவையில் விவாதித்த பிறகு, செய்யப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவரவர்களே, நமது மாநிலத்தில் இந்து அறநிலையங்களையெல்லாம் நேர்முகப்படுத்தி, பலவிதமான குறைகளோடு நடந்துவந்தவற்றைச் சீராக்குவதற்காக, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை ஏற்படுத்தி, அதன்மூலம் அதற்கென்று இந்து ரிலிஜியஸ் எண்டோமெண்ட் போர்டு என்று அமைத்தார்கள். நாளாவட்டத்தில் போர்டுக்கு இருந்த அதிகாரங்களெல்லாம் கமிஷனருக்குக் கொடுக்கப்பட்டன. போர்டு என்றாலே இப்போது கமிஷனர்தான். சென்னை கார்ப்பரேஷனில், கார்ப்பரேஷன் கௌன்சில் என்றாலே, 1-ம் தேதியிலிருந்து ஸ்பெஷல் ஆபீஸர்தான். அவர் கையெழுத்து போட்டால், கார்ப்பரேஷன் கௌன்சில் கூடி, தீர்மானம் செய்தது மாதிரியாகும். அதேமாதிரி, இந்து ரிலிஜியஸ் அண்ட் சாரிடபிள் எண்டோமெண்டு கமிஷனர் கையெழுத்துப் போட்டால், அந்த போர்டு கையெழுத்துப் போட்டதாக அர்த்தம். நமது மாநிலத்தில், அந்த போர்டின் கன்ட்ரோலுக்குள் பல்லாயிரக்கணக்கான கோயில்கள் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. அந்தத் துறை மிகவும் அதிகமாக விரிவடைந்து விட்டதால், சென்னையில் இருக்கும் கமிஷனரே எல்லாக் காரியங்களையும் பார்ப்பது கஷ்டமென்று, அந்த அதிகாரங்கள் டெபுடி கமிஷனர், அசிஸ்டண்ட் கமிஷனர் ஆகியோருக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. அறங்காவலர்களை நியமிப்பதில், அசிஸ்டண்ட் கமிஷனர்களே மனுக்களை வாங்கி, தகுதியானவர்களை நியமிப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது. அந்த அதிகாரம் அவர்களுக்குக் கிடையாதென்றும், போர்டுக்குத்தான் உண்டென்றும் உயர் நீதி மன்றம் தீர்ப்பு அளித்தது. போர்டுக்கு பதிலாக அதைச் செய்வதற்கு அசிஸ்டண்ட் கமிஷனருக்கும், டெபுடி கமிஷனருக்கும் அதிகாரம் இல்லையென்று தீர்ப்பளித்ததால், அதை அவர்கள் செய்ய அதிகாரம் அளிப்பதற்காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ள சங்கடத்தை நிவர்த்தி செய்வதற்காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் இதையொரு சந்தர்ப்பமாக உபயோகித்துக்கொண்டு, இது சம்பந்தமாக இருக்கக்கூடிய குறைகளையெல்லாம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது அங்கத்தினர்களுடைய கடமை. இதையொரு வாய்ப்பாகக் கருதிச் சொல்கிறோமே தவிர வேறொன்றுமில்லை.

நண்பர் திரு. தாமோதரன் அவர்கள், வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து அறநிலையங்களுக்கான கட்டிடங்களை விலக்கு செய்திருக்கிறார்களென்ற குறையைச் சொன்னார்கள். பொதுவாக இந்தச் சபையின்

உரிமை ஓரளவுக்குப் பாதிக்கப்படுகின்றது. நாங்கள் நிறைவேற்றிய சட்டம்; எங்களைக் கலக்காமலேயே, இதிலிருந்து ஒரு உத்தரவு மூலமாக விலக்கு அளித்துவிட்டார்கள் என்ற அர்த்தத்தில் சொல்லப்பட்டதே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஆனால், பொதுவாக அரசாங்கத்தின் இந்த உத்தரவை நான் வரவேற்கிறேன். மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமாக பல வீடுகள் இருக்கின்றன. அவைகள் 35 ரூபாய், 50 ரூபாய் வாடகைக்கு விடப்படுகின்றன. அந்த வீடுகள் இன்று மார்க்கெட்டில் 350 ரூபாய், 500 ரூபாய் வாடகைக்குப் போகும் அங்கே பக்கத்தில் இருப்பவர்கள் சொல்லுகிறார்கள், 400, 300 ரூபாய்க்குப் போகிற கட்டிடங்களையெல்லாம் 50 அல்லது 60 ரூபாய் வாடகைக்கு விடுகிறார்கள் என்று. அதனால் யாருக்கு நஷ்டம்? கோயில்களுக்குத்தான் நஷ்டம்; தேவஸ்தானத்திற்கு நஷ்டம். இப்படி கோயில்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைத் தவிர்ப்பதற்காக இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். எங்கள் குறையெல்லாம், எங்களைக் கலந்துகொண்டு உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்பது தான். இது இரண்டு மாதங்களுக்கு முன் நிறைவேறிய சட்டம். அதற்கு திடீரென்று விலக்குக் கொடுத்துவிட்டார்களே என்பதுதான் குறை.

அடுத்தபடியாக, நானும் இரண்டொரு விஷயங்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதுபற்றி அமைச்சரவர்களுக்கு ஏற்கெனவே எழுதிவிட்டேன். மதுரை ஜில்லா, வத்தலக்குண்டு பஞ்சாயத்து யூனியனில் கோட்டப்பட்டி கிராமத்தில் சென்றாய பெருமாள் கோவில் தேவஸ்தானம் இருக்கிறது. அதற்கு ஒருவர் 20 ஆண்டுகளாக—பரம்பரை டிரஸ்டியல்ல — நியமன டிரஸ்டியாக இருக்கிறார். திரும்பத் திரும்ப அவரையே நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கோவிலினுடைய பூசாரி, அவருடைய சொந்த மருமகன். அந்தக் கோவிலினுடைய வருவாய் தீய வழியில் செலவழிக்கப்படுகிறதென்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அங்கிருக்கிற நிர்வாக உத்தியோகஸ்தர் சரியாகச் செயல்படுவதில்லை. இதை அமைச்சரவர்கள் கவனத்திற்கு எழுதி அனுப்பியிருக்கிறேன். அவர் கவனிப்பாரென்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

அடுத்தபடியாக, பரவை என்ற கிராமம் இருக்கிறது. இங்குள்ள கோயிலுக்கு, திரு. சாமிநாதப் பிள்ளை என்பவர் பரம்பரை டிரஸ்டியாக இருந்து வருகிறார். கோயிலினுடைய சொந்த வருமானம் ஒரு புறம் இருக்க, அதைத் திருப்பணி செய்து, புதுப்பிக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு மனுச் செய்து 10,000 ரூபாய் வாங்கியிருக்கிறார். அதற்கென்று ஒரு திருப்பணிக் குழு நியமித்து, அந்தக் குழுவின் தலைவராக அந்த டிரஸ்டியினுடைய மகனையே நியமித்திருக்கிறார்கள். மதுரை ஜில்லாவில், பரவை கிராமம் இருக்கிறது. பரம்பரை டிரஸ்டியினுடைய பெயர் திரு. சாமிநாதப் பிள்ளை; அவருடைய மகன் பெயர் முத்துப் பாண்டி. அந்தக் கோவிலுக்கு கமிஷனர் அவர்கள் 10,000 ரூபாய் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். கோயில் வருவாயிலிருந்து 22,000 ரூபாய்



சேமித்து வைத்திருக்கிறார்கள். அது தவிர நன்கொடையாக ரூபாய் 10,000 வசூல் செய்திருக்கிறார்கள். மொத்தம் 42,000 ரூபாய் வசூல் பண்ணி, 2 வருஷம் ஆகிவிட்டது. இதுவரை வேலை ஆரம்பிக்கப்படவில்லை. இதையெல்லாம் கவனிக்க வேண்டும். கடைசியில் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வருகிறது. இதை அசிஸ்டண்டு கமிஷனரோ அல்லது கமிஷனரோ சரியானபடி கவனிக்காவிட்டால், பெரிய தவறு ஏற்படும். இந்தத் தகவல் நேற்றுதான் கிடைத்தது. அதனால் அமைச்சரவர்களுக்கு எழுதி அனுப்ப முடியவில்லை. இதைக் கவனிக்கும்படியாக அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட தகவல்கள் வரும்போதெல்லாம், நான் அவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வருகிறேன். முதலில் சொன்ன விஷயம் பற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறதென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவில் பணம், நன்கொடையாக வசூலித்த பணம் இவைகளைச் சரியானபடி உபயோகிக்காமல் இருக்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து 10,000 ரூபாயையும் வாங்கி, அதைச் செலவழித்து விட்டதாகச் சொல்கிறார்கள். அந்த ஊரிலே அந்தத் திருப்பணி நடக்காததற்கு ஒரு காரணம் சொல்லப்படுகிறது. கோயிலுக்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு குடி தண்ணீர்க் கிணறு இருக்கிறது. அந்தக் கிணறு புறம்போக்கு நிலத்தில் இருக்கிறது. அந்தப் புறம்போக்கு நிலத்தையும் சேர்த்து கோயிலுக்கான சுற்று மதிற் சுவர் எடுக்க வேண்டுமென்று இவர் சொல்கிறார். அதை ஊர் மக்கள் ஆட்சேபிக்கிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு இத்தனை வருஷம் வேலை நடைபெறாமல் இருக்கிறதே என்று அதிகாரிகள் அல்லது அசிஸ்டண்ட் கமிஷனர் கேட்டால், ஊரில் ஆட்சேபணை செய்து கொண்டிருக்கிறார்கள்; அதற்காகப் பொறுத்துக் கொண்டிருக்கிறேன் என்ற தவறான சாக்குபோக்கைச் சொல்கிறார். கோயில் இடமல்ல அது. கோயிலுக்கு வெளியேயுள்ள இடத்தைச் சேர்த்துக் கட்டவேண்டுமென்று சாக்கு சொல்லிக்கொண்டு அரசாங்கப் 4-50 பி.ப.
பணத்தையும், கோயில் பணத்தையும் துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கமிஷனர் அவர்களும், நல்ல வேளையாக, இங்கு இருப்பதனால், தாமதமின்றி நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அவரும் அந்த மாவட்டத்தில் கலெக்டராக இருந்தவர். பல முறை நேரில் சென்று அந்த ஊரைப் பார்த்திருக்கிறார். அவருக்குத் தெரியும். அவர் கவனிப்பார் என்று நம்புகிறேன். பொதுவாக, இந்தத் திருத்தத்தைப் பற்றி ஒன்றுமில்லை. இது அவசியமான திருத்தம். ஏற்கெனவே இருக்கிற குறையைப் போக்க வந்த திருத்தம். ஆகவே, இந்த வாய்ப்பைக் கொடுத்ததற்காக நான் என் நன்றியைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:</u> மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தைப் பற்றிய விளக்க உரையை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் மிக விளக்கமாக இங்கே சொல்லியிருக்கிறார்கள்

[திரு. மு. கண்ணப்பன்]

அத்தோடு பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேர்களும், ஆங்காங்கேயிருக்கிற சில குறைபாடுகளை மேலும் நிவர்த்திக்கின்ற வகையில் நல்ல யோசனைகளையெல்லாம், குறைபாடுகளையெல்லாம் சுட்டிக்காட்டிச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு நிவர்த்தி செய்வதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்துகிற வாய்ப்பு இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. அறங்காவலர்கள் நியமனம் பற்றித்தான் நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்களும், அதே போல மதிப்பிற்குரிய திரு. ராமசாமி படையாச்சி அவர்களும், திரு. தீக்ஷிதர் அவர்களும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களையே நியமிக்கிறார்கள். அத்தோடு தர்மகர்த்தா—அறங்காவலர்களாக நியமனம் செய்வதில் ஊழல் நடைபெறுகிறது, மத நம்பிக்கை இல்லாதவர்களை நியமிக்கிறார்கள், அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அறங்காவலர் கூட்டங்களுக்கு வருவதில்லை, இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் கூறியிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், திருவரங்கம் கோயிலைப்பற்றி நம்முடைய தீக்ஷிதர் அவர்கள் சொல்லுகிறபோது, அதேமாதிரி அங்கேயிருக்கிற மலைக் கோயில் மற்றும் இவைகளைப்பற்றிச் சொல்கிறபோது, ஆளும் கட்சிக்காரர்களையே நியமனம் செய்திருக்கிறார்கள், கட்சிக் கண்ணோட்டத்தோடு செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். திருவரங்கம் கோயிலைப் பொறுத்த வரையில், அங்கே ராஜவேல் என்ற ஒரு வழக்கறிஞர் அறங்காவலர் குழுவின் தலைவராக இருக்கிறார். மற்ற 4 பேர்களும் ஏற்கெனவே இருக்கிற திட்டத்தின்படி., பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள், ஜாதியைச் சேர்ந்தவர்கள், அந்தக் கோயிலிலே அறங்காவலர்களாக நியமிக்கப்படுகிறார்கள். குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று யாருமே அங்கு கிடையாது. எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அங்கே இருக்கிறார்கள் என்று தான் குறிப்பிட வேண்டும். அந்த அளவிற்குக் கட்சிக் கண்ணோட்டம் இல்லாத வகையில் சில கோயில்களிலே திட்டத்தின் பிரகாரம் நியமிக்கிறோம். குறிப்பாக ஆளுகிற கட்சி என்று வருகிற நேரத்தில் ஆங்காங்கே இப்படி நியமிக்கக் கூடிய சில நிலைமைகள் ஏற்படலாம். இதை ஏற்கெனவே ஆட்சியில் இருந்தவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இதை எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூட மறுக்க மாட்டார்கள். ஆனால் நம்முடைய தவத்திரு அடிகளார் அவர்கள் சொல்லும்போது, கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை நியமிக்கிறார்கள், அதே போல நிர்வாகம் வேறு, நம்பிக்கை வேறு என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் என்று இதையெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். இப்போதும் அதைத் தான் சொல்லுகிறேன். நிர்வாகம் என்பது வேறு, கடவுள் நம்பிக்கை என்பது வேறு. இப்படி எடுத்துக்கொண்டு பார்த்தால், நானே கூட அந்த நம்பிக்கை கொண்டிருப்பவன் என்ற ஒரு காரணத்திற்காக இதற்கு அமைச்சராக நியமிக்கப்படவில்லை. இதில் நம்பிக்கை இருந்தாலும், இல்லாவிட்டாலும், முன்னாள் முதல்வர், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியது போல கடவுளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோமா என்பதை விட கடவுள் எங்களை ஏற்றுக்கொள்கிறாரா என்பது தான் பிரச்சினை,



[திரு. மு. கண்ணப்பன்]

அந்த ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் இருக்கிறோமே தவிர, ஏதோ நம்பிக்கை இல்லாதவர்களையெல்லாம் கோயில்களின் நிர்வாகத்தில் பங்கு பெறச் செய்து........

<u>தவத்திரு குன்றக்குடி அடிகளார்</u>: தலைவரவர்களே, நாங்கள் கடவுளை நம்புகிறோமா இல்லையா என்பதல்ல, கடவுள் எங்களை ஏற்றுக் கொள்கிறாரா என்பது தான் எங்களுடைய கவலை என்பது உயர்ந்த ஞானிகளுடைய, கடவுளை நம்புகிறவர்களுடைய வார்த்தை. ஆதலாலே இதைச் சொல்கிற முதல்வர் அவர்களும், நம்முடைய அமைச்சரவர்களும் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று சொல்லிக் கொள்வது முறையல்ல. அப்படியிருந்தால் தவறு என்று சொன்னேனே தவிர, போடுவதாகவும் சொல்லவில்லை. அதனால் அதுவே கடவுள் நம்பிக்கையின் முழுமையான வடிவம்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன்</u>: தலைவரவர்களே, கடவுளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோமா என்பதை விட எங்களை கடவுள் ஏற்றுக்கொள்கிறாரா என்பதுதான் பிரச்சினை என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். கடவுள் ஏற்றுக்கொள்கிறாரா என்பதை எப்படி முடிவு செய்வது, யார் முடிவு செய்வது ?

<u>மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி</u>: தலைவரவர்களே இது தான் உலகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு பெரிய சந்தேகம்.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்</u>: தலைவரவர்களே, ஆகவே இந்தப் பிரச்சினைக்கு இடமில்லாத வகையில் இதைச் சொல்லியவர்களே தீர்ப்பு சொல்லி விட்ட காரணத்தினால், மேலே குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. ஆனால் நம்பிக்கை இருந்தாலும், இல்லாவிட்டாலும், இன்றைக்கு அறங்காவலர்களை நியமனம் செய்ததற்குப் பிறகு தமிழ் நாட்டில் இந்த அற நிலையத் துறையைப் பொறுத்த வரையில், ஏராளமான முன்னேற்றத்தைக் கடந்த 4, 5 ஆண்டு காலத்தில் அடைந்திருக்கிறோம் என்பதை ஏற்கெனவே வரவு செலவுத் திட்டத்தினுடைய விவாதத்தில் நான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். அதையே திரும்பத் திரும்ப குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. கோயில் சொத்துக்களையெல்லாம் சரியானபடி கண்டுபிடிக்கவில்லையென்ற குற்றச் சாட்டைச் சொன்னார்கள். இன்றைக்கு நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், கோயில் வருமானம் கோடிக்கணக்கான ரூபாய் அதிகமாகியிருக்கிறது என்பதையும், அதேபோல புதிதாகக் கோயில்களைக் கண்டுபிடிக்க வேண்டிய நிலைமைகளையெல்லாம் உருவாக்கியிருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 5 ஆண்டுகளுக்கு முன்னால் கோயில்களுடைய வருமானம் 3 கோடி ரூபாயாக இருந்தது. இன்றைக்குச் சுமார் 8½ கோடி ரூபாய் வருமானம் பெற்றுக்கொண்டிருக்கிறோம். அதேபோல கோயில்களின் எண்ணிக்

[1973 டிசம்பர் 4

[திரு. மு. கண்ணப்பன்]

கையை எடுத்துக்கொண்டால் கூட, தனி அதிகாரிகளை நியமித்து அவர்கள் தமிழ் நாட்டில் இருக்கிற எல்லாக் கிராமங்களுக்கும் சென்று, கிராமம் கிராமமாகச் சுற்றி, சிறிய கோயில்கள், பெரிய கோயில்கள் என்று, 200 ரூபாய்க்கு மேற்பட்ட வருமானம் வரக்கூடிய கோயில்களாக 42 ஆயிரம் கோயில்களைக் கண்டுபிடித்து, இந்தக் துறைக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இந்த 42 ஆயிரம் கோயில்களையும் சென்ற ஆண்டிலிருந்து நம் நிர்வாகத்தில் கொண்டு வருவதற்கு எல்லா விதமான நடவடிக்கைகளையும் நாம் எடுத்துக்கொண்டு வருகிறோம். இதுவரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்களை நம் நிர்வாகத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டில் 10 ஆயிரம் கோயில்களை எடுக்கவேண்டுமென்று திட்டமிட்டு அதற்கான காரியங்களைச் செய்து வருகிறோம். இதேபோல வருகிற காலத்தில் இந்தக் கோயில்களுக்குச் சொந்தமாக நிலம், சொத்துக்கள் என்று இருந்தால் அவைகளை எடுக்க, திட்டமிட்டிருக்கிறோம். இந்த 42 ஆயிரம் கோயில்களுக்கு மட்டும் 2 லட்சம் எக்கர் நிலம் இருக்கிறது. இந்த 2 லட்சம் எக்கர் நிலத்தையும், கோயில்களையும் அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தில் கொண்டுவர வேண்டும். இந்தக் குறிக்கோளை மையமாக வைத்துத் தான் இன்றைக்கு அதிகாரிகளெல்லாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு லட்சம் எக்கர் நிலமும் ஓரிரண்டு ஆண்டு காலத்திற்குள் நம்முடைய நிர்வாகத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் இன்றைக்குத் தமிழ்நாடு பூராவும் இந்தக் காரியத்தை நாம் செய்துகொண்டு வருகிறோம். ஆகவே, அறங்காவலர்களாக யார் இருந்தாலும், நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், எந்த விதமான குறையுமில்லாமல் நடக்கிற அளவிற்கு இன்றைக்கு நாம் காரியங்களையெல்லாம் செய்து வருகிறோம்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதிலை முடித்து விட்டார் என்றால் இரண்டு சந்தேகங்கள், விளக்கம் கேட்க ஆசைப்படுகிறேன். அவர் பேச்சை முடித்த பிறகு கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி படையாச்சி அவர்கள் பரம்பரை அறங்காவலர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி விவரம் என்னிடத்தில் இல்லையாகையால், அவர் தனியாக எழுதித் தருவார்களானால், பரிசீலித்து, நியாயமாக இருக்குமானால், தேவையான நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி: தலைவரவர்களே, நான் பொதுவாகத்தான் கேட்டேன்.



1973 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பொதுவாக என்று சொன்னால், இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை, பரம்பரை அறங்காவலர்களே தேவையில்லை என்பது தான். பரம்பரை அறங்காவலர்களையெல்லாம் எடுத்து விட்டு, எல்லோரையும் நியமிக்க வேண்டுமென்பது தானே தவிர, பெரிய பெரிய ராஜாக்களுக்கு இருந்த மானியங்களை ஒழித்துவிட்டு, முன்னேற்றப் பாதையில் போகும்போது, நான் என்னுடைய சொத்தைக் கோயிலுக்குக் கொடுத்திருக்கிறேன், அதனால் பின்னாலே உரிமை வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பது தேவையில்லாத விஷயம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமசாமி படையாச்சி சொன்னார்கள் என்பதற்காகப் பரிசீலனை செய்கிறேன் என்று சொன்னேனே தவிர, பரம்பரை அறங்காவலர்களே தேவையில்லை என்பதைத்தான் இந்த அரசாங்கத்தில் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம்.

அடுத்து, இங்கே வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தைப் பற்றி நம்முடைய மதிப்பிற்குரிய திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். நீண்ட நாட்களாக இந்தக் கோரிக்கை இருக்கிறது, வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து விதி விலக்கு வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 1966-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். அப்போதிருந்த மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) இதைச் சிபாரிசு செய்தது. ஆலயங்களுக்கிருக்கிற வீடுகள் அல்லது இடங்களுக்கு இந்த வாடகைக் கட்டுப்பாடு மசோதாவிலிருந்து விலக்குத் தர வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் அப்போது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 1968-ம் ஆண்டிலே, அதே போன்று மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்தது, அதையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. சென்ற ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் ராஜன் அவர்கள் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட குழு தமிழ் நாட்டிலுள்ள பல ஆலயங்களுக்குச் சென்று அவர்கள் கொடுத்த விரிவான அறிக்கையின் பேரில் தான் அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட முடிவின்படி தான், இந்த வாடகைக் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து கோயில்களுக்குச் சொந்தமான வீடுகளுக்கெல்லாம் விதி விலக்கு கொடுக்கவேண்டுமென்று முடிவில் நாம் [illegible] கொண்டிருக்கிறோம். சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமா அல்லது அரசாங்க உத்தரவாகப் போட வேண்டுமா என்பதை இந்தத் துறையில் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படி சட்டத்திருத்தம் கொண்டு வருவதென்றால் இரண்டு அவைகளுக்கும் அது வரும். உறுப்பினர்கள் தாராளமாக அதைப்பற்றி விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது. நம்முடைய இந்து அற நிலையத் துறையினுடைய சொத்துக்களுக்கு மட்டுமல்லாது முஸ்லீம் மதத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், கிருஸ்துவ மதத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அல்லது எந்த மதத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும், எல்லா மதச் சார்புள்ள வீடுகளுக்கும் கட்டிடங்களுக்கும் இந்த விதிவிலக்கு பொருந்தும் என்பதை அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுத்துள்ளோம். இப்படி எடுக்கப்பட்டிருக்கிற இந்த முடிவின்

[திரு. மு. கண்ணப்பன்]

மூலம் லட்சக்கணக்கான ரூபாய் அதிகப்படியான வருமானம் கோயில்களுக்குத் தேடிக் கொடுக்கிறோம் என்ற நல்ல நம்பிக்கையோடு தான் இந்த முடிவு எடுத்திருக்கிறோம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் உதாரணத்திற்கு கபாலீஸ்வரன் கோயிலையே சுட்டிக் காட்டினார்கள். இதைப் போன்று ஏராளமான கோயில்களின் சொத்துக்களை நம்முடைய சென்னை நகரத்திலும், இன்னும் தமிழ்நாட்டில் பல நகரங்களிலும் இன்றைக்கு சில தனிப்பட்டவர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதை கோயில்களுக்கும், நாட்டு மக்களுக்கும் பயன்படுகிற வகையில் இந்தச் சட்டம் நிச்சயமாகச் செய்யுமென்று எதிர்பார்த்துத்தான், நாங்கள் இந்த முடிவை எடுத்திருக்கிறோம். இன்னும் சில குறைகளையெல்லாம் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். 20 ஆண்டுகளாக ஒருவரே அறங்காவலராக மதுரை மாவட்டத்திலுள்ள ஒரு கோயிலில் இருக்கிறார் என்று எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். இதைப்பற்றிய விண்ணப்பத்தை நேற்றைய முன்தினம் என்னிடம் தந்தார்கள். இது பரிசீலிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகளை விரைவிலே எடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பரவை என்கின்ற இடத்தில் உள்ள கோவில் திருப்பணியைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கனவே அந்தத் திருப்பணிக் குழுத் தலைவர் மீது சில புகார்கள் எனக்கு வந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன். அரசாங்கம் கொடுத்த பணத்தை தனக்குச் செலவழித்துக் கொண்டு விட்டதாகவும், திருப்பணி வேலைக்குப் பயன்படுத்தவில்லை என்றும் புகார் வந்தது. உடனடியாக அந்தப் புகாரை ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்து, அந்தப் பணத்தைத் திருப்பிக் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் திருப்பணிக் குழு சரியான முறையில் இயங்குகிறதா இல்லையா என்பதைப்பற்றிப் பரிசீலித்து, சரியான முறையில் இயங்கவில்லை என்றால், அதிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்து நல்ல முறையில் இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று எதிர்க் கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் ஒரு சில குறைபாடுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மனதில் கொண்டு அவற்றையும் களைவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லிக்கொண்டு, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, ஒரு சிறு விளக்கம். பொதுவாக அறங்காவலர்களை நியமிக்கும்போது ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக எங்கள் சார்பிலிருந்து புகார்கள் சொல்லப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகமோ, திராவிடர் கழகமோ அல்லது காங்கிரஸ் கட்சியோ, அதைப்பற்றி இப்பொழுது பிரச்சினை இல்லை. தெய்வ நம்பிக்கை உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றுதான் அவர் சொன்னாரே தவிர, கட்சியைப்பற்றிச் சொல்லவில்லை. தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களை நியமிக்கக்கூடாது என்பதுதான் அவரது கருத்து.



[திரு. கே. ராஜாராம்]

அடுத்து, இந்த நியமனம் செய்வதற்காக மனுக்கள் போடப்படும் போது, அந்த மனுக்களிலேயே "தனக்கு தெய்வ நம்பிக்கை இருக்கிறதா இல்லையா" என்று தெளிவாகக் குறிப்பிட்டுப் போடுவதற்கான வழி செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அறங்காவலர்கள் ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு நியமிக்கப்படுகிறார்கள். நம்முடைய அரசாங்கம்தான் அந்த நியமனம் செய்கின்றது. சில கோயில்களுக்கு தனிப்பட்ட ஒருவரையே, அதாவது ஒரே ஒருவரை மட்டும் அறங்காவலராக நியமிக்கும் நிலைமை இருந்து வருகிறது. சின்னக் கோவில்களாக இருந்தாலும், இரண்டு அல்லது மூன்று அறங்காவலர்கள் இருக்க வேண்டும். ஒரே ஒருவரை மட்டும் நியமிப்பதால், மோசடி, கையாடல்கள் எல்லாம் நடைபெறுகின்றன. அந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். பரவை கோவில் திருப்பணி விஷயத்தில் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக்கொண்டதற்கு நன்றி. அவர் முன்பெல்லாம் காங்கிரஸ்காரர் என்று வெளியே சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது நாங்கள் அதிகாரத்தில் இருந்தோம். இப்பொழுது ஐந்து, ஆறு வருஷமாகதான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொண்டு, இம்மாதிரிச் செய்துகொண்டிருக்கிறார். அவர் உண்மையில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக நாங்கள் சொல்லவில்லை. அவர்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு இந்த ஊழல்களைச் செய்துகொண்டிருக்கிறார். அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இப்பொழுது வாங்கப்படுகின்ற நியமன விண்ணப்பங்களிலேயே கடவுள் நம்பிக்கை உள்ளவரா இல்லையா என்று கேட்டு, நம்பிக்கை உண்டு என்று எழுதிக் கொடுத்தால்தான் நியமனம் கொடுக்கப்படுகிறது. எந்த விதிமுறைகளுக்கும் புறம்பு இல்லாமல் கடவுள் நம்பிக்கை இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அடுத்தபடியாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரே ஒருவரை மட்டும் ஒரு கோயிலுக்கு அறங்காவலராக நியமிக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஒருவர் மட்டும் இருக்கக்கூடிய கோயில்களில் எல்லாம் மூன்று அல்லது ஐந்து பேர்களைக் கட்டாயமாக நியமிக்கும் யோசனை ஆராயப்படுகிறது, செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் நம்பிக்கையற்றவர்களாக இருக்க முடியாது என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு. என்னுடைய கேள்வியே தஞ்சை மாவட்டத்தில் கோவிலூரில் கடவுள் நம்பிக்கை இருக்க முடியாத கம்யூனிஸ்ட் கட்சியை

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

சேர்ந்தவர் அறங்காவலராக இருந்து வருகிறார் என்பதைப் பொறுத்த தாகும். அவர் சட்டசபையில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பின ராக இருக்கிறார். அப்படிப்பட்டவர் இருக்கக்கூடாது என்று சொன்னேனே தவிர, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் மூவேந்தர் களுடைய புகழ்களில் நம்பிக்கை கொண்டவர்கள், ராஜராஜசோழனுக்கு விழா எடுக்கின்றவர்கள் கடவுள் நம்பிக்கை இல்லாமல் இருப்பார்களா? நான் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரை மனதில் வைத்துத்தான் சொன் னேன். கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பின ராக இருக்க முடியாது, அவர்களுடைய கான்ஸ்ட்டிடியூஷன் விதிப்படி. அப்படிப்பட்டவர் இருந்தால், நிர்வாகம் எப்படி சரிவர இருக்கும் என்ற எண்ணத்தில் குறிப்பிட்டேன். திராவிட முன்னேற்றக் கழகத்தை மனதில் வைத்துச் சொல்லப்படவில்லை. ஆளுகின்ற அரசுக்கு நண்பன் என்ற முறையில் இதை எடுத்துக் கூறினேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அடிகளார் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் கடவுள் நம்பிக்கை அற்றவர் கள்தாம் இருக்க முடியும் என்று குறிப்பிட்டார்கள். அந்த நிலைமை மாறி வருகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ பழைய கம்யூனிஸத்தில் வேண்டுமானால் அந்தக் கொள்கை இருந்திருக்க லாம். என்னுடைய மாவட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில், கிஸான்சபா என்று பெருமளவில் இயங்கி வருகின்றது. ஒரு சாதாரண விழாவானாலும் மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார்கள். கோவிலாரைப் பொறுத்த வரையில், அந்தக் கோவிலுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாத்து வருவ தில் அவர் மிகுந்த அக்கறை காட்டி வருகிறார் என்பதை நான் அறிவேன். இவர் மிகுந்த அக்கறையோடு பணியாற்றி வருகிறார். "உண்டென்பார் சிலர், இல்லை என்பார் பலர்". அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. அவரைப் போடுவதற்கு நானே காரணமாக இருந்ததால், இந்தப் பதிலை நானே சொல்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, ஸ்ரீரங்கம் கோவி லில் இருக்கின்ற ராஜவேல் அவர்களைப்பற்றி நான் சொல்லவேயில்லை. அது ஸ்கீம் கோவில் என்று எனக்குத் தெரியும். அந்தக் கோவிலைப் பொறுத்தவரையில், அந்த ஸ்கீமின் அடிப்படையில், ஹைகோர்ட்டின் தீர்ப்பின்படி ஜாதி அடிப்படையில் நியமிக்கப்படுவது தெரிந்த விஷயம். திருச்சியில் மூன்று பெரிய கோவில்கள் இருக்கின்றன. திருவானைக் காவல், மலைக்கோவில், கைலாசநாதர்கோவில், இவை மூன்றும் இருக்கின்றன. பொதுவாக தெய்வ நம்பிக்கை அற்றவர்களைப் போடக் கூடாது என்றுதான் சொன்னேன். நான் அதையே மறுபடியும் வலி யுறுத்திச் சொல்கிறேன். ஸ்ரீரங்கம் கோவிலைப்பற்றிப் பேச முடியாது என்று எனக்குத் தெரியும்.



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஸ்ரீரங்கம் கோவி லிலுள்ள ராஜவேல் அவர்கள் அவருடைய மாணவப்பருவத்தி லிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வருகிறார். அவரைப் பற்றி எனக்குத் தெரியும். மற்றப் பிரச்சினைகளைப்பற்றி நான் முன்பே பதில் கூறிவிட்டேன். இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்ட பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1973) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன் வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1973) நிறைவேற்றப்பட வேண்டும்"

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை —

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 38/1973) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை (5-12-1973) பிற்பகல் 3 மணி 5·10 பி.ப.
அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

Nil.

*B. Reports, Notifications and Other Papers.*

*53. The Tamil Nadu Town and Country Planning (Amendment Bill, 1973 (L.A. Bill No. 31 of 1973), as passed by the Legislative Assembly.

*54. The Tamil Nadu General Sales Tax (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 40 of 1973), as passed by the Legislative Assembly.

*55. The Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 39 of 1973), as passed by the Legislative Assemby.

*56. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 38 of 1973), as passed by the Legislative Assembly.

57. Return of Assets of four Members of the Legislative Assembly as on 31st March 1971, nine Members of the Legislative Assembly as on 31st March 1972 and 23 Members of the Legislative Assembly (inclusive of Hon. Ministers) as on 31st March 1973.

58. The Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1972 (L.A. Bill No. 24 of 1972), as passed by the Legislative Assembly.

*Laid on the table of the House on 3rd December 1973.





## இணைப்பு I.

(154 ஆம் பக்கத்தில் 194-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(அ) & (இ) ஒவ்வொரு நிறுவனமும் சட்ட ஆலோசனை பெறுவதற்காகத் தனக்கென வழக்குறைஞர்கள் பட்டியல் ஒன்றை வைத்து வருகிறது அல்லது வேறு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. அவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(a) தமிழ்நாடு தொழிலாக்க முயற்சிக் கழகம் :

சட்ட ஆலோசகர்கள் பட்டியலும் பகுதிநேரச் சட்ட அதிகாரியும்.

| | |
|---|---|
| 1. திரு. ஆர். பாலசுப்பிரமணியன், எம்.எ., பி.எல்.<br>வழக்கறிஞர்,<br>6, லார்ட் கோவிந்ததாஸ் நகர் சாலை,<br>சென்னை-2.<br>2. திரு. ஜி. ராமசாமி, பி.எஸ்சி., பி.எல்.,<br>கூட்டு அரசு வழக்கறிஞர்,<br>தமிழ்நாடு சிறப்பு வழக்கு நடத்துனர்,<br>மத்திய அரசு " வல்லபா ",<br>6/16, எட்வர்டு எலியட்ஸ் சாலை,<br>மயிலாப்பூர், சென்னை-4. | சட்ட ஆலோசகர்கள். |
| 3. திரு. ஜி. எஸ். கிருஷ்ணமூர்த்தி,<br>ஓய்வு பெற்ற நீதிபதி & வழக்கறிஞர். | பகுதி நேரச் சட்ட அதிகாரி. |

(b) தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்.

சட்ட ஆலோசகர் பட்டியல்.

1. திரு. ஏ. சண்முகவேல், வழக்கறிஞர்,
   56-II, முதன்மைச்சாலை,
   ஆர். ஏ. புரம், சென்னை-28.

2. திரு. எஸ். சேஷாத்திரி,
   வழக்கறிஞர்,
   6-II, கிரிசன்ட் பார்க் சாலை,
   காந்தி நகர், அடையாறு, சென்னை-20.

3. திரு. ஜி. ராமசாமி,
   கூட்டு அரசு வழக்கறிஞர்,
   சென்னை,

[1973 டிசம்பர் 4

### (c) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

#### சட்ட ஆலோசகர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். சேஷாத்திரி,
வழக்கறிஞர்,
தலைமை உயர்நீதி மன்றம்,
எண் 6, 2-வது கிரிசண்ட் பார்க் சாலை,
காந்திநகர்,
அடையாறு, சென்னை-20.

2. திரு. எ. சண்முகவேல்,
வழக்கறிஞர்,
தலைமை உயர்நீதி மன்றம்,
56, இரண்டாவது முதன்மைச்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28.

3. செல்வி விமலா நடேசன்,
வழக்கறிஞர்,
54-A/2, விநாயக நகர்,
கச்சேரி சாலை, மயிலாப்பூர்,
சென்னை-4.

4. திரு. ஏ. அருணாசலம்,
வழக்கறிஞர்,
120, தையப்ப முதலி தெரு, சென்னை-1.

5. திரு. பி. பாண்டி,
வழக்கறிஞர்,
35, சல்லிவன் கார்டன் சாலை,
மயிலாப்பூர், சென்னை-4.

6. திரு. ஆர். பாலசுப்ரமணியம்,
வழக்கறிஞர்,
6, லார்ட் கோவிந்ததாஸ் நகர் சாலை,
அண்ணாசாலை, சென்னை-2.

7. திரு. பி. சௌந்தரபாண்டியன்,
வழக்கறிஞர்,
1, இரண்டாவது முதன்மைச்சாலை,
சி.ஐ.டி. குடியிருப்பு,
சென்னை-4.



973 டிசம்பர் 4]

8. திரு. பி. ராமமூர்த்தி,
வழக்கறிஞர்,
19, பஸ்லுல்லா சாலை,
தி. நகர், சென்னை-17.

9. திரு. ஜி. வேங்கடேசன்,
வழக்கறிஞர்,
எண் 17, இளப் சாலை,
சேத்துப்பட்டு, சென்னை-31.

### (d) தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம்.

இக் கழகம், தேவையேற்படும்பொழுது, வழக்குகளின் இயல்புக் ணங்க வழக்கறிஞர்களை தெரிந்தெடுக்கும்.

### (e) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO).

மாவட்டங்களிலுள்ள அரசு வழக்கறிஞர்கள் இந்நிறுவனத்தின் உள் நர் சட்ட ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாநகருக்கு ந் நிறுவனத்தின் சட்ட ஆலோசகர்—

திரு. எஸ். துரைசாமி, பி.ஏ., பி.எல்.,
எண். 14, டி'மாண்டே தெரு,
சாந்தோம், சென்னை-4.

### (f) தமிழ்நாடு சிறுதொழில் கழகம் (TANSI) சட்ட ஆலோசகர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். சேஷாத்திரி,
வழக்கறிஞர்,
தலைமை உயர்நீதி மன்றம்.

2. திரு. பி. சூரியப்பிரகாசம், பி.ஏ., எம்.எல்., டிப்.டி.எல்.,
L/D, 14-I, முதன்மைச் சாலை,
அண்ணாநகர், சென்னை-40.

3. திரு. குமார் ராஜரத்தினம், பி.ஏ., பார்-அட்-லா.,
1, மூர் தெரு, சென்னை-6.

4. திரு. சே. சந்திரசேகரன், பி.எஸ்சி., பி.எல்.,
51, ராமானுஜகூடம் தெரு,
சென்னை-21.

5. திரு. ஆர். சண்முகம், பி.ஏ., பி.எல்.,
3/6, லஸ் அவின்யூ,
மயிலாப்பூர், சென்னை-4.

6. திரு. எஸ். அரசன், பி.ஏ., பி.எல்.,
32, திரு.வி. க. நகர்,
அண்ணாநகர், சென்னை-40.

7. திரு. எல். ஜே. கிருஷ்ணமூர்த்தி,
24/1, கால்வாய்க்கரைத் தெரு,
சென்னை-20.



## இணைப்பு II.

(160 ஆம் பக்கத்தில் 198-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

1971-ம் ஆண்டில் கூனூர் கால்நடை மருத்துவமனையில் ஒவ்வொரு மாதமும் வெறி நாய் கடிக்குச் சிகிச்சையளிக்கப்பட்ட விவரம் கீழ் வருமாறு :—

| மாதம். | கவனிப்பில் வைக்கப்பட்ட வெறி நாய்க்கடி கேஸ்கள். | கடித்தபின் குணப்படுத்த ஊசி போடப் பட்டவை. | தடுப்பு ஊசி போடப் பட்டவை. (Vaccinated.) |
|---|---|---|---|
| ஜனவரி .. .... .. | 3 | 4 | 15 |
| பிப்ரவரி .. .. .. | 2 | 7 | 33 |
| மார்ச் .. .. .. | 12 | 17 | 26 |
| எப்ரல் .. .. .. | 3 | 7 | 15 |
| மே .. .. .. .. | .. | 3 | 6 |
| ஜூன் .. .. .. .. | .. | 4 | 4 |
| ஜூலை .. .. .. .. | .. | .. | 13 |
| ஆகஸ்டு .. .. .. | .. | .. | 17 |
| செப்டம்பர் .. .. .. | 1 | 2 | 10 |
| அக்டோபர் .. .. .. | .. | .. | 18 |
| நவம்பர் .. .. .. | .. | 1 | 10 |
| டிசம்பர் .. .. .. | .. | 9 | 11 |
| மொத்தம் .. | 21 | 54 | 178 |

## இணைப்பு III

[163-ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 38 of 1973.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act*, 1959.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Act, 1973.

2. *Amendment of Section* 117, *Tamil Nadu Act* 22 *of* 1959—To section 117 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959), the following proviso shall be added, namely :—

"Provided that it shall be competent for the Commissioner to delegate by order any of the powers devolved upon him under this section, to the Deputy Commissioner or Assistant Commissioner specified in such order subject to such conditions and restrictions as the Commissioner may specify in this behalf; and the Commissioner may withdraw any of the powers delegated to the Deputy Commissioner or Assistant Commissioner under this section."

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

புதன்கிழமை, 1973 டிசம்பர் 5.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 3 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Writ Petitions filed in the Court by the Teachers.*

* 201. Q.—Thiru S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of writ petitions filed in the courts by the teachers against the Education Department during the past five years; and

(*b*) among them, the number of writ petitions, in which the judgments were against the Government?

ஆசிரியர்களால் நீதிமன்றங்களில் போடப்பட்ட "ரிட்"கள்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கடந்த ஐந்து ஆண்டுகளில், கல்வித் துறையை எதிர்த்து ஆசிரியர்களால் நீதி மன்றங்களில் போடப்பட்ட "ரிட்"கள் எத்தனை ?

(இ) இவற்றில் அரசுக்கு எதிராக தீர்ப்பானவை எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) கடந்த ஐந்து ஆண்டுகளில் கல்வித் துறையை எதிர்த்து ஆசிரியர்களால் 156 ரிட்டுகள் நீதிமன்றங்களில் போடப்பட்டுள்ளன.

(இ) முடிவடைந்த 121 ரிட்டுக்களில் 15 ரிட்டுக்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த "ரிட்"களில் எத்தனை அரசுக்குச் சாதகமாகவும், எத்தனை ஆசிரியர்களுக்குச் சாதகமாகவும் முடிந்துள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ தலைவரவர்களே, மொத்தம் 156 ரிட்டுகள் போடப்பட்டன. 121 ரிட்டுகள் முடிவடைந்து விட்டன. இவற்றில் 15 ரிட்டுகள் அரசாங்கத்திற்கு எதிராகவும், மற்ற ரிட்டுகள் அரசாங்கத்திற்குச் சாதகமாகவும் முடிந்துள்ளன. 35 ரிட்டுகளில் இன்னும் முடிவு காணவில்லை.

__திரு. செ. முத்துசாமி :__ தலைவரவர்களே, இந்த அரசுக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்ட 15 ரிட்டுகளில் என்னென்ன பிரச்சினைகளில் ஆசிரியர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகியிருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ தலைவரவர்களே, அது பற்றி முழு விவரம் இல்லை. இந்த "ரிட்"கள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக ஆராயவேண்டும். 15 "ரிட்டு"களின் முழு விவரங்கள் சொல்லுவது என்பது முடியாது. தனிக் கேள்வி போட்டால், முழு விவரங்கள் தரமுடியும்.

__திரு. எல். பலராமன் :__ தலைவரவர்களே, உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் இந்த "ரிட்"டுகளை அதிகமாகப் போட்டிருக்கிறார்களா அல்லது ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளி ஆசிரியர்கள் அதிகமாகப் போட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ தலைவரவர்களே, பொதுவாக கல்வித் துறையை எதிர்த்து போடப்பட்ட "ரிட்"கள் என்ற முறையில் தான் கணக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கவில்லை.

__திரு. செ. முத்துசாமி :__ தலைவரவர்களே, இந்த "ரிட்டு"களில் கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து மட்டும் எத்தனை "ரிட்டு"கள் என்பதைச் சொல்ல முடியுமா? அவைகளில் அரசுக்கு எதிராக எத்தனை "ரிட்டு"களில் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ தலைவரவர்களே, ஜில்லா வாரியாகப் பிரித்துப் பார்க்கப்படவில்லை. தனிக்கேள்வி போட்டால், ஜில்லா வாரியாக உள்ள விவரங்களைக் கொடுக்க முடியும்.

### *Formation of an "Open" University.*

*** 202. *Q.*—Thiru C. V. RAJAGOPAL (on behalf of Thiru K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education be pleased to state whether the Government are considering the formation of an "Open" University on the lines of the one functioning in the United Kingdom ?**





### "திறந்தவெளிப்" பல்கலைக் கழகம் ஏற்படுத்துதல்.

__திரு. சி. வி. ராஜகோபால் (திரு. க. அறிவழகன் சார்பில்) :__ மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இங்கிலாந்தில் செயல்பட்டு வரும் பல்கலைக் கழகத்தின் அடிப்படையில் இங்கு "திறந்தவெளி"ப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ மாநில அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வில்லை. பல்கலைக் கழக மான்யக் குழுவைக் கலந்துகொண்டு, இத்தகைய திட்டத்தை மத்திய அரசு பரிசீலித்து வருகிறது என்று அறியப்படுகிறது.

__திரு. செ. முத்துசாமி :__ தலைவரவர்களே, இந்திய நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலாவது இத்தகைய திறந்தவெளிப் பல்கலைக் கழகங்கள் நடத்துவதற்கு முயற்சி இருக்கிறதா, அப்படி எங்கேனும் ஏற்படுத்தியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ தலைவரவர்களே, இது பற்றிய செயற்குறிப்பு சென்னைப் பல்கலைக் கழகத்திடமிருந்தோ, கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்தோ வந்ததாகத் தெரியவில்லை. இந்திய அரசின் பல்கலைக் கழக மானியக் குழுவோடு கலந்து ஆலோசனை செய்கின்ற ஒரு நிலை இருக்கிறது. எந்த மாநிலங்களிலும் இதுவரையிலும் இது நடைமுறைக்கு வந்ததாகத் தெரியவில்லை.

__திரு. எல். பலராமன் :__ தலைவரவர்களே, ரவீந்திரநாத் தாகூர் ஏற்படுத்திய சாந்திநிகேதன் போன்ற நிறுவனத்தில் இது போன்ற நிலையில் எப்படி கல்லூரிகளை நடத்துகிறார்கள் என்பதை அரசு அறியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

__மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :__ தலைவரவர்களே, எனக்கு அதுபற்றிய முழு விவரங்கள் தெரியவில்லை. முழு விவரங்கள் கேட்டால், அதைப்பற்றிய விவரங்களை வரவழைத்துத் தான் நாம் ஆராய வேண்டும்.

### *Selection Grade Scale of Pay.*

***@ 191. *Q.*—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education be pleased to state—**

**(*a*) whether Secondary Grade trained teachers serving in Government (Board) High Schools in the Chingleput District have not yet been sanctioned Selection Grade Scales of pay ; and**

**(*b*) if so, the reasons therefor ?**

---

@4—12—1973 நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

[1973 டிசம்பர் 5

## தேர்வுத் தர சம்பள வீதங்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் அரசு (வாரிய) உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இடைநிலைத் தர ஆசிரியர்களுக்கு தேர்வுத் தர சம்பள வீதங்கள் இன்னும் அளிக்கப்படவில்லையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ), செங்கற்பட்டு மாவட்டத்தில் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளுக்கென நிர்ணயிக்கப்பட்ட 78 இடைநிலை ஆசிரியர் தேர்வு நிலைப்பதவிகளில் 40 பதவிகள் நிறைவு செய்யப்பட்டன. இப் பதவிகளை நிரப்புகையில் பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளி முதலிய பள்ளிகளில் பணி செய்த காலத்தையும் பணி மூப்புரிமைக்கு கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசிரியர்கள் முறையிட்டுள்ளார்கள். இப்பிரச்சினை அரசின் ஆய்விலுள்ளது. இது குறித்து ஒரு முடிவெடுத்தவுடன் மீதியுள்ள தேர்வுநிலைப் பதவிகள் நிறைவு செய்யப்படும்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, பல அனுபவம் மிக்க இடைநிலை ஆசிரியர்கள்—சீனியர் டீச்சர்ஸ்—தேர்வு நிலை வழங்கப்பட்டும், அவர்களுடைய ஊதியம் குறைகின்ற காரணத்தால், அந்தத் தேர்வு நிலையே தங்களுக்கு வேண்டாம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் " ஃபண்டமண்டல் ரூல்ஸ் " 23 (பி) பிரிவை அவர்களுக்குச் செயல்படுத்தாததுதான் என்று கூறுகிறார்கள். அந்த அடிப்படையில் பரிசீலித்து, மாற்று உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றிய முழு விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதுபற்றிய முழு விவரங்களையும் ஆராய்ந்து தக்க முறையில் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தற்போது அமைச்சர் அவர்கள் செங்கற்பட்டு மாவட்டம் வாரிய உயர்நிலைப் பள்ளிகளிலே இடைநிலைத் தரத்திலிருக்கின்ற ஆசிரியர்களுக்கு "புரமோஷன்" செலக்ஷன் கிரேடு கொடுப்பதில் மீதி இருக்கின்றதை "பில் அப்" செய்ய முடியாததற்கு, எலிமெண்டரி ஸ்கூலிலிருந்து வந்திருக்கின்ற ஆசிரியர்களின் ஊழிய நிலை பற்றி முடிவு எடுக்காமல் இருப்பதுதான் காரணம் என்று சொன்னார்கள். அவர்களுடைய ஊழிய காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு முடிவு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அது எப்படி எவ்வளவு விரைவில் செய்யப்படும் என்றும் அறிய விரும்புகிறேன்.



1973 டிசம்பர் 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது நான் பல சங்கடங்களை உருவாக்கியிருக்கிறது. அதிலே நாம் தெளிவு காண வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு பல உயர்நிலைப் பள்ளிகளை எடுக்கின்றபோது, அங்கேயிருக்கின்ற துவக்கப்பள்ளிகளை நாம் அப்படியே ஊராட்சி ஒன்றியத்திலிருந்து எடுத்துக்கொள்கிறோம். அப்படி எடுக்கின்ற போது, அவர்களையெல்லாம் முன் பணி மூப்பு அடிப்படையில் சேர்க்கின்றபோது, ஆண்டுக்கு ஆண்டு மறுபடியும் ஒரு பட்டியலை திருத்தித் தயாரிக்க வேண்டியிருக்கின்றது. ஏற்கெனவே பணி மூப்புப் பட்டியலில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருப்பவர்களை, 8-வது வகுப்பு வரையில் இருக்கின்றவர்களைக் கொண்டுவந்து சேர்க்கும்போது, அவர்களின் ஊழிய காலம் அதிகமாக இருந்தால், அவர்களை மேலே கொண்டுவந்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தச் சங்கடங்களை எப்படித் தீர்ப்பது என்பது பற்றித்தான் அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வு நடக்கிறது ; திட்டவட்டமான முடிவு எடுக்கப்பட்ட பிறகு அறிவிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, செலக்ஷன் கிரேடு என்று வழங்கப்பட்டதன், 'ஆப்ஜெக்ட்' நீண்ட காலம் ஒரே பள்ளியில், ஒரே பதவியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு, தொய்வு ஏற்படுகின்ற காரணத்தால் புரமோஷன் இல்லாத கேட்டகிரியாக இருக்கின்ற காரணத்தால், அவர்களை ஊக்குவிப்பதற்காக, இந்த செலக்ஷன் கிரேடு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது என்று தெளிவாக இருக்கிறது. ஆகவே, அப்படியிருக்கும்போது தொடக்கப் பள்ளியில் பணியாற்றினாலும் உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றினாலும், ஒரே சிலபஸ், ஒரே பாடத்திட்டத்தைத்தான் சொல்லிக்கொடுக்கின்ற நடைமுறை இருக்கின்ற காரணத்தால், தொடக்கப்பள்ளியாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும், இந்த 'ஆப்ஜெக்டில்' சொல்லப்பட்டிருக்கின்றபடியே செலக்ஷன் கிரேடுக்குத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். அப்படி அவர்களுடைய ஊழிய காலத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது ஒரு வாதம். இந்த வாதத்தை நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டு[illegible]. மற்றொரு வாதத்தையும் பார்த்து, இதில் ஏதேனும் ஒன்றை எடுத்துக்கொண்டு ஒரு முடிவு எடுத்தால், அதன் அடிப்படையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வழி ஏற்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர, முதலமைச்சர் அவர்கள் 5, 6 நாட்களுக்கு முன்பு, 10 ஆண்டு ஊழிய காலமாக இருந்தால், அவர்களுக்கு செலக்ஷன் கிரேடு வழங்குவது பற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள். அது விரைவாக அடுத்த பட்ஜெட் கூட்டத்துக்குள் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

*Financial Aid to Private Colleges.*

*@ **192. Q.**—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru **M. RAJAH IYER**): Will the Hon. the Minister for Education be pleased to state :—

பிற்பகல் 3-10

(*a*) whether the Government propose to extend financial aid to private colleges to enable them to give their staff the same weightage given to Lecturers in Government Colleges, as per the recommendations of the Second Pay Commission ; and

(*b*) if so, the details thereof ?

தனியார் கல்லூரிகளுக்கு நிதியுதவி.

திரு. கே. எஸ். கணபதி (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கிணங்க, அரசினர் கல்லூரி விரிவுரையாளர்களுக்கு கடந்த காலப் பணி அடிப்படையில் கூடுதல் ஊதிய உயர்வு அளிக்கப்படுவது போலவே, தனியார் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் அளிக்க இயலும் வகையில் தனியார் கல்லூரிகளுக்கு நிதியுதவி வழங்க அரசு கருதியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) "மான்யவிதி" மற்றும் அது சம்பந்தப்பட்ட அரசு ஆணைகளின் அடிப்படையில் தனியார் கல்லூரிகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

*Transfer of the Chairmen and Managing Directors of the Tamil Nadu Industrial Development Corporation.*

* **203. Q.**—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Chairmen and Managing Directors of the Tamil Nadu Industrial Development Corporation were transferred frequently during the last six years ; and

@4—12—1973 நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.





(*b*) if so, whether the same has not affected the efficiency of the Corporation ?

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்கள், நிர்வாக இயக்குநர்கள் மாற்றம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்களும் நிர்வாக இயக்குநர்களும் கடந்த ஆறு ஆண்டுகளில், அடிக்கடி மாற்றம் செய்யப்பட்டனரா ?

(இ) ஆமெனில், இம்மாற்றம் காரணமாக இக்கழகத்தின் திறமை பாதிக்கப்படவில்லையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நிர்வாகத்தின் வசதியைப் பொறுத்து, நிறுவனத்தின் செயல்திறனைப் பாதிக்காத முறையில் அலுவலர்களின் மாற்றங்கள் அவ்வப்போது செய்யப்படுகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கடந்த 6 ஆண்டுகளில் யார் யார் தலைவர்களாகவும் ,நிர்வாக இயக்குநர்களாகவும் இருக்கின்றார்கள், அவர்கள் எவ்வளவு காலம் தலைவர்களாகவும், நிர்வாக இயக்குநர்களாகவும் இருந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே கணக்குப் போட்டு பார்த்துச் சொல்வதாக இருந்தால், கஷ்டமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். சுமார் 1968-லிருந்து 10 பேர்கள் இருந்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

MR. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1973 (L.A. Bill No. 24 of 1972) as passed by the Legislative Assembly, and signed by him, for the concurrence of the Council.

## 3. கவன ஈர்ப்பு.

**(1) 10,000 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளுக்கு அதிக இடங்கள் ஒதுக்கி, ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்குக் கூடுதல் ஸ்தானங்கள் ஒதுக்காத நிலைமை குறித்து.**

திரு. பி. திருஞானசம்பந்தம் : (திரு.வே. தங்கப்பாண்டியன் சார்பில்): தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன் :

" அண்மையில் மத்திய அரசுத் திட்டத்தின் கீழ் பத்தாயிரம் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் உத்தரவில், தனியார் பள்ளிகளுக்கு அதிகமான இடங்கள் ஒதுக்கியும் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்குக் கூடுதல் ஸ்தானங்கள் ஒதுக்காத நிலைமையையும் குறித்து "

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பின்றி உள்ள ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 1973–74-ல் 10,200 ஆசிரியர் பதவிகளை புதிதாக தமிழ்நாடு அரசு 11—9—1973 அன்று ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் ஹையர் கிரேடு பதவிகள் 500, செகண்டரி கிரேடு பதவிகள் 6,000, உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 500, பி.டி. ஆசிரியர் பதவிகள் 1,200, கைத்தொழில் ஆசிரியர் பதவிகள் 2,000 ஆகும்.

இத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவோர் அனைவரும் முறையான ஆசிரியர் பதவிகளில் உள்ளோரையொப்ப சம்பளம், அகவிலைப்படி முதலியனவற்றைப் பெறுவர். இத் திட்டத்துக்கு 1973–74-ல் ஆகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 150 இலட்சமாகும். இத் திட்டத்தின் கீழ் நியமிக்கப்படுவோர் அனைவரும் 1974–75-ம் கல்வி ஆண்டில் முறையான பதவிகளில் அமர்த்தப்படுவர்.

ஏற்கெனவே தொழில்பழகு ஆசிரியர் திட்டம் என ஒன்று 1970 அக்டோபர் முதல் தமிழ்நாட்டில் செயல்பட்டு வந்துள்ளது. அத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட சுமார் ஆறுயிரம் பேரில் சுமார் 1,800 பேர் தவிர மீதியுள்ளோர் அனைவரும் ஏற்கெனவே முறையான பதவிகளில் நியமிக்கப்பட்டு விட்டனர். அந்த 1,800 பேருக்கும் பயன் அளிப்பதற்காகவென்றே இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள 10,200 பதவிகளுள் 1,800 பதவிகள் ஒதுக்கப்பட்டு அந்த 1,800 தொழில் பழகு ஆசிரியர்களும் இனிமேல் முறையான ஆசிரியர்களை யொப்ப முழுச் சம்பளம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன 10,200 பதவிகளையும் பல்வேறு மாவட்டங்களிலுள்ள தலைமைக் கல்வி அலுவலர்களிடையே பள்ளிக் கல்வி இயக்குநர் பகிர்ந்து அளித்துள்ளார். அந்தந்த மாவட்டத்தில் உள்ள பல்வேறுவகை நிருவாகங்களின்



கீழ் (அரசு, தனியார், மற்றும் உள்ளாட்சி மன்ற நிருவாகங்களின் கீழ்) உள்ள பள்ளிகளுக்கு அப்பதவிகளைப் பகிர்ந்தளிக்கும் வேலையைத் தலைமைக் கல்வி அலுவலர்கள் செய்தனர். அவ்வாறு பகிர்ந்தளிக்கையில் அவர்கள் கருத்திற் கொண்டவை இரண்டு கோட்பாடுகளே. அவை (1) ஏற்கெனவே எப்பள்ளியிலாவது தொழில் பழகு ஆசிரியர் எவராவது இருப்பின் அவர்களுக்குப் பயன் அளிப்பதற்காகவென்று பதவிகள் ஒதுக்குதல்—மேலே விளக்கியவாறு : (2) அந்தந்த பள்ளிகளிலுள்ள ஆசிரிய மாணவர் விகிதப்படி எவற்றுக்குக் கூடுதல் ஆசிரியர் பதவிகள் மிகவும் தேவையோ அவற்றுக்குக் கூடுதல் பதவிகளை ஒதுக்குதல் ; ஆகிய இரண்டுமேயாகும். நிருவாகத்தை மனதிற் கொண்டு பதவிகளை ஒதுக்குதல் வேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் செயல்படவில்லை. அவ்வாறு செயல்படுவது சரியுமாகாது. மேற்கண்ட கோட்பாடுகளின் அடிப்படையில் சில மாவட்டங்களில் தேவை காரணமாகத் தனியார் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட பதவிகள் உள்ளாட்சி மன்றப் பதவிகளுக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளை விடக் கூடுதலாக இருந்திருக்கலாம்.

எந்த ஊராட்சி ஒன்றியமாவது தனக்கு ஒதுக்கப்பட்ட பதவிகளுக்கு நியமனம் செய்து முடித்துவிட்டு அதற்குப் பிறகு இன்னும் கூடுதல் பதவிகள் (ஐந்து லட்சம் பேருக்கு வேலைத் திட்டத்தின் கீழ்) வேண்டும் என்று விரும்பினால் அந்தந்த மாவட்டத்திலுள்ள பள்ளிக் கல்வித்துறை அலுவலருக்கும், பள்ளிக் கல்வி இயக்குநருக்கும் தெரிவிக்கலாம். அவ்வாறு விரும்பும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஆசிரிய மாணவர் விகிதம் இடம் தருமேயானால், அந்தந்த மாவட்டத்தில் பிற நிருவாகங்களிலாவது, அல்லது வேறு மாவட்டங்களிலாவது மேற்படி திட்டப் பதவிகள் மிஞ்சுமாயின் அவ்வாறு மிஞ்சும் பதவிகளைத் தர, பள்ளிக் கல்வித் துறை முயலும்.

**(2) அரை மில்லியன் திட்டத்தில் சுமார் 200 பி.டி. ஆசிரியர்களை நியமிக்காதது குறித்து.**

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன் :

" அரை மில்லியன் திட்டத்தில், 1,200 பி.டி. ஆசிரியர்களை நியமித்துக் கொள்வதில், அரசினர் " பி " பிரிவு பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும், இடைநிலைத் தரத்தில் பணிபுரியும் பி.டி. ஆசிரியர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருந்தும், அந்த பி.டி. ஆசிரியர்களை (சுமார் 200 பேர் கொண்டோரை) இது வரையில் ஈர்த்துக் கொள்ளாதது குறித்து."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஐந்து லட்சம் பேருக்கு வேலை என்ற புதிய திட்டத்தின் கீழ் 10,200 ஆசிரியர் பதவிகளில் 1,200 பதவி பி.டி. ஆசிரியர்கள் பதவி ஆகும். பல்வேறு வகை நிர்வாகங்களில் செகண்டரி கிரேடு ஆசிரியர் பதவிகளில் பணி செய்வோரில் பி.டி. தேர்ச்சி பெற்றவர்கள் இருந்தால் அவர்களுக்கு இந்த நியமனங்களில் முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று அரசு ஆணை யிட்டுள்ளது. ஆயினும், இதில் ஒரு நடைமுறை சிக்கல் எழுந்துள்ளது. அந்தந்தப் பள்ளியில் எந்தப் பாடத்தைப் போதிக்க ஆசிரியர் தேவைப் படுகிறதோ, அந்தப் பாடத்தில் பி.டி. பட்டம் பெற்று இருந்தால்தான், அவர்களை நியமிக்க வழி ஏற்படும். இப்பொழுது நியமிக்கத் தேவைப்படும் ஆசிரியர்கள் பெரும்பாலும் அறிவியல், கணிதம் ஆகிய துறைகளில்தான். செகண்டரி கிரேடு ஆசிரியர்களில் பி.டி. தேர்ச்சி பெற்றவர்கள், பெரும் பாலும் வரலாறு, புவியியல் போன்ற பாடங்களில் கற்பிக்கவே தகுதி யுடையவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, பி.டி. ஆசிரியர்களை நியமனம் செய்யும்போது, எந்தப் பாடத்திற்கு ஆசிரியர் தேவைப்படு கிறதோ, அந்தப் பாடத்தில் பி.டி. தேர்ச்சி பெற்றுள்ள செகண்டரி கிரேடு ஆசிரியருக்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று நிலைமை தெளிவாக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில்தான் நியமனங்கள் செய்யப்படுகின்றன. இதற்கிணங்க, கூடியவரை, ஏற்கெனவே பணியாற் றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களில் பி.டி. தேர்ச்சி பெற்றவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3) கல்வித் துறையின் 27—7—1973-ம் நாளிட்ட 1324-ம் எண்ணுள்ள அரசு ஆணையைச் செயல்படுத்தியதன் விளைவாக சில ஊராட்சி ஒன்றியங் களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்து.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். "கல்வித் துறையின் 27-7-1973-ஆம் நாளிட்ட 1324ஆம் எண்ணுள்ள அரசு ஆணையைத் திருத்த வேண்டும் என்றும், அதனால் அதனைச் செயல்படுத்த வேண்டாமென்றும், தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும், அந்த ஆணையைச் செயல் படுத்தியதன் விளைவாக கொறடாச்சேரி, தலைஞாயிறு, முத்துப் பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக் கேற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் குறித்து."

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1970ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் தேதிக்கு முன்னால், இடை நிலை ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதம் ஒன்றாகவே இருந்தது. ஆகையினால் சில இடைநிலை ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் பணி புரிய விரும்பவில்லை. ஆத லால், இடைநிலை ஆசிரியர்களின் பணிமூப்புக்குத் தக்கவாறு தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்யவேண்டிய தேவையில்லாமல் இருந்தது.



1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதிக்குப் பிறகு நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சம்பள விகிதம் இடைநிலை ஆசிரியர்கள் சம்பள விகிதத்தைவிட கூடுதலாயிற்று. ஆகவே, தலைமையாசிரியர் நியமனம், இடைநிலை ஆசிரியர்களின் பணிமூப்பினைப் பின்பற்றிச் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. இதற்கான ஆணைகள் அரசு ஆணை எண் 1722, கல்வி, நாள் 1971-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 ஆம் நாளில் வெளி யிடப்பட்டன. இவ்வாணைகளைச் செயல் படுத்துவதில் சில நடைமுறை இடை யூறுகள் ஏற்பட்டன. ஆகவே இவ்வாணைகளின் விளக்கமாக அரசு ஆணை நிலை எண் 1324, கல்வி, நாள் 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் நாள் வெளியிடப்பட்டது. இவ்வாணைகளைச் செயல்படுத்துவதிலும் சில இடையூறுகள் ஏற்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. இப்பொருளை மீண்டும் பரிசீலனை செய்து தக்க ஆணைகள் வெளியிடும் பொருட்டு அரசு ஆணை நிலை எண் 1324, நாள் 1973 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27-ல் அமல் படுத்தப்படவேண்டாமென நிறுத்தி வைக்கப்பட்டது. இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஆணைகள் வெளியிடப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, கொறடாச்சேரி பஞ்சா யத்து யூனியனில் அரசு அதை அமல் படுத்த வேண்டாமென்று ஆணை யிட்ட பிறகும் நேரடியாகப் பள்ளி இயக்குநர் அவர்கள் மாவட்ட கல்வி அதிகாரிகள் மூலமாக உத்தரவு அனுப்பியிருந்தும், அந்த உத்தரவு இந்த ஊராட்சி ஒன்றியங்களில் மதிக்கப்படாத காரணத்தினால் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று அறிகிறேன். அது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்று நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அரசு ஆணை நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. 1971ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் தேதி முதல் அமல் நடத்தப்பட வேண்டாமென்று நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிலைதான் இப்போதிருக்கின்றது. அதை மீறி நடக்குமேயானால், அதற்குத் தகுந்த நடவடிக்கை அரசு எடுத்துக்கொள்ளும்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது கல்வியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே பதில் சொன்ன நேரத்தில், 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் தேதிக்கு முன்னால் ஒரே சம்பளத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அந்த ஆசிரியர்களில் பலபேர் தலைமை ஆசிரியர் பொறுப்பு வகிப்பதற்கு விரும்பாமல் பள்ளித் துணை ஆசிரியர்களாகப் பணியாற்றினார்கள் என்று கூறினார்கள். இது ஒரே போஸ்டாக இருக்கின்ற காரணத்தினால் நீ க்ளெய்ம் செய்ய முடியாது என்றும், ஆசிரியர்களை எங்கே போட்டாலும் சம்பள வித்தியாசம் இல்லை, எட்மாஸ்டர் போஸ்ட் என்று ஒன்று இல்லை என்று சொல்லி அவரவர்கள் விருப்பப்படி பதவிகளில் வைத்திருந்தார்கள்,

[திரு. செ. முத்துசாமி] 1973 டிசம்பர் 5]

அதுதான் உண்மை நிலை. ஆனால் அரசினருடைய பஞ்சாயத்து சட்டப்படி நான் செலக்ஷன் போஸ்ட் எட்மாஸ்டர் போஸ்டுகளாகவும் ஆகியிருந்தது. நான் செலக்ஷன் போஸ்டகள் அத்தனைக்கும் ஸ்ட்ரிக்ட் சீனியாரிட்டி படிபோடவேண்டுமென்று ஊராட்சி மன்றங்கள் பிரிவிலே சட்டங்கள் இருந்தும்கூட இந்தச் சட்டம் ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற ஆணையாளர்களால் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவந்து, நான் ஏற்கெனவே சொன்னதுபோல—செலக்ஷன் போஸ்டில் ஸ்ட்ரிக்ட் சீனியாரிட்டிப்படி போடப்பட வேண்டுமென்று ஒரு உத்தரவு ஊராட்சி ஆணையர்களாலே அமல் படுத்தப்படாததினாலே, இந்த சிக்கல்கள் எல்லாம் உருவாகியிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்த ஆணையை அமல் செய்யத் தவறிய காரணத்தினாலே, இன்று சீனியாரிடிபடி நியாயமாகப் பதவி பெறமுடியவில்லை. பள்ளிகளில் ஊழியம் செய்யும் ஆசிரியர்களால் நீண்ட காலமாக ஒரு கோரிக்கை கொண்டுவரப்பட்டு, அந்தக் கோரிக்கைக்கான ஆணை வந்து அதை நிறைவேற்றும்போது, அதன் பலனை ஆசிரியர்கள் அடைய முடியாமல் இருக்கின்றார்கள் என்பதையும் கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக்கொண்டு வருகின்றேன். அந்த சீனியாரிட்டியை மதிக்கத்தக்க முறையிலே சரியாக அவர்கள் நடத்தத் தெரிந்தவர்கள் என்டதையும் நான் கூறி, அந்த சீனியாரிட்டியை மதிக்கத் தக்க அளவில் இப்போது வெளிவரக்கூடிய உத்தரவு இடப்படுமா, அல்லது அதை ஒப்புக் கொண்டு ஒரு உத்தரவை அளிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதையெல்லாம் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டு வருகின்றது. விரைவில் தக்கதொரு முடிவினை எடுத்து ஆணை வெளியிடப்படும்.

## (4) அரசின் சட்ட முன் வடிவு.

3-20 பி.ப. தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 24/1972).

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, ஏற்பு பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/72) ஆய்விற்கு எடுத்து கொள்ளப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

---

@320—343-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சடிக்கப்பட்டுள்ளது.



1973 டிசம்பர் 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்தச் சட்ட முன்வடிவு இம்மாமன்றத்தின் முன்பு கொண்டுவரப்பட்டதும், அதை ஆய்ந்து பரிந்துரைகள் செய்ய கூட்டு ஆய்வுக்குழு அமைக்கப்பட்டதும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும். கூட்டு ஆய்வுக் குழு செய்த திருத்தங்கள் அடங்கிய சட்ட முன் வடிவு 1973-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ஆம் தேதி அன்று வைக்கப்பட்ட கூட்டு ஆய்வுக்குழு அறிக்கையில் அடங்கியுள்ளது. குழு செய்துள்ள முக்கிய திருத்தங்கள் அந்த அறிக்கையில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சில வற்றைப் பற்றி நான் இப்பொழுது குறிப்பிட விரும்புகிறேன்.

இந்திய நாட்டு அரசியல் சட்டத்தின் 30-வது பிரிவின் கீழ் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கும் உத்தரவாதங்களுக்கும் ஒத்ததாக இருக்கும் வகையில் சட்ட முன் வடிவில் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மொழியின் அடிப்படையிலோ, சமயத்தின் அடிப்படையிலோ, உள்ள சிறுபான்மை வகுப்பினர், தனியார் பள்ளிக்கூடங்களை நிறுவ முன்பு அரசினால் குறிப்பிடப்படும் அதிகாரியின் முன் அனுமதியைப் பெறத் தேவை இல்லை என்று இப்பொழுது செய்யப்பட்டுள்ள திருத்தம் தெளிவுபடுத்துகிறது. இப்பொழுதுள்ள சிறுபான்மைப் பள்ளிகளும், இனி நிறுவப்படவிருக்கும் சிறுபான்மையினர் பள்ளிகளும், தங்கள் பள்ளிகளைப் பற்றிய விவரங்களை அரசினால் குறிப்பிடப்பட்ட அதிகாரிக்கு அனுப்பி அரசின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று மட்டுமே விதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஒழுங்கு முறைகளை மீறியதற்காக தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தை உரிய முறைப்படி அரசு எடுத்துக்கொள்வதற்கு வகை செய்யும் பிரிவும், சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளுக்குப் பொருந்தாது என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த இரு திருத்தங்களுக்குப் பின்பு, இந்தச் சட்ட முன் வடிவு பற்றி சிறுபான்மையினர் கொண்டிருந்த அச்சங்களும், ஐயப்பாடுகளும் அறவே நீக்கப்பட்டு விடும் என்று அரசு நம்புகிறது.

ஏற்கெனவே நடந்துகொண்டிருக்கிற தனியார் பள்ளிகள் மீண்டும் இந்தச் சட்டத்தின்கீழ் அனுமதி பெறவேண்டுமென்று முதலில் விதி செய்யப்பட்டிருந்தது. இது தேவையற்றது என்றும், இதனால், நிர்வாகங்களுக்கு இடையூறுகள் ஏற்படக்கூடுமென்றும், எடுத்துக் காட்டப்பட்டதன் பேரில், ஏற்கெனவே நடந்துகொண்டிருந்த தனியார் பள்ளிகள் மீண்டும் அனுமதிபெறத் தேவையில்லை என்றும், பள்ளிகளைப் பற்றிய விவரங்கள் கொண்ட ஓர் அறிக்கையை அரசு குறிப்பிடும் அதிகாரிக்கு அனுப்பினால் போதுமென்றும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஒழுங்கு முறைகளை மீறும் பள்ளிகளைப் பொறுத்தவரை, அவற்றின் அங்கீகாரத்தை ரத்து செய்வதற்கும், அரசு அளிக்கும் மானியத்தை நிறுத்தி வைப்பதற்கும், விதி முறைகளைத் தெளிவுபடுத்தி திருத்தங்கள்

[1973 டிசம்பர் 5

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

செய்யப்பட்டுள்ளன. இந்த இரு நடவடிக்கைகளும், சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகள் உட்பட, எல்லா பள்ளிகளுக்கும் பொருந்தும். ஆனால் மற்ற பள்ளிகளை அரசு எடுத்துக்கொள்ள சட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ள போதிலும், சிறுபான்மைப் பள்ளிகளைப் பொறுத்த வரை, இதற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள், மற்றவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால், அவற்றின்மீது மேல் விசாரணை முறையீடு செய்து கொள்வதற்கு விதி முறைகள் தெளிவாக்கப்பட்டுள்ளன. பதவியிலிருந்து நீக்கப்படும் ஆசிரியர்களும், பதவி குறைக்கப்படும் ஆசிரியர்களும் மற்ற முக்கியமான ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு உள்ளாகும் ஆசிரியர்களும் அரசினால் அமைக்கப்படும் டிரிபியூனலுக்கு முறையீடு செய்துகொள்ள இச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது, ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கையாகும்.

அரசு குறிப்பிடும் அதிகாரி ஆணையிட்ட பின்பும், ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த ஓர் ஆசிரியரை பள்ளி நிர்வாகம் வேலையில் மீண்டும் எடுத்துக்கொள்ள இசையாவிடில், அது தொடர்பாக ஆசிரியர் செய்யும் மேல் முறையீடு டிரிபியூனலினால் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு கூறப்படும் வரை ஆசிரியருக்குரிய ஊதியத்தையும் படித் தொகையையும், நிர்வாகம் டிரிபியூனல் வசம் கட்ட வேண்டுமென்றும் விதி செய்யப்பட்டுள்ளது, ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்புக்குரிய மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும்.

அது போலவே, பள்ளி நிர்வாகத்தை அரசே மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டால், அந்த ஆணையின்மீது மேல் முறையீட்டினை டிரிபியூனலுக்கு செய்யும் உரிமையும் பள்ளி நிர்வாகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மன நிறைவுடன் பணியாற்றவும், அவர்கள் உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கும் வகையிலும், இச்சட்டப் பிரிவுகள் இயற்றப் பட்டுள்ளதை ஆசிரியர் சமுதாயம் வரவேற்கும் என்று நம்புகிறேன். அதே சமயத்தில் தனியார் பள்ளி நிர்வாகங்கள் சிறப்பாகவும் சீராகவும் நடப்பதற்கு உதவும் வகையில் இச்சட்டம் அமைந்துள்ளது என்பதும் குறிப்பிடத் தக்கது. தனியார் பள்ளிகளின் உரிமைகளைப் பறித்து விடும் நோக்கம் இச் சட்டத்திற்குக் கிடையாது. அவர்கள் நிர்வாகத்தை சீர் செய்வதே சட்டத்தின் நோக்கம். பல தனியார் பள்ளிகள் மிக சிறப்பாகப் பணியாற்றி வருவதையும், கல்விக்குச் சிறந்த தொண்டாற்றி வருவதையும் நான் இங்கு குறிப்பிட்டுப் பாராட்ட விரும்புகிறேன். ஆக, கல்வியின் தரத்தைப் பாதுகாக்கவும், ஆசிரியர்களின் பணி நிலைக்கு உத்தரவாதம் அளிக்கவும், பொது நலனை முன்னிட்டு அரசு வெளியிடும் உத்தரவுகள் ஒழுங்காக நிறைவேற்றப்படுகின்றனவா என்பதைக், கண்காணித்து, அவ்வாறு நிறைவேற்றப்படுவதற்கு வகை செய்வதுதான், இச் சட்டத்தின் நோக்கம்.



1973 டிசம்பர் 5]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பள்ளிக் குழு அமைக்கப்பட வேண்டுமென்று இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அக்குழுவில் ஆசிரியர்கள் பிரதிநிதிகளும் இடம் பெறுவார்கள். பள்ளியின் நிர்வாகத்தையும் கல்வியின் தரத்தையும் வளர்க்கும் பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக்கப்படும். ஆனால் பள்ளியின் நிதி நிர்வாகமும், சொத்துக்கள் நிர்வாகமும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்படமாட்டாது. ஆகவே, இக்குழுவின் நடவடிக்கைகளால், பள்ளியின் நிதி நிர்வாகம் பாதிக்கப்பட்டு விடக்கூடுமென்று, தனியார் பள்ளி நிர்வாகங்கள் அஞ்சுவதற்கு இடமில்லை.

பள்ளி நிர்வாகங்கள் பற்றி அரசு அதிகாரிகள் வெளியிடும் உத்தரவுகள் தொடர்பாக, நிர்வாகங்கள் மேல் முறையீடு செய்து கொள்வதற்கு, ஒவ்வொரு கட்டத்திலும் வகை செய்யப்பட்டுள்ளது. ஒழுங்கு நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில், டிரிபியூனலின் தீர்ப்பு, நிர்வாகம், ஆசிரியர்கள் ஆகிய இரு சாராரையும் கட்டுப்படுத்தும் இறுதித் தீர்ப்பாக இருக்கும். காய்தல் உவத்தலின்றி, நடுநிலையில் நின்று, விசாரணை செய்து, நிர்வாகத்திற்கும், ஆசிரியர்களுக்குமிடையே ஏற்படக் கூடிய பிரச்சினைகள் குறித்து நியாயமான தீர்ப்பு வழங்குவதற்காக டிரிபியூனல்கள் அமைக்கப்படும்.

ஆசிரியர்களின் பணி நிலைமையில் முன்னேற்றங்கள் காண்பதற்காக டாக்டர் பால் தலைமையில் சில ஆண்டுகளுக்கு முன்பு அரசு ஒரு குழுவை நியமித்தது. அக்குழுவில் ஆசிரியர் பிரதிநிதிகளும், பள்ளி நிர்வாகிகளின் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருந்தனர். குழுவின் பொதுவான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றின் அடிப்படையில் தான் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சீராகவும், சிறப்பாகவும் இயங்கி வரும் தனியார் பள்ளிகள் இச்சட்டம் குறித்து எவ்வித சஞ்சலமும் சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை. அவ்வாறு, இயங்காத ஒரு சில பள்ளிகளையும் ஒழுங்குபடுத்தி அவற்றை சீர் படுத்தவே இச்சட்டம் செயல்படும். ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்குமிடையே நெருங்கிய நல்லுணர்வை ஏற்படுத்தவும், அரசு அதிகாரிகளுக்கும் பள்ளி நிர்வாகத்தினருக்குமிடையே சுமுகமான உறவை ஏற்படுத்தவும், இச்சட்டம் வகை செய்யும் என்று நம்புகிறேன். இது உரிமைகளைப் பறிக்கும் சட்டமல்ல. உரிமைகளை வழங்கும் சட்டம் தான். கட்டுப்பாடு சட்டமல்ல. சீர் செய்து ஒழுங்கு செய்யும் சட்டம் தான். ஆசிரியர்கள் நலனைப் பாதுகாக்கவும், பள்ளிகள் திறம்பட இயங்கவும், ஒரு தெளிவான நிலையையும் நியாயமான அமைப்பையும் உருவாக்க வேண்டுமென்ற உணர்வில் அரசு கொண்டு வந்துள்ள இந்தச் சட்டத்தை சமுதாயம் வரவேற்கும் என்று எதிர்பார்த்து, இச்சட்டத்தை இந்த மாண்புமிகு அவை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன் வடிவு எண் 24/72) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.".

* திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்பே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய இந்தச் சட்டம் காலம் தாழ்ந்து இப்போது நிறைவேற்றப்படவிருக்கிறது. இந்தக் காலத் தாழ்வுக்குக் கூறப்படும் காரணம், கான்ஸ்டிட்யூஷன் ஆர்டிகிள் 30-இல் சிறுபான்மையோருக்கு வழங்கப்பட்டிருக்கும் உரிமை என்பது தான். அந்த உரிமை பாதிக்கப்படாத அளவிற்கு எப்படி இந்தச் சட்டம் கொண்டு வரப்படலாம் என்ற விவாதத்திலேயே இவ்வளவு காலம்செலவழிந்திருக்கிறது. இதற்குப் பின்னரும் அவர்களுடைய உரிமை பாதிக்கப்படும் என்று எதிர்பார்த்து பலர் இதற்குத் திருத்தங்களைத் தெரிவித்து செயல்படுத்தக் கூடாது என்று பல முயற்சிகள் எடுத்து வருகின்றனர். சிறுபான்மையினர் பாதிக்கப்படக் கூடும் என்ற ஒரு காரணத்திற்காக கான்ஸ்ட்டிட்யூஷனில் கொடுக்கப்பட்ட புரொவிஷனை வைத்துக்கொண்டு எந்த விதமான சட்டத்திற்குமே கட்டுப்பட்டுச் செயல்பட ஒரு வகுப்பினர் மறுப்பது முறையற்றது. ஒரு சட்டம் என்றால், அந்தச் சட்டத்திற்குக் கீழ்படிந்து நடப்பது தான் நாகரீகமாகும். அந்த அடிப்படையில் சிறுபான்மையினர் இந்தச் சட்டத்தை ஏற்று அதன்படி நடக்க முன்வருவது தான் நியாயமும் கூட. ஆனால் இப்போது இந்தச் சட்டத்திலே பார்ப்போமானால், இரண்டு விதிகள் உண்டு. ஒன்று சிறுபான்மையினருக்கும் மற்றவர்களுக்கு முழுமையாகவும் என்று இருக்கிறது. எனவே, ஊரில் இரண்டு பைத்தியக் காரர்கள். சிறுபான்மையினர் சில சட்டங்களுக்குக் கீழ்படிய வேண்டிய அவசியமில்லை. எனவே, இந்த "Article 30 of the Constitution"ஐ முறையாக மாற்றியமைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தமிழ் நாடு அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் தான்' சிறுபான்மையினரும் இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இரண்டு பைத்தியக்காரர்கள் என்றீர்கள், இன்னொரு பைத்தியக்காரர் யார் என்று சொல்லவில்லையே.

3-30 பி.ப. திரு. கே. எஸ். கணபதி : ஒருவித பைத்தியக்காரர்கள் எந்த வழியிலும் செல்ல இயலாதவர்கள் ; ஒருவிதமான சட்டத்திற்கும் கட்டுப்படாதவர்கள். மற்றொரு வகை பைத்தியக்காரர்கள் எந்தவிதமான சட்டத்திற்கும் கட்டுப்படுகிறேன் என்பவர்கள். இரண்டு வகையினரும் சேர்ந்து நம்முடைய கல்வி நிலையங்களை.................



திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, சட்டத்திற்குக் கட்டுப்படுகின்றவர்களை எல்லாம் பைத்தியக்காரர்கள் என்று உறுப்பினர் குறிப்பிடுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் நாகரீகம். பைத்தியக்காரர்களில் இரண்டுவகை உண்டு என்றுதான் நான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசுவது சிறுபான்மையினரை எல்லாம் பைத்தியக்காரர்கள் என்று குறிப்பிடுவது போல் ஏற்படும். அப்படிப் பேசுவது நல்லதல்ல.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்தச் சட்ட வரைவை நான் முழுமையாக வரவேற்கிறேன். எல்லா தனியார் பள்ளிகளும் அரசால் ஏற்கப்பட்டு நடத்தப்பட வேண்டுமென்ற ஒரு வாதம் சட்ட மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. நான் அந்த வாதத்தை ஏற்பதற்கில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், தனியார் பள்ளிகள் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அரசாங்கம் அந்தப் பள்ளிகளை எடுத்து நடத்த வந்தால், அவைகளின் தரம் குறைந்து போகும் என்று நான் அஞ்சுகிறேன். இப்போது இந்தச் சட்டத்தாலே, சிறப்பாக நடந்துவரும் தனியார் பள்ளிகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. எல்லாப் பள்ளிகளும் தவறு செய்வதில்லை. ஒரு சில பள்ளிகள் தவறு செய்கின்றன. அந்தப் பள்ளிகளை அரசு எடுத்துக் கொண்டு நடத்தும் நோக்கத்தோடுதான், இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்த அளவிலே இது ஒரு முறையான சட்டமாகும். முறையாக நல்ல முறையில் நடத்தப்படும் பள்ளிகளுக்கு இந்தச் சட்டம் பாதகமானது என்று கருத வேண்டிய அவசியமில்லை. நேர்மையாக எல்லாப் பள்ளிகளும் செயல்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன்தான் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது. ஆசிரியர் உலகம் இது போன்ற ஒரு சட்டத்தை வெகு நீண்ட காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. ஏனெனில், தனியார் பள்ளிகள் விரும்பினால், ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்குவது எளிதாக இருந்தது. இதுவரையில் இருந்து வந்த மெட்ராஸ் எடுகேஷனல் ரூல்ஸ் ஒரு ஸ்டேசுடரி சட்டம் இல்லை என்ற காரணத்தால், தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுடைய பணி பாதுகாக்கப்படாமலிருந்து வந்தது. இந்தச் சட்டம் வருவதால் அவர்களுடைய பணி பாதுகாக்கப்படுகிறது என்ற அளவில் ஆசிரியர் உலகம் இதை வரவேற்கிறது. ஆனால் எனக்கு ஒரு ஐயப்பாடு. இந்தச் சட்டம் முழுமையாக ஆசிரியர்களின் பணியைப் பாதுகாப்பதாக இல்லை என்று தான் கூறுவேன். இதிலே ஒரு விதி இருக்கிறது. "தாளாளர் விரும்பினால் ஒரு வகுப்பையோ அல்லது பள்ளியையோ மூடி விடலாம் ." இதற்கு அவர்கள் வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. அதிகாரிகளுக்கு, நான் இம்மாதிரி மூடப்

[திரு. கே. எஸ். கணபதி]

போகிறேன் என்று எழுதினுல் போதும். அவர் அவ்வாறு மூடுவது நியாயம்தானு, தேவையா, இல்லையா என்பதைப் பற்றி ஆராய வேண்டிய அவசியமில்லை. கடிதம் எழுதிவிட்டு குறிப்பிட்ட வகுப்புகளையோ; பள்ளியையோ மூடி விடலாம். அப்படி மூடப்படுவதால், அங்கே உள்ள ஆசிரியர்களும் மற்றவர்களும் வேலை இழக்க நேரிடும். இந்தச் சட்டத்தில் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமலிருக்கிறது. அந்த அளவில் கல்வி அமைச்சர் அவர்களும் சட்ட அமைச்சர் அவர்களும் இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க முடியுமா என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 15 ஆண்டுகளுக்கு முன்னுல், திருச்சிராப்பள்ளியில் ஒரு கல்லூரியில் ஒரு புரொபஸரை வேலையிலிருந்து நீக்க வேண்டும் என்ற காரணத்திற்காக "பி.காம்." கோர்ஸையே மூடினுர்கள். அந்த புரொபஸரும் மற்றவர்களும் வேலை இழந்தார்கள். அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகளில் அந்த கோர்ஸ் மறுபடியும் அந்தக் கல்லூரியில் வைக்கப்பட்டது. அந்த ஆசிரியர்—"புரொபஸர்" தவிர மற்றவர்கள் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். அதே திருச்சிராப்பள்ளியில் மற்றொரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஒரு ஆசிரியையை பள்ளியிலிருந்து நீக்க வேண்டுமென்ற காரணத்தால், எட்டு வகுப்புகளை மூடினுர்கள். எட்டாவது நிலையிலிருந்த அந்த ஆசிரியையை நீக்க வேண்டுமென்ற காரணத்திற்காக எட்டு வகுப்புக்களையும் மூடி, அந்த ஆசிரியையை வேலையிலிருந்து நீக்கினுர்கள். அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குப் போட்டார்கள், அவர்கள் பக்கம் தீர்ப்பு கிடைக்கவில்லை. எனவே அந்த அளவிலே பாதுகாப்பு அளிக்கும் என்ற அடிப்படையில் இந்தச் சட்டம் வரவேற்கத் தகுந்தது. இருந்தாலும் பள்ளிகளை மூடி ஆசிரியர்கள் வெளியேற்றப்படுவதாலுல், அவர்களைப் பாதுகாக்கும் அளவில் இந்தச் சட்டம் வரையப்படவில்லை. முடியுமாலுல் இந்த அவையில் அந்த மாற்றத்தையும் சட்ட அமைச்சர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் செய்து தர வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். நான் இதைப்பற்றி கல்வி அமைச்சர் அவர்களிடம் கூறினேன். இந்தச் சட்டத்தை, தனியார் பள்ளிகளை முறைப்படுத்தும் சட்டம் என்று போட்டு குழப்பாமல், ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்புச் சட்டம் என்று கொண்டுவந்தால் கூட பொருத்தமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். எனினும் இந்தச் சட்டம் வடிவு எடுத்துவிட்ட காரணத்தால், இப்பொழுது குறுக்கே எதையும் செய்ய முடியாது. பிறகு அந்த முறையில் மாற்றியமைக்க ஆலோசிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைப் போலவே கல்லூரிகளுக்கும், அங்கு பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் ஒரு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இதற்குத் துணை வேந்தர் அவர்களையும் கலந்துகொண்டு அவருடைய யோசனையைப் பெற்று ஒரு சட்டம் வருமேயானுல், தனியார் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பயன் அளிக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



[திரு. கே. எஸ். கணபதி]

பிறகு தனியார் பள்ளிகளில் ஒரு ஸ்கூல் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. அந்த ஸ்கூல் கமிட்டியைப் பற்றி விளக்கமாக ஒன்றும் சொல்லப்படாமல், "வேக்"—ஆக விடப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னிருந்த சட்டத்தில் இந்தக் கமிட்டியில் எத்தனை உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் சட்டத்தில் அதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. எனவே அரசு, விரும்பினுல் இந்தச் சட்டத்திற்கு விதிகள் பிறப்பிக்கும்போது, தாளாளர்களுக்குச் சாதகமாகவோ, ஆசிரியர்களுக்குச் சாதகமாகவோ செய்து விட முடியும். அந்த அடிப்படையில் இப்பொழுதே அந்த ஸ்கூல் கமிட்டியில் எத்தனை உறுப்பினர்கள் இருப்பார்கள்; அதிலே ஆசிரியர் பங்கு எத்தனை; மற்றவர்கள் பங்கு எத்தனை; என்று தெளிவு படுத்துவது நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, சிறுபான்மையினராக அல்லாதவரால் நடத்தப்படும் பள்ளியை சிறுபான்மையினர் ஒருவர் ஏற்று நடத்த வருவாரேயானுல், அந்தப் பள்ளி சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளியாகிவிடும் போல் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது. உதாரணத்திற்கு இந்து மதத்தைச் சேர்ந்தவர் ஒருவர் ஒரு பள்ளியை நடத்திலுல், காலப்போக்கில் அதை ஒரு கிறிஸ்தவருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டால், அந்தப் பள்ளி சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளி என்று மாறிவிடுகிறது. சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளுடைய வாதம், இது போன்று நடத்தக்கூடாது என்று விளக்கமாக உத்தரவிட்டுக் காட்டுகிறது. எனவே சிறுபான்மையினர் மற்றவர்களிடமிருந்து பள்ளிகளை ஏற்று நடத்திலுல், அவற்றை சிறுபான்மையினரால் நடத்தப்படும் பள்ளிகள் என்று ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு "கோடு ஆப் காண்டக்ட்" இது வரையில் இல்லாமலிருப்பது மிகவும் வருந்தத் தக்கது. இந்தச் சட்டம் இப்பொழுது அதைக் கொண்டு வர வழி செய்கிறது. அதே நேரத்தில் பள்ளித் தாளாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும், அதையொட்டி இன்னொரு "கோடு ஆப் காண்டக்ட்" போடுவதற்கு இதிலே உறுதி கொடுத்திருக்கிறுர்கள். என்னைப் பொறுத்த வரையில், அரசு தெளிவாக ஒரு "கோடு ஆப் காண்டக்ட்" ஆசிரியர்களுக்கு ஏற்படுத்திலுல் போதும். நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள், தங்கள் விருப்பப்படி ஆசிரியர்களை ஹிம்சிக்காமல் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வேண்டிக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை எவ்வளவு விளக்கமாகப் போட்டாலும், சிறுபான்மையினர் உரிமை என்ற அடிப்படையில் இந்தச் சட்டம் நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படலாம். நீதி மன்றத்தில் இந்தச் சட்டம் தோற்றுப் போகாமல், அடிபட்டுப் போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காக நான் ஒரு வேண்டுகோளை விடுக்கிறேன். இந்தச் சட்டத்திலே விதிகள் 18, 33

[கே. எஸ். கணபதி]

இவை இரண்டும் தனியார் பள்ளி நிர்வாகத்தில் தலையிடும் அளவுக்கு இருப்பதால், அந்த அடிப்படையில் நீதிமன்றம் இதைத் தவிர்த்து விடலாம். எனவே அந்த விதிகள் இரண்டும் சிறுபான்மைத் தனியார் பள்ளிகளுக்குச் சாராது என்று இப்பொழுதே தீர்மானம் செய்து விட்டால், இந்தச் சட்டம் எந்த வகையிலும் நிராகரிக்க முடியாத சட்டமாகி விடும் என்று கூறி, தமிழ் நாடு அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சிறப்பான சட்டத்தை வரவேற்று அமைகிறேன், வணக்கம்.

திரு. க. அறிவழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்தச் சிறப்புக்குரிய சட்டத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். கடந்த 35 ஆண்டுகளாக தமிழ் நாட்டில் இருக்கின்ற ஆசிரியர்கள் வேண்டி, வேண்டிக் கேட்டுக்கொண்ட பிறகு, இன்றைய தினம் தமிழ் நாடு அரசு ஆசிரியர்களுடைய வாழ்வில் ஒரு புதிய வரலாற்றையும், புதிய மறுமலர்ச்சியையும் தோற்று வைத்திருக்கிறது. அந்த மறுமலர்ச்சியை தமிழ் நாடு எங்குமிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் மிக மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் வரவேற்றிருக்கிறார்கள். ஏறக்குறைய இரஷ்ய நாட்டுப் புரட்சி போல், இந்தச் சட்டம் நம்முடைய கல்வித் துறையில் மிகப் பெரும் புரட்சியைச் செய்திருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது டிசம்பர் புரட்சி.

திரு. க. அறிவழகன் : இதிலே டிசம்பர் புரட்சியையும் சேர்த்துக் கொள்ளலாம். ஆக, அக்டோபர், நவம்பர், டிசம்பர் புரட்சி என்று சொல்லத் தக்க அளவுக்கு இந்தப் புரட்சி ஆசிரியர்களுடைய சரித்திரத்தில் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தச் சட்டத்தைச் செய்வதற்கான முதல் குழுவிலும், பின்னர் அதன் பொறுக்குக் குழுவிலும் உறுப்பினனாக இருந்த முறையில் இந்தச் சட்டத்தைச் செய்வதில் இருந்த பல சங்கடங்களை நான் மிக, மிக நன்றாக அறிவேன்.

இதிலே நம்முடைய ஆசிரியர்களுக்கான பாதுகாப்பை முழுவதும் தருவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியில், அந்த ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு என்பது, அதை நடத்துகின்ற பள்ளிக்கூடங்களில் இருக்கின்ற நிர்வாகம் சரியாக இருந்தால்தான் இருக்கமுடியும் என்ற அடிப்படையில்,
3.40 பி.ப. நிர்வாகத்தைச் சீர்திருத்துகின்ற நிலைக்கு நாம் ஆளாகியிருக்கின்றோம். ஆனால், நிர்வாகத்தினைச் சீர்திருத்துவது என்பது இந்திய நாட்டின் அரசியல் சட்டத்தின்படி முழுதும் செய்ய முடியாத ஒன்றாக இருக்கிறது. நம்முடைய நாட்டில் மைனாரிட்டிகளுக்குத் தரப்பட்டிருக்கின்ற உரிமைச் சட்டத்தின்படி, அவர்கள் நடத்துகின்ற நிறுவனங்களில் நாம் தலையிடுவது என்பது இயலாத காரியமாகும். திருமதி இந்திரா காந்தி அவர்கள்



[திரு. க. அறிவழகன்]

பிரதமராக வந்த பிறகு, மிகப் புரட்சிகரமான பல சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்தபோதிலும் கூட, நாம் அரசுக்காகத் தனியாருடைய செல்வங்களை எடுத்துக்கொள்ளும்போது, அதிலும் மைனாரிட்டியினருடைய செல்வங்களை எடுத்துக்கொள்ளும் போது, அதற்கு " அமவுண்ட் " என்று கொடுக்க முடியாது, அதற்கு " மார்க்கெட்டபிள் பிரைஸ் " என்றுதான் நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்று அந்தத் திருத்தத்திலும் கூட, மைனாரிட்டிகளுக்கு வழிவகை செய்திருக்கிறார்கள். நம் நாட்டிலே இருக்கின்ற சிறு பான்மையினருக்கு இந்தச் சட்டத்தில், பெரும் பங்கினை, பெரும் மதிப்பை, நாம் தந்திருக்கிறோம். சிறு பான்மையினருக்குக் கொடுத்திருக்கிற உரிமைகள் பற்றி மகிழ்ச்சியிருந்தாலும்—அது ஒரு கிறித்தவ சமுதாயத்தினர் நடத்துகின்ற பள்ளியாக இருந்தாலும், முஸ்லிம் சமுதாயத்தினர் நடத்துகின்ற பள்ளியாக இருந்தாலும், அவர்கள் சிறுபான்மையினர் என்ற காரணத்தால் அவர்களுக்கு உரிமைகள் வழங்கவேண்டுமென்பதை ஒப்புக்கொண்டு, அவர்கள் நடத்துகிற பள்ளி நிர்வாகக் குழுக்களிலே, அவர்கள் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியரை இடம் பெறச் செய்யத்தக்க ஒரு சூழ்நிலையை அமைக்க வேண்டியது ஜனநாயகப் பண்பாடு ஆகும். தலைவரவர்களே, நான் உங்கள் மூலம் சிறுபான்மைச் சமுதாயத்தினரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அவர்களுடைய நிறுவனங்களில் ஜனநாயகப் பண்பாட்டைக் கடைப்பிடித்து, அவர்களுடைய சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள் அங்கு ஆசிரியர்களாக வேலை பார்ப்பார்கள் அல்லவா, அவர்களுக்காவது வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைகளை நியாயத்தின் அடிப்படையில் சிறப்பாக வழங்கவேண்டுமென்பது. அதுபற்றி இந்தச் சட்டத்தில் நாம் முழுதும் விளக்கமாகச் சொல்லவில்லை என்றாலும், உலக நியாயத்தை உணர்ந்து, தனியார் பள்ளி நிர்வாகங்கள் அவற்றினை ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இரண்டு நாட்களுக்கு முன்னால், ஈரோட்டில் நடைபெற்ற பல்கலைக் கழகக் குழு ஆசிரியர்கள் மாநாட்டிற்குச் சென்றிருந்தேன். அந்த மாநாட்டில் முதல் தீர்மானம்

" **Resolved to request the Government to ensure security of service to aided school teachers in a statutory manner by bringing forward a suitable legislative enactment.** " என்று கூறுகிறது. தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள், இது போன்ற ஒரு பாதுகாப்புச் சட்டம் தங்களுக்கும் வாராதா என்று ஏங்குகிறார்கள் என்பதைத்தான் இந்தத் தீர்மானம் எடுத்துக் காட்டுகிறது. இது போன்ற சட்டத்தைத் தொடர்ந்து, தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் தங்களுக்கும் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் பல்கலைக் கழகமும், அதனுடைய சிண்டிகேட்டும் நாங்கள் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று சொன்னாலும், அந்தப் பாதுகாப்பு அவர்

[திரு. க. அறிவழகன்]

களுக்கு முழு நிறைவைத் தரவில்லையோ என்ற ஐயம் அவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தின் மூலம் தெளிவாகத் தெரிகிறது. யுனெஸ்கோ, ஐ.எல்.ஓ. ஐக்கிய நாடுகள் கல்வி, கலாச்சார ஸ்தாபனம், இன்டர்நேஷனல் லேபர் ஆர்கனைசேஷன்—ஒடு சேர்ந்து உலகத்தில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கென ஒரு "சார்ட்டர்" தயாரித்தபோது உலகெங்கும் இருக்கின்ற நாடுகள், அரசுகள் இன்றைக்கு இருக்கின்ற சட்டத்தைப்போல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டன.

"The recommendation stipulates that a statutory or voluntary machinery should be established whereby the right of teachers to negotiate through their organisation with their employers is assured."

என்று யுனெஸ்கோ கூட கேட்டுக்கொண்டது. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் யுனெஸ்கோ இந்த மாதிரிக் கேட்டுக்கொண்டது. நம்முடைய அரசு தான் இந்திய உபகண்டத்திலேயே இதை விரைந்து செயல்படுத்தியிருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளில் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வசதிகள், வகுப்பு அறைக்கு வேண்டிய மேஜை, நாற்காலி மட்டுமல்ல, அவர்கள் அங்கே தங்கியிருக்கும்போது வேண்டிய தனி வசதிகள்—"பப்ளிக் கன்வீனியன்ஸ்" என்று சொல்லுகின்ற வசதிகள்—இல்லாத நிலைகூட இருக்கிறது. ஒரு சாதாரண டீ ஹோட்டலில், அங்கே சுகாதார முறை சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லையென்றால், ஒரு "ஹெல்த் இன்ஸ்பெக்டர்" வந்து அந்த ஹோட்டலின் உரிமையாளரைக் கண்டிக்கவோ, தண்டிக்கவோ, வழக்குகளைத் தொடரவோ நிச்சயமாக முடியும். ஆனால், பள்ளிக்கூடங்களில் சுகாதாரத்திற்குத் தேவையான சூழ்நிலைகள் இல்லாமலிருக்குமேயானால், அவற்றை மிக விரைந்து கேட்பதற்கும், அவர்களைத் தண்டிக்கக்கூடியதுமான ஒரு சூழ்நிலை இல்லாத காரணத்தால் தான், நாட்டில் எல்லோரும் பள்ளிக்கூடம் நடத்தலாம், யார் வேண்டுமானாலும் பள்ளிக்கூடத்திற்கு மானேஜராக இருக்கலாம் என்ற எண்ணம் மேலோங்கி, நடத்தத் தொடங்கியிருக்கிறார்கள். தலைவரவர்களே, நம்முடைய நாட்டிலே எப்படி இந்தத் தனியார் நிறுவனங்கள் செயல்படுகின்றன என்பதை "எஜுகேஷன் கமிஷனில்" 1964–65-ஆம் ஆண்டில் உறுப்பினராக இருந்த திரு. ஜே. பி. நாயக் என்பவர், உத்திரப் பிரதேசத்தில் இருக்கின்ற தனியார் நிறுவனங்களைப் பற்றிச் சொல்லும்போது

"In Uttar Pradesh they have a phrase that the Congress has abolished Zamindari in land and has created a Zamindari in education. Such Zamindari landowners are managers of Colleges who are well-fed, well-clothed and maintain their own cars on the profits of the institutions which they run. It is now recognised that running an



[திரு. க. அறிவழகன்]

educational institution can be an important means of economic power."

என்று சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைவிட, நாங்கள் நாட்டின் நன்மைக்காகத்தான் பள்ளிக்கூடங்களை நடத்துகிறோம் என்று சொல்பவர்களைப்பற்றி, இங்கிலாந்து நாட்டிலிருந்து வந்த ஒரு ஆய்வாளர், லாயிட்ஸ் ருடால்ப் என்பவர்

"The Grant-in-aid relationship places a private institution within the reach of public authority and its definition of the public interest also creates conditions under which private institutions may capture public resources for private ends."

என்று எழுதினார். நம்முடைய நாட்டிலே எத்தனையோ பேர், தர்மம் செய்வதற்காகப் பள்ளிகளை, கல்லூரிகளை நடத்துகிறோம் என்று சொன்னாலும், அதிலே சிலர்—எல்லோரையும் சொல்லவில்லை—தங்களுக்கு வேண்டிய பொருளாதார ஆதாயத்திற்காகத் தான் இப்படிப்பட்ட தர்ம ஸ்தாபனங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லத்தக்க நிலையிருக்கிறது என்று இந்தியாவில் இருக்கின்ற கல்லூரிகள் நடைபெறுவதைப்பற்றிச் சொன்னார்கள். நான் இந்த நேரத்தில், முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் இந்த அவையில் இருக்கின்ற நேரத்தில், இரண்டு முக்கியமான எண்ணங்களைச் சொல்லி அவற்றை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றிருந்தபோது, அங்கேயிருக்கின்ற கல்வித் துறை நிறுவனங்களையும், ஆசிரியர்களுடைய சங்கங்களையும் காணச் சென்றிருந்தபோது, இரண்டு காரியங்களைக் கண்டேன். அந்த இரண்டையும் நம்முடைய அரசு மிக விரைந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய சென்னைக் கார்ப்பரேஷன் இப்போது கலைக்கப்பட்டிருக்கிறது. அது ஒருவிதத்தில் வருத்தமாக இருந்தாலும், இன்னொரு விதத்தில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. எந்த விதத்தில் வருத்தம் என்றால், மிக நீண்ட காலமாகச் செயல்பட்ட ஒரு நகரசபை கலைக்கப்பட்டு விட்டதே என்பது. ஆனால், இப்போது கலைக்கப்பட்டிருக்கின்ற காலத்தில், மிக முக்கியமான காரியங்களைச் செய்ய வேண்டும். இங்கிலாந்து நாட்டிலே, "இன்னர் லண்டன் எஜுகேஷனல் அதாரிட்டி"; "கிரேட்டர் லண்டன் எஜுகேஷனல் அதாரிட்டி" என்று அமைத்திருக்கிறார்கள். "இன்னர் லண்டன் எஜுகேஷனல் அதாரிட்டி" என்ற ஸ்தாபனம் அங்கேயிருக்கின்ற எல்லா ஆரம்பப்பள்ளிகளையும், உயர்நிலைப்பள்ளிகளையும், "ஃபர்தர் எஜுகேஷன்" கல்லூரிகளையும் நடத்துகிறது. அதிலே மேயர் தலைவராக இருக்கிறார், அல்லது உயர்ந்த அதிகாரிகள் தலைவராக இருக்கிறார்கள். மற்றும் கார்ப்பரேஷன் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், 50 பேர் அதை நடத்துகிறார்கள்.

லண்டன் நகரில், நீங்கள் தனியார் நிறுவனங்களைக் காண்பதைவிட, "இன்னர் லோக்கல் எஜுகேஷனல் அதாரிட்டி" நடத்துகிற பள்ளிக் கூடங்களைத்தான் காண முடியும். ஒவ்வொன்றிலும் சரிசமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் இருக்கிறார்கள். நாம் அத்தகைய ஒரு முறையினை, நம்முடைய மாவட்டம்தோறும், நகரசபைகள்தோறும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய பிரச்சினைகளில், அவர்களுடைய ஊதியப் பிரச்சினை என்பது தனியார் நிறுவனங்களில் மிகச் சிரமத்திற்குரிய பிரச்சினையாகும். இன்றையதினம் ஆசிரியர்களில் ஒருவரை எடுத்துக் கொண்டால், அவர் எனக்கு இங்கிரிமெண்ட் வரவில்லை என்பார்; இன்னொருவர் நான் பெற்றிருக்கின்ற எம்.ஏ. பட்டத்திற்கு மதிப்பில்லை என்பார்; இன்னொருவர் அரசாங்கப் பள்ளியிலிருந்து தனியார் பள்ளிக்கு வந்தால் அந்த சர்வீஸ் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்பார்; இன்னொருவர் என்னுடைய அனுபவம் முழுவதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்லுவார். எல்லோருடைய குறைகளையும் தீர்ப்பதென்பது ஒரு அரசால் முடியாத காரியம் ஆகும்; என்றாலும் இப்படிப்பட்ட குறைகளைத் தீர்ப்பதற்கு ஆசிரியர்களுக்கு என்று ஒரு தனிக் குழுவை அமைத்திருக்கிறார்கள். பர்ல்காம் கமிட்டி என்று ஒன்றை அமைத்திருக்கிறார்கள். "Committee on pays and scales" என்று அமைத்திருக்கிறார்கள் அவர்கள் 8,000 விதமாக இருந்த ஆசிரியர்களுடைய "Pays and scales" முறையை மாற்றி இன்றையதினம் 3,000 த்திற்குக் குறைத்திருக்கிறார்கள். அதைவிட இன்னொன்றை மிக அழகாகச் செய்திருக்கிறார்கள். இங்கே செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் ரூ. 210 சம்பளம் வாங்குகின்றார்கள். அங்கு 210 பவுன் சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியருடைய சம்பளம் இங்கே ரூ. 210-ல் தொடங்குமானால், அங்கே இருக்கின்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் ரூ. 301-லே தொடங்குகின்றது. தலைமை ஆசிரியருக்கு ரூ. 410, கல்லூரியிலே இருக்கின்ற பேராசிரியருக்கு ரூ. 510, முதல்வருக்கு ரூ. 610 என்று வரிசையாக ஒரே விதமாகச் சம்பள விகிதங்கள் தொடங்குகின்றன. அதாவது ஒரு செகண்டரி கிரேட் ஆசிரியர், தலைமை ஆசிரியரைப் போல சம்பளம்
.50 வாங்க முடியும். ஒரு உயர்நிலைப் பள்ளியிலே உள்ள பி.டி. ஆசிரியர்,
பி.ப. கல்லூரி முதல்வரைப் போல நிச்சயமாகப் பெற முடியும். அவருக்கு வாழ்நாள் இருக்குமானால், நிச்சயமாக அவர் அதைப் பெற முடியும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை வருவது தான், சோசலிச நாடு என்று நாம் சொல்லுகின்றபோது, இந்த நாட்டிற்கு இலக்கணமாக ஆகும். தமிழ்நாடு அரசு முன்வந்து சிறப்பான காரியங்களை எல்லா துறைகளிலும் செய்திருக்கின்றது. அந்த முறையில் சென்னை நகர சபைக்கு முதல் முதலாக ஒரு "இன்னர் மெட்ராஸ் எஜுகேஷனல் அத்தாரிட்டி" என்று அமைத்து, ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கல்வித் துறை நிறுவனங்களை நிர்வகிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களைக்கேட்டுக் கொள்கின்றேன். இங்கிலாந்து



நாட்டு "Pearlham Committee pays and scales teachers", என்பது போல, ஊதியக்குழு அல்ல, நிரந்தரமான ஊதியக்குழு ஆசிரியர்களுக்காக அமைக்க வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் தந்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். வணக்கம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்த மசோதாவைச் சபையின் முன்னால் வைத்து முன்மொழிந்த மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, இரண்டு காரணங்களுக்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதாகச் சொன்னார்கள். ஒன்று தனியார்களுடைய பள்ளிகளிலே பணி புரிந்து வருகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு நிர்வாகிகளினாலே சங்கடம் ஏற்படாத நிலைமையைக் கொண்டு வரவேண்டுமென்று இந்த மசோதா வருகிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதே சமயத்திலே தனியார் பள்ளிகள் மிகச் சிறப்பான முறையிலே நடந்து வருகின்றன என்றும், ஏதாவது சில பள்ளிகளிலே கோளாறுகள் இருந்திருக்கும், ஆனால் குறைந்த அளவு பள்ளிகளிலேதான் அந்த மாதிரித் தவறுகள் ஏதாவது ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற கருத்தையும் சொன்னார்கள். பேரவையிலே கூட அந்தக் கருத்தைச் சொன்னார்கள். இங்கே இருக்கக்கூடிய ஆயிரக் கணக்கான தனியாருடைய பள்ளிகளிலே, அதாவது 100, 150 பள்ளிகளிலே அங்கேயிருக்கின்ற செகரட்டரிகள், மானேஜர்கள், என்று சொல்லப்படுபவர்கள் தவறான முறையிலே தங்களுடைய அதிகாரங்களைப் பிரயோகம் செய்திருக்கக்கூடும் என்றும், பாக்கியுள்ள அனைவரும் நல்ல முறையிலே கல்வித் தொண்டுக்காகப் பாடுபடுகிறார்கள் என்றும் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இதற்கு முன்னால் பேசிய மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. அறிவழகன் அவர்கள் அதற்கு நேரிடையான கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதை அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர்கள் உத்திரப் பிரதேசத்தை உதாரணம் காட்டினார்கள். கிட்டத்தட்ட சில ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கு அமைக்கப்பட்ட அந்தக் குழுவிலே, உத்திரப் பிரதேசத்திலே எப்படி தனியார் பள்ளிகள் எல்லாம் தவறாக நடத்தப்படுகின்றன என்ற கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இங்கு உத்திரப் பிரதேசத்தை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாமென்ற என் கருத்தை நான் அவருக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் நம்முடைய தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகள் சீரும் சிறப்புமாக நடத்தப்படுகின்றன என்பதை 1972-ம் ஆண்டிலேயே "பால்" கமிட்டியார் "ரிப்போர்ட் ஆப் தி சர்வீஸ் கண்டிஷனிலே" குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

"Even prior to the introduction of the acts of the Local. Bodies' private agencies have been organising bulk of the educational institutions, both on the elementary and secondary education levels

[1973 டிசம்பர் 5

[திரு. ஓ. சுவாமிநாதன்]

**Christian Missionaries, private philanthropic gentlemen, and trusts have played a notable part in the spread of education in this State even before the Department of Public Instruction was set up".**

அவர்களுடைய குறிப்பிலே தனியார் பள்ளிகள் மிக நல்ல முறையிலே நடைபெற்று வருகின்றன என்ற கருத்தை குறிப்பிட்டிருப்பதைச் சொல்லி நான் என்னுடைய பேச்சை ஆரம்பிக்கின்றேன்.

நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், பாம் கமிட்டியாருடைய அறிக்கையில் கிட்டத்தட்ட 2,488 பள்ளிகள் நம்முடைய மாநிலத்திலே 1969-ஆம் ஆண்டிலே இருந்தன என்று குறிப்பிட்டார்கள். அதிலே அரசினுடைய பள்ளிகள் 119, போர்டு, பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிட்டிகள் நடத்துகின்ற பள்ளிகள் 1,465, பாக்கி மிஷன் பள்ளிகள் 283, நான்-மிஷன் பள்ளிகள் 488, கிட்டத்தட்ட பாதிக்கும் மேலாக தனியார்களுடைய பள்ளிகள் சிறந்த முறையில் இந்தக் கல்வித் தொண்டினை நம்முடைய தமிழ்நாட்டிலே செய்து வருகின்றன. கல்லூரிக் கல்வியைப் பொறுத்த வரையில்கூட, தனியார் கல்லூரிகள் சிறந்த முறையில் நடக்கின்றன. பள்ளிக் கல்வியும் சிறந்த முறையில் நடக்கின்றது. இவை இரண்டும் இல்லாவிட்டால், கல்வி நல்ல முறையில் நடைபெறுவதற்கான நிலைமை தமிழகத்திலே இல்லை என்பதை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களே எடுத்துச் சொன்னார்கள். "தனியார்களுடைய பள்ளிகளிலே நன்றாகச் சம்பாதிக்கின்றார்கள். இதை வருமானத்திற்கு வழியாகவும் வைத்திருக்கின்றார்கள்" என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கருத்தை "அவுட் மோடட்" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு முன்னாலே சொல்ல வேண்டிய கருத்துக்களை, இப்போது இவர்கள் இங்கு சொல்லியிருக்கின்றார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 1964-வது ஆண்டுக்கு முன்னாலே, தனியாருடைய பள்ளிகளிலே படிக்கின்ற பிள்ளைகளிடமிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் கட்டணம் வசூலிக்கலாம் என்ற நிலைமை இருந்தது. ஒருவேளை ஒரு சிலர், அதை வியாபாரமாகக் கூட நடத்தியிருக்கலாம். ஆனால் இலவசக் கல்விமுறை வந்துவிட்டபிறகு, தனியார் பள்ளிகளை நடத்துவது என்பது ஒரு சிறப்பான செயலாக, தங்களுடைய பணத்தைப் போட்டு நடத்தக்கூடிய காரியமாக இருக்கிறது. யாரும் அதனால் சம்பாதிக்கக்கூடிய நிலைமை இந்த சமயத்தில் இல்லை. அதுவும் அந்தப் பள்ளிகளை வைத்தவர்களுக்கு அந்தக் காலதிலே போதிய வருமானம் இருந்தது. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய சில குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்கள், செட்டியார் கம்யூனிடியைச் சேர்ந்தவர்கள், வெளிநாட்டிலே, மலேசியா போன்ற இடங்களுக்கெல்லாம் போய் பணத்தைக் கொண்டுவந்து கூட இங்கே பள்ளிகளை, கல்லூரிகளை அந்தக் காலத்திலே ஆரம்பித்தார்கள். காலணா சம்பாதிக்கின்ற அளவுக்கு வழி இருந்தது. சம்பாதிக்கின்ற காலத்திலே சேமிப்பும் இருந்தது. ஏனென்றால் இப்போது இருப்பதுபோல 90 சதத்தை அரசாங்



1973 டிசம்பர் 5]

[திரு. ஓ. சுவாமிநாதன்]

கத்திலே எடுத்துக் கொண்டு போய்விடவில்லை. அப்படி யாராவது பணத்தைப் போட்டு, கல்லூரியோ, பள்ளியோ கட்டிவைத்தால், அவர்களுக்கு சமுதாயத்திலே ஒரு மரியாதை இருந்தது. இப்போதிருக்கின்ற நிலைமை யாருக்கும் வருமானம் இல்லை. கணக்குப் போக வருமானத்திலே எதுவும் பாக்கி வைத்து சேமிக்கின்ற நிலைமையும் இல்லை. அப்படிச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு ஏதாவது பள்ளிக்கூடம் கட்டினாலும் கூட, ஏதோ கொள்ளையடித்த பணத்திலே கொஞ்சம் ஊருக்குக் கொடுக்கிறார்கள் என்று ஏசப்படுகின்ற அளவுக்குத்தான் அவர்களுக்குச் சமுதாயத்திலே மரியாதை இருக்கிறது. அந்த அளவிலே, இனிமேல் தனிப்பட்ட முறையிலே, கல்லூரியையும், பள்ளிகளையும் கட்ட வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வராது. மேலும் இந்த நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்த பிறகு—சிலர் அந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவாவது ஏதாவது டிரஸ்ட் போல வைத்து, கல்லூரிகள், பள்ளிகள் நடத்தலாம் என்று நினைத்திருக்கலாம்—அதற்கும் கூட இப்போது முடிவு கட்டியாகிவிட்டது. அவர்கள் 20 ஏக்கர் கூட வைத்துக்கொள்ள முடியாது என்ற நிலைமை உருவாகியிருக்கின்றது. (குறுக்கீடு). சிலர் என்று சொன்னேன். சிலர் என்ற வார்த்தையை ஜாக்கிரதையாகவே சொல்லிக்கொண்டிருக்கின்றேன். ஏனென்றால் எந்த விஷயத்திலும் சிலர் எப்போதும் இருந்து கொண்டிருப்பார்கள். நாங்கள் தப்பித்துக்கொள்வதற்காகக்கூட சிலர் டிரஸ்டுகள் வைத்திருக்கலாம். இனி டிரஸ்டுகளை வைக்க நிலம் கூட கிடையாது. சம்பாத்தியம் கிடையாது. ஒழுங்கான முறையிலே சம்பாதித்து மிச்சப்படுத்தவும் முடியாது. ஆக இப்படிச் செய்தாலும் கூட சினிமா முதற்கொண்டு பாக்கி எல்லா இடங்களிலும் காட்டுகின்றார்கள் பொதுத் தொண்டுக்குப் போகிறவர்களை, தங்களுடைய பணத்தைச் செலவு செய்து கொண்டு போகின்றவர்களை, ஒரு ஊரிலே இருக்கக்கூடிய அநியாயக்காரன் என்பவனைப் போல படம் பிடித்துக் காட்டுகிறபோது, அவன் ஒரு பள்ளியை நடத்துகின்றவனாகவோ அல்லது கல்லூரியை நடத்துகின்றவனாகவோ காட்டுகின்றார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு பகவதி அவர்கள் இருக்கின்றார்களே, அவர்கள் கூட அம்மாதிரி ஒரு சினிமா படத்திலே நடித்திருக்கின்றார்கள் என்று எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. ஆகவே, தனியார் பள்ளிகளே இனி வராது என்ற நிலைமை இருக்கிறது. எல்லாவற்றையுமே அரசுடைமையாக்கிவிட வேண்டும் என்று சொல்கின்றார்கள். எதை அரசுடைமையாக்குவது, எதை அரசுடைமையாக்க வேண்டாம் என்பதற்கெல்லாம் ஒரு வரை முறை, குறிப்பு இருக்க வேண்டும். செலக்ட் கமிட்டி உறுப்பினர்கள் சிலர் அப்படி எழுதியிருக்கின்றார்கள். கடைசியாக எல்லாவற்றையும் அரசுடைமையாக்கிவிட வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளையும், அரசாங்கத் தொழில்களையும் நாம் பார்க்கிறோம். இத்துடன் கல்லூரிகளையும் பள்ளிகளையும் தேசிய உடமையாக்கிவிட்டால், அங்கே வேலை செய்கின்ற ஆசிரியர்களுக்கு நல்ல முறையில் யாரும் எதுவும் செய்ய முடியாது என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். அரசாங்கப் பள்ளிக்

[திரு. ஜி. சுவாமிநாதன்]

கல்வித் தரத்துக்கும், கல்லூரிக் கல்வியின் தரத்திற்கும், தனியார் பள்ளிக்
கல்வித் தரத்திற்கும், கல்லூரி கல்வித் தரத்திற்கும் வேறுபாடு இருக்
கின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தச் சமயத்திலே இந்த மசோதாவைப் போன்று ஒன்றைக் கொண்டு
வந்திருப்பதை நான் வரவேற்கிறேன். ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு
வேண்டும் என்று பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. அந்த
அளவிலே நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன். இந்தச் சமயத்
திலே இந்த மசோதாவைப் பொறுத்த அளவிலே ஒரே ஒரு முக்கியமான
கருத்தைச் சொல்கின்றேன். அந்தக் கருத்து என்னவென்றால் இங்கே
இருக்கின்ற சட்டமன்றத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாத
நிலைமையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. தமிழிலே
சொல்வார்கள் "கண்ணைக் கட்டி காட்டிலே விட்டது போல" என்று. அரசாங்கம்
என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றது என்ற கருத்தே, இங்கே இருக்கக்
கூடிய இந்த மசோதாவிலே தென்படவில்லை. அந்தப் பழைய மசோதா
விலே பிரிவு 10-லே சொன்னேன். ஒரு பள்ளியை யார் நிர்வகிப்பது
என்ற கருத்து "பால்" கமிட்டியாரால் சொல்லப்பட்டது. பள்ளியால்
நியமிக்கப்படும் கமிட்டியால் நிர்வகிக்கப்பட முடியும் என்று
சொன்னார்கள். அந்தப் பள்ளியை நடத்துகின்ற மேனேஜரோ,
செகரட்டரியோ அல்லது பிரசிடெண்ட் என்பவரோ அதை நிர்வகித்துக்
கொண்டிருப்பவர், அதிலே ஒரு உறுப்பினராக இருக்க
வேண்டும் என்று பால் கமிட்டியிலே சொன்னார்கள். அந்தப் பள்ளியிலே
இருக்கக்கூடிய தலைமையாசிரியர், செயலாளர், அந்தக் கமிட்டியிலே ஒரு
உறுப்பினராக இருக்கலாம் என்று சொன்னார்கள். அந்தப் பள்ளியிலே
ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கின்ற பிரதிநிதி ஒருவர் அந்தக் கமிட்டியிலே
இருக்கலாம் என்று சொன்னார்கள். அதற்கப்பாலே, செயலாளராக
இருக்கக் கூடியவர் அந்தக் கமிட்டியிலே இருக்கலாம் என்று சொன்னார்
கள். அந்தப் பள்ளியில் இருக்கக்கூடிய தலைமை ஆசிரியர் கமிட்டியில்
உறுப்பினராக இருக்கலாம் என்று சொன்னார்கள். பள்ளியில் இருக்கக்
கூடிய ஆசிரியரைப் பொறுத்து, தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதி அந்தக்
கமிட்டியில் இருக்கலாம் என்று சொன்னார்கள். அதற்கப்பாலே
"Parent" என்ற அளவிலே அந்தப் பள்ளியில் படிக்கக் கூடிய ஒரு
மாணவருடைய தந்தையார், பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்று
சொன்னார்கள். அந்த ஊரிலே கல்வியில் அக்கறை கொண்ட
பெரியவர்களுடைய பிரதிநிதி ஒருவர் இருக்க வேண்டுமென்று
அந்தக் கமிட்டியில் சொன்னார்கள். நாம் ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம்.
அந்தக் கமிட்டிக்கு எல்லா விதமான அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்
கின்றன. அந்தப் பள்ளியில் இருக்கக் கூடிய சொத்துக்கள் தவிர,
பள்ளியை நிர்வகிக்கக் கூடிய அவ்வளவு அதிகாரங்களையும் அந்த ஸ்கூல்
கமிட்டிக்குக் கொடுத்திருக்கிறோம். முன்பு இந்த மசோதா சட்ட மன்றத்
தில் கொண்டு வரப்பட்டபோது "மேனேஜிங் கமிட்டி" என்று சொன்னார்கள்
இப்போது அதை "ஸ்கூல் கமிட்டி" என்று சொல்கிறார்கள். இந்த



[திரு. ஜி. சுவாமிநாதன்]

ஸ்கூல் கமிட்டியிலே இப்போது பெரிய விசித்திரம் என்னவென்றால்
இந்தக் கமிட்டியிலே எத்தனை உறுப்பினர்கள் இருப்பார்கள், ஒவ்வொரு
பள்ளியைப் பொறுத்து உறுப்பினர்கள் எவ்வளவு பேர்கள் என்று தெரிய
வில்லை. இந்தச் சட்டத்தினுடைய கருப்பொருளாக இருக்கிற அந்தக்
கமிட்டியிடத்தில் எல்லா அதிகாரங்களையும் கொடுத்து விட்டோம். அந்தக்
கமிட்டி தான் இனிப் பள்ளிக்கூடத்தை நிர்வகிக்கப்போகிறது என்ற அளவிலே
வைத்துவிட்டு, அந்தக் கமிட்டி உறுப்பினர் யார் என்பதை நிர்ணயம்
செய்யாமல், தற்போது இருக்கக் கூடிய செயலாளர் அல்லது தலைவர்,
மேனேஜர் தற்போது செயலாளராக இருப்பார் என்று போட்டு விட்டோம்.
அதற்கு மேலே ஆசிரியப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்
இருப்பார்கள் என்று நேற்றைய தினம் இருந்தது. பள்ளியில் ஆசிரிய
ருடைய பிரதிநிதியாக ஒருவர் இருப்பார் என்று போட்டது பெரிய தவறாக
இருந்தது. நேற்றைய தினம் சட்ட மன்றத்திற்கு வருகிறபோது
இதை எடுத்துச் சொல்லலாம் என்றிருந்தேன். பிரதிநிதி என்று
சொன்னால் பள்ளியில் இருக்கக் கூடிய ஆசிரியரில் ஒருவரா அல்லது
வெளியிலிருந்து வருகிற பிரதிநிதியா என்ற ஒரு இலக்கணத்
திற்குச் சரியான வரைமுறையில்லாமல் இருந்தது. தொழிற் சங்கங்களைப் 4
பற்றி நண்பர் காட்டூர் கோபால் போன்றவர்கள் அறிவார்கள். அந்தத்
தொழிற் சங்கங்களிலே, அந்தத் தொழிலில் இருக்கிறவர்தான் தலைவ
ராக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. வெளியில் இருக்கிறவர்
இருக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. ஆசிரியர் பிரதிநிதி என்று
சொன்னால், ஒரு பள்ளிக் கமிட்டிக்கு ஆசிரியர் பிரதிநிதியாகத் தேர்ந்
தெடுக்கப்பட்ட ஒருவர், வேறு ஒருவராக இருக்கலாம் என்பது போல்
தோன்றிற்று. இதற்குத் திருத்தம் கொண்டு வருவது நல்லது. திருத்தம்
இல்லையென்று சொன்னால், தேர்ந்தெடுக்கப்படுகிறது என்ற வார்த்தை
தவறானது. பள்ளியில் இருக்கக் கூடிய ஆசிரியர்கள் யார் மூத்த
ஆசிரியரோ, யார் மோஸ்ட் எக்ஸ்பீரியன்ஸ்ட் பர்ஸனாக இருக்கிறாரோ,
யார் சர்வீஸ் அதிகமானவராக இருக்கிறாரோ, அவரைப் பிரதிநிதியாக
போடலாம் என்று ஓரளவிற்கு அவசரமாகத் தீர்மானம் செய்தார்கள்
என்று கருதுகிறேன். அங்கே இருக்கக் கூடியவர்களிலே அதிக சர்வீஸ்
ஆனவரைப் போடவேண்டுமென்றால், யார் ஹெட்மாஸ்டராக வரவேண்டு
மென்று நினைத்துக் கொண்டிருக்கிறாரோ அவர் தான் மூத்த ஆசிரிய
ராக இருப்பார். அவர் தன்னை ஹெட்மாஸ்டராகப் போடுவார்களோ,
மாட்டார்களோ என்று மேனேஜ்மெண்டின் தயவிற்குக் காத்திருப்பார்.
அப்படியிருப்பவர் எத்தனை ஆண்டுக்காலத்திற்குப் பிரதிநிதியாக இருப்பார்
என்று தெரியாது. போட்டிருப்பவர் தலைமை ஆசிரியராக வர 10
ஆண்டு, 15 ஆண்டுகள் ஆகுமென்றால் அவரே ஆசிரியர் பிரதிநிதியாக
அந்தக் கமிட்டியிலே இருப்பார். ஆகவே, அந்த மேனேஜ்மெண்டில்
இருப்பவர்கள் ஒரு ஆசிரியரை விலை கொடுத்து வாங்கிவிட்டால், ஆசிரியர்
பிரதிநிதிகள் அத்தனை பேர்களையும் விலை கொடுத்து வாங்கியது போல்
சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அரசியல் இல்லாத இடமே இல்லை
என்ற நிலைமை வந்து விட்ட பிறகு, பள்ளிக் கூடத்திலே அரசியல் வரக்

[திரு. ஜி. சுவாமிநாதன்]

கூடாது என்பதற்காகச் செய்யப்படுகிறதாவென்று தெரியவில்லை. இப்போது மாணவர்களை அரசியல் செய்கின்ற நிலைமை வந்து விட்டது. பள்ளியில் இதனால் தான் அரசியல் வரவேண்டுமென்ற நிலை இல்லை. பள்ளிகளில், கல்லூரிகளில், எவ்வளவு அரசியல் தேவையோ அதற்கு மேலாகவே இருக்கிறது. அந்த அளவிலே ஆசிரியர்கள் சேர்ந்து யாராவது ஒருவரைத் தேர்ந்தெடுத்தால், அவருக்கு இத்தனை ஆண்டுகள் என்று நிர்ணயம் செய்து, 3 ஆண்டுக் காலம், 4 ஆண்டுக் காலம் பிரதிநிதியாக இருக்கலாம் என்று சொன்னால். அவர்கள் சரியாக நடக்காமல் இருந்தால் அவர்களை நீக்க முடியும். 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் வேலை செய்த ஆசிரியரை நீக்கவே முடியாது என்ற ஒரு நிலைமை ஏற்பட்டால் அந்தக் கமிட்டி எப்படி ஒழுங்கான கமிட்டியாக இருக்க முடியும் என்பதைக் கவனிக்க வேண்டும். இரண்டாவது, எல்லாவற்றையும் சேர்த்த அந்தக் கமிட்டியை எப்படிப் போடுகிறார்கள் என்பதை இந்த ரூல்ஸிலே வைத்திருக்கிறார்கள். என் கேள்வி என்னவென்றால்— அந்தப் பள்ளிக்கூடத்தை நிர்வகிப்பவர்கள் மேனேஜ்மெண்டைச் சேர்ந்தவர்களா அல்லது பள்ளிக்கூட ஆசிரியர்களா என்பதை நிர்ணயித்தாக வேண்டும்—இதை எப்படிச் செய்வது, எப்படி நிர்ணயிப்பது? நாளைக்கு நீங்கள் ரூல்ஸ் போடுகிறபோது, அந்த ரூல்ஸிலே ஆசிரியர் பிரதிநிதிகள் இத்தனை பேர்கள் என்று போடவில்லையென்று சொன்னால், அந்தப் பள்ளியினுடைய மேனேஜர் ஒருவர் இருக்கிறார், அவரைப் போட்டுவிட்டோ, எக்ஸ் அபிஷியோவாக ஹெட்மாஸ்டரைப் போட்டு விட்டோ, அதற்கு மேலே பள்ளி ஆசிரியர்களாக 5 பேர்களைக் கொண்டு அந்தக் கமிட்டியில் போட்டு விட்டால், நாளைக்கு அந்தப் பள்ளிக்கு சொத்து தவிர, நிர்வகிக்கக் கூடியவர் யார் என்று சொன்னால் ஆசிரியர்கள் நிர்வகிப்பார்கள். அல்லது, அதிலே ஒரு ஆசிரியரைப் போட்டு, நாளைக்கு 4 பேர்களை மேனேஜ்மெண்டு ரெப்ரசென்டேடிவ்களாகப் போட்டால், மேனேஜ்மெண்ட் நிர்வகிக்கிறார்கள் என்ற பொருள் ஏற்படும். ஆகவே, எது முக்கியமான விஷயமோ அந்த விஷயத்தை இங்கே இருக்கக்கூடிய சட்டசபையிலுள்ள யாருக்கும் தெரியாமல், கண்ணை மூடி மறைப்பதைப் போல் போட்டுவிட்டு, நான் ரூல்ஸ் வைத்திருக்கிறேன் என்று சொன்னால், இது எவ்வளவு தூரம் சரியானது என்று கல்வியமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய யோசனை, ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், பாடத் திட்டங்களைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் சர்வீஸ் கண்டிஷனைப் பொறுத்தவரையில், ஆசிரியர்களுடைய முடிவு கடைசியான முடிவாக இருக்க வேண்டும்.

பள்ளிகளுடைய பாக்கி நிர்வாகங்களைப் பொறுத்தவரையில், நிர்வாகிகளுடைய முடிவு கடைசி முடிவாக இருக்க வேண்டும். இதற்குத் தகுந்தாற்போல் அந்தக் கமிட்டியைப் போட வேண்டும். கமிட்டியை எப்படிப் போடுவது என்பதை வெளியே சொல்லாமல் வைத்திருப்பது தவறான முடிவு என்று சொல்கிறேன். ஏன், இதைத் தெரிந்தே செய்திருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டை நான் சொல்வேன். பால் கமிட்டியில் எப்படிப்



[திரு. ஜி. சுவாமிநாதன்]

போட வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். எப்படிப் போட வேண்டுமென்று பழைய சட்டத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். இரண்டுமில்லாமல் இப்படி ஒரு கமிட்டியைப் போடுவானேன்? இதிலே போட்டிருக்கிறார்கள் :

**Managing Committee shall consist of not less than two and not more than four to be nominated by the Educational Agency, one representative of teachers employed in the private school and one representative of parents.**

என்று போட்டு, மேனேஜ்மெண்டு இரண்டிலிருந்து நான்கு வரை போடலாம் என்று மேனேஜ்மெண்டுக்கு அதிக உறுப்பினர்களைக் கொடுத்து, ஆசிரியர்களுக்குக் குறைந்த உறுப்பினர்களைக் கொடுத்து, இந்தப் பள்ளி நிர்வாகத்தைப் பொறுத்தவரை, அவர்களுக்கு மெஜாரிட்டி கொடுத்தார்கள். பால் கமிட்டியில் நிர்த்துப் இரண்டு பேருக்கும் சம பங்காகக் கொடுத்து, தலைவராக இருக்கிறவர் இப்படியும் போடலாம், அப்படியும் போடலாம் என்று சொன்னார்கள். ஆனால் உங்கள் சட்டத்தில் யாருக்கு அதிகாரம் கொடுப்பது என்பதையே மறைத்துவிட்டது. இதைக் கட்டாயமாகச் சட்டமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும். அதுபட்டுமல்லாமல் இது மறுபடியும் சட்ட மன்றத்திற்குப் போய் வருவதற்கு அவகாசம் இல்லையென்று சொன்னால், இந்த மன்றத்தில் எப்படிப்பட்ட ரூல்ஸ் கொண்டுவரப் போகிறார்கள் என்பதற்கு ஓரளவிற்கு விஷயங்களை விளக்கி விட்டு இந்தச் சட்டத்தைப் "பாஸ்" செய்தால் சரியாக இருக்குமென்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்தபடியாக, இன்னொன்று. டேக் ஓவர் புரொவிஷன்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். எந்தப் பள்ளியாவது சரியாக நடக்கவில்லையென்று சொன்னால், அந்தப் பள்ளியை அப்படியே ஒரு 5 ஆண்டுக் காலத்திற்கு எடுத்து அரசாங்கம் நடத்தலாம் என்ற ஒரு கொள்கையை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய பேரவை உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எடுத்துக் கொள்வதற்கு என்ன உரிமை என்று சொன்னால், பள்ளியினுடைய நிர்வாகத்தை மட்டுமல்ல, பள்ளியினுடைய சொத்துக்களையும் சேர்த்து எடுத்துக்கொண்டு 5 ஆண்டுகள் நடத்தக்கூடிய உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாண்டுகளுக்கு முன்னாலே நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தபோது, பிராபர்டியைப் பொறுத்தவரையில், ஒரு நிலைமை எங்கள் மாவட்டத்தில் இருந்தது. ஒருவருக்கு 100 வேலி சொத்து இருந்தால், 25 வேலி சொத்து பள்ளி நன்மைக்காக, 75 வேலி சொத்து அவருடைய குடும்பத்திற்காக என்று சொல்லி இதுபோல டிரஸ்டுகள் உருவாக்கப்பட்டிருக்கும். ஆனால் சொத்துக்கள் பூராவும் பள்ளிகளின் பேரால் இருக்கும். ஆனால் அவர்தான் மேனேஜ்மெண்டில் இருப்பார். இந்த 5 ஆண்டுக் காலத்திற்கு பள்ளியினுடைய மேனேஜ்மெண்ட் மட்டுமல்லாமல், அந்தச் சொத்துக்களையும் எடுத்து

[திரு. ஜி. சுவாமிநாதன்]

நடத்துவதற்கான உரிமை அரசாங்கத்திற்கு எப்படி வர முடியும் என்ற கருத்தையும் கேட்க விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், என்னுடைய முடிவான கருத்து, இது நல்ல சட்டம், இதை நான் ஆதரிக்கிறேன். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஓரளவு அவர்களுடைய பணிக் காலத்திலே அவர்களுடைய தனிப்பட்ட நிர்வாகிகள் அவர்களுக்குக் கொடுமை செய்யாதவண்ணம் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை வரவேற்கிறேன். ஆனால், சட்டத்தைப் பொறுத்த வரையில், அரசாங்கத்தின் மனதிலே என்ன நினைப்பு வைத்துக்கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றி விட்டார்கள் என்ற எண்ணமே தெரியாத முறையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு பேரவைக்கும் மேலவைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

(மாற்றுத் தலைவர், திரு. க. அறிவழகன் தலைமை).

* தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்பை நோக்கமாகக்கொண்டு பல ஆண்டுகளாக ஆசிரியச் சமுதாயம் சொல்லிக்கொண்டிருந்த குறைகளை நிறைவு செய்கிற வகையில் தமிழக அரசு நல்ல எண்ணத்தோடு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறது. எந்தச் சட்டம் கொண்டு வரப் பெற்றாலும், குறையும், நிறையும் காண்பதும், விமரிசனம் செய்வது என்பதும் தவிர்க்கமுடியாத கடமைகளாக இருக்கின்றன. ஆனாலும் சட்டத்தை இயற்றுகிறவர்களுடைய அல்லது அரசினுடைய நோக்கம் இருக்கிறதே, அதிலே எந்த விதமான குறையும் சொல்லத்தக்க அளவிற்கு இல்லாமல் கூடுமான வரையில் ஆசிரியர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதில் அரசு தன்னுடைய சக்திக்கு இயன்ற வகையில் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது. அதே காலத்தில் தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில், இதில் அவர்களுக்கும் இடையூறு ஏற்படக்கூடாது என்ற வகையில் மிக நிதானமாக இந்தச் சட்டத்தை ஆய்வு செய்திருக்கிறது. பொதுவாக, தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக இந்து சமூகத்தினுடைய தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், நண்பர், இப்போது பொறுப்புத் தலைவராக இருக்கிற அருமை நண்பர், திரு. அறிவழகன் அவர்கள். உறுப்பினராக இருந்து பேசுகிறபோது சொன்ன செய்தியைப்பற்றி. அவை பல தனியார் பள்ளி ஆசிரியர்களே நிர்வாகிகளாக இருக்கிற பள்ளிகளைத் தவிர, பெரிய மிராசுதாரர்கள், மிட்டாதாரர்கள் நடத்துகிற பள்ளிகள் அல்ல என்பதை நான் பணிவாக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்து சமய நிறுவனங்கள் இந்து சமுதாயத்தைப்பற்றிக் கவலைப்படத் தொடங்குவதற்கு முன்பாகவே, அன்னியர் ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது இந்தச் சமூகத்திற்குத் தன்னுடைய மரபு வழியாகக் கல்வி கொடுக்க வேண்டுமென்ற அக்கறையோடு, ஆர்வத்தோடு பல கோயில்கள், மடங்கள் இருந்தும் கூட, அன்னிய மிஷனரியினர் தான் தன்னிச்சையாக, சுதாவாக இந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள்.



[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

அப்படி விரிந்தும் பரந்தும் கிடக்கின்ற உதிரி தனியார் பள்ளிகள் 4·10
சற்றேறக்குறைய நாலாயிரத்தி சொச்சம் பள்ளிகள் இருக்கின்றன. இப் பி.ப.
பொழுது அண்மையிலே தமிழ் நாட்டு தெய்வீகப் பேரவை அந்தப் பள்ளிகளை எல்லாம் ஒருங்கிணைத்து அவர்களுக்குள்ளேயே ஒரு ஒருமைப்பாட்டை உருவாக்கிக் கொள்வதற்கு முயற்சி நடைபெற்று வருகிறது. இதிலே தொழில் நிறுவனங்களாக வருகின்ற அமைப்புகளைச் சீர்படுத்த வேண்டும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. தவறு செய்கின்றவர்களுக்கு தண்டனை வழங்குகின்ற வகையில் மிகக் கடுமையான சட்டங்களைப் போடுவதில்கூட யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. தேசியமயமாக்குவதைப்பற்றி அடிக்கடி உறுப்பினர்கள் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் நானே பள்ளிகளை தேசியமயமாக்குதல் பற்றி அவரிடம் கேட்டது உண்டு. அது நாட்டினுடைய சூழ்நிலையையும், பொருளாதார அமைப்பையும், நம்முடைய சமுதாய அமைப்பையும் பொறுத்ததே தவிர, அந்த ஒரு நிலையையே எப்பொழுதும் வைத்துக் கொண்டு பேசுவது என்பது சாத்தியமானதல்ல, பொதுவாக ஒருவர் பலருக்கு உதவி செய்கிற பணியை மேற்கொள்வது என்பது, அவர் ஒரு தியேட்டருக்குப் போகாமல் ஒரு கடைக்குப் போகாமல், எல்லோருக்கும் பயன்படுகின்ற பணியை மேற்கொள்வது என்பது நம்முடைய சமுதாயத்தில் பாராட்டுதலுக்குரியதாக இருக்கிறது. அந்த அடிப்படையில் தனியார் பள்ளிகள், இந்து சமூகத்தைப் பொறுத்த வரையில், ஒரு கணிசமான பங்கை வகித்திருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்டு பொதுவாக நம்முடைய கல்வி அமைப்பைப் பொறுத்தவரையில் எவ்வளவு அமைதிக் குறைவு இருக்கிறது என்பதை நம்முடைய தமிழக அரசு, குறிப்பாக முதலமைச்சர் அவர்களும் கல்வி அமைச்சர் அவர்களும் அன்பு கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும் நம்முடைய கல்விக் கூடங்கள் கல்லூரிகள். நம்முடைய அடுத்த தலைமுறையினுடைய வரலாற்றை எழுத வேண்டிய இளைஞர்கள் பயிலுகின்ற பள்ளிக்கூடங்கள் அரசியல் வழிக்குச் சென்று கொண்டிருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். ஒரு ஆண்டுக்குள் பல தடவைகள் கல்லூரிகளை மூடும் அளவுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுத்தும் அளவுக்கு இருக்கிறது. எல்லோரும் ஒரு முகமாகச் சொல்கிறார்கள், "அரசியலில் மாணவர்களை இழுக்காதீர்கள்" என்று. ஆனால் தனியே இரவு நேரங்களில் பார்த்தால் எல்லா அலுவலகங்களிலும், எல்லா அரசியல் கட்சி அலுவலகங்களிலும் மாணவர்கள் பகடைக் காய்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். இந்தத் தலைமுறையில் வேறு எந்தத் துறையில் நாம் தவறுகள் இழைத்தாலும் சீக்கிரமாகத் திருத்திக்கொள்ள முடியும் அல்லது நடைமுறைப் படுத்திக் கொள்ள முடியும். ஆனால் கல்வி உலகத்தில் தவறுகள் இழைத்தால், ஒரு நாள் கல்லூரி மூடப்படுமானால், ஒரு ஆண்டினுடைய முன்னேற்றம் தடைப்படுவதுபோல நாம் உணர வேண்டும். இந்தச் சூழ்நிலை இப்பொழுதே கூட நம்முடைய இளைஞர்களை இழுத்திருக்கிறது. கல்லூரிகளில் நடைபெறுகின்ற

[1973 டிசம்பர் 5

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

மாணவர்கள் மன்றத் தேர்தல்களிலே எல்லாம் அரசியல் கட்சிகள் தலையிடுகின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட கால கட்டத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்றபோது அரசு மிக ஆழமாக இந்தச் சட்டத்தின் பிரதிகூலங்களாக கல்விக் கூடங்கள் சிதைவுறாமல் இருக்கும் பொருட்டு ஆய்வுக் குழுவில் ஆழ்ந்த கவனம் செலுத்தியிருக்கிறது என்பதை நான் மன உவகையோடு கூறிக் கொள்கிறேன். ஆனாலும் கூட பெருவாரியான இடங்களில் நிலவி வருகின்ற சூழ்நிலையில்— நேற்று நான் கல்வித் துறை அதிகாரிகளோடு பேசிக் கொண்டிருந்தபோது—இந்தச் சட்டம் தேவைதானா என்று கேட்டேன். ஏற்கெனவே உள்ள சட்டத்தின்படி, ஒரு பள்ளிக்கூடம் முறையாக நடத்தப்படாவிட்டால், அதனுடைய அங்கீகாரத்தை எடுத்துவிடுவதற்கு நம்முடைய மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களுக்குப் பரிபூர்ணமான அதிகாரம் இருக்கிறது. அப்படி பிடுங்கப்பட்ட அங்கீகாரத்தை, திருப்பிப் பெறப்பட்ட அங்கீகாரத்தை எதிர்த்து கோர்ட்டுக்குப் போனபோது கூட கோர்ட்டுகள் அந்த உத்தரவு செல்லும் என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறதே தவிர, எந்த உயர் நீதி மன்றமும் மாற்றி விட்டதாகத் தெரியவில்லை. புதிய, புதிய சட்டங்களைப் போட்டு வழக்கறிஞர்கள் வாழ்க்கையில் வாய்ப்புகளை வழங்குவதைவிட இருக்கின்ற சட்டங்கள் மிகக் கண்டிப்பாகவும், சீராகவும் நடத்தப்படுகிறபோது, இந்தச் சட்டங்கள் அவசியம்தானா என்று தோன்றுகிறது. ஆசிரியர்கள் பணி பாதுகாப்புக்குக்கூட ஏராளமான வாய்ப்புகள் கல்வி விதிகளில் இருக்கின்றன. ஒரு பள்ளிக்கூடத்தின் அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுவிட்ட பிறகு, அதிலே படிக்கின்ற மாணவர்கள் தகுதிச் சான்றுகள் பெற முடியாது என்று நம்முடைய கல்வி விதிகளில் தெளிவாக இருக்கிறது. எனவே இருக்கின்ற அதிகாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள கவனம் செலுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுவதன் நோக்கமே பணிப்பாதுகாப்புதான். அந்தப் பணிப் பாதுகாப்பைப் பொறுத்த வரையில், இந்தச் சட்டம் ஓரளவுக்கு அதை வழங்குகிறது. சில ஆசிரிய நண்பர்கள், ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள் ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்புக்கு தனியார் பள்ளிகளைச் சேர்ந்தவர்கள் அல்லது தொடர்பு உடையவர்கள் உத்தரவாதமாக இருக்க மாட்டார்கள் என்று கருதுவதை நான் மன வருத்தத்தோடு மறுக்க ஆசைப்படுகிறேன். இந்தச் சட்ட மேலவையில் நான் 1971-ல் அநேகமாக முதன்முதலாகப் பேசுகிறபோது தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு உத்தரவாதம் வழங்கப் படவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறேன். உத்தரவாதம் வழங்கப் பட வேண்டும் என்பது பணிகளுக்கு உத்தரவாதம் வழங்கப்படுவது போலவே தங்களால் பயிற்று வைக்கப்படுகின்ற பையன்களுக்கும் உத்தரவாதம் வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். காரணம் வேறு எந்தத் துறையிலும் பொறுப்பேற்றிருக்கின்றவர்களை விட ஆசிரியர்களுடைய பொறுப்பு, பணி நாட்டினுடைய வரலாற்றில் புரட்சி ஏற்படுத்தக்கூடியது, பெரிய மாறுதலை உருவாக்கக்கூடியது. ஒரு சமூக



1973 டிசம்பர் 5]

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

மாறுதலை உருவாக்கக்கூடிய மையங்களாக, கேந்திரங்களாக நம்முடைய பள்ளிகள் இருத்தல் வேண்டும். எனவே அவர்களுடைய பணிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுவதுபோல் அவர்களால் ஆற்றப்படுகின்ற கடமைகள் இருக்கிறதே அவைகளுக்கும் நிரம்ப பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறினேன். வேறு பணிகளைப் போல் பாதுகாப்பு கொடுக்காது போனால், அவலமும் கவலையும் இருக்குமானால், எதிலும் சிந்தித்துப் பேசவேண்டிய ஆசிரியர்கள், சிந்தித்துப் பாடங்கள் சொல்லித் தர வேண்டிய ஆசிரியர்கள் அந்தக் கடமையைச் செய்ய முடியாது. ஆக பணிகளுக்கும் பாதுகாப்பு தேவை. அவர்கள் யாருக்குப் பணி செய்கின்றார்களோ அந்தக் கல்வியின் தரம் உயர்ந்து, மாணவர்கள் சிறந்த சீலமும், நெறியும் பெற்று இந்த நாட்டின் வரலாற்றுக்குப் புகழைச் சேகரிக்கின்றவர்களாகவும், பெருமையைச் சேர்ப்பவர்களாகவும் விளங்க வேண்டும். நம்முடைய அரசு, குறிப்பாக தமிழக அரசு நிரம்பக் கல்விச் சலுகைகளை வழங்குகிறது. அந்தக் கல்விச் சலுகைகள் இந்த நாட்டுக்கு அடுத்த தலைமுறைக்கு அணிகலன்களாக வளர்ந்து வருமே தவிர ஆலையில் போட்ட பணம் போல உடனே திரும்பி வராது. காலப்போக்கில் சிறந்த சிந்தனையாளர்களாக, நல்ல அறிஞர்களாகத் தோன்றி இந்த நாட்டுக்குப் பெருமை தேடித்தர வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கின்றபோது, இன்னும் தெளிவாகக்கூட ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்புக்கு மாநில அளவில் உயர்நீதி மன்ற நடுவர் ஒருவரையும், ஆசிரியர்கள் பிரதிநிதி ஒருவரையும், பெற்றோர்களின் சார்பில் ஒரு பிரதிநிதியையும் கொண்ட ஒரு சிறந்த பாதுகாப்புக் குழுவை அமைத்து, அவர்கள் சொல்கின்ற முடிவை இறுதி முடிவாக எடுத்துக்கொள்வது என்பது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் இந்தப் பள்ளிக் கமிட்டி தான் முடிவு செய்யப்போகின்ற நிலைமை இருக்கிறது. அது அதற்குமேல் இருக்கின்ற அதிகாரிக்கு வரப்போகிறது. திரும்பத் திரும்ப விஷஸ் சர்க்கிள் போல சுற்றிக்கொண்டே வரும். இதைத் தவிர நம்முடைய டிரிப்யூனல் போல ஆசிரியர் பணிப் பாதுகாப்புக் குழு, தன்னிச்சையான, அதிக அதிகாரமுள்ளதாக அமைத்து இவர்கள் செய்கின்ற முடிவை இறுதியான முடிவு என்று கொள்ளத் தக்க வகையில் செய்வது நம்முடைய ஆட்சிக்கும், தமிழக அரசுக்கும், ஆசிரியர்களுக்கும் நல்லது. இந்த வகையில் நம்முடைய அரசு எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு அதிகாரிகள் தவறுகள் செய்ய மாட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது என்று சொன்னார்கள். அதிலே எனக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. இருந்தாலும் ஒரு பெரிய உயர்நிலைப் பள்ளியை அல்லது வேறு ஒரு பெரிய பள்ளியை நடத்துகின்றவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கருத்து வேறுபாடு ஏற்படுகின்றபோது, இன்னும் கொஞ்சம் நிதானத்தோடு நடவடிக்கை எடுக்கின்ற அளவுக்கு இந்தச் சட்டத்தை அமைக்க முடியுமா என்று பார்க்கலாம். இது ஒரு ஆலோசனையே தவிர, வேறு ஒன்றுமில்லை.

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

அடுத்து, மிக முக்கியமானது, நம்முடைய மன்ற உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் "இரண்டு பைத்தியக்காரர்கள்" என்று சொன்னார்கள். அதிலே ஒரு பைத்தியக்காரர் யார் என்று நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் கேட்டபோது, அவர் ரொம்ப தைரியமாக இருந்திருந்தால், என்னைச் சுட்டிக்காட்டிச் சொல்லி இருக்கலாம். இந்தச் சமூகத்தைப் பொறுத்தவரையில், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு என்ற அடிப்படையில் பெரும்பான்மையினரை, சிறுபான்மையினராக்குவதற்கு உரிய வாய்ப்புகளை உருவாக்கலாம். சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பு அளிப்பது என்பது தேசிய ஒழுக்கமுள்ள, அறிவு படைத்த, நாகரீகம் படைத்த ஜனங்களுடைய கடமையாகும். நான் மற்ற சமூகத்தினருக்கு என்றைக்குப் பாதுகாப்பு வழங்குகிறேனோ அன்றைய தினம்தான் என்னுடைய சமூகம் நல்ல முறையில் நிலைத்திருக்கும் என்பதில் கருத்து வேறுபாடு கொண்டவன் அல்ல. சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு என்பது ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டிய தர்மம், ஒழுக்கம், பண்பாடு என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் நமக்கென்று சில கொள்கைகள், நெறிமுறைகள் இருப்பதால், அவைகளைப் பாதுகாப்பதில் நம்முடைய அரசு எந்த விதமான அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று எண்ணுகிறார்கள். நேற்று முன் தினம் இந்தச் சட்டத்தைப் பார்த்த பிறகு, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அவர் அந்தத் துறையைக் கலந்து பார்க்க வேண்டுமென்று சொன்னார். சிறுபான்மையினர் என்றுதான் சட்டம் குறிப்பிடுகிறது என்று கருதுகிறேன். காரணம் இந்து சமூகத்தினுடைய சனாதன தர்மம், மனுஸ்மிருதி எல்லா காலத்திற்கும் ஒரு நீதி சொல்கின்ற முறையை ஏற்றுக்கொள்வது சைவ சித்தாந்த நெறி. தமிழ் நாட்டில் மிகச் சிலரால் பின்பற்றப்படுகின்ற சமய நெறிகளில் ஒரு நெறி, அப்படியிருக்கின்ற நெறிகளில் ஒரு நெறியைச் சேர்ந்தவன் நான். மிகப் பெரிய இந்து சமுதாயம் என்ற பெயரில் எங்களை மூட்டை முடிச்சுகளாகக் கட்டிப்போட்டு விட்டு—ஒரு புறம் பெரியார் இருக்கிறார்—காலத்திற்கும் சூத்திரர் என்றிருப்பதை ஒத்துக்கொள்கிறாயா என்று—நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை, சிறுபான்மையினர் என்று சொன்னால், சட்டம் ஒத்துக் கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். இதிலே ஒரு வழி வகை காணப்பட வேண்டும். என்னுடைய சமூகம், என்னுடைய மொழி, என்னுடைய இனம் இழிவுபடுத்தப்படுகின்ற இந்த சூத்திரர் என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. இந்த சமய மரபு. இந்தப் பேச்சு 1800 ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ந்துகொண்டு வருகிறது. நாம் அங்கீகரிக்கப்பட்ட சமூகமாகவும் இல்லாமல், வளர்ச்சியும் அடையாமல் இருக்கிறோம். எந்த வகையில் பார்த்தாலும் சிறுபான்மையினர் என்று சொல்லிக் கொள்ள முடியாத நிலை இருந்து வருகிறது. ஆனால் சைவ சித்தாந்த சமயத்தை எடுத்துக் கொண்டால், நூற்றுக்கு இரண்டு விழுக்காடு கூட இருக்க மாட்டார்கள். எனவே சிறுபான்மையினர் என்ற பெயரால் இந்த சமய நெறிகளைச் சேர்ந்தவர்களுக்கு விதி விலக்கு அளிக்கலாமா என்று யோசிக்க வேண்டும். இப்போது சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் பாதுகாப்பு கொடுப்-





[தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

பதில் எனக்கு இருக்கின்ற கருத்து வேறுபாடு இது தான். இப்பொழுது ராமசாமி என்பவர்—பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர் ஒரு பள்ளிக் கூடத்தைத் துவங்குகிறார். அங்கே கிறிஸ்தவ மாணவர்கள் நூற்றுக்கு 90 பேர் இருக்கிறார்கள். 4· பி.

இன்னொரு புறம் டேவிட் தாமஸ் என்பவர் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிறார். அங்கே படிக்கின்ற மாணவர்களில் 100-க்கு 90 பேர் இந்து மாணவர்கள். ராமசாமி நடத்துகிற பள்ளிக்கூடம் பெரும்பான்மையோர் நடத்துகிற பள்ளிக்கூடம் என்று சொல்லப்பட்டு, பாதுகாப்பு இல்லாமல் போகிறது. ஆனால், தாமஸ் என்பவர் நடத்துகிறபள்ளி, அங்கே இந்து மாணவர்கள் நிறையப் படித்தாலும், அது சிறுபான்மையோரால் நடத்தப்படுகின்ற பள்ளி என்ற பெயரால் பாதுகாப்பு பெறுகிறது. நம்முடைய முதல்வர் அவர்கள், அர்ச்சகர்கள் விஷயமாக, அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டும் என்று சொல்லுவதைப் போல, இதற்கு நிரந்தரமான பரிகாரத்தைக் காண்பதற்காக, நடுவண் அரசை அணுகவேண்டும். மைனாரிட்டிகளுக்குரிய பாதுகாப்பை வழங்குவதில் நாங்கள் முதன்மையாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கடந்த 1952-ல் இருந்து 1972-க்குள்ளாக, சமுதாய அமைப்பை, ஜனகணித புள்ளி விவரங்களைப் பார்த்தால், நமக்குப் பலவிதமான சிந்தனைகள் தோன்றுகின்றன. அவைகளை நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு செயலாற்ற வேண்டும். சிறு பான்மையினருக்குப் பாதுகாப்பு வழங்குவதில் நமக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. மத்திய அரசின் சட்டம் சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு வழங்கச் சொல்லுகிறதே தவிர, பெரும்பான்மையோருக்கு சட்டம் செய் என்று சொல்லவில்லை. பெரும்பான்மையினர் என்று பெயரளவில் இருந்தாலும் கூட, இந்து சமூகம் தான், அதைச் சேர்ந்தவர்கள் தான், ஏழைகளாகவும், ஜாதி வேற்றுமைகளிலே பலவீனப்பட்டும், அறிவிலிகளாகவும், குற்றுயிரும் குலை உயிருமாக இருக்கின்ற சமுதாயமாக இருக்கிறார்கள். இந்த சமுதாயப் பாதுகாப்புக்கு நம்முடைய தனியார் பள்ளிகள் சட்டத்தில் ஏதாவது பாதுகாப்பு இருக்க வேண்டும். அப்படிச் செய்ய முடியாது போனாலும், நம்முடைய இந்து அறநிலைய ஆட்சித்துறை, நம்முடைய அரசினுடைய பிரிக்கப்படாத துறையாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற காரணத்தால், அந்தத் துறையில் இந்து சமுதாயத்திற்கு உத்திரவாதமும், பாதுகாப்பும் கொடுக்கிற ஒரு சட்டத்தைச் செய்து, இந்தப் பள்ளிகளையெல்லாம் அவர்களுடைய கண்காணிப்பில் கொண்டு வந்து, ஒரு சிறந்த இந்து பாதுகாப்பைச் செய்து சமூகத்திற்கு ஒரு பாதுகாப்பை வழங்க வேண்டும். இது விஷயத்தில் நம்முடைய அரசு அதிகக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வழக்குமன்றத்திற்கு எடுத்துச் செல்லுகின்ற நிலை ஏற்படாதவாறு பார்த்து, இன்னும் அரசு இந்தத் துறையில் ஏதாவது கவனம் செலுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

பொதுவாக, நான் இந்த யோசனைகளை, ஆலோசனைகளை அரசுக்குச் சொன்னாலும், இந்தச் சட்டம் ஆசிரியர்களுடைய பணிப் பாதுகாப்புக்காக நல்லெண்ணத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்றால் முன்மொழியப்பட்டிருக்கின்ற திருத்தங்களை ஏற்றுக்கொண்டு, அவைகளுக்குச் சாதபமாக இந்தச் சட்டம் வருமானால், இந்தச் சட்டத்திற்குரிய பாதுகாப்பை ஆசிரியர்கள் பெறுவார்கள், பெறவேண்டும் என்ற நம்பிக்கையில் இந்த மசோதாவை வரவேற்று முடிக்கிறேன்.

திரு கே. எஸ். அப்துல் வகாப்: மாண்புமிகு தலைவரவர்களே, சபையில் விவாதிக்கப்படும் கல்வி மசோதாவை முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் நான் எதிர்க்க முற்படுகிறேன். பேரவையிலே, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த மசோதாவை எதிர்த்து வாக்களித்திருக்கிறார்கள் என்பதை யாவரும் அறிவீர்கள். இந்த மசோதாவின் நோக்கம் ஆசிரியர்களுடைய நிலைமையை உயர்த்தப்பட வேண்டும் என்பதாகும். ஆனால், நிர்வாக அமைப்பையே மாற்றியமைக்கக் கூடிய நிலையில் இது உருவாக்கப்பட்டிருக்கிறது. எங்களுக்கு இந்த மசோதா நியாயம் வழங்கவில்லை என்பதால் நாங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்டிருக்கிறோம் என்பதை இங்கே யாவரும் உணர வேண்டும் என்பதை நான் விரும்புகிறேன். உலகத்திலே இஸ்லாமியர்களுக்கென்று ஒரு தனிக் கலாசாரம், கோட்பாடு, மரபு உண்டு. அவைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதனால் தான், நாங்கள் சில சலுகைகளை, சில பாதுகாப்புக்களைக் கேட்கிறோமே தவிர, இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மட்டும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டுவந்த நூற்றுக் கணக்கான மசோதாக்களை நாங்கள் ஆதரித்துக்கொண்டு வந்திருக்கிறோமே தவிர, எதிர்க்கவில்லை. ஆனால், இந்த மசோதா எங்களை நேரடியாகப் பாதிக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இது போன்ற ஒன்றிரண்டு மசோதாக்களைத்தான் எதிர்த்து வந்திருக்கின்றோமே தவிர, சாதாரணமாக எப்போதுமே நாங்கள் ஆதரிப்பவர்கள் தான். தோழமைக் கட்சி கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவை நாங்கள் எதிர்க்க முற்படுகிறோம் என்றால், நாங்கள் பாதிக்கப்படக்கூடும், எங்களுடைய எண்ணங்கள், உரிமைகள் பாதிக்கப்படக்கூடும் என்று எண்ணுவதில் எந்த அளவில் நியாயம் இருக்கிறது என்பதை எல்லாம் நீங்கள் உணர வேண்டும். இங்கே மதிப்பிற்குரிய, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மைனாரிட்டிகளை இந்த மசோதா பாதிக்காது என்று சொன்னார்கள். ஆங்கிலத்தில் "The wearer knows where the shoe pinches" என்று சொல்லுவார்கள். யார் அந்த பூட்சைப் போட்டுக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களால்தான் அது எங்கே கடிக்கிறது என்பதை உணர முடியும். அதுபற்றி மற்றவர்களுக்குத் தெரியாது. அமைச்சர் அவர்கள் மைனாரிட்டிகள் பாதிக்கப்படவில்லை என்று பொதுப்படையாகச் சொல்லிவிட்டார்கள். சீர்திருத்த மசோதா என்ற



பெயரால், அவசியம் இல்லாத சர்ச்சைக்குரிய இந்த மசோதா கொண்டுவரப்பட்டது விரும்பத்தகாதது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆசிரியர்களுடைய குறைகள் போக்கப்படவேண்டும். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவேண்டும் என்றால், சில உத்தரவுகள் போட்டு, அவர்களுக்குச் சலுகைகள் வழங்கலாம். ஸ்கூல் கமிட்டிகளில், ஆசிரியர்களில் இரண்டு மூன்று பேருக்குப் பிரதிநிதித்துவம் கொடுப்பதாக இந்த மசோதா சொல்லுகிறது. இதனால் ஆசிரியர்களுடைய வாழ்க்கைத் தரம் பெரிதும் உயர்ந்துவிடும் என்று நான் எண்ணத் தயாராயில்லை. 3, 4 ஆசிரியர்கள் இந்தக் கமிட்டியில் உட்கார்ந்து விடுவதனால், ஆசிரியர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரப்போவதில்லை. 25 ரூபாய் சம்பள உயர்வு கொடுத்துப்பாருங்கள், எவ்வளவு மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள் என்று. ஏதோ இந்த மசோதாவால் தங்களுக்கு நிறைய வந்துவிடப்போகிறது என்று எண்ணிக்கொண்டிருக்கிற ஆசிரியர்கள் ஏமாறப் போகிறார்கள். உண்மையில் ஆசிரியர்களைப் பெரும் ஏமாற்றத்திற்குள்ளாக்கப்போகும் மசோதா இது. "Sweet words will not satisfy hunger" என்று சொல்லுவார்கள். ரூபாயாக ஏதாவது கொடுத்தால் பசியை அடக்கலாம். வெறும் வார்த்தையால் பசியை அடக்க முடியாது. ரூபாயாக ஆசிரியர்களுக்கு எதுவும் கொடுக்காமல், ஒரு சிலருக்கு சில ஸ்தானங்கள், ஒரு கவுன்சிலிலோ, அல்லது ஒரு கமிட்டியிலோ கொடுத்து விடுவதால் எந்த வகையிலும் ஆசிரியர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரப்போவதில்லை. அதனால் இந்த மசோதாவின் நோக்கம் ஈடேறப்போவதில்லை.

இன்னொன்று சொல்லுகிறார்கள். தனியாருடைய பள்ளிகள் "பிஸினஸ் சென்டர்ஸ்" ஆக உருவாக்கப்பட்டு விட்டன என்று சொல்லுகிறார்கள். நான் ஒப்புக்கொள்கிறேன். உண்மையில் விரும்பத்தகாத முறைகள் சில இடங்களில் நடைபெறுகின்றன. எல்லா ஸ்கூல்களிலும் அல்ல. ஒரு சில ஸ்கூல்களில் லஞ்சம் வாங்குகிறார்கள். உத்தியோகத்தில் ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டுமென்றால், அதற்கு ஏதாவது வாங்கிக் கொண்டு நியமிக்கிறார்கள். அட்மிஷனில் பணம் வாங்கிக் கொண்டு சேர்க்கிறார்கள். இது எல்லாம் முறைகேடான செயல் தான். இந்த முறைகேடான செயல்கள் எல்லாம் ஒழிக்கப்பட வேண்டும். இதை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால், ஒழிக்கப்பட வேண்டுமென்றால், யார் தவறு செய்தார்களோ, அவர்களைக் கண்டுபிடித்து கடுமையான தண்டனை அவர்களுக்கு விதிக்கலாம். கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு போலீஸ் இலாகாவினுடையது. போலீஸ் இலாகாவால் கண்டுபிடிக்க முடியவில்லை என்று சொல்லுவது போல், அவர்களுடைய திறமையை நாம் குறைத்து மதிப்பிடுவதுபோல் இருக்கிறது. இந்த மசோதாவின் மூலம் ஆசிரியர்களுடைய குறைகளைப் போக்கப் போகிறோம் என்று சொல்லுவது. ஒரு சிலர் தவறு செய்தால், எல்லோரையும் கண்டிப்பதா? தமிழிலே சொல்லுவார்கள். ஒரு மூட்டைப் பூச்சி கடித்தது என்றால் எல்லா மூட்டைப்பூச்சிகளையும் அடிப்பார்கள் என்று. கடித்த மூட்டைப்பூச்சியை மட்டும் அடிப்பதில்லை. ஆகவே, ஒன்று, இரண்டு பள்ளிகள் தவறு செய்தால், அதற்காக எல்லா பள்ளிகளையும் தண்டிப்பதா?

1·30 பி.ப. மாண்புமிகு மேலவைத் தலைவர்: எந்த மூட்டைப்பூச்சி கடித்தது என்று கண்டுபிடிக்க முடியாது, கஷ்டம். ஆகவே எல்லா மூட்டைப்பூச்சிகளையும் அடித்துவிட வேண்டியதுதான்.

திரு கே. எஸ். அப்துல் வகாப்: நாங்கள் இந்த மசோதாவை எதிர்க்கிறோம் என்று சொன்னேன். சமீப காலத்தில் கொண்டு வந்த குத்தகைதாரர் மசோதாவை நாங்கள் எதிர்த்தோம். புரோஹிபிஷனை ரத்து செய்கின்ற மசோதா வந்தது. அதையும் முஸ்லீம் லீக் பலமாக எதிர்த்தது. இன்றைக்கு மூன்றாவது மசோதா இந்த ஸ்கூல் மசோதா. இதை முஸ்லீம் லீக் எதிர்க்கிறது. நாங்கள் குத்தகைதாரர்கள் மசோதாவை எதிர்த்தோம். அப்போது, மற்றவர்கள் அது சரியென்று கூறி, எங்கள் மீது தவறான காரணங்கள் எல்லாம் சொல்லப்பட்டன. தவறான நோக்கங்கள் எல்லாம் கற்பிக்கப்பட்டன. நாங்கள் தாக்கப்பட்டோம். பிறகு, இந்த மசோதாவில் குறைகள் இருக்கின்றனவென்பதைப் பற்றி பலர் சொல்வது என் காதில் கேட்டது நன்றாக நினைவில் இருக்கிறது. அந்த மசோதாவில் திருத்தங்கள் வர இருப்பதையும் நான் அறிவேன். அதேபோன்று, ப்ரொஹிபிஷனையும் தளர்த்துவதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். அப்போது எங்கள் மீது தவறான காரணங்கள், நோக்கங்கள் எல்லாம் கற்பிக்கப்பட்டன. ஆனால் நாங்கள் சொன்னது சரியென்ற முறையில் அரசு ஏற்று, மீண்டும் ப்ரொஹிபிஷனைக் கொண்டு வரும் தீர்மானம் நம் சபையில் வந்து, அதிலே பேசினோம். இப்போது இந்தக் கல்வி மசோதாவும் தவறானதென்று நாங்கள் சொல்லுகிறோம். நீங்கள் அதை எதிர்க்கின்றீர்கள். நீங்கள் யாரும் அதை ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. நாள் வரும். வெகு விரைவில் நீங்கள் இதை ஒப்புக்கொள்வீர்களென்று நினைக்கிறேன். அமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மைனாரிட்டிகளுக்கு திருப்தி அளிக்கக்கூடிய திருத்தங்களென்று, 2 திருத்தங்களைப் படித்தார்கள். மேலெழுந்தவாரியாகப்பார்த்தால், மைனாரிட்டிகளுக்குப் பெரிய சலுகை கிடைத்ததாகத் தெரிகிறது. ஆனால், கொடுத்த சலுகை பூஜ்யம்தான். இதுதான் உண்மை. இந்த உண்மைகளை நாங்கள் உணராவிட்டால், திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்துள்ள மசோதாவை எதிர்க்க மாட்டோம். உண்மையிலேயே நாங்கள் பாதிக்கப்படுகிறோம். நாங்கள் இதை வேதனையோடு எதிர்க்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 2 சலுகைகளை முஸ்லீம்களுக்குக் காட்டியதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஒரு பள்ளியைத் துவக்க வேண்டுமென்றால், முன் அனுமதி பெறாமல் துவக்கலாமென்று சொன்னார்கள். இரண்டாவதாக, நிர்வாகத்தை "டேக் ஓவர்" செய்வது—கைப்பற்றுவது என்பதிலே, மைனாரிட்டிகளுடைய பள்ளிகளைக் கைப்பற்றுவதில்லையென்றும் சொன்னார்கள். முதல் சலுகையினால், முன் அனுமதி பெறாமல் பள்ளியைத் துவக்கலாம். ஆனால் ரெகக்னிஷன் இல்லாமல் நடத்திக்கொண்டிருக்க வேண்டும். ரெகக்னிஷன் இருந்தால்தான்,



மாணவர்களுக்கு சர்டிபிகேட் கொடுக்க முடியும். ஒரு பள்ளியை ஆரம்பிப்பதற்கு என்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ, அவைகளைப் பூர்த்தியாகச் செய்த பிறகு தான் ரெகக்னிஷன் கிடைக்கும். ரெகக்னிஷன் இல்லாமல் பள்ளிக்கூடம் நடத்தி என்ன பிரயோசனம்? எனவே, இந்தச் சலுகைகள் அர்த்தமில்லாத சலுகைகளென்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக "டேக் ஓவர்". நாங்கள் மைனாரிட்டிகளுடைய பள்ளிகளைக் கைப்பற்ற மாட்டோம் என்று கூறினார்கள். மற்ற பள்ளிகளை அரசு கைப்பற்றிக்கொள்ளும். ஆனால் இந்தப் பள்ளிகளைக் கைப்பற்றாது. ஆனால், அதே நேரத்தில் இந்தப் பள்ளிகளுக்கு கிராண்ட் கொடுக்கப்பட மாட்டாது; ரெகக்னிஷன் கொடுக்கப்படமாட்டாது. கிராண்ட் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை; ரெகக்னிஷனை வாபஸ் வாங்கிக்கொண்டால் என்ன பயன்? எங்களிடம் கொடுப்பது உயிரற்ற சடலம்தான். அந்தப் பள்ளிகளில் மாணவர்களுக்கு எவ்விதமான சர்டிபிகேட்டும் கொடுக்க முடியாது. சிலபசைப் பின்பற்றி பள்ளிக்கூடம் நடத்த முடியாது. ஆக, அர்த்தமற்ற சலுகைகள் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. கிடைத்த சலுகை பூஜ்யம் தான் என்று சொல்லுவேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு விளக்கம் கூற விரும்புகிறேன். மாணவர்களுக்குப் பொதுக் கல்வியைப் போதிக்க வேண்டுமென்று சொல்லி, ஒரு பள்ளிக்கூடத்தைத் திறக்கும்போது, இப்படி இப்படித்தான் வகுப்புகள் இருக்க வேண்டும்; மாணவர்களுக்குப் பாடம் இருக்க வேண்டும்; கட்டிடம் இப்படித்தான் இருக்க வேண்டும்; நற் கல்வி இருக்க வேண்டும் என்று கொள்கை வகுத்து, அரசு அதற்குரிய சட்டத்தையும் வகுத்து, பொதுக் கல்வியை நிர்ணயிக்கிறது. அந்தச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பள்ளிகளைத் துவக்குபவர்களுக்குத் தான் அங்கீகாரம் கிடைக்கும். அந்தப் பொதுக் கல்வியை நடத்தக் கூடிய இன்ஸ்டிடியூஷன்கள், அவை அரசுப் பள்ளிகளானாலும் சரி, எய்டட் பள்ளிகளானாலும் சரி, இந்த விதிமுறைகளுக்கு உட்பட்டு துவக்கும் போது அங்கீகாரம் கொடுப்பது சரியென்று உறுப்பினரவர்கள் கருதுகிறாரா? அல்லது அப்படியில்லாமல் மாணவர்களையும், ஆசிரியர்களையும் வைத்து நடத்துவது சரியென்று கருதுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்திலே ஒரு கிளாஸ் இருக்கிறது. இந்தச் சட்டத்திலுள்ள எந்த ஒரு "கிளாஸ்" மீறப்பட்டாலும், அங்கீகாரத்தை நிறுத்துவதற்கு அரசுக்கு அதிகாரம் உண்டு. வருஷத்திற்கு ஒரு முறை கட்டிடத்திற்கு சுண்ணாம்பு அடிக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால், அரசு விரும்பினால், அங்கீகாரத்தை நிறுத்திவிடலாம். பெரிய தவறு செய்தால், நிச்சயமாகத் தண்டியுங்கள். குறிப்பாக என்னைப் பொறுத்தமட்டில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முஸ்லீம்களின் கல்வி அமைப்பு, மற்றவர்

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

களின் கல்வி அமைப்பிலிருந்து சிறிது மாறுபட்டது. எனவே, இந்தச் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடத்துவது எங்களுக்குச் சிரமமாக இருக்கும். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். எங்களுடைய அமைப்பு, கலாசாரம் வேறு, இதை அரசியல் நிர்ணயச் சட்டத்தை உருவாக்கியவர்களே உணர்ந்ததன் காரணத்தினால்தான், ஒவ்வொரு அம்சத்திலே, ஒருசில சலுகைகள் எங்களுக்கு அரசியல் நிர்ணயச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் நாங்கள் பள்ளிக்கூடம் நடத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் கொடுக்கப்பட்ட ஒரு சலுகை, திராவிட முன்னேற்றக் கழக அரசின் மூலம் பறிக்கப்படுகிறதென்பது உண்மையிலேயே மிகமிக வேதனைப்படக் கூடிய அம்சமாகும். எனவே, இதை அரசு மறு பரிசிலனை செய்து எங்களுக்கு அந்தச் சலுகையை மீண்டும் வழங்க முற்பட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில், முஸ்லீம்கள் பரவலாக எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முஸ்லீம் சமுதாயத்திற்குக் கொடுக்கப்படுகிற உரிமைகள் இதன்மூலம் பறிக்கப்படுகின்றனவென்று சொன்னார்கள். இது உரிமைகளைப் பறிக்கிற சட்டமல்ல. பள்ளிக் கூடத்தை ஒழுங்குபடுத்துகிற சட்டம். முஸ்லீம்களுடைய கலாசாரம் அல்லது முஸ்லீம் சமுதாயத்தினுடைய அடிப்படையில் கல்வி புகட்டுவதை இந்தச் சட்டம் பாதிக்கவில்லை. நான் முதலிலேயே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தப் பள்ளிகளுக்கு விதிவிலக்கு கிடைக்கும். ஆக மத கலாச்சாரம், மத சம்பந்தமான கல்வியைப் போதிக்கும் நிறுவனங்களுக்கு இந்தச் சட்டத்தின் விதியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. மதத்தினுடைய அடிப்படையிலே, கலாசாரத்தினுடைய அடிப்படையிலே நடைபெறுகின்ற பள்ளிகள் மட்டுமல்ல, சென்ட்ரல் சட்டத்தின்கீழ் நடக்கும் பள்ளிகளும் இதற்குள் வராது. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இந்தச் சட்டத்தின்கீழ் வராது. அரசாங்கத்தினுடைய அங்கீகாரம் பெறுமல், நடத்தும் பள்ளிகளும் இந்தச் சட்டத்தின்கீழ் வராது. அரசாங்கத்தினுடைய சட்ட திட்டங்களை ஏற்றுக்கொண்டு, சொல்லப்படும் முறைகளை ஏற்றுக்கொண்டு, அரசால் நடத்தப்படும் தேர்விற்கு மாணவர்களை அனுப்பும் பள்ளிகள், நூற்றுக்கு நூறு கல்வி மானியம் அரசாங்கத்திடமிருந்து பெறும் பள்ளிகள், கட்டிட மானியம் பெறுகின்ற பள்ளிகள்—இவைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றுதான் இந்தச் சட்டம் இருக்கிறது. இந்த மதத்திற்கு இன்னின்ன கட்டுப்பாடு என்றல்ல. இது கல்விக்கான கட்டுப்பாடுதான். அந்த அடிப்படையில் ரெகக்னிஷன் வாங்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். கலாசாரத்தின் அடிப்படையில் அல்லது மதத்தின் அடிப்படையில் நடக்கும் கல்வி நிறுவனத்தின் உரிமையைப் பறிப்பதற்கோ அல்லது கட்டுப்படுத்துவதற்கோ இந்தச் சட்டம் இல்லையென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மத அடிப்படையிலே பயிற்றுவிக்கக் கூடிய கல்விக்கு எந்தவிதமான தடையுமில்லையென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். மத அடிப்படையிலான கல்வியை, சாதாரணக் கல்வி பயின்ற பிறகுதான் படிக்க முடியும். "அ"; "ஆ" கற்றுக் கொண்ட பிறகுதான் அந்தக் கல்வியைப் படிக்க முடியும்.

"No other instruction shall be imparted" என்று சட்டத்திலே இருந்தாலும், நடைமுறையில் அதைத் தடை செய்ய மாட்டார்களென்று நினைக்கிறேன். சட்டப்படி தடை செய்ய வேண்டுமென்று நினைத்தால், இந்தச் சட்டத்தை வைத்துக் கொண்டு தீர்த்து விடலாம். சாதாரணமாக முஸ்லீம்களுடைய பள்ளிகளில், அவர்களுடைய வழக்கப்படி, கலாசாரத்தின்படி, அவர்களின் நடைமுறைகளின்படி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க வேண்டுமென்ற கொள்கை, அடிப்படைக் கல்வியைப் போதிக்க முற்படும்போது சில இடங்களில், சில அம்சங்களில் மாறுபடக்கூடும். அப்படி மாறும்போதுகூட, தடை உத்தரவு போட விதி இருக்கிறது. எனவே, இதற்கும் விதி விலக்கு வேண்டுமென்ற கோரிக்கை....

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பிரைவேட் ஸ்கூல் என்றால் என்ன டெபனிஷன்? அந்த பிரிவிலே விளக்கம் சொல்லும்போது "இம்பாரிட்டிங் ரிலீஜியஸ் இன்ஸ்ட்ரக்ஷன் அலோன்" என்றால் இந்தப் பள்ளிக்கூடம் இந்தச் சட்டத்தின் கீழ் வராது என்றுதான் விளக்கம் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த விளக்கம் சொல்லும்போது ரெகுலராக ஒரு பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருக்கும்போது, இடையில் ஒரு ஒன்றரை மணி நேரம் ரிலிஜன் பற்றி இன்ஸ்ட்ரக்ஷன் கொடுப்போமேயானால், இந்தச் சட்டத்தினால் ரிலீஜியஸ் இன்ஸ்ட்ரக்ஷன் பாதிக்கப்படுவதில்லை. இதுதான் ரெகக்னிசனுக்காகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விதியைப் பின்பற்றாவிட்டால், அதன்படி ரெகக்னிசன் ரத்தாகும் என்று போடவேயில்லை. 4.40 பி.ப.

பின்னாலே 2 (3) கிளாஸைப் படித்துப்பார்த்தால் இந்தச் சட்டம் எந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகும். இந்த நோக்கம் முறையாக இருக்குமானால், அப்போதுதான் இந்த ரெகக்னிசன் பிரச்சினை வரும். சின்ன தவறுகளுக்காக எல்லாம் ரெகக்னிசன் எடுக்கப்படும் என்று போடப்படவில்லை. ஆகவே எந்தவிதமான பயங்கரமான சூழ்நிலையையும் உருவாக்கிவிட வேண்டாமென்று பணிவாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கத்தை நான் வரவேற்கின்றேன். சின்ன தவறுகளுக்கெல்லாம் தடை உத்தரவு போட்டுவிடமாட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அதிகாரிகள் கிட்டத்தட்ட அந்த மனப்பான்மையுடன் நடப்பதுண்டு. சில

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

அதிகாரிகள் துரதிருஷ்டவசமாக எங்கள் பிரச்சினையை குறுகலான நோக்குடன் கவனித்து விடுகின்றார்கள். ஆயிரத்துக்கு ஒருவர், நூற்றுக்கு ஒருவர் இருவர் அப்படி இருக்கலாம். அப்படிச் சட்டத்தில் பிடிப்புக் கொடுத்துவிட்டால், அதையே வைத்து தங்கள் காரியத்தை சாதித்துவிடக் கூடிய நிலை, எங்களுக்கு ஒரு துரதிருஷ்டவசமான நிலை, தனிப்பட்ட முறையில் எங்களுக்கு இருக்கின்றது. அதனால்தான் கல்விச் சட்டத்தில் அது மாதிரியான இடம் இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ளுகிறேன். மற்றொன்று சொல்கிறார்கள். "ரிலீஜியஸ் இன்ஸ்ட்ரக்ஷன்" இந்த ஆக்டுக்குள் வராது என்று நான் ஆரம்பத்திலேயே சொல்கிறேன். முதலில் சாதாரண படிப்பு படித்த பிறகுதான் ரிலிஜியஸ் இன்ஸ்ட்ரக்ஷனுக்குப் போக முடியும். "அ", "ஆ" படித்த பின்னர்தான் திருக்குறள் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும். எனவே சட்ட நுணுக்கமாகப் பார்த்தால், ஆபத்து இருக்கிறது. அதற்கு சலுகைகள் அளிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

இன்றைக்கு முஸ்லீம்கள் இந்தச் சட்டத்திற்குப் பரவலாக எதிர்ப்புத் தெரிவித்து விட்டார்கள். நாங்கள் இஸ்லாமிய சமுதாயத்தின் பிரதிநிதிகள் என்ற அடிப்படையில் இஸ்லாமியர்களுடைய கருத்தை பிரதிபலிக்கவேண்டிய கட்டாயத்தில் இந்த மசோதாவை நாங்கள் எதிர்த்தோம். அதனால்தான் பேரவையில் கூட நாங்கள் எதிர்த்து வாக்குப் பதிவு செய்யக்கூடிய நிலை ஏற்பட்டது. இந்த மசோதாவின் மூலம் நாங்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறோம். இதிலே நாங்கள் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் திருத்தத்தை எங்கள் கோட்பாட்டை அனுசரித்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஏதாவது ஊழல் இருந்தால் எது செய்தாலும் ஒத்துக்கொள்ளுவேன். நாங்கள் எங்கள் கோட்பாட்டை அனுசரித்து நடத்தும்போது, இந்தச் சட்டத் திட்டங்களுக்கு ஏதாவது சிறு மாற்றங்கள் வந்தால், அதனால் தடை உத்தரவு போடுவது என்பது கூடாது. அப்படி தடை உத்தரவு போடக்கூடிய நிலை வந்தாலும், நாங்கள் கேட்டுக்கொள்ளக்கூடிய ஒரு சலுகை என்னவென்றால் நீங்கள் கொடுக்கக்கூடிய கிராண்டுகளை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள், அங்கீகாரத்தை மட்டும் நிறுத்த வேண்டாம். அந்த அடிப்படையிலே சிறு திருத்தத்துடன் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பூரணமான மகிழ்ச்சியோடு நான் இந்த அவையிலே நின்று பேசுவதற்கான ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். கண்ணீர் விடுத்து நிற்கக்கூடிய ஆசிரியச் சமுதாயம் இன்றைக்கு தாங்கள் கண்டுகொண்டிருந்த கனவெல்லாம் நினைவாகக்கூடிய சூழ்நிலையிலே இந்த அரசு சட்டப் பேரவையிலே ஒரு சட்டத்தை நிறைவேற்றி இந்த மேலவையில் வைத்திருக்கக்கூடிய இந்த நாள், தனியார் பள்ளி ஆசிரியர் சமுதாயத்தினுடைய பொன்னுனாள் என்று இந்த வரலாற்று உண்மையை இந்த நேரத்



[திரு. செ. முத்துசாமி]

திலே நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அத்தகைய ஒரு சட்டத்தை இன்றைக்குக் கொண்டுவந்த தமிழக அரசையும், இந்த அமைச்சர் பொறுப்பிலே இருக்கக்கூடிய பெருமக்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். இன்றைக்குப் பலபேர் கூறினார்கள். இங்கே இருக்கக் கூடிய விஷயங்களைப் பொறுத்த வரையில், பலரும் அவரவர்கள் நோக்கத்தின்பாற் பட்டதை எடுத்துச் சொன்னார்கள். எந்தச் சமுதாயத்தின் அடிப்படையிலேயும் இல்லாமல், அத்துனை சமுதாயத்திலும், தமிழ் சமுதாயத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற சிறுவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியர்களுக்காக, இனத்திற்கு அப்பாற்பட்டு, மதத்திற்கு அப்பாற்பட்டு, மொழிகளுக்கு அப்பாற்பட்டு இருக்கின்ற அந்த ஆசிரியர்களுக்காக, கண்ணீர் விட்டிருக்கின்ற அந்த சமுதாயத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த மசோதாவை அந்தச் சமுதாயம் மனதார வரவேற்கின்றது என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். இதை இந்த அவையின் குறிப்பிலே பதிவு செய்யவேண்டுமென்பதற்காகவே கூறுகின்றேன்.

இன்றைக்குப் பலவாறாக எடுத்துச் சொன்னார்கள். எடுத்துச் சொன்னது எப்படியிருந்தாலும், இந்தச் சட்டம் எப்படி வந்தது, அப்படி வர வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை நான் சொன்னால், அப்படிப் பட்ட வேகத்தோடு உணர்ச்சியோடு இருப்பவர்கள்கூட உருக்கம் தெரிவிப்பார்கள் என்று நம்புகின்றேன். 1938-ஆம் ஆண்டிலே, திரு ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இந்த நாட்டிலே ஆண்டு கொண்டிருந்த போது, "ரூல்ஸ் ரிலேட்டிங் டு எலிமெண்டரி ஸ்கூல்ஸ்" என்று பாரா 1-ஐப் போட்டார்கள். பாரா 2-ஐப் போட்டார்கள். பாரா 1-ஐச் சட்டமாக்கினார்கள். அது மானேஜர்களுக்குச் சாதகமாக இருக்கக்கூடிய பாதுகாப்புச் சட்டம். அதைச் சட்ட ரீதியாக்கி, ரூல்சை அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே கொண்டுவந்து விட்டார்கள். அதன் பிறகு பாரா 2 என்பதை "நான்-ஸ்டாச்சுடரி" ஆக வைத்துவிட்டார்கள். இந்த "நான்-ஸ்டாச்சுடரி" சட்ட பூர்வமற்றது என்றார்கள். அந்த சட்ட பூர்வமற்ற ரூல்சிலே தான் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு என்று இருந்தது. அது அவர்கள் வேண்டுமென்றே செய்ததல்ல. அன்றைக்கு இது போதும் என்று அதிகாரிகள் சொன்ன காரணத்தினாலே, வெள்ளையர்கள் காலத்திலிருந்து அது சட்டமாக இருந்தது. நீண்டகாலமாக "Rules relating to para 2 must be made statutory" என்று நாங்கள் கோரி வந்தோம். நீண்டகாலமாக அவைகள் கவனிக்கபடவேயில்லை. அப்படி கவனிக்கப்படாமலிருந்தாலும், ஆசிரியர்கள் மத்தியிலே, வேகமோ போராட்டமோ வரவில்லை. அதற்கு ஒரு காரணம் இருக்கின்றது. அன்றைக்கு வேலைவாய்ப்புகள் அதிகமாக இருந்த காரணத்தினால், இந்த மேனேஜ்மெண்டுக்குக் கைகொடுக்க வேண்டியதில்லை-டிஸ்ட்ரிக்ட் போர்டுக்குச் சென்றுவிடுவோம், உள்ளாட்சிக்குச் சென்றுவிடுவோம் என்று அன்றைக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். ஆதலால் பிரச்சினைகள் சூடுபிடிக்கவில்லை. இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் வரக்

[1973 டிசம்பர் 5

[திரு. செ. முத்துசாமி]

கூடிய காலத்திலே, ஆசிரிய பெருமக்கள் எய்டட் பள்ளிகளிலிருந்து நீக்கப்படும்போது, தெருவிலே குடும்பம் குடும்பமாக பிள்ளை குட்டிகளை வைத்துக் கொண்டு கஷ்டப்படுகிறார்கள். நான் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். மேலவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய உணர்ச்சியைச் சொல்லுகிறேன். உண்மையைச் சொல்லுகிறேன். எம்.டி. பால் அவர்கள் தலைமையில் இருந்த அரசுக் கமிட்டிக்கு இந்த நாட்டிலே இருக்கின்ற ஆசிரியர்கள் சாட்சியங்களைக் கொடுக்க வந்தபோது அவர்கள் கண்ணீர் வடித்து அழுதார்கள். அந்தக் கண்ணீர் எளிதானதல்ல, சாதாரணமானதல்ல, ரத்தக் கண்ணீர் என்பதை நான் உங்கள் முன்னர் வைத்துச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நாட்டிலே நடத்தப்பட்ட கொடுமைகள் ஏராளம் என்பதைப்பற்றி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்திருக்கின்றது. நீண்டகாலத்திற்கு முன் ரெஜினா என்ற சாதாரண ஆசிரிய பெண்மணி சுப்ரீம் கோர்ட் வரை வழக்காடச் சென்றார்கள். அவ்வளவு லேசான பிரச்சினையல்ல சுப்ரீம் கோர்ட் வரை போவதென்பது. அவர்கள் முஸ்லீம் பெண்மணி. அவர்கள் பணியாற்றியது முஸ்லீம் பள்ளியில். அவர்கள் அந்த நிர்வாகத்தைத் தான் எதிர்த்துச் சென்றார்கள். இந்த நாட்டிலே இன்றைக்கு என்ன நடக்கிறது? மைனாரிடி, மெஜாரிட்டி என்று இருக்கிறது. மெஜாரிட்டி நிர்வாகத்தினர் தங்களுடைய சொந்தக்காரர்கள், தங்களுடைய இனத்துக்காரர்கள், ஜாதிக்காரர்கள் என்ற அடிப்படையில் போட்டுக்கொள்கின்றார்கள். மைனாரிட்டி என்றால் மைனாரிட்டி வகுப்பினரைத்தான போடுகிறார்கள். மைனாரிட்டியினருக்கு உரிமை கொடுக்கின்றார்கள். மெஜாரிட்டியினருக்கு வேறுபாடு இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். இதைப்பற்றி நான் பின்னால் பேச விரும்புகிறேன். இப்படி ஆசிரியர்களுக்காக நீண்ட காலமாக அரசில் "நான்-ஸ்டாடுடரி" ரூல்ஸ் இருந்த காரணத்தினால், அந்த புரோவிஷன்படி அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். எனவே எடுத்தவுடனே மானேஜர்கள் கோர்ட்டுக்குச் செல்வார்கள். இந்த அதிகாரி போட்டது தப்பு என்று கோர்ட்டிலே சொல்வார்கள். ஆகவே அதிகாரி செய்தது தப்பு, ரூ. 2,000 சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கக்கூடிய, நாட்டினுடைய கல்விக்கே பொறுப்பானவர் என்று கல்விக்கே அத்தாரிட்டியாக இருக்கக்கூடிய டைரக்டருடைய, இந்த ஜனநாயக அரசு வைத்திருக்கக்கூடிய அதிகாரியின் உத்தரவு, நிராகரிக்கப்பட்டு காலிலே மிதிக்கப்பட்டு வந்திருக்கின்றது என்ற கடந்த கால நிகழ்ச்சியை நான் சொல்ல விரும்புகின்றேன். இதையெல்லாம் சொல்லும்போது நான் கொஞ்சம் உணர்ச்சிவசமாகச் சொல்லியிருந்தால், அதை மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அப்படிப்பட்ட நிலைமையில் எல்லாம் ஆசிரியர்கள் வதைபட்டிருக்கின்றார்கள். அன்று பட்ட அந்த நிகழ்ச்சிகள் எல்லாம், கஷ்டங்கள் எல்லாம் இன்றைக்கு ஞாபகத்திற்கு வருகின்றன. சொல்கின்றேன்.



1973 டிசம்பர் 5]

[திரு. செ. முத்துசாமி]

இப்படி அதிகாரிகள் ஒரு உத்தரவு போட்டால், அந்த உத்தரவை அமுல்படுத்த மாட்டார்கள். ஆனால் அதே டைரக்டர், அவர்களுக்கு கிராண்டை மரியாதையோடு கொடுப்பார். இதுதான் நடைமுறையிலே இருக்கக்கூடியது. அநியாயம் செய்திருக்கின்றாய், ஆசிரியரை நீக்கியது தவறு, அவரை வெளியேற்றியது தவறு, அவரை எடுத்துக்கொள் என்று உத்தரவு போட்டால், அதை அமுல்படுத்தமாட்டார்கள். ஆனால் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கிராண்டைக் கொடுக்காவிட்டால், கோர்ட்டிலே சென்று நியாயம் கேட்பார்கள். டைரக்டர் அவர்கள் இதைக் கொடுக்காமலிருந்தது தப்பு, உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று கோர்ட்டார் தீர்ப்பளிப்பார்கள். நாட்டில் இருக்கின்ற நிலை இது. இந்த நிலைகளை ஆசிரியர் சமுதாயம் எடுத்துச் சொல்லி, எடுத்துச் சொல்லி, மகாநாடுகள் நடத்தி அரசாங்கத்தினுடைய கவனத்தைப் பெற்றபோது, நீண்ட நாட்களுக்கு முன்னர், இங்கே இப்போது அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கல்விப் பொறுப்பில் இருந்த நேரத்திலே இந்த மேலவையிலேதான் ஓர் உறுதியைத் தந்தார்கள். ஒரு குழு போட்டு ஆசிரிய பெருமக்கள் அனுபவித்து வரக்கூடிய இன்னல்களைத் தீர்ப்பதற்கான ஒரு சட்டத்தை இந்த அரசு கொண்டுவர முயலும் என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த வாக்குறுதிதான் நீண்ட காலமாகப் பரிசீலிக்கப்பட்டு, நாட்டினுடைய மக்களுக்கெல்லாம் நன்மை செய்ய வேண்டுமென்று கருதுகிற அரசு, யாருக்கும் பாதகம் இல்லாமல் இருக்க வேண்டுமென்ற உணர்ச்சியோடு இருக்கின்ற அரசு, பல்வேறு குழுக்களைப் போட்டு, பல சாட்சியங்களைக் கேட்டு, அதன் பிறகு " பில் " கொண்டு வந்து, அது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, மீண்டும் பலபேர் சொல்லச் செய்து, அதன் பிறகும் கூடுமான சாத்தியக் கூறுகளுடன் அரசியல் சட்டத்தின் அடிப்படையிலேதான் இந்தச் சட்டத்தை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கின்றது என்பதை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

இன்றைக்கு அவரவர்கள் அரசியல் சட்டத்தைப் பொறுத்து, வக்கீல் திறமையைப் போல தங்கள் தங்கள் வாதத்தை எடுத்துக்கொண்டு பேசுகிறார்கள். என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னைப் பொறுத்த அளவில் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பின் 4·50
அடிப்படையில் ஆசிரியர் சமுதாயத்திற்கு, கிடைத்திருக்கிற உரிமைப் பிரச் பி.ப.
சினையையும், அதிலே மைனாரிட்டி பிரச்சினை வரவில்லை என்பதையும் பின்னாலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். ஆசிரியப் பெருமக்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து வந்த இந்தச் சட்டம் இப்போது வந்திருக்கிறது. இந்தச் சட்டத்தை முழுமையாக வரவேற்கிறோம் என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பள்ளிகளை நடத்துபவர்களுடைய நிலைமை . என்ன? பள்ளிகளை நடத்துகிறார்கள். இன்றைக்கு எம்.டி. பால் கமிட்டியில் உள்ள அறிக்கைகளை திரு. சுவாமிநாதன் அவர்கள் படித்துவந்து சொன்னார்கள்.

[திரு. செ. முத்துசாமி]

அந்த அறிக்கையை வெளியிட்ட கமிட்டியில் நானும் ஒரு உறுப்பினராக இருந்தவன். அது கமிட்டி உறுப்பினர்களுடைய கருத்து அல்ல. கமிட்டியினுடைய முடிவல்ல அது. சேர்மெனாக இருந்த எம். டி. பால் என்பவரா பள்ளியைப்பற்றி எழுதப்பட்ட குறிப்பில் இப்படி பள்ளிகள் இருக்கின்றன என்று முகவுரையில் எழுதிய குறிப்பாகும் என்பதை நான் முதலில் சொல்லிக்கொள்கிறேன். இதை விட ஒரு பெரிய கமிட்டியாக பாராளுமன்றத்தில் பல நாடுகளிலிருந்து, கல்வி நிபுணர்களை அழைத்து, அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், இரஷியா, இங்கிலாந்து போன்ற நாடுகளுடைய நிபுணர்களெல்லாம் இருந்து, டாக்டர் கோத்தாரி அவர்களுடைய தலைமையிலே கல்விக் கமிஷன் ஒன்று ஏற்படுத்தி இந்த நாட்டில் இருக்கக்கூடிய தனியார் பள்ளிகளைப்பற்றி ஆராய்ந்தார்கள். ஆராய்ந்து அந்த அறிக்கையில் என்ன கூறினார்கள் என்பதைச் சொல்கிறேன். "Several of them are business concerns" வியாபார நோக்கோடு நடைபெறுகின்றன என்று இந்திய நாட்டில் போடப் பட்டிருக்கக்கூடிய கோத்தாரி கமிஷன் ரிப்போர்ட்டில் பதிவாகியிருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆனால் இங்கே எடுத்துச் சொன்னவர்கள் அநியாயம் நடக்கக்கூடிய பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அதை ஆதரிக்கிறோம் என்றும் சொன்னதற்கு மகிழ்ச்சியடைகிறேன். மற்ற வாதங்கள் எப்படியிருந்தாலும், அநியாயங்கள் கூடாது என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இதைப் பொறுத்த அளவிலே மகிழ்ச்சிதான்.

அடுத்து, மேனேஜ்மெண்டைப்பற்றிச் சொல்லும்போது, மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அகடமிக் கைடிலே ஸ்கூல் கமிட்டி நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சொத்துரிமை, அடிப்படை உரிமை இவைகளைப் பொறுத்த வரை, நாங்களெல்லாம் பாதிக்கப்பட்டு விடுவோம் என்று மேனேஜர்கள் எல்லாம் கூக்குரல் எழுப்பிய காரணத்தினால் சொத்து, கட்டிடம், இவைகளை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டார்கள். பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியப் பெருமக்களுக்கு இந்த நாட்டினுடைய பள்ளிக்கூட நிர்வாகத்தில் இடம் கொடுத்து விட்டால், நாட்டில் கல்வியே குட்டிச்சுவராகிவிடும் என்று கருதினால், இந்த ஆசிரியப் பெரு மக்கள் இந்த ஜனநாயக நாட்டில் அடிமைகளா வென்று நான் கேட்க விரும்புகிறேன். ஒரு பொறுப்பில் இருக்கிற ஆசிரியப் பெருமகன், ஒழுக்கத்தைச் சொல்லிக் கொடுப்பதற்கு அத்தாரிட்டியாக இருப்பவன், நல்ல கல்வியைச் சொல்லிக் கொடுக்க படித்து வந்திருப்பவன், பயிற்சிப் பள்ளியால் தேர்ந்தெடுக்கப் பட்டவன், எய்டட் பயிற்சிப் பள்ளியில் படித்து தேர்ந்தெடுக்கப்பட்டவன், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டவன், இப்படி இருக்கக்கூடியவர்கள்மீது நம்பிக்கை இல்லாவிட்டால் இந்த நாட்டில் கல்வி என்னவாகும் என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இதுதான் நான் சொல்லக்கூடிய கருத்





[திரு. செ. முத்துசாமி]

தாகும். இந்த நேரத்தில் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அகடமிக் ஸைடைப் பொறுத்த அளவில், பாடம் சொல்லிக் கொடுப்பதிலே மட்டும் ஆசிரியர்கள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். பாடம் எப்படிச் சொல்லிக் கொடுக்க வேண்டும், சொல்லிக் கொடுக்காவிட்டால், நடவடிக்கை எடுக்கப்படும் என்ற சட்ட திட்டங்கள் இதில் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் தங்களுக் நிர்வாகத்தில் பங்கு வேண்டுமென்று வளர்ந்து வரக்கூடிய ஜனநாயகத்தில் கருதும் போது, அதில் தவறு இல்லை. இந்த அரசாங்கம் ஆசிரியர்களுக்கு மட்டும் புரொடக்ஷன் கொடுக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாமே, பள்ளிகளை ஒழுங்குபடுத்தவேண்டிய அவசியமென்ன, நியாயம் தானா என்ற பிரச்சினையை எழுப்பிப் பார்க்கிறார்கள். நான் நிச்சயமாக ஆசிரியர் சமுதாயத்தின் சார்பாக பதில் அளிக்க விரும்புகிறேன். ஒழுங்கற்ற பள்ளியிலே ஆசிரியருக்கு மட்டும் பாதுகாப்பு இருக்கிறதென்று எப்படிச் சொல்ல முடியும்? ஒரு கல்வி ஸ்தாபனம், ஒழுங்கில்லாத கல்வி ஸ்தாபனமாக இருக்கிறது, நிர்வாகத்தில் ஒழுங்கில்லை, ஒழுங்கீனம் இருக்கிறது, அதிலே ஒழுங்கான கல்வி சொல்லிக் கொடுக்கப்படும் என்று யார் நிரூபிக்க முடியும்? முதலிலே வளர்ந்து வரக்கூடிய எண்ணங்களில், எண்ண வளர்ச்சியில், கல்வி ஸ்தாபனங்களை ஒழுங்கு படுத்துவது என்பது அரசியல் சட்டத்திற்கு உட்பட்டது. "Administration does not mean mal-administration" பள்ளியை நிர்வகிப்பது என்பது ஊழல் உள்ள நிர்வாகத்திற்கு உரிமை கொடுப்பதல்ல என்பதற்கு அரசியல் சட்டத்தின் அடிப்படையிலே சுப்ரீம் கோர்ட்டிலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஹைகோர்ட்டுகளிலே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றையெல்லாம் நீண்ட முறையில் ஆராய்ந்து தான், பரிசீலித்துத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நாங்கள் அறிகிறோம். பள்ளிகளில் ஒழுங்கு இருந்தால் தான், நிர்வாகிகளிடத்தில் ஒழுங்கு இருந்தால்தான், கல்வி நடைமுறையை ஒழுங்கு படுத்தினால்தான், இப்படி ஒழுக்கமுள்ள சமுதாய அமைப்பிலே தான் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வர முடியும். இதுவும் இத்தோடு சேர்ந்திருக்கிறது என்று கருதிய காரணத்தால்தான், இந்த அரசு இதைச் செய்திருக்கிறது. நாங்கள் கூட ஆரம்ப காலத்திலே "Rules relating to Elementary schools, Part II must be made Statutory" என்று இதை மட்டும் தான் கேட்டோம். ஆனால் இன்றைக்கு அரசு ஒரு படி மேலே சென்று இன்றைக்கு இருக்கக்கூடிய சமுதாயத்தின் அடிப்படையில் இந்தக் கல்வித் திட்டத்தைச் சரியாக ஆராய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில், நாங்கள் போய்க் கேட்ட நேரத்தில் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். சுண்ணாம்பு அடிப்பதற்கும் இந்த எய்டட் பள்ளி மேனேஜர்களுக்குக் காசைத் தந்து விட்டு அவர்களிடத்திலே நிர்வாகத்தை வைத்துக்கொண்டிருப்பது என்ன நியாயம் என்ற சிந்தனையை அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். பேராசிரியப் பெருமக்களைச் சந்தித்த நேரத்தில் இப்படி அவர்கள் கேட்டார்கள்.

[திரு. செ. முத்துசாமி]

என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். சுண்ணாம்பு அடிக்காவிட்டால் பள்ளியை மூடக்கூடிய சட்டம் எந்த நாட்டிலேயும் இருக்க முடியாது. அப்படி சட்டத்தைக் கொண்டு வர முடியாது. நம்முடைய சட்ட அமைச்சரவர்கள் தெளிவாகவே இருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் இதைப்பற்றி தனியார் பில்லைக் கொண்டு வந்து, முதலில் "இண்ட்ரட்யூஸ்" செய்த பெருமை இப்போதுள்ள சட்ட அமைச்சரவர்களைச் சாரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு, அதைவிட அனுபவத்தின் காரணமாக பல் வேறு விஷயங்களைப் புகுத்தி, பல சட்ட திட்டங்களுக்கு விளக்கம் கொடுத்து இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். கல்வியமைச்சரவர்களும் பல்வேறு வாதங்களுக்கு ஆசிரியப் பெருமக்களுடைய நியாயங்களை எடுத்துச் சொல்லி, மேனேஜ்மெண்டின் உரிமைகள் காக்கப்படும் என்று உறுதி கொடுத்த பிறகும், இன்றைக்குப் பல்வேறு பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். எழுப்புவோர் எழுப்பட்டும், ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆசிரியர் சமுதாயத்தினுடைய நலனுக்காக உள்ள இந்தச் சட்டம், எந்த சமுதாயத்தினால், எந்த இனத்தினால் எதிர்க்கப்பட்டாலும், அந்த இனத்திலேயே பணியாற்றுகிற ஆசிரியச் சமுதாயம் இந்த அரசுக்கு ஆதரவாக, எந்த எதிர்ப்பையும் சமாளிக்கும் என்ற உறுதியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். யார் எந்த மதத்தின் பெயரால் சொன்னாலும் சரி, மொழியின் பெயரால் சொன்னாலும் சரி, ஆசிரியச் சமுதாயம் அரசுக்கு ஆதரவாக இருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன். மொழிக்குரிய நிர்வாகம் நடத்துகிறவர்கள் போராடுவார்கள். அவர்களை எதிர்த்து அந்தச் சமுதாயத்தினுடைய ஆசிரியர்கள் நிச்சயமாகப் போராடுவார்கள் என்ற உறுதியை இந்த நேரத்தில் அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நாட்டில் முன்னேற்றமான சட்டங்கள் வரும்போது ஆதிபத்திய உரிமைகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் தங்களுக்கு ஏதாவது சிறு இடைஞ்சல் வரும்போது கொந்தளிப்பார்கள். ஆனால் சாதாரண ஏழையாக இருக்கக் கூடியவன், அவனிடம் இருப்பதைத் தட்டிப் பறித்துக் கொண்டால் கூட, போனால் போகிறது, பசிக்கிறது, எடுத்துக் கொண்டான், போகட்டும் என்று ஒரு நேரம் தான் பட்டினியாக இருப்பதற்கும் தயாராகிறான். இதை நாம் இந்த நாட்டிலே பார்க்கிறோம். ஆனால் பணக்காரர்கள், சாதாரணமாக தங்களிடத்தில் இருக்கக் கூடிய ஒரு வசதியை எடுத்துவிட்டால் கூட, தங்களுக்குள்ள வாய்ப்பு, வசதி, விளம்பரங்களை வைத்துக் கொண்டு கொந்தளித்து எழுகிறார்கள். இது இன்றைக்கு ஜனநாயக நாட்டில் இருக்கக்கூடிய நிலையாகும். இந்த நிலைகள் எப்படியிருந்தாலும், அரசு தைரியத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறது. பின்னால் சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டைகளுக்கு—ஆசிரியர்கள், ஓட்டைகள் என்று கருதக்கூடிய விஷயங்களுக்கு நான் பின்னால் வருகிறேன். ஆசிரியர் சமுதாயத்தினுடைய எண்ணங்களை நான் பிரதிபலிக்கிறேன். அதையும் இந்த அரசு கனிவோடு பரிசீலித்து ஆசிரியச் சமுதாயத்திற்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும்.





[திரு. செ. முத்துசாமி]

இதில் வேறுபாடு இல்லை, வேறுபாடு இல்லை என்று எதிர்த்தவர்கள் கூடச் சொல்லியிருக்கிற காரணத்தினால், அப்படி பாதிப்பு வருமானால், அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினால், அந்தப் பாதிப்பிற்குரிய விஷயம், நாளைக்கு நடைமுறையில் வரும்போது, இருக்குமானால், அந்தச் சட்டத்தைத் திருத்தவும் இந்த அரசு தயங்காது என்ற உத்தரவாதத்தை இந்த அவையில் கல்வியமைச்சரவர்கள் கொடுக்க வேண்டுமென்று ஆசிரியர் சமுதாயத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். காரணம், ஆசிரியர் பாதுகாப்பைப் பொறுத்த அளவில், நாங்களெல்லோரும் ஒப்புக் கொள்கிறோம் என்று ஏகமனதாக ரிகார்டு செய்து விட்டார்கள் என்ற கருத்தை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியினுடைய, நான் இதுவரை சேர்ந்திருக்கக் கூடிய இயக்கத்தினுடைய முழு முதற்கொள்கை எல்லா பள்ளிகளையும் அரசே ஏற்க வேண்டுமென்பது தான். இதற்காக ஒரு வாரியம் அமைத்து, இதை, "அடானமஸ் போர்ட்" ஆக ஏற்படுத்தி, அதன் கீழே கல்வியைக் கொண்டுவரவேண்டுமென்பதுதான் எங்கள் கொள்கை. இதிலே டிஸ்ஸெண்டிங் நோட்டில் பல பதிவுகள் இருக்கிறதென்று சொன்னார்கள். அதற்காக நான் பெருமையடைகிறேன். அப்படிப் பதிய வைப்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்ததற்காக நான் பெருமையடைகிறேன். இதை நான் பெருமையாகக் கருதுகிறேன். இந்த அரசு இதைத் தந்திருக்கிறது என்பதற்காகப் பெருமைப்படுகிறேன். எல்லாப் பள்ளிகளையும் அரசாங்க நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரும்போது, அவைகளை ஒழுங்குபடுத்த முடியும். தேசிய மயமாக்கப்பட்ட எல்லாமே வெற்றிகரமில்லையென்று சொன்னார்கள். அதே உறுப்பினர்தான் இந்த அவையிலே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராமச்சந்திரன் ஒரு டைனமிக் அமைச்சர், இவர் மிகச் சரியாகவும், லாபகரமாகவும் அருமையாகவும் திறமையோடு இந்த நிர்வாகத்தைப் புரிகிறார் என்ற பாராட்டையும் தெரிவித்திருக்கிறார். அதுவும் பதிவாகியிருக்கிறது என்பதை நினைவிற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆக, நிர்வாகம் சரியாக நடக்கும்போது, அது பாராட்டுக்குரியதாக இருக்கிறது. இவர்கள் சொல்லக்கூடிய அடிப்படையிலே நான் ஒன்று கூற விரும்புகிறேன். நாட்டிலே எடுக்கப்பட்டுள்ள எந்த நிர்வாகமாக இருந்தாலும் சரி, அது எய்டட் பள்ளி நிர்வாகமாக இருந்தாலும் சரி, அல்லது அரசு நிர்வாகமாக இருந்தாலும் சரி, அதை நிர்வகிப்பதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1964 ஆம் ஆண்டிற்குப் பிறகு எந்தவிதமான வசதியும் செய்யப்படவில்லை. 1964-ஆம் ஆண்டு இலவசக் கல்வி என்று அறிவிக்கப் பட்டுவிட்டது என்று குறிப்பிட்டு கோடிட்டுக் காட்டினார்கள். 1964-ஆம் ஆண்டிற்குப் பிறகு போடப்பட்ட கோத்தாரி கமிஷன்தான் 1966-லே மேனேஜ்மெண்ட் பள்ளிகளில் ஊழல் இருக்கிறது என்றும், வியாபார நோக்கோடு நடத்துகிறார்கள் என்றும் எழுதியிருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களையே கேட்கிறேன். எய்டட் பள்ளிகளில்

[திரு. செ. முத்துசாமி]

5-00 பி.ப. அட்மிஷன் செய்வதற்குப் பணம் வாங்கவில்லையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். உண்மையா, இல்லையா? உண்மையை அறிந்தும், அறியாதது போல இந்தச் சபையில் சொல்வது என்ன நியாயமாக இருக்க முடியும்? உங்களைப்போல இருக்கக் கூடியவர்கள் நியாயத்தை ஒப்புக்கொண்டு பேச வேண்டுமென்று ஆசிரியச் சமுதாயம் எதிர்பார்க்கிறது. நியாயங்கள் உண்டா இல்லையா என்பதைத் தெரிவிப்பதற்கு அரசுக்கும் உரிமை உண்டு. அதைக் கட்டுப்படுத்துவதற்குத்தான், கணக்கை முறை கொண்டு ஒழுங்குபடுத்துகிறோம். இன்றையதினம் கணக்கைக் கேட்கவே வழியில்லை. மேனேஜ்மெண்ட் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். கல்வி அமைச்சரே ஒரு அட்மிஷன் கேட்டால் கூட முடியாது என்று சொல்லக்கூடியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடிய கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்த உரிமை வேண்டாமா? கற்றுக் கொடுப்பது ஒரே கல்வி. கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் செய்யப்படுகிறது. அட்மிஷனில் தலையிடுகின்ற மாதிரி உரிமை இல்லை. அட்மிஷனுக்கு காசு வாங்குகிறார்களா என்று கூட கேட்கவில்லை. காசு வாங்கவில்லை என்று சொல்ல முடியுமா? அதற்குக் கணக்கு வைத்துக் கொண்டு அதைக் காட்டுங்கள் என்று தானே சொல்லப்படுகிறது. காசு வாங்குவதைத் தடுக்க வேண்டும் என்று ஒரு விதி இதிலே போட்டிருக்க வேண்டும். காசு வாங்கினால் கணக்கு வை. பொதுமக்களிடம் பணம் வாங்குகிறாயா இல்லையா? வாங்குவதற்கு ஒரு கணக்கு வைத்து நீயே ஒரு ஆடிட்டர் போட்டு சரி பார்க்கச் சொல். அரசாங்கத்தினுடைய லோகல் பண்ட் ஆடிட்டர் கூட அதைப் பார்க்க வேண்டும் என்று சொல்லவில்லை. உனக்குத் தெரிந்த ஆடிட்டர் ஒருவரைக் கொண்டே சரிபார்த்து சர்டிபிகேட் வாங்கிக்கொண்டு வரலாமே. மேனேஜ்மெண்ட்கள் இதை எதிர்த்தார்கள். இதைக் கேட்டால் மேனேஜ்மெண்ட் உரிமையே பறி போகும் என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டத்திற்கு ஏன் பயப்படுகிறார்கள்? அவர்கள் யார்? ஊழலை ஏற்கெனவே மொத்த வடிவமாகச் செய்து கொண்டிருக்கின்றவர்கள்தான் பயப்படுவார்கள். நியாயமாக, தர்ம சிந்தனையோடு செயல்படுகின்றவர்கள் இந்தச் சட்டத்தைக் கண்டு பயப்பட வேண்டாம். அவர்களுக்குக் குறுக்கே இந்தச் சட்டம் நிற்காது. சுப்ரீம் கோர்ட்டு ஜட்ஜ்மெண்ட் இது விஷயத்தில் குறிப்பிட்டுக் கூறுகிறது. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 30 (1)-ன்படி "மைனாரிட்டி வகுப்பார் பள்ளிக்கூடங்கள் நடத்த அங்கீகரிக்கும் உரிமை" என்ற தலைப்பில் அந்த உரிமை வழங்கப்பட்டது. எந்தச் சூழ்நிலையில் வழங்கப்பட்டது என்ற பிரச்சினைக் குப் போக விரும்பவில்லை. அது நம்முடைய அரசியல் சட்ட உரிமை. அந்தச் சட்டத்திற்கும், 29, 30 திருத்தங்கள் வந்துவிட்டன. மக்களுக் காகவே சட்டம், சட்டத்திற்காக மக்கள் இல்லை. இன்னொன்றையும் சொல்வேன். நாடு பூராவும் ஆசிரியர்கள் போராட்டம் நடந்தது. அதிலே ஒவ்வொருவரும் ஒரு காரணத்திற்காக நடத்தினார்கள். இங்கே கூட நாம் "பில்" போடவில்லை என்று செய்தோம். கடைசியில் அது எப்படியோ போய்விட்டது. அதே மாதிரி நாட்டில் எல்லா மாநிலங்களிலும் கேட்டுப் பார்த்தால் எய்டட் ஸ்கூல் பில் வரவில்லை, எய்டட் ஸ்கூல் ஆசிரியர்



[திரு. செ. முத்துசாமி]

களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று தான் போராட்டம் நடத்தியிருக்கிறார்
இங்கே இன்று முஸ்லீம் லீக் தலைவர் சொன்னார். ஆசிரியர்கள்
சமுதாயத்தின் சார்பில் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.
ஏற்கனவே மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்தியதற்கு நாங்கள் எதிர்ப்பு
தெரிவித்தோம். இந்த அரசு கேட்கவில்லை. பண நெருக்கடியின்
காரணமாகக் கொண்டு வந்தது. தற்காலிகமாகக் கொண்டு வருகிறோம்
என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நாங்கள்
அப்பொழுது எதிர்த்தோம். அவர் கேட்காமல் தற்காலிகமானது என்று
தான் சொன்னார்கள். இன்றைய தினம் தற்காலிகமாக நிறைவேற்றியது
நிறுத்தப்பட்டு விட்டது. அவ்வளவுதான். ஆனால் சட்டத்தை வாபஸ்
வாங்கியிருக்கிறார், வேறு திருத்தம் செய்திருக்கிறார் என்று சொல்வதாகச்
சொன்னால், அதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. நானும் இந்தச் சபை
யினுடைய நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன்.
ஆனால் இன்றைய தினம் சட்டத் திருத்தம் வரும். ஆசிரியர் பெருமக்களைச்
சட்டம் பாதுகாக்காமல், அவர்கள் பயப்படக் கூடிய நிலை ஏற்படுமானால்
நாடு பூராவும் இருக்கக் கூடிய மைனாரிட்டி பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள்
அவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை" என்று சொல்லி, பாராளுமன்றத்தில்
சட்டத் திருத்தம் கொண்டு வருவார்கள் என்பதை பணிவன்புடன் தெரி
வித்துக் கொள்கிறேன். பாராளுமன்றத்தில் சட்டம் வந்துவிடுவதென்றால்,
நிச்சயமாக இந்த அவையில் சில பேருக்கு உரிமை, சில பேருக்கு உரிமை
இல்லை என்ற நிலைமை ஏற்படுமா? அப்பொழுது தவத்திரு குன்றக்குடி
அடிகளார் கேட்டார்கள். நிலைமை மாறும். அப்படி மாறும், அதை
ஏற்றுவதற்கு தயங்கமாட்டோம் என்று நிச்சயமாக இந்த நேரத்தில்
சொல்லிக் கொள்வேன். இந்து சமுதாயத்தின் சார்பாக, மைனாரிட்டி
யான கிருஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் வழங்கப்படுகின்ற
சலுகைகள், உரிமைகள் எங்களுக்கு இல்லையே என்று அடிகளார் சொன்னார்
நான் இந்து சனாதன தர்மத்தைக் காக்க வேண்டியவர்களைக் கேட்கி
றேன். இந்து சமுதாயம் கடல் போன்றது என்று கூறுகிறார்
எல்லாப் பெருந்தன்மையும் இருக்கிறது என்று கூறுகிறார்கள்.
மேனேஜ்மெண்டுக்கு ஒரு உரிமை, ஆசிரியர்களுக்கு ஒரு உரிமை என்று
சட்டத்தில் இருக்கிறது. ஆனால் முஸ்லீம் மதத்தையும் கிறிஸ்தவ மதத்தை
எடுத்துக் கொண்டால் ஆசிரியர்களுக்கு ஒரு உரிமை, மேனேஜ்
மெண்டுக்கு ஒரு உரிமை, என்று அரசியல் சட்டத்தில் உத்தரவாதம்
இருப்பதால் விதி விலக்கு உண்டு. ஆசிரியர் உரிமையைப் பற்றிக்
கவலைப்படாமல் தர்ம நியாயம் இல்லாமல் போய்விடும். இந்து சனாதன
தர்மத்தில் நீங்கள் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள்
என்று சொன்னால், என்னைப் பெருந்தன்மையோடு பாராட்ட வேண்டும்
என்று எதிர்பார்க்கிறேன். ஆனால் அடுத்து என்னுடைய கருத்தை
ஏற்றுக்கொள்வீர்கள் என்றால் பாராட்டுவீர்கள் என்றே கருதுகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: நான் மசோதாவை வரவேற்றுத்
தான் பேசியிருக்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : நீங்கள் மசோதாவை வரவேற்றிருக்கிறீர்கள். நான் சொன்ன கருத்தை வரவேற்கிறீர்களா இல்லையா என்பதுதான் நான் எதிர்பார்த்தது. மசோதாவை மொத்தமாக வரவேற்கிறீர்கள், அதில் எனக்கு மகிழ்ச்சி. அந்த வரவேற்பிற்காக நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இதிலே ஒரு விதி. ஒரு அதிகாரி ஒரு மைனாரிட்டி பள்ளிக்கூடத்தில் வேண்டுமென்றே ஒரு காரியத்தைச் செய்துவிட்டால் என்னுவது? ஆயிரத்தில் ஒரு அதிகாரி அப்படிச் செய்துவிட்டால், அதற்கு என்ன செய்ய முடியும்? அந்தச் சட்டத்தைப் பாதுகாக்கவேண்டுமானால் அதற்கு எவ்வளவோ நடவடிக்கைகள் தேவை. ஆயிரத்தில் தொள்ளாயிரம் அதிகாரிகள் பள்ளி ஆசிரியர்களுக்காகப் போடப்படும் உத்தரவுகளைப் புறக் கணித்திருக்கிறார்கள். 10-க்கு 9 பேர் முறையாக நடப்பதில்லை. அதற்குப் பிறகு தான் இந்தச் சட்டம் இப்போது வந்திருக்கிறது. இப்பொழுது பள்ளிக்கூடத்திலேயெல்லாம் உரிமைக் கமிட்டி இருக்கிறது. ஒரு ஆசிரியரைப் பழி வாங்க வேண்டுமென்று நினைத்தால், என்ன பாதுகாப்பு இருக்கிறது? அந்தப் பாதுகாப்பைக் கொடுக்க வேண்டுமென்று ஒத்துக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். ஒரு சட்டத்தில் சில உரிமைகள் கொடுக்கப்படுகிறபோது, ஒரு சிலர் தவறு பண்ணுகிறார்கள். இதில் கிரிமினல் கேஸ் கூட வருகிற நிலைமை இருந்திருக்கிறது. சில பேர்கள் என்னமோ செய்கிறார்கள். சில பேர் நக்ஸலைட் ஆகிவிடுகிறார்கள். இதெல்லாம் லட்சத்தில் ஒன்று. இதை வைத்துக்கொண்டு ஒரு பாது காப்பும் செய்யமுடியாது என்ற எண்ணம் கூடாது. மைனாரிட்டி உரிமைகள் அரசியல் சட்டத்தில் இருக்கிற காரணத்தினால், அந்த உரிமைகள் பாது காக்கப்பட வேண்டுமென்று கூறப்படுகிறது. இவர்களைப் பற்றிச் சொல்லும் போது, ஒரு விஷயம் நினைவிற்கு வருகிறது. மைனாரிட்டிகளைப் பற்றிச் சொல்லக் கூடியவர்களுக்கு இன்னொரு நிகழ்ச்சியையும் இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அலிகார் பல்கலைக் கழகத்தில் ஒரு பிரச்சினை வந்தது. இன்றையதினம் அது தீர்க்கப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையைப் பற்றி ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும், போராடின நிலைமையில் அநேக பிரச்சினைகள் எழுந்தன. இன்னையதினம் இங்கே மைனாரிட்டியைப் பற்றிக் கூறியவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தால் ஆசிரியர்களுக்குச் சரியான பாதுகாப்பு கிடைக்கு மென்று நம்புகிறேன். அதை நான் வரவேற்கிறேன். முதலிலே கூடச் சொன்னேன். இந்தச் சட்டத்தில் ஒரு ஆசிரியரை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமானால் ஒரு கமிட்டி முடிவு எடுக்கலாம். ஒப்புதல் வாங்காமலே "டிஸ்மிஸ்" பண்ணலாம். அப்படி வாங்காமலேயே பண்ணலாம். வாங்கி யும் பண்ணலாம். அந்த நிலைமை இருக்கிறது. அதாவது, அவர் பண்ண லாம் என்று புரொவிஷன் இல்லை, பண்ணக் கூடாது என்று இருக்கிறது. இதை மீறக்கூடியவர்களை என்ன பண்ணலாம்? மீறியவர்களை என்ன



[திரு. செ. முத்துசாமி]

செய்வது என்பதைப்பற்றி ஒரு விதி இருக்கிறது. மீறினால் நட வடிக்கை வரும் என்ற நிலைமையில் விளக்கமாக இருக்க வேண்டுமென்பது தான் என் அபிப்பிராயம். அப்படி மீறினால், சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்ற நிலைமை தெளிவாக இல்லை. சட்டப் பேரவை யில் சப்ஸிஸ்டன்ஸ் அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று விதிகள் வகுக்கப்படுமென்று கல்வி அமைச்சரவர்களால் சொல்லப்பட்டது. அதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். அந்த விதிகளில் இடம் பெறுவதற் கான வழி முறைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குழுவைப் பொறுத்த வரையில், திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது மிக மிக நியாயம். அதைக் கட்டுப்படுத்த வேண்டும். நாம் ஒழுங்கு படுத்த வேண்டும். எத்தனை பேர் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ள லாம். மேனேஜ்மெண்ட் எப்படியிருக்கிறதென்றால், அவர்கள் தன்னிச்சை யாக எதையும் சாதித்து விடலாம் என்ற நிலைமை இருக்கிறது. 5 பேர் 10 பேர் கொண்ட கமிட்டி என்றால், சில நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியுமென்று அவர் சொன்னார். அது நியாயமானது. சீனியர் டீச்சர் என்று வருகிறபோது, அவர்களுடைய விருப்பங்களுக்கேற்ப அவர்களுக்கு விரோதமில்லாமல் இருக்கிறவர்களைத் தான் சீனியர் டீச்சர் என்று போடு கிற வழக்கம் இருக்கிறது. மற்றவர்களெல்லாம் அயோக்கியர்கள் என்று சொல்லப்படும் நிலைமை இருக்கிறது.

'அந்த விதிகள் இதிலே இடம் பெறுவதற்காக.......

மாண்புமிகு மேலவைத் தலைவர் : (மணி அடித்தல்). சீக்கிரம் முடி யுங்கள். நிறைய இருக்கிறதா?

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இன்னும் 5 நிமிஷத்தில் முடித்துக் கொள்கிறேன். அந்த விதிகள் இதிலே இடம் பெற வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். குழுக்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னது மிக மிக, நியாயமான ஒன்றாகும். கமிட்டியை ஒழுங்கு படுத்தாமல் வைத்திருக்கிறோம். இஷ்டத்திற்கு வைத்துக்கொள்ளலாம். எத்தனை பேர் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். கல்வி அமைச்சர் அவர்கள் பேரவையில் சொன் னார்கள். ஒருவராக இருந்து "அப்பாயிண்ட்மெண்ட்" பண்ணுவதைவிட, 5, 10 பேர்கள் கொண்ட ஒரு கமிட்டியாக இருந்தால், சில நிலைமை 5-10
களைக் கட்டுப்படுத்த முடியும். மானேஜ்மெண்டில் சீனியர் டீச்சர் என்று பி. ப.
சொல்லும்போது யார் மானேஜ்மெண்டின் விருப்பங்களுக்கு ஏற்ற முறையில் நடந்துகொள்ளுகிறார்களோ அவர்கள் தான் சீனியர் டீச்சர் என்று கருதப்படுகிறார்கள். மற்றவர்கள் எல்லாம், ஹாஸ்டல் உண்டு போஸ்டல். இப்படி ஹாஸ்டல் உண்டு போஸ்டல் என்ற திருப்பு இண்டரஸ்ட் இருக்கிறது. வேலையில் சேரும்போதே ராஜினாமாக் கடிதத்தில் கையெழுத்து வாங்கி விடுகிறார்கள். இப்படிப்பட்ட கொடுமையான விஷயங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சீனியர் மோஸ்ட் என்றால், மானேஜ்மெண்டின்

[திரு. செ. முத்துசாமி]

பிரதிநிதி என்ற நிலைதான் ஏற்படும். அவர்களை ஆசிரியர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லுவதில் பயனில்லை. ஏதோ ஒரு ஆசிரியர், மானேஜ்மெண்டின் ஆள் இருக்கிறார் என்றுதான் அதற்குப் பொருள். ஹெட்மாஸ்டர் போடட்டும் என்கிறார்கள். ஹெட்மாஸ்டரைப் போடும்போது, யாரை வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். ஒரு சீனியர் டீச்சர் 20 வருஷம் பணியாற்றியவர் இருப்பார். அந்தப் பள்ளியின் மானேஜர் மனைவியோ, பையனோ டிரெயினிங் முடித்துவிட்டு வந்தால், அந்த சீனியர் டீச்சரை கீழே இறக்கிவிட்டு இந்த இரண்டு பேரில் யாரையாவது ஹெட்மாஸ்டராக்கி விடுவார்கள். இதுதானே இன்றைக்கு இருக்கின்ற நிலைமை. அவர்களுடைய பிள்ளையோ, மனைவியர்களோ, சொந்தக்காரர்களோதான் ஹெட்மாஸ்டர்கள். ஏதோ ஒரு ஆசிரியர் பெற்றார் என்ற நிலைமை இருக்குமே தவிர, அந்த அளவில் திருப்திபடுத்துவதற்குத்தான் உதவுமே தவிர வேறு ஒன்றுமில்லை. மானேஜ்மெண்டின் நிலைமை அப்படித்தான் இருக்கும். அதைப் பற்றிக் கவலைப்பட்டு பிரயோஜனமில்லை. "எய்தர் எலக்டட் ஆர் நான் எலக்டட்" ஒருத்தரைப் போடவேண்டும். கல்வி அமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே பில்லில் இருந்தது. செலக்ட் கமிட்டி அறிக்கையில் இருந்தது. அதைப் பல பேர்களுடைய கருத்துக்கு இணங்கச் செய்திருக்கிறார்கள். ஜனநாயக நாட்டில் இப்படிச் செய்வது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன். அந்த விஷயத்தை நீக்க வேண்டுமென்று நான் இப்போது சொன்னால், கல்வி அமைச்சர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு, மறுபடியும் சட்டப் பேரவைக்குச் சென்று நிறைவேற்றப்பட்டாக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், இந்த பில் என்னால்தான் நிறைவேற்றப்படாமல் நின்று விட்டது என்று வரும். நான் அந்த நிலைமையை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. நான் எதிர்காலத்தில் வரக்கூடிய சங்கடங்களைப் பற்றித்தான் இப்போது கூறுகிறேன்.

"கோட் ஆப் காண்டக்ட்" என்று ஒன்று வைத்திருக்கிறார்கள். கோட் ஆப் காண்டக்டைப் பொறுத்தவரையில், தற்போது அரசாங்க ஊழியர்களுக்கு இருக்கிறதை நாங்கள் வரவேற்கிறோம். அதை ஆசிரியர்களுக்கு "எக்ஸ்டெண்ட்" பண்ணுங்கள். அவர்களுக்குள்ள எல்லாச் சலுகைகளையும் நாங்கள் கேட்கிறோம். எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஒன்றே ஒன்றைத் தவிர—மெடிக்கல் ரீஇம்பர்ஸ்மெண்டைத் தவிர. இதையும் எயிடட் ஸ்கூல்களுக்குக் கொடுத்து விட்டால், எந்தப் பிரச்சினையும் கிடையாது. இதை அடுத்த பட்ஜெட்டில் அறிவிப்பதற்கு வாய்ப்பாக அரசுக்கு இருக்கும் என்று நினைக்கிறேன். அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எயிடட் ஸ்கூல் டீச்சர்களுக்கு இந்த பில்லைக் கொண்டு வந்ததுபற்றி மகிழ்ச்சியடைகிறேன். இதையும் செய்தால் கூடுதல் மகிழ்ச்சியாக இருக்கும். அரசு ஊழியர்களுக்கு இருக்கிற "கோட் ஆப் காண்டக்ட்" ரூல்களைக் கொண்டு வருவதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் ஸ்கூல் கமிட்டி என்று போட்டால், அந்தக் கமிட்டியில் மானேஜ்மெண்டிற்கு வேண்டிய ஆசிரியர்கள் [illegible]



[திரு. செ. முத்துசாமி]

கொண்டு "கோட் ஆப் காண்டக்ட்" ரூல்களை வைக்கலாம் என்பது சரிதானா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு பள்ளிக்கூடம் என்றால், இந்த நாட்டிலே இப்படித்தான் இருக்க வேண்டும். சென்னையாக இருந்தாலும், சேந்துமரமாக இருந்தாலும், சேலமாக இருந்தாலும், மதுரையாக இருந்தாலும் பொதுவான நடைமுறை விதிகளைக் கொண்டுவர வேண்டும். "யுனிபாமிட்டி" வேண்டாமா? இந்த நாட்டில் இண்டகிரிட்டி, யூனிபாமிட்டி என்கிறார்களே, அது கல்வியிலாவது வர வேண்டாமா? மதம், ஜாதி இவற்றின் பெயராலே எண்ணங்கள் கல்வித்துறையில் படிந்து விடுகின்றன. அரசியல் சட்டத்திலே இந்தத் தவறு இருப்பதாக நினைக்கிறேன். அரசியல் சட்டத்தில் இருப்பதால், கல்வி ஸ்தாபனங்களில் மதம், ஜாதி எல்லாம் வருகிறது. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று சொல்லுவார்கள். ஐந்து வயதிலேயே மதம், ஜாதி என்ற எண்ணங்களை வளரவிடுவது சரிதானா என்று சிந்திக்க வேண்டுமென்று கூறி, பீகார் மாநிலத்தில் பள்ளிகளை எடுத்துக் கொண்டு ஒரு போர்டு அமைத்திருக்கிறார்கள்; அதுமாதிரி இங்கும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியப் பெருமக்களுடைய நீண்ட கால ஆசைகளில் 50 சதவீத அளவுக்குப் பூர்த்தியாகியிருக்கிறது. 50 சதவீத ஆசைகளைப் பூர்த்தி செய்த பெருமை இந்த அரசுக்கு உண்டு. முஸ்லீம் லீக் உறுப்பினர் அவர்கள் பேசும்போது, நாங்கள் சொல்லுவதையெல்லாம் நிச்சயமாக அரசு ஏற்றுக்கொள்ளுமென்று சொன்னார்கள். ஆசிரியர் சமுதாயம் நீண்ட காலமாகச் சொல்லி வருகின்றது. பல காரியங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இன்றைக்கு சில காரியங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இன்னும் எதிர்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியவைகள் இருக்கின்றன.

இங்கிலாந்து நாட்டிலே உள்ள "கவுண்டி கவுன்ஸில்" பற்றி பேராசிரியர் அறிவழகன் அவர்கள் கூறினார்கள். இங்கிலாந்து நாட்டில் எய்டட் ஸ்கூல்கள் இருக்கின்றன. அங்கு இந்த முறையிருக்கிறது. அந்தக் கவுண்டி கவுன்ஸில் முறை இங்குள்ள எய்டட் ஸ்கூல்களில் இல்லாமல் இருக்கிறது. கம்யூனிஸ்ட் நாடுகளில் இருப்பது வேறு, அங்கு எல்லாமே அரசாங்கத்திற்குச் சொந்தமாகி விடுகிறது. நமது நாடு ஜனநாயக நாடு. சோஷலிஸ நாடு. அந்தக் கவுண்டி கவுன்சில் முறை போன்று இங்குள்ள உள்ளாட்சித்துறை சேர்ந்துள்ள பள்ளிகளில் கொண்டுவர வேண்டும். நான்-எயிடட் ஸ்கூல் என்றால், பிரச்சினை இல்லை. அது எய்டட் ஸ்கூல் என்றால், அங்கீகாரம் வாங்கின பள்ளிகளுக்குக் கிராண்ட் வேண்டுமென்றால், அந்த நாட்டிலே எந்த அப்பாயிண்ட்மெண்டாக இருந்தாலும் அந்த கவுண்டி கவுன்ஸில்தான் செய்கிறது. இங்கேதான் அந்த நிலையில்லை. இதை எப்படி நடத்துவது என்ற பக்குவம் இல்லை. அப்படி இங்கே செய்தால், அந்த உரிமை போய்விட்டது, இந்த உரிமை போய்விட்டது என்கிறார்கள். 60-வது வருஷத்தில் பாஸ் பண்ணியவனுக்கு அப்பா

யிண்ட்மெண்ட் கிடையாது. கேட்டால் திறமை என்கிறார்கள். செலக்ஷன் பண்ணும்போதே, திறமையைக் கணக்கிட்டு விடுங்கள். டிரெயினிங் நடக்கும்போதே முடிவு பண்ணிவிடுங்கள். வேண்டியவன், வேண்டாதவன், சொந்தக்காரன், ஜாதிக்காரன், வேண்டியவனுக்கு வேண்டியவன் இவைகளைத்தானே தகுதி என்று சொல்லுகிறார்கள்.................

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். நீங்களே பேசிக்கொண்டிருந்தால் என்ன செய்வது ? பேசவேண்டியவர்கள் 4, 5 பேர்கள் இருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஆசிரியர்களின் பிரச்சினை ................

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நானும் ஆசிரியராக இருந்தவன் தான் என்பது உங்களுக்குத் தெரியுமா ?

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் சம்பந்தப் பட்ட இந்த பில் வரும்போது, தாங்களும் ஏற்கனவே ஆசிரியராக இருந்ததாகச் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். தாங்கள் தலைவராக இருக்கின்ற நேரத்தில் ஆசிரியர்கள் பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய இந்த பில் வந்ததற்காக கூடுதல் மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. க. அறிவழகன் : தலைவர் அவர்களே, தாங்கள் பத்திரிகை ஆசிரியராக இருந்தீர்களா அல்லது பள்ளி ஆசிரியராக இருந்தீர்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பள்ளி ஆசிரியராக முதலில் இருந்திருக்கிறேன். பிறகு பத்திரிகை ஆசிரியாக இருந்தேன்.............

திரு. செ.முத்துசாமி: நம்முடைய மேலவைத் தலைவர் அவர்கள் பள்ளி ஆசிரியராக இருந்தார்கள் என்று கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். நான் ஆசிரியர்களுடைய குறைகளையெல்லாம் தெரிந்தவன் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது என்னுடைய நினைவுக்கு வருகிறது. ஆகவே, அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தை நான் பாராட்டி, யார் எதிர்த்தாலும், இந்த அரசு தயங்க வேண்டாம் ; ஆசிரியர் சமுதாயத்திற்கு விடிவெள்ளி போல் வந்திருக்கின்ற இந்தச் சட்டத்தை இனம், மொழி, ஜாதி, மதம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்ட ஆசிரியர் சமுதாயம் வரவேற்கிறது என்று நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகையால் இந்தச் சட்டத்தை எதிர்த்து நாட்டிலே ஏதாவது நடந்தால், ஆசிரியப் பெருமக்கள் இந்த அரசு கொண்டு வந்திருக்கும் இந்தச் சட்டத்தைக் காப்பதற்கு, முழு மன



நிறைவோடு, முழுக்க முழுக்க இந்த அரசை ஆதரித்து நிற்பார்கள் என்பதைச் சொல்லி, இந்தச் சட்டத்திற்காக அரசை யார் எதிர்த்தாலும், எதிர்ப்பவர்களுக்கு எதிராக ஆசிரியர் சமுதாயம் முன்வரத் தயங்காது என்பதைப் பெருமையோடு கூறிக்கொண்டு, இந்த வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தக் கல்வி மசோதாவை இங்கே சமர்ப்பித்தபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்தோம் என்று ஒரு பக்கம் அரசாங்கத் தரப்பில் விவாதித்தாலும், இங்கே எதிர்த்தரப்பிலிருந்து, உடன் இருந்து நாங்கள் துணைக் கட்சியாக இயங்கியிருக்கிறோம் ; ஆனால் மசோதாவை எதிர்க்கிறோம் என்று முஸ்லீம் லீக் தலைவர் அவர்கள், இங்கே எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

ஆனால் இந்திய அரசியல் சட்டத்தில் உட்படாது அல்லது தங்களுடைய 5-20
உரிமையை, ஜீவாதார உரிமையை பாதிக்காது என்ற பிரச்சினைக்கு பி.ப.
இங்கே இடமில்லையென்று தான் நான் கூறிக் கொள்ளுகிறேன். பொதுவாக இந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பு மாற வேண்டும். சமுதாய மறுமலர்ச்சி பெற வேண்டும் என்ற அடிப்படையின் காரணமாக சில பல கொள்கைகளை நாம் ஏற்கிறோம். அதில் கட்சி வித்தியாசமும் இடையாது ; மன மாச்சரியத்திற்கும் இடம் கிடையாது. அந்தப் பெரு நோக்கில்தான்,இந்திய ஜனநாயக அமைப்பின் எதிர்காலம், இந்திய நாட்டினுடைய எதிர்காலம் இருக்கிறது. கல்வியினால்தான், இந்த நாட்டிற்கு வளத்தையும், மக்களுக்கு நல் வாழ்வையும் அளிக்க முடியுமென்று கருதி, அதன் அடிப்படையிலே இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த மசோதா மிகமிக அவசியமானது. இது இத்தோடு மட்டும் இருக்காது ; மேலும் வளரக்கூடியது. அப்படி வளரக் கூடிய மசோதாவை, சீரிய முறையில், செம்மையான முறையில் ஒழுங்கு படுத்துவதுதான் ஒரு அரசாங்கத்தினுடைய கடமையாக இருக்க முடியுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்திய அரசியலமைப்பு சட்டத்தில், ஆர்ட்டிகல் 14 என்று கருதுகிறேன். அதிலே இந்தியக் குடி மக்கள் அனைவரும், சாதி சமய வேறுபாடின்றி சம உரிமை உடையவர்களென்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 34-ல் வழங்கிய உரிமைகளை மறுக்கவில்லை. ஆனால் இந்த மசோதாவில் கிளாஸ் 34 மற்றும் 9 விதிகளில் ஒரு மதத்தினருக்கு ஒன்றும், பரவலாக இருக்ககூடியவர்களுக்கு வேறொன்றுமாக இருப்பது பாரபட்சமாக இருக்கிறது. எனவே அரசியலமைப்புச் சட்டத்தை அரசாங்கம் புறக்கணிக்கிறதென்று நான் கருதுகிறேன். எனினும், எந்த அளவுக்கு, உண்மையாக வரவேற்கக்கூடிய நிலையில் இந்த மசோதா அமைந்திருக்கிறதென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[1973 டிசம்பர் 5

[திரு. எல். பலராமன்]

இது ஆசிரியர்களுடைய உரிமைக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று பெரு நோக்கோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. எத்தனையோ தனியார் பள்ளிகள் சீரிய முறையில் நடக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது, ஒருசில பள்ளிகள் நல்ல முறையில் இருக்கின்றன. பல பள்ளிகள் குறைபாடுகள் உள்ளவையாக இருக்கின்றன. உதாரணத்திற்கு, ஆசிரியர்களின் பிரதிநிதியாக திரு. முத்துசாமி அவர்கள் பல சம்பவங்களைச் சொன்னார்கள். அந்தக் குறைபாடுகளைக் களைவதுதான், சமுதாயத்தில் மாற்றம் ஏற்படுத்துவதுதான் அரசாங்கத்தினுடைய கடமை என்ற முறையில், இந்த மசோதாவை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். மேலும் இது போன்ற தவறுகள் நடக்காமல் இருக்க வேண்டும். தனியார் நடத்தும் பள்ளிகளில், ஆசிரியர்களை நியமிப்பதில் சில ஊழல்கள் நடக்கின்றன. அதே நேரத்தில் அரசாங்கத்தின் சார்பாக உள்ள பள்ளிகளில் ஊழல்கள் இல்லையா என்று சமுதாயத்தில், ஒரு பக்கத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளாக இருக்கட்டும், அரசுப் பள்ளிகளாக இருக்கட்டும், அங்கே ஆசிரியர்களை நியமிக்கும் போது ஏதோ ஒரு தவறு நடக்கிறது. ஆசிரியர்களை நியமிப்பதில் லஞ்சம் வாங்குகிறார்களென்ற நிலையைப் பார்க்கும் போது, மிக மிக வேதனையாக இருக்கிறது. இதையெல்லாம் தவிர்ப்பதற்காக இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசாங்கப் பள்ளிகளில் நடக்கும் ஊழல்களையும் களையவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தனியார் பள்ளியில், அநியாயமாக ஒரு ஆசிரியையை வேலை நீக்கம் செய்தார்களென்றும், அந்த ஆசிரியை அது குறித்து ஹைகோர்ட்டுக்குச் சென்றார்களென்றும் திரு முத்துசாமி குறிப்பிட்டார்கள்.

கல்வி ஆண்டு என்றால், பள்ளி அரம்பிக்கும் ஜூன் மாதத்திலிருந்து மார்ச் மாதம் வரையென்று கருதுகிறேன். ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் ஆசிரியர்களை மாறுதல் செய்வார்கள். ஆனால் அரசாங்கத்தில் அப்படிச் செய்வதில்லை. ஆசிரியர்களும் குடும்பத்தில் உள்ளவர்கள்தான். இன்றைகது அவர்களும் மற்றைய கஷ்டங்களை அனுபவிக்கக்கூடியவர்கள்தான். அப்படிபட்டவர்களை, மாவட்ட உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களை வருஷம் பூராவும் மாறுதல் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாறுதல்களைப் பார்க்கும்போது, அரசாங்கப் பள்ளிகளில் உள்ளவர்களை 100 மைலுக்கு அப்பாலும் மாற்றக்கூடிய நிலை இருக்கிறது. இது போன்ற நிலை இல்லாமல், கல்வியை ஒழுங்காக, சீரிய முறையில் நடத்துவதற்கு இந்த மசோதா வகை செய்ய வேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன். மேலும் இதை ஒழுங்குபடுத்தி, சமுதாயம் வளர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த விதிகளை தனியார் கல்லூரிகளுக்கும் விஸ்தரிக்க அரசு தீவிரமாக முயற்சிக்க வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.



1973 டிசம்பர் 5]

[திரு. எல். பலராமன்]

அந்த அளவுக்கு இதில் தீவிரம் காட்டி, கல்வியை நல்ல முறையில் உயர்த்த, சமுதாயத்தை வளர்க்க ஆக்க பூர்வமான பணிகளைச் செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த மசோதாவில் பேச வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

திரு. எம். எம். பக்கர்: மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய அரசினரால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மசோதாவை எதிர்ப்பதற்கு மிகவும் வேதனைப்படுகிறேன். பொதுவாக இந்த மசோதாவை, முஸ்லீம் லீக் கட்சியினராகிய நாங்கள் எதிர்ப்பதற்குக் காரணம், பல நாள் விவாதத்திற்கும், ஆராய்ச்சிக்கும் பிறகு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலே மைனாரிட்டிகளுக்கு அருள்கூர்ந்து அளிக்கப்பட்டுள்ள ஒரு உரிமையிலே, இந்த மசோதா தலையிடுகிறதென்பதுதான். பொதுவாக ரிலிஜியஸ் மைனாரிட்டிகள் அல்லது மொழிவாரி மைனாரிட்டிகள் இந்த மாதிரி விஷயங்களில் கொஞ்சம் சென்சிடிவாக இருப்பார்கள். காரணம் அவர்கள் சிறு மைனாரிட்டிகளாக இருப்பதுதான். பொதுவாக ரிலிஜியஸ் இன்ஸ்டிரக்ஷன் பாதிக்கப்படாதென்று மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் சொன்னார்கள். ரிலிஜியஸ் பள்ளிகளென்று முஸ்லீம்கள் நடத்துவது வேறு.

அதற்கும் சர்க்காருக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. அதற்கு மதரஸாக்கள் என்று பெயர். கொஞ்சம் சிறிய கிராமங்களில் கூட அரபி சொல்லிக் கொடுப்பார்கள். காலையில் ஒரு மணி நேரம் சொல்லிக் கொடுப்பார்கள் முஸ்லீம் மேனேஜ்மெண்டாக இருந்து நடத்துகிற தனியார் பள்ளிகளில் மற்ற எல்லாக் கல்வி நிலையங்களைப்போல பாடங்கள் இருக்கும். ஆனால் ஒரு பீரியடிலே ரிலிஜியஸ் இன்ஸ்டிரக்ஷன், மாரல் இன்ஸ்டிரக்ஷன் என்று வைத்திருப்பார்கள். பொதுவாக முஸ்லீம்கள் நடத்துகின்ற பள்ளிகள், தனியார் பள்ளிகள் பெரிய பணக்காரர்களால் நடத்தப்படுவதல்ல. அப்படி பணக்காரர்களால் நடத்தப்படும் பள்ளிகள் 3 அல்லது 4 இருக்கலாம். பெரும்பாலான பள்ளிகள் கொஞ்சம் கொஞ்சமாக பொது நிதி சேர்க்கப்பட்டு அதிலிருந்து ஆரம்பித்து மிகச் சிரமத்துடன் நடைபெறுகின்ற பள்ளிகள்தான்.

இந்தப் பள்ளிகளுடைய நிர்வாகத்திலே, நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துகிறேனென்று அரசு தலையிடுவதென்பது வேறு. நண்பர் திரு ஜானி பாய் அவர்கள் சொன்ன மாதிரி, போதனை பாடத் திட்டங்களிலே ரிலிஜியஸ் இன்ஸ்டிரக்ஷனைப் பின் பற்றிக் கொடுக்கப்படுவதாலே, அந்தப் பள்ளிக்குள்ள அனுமதியை ரத்து செய்துவிடுவார்களோ என்ற பயம் இருந்து வருகிறது. மொழி மைனாரிட்டிகளானாலும், மத மைனாரிட்டிகளானாலும் இந்தப் பயம் சாதாரணமானதுதான். எனினும் அதைப் பற்றி சர்க்காரிடம் முறையிடுவது அவர்களுடைய கடமை. நண்பர் திரு முத்துசாமி, காலம் மாறி விட்டது; மைனாரிட்டிகள் மெஜாரிட்டிகள் என்று பேசக்கூடாது; அப்படிப் பேசுவதால், அந்தச் சட்டங்களை மாற்ற வேண்டிய காலம் வந்து விட்டது என்று கூறினார்.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, "காலம் மாறிவிட்டது, மைனாரிட்டி, மெஜாரிட்டி என்று உரிமை பேசக்கூடாது" என்று நான் கூறியதாகச் சொன்னார்கள். அப்படி நான் கூறவில்லை. நான் சட்டத்தை மதிக்கிறவன். அந்த அரசியல் உரிமை சட்ட ரீதியாக வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அரசியல் சட்டத்தின் கீழ் உறுதி எடுத்தவன் நான். அதை நான் மதிக்கிறேன். அதை, மைனாரிட்டிகள் உரிமை என்று தவறாகப் பயன் படுத்துவது மோசடி என்று சொன்னேன். மைனாரிட்டிகளுக்குச் கொடுக்கப்பட்டுள்ள உரிமை கூடாதென்று எந்த இடத்திலும் பேசவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு எம். எம் பக்கர் : தவறாக, மோசடியாகப் பயன்படுத்துவதென்பதெல்லாம் அவரவர்கள் அனுபவத்தைப் பொறுத்தது. அப்படித் தவறாக, நாங்கள் பயன்படுத்துவதாக அவர் நினைக்கலாம். நாங்கள் எங்கள் மனச்சாட்சிப்படி பேசுவதாக நினைக்கிறோம். மைனாரிட்டிகள் தங்கள் உரிமையை வற்புறுத்திப் பேசுவது சரியல்ல என்று கூறினார். நண்பர் திரு முத்துசாமி யாருக்காகப் பேசுகிறார்?. ஆசிரியர்களும், தமிழருள் ஒரு. பகுதியினர்தான், ஆசிரியர்களுக்கு அவர் என்ன பிரதிநிதி? பெரிய தமிழ் சமுதாயத்திலே ஆசிரியர்கள் கொஞ்சமாகத்தான் இருக்கிறார்கள். அவர் ஒரு நிறுவனத்தை வைத்துக் கொண்டு, ஆசிரியர்களுக்காகப் பேசுகிறார்.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஆசிரியர் பிரதிநிதியென்று, ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவன். சட்டப்படி நான் ஆசிரியர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எம். பக்கர் : நானும் முஸ்லீம்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் பிரதிநிதியாக இருக்கிறேன். எனவே அவர்களைப் பற்றிப் பேசுவது என்னுடைய கடமையென்று கருதுகிறேன்.

ஆக நாங்கள் கேட்பது ஒன்று. அந்த நிலைமையிலே சட்டங்களை மாற்ற வேண்டும். அலிகாரைப் பற்றி நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் சொன்னார்கள். அவர்கள் அதைப்பற்றிச் சரியாகத் தெரிந்துக்கொண்டிருக்கின்றார்களா என்பது எனக்குத் தெரியாது. அலிகார் திருத்தச் சட்டம் ஓராண்டுக்கு முன்னால் கொண்டுவரப்பட்டது. முஸ்லீம்கள் எவ்வளவோ நாட்களாக எதிர்த்தும்கூட, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதனால் உத்தரப்பிரதேசத்திலே 60 பேர்கள் உயிரிழந்தனர், 6 ஆயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பரிதவித்தன. ஒரே வருடத்தில் இன்னொரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதுவும் கண் துடைப்புச் சட்டம் தான். அந்தச் சட்டம் முன் சட்டத்தை மாற்றுவதற்காகக் கொண்டுவந்த சட்டம். இன்னும் அந்தப் பிரச்சினை வளர்ந்துகொண்டே போகிறது. அந்த அலிகார் பிரச்சினை இன்னும்



தீர்ந்து விடவில்லை. நண்பர் திரு. முத்துசாமி, நாங்களே தூண்டி விட்டது மாதிரி பேசினார்கள். அந்தப் பிரச்சினை இன்னும் தீரவில்லை என்பதைப் பணிவன்புடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : வளர்த்துக்கொண்டே இருக்கிறார்கள் என்றும் கூறலாம் அல்லவா ?

திரு. எம். எம். பக்கர் : கூறலாம். அது அவரவர்களுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்ததென்று சொல்லுகிறேன். நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் ஆசிரியர்கள் பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று நான் கருதுகிறேன். முடித்துக்கொண்டிருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள். அதுதான் வித்தியாசம். அவரவர்களுடைய மனப்பான்மையைப் பொறுத்தது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் : உருதுவில் பேசினார்.)

THIRU G. VASANTHA PAI : On a point of order, Sir, I think the language used by the Hon. Chairman is not known to the Members.

Mr. CHAIRMAN : The hon. Member Thiru Bakkar understands what I talk.

திரு. எம். எம். பக்கர் : ஆகையினால் இந்த மசோதாவை நாங்கள் எதிர்த்துப் பேசுவது எல்லாம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற பயத்தினால்தானே தவிர, இந்த மசோதாவை எதிர்த்து நாங்கள் தோற்கடித்துவிட முடியும் என்பதற்காக அல்ல. இந்த மசோதாவை நாங்கள் எதிர்ப்பதன் மூலமாக இந்த அரசை எதிர்ப்பதாகவும் அர்த்தம் ஆகாது என்பதை நான் சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டாமென்று கூறி, என்னுடைய கட்சியின் சார்பாக நான் எதிர்க்கிறேன் என்று சொல்லிக்கொண்டு அமைகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வியமைச்சர் அவர்கள் தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் மசோதாவை ஆசிரியப் பெருமக்களுக்கும், தனியார் பள்ளி நிர்வாகத்திற்கும் நல்லதொரு பாதுகாப்பு இருக்கும்படியாக அமைத்திருக்கின்றபடியால் எல்லோரும் ஆதரிக்க வேண்டு மென்று கூறினார்கள். இந்த மசோதாவினாலே நல்ல பலன் ஏற்படும் என்று சர்க்கார் நினைத்து, இந்த மசோதாவைப் பேரவையிலே வைத்து நிறைவேற்றிவிட்டு, இந்த மேலவைக்குக் கொண்டுவந்திருக்கின்றார்கள். அந்த நோக்கம் நல்ல முறையிலே பலன்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

கொடுக்குமா என்றுதான் இப்போது அச்சமாக இருக்கின்றது. மைனாரிட்டிகளுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. அரசியல் சட்டத்திலே பாதுகாப்புக் கொடுத்திருக்கின்றார்கள். மைனாரிட்டிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதைப் பற்றி யாருக்கும் ஆட்சேபனையில்லை. அது உலகத்தில் எங்கேயும் உள்ள வழக்கம். அரசியலமைப்புச்சட்டத்திலே மைனாரிடியாக இருந்தால் எல்லா விதமான பாதுகாப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு கொடுக்கவேண்டியதுதான் இங்கேயுள்ள மெஜாரிட்டியினரால் அவர்களுக்கு ஏதாவது தப்புதண்டா நடக்கும். ஆகவே அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதை ஒத்துக் கொள்கின்றேன். நம் நாட்டிலே மெஜாரிடியாக உள்ள தனியார் எத்தனையோ பள்ளிகள் நடத்துகின்றனர். மைனாரிடிகள் இப்போது பள்ளிகள் நடத்துகிறார்கள். நம் நாட்டிலே கிருஸ்டியன் மிஷன்களும் நிறைய இருக்கின்றன. நம் நாட்டிலே தேசிய அளவில் பார்த்தால், கல்விக்கு இரண்டாம் தரம் தான் இருக்கிறது. முக்கியமாக அங்கு மதந்தான் முதலாவதாக இருக்கிறது. மதப் பிரச்சாரம அதிகமாக இருக்கின்றது. மற்றவையெல்லாம் அதற்குப் பிறகுதான். வரவர பிரச்சாரம் ஜாஸ்தியாகிக் கொண்டே இருக்கின்றது. இந்த நிலையில் அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டுமா? ஆனால் அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றதே? நாமும் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று வாதாடலாம். ஆனால் ஏதாவது தப்பு நடக்கும்போது என்ன செய்வது? தனியார் பள்ளிகளுக்குச் சலுகை கொடுக்கலாம். மைனாரிடிகளும் தவறு செய்யலாம். மெஜாரிடியினரும் தவறு செய்யலாம். தவறு நடக்கும்போது ஒருவருக்குப் பாதுகாப்பு கொடுத்து, மற்றவருக்குக் கொடுக்காமலிருப்பது சரியல்ல. நாங்கள் இருக்கிறோமே. முஸ்லீம்கள் எப்படி வாதாடுகிறார்களோ, ஆசிரியர்களுக்காக எப்படி வாதாடுகிறார்களோ, அதேமாதிரி இந்து சமுதாயத்தில் பிறந்தவர்களுக்கும் அந்தச் சலுகைகள், பாதுகாப்புக்கள் கொடுக்க வேண்டும். சட்ட சபைகளில் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒரு குறிப்பிட்ட மைனாரிடி மதத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். இந்து மதத்தில் பிறந்தவர்களாகிய எங்களுக்கும் அந்த உரிமையுண்டு. அவர்கள் கேட்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றி எங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் இன்றையதினம் எதையும் நாங்கள் வாதாடித்தான் பெற முடியும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் சொன்னார்கள். அவர்கள் "கருத்துக்களையெல்லாம் வரவேற்கத் தயாராக இல்லையென்றாலும், இந்துக்கள் பற்றிய பிரச்சினையில் நான் ஒத்துப்போவதற்குத் தயாராக இருக்கின்றேன். நான் பைத்தியக்காரரா?" என்று கேட்டார்கள். அந்தப் பைத்தியக்காரர்களில் ஒருவனாக என்னை நினைத்துக்கொண்டு கேட்கிறேன். இன்றைக்கு இந்து மதம் பாராட்டுவதற்கு நாதியற்று இருக்கின்றது. ஜனநாயகத்தில் வோட்டுரிமை கொடுத்திருக்கின்றார்கள். அந்த வோட்டை நமக்குக் கொடுப்பார்களோ, மாட்டார்களோ என்ற பயம் இருக்கின்றது. அப்படியெல்லாம் இருக்கக்கூடாது.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடிகளார் சொன்னது, மனுநீதி சாத்திரத்தை ஒத்துக்கொள்ளாத ஒரு நிலையிலே உள்ள சைவ சமயம் என்று சொன்னார்கள். அது சிறுபான்மை என்றார்கள். தாங்கள் அதைச் சொல்கின்றீர்களா, வேறா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அவர் சொன்னதிலே சமயத்தை மட்டும் ஒத்துக்கொள்கின்றார். அவர் இந்து சமயத்தை ஒத்துக்கொள்கின்றார்களா அல்லவா என்றால், அவர் அந்த இந்து சமயத்தை நன்றாக ஒத்துக்கொண்டுதான் வாதாடியிருக்கின்றார்கள். எந்த இந்து சமயமானாலும் கடைசியில் அது ஒன்றாகப் போய்விடுகின்றது. இப்போது பிரிவினை மனப்பான்மை ஏற்பட்டிருப்பது பற்றி பேசத் தயாரா என்றால், தனியாகவே வாதாட தயாராக இருக்கின்றேன். அதற்குத் திறமை எனக்கு உண்டு. இப்போது தலைவர் அவர்கள் ஒரு ஐந்து நிமிடம் தான் பேச நேரம் கொடுத்திருக்கின்றார்கள். சீக்கிரமாக உட்காருங்கள் என்று சொல்லிவிடுவார்கள். நம் நாடு இப்போது எப்படி இருக்கின்றது என்றால், சாதிப் பிரச்சினையாலே, மதப் பிரச்சினையாலே, மொழிப் பிரச்சினையாலே இன்னும் சீரழிந்து கொண்டிருக்கின்றது. இப்படிப் போய்க் கொண்டிருக்கின்றபோது, இவர்களுக்கு என்ன சாதிச் சலுகை, அவர்களுக்கு என்ன சாதிச் சலுகை ? இவைகள் எல்லாம் சரிப்படுமா என்பது சர்ச்சைக்கு உரியதாகும். இதனால் சர்ச்சைகள்தான் அதிகமாகும். ஆகையால் முஸ்லீம்களுக்கு என்று தனிச் சலுகை என்ன வேண்டியிருக்கிறது? கிருத்துவர்களுக்கு என்று தனிச் சலுகை என்ன வேண்டியிருக்கிறது என்றெல்லாம் வெளியில் சொல்லுகின்றார்கள். மொழி என்று எடுத்துக்கொண்டால், சான்ஸ்கிரிட் மொழி இருக்கிறது. அதற்கும் சலுகை வேண்டித்தான் இருக்கிறது. சலுகை என்று சொல்லும்போது, இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்த எல்லோருக்கும் ஒரே சலுகையாகத்தான் இருக்க வேண்டும். இந்திய நாட்டிலே பிறந்து வளர்ந்த எல்லோருக்கும் அவர்கள் எந்த இனத்தவராக இருந்தாலும், ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் சமதர்மம், சோசலிசம் என்பதெல்லாம் வளர முடியும். இவர்களுக்கு ஒரு சலுகை, அவர்களுக்கு ஒரு சலுகை என்று பேசிவிட்டு, மேடையில் ஏறி சோசலிசம் என்று பேசுவது வெறும் வாய்ப்பேச்சு சோசலிஸமாகத்தான் இருக்கும். எல்லோருக்கும் சமதர்மம் என்று பேசும் போது, எதுவாக இருந்தாலும் சரி, அதிலே, வித்தியாசம் கூடாது. கல்வி கொடுப்பதிலும் சரி, படிப்பிலும் சரி, எதிலும் சமமாகக் கொடுத்தால்தான் நாட்டிலே சமதர்மம் நிலைக்கும். அப்படி இருந்தால்தான் சோசலிசம் வரும். இல்லாவிட்டால் நூற்றுக்கணக்கான வருடங்கள் ஆனாலும், சோசலிசம் சரியாக உருவாகாது என்பது என் பொதுவான கருத்து.

இப்போது நாட்டிலே தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும்போது ஆசிரியர்கள் பல சங்கடங்களுக்கு உள்ளாகிறார்கள். பணியில் நியமனம் செய்வது முதல் இன்னும் பல கட்டங்களில் அவர்கள், நிர்வாகத்தினரால் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள்—அப்படிப்பட்ட நிர்வாகத்தினையெல்லாம் சீர்

[திரு. ஒய். வெங்கடேஸ்வர் தீக்ஷிதர்]

திருத்த வேண்டும். அப்படிச் சீர்திருத்தும்போது, அந்த நிர்வாகத்திலே ஆசிரியர்களுக்கு முக்கியமாக தேர்வு முறை என்று வைத்து—அசெம்பிளியிலே கூட அதிலே கருத்து வேறுபாட்டுடன் ஒத்துக்கொண்டார்கள்—அவர்களை நியமிக்கின்றார்கள். எங்கு பார்த்தாலும், இப்போது தேர்தல் மயமாக இருக்கின்றது. 1976-ம் வருடம் ஜெனரல் எலெக்ஷன் என்கிறார்கள். 1975-ம் வருடம் பஞ்சாயத்து எலெக்ஷன் வந்துவிட்டது என்கிறார்கள், 1974-ம் வருடம் முனிசிபல் எலெக்ஷன் என்கிறார்கள், இந்த வருடம் மாணவர்கள் எலெக்ஷன் என்கின்றார்கள். இப்படி எங்கு, எப்போது பார்த்தாலும் தேர்தல் மயம்தான். இந்த ஆசிரியர்கள் தேர்தல் நடந்து தலைமையாசிரியர் தேர்தல் வந்தால் நான் நிற்கிறேன், நீ நிற்கிறேன் என்றெல்லாம் ஏற்பட்டு சண்டைகள் வந்துவிடும். கோவாப்ரேடிவ்களிலும் தேர்தல் வந்துவிட்டது. அதிலேயும் கட்சி வந்துவிட்டது. சண்டைகளும் வந்திருக்கின்றன. இப்படி ஒவ்வொருவரும் நான் இந்தக் கட்சி, அந்தக் கட்சி, நான் முன்னேற்ற கட்சி, பின்னேற்ற கட்சி, காங்கிரஸ் கட்சி, சோசலிஸ கட்சி, சுதந்திராக் கட்சி, இல்லாதவன் கட்சி, இருக்கின்றவன் கட்சி என்று சொல்லிக்கொண்டிருக்கின்றனர். இதனால் எல்லாம் என்னவாகும் ? குழப்பம் அதிகமாகி அதிகமாகி கடைசியிலே மனிதர்களுக்குக் கஷ்டம் தான் உண்டாகும். ஒழுங்குபடுத்துவோம் என்பது போய் ஒழுங்கு மீறிப்போய்விடும். இப்போது இருக்கின்ற கமிட்டிகளில் இருப்பவர்கள் ஒருவருக்கொருவர், சொந்தக்காரர்கள், அப்பன், பிள்ளை எல்லாம் இதில் இருந்துகொண்டு நடத்தும்போது அதில் சங்கடம் ஏற்படுகிறது, தவறு நடக்கிறது. தலைமையாசிரியர்கள் யாரால் நியமிக்கப்படுகிறார்கள் ? ஆசிரியர்கள் யாரால் நியமிக்கப்படுகிறார்கள் ? இந்த மாதிரியான நிர்வாகத்தினரால் நியமிக்கப்படுகிறார்கள். ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஒரு ஒழுங்குமுறை என்று இருந்தால், அதிலே தப்பு ஏற்படாது. அப்படியில்லாது அதிலே நேர்மை எப்படியிருக்கும்? சர்க்காருடைய தேர்தல்களில், எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி., முனிசிபல் மெம்பர், முனிசிபல் சேர்மென், ஊராட்சி ஒன்றியங்கள் இவைகளுக்காக ஜனநாயகத்திலே தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்றனர். அந்தப் பகுதியிலுள்ள மேனேஜ்மெண்டுக்குத் தகுந்தாற்போல், அவர்களைக் கண்டிக்கக்கூடிய அளவில், இந்தப் பிரதிநிதிகளை "எக்ஸ், அபிசியோ"—வாகப் போட வேண்டும். அப்படி இல்லாததால், அங்கு சர்வாதிகார முறையிலே நடக்கிறது.

மானேஜ்மெண்டை சீர்திருத்த வேண்டுமென்றால், மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்ட பிரதிநிதி இருந்தால்தான் சீர்திருத்த முடியும். இல்லை
5-40 யென்றால், இதில் நாளைக்கு மக்களுக்கு எப்படி நம்பிக்கை இருக்க
பி.ப. முடியும் ? பல மானேஜ்மெண்டுகளில் அதிக வருமானம் வருகிறது.
இப்படி வருமானம் அதிகம் வரும் மானேஜ்மெண்டுகளில் தங்களுடைய
குடும்பத்தை நடத்தக் கூடிய மானேஜ்மெண்டுகள் இன்னும் கூட இருந்து
கொண்டிருக்கின்றன. நாம் சட்ட திட்டங்களை வகுத்து, சமதர்மத்தை
ஏற்படுத்தி, பெரிய பணக்காரர்களின் நில புலன்களைப் பிடுங்கிய இந்த



[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

நாளில் கூட இன்னும் இந்த நிலைமை இருக்கிறது. பல ஆசிரியர்களுக்குச் சம்பளம் சரியாகப் போய்ச் சேருவதில்லை 'அப்பாயிண்ட்மெண்ட்' முதல் எல்லாக் காரியங்களிலும் வரவு வரக்கூடிய நிலை இருக்கிறது. யார் யார் கையில் இந்த வேலை கொடுக்கக் கூடிய தகுதி இருக்கிறதோ அவர்களிடத்தில் வரவு இருக்கிறது. ஆகையினாலே இந்த ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியது முக்கியமானதுதான். 'அப்பாயிண்ட்மெண்ட்' விஷயத்திலும் பாதுகாப்பு இருக்கவேண்டியது அவசியம் தான். நிர்வாகத்திலே மக்களின் பிரதிநிதிகள் இருப்பது நியாயமான ஒன்றாகும். இதற்குத் தனித் தேர்தல் தேவையில்லை. ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைச் சேர்க்க வேண்டும். எம். எல். ஏ.வாக இருந்தாலும் சரி, எம். பி. யாக இருந்தாலும் சரி, சேர்மனாக இருந்தாலும் சரி, ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக இருந்தாலும் சரி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இதிலே இடம் பெறவேண்டுமென்ற வழி வகை செய்தால், இது நல்ல முறையில் இருக்குமென்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இதில் கட்சி மனப்பான்மை ரொம்பவும் இருக்கிறது. பள்ளிக்கூடம் நான் நடத்துகிறேன். திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் நடத்துகிறார்கள், அடிகளார் அவர்கள் நடத்துகிறார்கள், இவர்கள் பேரிலே புகார் வருகிறதென்று சொன்னால், அந்தப் புகாரை ஆதாரமாக வைத்துக் கொண்டு கலைக்கிற காலத்திலே இதை எதிர்த்து இப்போது கோர்ட்டுக்குப் போக முடியாது. நீதி மன்றத்திற்குப் போனால்தான் தீர்ப்பு சரியான முறையில் வரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீதி மன்றத்தில்தான் நீதி கிடைக்கும், மற்ற இடத்தில் இல்லை என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, சந்தேகத்திற்கு இடமில்லாமல், நீதி மன்றத்திற்குப் போக வாய்ப்பு கொடுக்க வேண்டும். இந்த வாய்ப்பு இதிலே கிடையாது. கல்விக்காக நாம் 120 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கிறோம். இதில் நீதி மன்றத்திற்குப் போக வேண்டுமென்றால் இடமில்லையே. டிரிபியூனல் என்றுதான் போட்டிருக்கிறது. (குறுக்கீடு) நீதி மன்றத்திற்கும் போக வாய்ப்பு இருக்கிறது என்கிறார்கள். சந்தோஷப்பட வேண்டியதுதான்.

இப்போது தேசீய மயம், தேசீய மயம் என்று சொல்வது நவநாகரீகமாகப் போய்விட்டது. 1975–76-ல் என்னென்னவைகளை தேசீய மயம் என்று சொல்லப்போகிறார்களோ, தெரியவில்லை. தேசீய மயம் என்று சொல்வது நாகரீகமாகப் போய்விட்டது. எல்லாப் பள்ளிகளையும் எடுத்துக் கொண்டுவிட்டால், தேசீய மயமாக்கிவிட்டால், என்ன கவலை ? விளக்குமாறு முதல் கக்கூஸ் அலம்பும் செலவு வரை கணக்கு எழுதி வாங்கிவிடப் போகிறார்கள். முடியாவிட்டால் சிபாரிசோடு நேராகத் தலைமையகத்திற்கு வருகிறார்கள். பணத்தை வாங்கிப் போகிறார்கள், கூட வாங்கிப் போகிறார்களே தவிர, குறைத்து வாங்கிப் போவதில்லை. ஏதோ ஒரு கட்டிடத்திற்கு ரிப்பேர் செய்ய வேண்டுமென்று பணம் வாங்குகிறார்கள். அப்படி தேசீய மயமாகி விட்டால், அதைப் பற்றிக் கவலையில்லை. முதல் இல்லா

[திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

விட்டால், மக்களிடம் வாங்கிக் கொள்ளலாம். இல்லாவிட்டால் பட்ஜெட்டில் ஒதுக்கிக் கொள்ளலாம். ஆக, தேசிய மயம் என்று சொல்லிவிட்டால், எந்தப் பிரச்சினையும் இல்லை. சண்டை, சச்சரவு எதுவும் இல்லை **என்பதைத்** தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, I have carefully gone through the provisions of this Bill and while endorsing the views held generally on this Bill, I would like to draw the attention of the Hon. the Education Minister and the Government to clause 15 as newly amended in this Bill. It reads thus, "Every private school shall have a duly constituted school committee which shall include the headmaster of the private school and the seniormost teachers employed in the private school as provided in sub-section (2)." Sub-section (2) of the rule reads : "The number of representatives of the teachers on such constituted school committee shall be such as may be prescribed and different number of representatives may be prescribed for different classes of private schools." By prescribing that the seniormost teacher employed in the private school as provided in sub-section (2) shall be included in the Committee, we are virtually putting them in a position of compromise in which their duty and interest will conflict with each other. Sir, by making the seniormost teacher, next to the Headmaster, a member of the Committee, there is very little chance of the seniormost teacher supporting the teachers because he will always look forward to the post of Headmaster which is to come to him in future. Instead of that, if the number of representatives is prescribed in the Bill itself, the fear that some of the teachers are expressing today may be met. It would be better if the number of representatives of teachers is prescribed in the Bill itself, by making it a statutory provision, instead of leaving it to be decided later by the Government. Sir, clause 15(2) has an element of discrimination in it. I wonder whether it was brought to the notice of the Assembly and brought to the attention of the Hon. the Law Minister and I do not know whether he has considered the consequence of such an amendment being brought. The number of representatives of such constituted committee shall be such as may be prescribed and different number of representatives may be prescribed for different classes of private schools. This cannot be a classification which will have a nexus with the objective of the legislation. Any classification that has no nexus with the object of the legislation may not be statutorily sustained under Article 14 of the Constitution. I think it is my duty to bring this to the notice of the Hon. the Law Minister, so that he might exercise his mind on it. This is a lacuna which may not stand the test in a court of law.



[Thiru G. Vasantha Pai]

Then, Sir, I was told by my hon. Friend Thiru Ganapathi that he had drawn the attention of the House to clause 33 of this Bill and also clause 18. Of course, I do find that it excludes the properties and funds of the private schools and the Committee has no jurisdiction over them. But, I suggest that the Hon. the Law Minister might satisfy himself whether it will stand the test of Article 30 of the Constitution. With these few words, I thank you for the opportunity given to me.

*திரு. ஆர். சக்திமோகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மசோதாவை எனது கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதா தனியார் பள்ளிகளை முறைப்படுத்தும் மசோதா என்பதைவிட ஆசிரியர்கள் பாதுகாப்பு மசோதா என்று சொல்வது பொருந்தும் என்று கருதுகிறேன். நமக்கு எழுத்தறிவித்த இறைவன்களான ஆசிரியர்மார்களுக்கு ஏற்கெனவே இந்த அரசாங்கம் ஏராளமான அளவிற்கு வசதிகளும், வாய்ப்புகளும் கொடுத்து வந்த போதிலும், தனிப்பட்ட முறையில் தனியார் பள்ளிகளில் அவதியுறுகிற ஆசிரியர்களுக்குத் தக்கதொரு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்ற முறையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஆசிரியப் பெரு மக்கள் வளரும் செல்வங்களை நாட்டு ஒருமைப்பாட்டோடு, தேசீய மனப்பான்மையோடு பயிற்றுவிக்க வேண்டியவர்கள். அவர்களுக்கு இன்னும் எந்தெந்த வகையில் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமோ அவைகளெல்லாம் செய்து கொடுக்க வேண்டும். அதற்கு ஆதாரவாக, அனுகூலமாக இந்தச் சட்டம் இருக்கிறது என்ற வகையில் பாராட்டுகிறேன், போற்றுகிறேன். அதே சமயம் எல்லா வகையிலும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு கிடைத்து விட்டது. அவர்களுடைய பணி, வாழ்க்கை வசதிகள், அனைத்திற்கும் பாதுகாப்பு தரப்பட்டு விட்டது என்ற அடிப்படையில் அவர்களுடைய கடமைகளைத் தவற விட்டு விடக் கூடாது என்றும் நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியர்கள் எல்லோரும் அல்ல, சில பள்ளிகளில் பார்த்தால், அங்கு அட்டெண்டன்ஸ் இல்லாமலேயே பள்ளிக்கூடம் நடப்பதாகச் சில புகார்கள் வருகின்றன. கிராமங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. தனியார் பள்ளிக்கூடங்களில் பாதுகாப்பு இல்லாத நிலைமையால் ஆசிரியர்கள் தக்க முறையில் பயத்தோடு, ஏதேனும் தவறு புரிவோமானால், வேலை இழந்து விடுவோம் என்ற அச்சத்தோடு பாட போதனை செய்து கொண்டிருப்பார்கள். இப்போது பாதுகாப்பு தரப்பட்டு விட்டதால், அந்தப் பாட போதனையில் அலட்சியங் காட்டி போதனா சக்தியைக் கொஞ்சங்கூட தளர்த்தி விடாமல், நல்ல முறையில் தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்று, இன்று இதன் மூலமாக ஆசிரியர்களைக்கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்தச் சட்டம் நண்பர் திரு. கணபதி கூறிய மாதிரி பத்து வருஷங்களுக்கு முன்னால் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும். ஒரு நாடு சுதந்திரம் அடைந்த பிறகு முதன் முதலாகக் கல்வியை

[திரு. ஆர். சக்தி மோகன்]

தேசியமயமாக்கி இருக்க வேண்டும். நம்முடைய போக்கு வரத்து பஸ்களை தேசியமயமாக்குவதற்கு முன்னால், இந்தக் கல்விச் சாலைகள் தேசிய
5-50 பி.ப. மயமாக்கப்பட்டிருந்தால், நல்லதாக இருந்திருக்கும். ஆரம்பத்திலேயே தேசிய மனப்பான்மையை மாணவர்களுக்கு ஊட்டுவதற்கு, எதிர்காலத்தில் நாட்டை நல்ல முறையில் பலமாக அமைத்துக் கொள்வதற்கு, எல்லாக் கல்விக் கூடங்களும் தேசியமயமாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதல்லாமல், இப்பொழுது சுதந்திரம் அடைந்து முப்பது வருஷங்கள் ஆன பிறகு, இந்தச் சட்டம் வந்திருக்கிறது. நாம் சோஷலிசம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த சோஷலிசத்தோடு ஜனநாயகத்தையும் சேர்த்துக் கொண்டு நாம் குழப்பம் செய்து கொண்டிருக்கிறோம். ஜனநாயகமும் சரிவரப் பயன் படுத்தப்படாமல், சோஷலிசமும் சரிவர நிறைவேற்றப் படாமல் இப்படி நல்ல ஒரு சட்டம் வருகிறது. வந்தாலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தச் சட்டத்தைப் பார்த்து யாரும் பயப்படத் தேவையில்லை. தவறுகள் புரிகின்றவர்கள் ஒழுக்கக்கேடு செய்கின்றவர்கள், பள்ளிகளை வைத்துத் தவறாக தொழில் புரிகின்றவர்கள்தான் பயப்பட வேண்டுமே தவிர, நல்ல முறையில் பள்ளிகளை நடத்துகின்றவர்கள் பயப்படத் தேவையில்லை.

குறிப்பாக, இந்த மசோதாவின் மீது விரோதித்தவர்கள். சிலர் ஆவேசமாகவும், சிலர் ஆத்திரத்துடனும் பேசியிருக்கிறார்கள். அடிகளார் ஒரு மைனாரிட்டி இனத்தையும், திரு. முத்துசாமி ஒரு மைனாரிட்டி இனத்தையும் இதன் மூலம் உருவாக்கியிருக்கிறார்கள். சோஷலிசம் என்று பேசுகிறபோது, மெஜாரிட்டி, மைனாரிட்டி என்ற வித்தியாசமே இருத்தல் கூடாது. ஆனால் அந்த அளவுக்கு நாம் இன்னமும் வளரவில்லை, வளர்கின்ற காலத்தை நோக்கி நாம் போய்க் கொண்டிருக்கிறோம். ஜாதியும் மதமும் கூடாது, செக்யூலர் ஸ்டேட் என்பதுதான் நம்முடைய அரசியல் சட்டத்தின் முக்கிய கொள்கையாக இருக்கிறது. அந்த அளவுக்கு ஜாதி வேறுபாடு, மத வேறுபாடு மறுக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையில் பார்த்தால், இவை அதிகமாக இருக்கின்றனவே தவிர, ஓரளவுக்குக் கூட குறையவில்லை. எங்கு பார்த்தாலும், ஜாதி வேறுபாடுகள் அதிகமாக இருக்கின்றன. மதக் கோட்பாடுகள், மத சம்பந்தமான சடங்குகள், சாங்கியங்கள் நிறைய வளர்ந்து கொண்டு போகின்றனவே தவிர, செக்யூலர் ஸ்டேட் என்ற அடிப்படையில் ஜாதி மத வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் பாகுபாடின்றி வாழ வசதிகள் ஒரே முறையில் தர வேண்டும் என்று இருந்தாலும் கூட, அந்த அளவுக்கு நடைமுறையில் செய்யப்படவில்லை. எந்த ஒரு நாட்டிலே பார்த்தாலும், குறிப்பாக சுதந்திரமடைந்த எந்த நாட்டிலே பார்த்தாலும், எந்த உரிமை வழங்கப்பட்டிருந்தாலும். இல்லாவிட்டாலும் வாழும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய நாட்டில் ஓட்டு உரிமை கொடுத்திருக்கிறார்கள். எல்லோருக்கும் ஓட்டு உரிமை உண்டு. ஆனால், வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்கப்படவில்லை. ஜனநாயகம் என்று சொல்லுகிறோம். ஓட்டு உரிமையும கொடுத்து



[திரு. ஆர். சக்தி மோகன்]

விட்டோம். ஆனால் அவனுக்கு உணவுக்கு உரிமை இல்லை. அவன் ஓட்டுப் போடுவான், ஆனால் சோறு இருக்காது. அவனுடைய ஒரே ஓட்டிலிருந்து ஒரு அரசை உருவாக்கலாம். அவனுடைய ஒரு ஓட்டின் மூலம் ஒரு சர்க்கார் இல்லாமலும் செய்து விடலாம். அந்த ஓட்டில் பணக்காரன் ஓட்டு, ஏழை ஓட்டு என்ற வித்தியாசமில்லை. அப்படி ஓட்டுப் போடுகின்ற ஏழைக்கு இந்த நாட்டில் உணவுக்கு உத்தரவாதம் இல்லை. வாழ வசதி இருக்கிறதா என்றால், இல்லை. ஜனநாயக சோஷலிசத்தில் எழுத பேச, சிந்திக்க உரிமை இருக்கிறது. ஆனால், நடைமுறையில் மனிதனுக்கு வாழ வசதியில்லை. இதில் சிறுபான்மையோர் என்ற முறையில் மைனாரிட்டிகளாக இருக்கின்றவர்களுக்கு அதிகப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்ற ஒரு விதியும் செய்து தரப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது, நான் கொஞ்சம் கூட அதிலே குறுக்கே நிற்க விரும்பவில்லை. ஒரு சாரார் மெஜாரிட்டியாக இருக்கின்ற நாட்டில், மைனாரிட்டிகளாக இருக்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டும் என்பதில் யாரும் வேறுபாடு கொள்ள முடியாது, ஆனால் மைனாரிட்டிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறோம் என்ற அடிப்படையில், மெஜாரிட்டிக்களைக் கைவிட்டுவிடக் கூடாது. இந்து மதத்தை எடுத்துக் கொள்வோம். இந்து மதம் ஆதி மதம். இந்த நாட்டிற்குச் சொந்தமான மதம். ஆனால் அதற்கென தனியான ஒரு ஆட்சியே கிடையாது. எல்லா நாடுகளிலும் அந்தந்த நாட்டு மத அடிப்படையில்தான் அந்த நாட்டு சர்க்கார்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நம்முடைய நாட்டில், இந்து மதம் ஒன்றைப் பொறுத்த வரையில், நேபாளத்தில் மட்டும் தான் இந்து மதத்தின் பெயரால் சர்க்கார் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையினால் சிறுபான்மையினரை எந்த அளவுக்குக் காப்பாற்ற முயற்சி எடுத்துக்கொள்கிறோமோ, அவர்களுக்கு எந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்கிறோமோ அந்த அளவுக்கு மெஜாரிட்டி மக்களையும் பாதுகாத்துத்தர வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் இந்துமதஅடிப்படையில் ஆட்சி இந்தியாவில் நடைபெறுகிறதா என்றால், இல்லையென்று நிச்சயமாகச் சொல்லலாம். இதை யாரும் மறுக்கயாது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும், கல்வித் துறையிலும் தனியார் துறை பள்ளிகளிலும், இந்துக்கள் நடத்துகின்ற பள்ளிகள் மிக மிகக் குறைவு. நம்முடைய தமிழ் நாட்டில் கிறிஸ்தவர்களுடைய மிஷினரிகள் சீரான முறையில், எல்லா வசதிகளுடனும் நல்ல முறையில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இந்துக்கள் நடத்துகின்ற பள்ளிகளில் கல்வித் தரம் ஓரளவுக்குக் குறைவாகவே இருக்கின்றது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். காரணம், வசதி வாய்ப்புக்குறைவே! எனவே மைனாரிட்டிகளுக்கு எந்த அளவுக்குக் கல்விச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றனவோ அந்த அளவுக்கு மெஜாரிட்டிகளுக்கும் கொடுக்க வேண்டும் என்று இந்த அமைச்சரவையைக் கேட்டுக் கொள்கிறேன். சிறுபான்மையினர் அனுமதி பெறாமலேயே பள்ளிகளைத் துவக்கலாம் என்று விதி இருக்கிறது. அது ஒரு ஆபத்தான விதியாகும். எப்படி சிறுபான்மையினர் அனுமதியின்றி ஆரம்பிக்கலாம்

[திரு. ஆர். சக்தி மோகன்]

என்று இருக்கிறதோ அதே போல் பெரும்பான்மையினருக்கும் சட்டத்தில் இடம் தரவேண்டும். பள்ளிக்கூடம் ஆரம்பிக்க ஒருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டால், எல்லோருக்கும் மறுக்கப்பட வேண்டும். அல்லது எல்லோருக்கும் அனுமதி வழங்க வேண்டும். இதிலே எந்தவிதமான பாகுபாடும் வேண்டாமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே இந்து மிஷன் பள்ளிக்கூடங்களுக்கு, குறிப்பாக ராம கிருஷ்ண மடாலயத்தால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு சட்டத்தில் விதி விலக்குத் தர வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். இந்து மதத் திற்கு, இந்து மதப்பண்புகளுக்கு ஆதரவு அளித்து, அகில இந்திய ரீதியில் நடக்கின்ற முறையான ஸ்தாபனம் இந்த இந்து மிஷன் ஒன்றுதான் எந்தச் சட்டக் கட்டுப்பாடுகளையும், ஒழுங்கு முறையையும் மீறாமல் இந்து மக்கள் சார்பில் நடைபெறுகின்ற ஒரு பெரிய ஸ்தாபனம் அது. அதனால் நடத்தப்படுகின்ற பள்ளிகளுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும். இந்தச் சட்டக் கட்டுப்பாட்டின் கீழ் இந்த மிஷனரி கொண்டுவரப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, குறிப்பாக தனியார் பள்ளி, அரசாங்கப் பள்ளிகள் என்று இராமல் இந்தச் சட்டத்தை இன்னும் கொஞ்சம் கடுமையாக்கி, எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கம் எடுத்து நடத்துவது நல்லது என்று கருதுகிறேன். அப்பொழுது எந்த விதியையும் புறக்கணிப்பதற்கு வழி இருக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதன் மூலம் நல்ல ஒரு எதிர்காலத்தை நம்முடைய மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கலாம். காலப் போக்கில் இப்படி ஒரு நிலைமை, அதாவது தேசியமயம் ஆக்கினால்தான் வளர்ச்சி அடைய முடியும் என்று சொல்லப்படுகிறதே, அதைப் போல், கல்வித் துறையிலும் ஏற்படும், அதற்கு முன்னோடியாக எல்லா தனியார் பள்ளிகளையும், எவருக்கும் தனிச்சலுகை காட்டாமல் எல்லாவற்றையும் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மசோதாவை ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

திரு. சி. வி. ராஜகோபால்: மாண்புமிகு தலைவர் அவர்களே' ஆசிரியர்களுடைய பாதுகாப்பிற்காகக் கொண்டுவரப்பட்ட இச் சட்டத்தின் கீழ் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று ஆசைப்படு
6-00 பி.ப. கிறேன். பல நண்பர்கள் பேசியிருக்கிறார்கள். உள்ளபடியே ஆசிரியர் பெருமக்களுக்கு பெருத்த சௌகரியம் பண்ணுவதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னாலே தனிப்பட்டவர்கள் சில பள்ளிக்கூடங்களை நடத்திக்கொண்டு செய்த அக்கிரமங்களைத் தடுப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எல்லோரையும் சொல்லவில்லை; ஒருவர், இருவர் அக்கிரமங்கள் செய்கிறார்கள், பணம் வாங்குகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் நடத்துகின்ற முறை இருக்கின்றதே, மானேஜ்மெண்ட் சிஸ்டம், அது " சோல் மானோபலியாக" இருக்கிறது. அந்த மானோபலியை உடைப்பதற்



[திரு. சி. வி. ராஜகோபால்]

காகத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. வேறு எதற்காகவும் கொண்டுவரப்பட்டது என்று யாரும் கருதக்கூடாது. சிலர் சிறுபான்மை, பெரும்பான்மை என்று பேசினார்கள். சிறுபான்மையினருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அரசியலமைப்புச் சட்டத்தில் ஏற்பாடு இருக்கிறது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பத்திரமாகக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் அதற்காகக் குறைப்பட்டுக்கொள்ளக் கூடாது. ஆசிரியர்கள் சௌகரியமாக, நிம்மதியாக இருக்க வேண்டும். அருமை நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் ஆசிரியர்கள் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார்கள், அவர்களின் கண்ணீர் துடைக்கப் பட்டிருக்கிறது என்று கூறினார்கள். இனி கண்ணீர் கொட்டத் தேவையில்லை. ஆசிரியப் பெருமக்களுக்குக் கொடி எதற்கு ? அவர்கள் கொடி தூக்குகின்ற பழக்க வழக்கங்களை நிறுத்த வேண்டும். அவர்கள் அடிக்கடி தூக்குகிறார்கள். ஆசிரியப் பெருமக்களே, இது நீங்கள் செய்ய வேண்டிய காரியமா? நின்று கொண்டு ஒரு கெட்ட காரியத்தை நீங்கள் செய்தால், பையன் ஓடிக்கொண்டே அந்தக் கெட்ட காரியத்தைச் செய்வான். பெருமைக்குரிய ஆசிரியப் பெருமக்கள், இப்போது நாட்டுக்கு, இந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருக்கிறார்களோ இல்லையோ, ஆனால் அவர்களின் கஷ்ட நஷ்டங்களைப் போக்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் 'They are there to teach the morals' என்றும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறேன்.

Mr. CHAIRMAN : They are teaching lessons.

திரு. சி. வி. ராஜகோபால் : ஆசிரியர்கள் தான் இந்த நாட்டின் குழந்தைகளுக்கு ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். எனக்கு 55 வயது ஆகிறது. எனக்கு எல்லாம் ஒழுக்கம் வந்தால் என்ன, வரா விட்டால் என்ன ?...........

திரு. எல். பலராமன் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தான் ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்வது முடியாது என்று சொன்னார்கள். அவர் தன்னை ஒழுக்கம் இல்லாதவர் என்று கருதுகிறாரா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர் தான் ஒத்துக்கொண்டாரே.

திரு. சி. வி. ராஜகோபால் : 55 வயதுக்கு மேல் வராது, அது வருவது கொஞ்சம் கஷ்டம் என்று தான் சொன்னேன். ஒழுக்கம் வரக்கூடிய காலம் 8, 10 வயதுதான். தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று சொல்லுவார்கள்.

திரு. செ. முத்துசாமி : 55 வயதில் ஒழுக்கம் வராது என்று சொன்னார்கள். ஆரம்பப் பள்ளியில் கற்றுக்கொண்ட ஒழுக்கம் இது வரை இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படித்த ஒழுக்கத்தால் தான் என்னுடைய ஒழுக்கம் இது வரை இவ்வளவு ஒழுங்காக இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இன்றைக்குப் படிக்கின்றவர்களுக்கு அங்கத்தினரைப் போல் 55 ஆண்டு கழித்து சட்ட மன்றத்திற்கு வந்த பிறகு தான் ஒழுக்கத்தைப்பற்றித் தெரியவருமா? அவரை வைத்து மற்றவர்களைக் குறிப்பிடுவது எவ்வாறு நியாயமாகும்?

திரு. சி. வி. ராஜகோபால் : நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிற விஷயத்தைத்தான் சொன்னேன். உறுப்பினர் அவர்கள் 55 ஆண்டுகளுக்குப் பின்னாலே என்ன நடக்கும் என்பதைக்கூட தெரிந்து கொள்ளக்கூடிய ஒரு மகரிஷியாக இருக்கக்கூடும். நான் மகரிஷியல்ல, சாதாரண மனிதன். தற்கால நடவடிக்கைபற்றித்தான் எனக்குத் தெரியும். ஆசிரியப் பெருமக்களுக்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் 2, 3 நிமிஷங்கள் இதற்காக எடுத்துக்கொண்டேன். நான் சொல்லுகின்றவைகளை ஆசிரியப் பெருமக்கள் அவர்களுக்குச் சொல்லுகின்ற கருத்தாக எடுத்துக்கொள்ள வேண்டும். புத்திமதி அல்ல. அவர்கள் எல்லாம் புத்திசாலிகள். அப்படிப்பட்டவர்கள் இன்னும் சில கருத்துக்களை, அறிவுரைகளை வழங்கி, இந்த ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். ஏதாவது தவறு நடந்து விட்டால், அதை எடுத்துச் சொல்லுகிற பக்குவம் இருக்கிறது. அதைவிட்டு கொடி தூக்குகிற வழக்கத்தை விட்டுவிட வேண்டும். பாண்ட், சர்ட் எல்லாம் போட்டுக்கொண்டு அவர்கள் கொடி தூக்கிக்கொண்டு வருவதைப் பார்க்க ரொம்பக் கேவலமாக இருக்கிறது. 300, 400 ரூபாய் சம்பளம் வாங்குகிறார்கள். நாட்டில் 100, 50 ரூபாய் கூடக் கிடைக்காமல் எத்தனையோ பேர் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே தான் இந்தச் சட்டத்தை நான் மனப்பூர்வமாக நாட்டு மக்கள் சார்பாக ஆதரித்து வரவேற்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, என்னைப்பற்றிக் குறிப்பிட்டதால் ஒரே ஒரு விளக்கம் மட்டும் கூறிக்கொள்ளுகிறேன். ஆசிரியர்கள் கொடி தூக்குகிறார்கள் என்றார்கள். இன்றைக்குச் சட்டம் வந்து விட்டது. சில நேரங்களில் கண்ணீர் வடிப்பது, கேட்கின்ற பிரச்சினைகள் தீராமலிருப்பதால் தான். ஏற்கெனவே ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டதாகக் குறிப்பிட்டேன். அந்தக் காரணத்திற்காகத்தான் அவ்வாறு நடந்திருக்கிறது. இப்போது ஆசிரியர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு கொண்டு வந்திருப்பதை மன நிறைவோடு வரவேற்கிறோம். கடந்த கால நிகழ்ச்சியைப்பற்றி இப்போது பேசுவதன் மூலம், ஆசிரிய சமுதாயத்



திற்கப் பொறுப்பிலே இருப்பவர்களிலே ஒரு சாராரைக் கொடி தூக்கக்கூடாது என்று நினைவுபடுத்த விரும்புகின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் ஆசிரியர் பணிப் பாதுகாப்பை நோக்கமாக, அடிப்படையாகக் கொண்டு, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தத் திருத்தச் சட்ட மசோதா பற்றிய கருத்துக்களை உறுப்பினர்கள் பலரும் வழங்கியிருக்கிறார்கள். அரசினர் பள்ளி, ஊராட்சி ஒன்றியப் பள்ளி, நகராட்சிப் பள்ளி, மாநகராட்சிப் பள்ளிகள், இவைகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்குப் போதுமான அளவுக்கு சட்ட திட்டங்கள் இருக்கின்றன. தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு போதுமான அளவுக்குச் சட்டதிட்டங்கள் இல்லை. அந்தக் குறைபாட்டைப் போக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், இந்தத் தனியார் பள்ளி அங்கீகாரம்பற்றிய முறையை ஒழுங்குபடுத்துகின்ற மசோதா கொண்டுவரப்பட்டது. அது தான் இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம். நான் முதலில் குறிப்பிட்டேன், எந்தெந்தப் பள்ளிகள் இந்தச் சட்டத்தின் கீழ் வராது என்று. அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறாத பள்ளிகள் இந்தச் சட்டத்தின் கீழ் வராது. இந்திய அரசாங்கத்தின் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கின்ற பள்ளிகள் இந்தச் சட்டத்தின் கீழ் வராது. ஆனால் அங்கீகாரம் பெற வேண்டிய, மான்யம் பெறாவிட்டாலும், அங்கீகாரம் பெற்றுள்ள பள்ளிகள் இந்தச் சட்டத்தின்கீழ் வருகின்றன. இதை முக்கியமாக ஒழுங்குபடுத்துகின்ற சட்டம் என்ற அளவுக்குத்தான் கொண்டுவந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தை ஆதரித்திருக்கிறார்கள். மாண்புமிகு திரு. அப்துல் வகாப், திரு. பக்கர் உட்பட அத்தனை பேரும் ஆதரிக்கிறார்கள். எப்படி ஆதரிப்பது என்ற வகையில்தான் வித்தியாசம். இந்தச் சட்டம் சிறுபான்மையோர் நலன்களை, உரிமைகளை, அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பல்வேறு வாய்ப்புக்களைப் பறிக்கின்ற அளவில் அமைந்திருக்கின்றது என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அப்துல் வகாப், திரு. பக்கர் அவர்களின் கருத்தாகும். மற்றவர்கள் சில பல திருத்தங்களை எடுத்துச் சொன்னாலும் இந்த மசோதாவை முழு மனதோடு வரவேற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஐயப்பாட்டிற்காக நான் முதலிலேயே எடுத்துச் சொன்னேன். சிறுபான்மையினரின் உரிமையைப் பறிப்பதோ, ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்ற உரிமைகளிலிருந்து பின்வாங்குவதோ இந்தச் சட்டத்தின் நோக்கமல்ல. அது மட்டுமல்லாமல், கல்வித் துறையைப் பற்றி, அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களைப் பற்றி கருத்துத் தெரிவிக்கின்ற அடிப்படையில் தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, ஜெனரல் எஜுகேஷனைக் கருத்தில் கொண்டு தான் இருக்கிறதே தவிர, முஸ்லீம் எஜுகேஷன், கிறிஸ்டியன் எஜுகேஷன், அல்லது இந்து எஜு

[1973 டிசம்பர் 5

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கேஷன், சைவ சித்தாந்த எஜுகேஷன் என்ற அளவுக்கு அந்தந்த மதக் கல்வியைக் கட்டுப்படுத்துகின்ற நோக்கத்தில் கொண்டு வரப்படவில்லை. எந்த சமுதாயத்தின் கலாசாரத்தைக் கட்டுப்படுத்துகின்ற அளவுக்கும், கலாசாரக் கல்வியை ஒழுங்குபடுத்துகின்ற அளவுக்கும், மதக் கல்வியைக் கட்டுப்படுத்துகின்ற அளவுக்கும் எந்த ஒரு விதியையும் வகுக்கவில்லை. கல்வி, கல்வியைப் பயிற்றுவிக்கின்ற பள்ளிகள், அரசாங்கம் விதித்திருக்கின்ற தேர்வு முறைக்கு, பாடத்திட்ட முறைகளுக்குத் தக்க முறையில் மாணவர்களை உருவாக்குவது, மாணவர்களைத் தேர்வுக்கு அனுப்புவது, இவைகளை ஒரு வரையறைக்குள் கொண்டு வருவதற்கு வழி வகுக்கின்ற அடிப்படையிலும், சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்ககளுக்கு பணிப்பாதுகாப்பு, பாதுகாப்பற்றிருந்தவர்களுக்குப் பாதுகாப்புத் தருவது என்ற அடிப்படையிலும் தான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மற்ற துறை
6-10 பி.ப. களில் பணியாற்றுகின்ற செகண்டரி கிரேட் ஆசிரியர்கள், பி.டி. பட்டம் பெற்றவர்களுக்கு இப்போது பாதுகாப்பு இருக்கிறது. அரசாங்கப் பள்ளிகளில் அவர்கள் நுழைந்தால் பாதுகாப்பு இருக்கிறது ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் நுழைவார்களானால், அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளில் நுழைவார்களானால், அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட பாதுகாப்பு தனியார் பள்ளிகளில் இல்லாத காரணத்தால்தான், இந்தச் சட்டம் வருகிறது. தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டுமென்பது தான் இந்தச் சட்டத்தினுடைய முக்கியமான நோக்கம். எந்த மதத்தினருடைய, சிறுபான்மையினருடைய பிரச்சினையைப் பொருத்தும் இந்தச் சட்டம் வரவில்லை. கல்வியை அடிப்படையாக வைத்துத்தான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற கருத்தில்லை. ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்தினருக்குமிடையே ஏற்பட்டிருக்கிற பல்வேறு கேடுபாடுகள், மாச்சரியங்கள் காரணமாக ஏற்பட்ட விளைவுகளை மனதில் கொண்டு, அந்தக் குறைபாடுகளுக்கு எதிர் காலத்தில் இடம் இருக்கக் கூடாதென்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். தனியார் பள்ளிகளில் இப்போது கட்டுப்பாடு பல்வேறு வழி முறைகளில் இல்லாமல் இருக்கின்றது. ஆசிரியர் நீதி பெற்றாலும், அதை நிறைவேற்ற முடியாத அளவுக்குப் பல்வேறு தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. அவர்களைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு, அரசாங்கத்திடம் சட்ட திட்டங்களும், அதிகாரங்களும் குறைவாக இருக்கின்றன. 6 ஆண்டுகள், 8 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கழிந்தும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத நிலை இருக்கிறது. ஆசிரியர்கள் தங்களுக்கு ஏதாவது குறைபாடுகள் ஏற்பட்டால், கல்வித் துறை அதிகாரிகளுக்கு எழுதி அனுப்ப வேண்டும்.

முதலில் மாவட்டக் கல்வி அதிகாரிக்கு எழுதி அனுப்பி, அதில் தீர்வு காண முடியாவிட்டால், தலைமைக் கல்வி அதிகாரிக்கு எழுத வேண்டும். அதிலும் தீர்வு காணமுடியாவிட்டால், பள்ளிக் கல்வி இயக்குநருக்கு



1973 டிசம்பர் 5]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எழுதி அனுப்ப வேண்டும். அதிலும் தீர்வு காண முடியாவிட்டால், கல்வித் துறைச் செயலாளருக்கு எழுத வேண்டும். அதற்குப் பிறகு கல்வி அமைச்சருக்கு எழுதி அனுப்ப வேண்டும். அதற்குப் பிறகு முதலமைச்சரை அணுக வேண்டும். இவற்றிற்குப் பிறகு, வழக்கு மன்றத்திற்குச் செல்ல வேண்டும். இந்தப் பயணங்களை நடத்துவதற்கு 6 அல்லது 7 ஆண்டுக் காலம் ஆகுமென்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆசிரியர்களிடத்தில் நியாயம் இருக்கிறது; நிர்வாகத்தினிடத்தில் நியாயம் இல்லை என்று கண்டறிந்து, மீண்டும் அந்த ஆசிரியர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்வாகத்தினிடத்தில் கூறினால், அவர்கள் அதற்கு மறுக்கிறார்கள். அப்படி அவர்கள், அந்த ஆசிரியர்களை எடுத்துக்கொள்ள மறுக்கும் நிலையில், நமக்கு இருக்கும் ஒரே வழி அங்கீகாரத்தைத் திரும்ப வாங்கிக்கொள்ளலாம் அல்லது மானியத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அந்த நிலைமையில் மானியத்தையும், அங்கீகாரத்தையும், திரும்பப் பெற்றுக்கொள்வதால், அந்த ஒரு ஆசிரியருக்காக, 30 அல்லது 40 ஆசிரியர்கள், வேலை இழக்கும் சூழ்நிலையும், 300 அல்லது 400 மாணவர்கள் படிக்க இயலாத சூழ்நிலையும் வருகின்றன. இப்போதிருக்கிற சட்ட திட்டங்களில் நிர்வாகத்தைக் கேட்பதற்கு இடமில்லை. இந்த நிலைமையில் ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்பீல் செய்து, ஸ்டே ஆர்டர் வாங்கி, அமைச்சர் வரையில் செல்வதற்கு வாய்ப்பு நிர்வாகத்திற்கும் இருக்கிறது. கீழ் மட்டத்திலிருந்து, உயர் மட்டம் வரையில், ஹைகோர்ட் வரையில் போகும் நிலையிருக்கிறது. அந்த வாய்ப்பு நிர்வாகத்திற்கும் இருக்கிறது. பல இடங்களில் நிர்வாகிகள் ஏழைகளாக இருக்கிறார்கள்; வசதி படைத்தவர்களும் இருக்கிறார்கள். எனினும் ஒரு தனிப்பட்ட ஆசிரியரை, நிர்வாகியோடு எடை போட்டுப் பார்த்தால் தெரியும். "நாம் சமாளிக்க முடியும்" என்ற வீம்புடன் அவர்கள் போக முடியும். ஆனால் சாதாரண ஆசிரியர், அந்த வீம்பினுடைய சவாலினாலே பல்வேறு நீதி மன்றங்களின் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிப் போக முடியாத தன்மைகள் இருக்கின்றன. ஆகவே விரைவாக நீதி கிடைக்க வேண்டும்; எந்தப் பகுதியினருக்கும் விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக முதலில் கல்வி அதிகாரிக்கு விண்ணப்பித்து அதில் தீர்வு ஏற்படாமல் போனால், டிரிப்யூனலுக்குப் போகலாம். அங்கே, அது அறுதி செய்யப்படும். ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால், நிர்வாகத்தின் மீது வழக்குத் தொடரலாம். அல்லது நிர்வாகத்திற்கு எதிராக ஆசிரியர்கள் சென்றாலும், வழக்குத் தொடரலாம். எனவே முக்கியமான அதிகாரிகளாக விதி முறைகளில் கூறப்பட்டுள்ளவர்களிடம் செல்லலாம்; அதற்குப் பிறகு ட்ரிப்யூனலுக்குச் செல்லலாம். அதனுடைய தீர்ப்பு இறுதியானது. எனவே அந்தப் பிரச்சினையை ஒரு குறிப்பிட்ட நேரத்திலே முடித்துவிடுவதற்கு இந்த மசோதாவில் இடம் ஏற்படுத்த முடிகிறது. அது மட்டுமல்லாமல், பிரச்சினை ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்திற்கும் தான். சிறுபான்மையினர் உரிமையைப் பறிப்பதென்பதல்ல. எப்படியென்று கேட்டால், தனியார் பள்ளிகளில் எல்லா சமூகத்தினரும் பணியாற்றுகிறார்கள். எல்லா சமுதாயத்தினரும் பணியாற்றுகிறார்கள். சிறுபான்மையினர் சில பள்ளிகளை நடத்துகிறார்கள். கிருஸ்துவர்கள் சில

[1973 டிசம்பர் 5

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பள்ளிகளை நடத்துகிறார்கள்; முஸ்லீம்கள் சில பள்ளிகளை நடத்துகிறார்கள். மொழியில் சிறுபான்மையினர் சில பள்ளிகளை நடத்துகிறார்கள். சமயத்தில் சிறுபான்மையினர் சில பள்ளிகளை நடத்துகிறார்கள். அரசியல் சட்டத்தில் மொழி சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பு இருக்கிறது; மத சிறுபான்மையினருக்கும் பாதுகாப்பு இருக்கிறது. அவர்களும் நடத்துகிறார்கள். சிறுபான்மையினரான முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள் தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகிறார்கள். சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளிலும் பணியாற்றுகிறார்கள். சிறுபான்மையினர் பள்ளிகளில் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே விண்ணப்பித்திருக்கிறார்கள். சிறுபான்மையினர் நிர்வாகிகளாக இருக்கிற பள்ளிகளில் பணி புரியும் சிறுபான்மையினரான ஆசிரியர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பல இடங்களுக்குச் செல்லுகிற காலத்தில்கூட, பல பள்ளிகளில் பணியாற்றுகிற முஸ்லீம்கள், கிருஸ்துவர்கள், சைவ சித்தாந்திகள், வைஷ்ணவர்கள் ஆனாலும் சரி, அவர்கள் அத்வைதிகள், துவைதிகள் ஆனாலும் சரி, அவர்கள் மதச் சார்புள்ளவர்கள் அல்லது பகுத்தறிவாளர்களானாலும் சரி, அவர்கள் இப்பிரச்சினையில் தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்த முறையில்தான் நாம் அணுகுகிறோம். எல்லோருக்கும் ஒரேவிதமான சட்டம் செய்ய வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கமாகும். ஆனால் அரசியல் சட்டத்திலே, சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வேண்டும்; அவர்கள் பள்ளிக்கூடம் வைக்க உரிமை உண்டு என்று இருக்கிறது. இந்த நாடு விடுதலை பெற்றபோது, அந்த மாச்சரியம் இருந்தது. இந்த நாடு விடுதலை அடைந்தபோது, சிறுபான்மையினரை பெரும்பான்மையினர் நசுக்கிவிடுவார்களென்ற பயம் இருந்தது. பாகிஸ்தான் பிரிவினை ஏற்பட்டதாலும் நவகாளி சம்பவங்கள் ஏற்பட்டதன் காரணமாகவும், அந்தச் சட்டத்தைப் புகுத்த வேண்டிய அவசியம், அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களுக்கு ஏற்பட்டதன் காரணமாக இது வந்தது. சிறுபான்மையினரின் உரிமைகள், கலாசாரங்கள் அழிந்துவிடுமென்ற காரணத்தாலே, அரசியல் சட்டத்திலே சிறுபான்மையினருக்கு சிலபல பாதுகாப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அறவே அவர்கள் அழிந்துவிடுவார்களோ என்பதன் காரணமாகத்தான், பள்ளிகள் வைக்க, நடத்த, நிர்வகிக்க அவர்களுக்கு உரிமையுண்டு என்று அரசியல் நிர்ணயச் சட்டம் கூறுகிறது. பொதுப்படையாக சட்டங்கள் இயற்றலாம். நான் தெளிவுபட முன்னரே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அரசியல் சட்டம் குறுக்கிடுமானால், அதை மீறின சட்டத்தை சட்ட மன்றங்களோ, பாராளுமன்றமோ நிறைவேற்ற முடியாது. அந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்து, அரசியல் சட்டத்தைத் திருத்தியதற்குப் பிறகுதான், இதைத் திருத்தலாம். இப்போதிருக்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டுத்தான் நாம் சட்டம் இயற்ற வேண்டும். மீறி நிறைவேற்றினால், இந்திய அரசாங்கம் தடுத்துவிடும். அப்படி மீறிக் கொண்டுவந்தாலும், ஹைக்கோர்ட் இதை அடித்துவிடலாம். அந்தக் காரணத்தின் அடிப்படையில், சிறுபான்மையினரின் உரிமைகள் காப்பாற்றப்பட வேண்டு மென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து,



1973 டிசம்பர் 5]

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சட்டத் துறை ஆராய்ந்து, சட்ட அமைச்சரவர்கள் ஆராய்ந்து, பல்வேறு வகையில் 2, 3 ஆண்டுகள் சிந்தித்து, கல்வித் துறைச் செயலாளர் மத்திய அரசு அதிகாரிகளைக் கண்டு பேசி, வேறு பல மாநிலங்களில் ஏற்பட்டுள்ள சட்டங்களை ஒப்பிட்டுப் பார்த்து, கேரளாவில் கொண்டுவந்த சட்டம் ஏன் தோற்றது என்பதைக் கண்டறிந்து, குஜராத் போன்ற மாநிலங்களில் உள்ள சட்டங்களில் இந்தப் பிரிவை எவ்வளவு ஜாக்கிரதையாகப் போட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, அந்த ஜாக்கிரதையை நாமும் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பிறகு ஒரு திருத்தம் கொண்டு வருவது நல்லதென்று கூட்டு ஆய்வுக் குழுவில் நிலைமைகளை விளக்கி, ஆசிரியர்களுக்குப் பணிப்பாதுகாப்பு முறைகள் வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். அரசியல் நிர்ணயச் சட்டத்தின் உரிமைக்கு நாம் மதிப்பு அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில், நாம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம். எனவே சிறுபான்மையினர் பள்ளிகள் நடத்த அனுமதி வாங்க வேண்டுமென்ற பிரிவை இப்போது எடுத்திருக்கிறோம்.

ரெகக்னிஷனைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்பது விவாதத்திற்கு வராத காலத்தில், இப்போதுள்ள எம்.இ.ஆர். இயற்றப்பட்டது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அதற்கென்று உரிமைகள் தரப்பட்டு, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் சிலபல வழக்குகளின் தீர்ப்பு வந்த பிறகுதான், சட்டங்கள் இயற்றுவதும், விதிகள் செய்வதும் நமக்கு ஏற்பட்டது. எம்.இ.ஆரைப் பொறுத்தவரையில், துவக்கப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள் வைக்க வேண்டுமென்றால், அனுமதி பெற வேண்டுமென்பது ஏற்கனவே இருக்கிறது. சிறுபான்மையினர் பள்ளிகளானாலும், எம்.இ.ஆர்.-ன்கீழ் அனுமதி பெற்றுத்தான் நடந்து கொண்டிருக்கின்றன. அத்தனை சிறுபான்மையினர் பள்ளிக்கூடங்களும் சென்னை மாநிலக் கல்விச் சட்டத்தின் அடிப்படையிலே அனுமதி பெற்றுத்தான் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அது மட்டுமல்லாமல், இப்போது இருக்கின்ற அவ்வளவு பள்ளிகளும் அங்கீகாரம், ரெகக்னிஷன் பெற்றுத்தான் நடைபெற்று வருகின்றன. அரசாங்கத்தினுடைய மான்யத்தை முறைப்படி பெற வேண்டும். அங்கீகாரம் பெறுவதற்கு என்னென்ன சட்டதிட்டங்கள் வகுத்திருக்கின்றோமோ, சென்னை கல்விச் சட்டத்திலே, எம்.இ.ஆர். ரூல்ஸில், அந்த சட்டதிட்டத்திற்குட்பட்டுத்தான் பெற வேண்டும். இது வரையிலும் அங்கீகாரம் பெற்றுத்தான் பள்ளிகளை நடத்துகின்றார்கள். சிறுபான்மையினர், பெரும்பான்மையினர், பிரைவேட் ஸ்கூல்ஸ், உதவி பெற்று இருக்கின்ற பள்ளிகள், உதவி பெறாத பள்ளிகள் இப்படி யெல்லாம் பாகுபாடே அதிலே இல்லை. தனியார் பள்ளிகளும் அங்கீகாரம் பெற்று, மானியம் பெற்று இந்த விதி முறைகளுக்குக் கீழே இருந்து வருகின்றன. நடந்து வருகின்றன. ஆனால் இப்போதிருக்கின்ற இந்தச் சட்டத்திலே அதைக் கட்டுப்படுத்த சட்டமில்லை. அரசுக்கு அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரம் எப்போதும்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இருக்கின்றது. மான்யத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்கின்ற அதிகாரமும் அப்போதிலிருந்தே இருக்கின்றது. அதன்படியே அந்தந்த பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. இப்போதும் அந்த விதிமுறைகளை அனுசரித்துத்தான் அவ்வளவு பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. அவர்கள் தாறுமாருக, ஏறுமாருக, அடிப்படை உரிமைகளுக்கு, நேச்சுரல் ஜஸ்டிஸ்க்கு, நீதிக்குப் புறம்பாக நடந்தால், அதற்காக நடவடிக்கை எடுப்பதற்கான விதிமுறைகளும் இருக்கின்றன. அதன்படி ரெகக்னிஷனை நிறுத்துகின்ருேம். ஆனுல் இவர்கள் பர்மிஷன் வாங்கித்தான் நடத்த வேண்டும். அங்கீகாரம் வாங்கித்தான் நடத்த வேண்டும் என்று இருந்தாலும், நானும் கிட்டத்தட்ட 6 ஆண்டுகளாக கல்வி அமைச்சராக 6-20 பி.ப. தொடர்ந்து இருந்துக் கொண்டிருக்கின்றேன், இந்த 6 ஆண்டு காலத்தில் இப்படி அங்கீகாரம் வாங்கித்தான் நடத்த வேண்டும் என்ற காரணத்திற்காகவேண்டி எந்த சிறுபான்மையினர் பள்ளியினரும் இதுவரை குறையிருப்பதாக மனுக்கள் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படவில்லை. நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே தகராறுகள் ஏற்படுவது, நிர்வாகம் ஏற்றுக் கொள்ளாமலிருப்பது அல்லது அவர்கள் வேண்டுமென்றே சில ஆசிரியர்களை வஞ்சக எண்ணம் கொண்டு நீக்கிவிடுவது—இவைகள்தான் இருக்கின்றன. இரு சாராரிடத்திலும் தவறுகள் இருக்கின்றன. இரு சாராரிலும் நல்லவர்கள் இருக்கின்ருர்கள். இரு சாராரிலும் பொல்லாதவர்கள் இருக்கின்ருர்கள். இந்த இரு சாராருக்கும் நீதி வழங்க வேண்டுமென்ற நிலைமைகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலைகளை நீக்க வேண்டிய அளவில் அரசு இருக்கின்றது என்பதை இந்த வாய்ப்பில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்போதும் நான் எடுத்துச் சொல்கின்றேன். விதிகள் வகுக்கப்படுகின்றபோது, சிறுபான்மையினர் நலன்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலைகள் ஏற்படுமேயானுல், இருக்கின்ற விதிகளின்படி, சிறுபான்மையினர் நலன்களை பாதிக்கின்ற அளவுக்கு, அரசியல் சட்டத்தின் 30 (1) விதியினை மீறுகின்ற அளவுக்கு இருந்தால், எதையெதைச் செய்ய வேண்டுமென்பதற்கு அரசு ஆயத்தமாக இருக்கிறது என்கின்ற உறுதிமொழியைத் தருகின்ருேம். அந்த உறுதிமொழியின் அடிப்படையிலேதான் இந்தச் சட்டத்தினைக் கொண்டு வந்திருக்கின்ருேம். அது மட்டுமல்லாமல், கலாச்சாரப் பள்ளிகளைப் பொறுத்தவரையிலே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன், விதிவிலக்கு தந்திருக்கின்ருேம் என்று. மதக் கல்வி போதிக்கிறதாக இருந்தாலும், கலாச்சாரக் கல்வி போதிக்கின்றதாக இருந்தாலும், கிருத்துவ பாதிரிமார்களை வளர்க்கின்ற பள்ளிகளாக இருந்தாலும், நாம் கட்டுப்படுத்துகின்ற நிலை இல்லை. இந்த மாதிரி முஸ்லீம் மதபோதகர்களை வளர்க்கின்ற பள்ளிகளாக இருந்தாலும், முஸ்லீம் மத போதனை அளிக்கின்ற பள்ளிகளாக இருந்தாலும், அவைகளைக் கட்டுப்படுத்துகின்ற நிலைமையில்லை. இப்போது நாம் ஏற்படுத்தியிருக்கின்ற நிலைமை ; அந்தந்த தனியார் பள்ளிகள் சமய போதனையை அளிக்கலாம். இதன்படி அந்தப் பள்ளியிலே சொல்லிக் கொடுக்கின்ற சமய போதனைகளை அந்தப் பள்ளியிலே படிக்கின்ற அத்தனை பேருக்குமே கட்டாயமாகச் சொல்லிக்கொடுத்துவிட முடியாது. அந்தந்த சமயத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் அந்தந்த சமயபோதனையை அளிக்க





[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

லாம். அப்படி அந்தக் குறிப்பிட்ட சமயத்தைச் சேராதவர்களாக இருந்தால், அவர்களுக்கும் சேர்த்து அளிக்க வேண்டுமென்ருல், பெற்ருேர்களின் சம்மதம் பெற்றுத்தான் அளிக்க வேண்டும். அதன்பேரில்தான் அவர்கள் பைபிளையோ, குரானையோ மற்ற சமயத்தினருக்கு அளிக்கலாம். அதே மாதிரி கிருத்துவருக்கோ, முஸ்லீம்களுக்கோ பகவத் கீதையைச் சொல்லலாம். ஆக அந்தந்த சமயத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தான் அந்தந்த போதனையை அளிக்கலாம். இந்த போதனைகளை அளிப்பதென்ருலும், ரெகுலர் பீரியடிலே இல்லாமல், அவுட் ஆப் தி பீரியடிலேதான் அந்த போதனைகளை அளிக்கலாம் என்று இப்போது விதித்திருக்கிருேம். அதையும்கூட அந்தப் பள்ளிகளை நடத்துபவர்கள் அதிகாரிகளினுடைய பர்மிஷன் பெற்று நடத்த வேண்டும். இப்படியெல்லாம் விதிகள் இருக்கின்றன. இப்போது நாம் வகுக்கின்ற விதிகளிலே அது இணைக்கப்படும். அந்தந்த சமயத்தினருக்கு அந்தந்த சமய போதனையைச் சொல்லிக் கொடுப்பதை இந்தச் சட்டம் எந்த வகையிலேயும் தடுக்காது. அதேமாதிரி இப்போதிருக்கின்ற சென்னை கல்விச்சட்டத்திலே என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ, என்னென்ன பாதுகாப்புகள் இருக்கின்றனவோ, அவைகளை எடுத்து விடுகின்ற நோக்கம் இந்தச் சட்டத்தின் அடிப்படையிலே இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே சிறுபான்மையினருடைய உரிமையைப் பறிக்க வேண்டுமென்பதில்லை. இன்னும் சொல்லப் போனுல், இப்போது பெர்மிஷன் வாங்க வேண்டுமென்று போட்டிருப்பதன் காரணமே இந்த அரசியல் சட்டத்தினுடைய அடிப்படையிலேதான் என்று சொல்லிக்கொள்கிறேன். எல்லாப் பள்ளிகளையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டால் நல்லது அல்லவா என்று மற்றவர்கள் எடுத்துச் சொன்னுர்கள். சிறுபான்மையினர் பள்ளிகள், மற்ற பள்ளிகள் இவைகளையெல்லாம் எடுத்துக்கொள்வது என்கின்றபோது, அதை அரசியல் சட்டத்தின் 30 (1) விதி தடுத்து நிறுத்துகிறது. அப்படி எல்லாப் பள்ளிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ருல், தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறிப்பிட்ட மாதிரி, அவர்கள் நடத்துகின்ற பள்ளிகளைத்தான் எடுத்துக் கொள்ள முடியுமே தவிர, சிறுபான்மையினர் பள்ளிக்கூடங்கள், மற்ற தனியார் பள்ளிக்கூடங்கள் எல்லாம் . விட்டுப்போய்விடும். அதுபோல் இந்தச் சட்டத்தின்மூலம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணினுலும், தனியார் பள்ளிகளைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படும். இப்போது இருக்கின்ற நிலைமைகளைப் பார்ப்போமேயானுல், 2,766 உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. மிஷன்கள் நடத்துகின்ற பள்ளிகள் 235 உயர்நிலைப் பள்ளிகள். மிஷன்கள் நடத்துவது அல்லாத பள்ளிகள் 589 உயர்நிலைப் பள்ளிகள். ஆக மொத்தம் 814; இதைத் தவிர 35 ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள் இருக்கின்றன. இவைகள் தனியார் நடத்துகின்றவைகள், மற்றவர்கள் நடத்தும் பள்ளிகள் ஆயிரத்து தொள்ளாயிரம் சில்லரைப் பள்ளிகள் அரசாங்கத்தின் பள்ளிகளாகவும், நகராண்மைக் கழகப் பள்ளிகளாகவும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளாகவும், மாநகராட்சிப் பள்ளிகளாகவும் இருந்து வருகின்றன. நடுநிலைப்பள்ளி, துவக்கப்பள்ளி, இவைகளின் எண்ணிக்கை 32 ஆயிரம்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சில்லரை. இதில் 22 ஆயிரம் சில்லரைப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்கள், மாநகராட்சிப் பள்ளிகள், மற்றவைகள் நடத்துகின்ற பள்ளிகள்தான். மற்ற பள்ளிகளில் நடுநிலைப் பள்ளிகளிலே 790 மிஷன் நடத்துகின்ற பள்ளிகள். மிஷன் அல்லாதவை 1,262 பள்ளிகள் நடத்துகின்றன. மிஷன் நடத்துகின்ற பள்ளிகள், துவக்கப் பள்ளிகள், 2,014. மிஷன் அல்லாதவை நடத்துகின்ற பள்ளிகள் 3,090 பள்ளிகள். எல்லாப் பள்ளிகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சட்டமியற்றினாலும்கூட, மிஷன் நடத்துகின்ற இந்த 790-ல் கை வைக்க முடியாது. மற்ற 1,262 பள்ளிகளை எடுத்துக் கொள்ளலாம். அப்போது மிஷன் பள்ளிகள் தங்கிவிடும். இப்போது வளர்ந்திருக்கின்ற நிலையைப் பார்த்தால், 32 ஆயிரம் சில்லரைப் பள்ளிகளில் 22 ஆயிரம் சில்லரைப் பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள், நடத்துகின்ற பள்ளிகளாகத்தான் இருக்கின்றன. இந்த ஆயிரத்து தொள்ளாயிரத்து சில்லரைப் பள்ளிகள், மற்ற அரசாங்கப் பள்ளிகள், மாநகராட்சி மன்றங்கள் நடத்துகின்ற பள்ளிகள் இவைகளை ஒப்பிடும்போது குறைவான அளவாகத்தான் இருக்கின்றன. இந்தச் சட்டதிட்டங்களை ஒழுங்குப்படுத்துகிற நோக்கத்தின் அடிப்படையிலேதான் கொண்டுவந்திருக்கின்றோம்.

மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ஆதரித்தார்கள். நிர்வாகக் குழு அமைப்பது பற்றி எடுத்துச் சொன்னார்கள். முதலிலே பால் கமிட்டியினர் ஒரு குறிப்பு தந்திருக்கின்றார்கள். முதல் சட்டத்திலே நாங்கள் ஒரு குறிப்பு தந்தோம். அதற்குப் பிறகு நம்முடைய நோக்கம் எல்லாம் நிதியைப் பொறுத்த அளவிலே ஸ்கூல் கமிட்டி என்று ஒன்று அமைப்பது பற்றியது. அதற்கு நாங்கள் கூட்டு ஆய்வுக் குழுவிலே யோசித்தபோது மானேஜிங் கமிட்டி என்று வைப்பதா என்று எண்ணினோம். மானேஜிங் ஏஜென்சி இருப்பதனால், அதனுடைய ஸ்கூல் கமிட்டி என்று வைக்கலாம் என்று ஏகமனதாக எண்ணினோம். பிறகு பள்ளிக்கூடத்தைப் பொறுத்து, அதன் தரத்தைப் பொறுத்து, நிர்வாகத்தைப் பொறுத்து, ஆசிரியர்கள் நியமிப்பது, ஆசிரியர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது ஆகிய பிரச்சினைகளைக் கவனிக்க ஸ்கூல் கமிட்டி இருக்கும். நிதி, சொத்துக்கள் ஆகியவற்றைக் கவனிக்க மானேஜிங் ஏஜென்சிக்குத்தான் உரிமையிருக்கின்றது என்ற அளவுக்கும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக அந்தக் குழுவை அமைக்கின்ற உரிமை அந்த மானேஜிங் ஏஜென்சிக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இதைச் சட்டத்தின் மூலமாகவே வற்புறுத்துவது அல்லது அமைப்பதென்றால், அந்தப் பள்ளியில் இருக்கும் தலைமையாசிரியர் இடம் பெறாமல் போய்விடுவார். ஆசிரியர்கள் பிரதிநிதியோ அல்லது தலைமையாசிரியரோ அதில் இருக்க வேண்டுமென்றுதான் நாம் விதி போட்டிருக்கின்றோம். எவ்வளவு பேர் இருக்க வேண்டும் என்பது அந்தந்த பள்ளி மாணவர்கள்—ஆசிரியர்கள் எண்ணிக்கையைப் பொறுத்திருக்கிறது. 2, 3 பேர்களே இருக்கின்ற துவக்கப் பள்ளிகளும் இருக்கின்றன. 27, 30, 40 பேர்கள் இருக்கின்ற பள்ளிகளும் இருக்கின்றன. எல்லோருக்



[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கும் ஒரே விதமான விதிகள் சட்டத்திலே கொண்டுவருவது முடியாது. இந்த விதிகளைப் பொறுத்த வரையில் அந்தக் குழு எப்படி அமையும்? எப்படி அமைந்தால் இங்கே கோரப்படுகின்ற கருத்துக்களை ஒன்றாக ஆக்கிக் கொள்ளக்கூடும், அந்த விதிகளில் எப்படி சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை நாம் விவாதிக்கலாம். இந்த விதிகள் சட்ட மன்றத்தின் முன்னால் வைக்கப்படும்போது, இந்த விதிகளின்மீது விவாதம் நடத்த சட்ட மன்றப் பேரவைக்கும், மேலவைக்கும் உரிமையிருக்கிறது. இந்த விதிகளிலே திருத்தங்கள் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினால், அப்போது கொண்டுவருவதற்கு உரிமையிருக்கிறது. அந்த கூட்டத்திலேகூட கலந்து பேசி இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது. அப்போதும்கூட எந்த வகையிலாவது யாராவது ஒருவருடைய நலன்களைப் பாதிக்கின்ற நிலைமையிருக்கிறது என்று சுட்டிக்காட்டப்படுமேயானால், அதைப்பற்றிக் கலந்து பேச அரசு ஆயத்தமாகக்கூட இருக்கின்றது. அப்படியே சட்டங்கள் கொண்டுவரும்போது விவாதிக்க இடமிருக்கிறது. அதிலேயும் திருத்தங்கள் கொண்டுவருவதற்காக வழிவகைகள் இருக்கின்றன. எல்லாவற்றையும் உள்ளடக்கி சட்டத்திலே கொண்டு வர முடியாது. இதையெல்லாம் சட்டத்திலே கொண்டுவருவதைவிட விதிகளிலே கொண்டுவருவது எளிது. ஆகவே விதிகளிலே நாம் கொண்டு வரலாம். அரசியல் நிர்ணயச் சட்டத்தினுள்ளபடி உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மற்ற வகைகளில் நிர்ணயிப்பது அந்தச் சட்டத்தில் தலையிட்டதாகும் என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளதன் பேரில் இப்படி இந்த விதிகளிலே சேர்ப்பது என்று வைத்திருக்கிறோம். இந்த விதிகளிலே இந்த எண்ணங்கள் எல்லாம் கவனிக்கப்படும் என்று நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**Thiru G. SWAMINATHAN**: **"Every person holding office as president, secretary, manager or correspondent of a private school or exercising the powers of secretary under this Act on the date of commencement of this Act shall be deemed to be a secretary under this Act".** தற்சமயத்தில் யார்யார் செயலாளர்களாகவோ, மானேஜர்களாகவோ தலைவர்களாகவோ இருக்கிறார்களோ, அவர்கள் செயலாளர்களாக தற்போது இருப்பார்கள் என்று போட்டிருக்கிறது. தற்போது இருக்கக்கூடிய செயலாளர்களிலே யாராவது ஒருவர் இறந்து அவருக்குப் பிறகு யாராவது ஒருவர் செயலாளராகவோ, தலைவராகவோ வருகிறார் என்றால், மறுபடியும் அவர்கள் வருவார்களா? இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் கவனித்துப்பார்த்தார்களா அல்லது பார்க்கவில்லையா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்தச் சட்டத்திலே கொண்டுவராவிட்டாலும்கூட விதிகளில் கொண்டு வந்து விடலாம். எவ்வளவு ஆண்டுகளுக்கு ஒரு முறை குழு மாற வேண்டும், மறுபடியும்

[1973 டிசம்பர் 5

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

புதுப்பிக்கப்பட வேண்டுமா என்பதையெல்லாம் விதி முறைகளை ஆராய்ந்து நடைமுறைக்குக் கொண்டுவருகிறபோது சிக்கல்கள் இருந்தால், தீர்த்துக் கொள்ளலாம் அல்லது மாற்றிக் கொள்ளலாம்.

பள்ளிகளை எடுத்துக் கொள்வது என்று சொல்கிற போது, சாதாரண காரணங்களுக்காக எடுத்துக் கொள்கிற நிலைமை ஏற்படவில்லை. விதி முறைகளையெல்லாம் பேசிப் பார்த்து, எழுதிப் பார்த்து, பதில் கேட்டுப் பார்த்து, அதற்குப் பிறகு விளக்கிப் பார்த்து, பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு, ஆசிரியர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்கியும் பார்த்து, அதி லேயும் திருந்தாவிட்டால், சம்பளத்தை நிறுத்திப் பார்த்து, அங்கீகாரத்தை
6-30 பி.ப. நிறுத்திப் பார்த்து, அதற்குப் பிறகு எடுக்க வேண்டிய கட்டங்கள் இருந்து, நடவடிக்கை எடுத்தாலும் கூட, அரசாங்கம் எடுத்த நடவடிக்கை தவறு என்று மேல்முறையீடு செய்வதற்கான உரிமை இருக்கிறது. டிரிப்யூனலுக்கு "ஸ்டே" பண்ணி, இதை விசாரிப்பதற்கு உரிமை இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்வதற்கு, அல்லது புறக்கணிப்பதற்கு உரிமை இருக்கிறது. அப்படியே எடுத்துக் கொள்கிற சூழ்நிலை இருந்து, டிரிப்யூனல் அங்கீகரித்து எடுத்துக் கொண்டாலும், கடைசி வரை எடுத்துக் கொள்கிற சூழ்நிலை இல்லை. இரண்டு ஆண்டுக் காலம் எடுத்துக் கொள்கிற சூழ்நிலை இருக்கிறது. நிலைமைகள் சீர்பட்டு விட்டன. நிர்வாகத்திடம் ஒப்படைக்கலாம்' என்ற எண்ணம் ஏற்பட்டால், இரண்டு ஆண்டு காலம் காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. 1 ஆண்டு அல்லது $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்தில் திருப்பி ஒப்படைக்கலாம். இரண்டு ஆண்டுச் காலத்திலும் சீர்திருத்த முடியவில்லையென்றால், அதற்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டாக 5 ஆண்டுக் காலம் வரையிலும் எடுத்துக் கொள்ளலாம். 5 ஆண்டுகளுக்குப் பிறகு கட்டாயம் அந்த நிர்வாகத் திடத்தில் ஒப்படைக்க வேண்டும். என்றென்றும் அரசாங்கம் எடுத்துக் கொள்கிற சூழ்நிலை அல்ல. நிர்வாகத்தை அடியோடு தொலைத்து விட்டு எடுத்துக் கொள்ளுதல் என்பதல்ல. உடனடியாக ஆசிரியர்களை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது என்ன நடக்கிறதென்றால், சில பல நிர்வாகிகள் அரசாங்க உத்தரவுகளை நிறைவேற்றாமலிருக்கிறார்கள். பல ஆசிரியர்களுக்கு 8 மாதம், 9 மாதம் சம்பளம் கிடைக்காமல் இருக்கிறது. நாம் கிராண்டு வழங்காமலிருக்கிறோம். ஒரு ஆசிரியரின் குற்றத்திற்கு 8 ஆசிரியர்கள், 10 ஆசிரியர்கள் சம்பளம் வாங்காத நிலை இருக்கிறது. இப்படி எடுத்துக் கொள்கிற சூழ்நிலையில் இரண்டு ஆண்டுக் காலம் எந்த ஆசிரியர்களும் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களுக்குச் சம்பளம் போய்க் கொண்டே யிருக்கும். இந்த விதி முறைகளை எடுத்த எடுப்பிலேயே நீக்கி விட்டால், ஆசிரியர்களுடைய உரிமையை பாதுகாக்கிற நிலைமையாக இராது. முதலில் சொன்னபடி, இதன் மூலமாக இரண்டு பேர்களுக்கும் ஒழுங்கு முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. நிர்வாகத்திற்கும், ஆசிரியர்களுக் கும் ஒழுங்கு முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதற்குள் காரியங் கள் நடைபெற வேண்டுமென்று கூறியிருக்கிறோம். இதில் மாச்சரியம்



1973 டிசம்பர் 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வர நியாயமில்லை. இதைப் பேரவையில் சொல்லியிருக்கிறேன். இங் கேயும் சொல்லியிருக்கிறேன், மாண்புமிகு திரு சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாப் பள்ளிகளிலும் இருக்கின்றன என்று நான் சொல்ல வரவில்லை. சுமுகமான முறையில் எவ்வளவோ பள்ளிகள் நடக்கின்றன. சுமூகமாக நடக்காத பள்ளி களை ஒழுங்கு படுத்தத்தான் இது செய்யப்படுகிறது. மாண்புமிகு திரு சக்திமோகன் சொல்லிய மாதிரி ஒழுங்காக, சட்ட திட்டத்திற்குட்பட்டு நடைபெற்று வருகிற பள்ளிகள் எதையும் இந்தச் சட்டம் பாதிக்காது. ஒழுங்கு மீறி வேறு பல வகைகளில் முரண்பட்டு நடக்கிற பள்ளிகளைப் பாதிக்கிற அளவிற்கு அவர்கள் தான் அஞ்ச வேண்டும். அவர்களையும் சீர்திருத்தி, நல்ல நிலைக்குக் கொண்டு வரும் நோக்கத்தோடு வைத் திருக்கிறோம். ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையில் சுமூகமான உறவை ஏற்படுத்தவும், பிரச்சினைகள் விரைவாகத் தீரவும், தெளிவில்லாத நிலைமையை மாற்றி, தெளிவான நிலைமையைக் கொண்டு வரவும் வசதி செய்கின்ற அளவிற்கு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்கிறேன். யாருடைய நிர்வாகத்தையும் பாதிக்கிறதாக இல்லை. ஒழுங்கிற்குக் கட்டுப்பட்டு நடக்கிற யாரும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை. ஒழுங்கிற்கு அடங்கி நடக்கிறவர்கள் பாதிக்கப் படமாட்டார்கள். ஒழுங்கை மீறுகிறவர்கள் சீர்திருத்தப்படுவார்கள். அவர் களும் அறவே பாதிக்கப்படுவார்கள் என்பதல்ல. இங்கே பல்வேறு திருத்தங்களைத் தந்திருக்கிறார்கள். இங்கே நான் சிலபல விளக்கங்களைத் தந்திருக்கிற காரணத்தினால், எந்த வித அச்சங்களுக்கும் மற்றவை களுக்கும் இடமில்லை என்பதை எடுத்துக் கூறி பாதிக்கப்படுகிற நிலைமை இல்லை என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறிக் கொள்கிறேன். எந்த சமயத்திலும் திருத்தம் கொண்டுவரக்கூடிய சட்டங்கள் தான். மாண்பு மிகு திரு முத்துசாமி அவர்கள் சொன்ன மாதிரி ஆசிரியர் களுக்குப் பாதகம் ஏற்பட்டாலும் சட்டத்தைத் திருத்துவதற்கு வழி முறை கள் இருக்கின்றன. அப்படியே நிர்வாகிகளுக்குப் பாதகம் ஏற்பட்டாலும், திருத்துவதற்கு வழி முறைகள் இருக்கின்றன. விதி முறைகள் வரும்போது திருத்திக்கொள்ள வழி முறைகள் இருக்கின்றன. இந்த மசோதா விரைவிலே நிறைவேற்றப்படுமானால், இதன் மூலமாக நாம் ஓரளவிற்கு நல்ல ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு வழி ஏற்படும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நோக் கத்தை ஆதரித்ததற்காக நன்றி தெரிவித்து, இதைச் சட்டமாக்க பெரும் உதவியைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் நிறையும் குறையும் இருக்கலாம். குறையைக் களைந்து, குற்றத்தைப் போக்கி, நிறையை எய்தி சட்டத்தை நிறைவேற்ற ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை :

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவைசட்ட முன்வடிவு எண் 24/72) ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

பிரிவு 2.

THIRU K. S. GANAPATHI : Sir, I move the following amendments :

" In clause 2, sub-clause (3) (b), *add* the following at the end :—

'and administer such private school'."

" In clause 2, sub-clause (6), *delete* the words 'or administered'."

திரு செ. முத்துசாமி ; திருத்தங்களை வழிமொழிகிறேன்.

திரு கே.எஸ். கணபதி ; தலைவரவர்களே, மைனாரிட்டி ஸ்கூல் என்பதற்கு விளக்கம் கொடுக்கும்போது,

'any minority school means any person who, or body of persons which, has established and is administered or proposals to establish and administer such minority school' என்று இருக்கிறது. Constitutional provision-ம் கொடுக்கப்பட்ட படி இருக்கிறது. கிளாஸில் மற்றப் பள்ளிகளை விளக்கும்போது,

'any other private school means any person or body of persons permitted or demand to be permitted under this Act to establish and maintain such other private school' என்று இருக்கிறது. அங்கே 'establish and administer' என்று இருக்கிறது. மற்றப் பள்ளிகளுக்கு 'establish and maintain' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'அட்மினிஸ்ட்ர்' என்பதற்கும் 'மெயின்டெயின்' என்பதற்கும் பொருள் வேறுபாடு மிகுதியாக உள்ளது. அந்த அடிப்படையிலே, சிறுபான்மை யினர் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படும் அதே உரிமையை மற்றப் பள்ளி களுக்கும் கொடுப்பதில் எந்தவிதச் சட்ட இடையூறும் கிடையாது. ஆகவே இந்தத் திருத்தத்தை அவை ஏற்றுகொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, 'minority school' means a private school of its choice established and administered, or administered' என்று இருக்கிறது. இதிலே 'or administered' என்ற வார்த்தைகள் சர்ச்சைக்குரியவை. ஏனென்றால், நான் முன்னரே சொல்லியபடி, சிறுபான்மையினரல்லாதவர்



அமைத்துள்ள ஒரு பள்ளியை, சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த ஒருவர் ஏற்று நடத்துவாரானால், 'or administer என்று இருக்கிற படியால், அது சிறுபான்மையினர் ஏற்று நடத்துவதாலேயே இப்படி ஏற்பட்டுவிடுகிறது. Supreme Court—லே

'The words "establish and administer" must be read together and they show that the minority will have the right to administer educational institutions of their choice provided they have established them but not otherwise' என்று specific-ஆகச் சொல்லியிருககிறார்கள்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, பிரிவு பிரிவாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறதா அல்லது திருத்தங்கள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றனவா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரிவு பிரிவாகத் தான் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது

திரு கே. எஸ். கணபதி : ஆகையினாலே, அவர்களே ஏற்படுத்தி, நிர்வகித்தால் தான், இந்த உரிமை உண்டே தவிர, மற்றப் பள்ளி களை அவர்கள் ஏற்று நடத்துவதால் இந்த உரிமை வராது. " ஆர் அட்மினிஸ்டர்டு " என்ற வார்த்தைகள் சேர்க்கப்பட்டுள்ளன. அந்த 7·20
வார்த்தைகளை விலக்கிவிட வேண்டும் என்பதற்காகவே திருத்தம் கொண்டு பி.ப.
வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது உறுப்பினர் திரு கணபதி அவர்கள் இரண்டாவது விதிக்கு இரண்டு திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். முதல் திருத்தம் "and administer such private schools" என்று சேர்க்க வேண்டும் என்பது. தனியார் பள்ளிகளை நிறுவுவதற்கும் பராமரிப்பதற்கும் இப்போதுள்ள (3) (பி) உட்பகுதி வகை செய்கிறது. அதுவே போதுமானது. அவர் கூறும் சொற்றொடரைச் சேர்க்க வேண்டிய தேவையில்லை.

இரண்டாவது திருத்தம் அதே பிரிவில் 6-வது துணை விதியில் " or administered " என்ற சொற்றொடரை நீக்க வேண்டும் என்பது. சிறுபான்மையினரால் நிறுவப்பட்டு நிர்வகிக்கப்படுகின்ற தனியார் பள்ளிகளையும் அல்லது சிறுபான்மையினரால் நிர்வாகம் மட்டும் செய்யப் படுகின்ற தனியார் பள்ளிகளையும் உள்ளடக்கும் வகையில் இப்போதுள்ள உட்பகுதி (பி) அமைந்துள்ளது. ஆகவே அந்தச் சொற்றொடரை நீக்கி விட்டால், இந்தப் பகுதியின் செயல் வரம்பு குறைந்து விடுகிறது. எனவே அதை நீக்கம் செய்ய வேண்டிய அவசியமில்லை, திருத்தமும் தேவை யில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருத்தங்களை வற்புறுத்துகிறாரா?

திரு கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, எனது திருத்தங்களை வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை.—

"In clause 2, sub-clause (3) (b), *add* the following at the end :

'and administer such private school'.

In clause 2, sub-clause (6), *delete* the words 'or administered'."

திருத்தங்கள், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றன.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 3 முதல் 5 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 6

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:—

"In clause 6 (*b*), *for* the words 'shall communicate its decision to the applicant' *substitute* the words 'shall communicate its decision with reasons to the applicant.'"

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நான் வழிமொழிகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, அதிகாரி தனது முடிவை வழங்குகிறபோது, அந்த முடிவை மட்டும் தெரிவித்தால் போதும் என்று இருப்பதற்குப் பதிலாக, காரணம் காட்டி முடிவை அறிவிக்க வேண்டும் என்பதற்காகவே இந்தத் திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தகுதி வாய்ந்த அதிகாரி முடிவு செய்ய வேண்டும் என்று ஏற்கெனவே 6(பி) பகுதியில் சொல்லப்பட்டது. அவசியமான இடங்களில் காரணங்



கள் கூறப்படும். தகுதி வாய்ந்த அதிகாரிகள் பிறப்பிக்கும் ஆணைகளுக்கு எதிராக மேல் முறையீடு செய்து கொள்வதற்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் விதிகளில் இவைகளுக்கான நிலைமைகள் எல்லாம் வரும். ஆகவே அந்த வகையில் இந்தத் திருத்தம் அவசியமில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : விதிகளில் வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவதால், நான் எனது திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

திருத்தம் அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 6, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 7, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 8

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I move the following amendments :—

"In clause 8, *delete* sub-clause (1) (c)."

"In clause 8, sub-clause (1) (d), *delete* the words 'or clause (*c*)'."

The amendments were duly seconded.

THIRU G. SWAMINATHAN : Sir, clause 8 (1) (*b*) says, "whenever the management of any private school is proposed to be transferred, the educational agency and the person to whom the management is proposed to be transferred may, before such transfer, apply jointly to the competent authority for approval of the transfer." It means that before transfer, approval should be obtained from the competent authority. But sub-clause (1)(c) says : "On any transfer of the management of private school, without approval having been obtained for such transfer under clause (*b*), the transferee shall, if he desires to run it as such, apply to the competent authority within three months of the date of the transfer for approval of the transfer." This means that the transfer could be made even without the approval of the competent authority. My opinion is that they should not be allowed to transfer without the permission of the authority. Here, in sub-clause (1)(c), we merely say that he should apply to the competent authority within three months

(Thiru G. Swaminathan)

of the date of the transfer for approval of the transfer. Thus we give the option to them to effect the transfer without getting the permission of the competent authority and then apply for approval. This seems to be incongruous with the provision in sub-clause (1) (*b*). I wish to say that they should apply to the authority concerned and only after getting the permission of the authority, the transfer should be made.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சாதாரணமாக முன்கூட்டியே அனுமதி வாங்க வேண்டும். அப்படி வாங்காவிட்டால், பள்ளிக்கூடத்தை மூடவேண்டிய நிலைதான் வரும். அப்படிப்பட்ட தொல்லைகளைத் தடுப்பதற்காகத் தான் இந்த விதி போடப்பட்டிருக்கிறது. ஆகையினால்தான் மாற்றப்பட்ட மூன்று மாதங்களுக்குள் மனுச் செய்து இசைவு வாங்கிக்கொள்ளலாம் என்று போடப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, முன்கூட்டி அனுமதி பெறாமல் மாற்றக்கூடாது. அப்படிச் செய்து விட்டால், அனுமதி பெற்றுக் கொள்வதற்கு மூன்று மாதம் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தைத் திரும்பப் பெறுகிறாரா ?

THIRU G. SWAMINATHAN : I cannot but withdraw.

திருத்தங்கள், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

பிரிவு 8, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 9.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"*For* the existing clause 9, *substitute* the following :—

"9. Any educational agency without any discrimination of caste or creed, religion or language may establish and administer any private school without permission under section 6."

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.



தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தனது முடிவுரையில் இப்பொழுது இருக்கின்ற சென்னை கல்விச் சட்டத்தின்படி அரசியலமைப்புச் சட்டம் 14-வது பிரிவுக்கிணங்க எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்று சொன்னார்கள். அரசியலமைப்புச் சட்டம் 14-வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள உரிமை ஒருவருக்கு இல்லாமல் இருக்கிறது. ஒருவருக்கு பர்மிஷன் இல்லாமலேயே பள்ளிகள் திறக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் ரெகக்னிஷன் வாங்கித்தான் தீர வேண்டும் என்று கூறுகிறார்கள். இரண்டு தடவை அரசுக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டிய நிலைமை இல்லாமல் ஒரு தடவை விண்ணப்பித்துக் கொண்டால் போதும் என்று சொல்வதே ஒரு விதச் சலுகை. இரண்டு தடவைக்குப் பதிலாக ஒரு தடவை வாங்கினால் போதும் என்று சொல்வதே ஒரு விதச் சலுகைதான். அந்த மாதிரிச் சலுகை கொடுப்பது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக இருக்கிறது. இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற கல்வி முறைகளுக்கு முரண்பட்டிருக்கிறது. ஒரு சாரார் பள்ளிகள் திறப்பதற்கு இரண்டு அனுமதிகள் பெற வேண்டும். அந்தப் பாரபட்சம் இப்பொழுது இல்லாமல் இருக்கிறது. இப்பொழுது சட்டம் புதியதாகக் கொண்டு வந்து இந்த நிலைமையை உருவாக்குகிறது. யார் விரும்பினாலும் கல்வித் தொண்டு செய்ய பள்ளிகள் திறக்கலாம், அரசு அனுமதி அங்கீகாரத்திற்கு உட்பட்டு, என்று இருப்பதுதான் பொருத்தமானது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்சினைக்கு, ஒரு டிஸ்கிரிமினேஷன் இல்லாத வகையில் ஒரு முடிவு ஏற்படுவதற்கு நான் ஒரு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது அனுமதி இல்லாமல் திறந்து விடலாம் என்று ஒருவருக்கு உரிமையும் அனுமதி வாங்கித்தான் திறக்க வேண்டும் என்று இன்னொருவருக்கும் இருந்து வருகிறது. ஆகையினால் இனி எய்டெட் பள்ளிகளே திறக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி எய்டெட் பள்ளிக்கூடங்கள் திறக்க வேண்டிய அவசியமே இல்லை என்று அரசு முடிவு செய்து விட்டால், இந்த டிஸ்கிரிமினேஷன் ஏற்படாது. இந்தப் பிரச்சினையும் போய்விடும். அதற்கான கொள்கையை அரசு வகுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது அனுமதி பெற வேண்டும், அங்கீகாரம் பெற வேண்டும் பிறகு மான்யம் பெற வேண்டும் என்று இருக்கிறது. இதிலே இன்னும் சொல்லப்போனால், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் சிறுபான்மையினருக்குப் புதுச்சலுகை வருகிறது. பெர்மிஷன் வாங்க வேண்டாம் என்பது இப்பொழுது சலுகை, ஏற்கெனவே இல்லாத ஒன்று, இப்பொழுது புதியதாக வந்திருக்கிறது. அது கூட அரசியல் சட்டம் குறுக்கிடுவதன் காரணமாக ஏற்படுகிறதே தவிர, வேறு விதத்தில்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இல்லை. ஆகவே இந்த முறைகள் இருப்பது இன்னும் ஒழுங்குபெற பள்ளிகள் நடைபெறுவதற்கு வசதியாக இருக்கும். டிஸ்கிரிமினேஷன் பண்ண வேண்டும் என்ற நோக்கம் இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, அரசியல் சட்டத்தில் ஒருவருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறதே தவிர, இன்னொருவருக்கு நிபந்தனைகள் போட வேண்டுமென்று இல்லை என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, வாதத்தில் பசை உண்டு. ஆனால் இருக்கின்ற நல்ல முறையை மாற்ற வேண்டும் என்று சொல்லலாமா? கூடாது என்று அவர்களே ஒத்துக்கொண்டார்கள். இப்பொழுது அனுமதி வாங்க வேண்டுமென்று இருக்கிறது. அரசியல் சட்டத்தின் காரணமாகத்தான் இப்படி ஒரு விதி விலக்கு கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆகவேதான் கொடுக்கிறோம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவரவர்களே, கொடுப்பதில் ஆட்சேபணையில்லை. ஆனால் அந்த விதி விலக்கு பெரும்பான்மையினருக்குக் கொடுக்கக்கூடாது என்று தடை செய்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அரசியல் சட்டத்தால் ஏற்படுகின்ற சில சங்கடங்களை நாம் தாங்கியே தீர வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல், பெர்மிஷன் வாங்காமலேயே கட்டிடங்கள் கட்டி, பெஞ்சுகள், நாற்காலிகள் வாங்கிப் போட்டு, குடியும் புகுந்துவிடுகிறார்கள். அதன் பிறகு அங்கீகாரம் அளிக்காமல் போனால் என்ன செய்வது என்று கேட்டுக்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர்களே வருகிறார்கள். அப்பொழுது எப்படி கொடுக்காமலிருப்பது? இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படாமலிருக்கத்தான் சில முறைகள் கையாளப்படுகின்றன. சில பாதுகாப்புகள் அமுலுக்கு வருவதுதான் நல்லது என்று கருதப்படுகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அன்புகூர்ந்து மன்னிக்கவும். இது போன்ற நிலைமை சிறுபான்மையினருக்கும் ஏற்படும். பெரும்பான்மையினர் தடுக்கப்படுவதற்கு எந்தப் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இப்பொழுது ஒரு முறை ஏற்பட்டிருக்கிறது. சட்டத்தை இயற்றும்போது இது யோசிக்கப்பட்டது. அரசியல் சட்டத்தை அனுசரித்துச் செய்ய வேண்டிய அவசியம் வருகின்ற நிலைமையில் அனுமதி வாங்க வேண்டும் என்ற ஒரு



[திரு செ. மாதவன்]

பிரிவு இருக்கக்கூடாது என்று கருதப்பட்டது. பொறுக்குக் குழு இது பற்றி நல்ல முறையில் ஆராய்ந்துதான் முடிவு எடுத்திருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற ஒரு நல்ல முறை கூடாது என்று சொல்வது பொருத்தமாகாது என்று கருதுகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நல்ல முறை என்று கருதினால், அந்த நல்ல முறை எல்லோருக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும். சட்டத்திற்கு முன்னால் தயவுசெய்து எல்லோரையும் சமமாகக் கருத வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நல்ல முறை என்று ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

'*For* the existing clause 9, *substitute* the following:

"Any educational agency without any discrimination of caste or creed, religion or language may establish and administer any private school without permission under section 6".'

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 9, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 10 முதல் 12 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

புதிய பிரிவு 12-அ.

THIRU K. S. ABDUL WAHAB: Sir, I move the following amendment—

After clause 12, *insert* the following as new clause 12-A:—

"12-A. Notwithstanding anything contained in clause 12, recognition to schools maintained by all the religious and linguistic minorities shall not be withdrawn".

6.50 பி.ப. திரு. எம். எம். பக்கர் : நான் இந்தத் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே இந்தத் திருத்தத்தை அடிப்படையாக வைத்துப் பேசியிருக்கிறேன். ஏதாவது ஒரு ஸ்கூல், ஒரு விதியை மீறிச் செயல்பட்டால், அரசாங்கம் அந்த ஸ்கூலை "டேக் ஓவர்" செய்யலாம் என்று போடப்பட்டிருக்கிறது. அப்படி எடுத்துக்கொள்ளுகின்ற காலத்தில், மைனாரிட்டி ஸ்கூல்களை எடுக்காமல், ரெகக்னிஷனை "வித்ட்ரா" பண்ணி கிராண்ட் கொடுப்பதை நிறுத்தி விடுவது என்று சட்டத்தில் இருக்கிறது. அப்படி கிராண்ட் கொடுப்பதை நிறுத்தினாலும், ரெகக்னிஷன் தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும் என்ற திருத்தம்தான் இந்தத் திருத்தம். இதற்குக் காரணம், இந்தச் சட்டப்படி நாங்கள் பள்ளிக்கூடங்களை நடத்துவதில் சில கஷ்டங்கள் ஏற்படுவதற்கு வழி உண்டு. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் எங்களுக்கு எங்கள் கலாசாரப்படி பள்ளிகளை நடத்தலாம் என்ற சலுகை இருக்கிறது. அதே அரசியல் நிர்ணயச் சட்டம் எங்களுக்கு ஒரு வகையில் தடங்கல் செய்கிறது. பள்ளிக்கூடங்களில் சாதாரணமாக சில நேரங்களில்—அது இந்து பள்ளியாக இருந்தால் இந்து பாடங்களையோ, கிறிஸ்தவ பள்ளியாக இருந்தால் கிறிஸ்தவ பாடங்களையோ, இஸ்லாமிய பள்ளியாக இருந்தால் இஸ்லாமிய பாடங்களையோ, மதபோதனையாக, வாரத்தில் ஒரு நாளைக்கு அல்லது ஒரு நாளைக்கு முக்கால்மணி நேரம் சொல்லிக்கொடுக்கலாம். அவ்வாறு மதபோதனை பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்ககூடாது என்று செய்து விட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தடையின் காரணமாகத்தான் "அவுட் ஆப் ஸ்கூல் அவர்ஸ்"-ல் அந்தப் படிப்பு படிப்பதற்கு வசதியுள்ளது என்று சொல்லுகிறார்கள். மத போதனை சொல்லிக் கொடுக்க வேண்டியது மிக அத்தியாவசியமாகும். அதைக் கட்டுப்படுத்துகின்ற நிலைமை இந்தச் சட்டத்தால் ஏற்படுவதால் தான் இதை எதிர்ப்பதற்கு நாங்கள் முற்படுகிறோம். அப்படி ஒருகால் மாறுபாடு இருந்தால், அப்பள்ளிகளை "டேக் ஓவர்" பண்ணுகின்ற உத்தரவு போடுவது என்று வந்தால், அதிலிருந்து எங்களுக்கு விதி விலக்கு வேண்டும் என்பதுதான் எங்களின் கருத்து. நாங்கள் இம் மாதிரி விதிவிலக்குக் கேட்பது, ஊழல் நடத்துவதற்கோ, தவறுகள் செய்வதற்கோ அல்ல. எங்கள் இஸ்லாமிய முறைப்படி நடத்துவதில் மாறுபாடு வந்தால், அது எங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று தான் சொல்லுகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மத போதனை உள்ள பள்ளிக்கூடங்களை இந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது என்று சொன்னார்கள். மதபோதனை பள்ளிக்கூடங்கள் என்றால் வெறும் மதபோதனை மட்டும் சொல்லிக் கொடுக்க முடியாது. சாதாரணக் கல்வியும் படித்துக் கொண்டு மதபோதனையும் படிக்க வேண்டும். மதபோதனை மட்டும் என்றால் தான் அதிலே ஆபத்து இருக்கிறது. மற்றொன்றும் சொல்லுகிறேன். வெறும் மத போதனை மட்டும் படித்து விட்டு வீட்டிலே சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க முடியாது. வயிறு என்று ஒன்று இருக்கிறது. குழந்தை குட்டிகள் இருக்கிறார்கள். அதற்கு வழி வகை



செய்கின்ற முறையில், மதபோதனை சொல்லிக்கொடுப்பதோடு, சிறு கைத்தொழில்கள், தச்சு வேலை போன்று ஏதாவது ஒன்றையும் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்தத் தொழிற் கல்வியும் அங்கே பயிற்றுவிக்கப் படுகிறது. மதபோதனை மட்டும் தான் என்றால் அதிலே ஆபத்து இருக்கிறது. இந்தச் சட்டத்தின்படி அந்த மாதிரிக் கட்டுப்பாடு கூடாது என்றுதான் சொல்லுகிறேன். அப்படியே அரசு தடை உத்தரவு போடுவதாக இருந்தாலும், அவர்கள் மானியம் கொடுக்க வேண்டியதில்லை. ரெகக்னிஷனை "வித்ட்ரா" பண்ணக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றி முதலிலேயே நான் விளக்கம் தந்திருக்கிறேன். அரசியலமைப்புச் சட்டம் 30(1) விதியின்படி அவர்கள் பெர்மிஷன் வாங்கித்தான் நடத்த வேண்டுமென்ற கடமை இல்லை என்று சொல்லியிருக்கிறேன். எடுத்துக் கொள்ள முடியாது என்றும் சொல்லியிருக்கிறேன். சில ஒழுங்கு முறைக் கட்டுப்பாட்டுக்குள்ளே வந்தால்தான் சரியாக இருக்கும். ரெகக்னிஷன் இப்போது இருந்து வருகிறது. இப்போது ரெகக்னிஷன் வாங்கித்தான் எல்லாத் தனியார் பள்ளிகளும், சிறுபான்மையோர் பள்ளிகள் உட்பட, நடைபெற வேண்டும். அந்த அடிப்படையில் தான் இருக்கிறது. அதை மாற்றவில்லை. இருக்கின்ற அதே சட்டம் நீடிக்கின்ற அளவுக்குத்தான் ரெகக்னிஷன் என்று இருக்கிறது. இது இருந்தால் தான், ஒவ்வொரு பள்ளியிலும் என்னென்ன நடக்கிறது என்ற குறிப்பாவது இருக்கும். யாரையும் கட்டுப்படுத்த வேண்டிய நிலைமையில்லை.

அடுத்து, மதபோதனை பற்றிச் சொன்னார்கள். அ, ஆ, சொல்லிக் கொடுக்கின்ற பள்ளியில் மதபோதனை சொல்லிக் கொடுப்பது ஒன்று. மதபோதனை சொல்லிக்கொடுக்கின்ற பள்ளியில் அ, ஆ சொல்லிக் கொடுப்பது ஒன்று. மதபோதனை சொல்லிக்கொடுக்கின்ற பள்ளிதான் என்று சர்ட்டிபிகேட் வாங்கி விட்டால், அது இந்தச் சட்டத்தின் கீழ் வராது. "ரெகுலர் ஸ்கூல்" என்று இருந்தால் தான் இந்தச் சட்டத்தின் கீழ் வரும். இந்தச் சட்டத்திலே தெளிவாக இடம் வைத்திருக்கிறோம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தொழில் கல்வி சொல்லிக்கொடுத்தாலும் பாதிக்கிறது. அதனாலே தான் சொன்னேன்.

**THE HON. THIRU S. MADHAVAN** ; If the school gives exclusively religious instruction, it will not come within the purview of the Act. If it is a regular school with Classes 1 to 11, then it will come within the Act, even though some religious instruction is also given in that school.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

THIRU K. S. ABDUL WAHAB: Sir, I press the amendment.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை—

"After clause 12, insert the following as new clause 12-A :—

'12-A. Notwithstanding anything contained in clause 12, recognition to schools maintained by all the religious and linguistic minorities shall not be withdrawn'."

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 13, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 14.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன். —

In clause 14, *after* sub-clause (2)(iii), *add* the following proviso :—

"Provided the pay and allowances of the teachers and employ e of such private schools shall be disbursed by the competent authority."

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த கிளாஸ் 14-ல் பள்ளிகளுக்கு கிராண்ட் வழங்கும் முறை பற்றி சட்டத்தில் இடம் வகுக்கப்பட்டிருக்கிறது. எய்டட் பள்ளிகளில் நூற்றுக்கு நூறு பங்கு அநியாயம் நடைபெறுவதால் சம்பளம் கொடுப்பது பற்றித்தான் ஆசிரியர்கள் தங்கள் சாட்சியங்களில் எடுத்துக் கூறினார்கள். வேலையில் சேரும்போதே ராஜிநாமா கடிதம் எழுதி வாங்கிக்கொள்ளுகிறார்கள். மாதா மாதம் சம்பளத்தின் ஒரு பகுதியைத்தான் ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஆனால் சம்பளம் பூராவும் அரசால் கொடுக்கப்படுகிறது. பொதுமக்களுடைய வரிப்பணத்திலிருந்து அரசு ஆசிரியர்களுக்குச் சேர வேண்டிய சம்பளத்தில் ஒரு பைசா கூட குறையாமல் ஆண்டுக்கு ஆண்டு இங்கிரிமெண்ட் உட்பட முழுமையாகக் கொடுக்கிறது. ஆனால், ஆசிரியர்களுக்கு நேரடியாகத் தராமல், நிர்வாகிகள் மூலமாக கிராண்ட் என்ற பெயரில்—வெள்ளையர்கள் காலத்திலிருந்து வந்த அதே பெயராலே—கொடுப்பதாலே அவர்கள் மூலமாக பட்டுவாடா செய்யப்படுகிறது. கிராண்ட் என்பது ஒல்டு டேர்ம், பழைய கால வார்த்தை. அந்தக் காலத்தில் கிராண்ட் என்று சொல்லும்போது, 30 ரூபாய் சம்பளம் என்றால்,



[திரு. செ. முத்துசாமி]

15 ரூபாய் அரசாங்கம் கொடுக்கும், 15 ரூபாய் மானேஜ்மெண்ட் கொடுக்கும். இன்றைக்கு டீச்சருடைய சம்பளத்தை முழுமையாக அரசாங்கமே கொடுத்துவிடுகிறது. மானேஜ்மெண்ட் மூலமாகப் போகும்போது, இந்த கமிஷன் வியாபாரம் நடக்கிறது. வியாபாரம் தான் அது. தனியார் பள்ளிக்கூடம் என்று வைத்துக்கொண்டு, அக்குயிட்டன்ஸில் கையெழுத்து வாங்கிக்கொண்டு, சேரும்போதே ராஜிநாமா கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு மிரட்டுகிறார்கள். உழைப்பது நாங்கள், ஆசிரியர்கள். உழைக்காமல் அவர்கள் சாப்பிடுகிறார்கள். வேலையில் சேரும்போது 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் என்று வாங்கிக்கொள்ளுகிறார்கள். ராஜிநாமா கடிதம் எழுதி வாங்கிக்கொள்ளுகிறார்கள். அதோடு மாதச் சம்பளத்திலும் கை வைப்பது. பிள்ளையைப் படிக்க வைக்க வேண்டியிருக்கிறது, ஆகவே இன்னும் 10 ரூபாய் சேர்த்துக்கொடு என்று சொல்லி வாங்கி விடுகிறார்கள். மெட்ராஸ் சிட்டியில் கூட நடக்கிறது. ஆசிரியை 7·00 பி.ப.
ஒருவருக்கு கவரில் போட்டுக்கொடுக்கிறார்கள். அக்குயிட்டன்ஸில் ஸ்டாம்பு ஒட்டிக் கையெழுத்துப் போடுவதோடு சரி, சம்பளம் எவ்வளவு என்று கூடத் தெரியாது. ஏதோ நூறு ரூபாய் கொடுப்பார்கள். 9 வருஷம் அந்த ஆசிரியை வேலை செய்திருக்கிறார்கள். அவர் ஒரு விதவை. அவரை வெளியே போகச் சொல்லிவிட்டார்கள். பிறகு தான் அந்தக் கொடுமையைச் சொன்னார்கள். இந்தமாதிரி நிலைமை எல்லாம் இருக்கிறது. உழைக்கின்ற ஆசிரியர்களுக்கு, அரசு நிர்ணயித்திருக்கக்கூடிய சம்பளம் கூட கிடைக்கவில்லையென்ற கொடுமை இருக்கிறது. ஆதலால் நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதா ஆசிரியர்களுக்கு எல்லாப் பாதுகாப்பையும் தருகிறது. ஆனால் சம்பளத்தை மாத்திரம் அந்த நபர்கள் மூலமாகக் கொடுக்கும்போது, அவர்கள் ஏதாவது செய்வார்கள். அரசு சம்பளம் வழங்குகிறது. இதிலே, இடையிலே இன்னொரு ஆள் ஏனென்று . தெரியவில்லை. நேரடியாகவே சம்பளத்தைக் கொடுத்து விடலாம். இதிலே "காம்பிடண்ட் அதாரிடி" என்ற புரொவிஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தான், அந்த "காம்பிடண்ட் அதாரிடி" மூலமாகச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஒரு பள்ளிக்கு "காம்பிடண்ட் அதாரிடி"யாக விதிகளின்படி யாரை நிர்ணயிக்கிறார்களோ, அவர்களே அந்தச் சம்பளத்தை ஆசிரியர்களுக்கு நேரடியாகக் கொடுக்கும்போது இந்தச் சிக்கல் வராது; இந்தச் சங்கடம் வராது. கிரான்டைக் கொடுத்துவிட்டு, பில்லை இன்னொருவர் பேரில் என்டார்ஸ் செய்துகொடுப்பதைவிட, நேரடியாக "டிஸ்பர்ஸ்" பண்ணும் முடிவை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரிடையர்மெண்ட் பெற்ற ஆசிரியர்களெல்லாம், டிரஷரிக்குச் சென்று ஓய்வூதியம் வாங்கிக்கொண்டிருந்தார்கள். இப்போது, அவர்களுக்கு நேரடியாக எம். ஓ. மூலம் பணத்தை அனுப்பும் நிலைமையை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. அதைப்போல இந்த ஆசிரியர்களுக்கு நேரடியாகச் சம்பளத்தை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த "அமெண்ட்மெண்ட்" நியாயமானது, அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று. இதைச் செய்வதன் மூலம

[திரு. செ. முத்துசாமி]

முழு அளவுக்கு ஆசிரியர்கள் சமூகத்திற்குப் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கல்வி அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ஆசிரியர்களுக்கு சம்பளத்தை நேரடியாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்போது கிராண்ட் மூலம் கொடுக்கின்ற காரணத்தால்தான் அவர்கள் தனியார் பள்ளி ஆசிரியர்களாகக் கருதப்படுகிறார்கள். நாளைய தினம் அவர்கள் நேரடியாகச் சம்பளம் பெறுவார்களானால், அரசு ஆசிரியர்களாக மாறுவதற்கு வழி ஏற்படும். அரசாங்க ஊழியர்களாக அவர்கள் மாறினால், திரு. முத்துசாமி அவர்கள் போன்று, அவர்கள் தேர்தலுக்கு நிற்கக்கூட முடியாத நிலை ஏற்படும். அந்தமாதிரி நிலைமைகள் ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அதிலே பல பிரச்சினைகள் உருவாகும். அரசாங்க அலுவலர்கள் என்ற நிலைமையில் அவர்கள் வந்தால், அவர்களுக்கு பல பாதிப்புகள் ஏற்படும். அதுபற்றி திரு முத்துசாமி அவர்கள் என்ன சொல்லுகிறார்களென்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அமைச்சரவர்கள் அதுபற்றி என்ன சொல்லுகிறார்களென்பதையும் அறிய விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள், "அரசாங்கத்திடமிருந்து நேரடியாகச் சம்பளம் வாங்கும்போது அரசு ஊழியர்களாக ஆகிவிடுவார்களா ; அதனால் ஏதாவது பாதகம் வருமா" என்று கேட்டார்கள். பாதகம் வராது ; சாதகம்தான் வரும். ஒரு ஜனநாயக நாட்டிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை நம்பித்தான் நாட்டு மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பிரஜைகளுக்கு கல்வி சொல்லித் தரும் ஆசிரியர்களும் இந்த அரசாங்கத்தை முழுக்க முழுக்க நம்புகிறார்கள். அரசுதான் ஆசிரியர்களைக் காப்பாற்ற முடியும். தனிப்பட்ட ஒரு நிர்வாகம் காப்பாற்றுமென்று அவர்கள் நினைக்கவில்லை. அரசு ஊழியர்களாக வருவதால் பாதகம் வருமென்றும் சொன்னார்கள். பாதகம் வராது ; சாதகம்தான் ஆசிரியர் சமூகத்திற்கு வரும். அப்படி வருவதைத்தான் அவர்களும் விரும்புகிறார்கள். அப்படி வர வழி இல்லாததால்தான், சம்பளத்தையாவது நேரடியாகக் கொடுங்கள் என்ற ஒரு வேண்டுகோளை நாங்கள் விடுக்கிறோம்.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே . . . . . . . . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர்: யாரும் இப்போது "டிஸ்கஸ்" பண்ணக்கூடாது. ஜெனரல் டிஸ்கஷனிலேதான் டிஸ்கஸ் பண்ண வேண்டும்.



THIRU K. S. ABDUL WAHAB : Sir, I move the following amendment :—

"In clause 14, sub-clause (2) *after* the words " in repsect of any private school" *add* the following words :—

'including those maintained and administered by the minorities' ".

திரு. எம். எம். பக்கர் : தலைவரவர்களே, நான் வழிமொழிகிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, இது நான் முன்பு கொடுத்த திருத்தத்தினுடைய தொடர்ச்சிதான். பள்ளிக்கூடத்தை அரசு கைப்பற்றிக்கொள்ளும்போது, கொடுக்கக் கூடிய மானியத்தை வேண்டுமானால் நிறுத்திக்கொள்ளலாமென்று சொன்னேன். மானியத்தை வேண்டுமானால் நிறுத்திக்கொள்ளுங்கள் என்ற ஷரத்துதான் இது. அங்கீகாரத்தைத் திரும்பப் பெறாமல், மானியத்தை நிறுத்திவிடுவதற்கான காரணங்களை நான் முன்பே சொல்லியிருக்கிறேன். மைனாரிட்டியினர் நடத்தும் பள்ளிகளுடைய மானியத்தை நிறுத்திக்கொள்ளலாமென்ற கருத்துப்படிதான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

**Mr. CHAIRMAN :** Time is extended.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு முத்துசாமி அவர்கள், விதி 14-க்கு ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சம்பளத்தை நேரடியாகத் தந்திட வேண்டுமென்று அவர் கூறினார். நாம் இப்போது கிராண்ட்டை ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பி அந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் ஏஜென்ஸி மூலம் சம்பளம் பெற்றுக்கொண்டு வருகிறார்கள். ஆக, எல்லோரையும் நாம் சந்தேகப்படும் நிலைமைகள் வேண்டாம். இப்போதைய சட்டத்தின்படி வேறு பல பாதுகாப்புகள், பள்ளிக்கூடக் குழு போன்றவைகளெல்லாம் ஏற்படப்போவதால், அந்தக் குறைபாடுகளையெல்லாம் நீக்குவதற்கு வழி இருக்கிறதாவென்று பார்க்கலாம். இப்போதிருக்கும் சட்டத்தின்படியே, ஒரு பள்ளி சரியாக நடக்கவில்லை, பணம் சரியாகப் பட்டுவாடா செய்யப்படவில்லையென்ற நிலைமைகள் ஏற்பட்டால், அதிகாரிகளே நேரடியாகத் தரலாமென்ற அளவிற்கு இருக்கிறது. அதற்கான வசதியை விதி 27-லே தனியாக ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுமானால், இப்போதுகூட தனியாகத் தருவதற்கு இடமுண்டு. தனியாகத் தருவதன் காரணமாக, உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்ன மாதிரி, அவர்கள் அரசாங்க ஊழியர்களாக ஆகிவிட மாட்டார்கள். இப்போதே அந்த விதி இருக்கிறது. விதி 27-ன் கீழ் அது வருகிறது. பள்ளிகளில் ஏதாவது தகராறு ஏற்பட்டு, சரியாக நடைபெறவில்லை என்று அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு வாய்ப்புகள் சட்டத்திலேயே இருக்கின்றன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அதற்காக பல்வேறு விதிகள் செய்யப்பட்டிருப்பதால், இந்தத் திருத்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நடைமுறையிலே நாம் பார்த்ததற்குப் பிறகு, அதிலே ஏற்படுகிற நிலைமைகளுக்கேற்ப, திருத்தங்களைச் செய்து கொள்ளலாம். இப்போதே அதற்கு வழி இருக்கிறதென்ற காரணத்தால், அதைப் பயன்படுத்திக்கொள்ளும் நிலைமைகள் இருக்கின்றன.

மாண்புமிகு மேல்வைத் தலைவர் : உறுப்பினர் திரு. செ. முத்துசாமி தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கல்லூரிகளிலே பணி புரியும் ஆசிரியர்களுக்கு, செக் மூலம் சம்பளம் கொடுக்கும் ஏற்பாட்டை இப்போது அரசு செய்திருக்கிறது. அதே ஏற்பாட்டை இவர்களுக்கும் அரசு செய்வதாக இருந்தால் நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்த விரும்பவில்லை. அமைச்சரவர்கள் விதிகளில் அதைக் கொண்டுவருவதற்குத் தயாராக இருந்தால், நான் அந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டிய அவசியம் இருக்காது. எனவே, அமைச்சரவர்கள் அதற்கான உறுதிமொழியைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது தனியாக யோசிக்கப்பட வேண்டிய ஒன்று. விதிகளை ஆராயும் போது முடிந்தால் இதையும் ஆராயலாம். எனவே, இதிலே குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. இப்போது இருக்கின்ற முறையே போதுமானதாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, " முடிந்தால் ஆராயலாம் " என்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். நான் உறுதிமொழி கேட்டேன். இதைக் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டேன். பல விஷயங்களை மானேஜ்மெண்டுகளுக்குச் சொன்னதுபோல இந்த விஷயத்திலேயும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்கள் பெறும் சம்பளம், அவர்கள் பாக்கெட்டுக்குப் போகாத நிலைமை இருக்கிறது. திரு. எம். டி. பால் கமிட்டியிலே கூட செக் மூலம் கொடுப்பதற்காக ஒரு பரிந்துரை இருக்கிறது. ஆகவே கல்வி அமைச்சரவர்கள், விதிகளில் இதைக் கொண்டு வருகிறேன் என்ற உறுதிமொழியை, ஆசிரியர் சமூகத்திற்கு வழங்குவதன் மூலம், எந்தவிதமான சங்கடமும் ஏற்படாது. அதனால் யாரையும் சந்தேகிப்பதாக ஆகாது. எனவே அமைச்சரவர்கள் ஒரு உறுதி மொழியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் " வித்டிரா " செய்துகொள்ளுகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எது செய்தாலும், " செய்வன திருந்தச் செய் " என்ற பழமொழி இருக்கிறது. ஆக, பல்வேறு துறைகளும் ஆராய்ந்து, இதைச் செய்ய வேண்டும். இந்த நிமிடத்திலே அது பற்றிச் சொல்ல முடியாது. இதை ஆராய்ந்து, ஒரு ஒழுங்கு முறையும், எளிமையான தன்மையும் ஏற்படுமானால் செய்யலாம். ஆதலால்தான், " முடிந்தால் " என்று சொன்னேன். இதை நிதித் துறை ஆராய வேண்டும். பிறகு கல்வித் துறை ஆராய வேண்டும். இதனால் சங்கடங்கள் இருக்கின்றனவா என்பதை ஆராயவேண்டும் அதற்குப் பிறகு முடிவு செய்ய வேண்டியதென்பதால்தான், " முடிந்தால் செய்யப்படும் " என்று கூறினேன். இப்போது, இந்த விதியில் உள்ளதே போதுமானதென்று கூறிக்கொள்ளுகிறேன்.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, ஆராய்ந்து செய்வதற்கான உறுதிமொழியை அமைச்சரவர்கள் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரும்பத் திரும்ப "டிஸ்கஸ்" பண்ணக்கூடாது. திருத்தத்தை வலியுறுத்துகிறீர்களா அல்லது "வித்டிரா" பண்ணிக்கொள்கிறீர்களா ?

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

**"In clause 14, after sub-clause (2) (iii), add the following proviso :**

**'provided the pay and allowances of the teachers and employees of such private schools shall be disbursed by the competent authority' ".**

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு கே. எஸ். அப்துல் வகாப் அவர்கள் தன்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா அல்லது திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறாரா ?

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாண்புமிகு தலைவர்வர்களே, திருத்தத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 14, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு-15

**THIRU K. S. GANAPATHI :** Hon. Chairman, Sir, since an amendment has already been passed in the Assembly, my amendment will be out of place and, therefore, I do not propose to move the amendment.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, சட்டப் பேரவையில் வேறு விதமாகத் திருத்தம் நிறைவேற்றப்பட்டு விட்டதால், என்னுடைய திருத்தத்தை முன்மொழிய வில்லை.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்:

**"In clause 15, sub-clause (1), after the words 'school 'committee' and before the word 'which' insert the words 'as may be prescribed"**.

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, சட்டப் பேரவையிலே வேறு விதமாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்தக் கமிட்டிக்கு ஒரு வரையறை கூறக்கூடிய நிலைமைகள் இல்லாத காரணத்தாலே அதற்கு வரையறை கூறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். விதிகளிலே அந்தக் கமிட்டியைப் பற்றி இல்லாத காரணத்தாலே, மேலே குறிப்பிட்ட என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குழுவை ஏஜன்ஸி நியமிக்கும். அதில் தலைமை ஆசிரியர்கள் இடம் பெறுவார்கள். சீனியர் மோஸ்ட் ஆசிரியரும் அதில் நியமிக்கப்படுவார். ஆக அந்தப் பள்ளிக்கூடத்தினுடைய மாணவர்கள் எண்ணிக்கை ஆசிரியர்கள் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல், நிர்ணயிக்கப்படுமென்று விதி முறைகளில் சேர்க்கப்படுமென்று நான் சொல்லியிருக்கிறேன். விதி முறைகளில் அது சேர்க்கப்பட இருக்கிற காரணத்தால், வரையறை செய்யப்படுமென்பதையும் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, சீனியர் மோஸ்ட்-ஐ போடுவதனாலேயே இருக்கக்கூடிய குறைகளை விவாதித்துத்தான் அந்த முடிவுக்கு வந்தோம். இப்போது அந்த முடிவை மாற்றிவிட்டிருப்பதனாலே ஏற்கெனவே இருக்கக்கூடிய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு முத்துசாமி இந்தத் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

திரு செ. முத்துசாமி : நான் வலியுறுத்துகிறேன்.



மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை—

**"In clause 15, sub-clause (1), after the words 'school committee' and before the word 'which' insert the words 'as may be prescribed'."**

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

பிரிவு-15, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு-16.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தங்களை முன்மொழிகிறேன்:—

**" In clause 16—**

**(i) *for* the existing sub-clause (1), *substitute* the following :—**

**' (1) Every school committee shall have the headmaster of every private school as its Secretary who shall exercise such powers and perform such functions as may be prescribed.'**

**(ii) in sub-clause (2), *delete* the words 'or exercising the powers of Secretary under this Act on the date of the commencement of this Act.'**

**(iii) in sub-clause (2), *for* the words 'shall be deemed to be a secretary under this Act", *substitute* the words ' shall be deemed to be a president under this Act.' "**

**THIRU K. S. GANAPATHI :** Sir, I second them.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, பள்ளியில் சம்பளம் கொடுப்பது, பள்ளியை நிர்வகிப்பது போன்று, பள்ளியை முழுப் பொறுப்போடு நடத்தக்கூடிய நிலைமையில் இருக்கின்ற காரணத்தினால், தலைமையாசிரியரே செயலாளராக இருப்பது மிக நல்ல முறையிலே நிர்வாகம் நடப்பதற்கு வசதியாக இருக்கும். அந்தப் பள்ளித் தலைமையாசிரியர் முழுக்க முழுக்க நிர்வாகத்திற்கு உட்பட்டவராக இருந்து அவருடைய விருப்பப்படி நிர்வகிக்க சட்டத்திலே இடம் இருக்கிறது. ஆகவே, அந்தப் பள்ளியினுடைய தலைமை ஆசிரியரே, தலைவராக, செயலாளராக இருந்தால், அந்தப் பள்ளியினுடைய நிர்வாகம் நலமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆதலால் செகரட்டரியாக தலைமையாசிரியரும், மானேஜர்களாக இருக்கக்கூடியவர்கள் பிரெசிடெண்டாகவும் இருக்கலாம். இப்போது செகரட்டரியாக இருக்கக்கூடியவர்கள் பிரசிடெண்டாகவும்

[திரு. செ. முத்துசாமி]

ஆகிறார்கள். அவர்களுக்கு முழு கண்ட்ரோலும் இருக்கத்தான் வேண்டும். தலைமையாசிரியரையே செயலாளராகப் போடுவதற்கு ஆணை பிறப்பிப்பது பற்றி ஆலோசனை செய்து கல்வி அமைச்சர் அவர்கள் அதை ஒப்புக்கொள்ள முன்வரவேண்டும் என்று நான் வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பள்ளிக்குழு அமைப்பது பற்றி பல்வேறு விளக்கங்கள் இங்கே தரப்பட்டிருக்கின்றன. தலைமையாசிரியர்கள் சீனியர் மோஸ்ட் ஆசிரியராக இடம் பெறுகின்ற அளவுக்கு சட்டதிட்ட விதிகளிலே வரும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே இந்தத் திருத்தம் அவசியமில்லை. அது பற்றிய விளக்கங்கள் திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு முத்துசாமி அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

திரு செ. முத்துசாமி : திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவைமுன் உள்ள பிரச்சினை—

"In clause 16—

(i) *for* the existing sub-clause (1) *substitute* the following:

'(1) Every school committee shall have the headmaster of every private school as its Secretary who shall exercise such powers and perform such functions as may be prescribed.'

(ii) in sub-clause (2), *delete* the words 'or exercising the powers of Secretary under this Act on the date of the commencement of this Act.',

(iii) in sub-clause (2), for the words 'shall be deemed to be a secretary under this Act', *substitute* the words 'shall be deemed to be a president under this act.'"

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 16, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 17 முதல் 19 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



பிரிவு 20.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன் மொழிகிறேன்:—

"In clause 20, *re-number* the existing sub-clause (1) as sub-clause (1) (*a*) and *add* the following as new sub-clause (1) (*b*):

'(*b*) No person shall be appointed as a teacher in any private school unless he is selected for such appointment by the Tamil Nadu Public Service Commission or by such body specially constituted for this purpose'."

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த 20-வது பிரிவிலே ஆசிரியர்களை மற்றும் இந்தப் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களை நியமனம் செய்வது குறித்து கூறப்பட்டிருக்கிறது. இந்த நியமனத்திலே ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதை எல்லாப் பிரிவினரும் மைனாரிட்டி, மெஜாரிட்டி என்றெல்லாம் இங்கே பேசியவர்கள் ஒப்புக்கொண்டுதான் பேசியிருக்கின்றார்கள். அதை நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். உள்ளாட்சித் துறையில் அந்த மாதிரி கமிட்டிகள் வைத்தாலும் அங்கேயும் நடக்கிறது என்று பலர் பேசியபோது கூறினார்கள். அப்படிக் கூறுவதிலே நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இப்போது தவறு செய்கின்ற நிர்வாகங்களை, அரசாங்கத்துக்குட்பட்ட மாநகராட்சிகளைக் கூடக் கலைத்துவிடுவதற்கான நடவடிக்கையை அரசு எடுப்பது என்ற நடைமுறை ஜனநாயகத்திலே இருக்கின்றது. ஆனால் ஒரு தனியார் பள்ளியை அந்த மாதிரி எடுப்பதற்கலாத சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த விதமான ஊழல்கள் எல்லாம் நடக்காமலிருக்க, டீச்சர்களை அப்பாய்ண்ட் செய்வதற்கு சர்வீஸ் கமிஷன் மூலம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

'No person shall be appointed as teacher unless he is selected by Public Service Commission' என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

செட்யூல்ட் கேஸ்டுக்கு இந்தியன் கான்ஸ்டிடுசனிலே "புரொடக்ஷன்" கொடுக்கப்பட்டிருக்கின்றது. செட்யூல்ட் கேஸ்ட், பாக்வேர்டு கிளாசுக்கு இத்தனை பர்சென்டேஜ் என்பதெல்லாம் இருக்கிறது. ஆகவே இந்த பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக ஆசிரியர்கள் உத்தியோகம் கொடுக்க வேண்டும். இதுவரையில் சமுதாயத்திலே செட்யூல்ட் கேஸ்ட், பாக்வேர்டு கிளாஸ் இவைகள் எல்லாம் அழுத்திவைக்கப்பட்டிருக்கின்றன. சர்க்கார் உத்தியோகம் முறையாகக் கிடைப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும்.

[திரு. செ. முத்துசாமி]

அதனால் தயவுசெய்து இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இந்தத் திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு இதனுடைய நியாயத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை பல முறைகளிலே ஆராயப்பட்டது. ஆனாலும் கூட தனி மனிதன் நியமிக்கலாம் என்று ஏற்கெனவே இருந்தது. இப்போது பள்ளிக் குழுதான் நியமிக்க வேண்டுமென்று இருக்கின்றது. ஆகவே மேனேஜ்மெண்ட் ஏஜென்சிக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். மேனேஜ்மெண்ட் ஸ்கூல் கமிட்டிக்குத்தான், குழுவிற்குத்தான் நாம் அதிகாரம் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதில் தலைமையாசிரியரும் மற்ற ஆசிரியர்களும் இடம் பெறுவார்கள். ஆகவே ஏற்கெனவே இருந்த நிலைமையை விட ஓரளவிற்கு நல்ல சூழ்நிலைகள் ஏற்பட்டுவிடும். அரசு பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிடம், பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடம் ஒப்படைப்பது தனியார் நிர்வாகத்தில் குறுக்கிடுவதாக அமையும் என்று சொல்லிக் கொள்கின்றேன். இப்படிக் குறுக்கிடுவதாக இருந்து இது நீதிமன்றத்தில் தடுக்கப்படவும் கூடும் என்ற காரணத்தால்தான் பள்ளிக் குழுவிற்கு இந்த உரிமை இருக்கலாம் என்று போட முடிந்தது. ஆகவே இதற்குத் திருத்தம் தேவையில்லை.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான் இந்தத் திருத்தத்தை ஆசிரிய சமுதாயத்திற்குப் பாதுகாப்பாக இருக்கின்றது என்று கருதக் கூடிய காரணத்தினால் வலியுறுத்துகின்றேன்.

**Thiru G. SWAMINATHAN**: On a point of information Sir. Till what time are we going to sit ?

**Mr. CHAIRMAN**: I cannot say now. Please wait a little. Before eight it will be over.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திரு முத்துசாமி இந்தத் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

திரு செ. முத்துசாமி : நான் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை:

**' In clause 20, re-number the existing sub-clause (1) as sub-clause (1) (*a*) and *add* the following as new sub-clause (1) (*b*) :**



[மாண்புமிகு மேலவைத் தலைவர்]

**' (*b*) No person shall be appointed as a teacher in any private school unless he is selected for such appointment by the Tamil Nadu Public Service Commission or by such body specially constituted for this purpose.' "**

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 20, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 21.

**Thiru G. SWAMINATHAN**: Sir, I move the following amendment

" In clause 21, *delete* sub-clause (2)."

The motion was duly seconded.

**Thiru G. SWAMINATHAN**: Sir, sub-clause (2) appears to be superfluous, because under sub-clause (1) there is going to be a Code of Conduct to be prescribed for all the teachers of the private schools throughout the State and it is going to be done by the proper authority. I do not know why there should be another Code of Conduct to be defined by the School Committee under sub-clause (2). I think that one Code of Conduct will be sufficient.

**The Hon. Thiru S. MADHAVAN**: The hon. Member may kindly note the difference between "Code of Conduct" and "Standards of Conduct".

**Thiru G. SWAMINATHAN**: For all Government servants there is only one set of Conduct Rules. Under the Factories Act, the Factories can have different kinds of code of conduct for the workers, because it depends upon the concerned Factory. Here one Code of Conduct will be sufficient for all the private schools, provided it is comprehensive enough. I do not think there is any difference between Code of Conduct and Standard of Conduct.

திரு. செ. முத்துசாமி : ஏற்கெனவே அமைச்சரவர்கள் கோட் ஆஃப் 7·20
காண்டக்டை ஒத்துக் கொண்டதால் இந்த கிளாஸை டெலீட் பண்ண பி.ப.
வேண்டுமென்று சொன்னேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதனால் தான் அவுட் ஆஃப் ஆர்டர் என்று சொன்னேன்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தில் சப்-கிளாஸ் (2)-ஐ நீக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஒவ்வொரு பள்ளியினுடைய ஸ்கூல்

[திரு. செ. முத்துசாமி]

கமிட்டி ஒரு கோட் ஆஃப் காண்டக்டை நிர்ணயம் பண்ணவேண்டுமென்று இருக்கிறது. ஸ்டாண்டர்டு எப்படி இருக்கவேண்டும், எப்படி வேலை செய்ய வேண்டுமென்று இருக்கிறது. உதாரணத்திற்கு வைணவப் பள்ளி இருக்கிறது. அந்த மதத்திற்குத் தகுந்த மாதிரி நாமம் போட வேண்டுமென்று சொல்லலாம், அது அந்த மதத்தின் அறிகுறி. சைவம் என்றால் பட்டை போட வேண்டும், பொட்டு வைக்க வேண்டுமென்று இருக்கிறது. கிருஸ்துவ மதம் என்றால், சிலுவை போட்டு வர வேண்டும். அது அந்த மதத்தினுடைய அறிகுறி, கல்ச்சர் என்று சொல்லலாம். இந்த கல்ச்சரை எந்தப் பள்ளிக்கூடத்திலேயாவது சேர்க்க வேண்டுமென்றால் மதத்திலே யாரும் கைவைக்க முடியாது. அரசாங்கம் நினைத்தாலும் முடியாது. மைனாரிட்டியாக இருந்தாலும் மெஜாரிட்டியாக இருந்தாலும், மத அபிப்பிராயத்தில் கை வைக்க முடியாது. இந்த புரொவிஷன்படி ஸ்கூல் கமிட்டியிலே மெஜாரிட்டியினராக யார் நடத்துகிறார்களோ அவர்கள் தான் வந்து விடுவார்கள். எல்லோரும் வைணவக் கோட்பாட்டை அனுசரிக்கிறவர்களாக இருந்தால், எல்லோரும் நாமம் போட்டு வந்து உட்காருவார்கள். அப்போது ஆசிரியரையும் நீங்கள் நாமம் போட்டுத் தான் வர வேண்டும், இதை ஒத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லலாம். இப்படி ஒரு கோட் ஆஃப் காண்டக்டைக் கொண்டு வந்தால், எந்த வகையில் இதைத் தடுக்க வழி இருக்கிறது? இதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொல்ல முடியாது. மதம் என்று ஒன்று இல்லை என்று சொல்லக் கூடியவர்கள் இந்த நாட்டில் நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அந்தக் கொள்கையுள்ள ஆட்சி இங்கு நடக்கிறது. மத நம்பிக்கை இல்லாதவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய சுதந்திரம் என்ன ஆவது? நிர்வகிப்பவர் என்ன நினைக்கிறார்களோ அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லலாம். 5 மணிக்குப் பிறகு மத போதனை சொல்லித்தர வேண்டுமென்று அவர்கள் சொன்னால், நாம் அதில் தலையிடமுடியாது. அதை எப்படித் தடுக்க முடியும்? இதற்குப் புரொவிஷன் எங்கே இருக்கிறது? இந்த விஷயத்தில் இந்தப் பிரிவைக் கொண்டு வருவதன் மூலம் ஆசிரியர்களுக்குப் பல்வேறு தொந்தரவுகளையும், சங்கடங்களையும் ஏற்படுத்துகிறோம். சில நேரங்களில் எதிர்த்துத் தகராறு செய்து, அதனால் பயங்கரமான சூழ்நிலை அமைவதற்கு வழி இருக்கிறது. சர்க்கார் சிப்பந்திக்குள்ள எல்லாவற்றையும் எய்டட் பள்ளியில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் கொண்டு வாருங்கள். பள்ளிக் கூடத்திற்குப் பள்ளிக்கூடம் வித்தியாசமானால், ஒரு பள்ளிக்கூடம் வைணவப் பள்ளியாக இருந்தால் நாமம் போட வேண்டுமென்றும், இன்னொரு பள்ளிக்கூடத்தில் அவர்கள் சைவமாக இருந்தால் பட்டை போட வேண்டுமென்றும்—இப்படி கோட் ஆப் காண்டக்ட் இருந்தால் என்ன செய்வது? ஆகவே ஆசிரியர்கள் தனக்கென ஒரு கொள்கையை வைத்துக்கொண்டு நடக்க உரிமை இல்லாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையைப் பரிசீலனை செய்ய வேண்டும். அதனால் சப் கிளாஸ் (2) என்பது நியாயமில்லாதது. அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பிரிவிற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, நான் என்னுடைய திருத்தத்தை வற்புறுத்தவில்லை, திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக ஒழுக்க விதிகளைப் பொறுத்தவரை, அரசாங்கத் துறைக்கும் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத் துறைக்கும் இருக்கிறது. ஒழுக்க விதிகள் என்று போடுகிறோம். பொதுவாக எல்லாப் பள்ளிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் இருக்கும். ஸ்டாண்டர்டு ஆஃப் காண்டக்ட் என்ற அளவிற்கு வரும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு முத்துசாமி அவர்கள் சொன்னது தான் வந்து சேருகிறது. **Of the minority, by the minority, for the minority** என்று வருகிறபோது அங்கே சட்டம் குறுக்கிடுகிறது. எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இருப்பவை களைச் சொல்லவில்லை. அப்படியே ஏற்படுத்தினாலும்கூட, பொதுவாக அமைக்கப்படுகிற ஒழுக்க விதிகளுக்கு முரண்படாத வகையில் இருக்க வேண்டும். அப்படியே வைத்தாலும்கூட, அவர்களாக ஏற்படுத்திக்கொள்ள முடியாது. முரண்படாத வகையில் இருந்தாலும், அனுமதி பெற்றுத் தான், அரசாங்க அதிகாரிகளுக்குக் காண்பித்துத்தான் அவர்கள் அனுமதியின் பேரில்தான் வைக்கக் கூடும். ஆகவே, முரண்படாத வகையில் பின்பற்ற வேண்டுமென்று தான் சொல்லியிருக்கிறோம். அப்படிச் சொல்லாமல் இருந்தால், இந்த விதி தடுக்கப்பட்டு விடும் என்ற காரணத்தினால்தான், இது சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே இதை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒரு விளக்கம் சொன்னார்கள். அதிகாரிகளிடத்தில் அனுமதி பெற வேண்டுமென்றிருப்பதாகச் சொன்னார்கள். எந்த இடத்தில் புரோவிசோ இருக்கிறதென்று சொன்னால், பாதுகாப்பாக இருக்கும். அதிகாரிகளிடத்திலேயே அனுமதி பெறுவதற்கு வாய்ப்பு இந்தச் சட்டத்தில் எங்கிருக்கிறதென்று அறிய விரும்புகிறேன். சாதாரண சர்க்கார் சிப்பந்திகள் தாங்கள் வேலை செய்கிற இடங்களில் அவர்களுக்கு வேண்டிய சாமிப் படங்களை மாட்டி விட்டால், அதை எடுக்க முடியவில்லை. இங்கேயே இந்தச் சூழ்நிலை இருந்தால், தனியார் பள்ளிக்கூடத்தில் நிலைமை எப்படி என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் வைக்கிற ஒழுக்க விதிகளெல்லாம் இதிலே கூறப்பட்டிருக்கின்றன. விதி முறைக்கும் சொல்லியிருக்கிற விதிகளுக்கும் மாறுபாடாக இருக்கக்கூடாது என்று

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வாகச் சொல்லியிருக்கிற காரணத்தினால், இதற்கு உட்பட்டுத் தான் இருக்க வேண்டும். அந்த வகையில் கட்டுப் படுத்துவதற்கு உரிமை இருக்கிறது.

திரு செ. முத்துசாமி : இருக்கிறதா இல்லையா என்று கண்டு பிடிக்கிற காம்பிடெண்ட் அத்தாரிட்டி. என்ன செய்ய வேண்டுமென்று புரொவிசனில் கொடுக்கப்படாமலிருக்கிறது. அப்படி வழி இருந்தது என்று சொன்னால், அதிகாரிகள் நிச்சயமாகப் பாதுகாப்பு அளிப்பார்கள். ஆசிரியர் மனமும் மதத்தினுடைய அடிப்படையில் பாதிக்கப்படக்கூடாது அல்லவா, இதையும் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சட்டத்தினுடைய விதி முறைகளிலே அவர்கள் செயல் விதிமுறைக்கு முரண்பாடாக இருந்தால், தடுத்து நிறுத்துவதற்கு உரிமை இருக்கிறது. அந்த விதியைப் பயன்படுத்தி சீர்படுத்திக் கொள்ள வழி இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் திரு சுவாமிநாதன் தம் திருத்தத்தை வற்புறுத்துகிறாராம் ?

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இல்லை.

திரு ஜி. சுவாமிநாதனது திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

**Mr. CHAIRMAN** : The amendment of Thiru S. Muthuswamy is ruled out of order, because it is negative in character.

பிரிவு 21, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 22.

**Thiru K. S. GANAPATHI** : Sir, I move the following amendment :—

"In clause 22, sub-clause (2), *add* the following words at the end : 'and such approval shall be in writing'."

திருத்தம் முறையாக வழி மொழியப்பட்டது.

திரு கே.எஸ். கணபதி : தலைவரவர்களே, இதிலே அனுமதி வேண்டினால் போதும் என்று இருக்கிறது. எழுத்தில் இருக்க வேண்டுமென்று இல்லை. எனவே அவர்கள் வேண்டுவது எழுத்தில் இருக்க வேண்டுமென்ற சொல். இதில் சேர்க்கப்படவேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.



**Thiru G. SWAMINATHAN** : Sir, I move the following amendments :

"In clause 22—

(i) in sub-clause 3 (*a*), *add* the following at the end :—

'No such teacher or other person shall be placed under suspension without the prior sanction in writing of the competent authority, who shall not grant such sanction unless he is satisfied, for reasons to be recorded in writing, that an enquiry into gross misconduct on the part of such teacher or other person has to be held and that a prima facie case for holding such enquiry exists.'

(ii) in sub-clause 3 (*b*), *add* the following as second proviso :—

'Provided further that such reasons atrributable directly to such teacher or other person are not beyond the control of such teacher or other person.'

திருத்தம் முறையாக வழி மொழியப்பட்டது.

**Thiru G. SWAMINATHAN** : Sir, I have moved the first amendment to avoid abuse of power and to ensure quick disposal of enquiries and also avoid possible victimisation of teachers. Under the present provision, if the Committee thinks that there is misconduct committed on the part of a teacher and that an enquiry is warranted in that regard, then it can suspend the teacher and there is no protection for the teacher in case he is victimised by the Management. We want that the reasons for suspension must be intimated to the competent authority, and after getting permission from the authority which should satisfy itself that there is a *prima facie* case against the particular teacher, the Management might suspend him. Suspension itself is done as a sort of punishment. It is stated that the suspension will be for two months alone. Even for the period of two months, a person can be suspended on the ground that they are going to conduct an enquiry. Suspension of a teacher is itself a humiliating proposition and at least a *prima facie* case should be made out against him, before suspension. They must intimate the reasons to the competent authority and the authority should satisfy itself that there is a *prima facie* case and then give permission for suspension. For the mere fact that they want to suspend a teacher, they should not be allowed to do so.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தங்களை நான் முன்மொழிகிறேன்:—

"In clause 22—

(i) in sub-clause (3)(*a*), *delete* the words 'within the meaning of the Code of Conduct prescribed under sub-section (1) of section 21.'

(ii) *after* sub-clause (3) (*a*), *add* the following proviso :—

'provided that every teacher or other employee so suspended shall be paid subsistence allowance at such rates as may be prescribed."

(iii) in sub-clause (3) (*b*), *delete* the words 'deemed to have been'.

திருத்தங்கள் முறையாக வழிமொழியப்பட்டன.

**திரு செ. முத்துசாமி :** தலைவரவர்களே, கிளாஸ் 22 இலே சப் கிளாஸ் 3 (எ) விலே "கோட் ஆப் கான்டக்ட்" ஐ இணைப்பதை நான் நீக்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன். காரணம் இந்த வேலை நீக்கம் தற்காலிக வேலை நீக்கம். உடனடியாக எந்தக் காரணமுமில்லாமல் திடீர் திடீரென்று நீக்கி விடுகிறார்கள். சஸ்பென்ஷன் என்று சொல்லப்பட்டு, அந்த சஸ்பென்ஷனை அதிகாரிகளிடம் பர்மிஷன் வாங்கிச் செய்ய வேண்டுமென்று நிலைமை இல்லாததினாலே இந்த கிளாஸை "டெலீட்" செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே தெரிவித்து அப்ரூவல் வாங்கிச் செய்வதனாலே எந்தச் சங்கடமும் வராது. மானேஜர்களின் விருப்பு வெறுப்பிற்கு உட்பட்டு அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்படுகிறார்கள். அவர்கள் சஸ்பெண்ட் செய்து விட்டு, பிறகு காரணத்தை "கிரியேட்" பண்ணுகிற நிலைமை தான் இருக்கிறது. உண்மையாகவே சஸ்பெண்ட் பண்ணியிருக்கிற கேஸ்களும் இருக்கின்றன. அப்படி 10-க்கு 1 கேஸ் இருக்கலாம். 9 கேஸ்களும் திடீரென்று கோபம் வரும்போது செய்து விடுவது. உயர் நிலைப் பள்ளியில், தொடக்கப் பள்ளியில் இப்படி திடீரென்று சஸ்பெண்ட் பண்ணிவிட்டால், அந்த ஆசிரியர் தன் கௌரவம் பாதிக்கப்பட்டதாக நினைக்கிறார். மாணவர்கள் மத்தியில் கூட இந்த நிலைமை உருவாகிறது ஆகவே, வேண்டுமென்று செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், புரொடக்ஷன் இல்லாததினாலே இதை "டெலீட்" பண்ண வேண்டுமென்று கேட்டேன். புரொடக்ஷன் அமைச்சர் அவர்கள் கொடுத்தால், நான் இதை வற்புறுத்தாமல் விட்டு விடுகிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் சஸ்பென்ஷனிலே இருக்கும்போது சோற்றுக்கு இல்லாமல் இருப்பார்கள். சம்பளம் வாங்கி கடனுக்கும் கட்டிக்கொண்டிருக்கிற நிலையில் இருக்கும்போது, திடீரென்று சம்பளத்தை நிறுத்தி விட்டால் எப்படி? இதைப் பற்றி இந்தப் பிரிவில் ஒன்றுமே சொல்லவில்லை. சர்க்கார் சிப்பந்திக்கு சஸ்பெண்டானவுடனே, சப்ஸிஸ்டென்ஸ் அலவன்ஸ் என்று கொடுக்கிறார்கள். அப்படி வாழ்வு காலப் படி துணி மணிக்கு இல்லை—கொடுக்க வேண்டும். சாப்பிடுவதற்குப் பணம்



இல்லையென்றால், அவன் என்ன பண்ணுவான் ? இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டும். ஆகவே, "சப்ஸிஸ்டென்ஸ் அலவன்ஸ்" எப்படி சர்க்கார் சிப்பந்திக்குக் கொடுக்கப்படுகிறதோ அப்படி ஆசிரியர்களுக்கும் கொடுப்பதற்கு ஏற்ப புரொவிசோவை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் அல்லது 7-50
மற்றவர்களை வேலை நீக்கம் செய்தல், வேலையிலிருந்து அகற்றுதல் அல்லது பி.ப.
அவர்களின் பணி நிலையைக் குறைத்தல் அல்லது வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் பற்றி பகுதி 22 கூறுகிறது. உட்பகுதி (2)-ல் செய்யக் கருதியிருக்கின்ற திருத்தம் தேவையற்றதாகும். ஏனெனில் ஆணைகள் அனைத்தும் எழுத்து மூலமாகத்தான் இருக்கும். ஓரலாக எந்த ஆணையும் வராது. எழுத்து மூலமாகத்தான் வரும். அது சம்பந்தமாக எந்த சந்தேகமும் தேவையில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற திருத்தத்தின்படி எல்லா நேரங்களிலும் முன் அனுமதியைப் பெறுவது இயலக்கூடியதல்ல. கடுமையான அளவுக்கு முறையற்ற நடத்தை இருந்தால் மட்டுமே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படும். "கிராஸ் மிஸ்காண்டக்ட்" என்று சொல்லப்படுகின்ற நிலைமையில்தான் இது ஏற்படுகிறது. எவ்வளவு பெரிய டிக்ஷனரியைப் பார்த்தாலும், இதற்கு விளக்கம் பார்க்க முடியாது. நியாயத்தின் அடிப்படையில் "நேச்சுரல் ஜஸ்டிஸ்" அடிப்படையில் எல்லாம் நடைபெறுகிறது. நியாயமான காரணம் இருந்தால்தான், அந்த நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டு மாதங்கள் தான் அப்படி வைத்திருக்க முடியும். நியாயமான காரணம் இருந்தால் அதற்கு மேல் இரண்டு மாதங்களுக்கு வைக்கப்படலாம் என்று இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு முத்துசாமி அவர்கள் அரசாங்கத்தில் இடைக்கால நீக்கம் செய்து வைத்தால், "சப்ஸிஸ்டென்ஸ் அலவன்ஸ்" கொடுப்பது போல் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். இது நிதித் துறையைக் கலந்து ஆலோசிக்க வேண்டியது. இதை விதி முறைகளில் செய்து கொள்ளலாம்.

" Deemed to have been " என்று இருப்பதால் ஆட்டமேட்டிக்காக வந்து விடும். அதை எடுத்து விட்டால் ஒவ்வொரு தடவையும் ஒரு புது ஆர்டர் போட வேண்டிய நிலைமை வரும். அப்படிச் செய்தால் இரண்டு வாரம், மூன்று வாரம் என்று கால தாமதம் ஏற்படலாம். இது ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும். இது இருப்பது பாதுகாப்பாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர்கள் தங்கள் திருத்தங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறார்களா?

THIRU S. GANAPATHI : I do not press my amendments.

THIRU G. SWAMINATHAN : Sir, I do not press my amendments.

திரு செ. முத்துசாமி : இதற்கு விதிகளில் வகை செய்யப்படும் என்று உறுதி கூறியிருப்பதாலும், இப்பொழுது கூறியுள்ள வார்த்தைகள் "Deemed to have been " ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று கூறியிருப்பதாலும், நான் என்னுடைய திருத்தங்களை வற்புறுத்தவில்லை.

திருத்தங்கள், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

பிரிவு 22, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 23

THIRU G. SWAMINATHAN: Sir, I move the following amendments:—

"In Clause 23 (*a*), *add* the following at the end : 'or otherwise punished in any manner directly or indirectly'."

"In clause 23 (b)—

(i) after the words 'to such authority or officer as may be prescribed' *add* the words 'within such time as may be prescribed'.

(ii) *add* the following proviso before the Explanation, namely:—

'Provided that where any such appeal is preferred by any teacher or other person beyond the period prescribed, the authority or other officer concerned and authorised to receive and hear such appeals may in his discretion and for reasons to be recorded in writing, excuse such delay in presentation of the appeal and admit the same'."

The amendments were duly seconded.

THIRU G. SWAMINATHAN : Sir, the right of appeal has been given to a teacher or other person employed in any private school who is dismissed, removed, or reduced in rank or whose appointment is otherwise terminated, or whose pay or allowances or any of whose conditions of



[Thiru G. Swaminathan]

service are altered or interpreted to his disadvantage. Under any of the conditions mentioned in sub-clauses (*a*) and (*b*), he can prefer an appeal. If he is punished in any other manner not covered by the sub-clauses, then he will not be entitled to prefer an appeal. That is why I want the words " or otherwise punished in any manner directly or indirectly" to be added at the end of clause (*a*). Certain punishments are specifically mentioned in the provision. It may so happen that he might be punished either directly or indirectly in some other manner and in such cases, right of appeal should be provided for. The possibility of causing him other injuries and punishments has been, I think, omitted accidentally. Some other minor punishments which might not have been anticipated might be imposed and then if the teachers had no right of appeal, injustice would be caused to them.

Regarding the other amendment, I wish to say that no time-limit has been fixed for a person to prefer an appeal. The appeal might be preferred after six years or even 10 years. I think it is necessary that time-limit for preferring the appeal should be fixed and if there is any delay, the authority might excuse the delay in preferring the appeal after recording the reasons in writing.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதல் திருத்தத்தைப் பொறுத்தவரையில், தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றவர்கள் மீது தண்டனை விதித்துப் பிறப்பிக்கப்படுகின்ற ஆணைகளுக்கெதிராக மேல்முறையீடுகள் செய்வதுபற்றி 23-வது பகுதி கூறுகிறது. எற்பளிக்கப்படும் தண்டனைகள் அனைத்தும் அப்பகுதியிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே இத் திருத்தம் அவசியமற்றது. அதை ஏற்றுக்கொள்ள இயலாது.

அடுத்த திருத்தத்தில் கோரியுள்ள விவரங்கள் விதிகளில் கொடுக்கப்படும் என்று அந்தப் பகுதியிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே கொண்டுவரப்பட்டுள்ள இரண்டு திருத்தங்களும் அவசியமற்றவை என்று கூறிக்கொள்கிறேன்.

THIRU G. SWAMINATHAN: The teacher may be punished with a fine and such a punishment has not been mentioned here. Therefore, he may not be allowed to prefer an appeal against such punishment.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, காலத் தாழ்வால் இடையூறு ஏற்படாமலிருப்பதற்கு விதிமுறைகளில் ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, திருத்தங்களை நான் வலியுறுத்தவில்லை.

திருத்தங்கள், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டன.

பிரிவு 23, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 24, 25, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 26

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

**"In clause 26, after the words 'or other person' and before the words 'in any school' occurring in line 7, *insert* the words 'without prejudice to his pay, allowances and service'."**

திரு. கே. எஸ். கணபதி : நான் வழிமொழிகிறேன்.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, ரிட்ரென்ச் மெண்ட் ஏற்படுகின்றபோது, அரசாங்கத்தின் கீழ் உள்ள பள்ளிகளில் நியமிக்கப்படலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்லப் படுகின்றபோது, அந்த ஆசிரியர்கள் ஏற்கெனவே வாங்கி வந்த **Pay and allowances** பாதிக்கப்படாமலிருக்கும் என்று ஒரு பிரிவு போடப்படவில்லை. அப்படியில்லாமல் போய்விடுமோ, என்ற அச்சம் இருக் கின்ற காரணத்தால், அதைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியச் சமுதாயத்திற்கு இது ஒரு பாதுகாப்பாக இருக்கும். **"without prejudice to his pay, allowances and service.'** என்று சேர்த்துக்கொண்டால், ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும். அந்தப் பாதுகாப்பை அளிக்கும் வகையில், இதைத் தயவுசெய்து சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்ஸார்ப்ஷன், ஏற்றுக்கொள்வது என்பது பற்றி இந்தச் சட்டத்தில் கொண்டுவர முடியாது. விதி முறைகளில் ஏற்பாடு செய்துகொள்ளலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, விதிகளில் செய்துகொள்ளலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த உறுதியின் பேரில் நான் எனது திருத்தத்தை வலியுறுத்தவில்லை.



திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 26, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 27, 28, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டன.

பிரிவு 29.

THIRU K.S. GANAPATHI : Sir, I move the following amendments :—

**"In clause 29—**

(i) in sub-clause (1), *for* the words 'without a notice having been given to' *substitute* the following :—

'without the previous sanction in writing of'

(ii) *add* the following at the end of sub-calsue (1):—

7-40 பி.ப. 'The competent authority shall not grant such sanction without giving an opportunity to such teacher or teachers or other persons as may be affected directly or indirectly by such closure or discontinuance and holding an enquiry thereinto :

Provided that no teacher or other person employed as such in such school at the time of such closure or discontinuance and affected directly or indirectly thereby shall suffer any dismissal, reduction of rank, termination of service or other disability by reason of such closure or discontinuance'. "

திருத்தங்கள் முறையாக வழிமொழியப்பட்டன.

திரு கே. எஸ். கணபதி : இதிலே நான் முன்பு கூறியுள்ளபடி, ஒரு தனியார் பள்ளியில் ஒரு ஆசிரியரை வெளியே அனுப்ப வேண்டுமென்றால் ஒரு வகுப்பைக் குறைக்கலாம். ரிட்ரென்ச்மெண்ட் ஆகிவிடுகிறது. அத் தகைய ஆசிரியர்களுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் பணிப்பாதுகாப்பு இல்லை. எனவே அதைத் தெளிவுபடுத்த இந்தத் திருத்தத்தை முன்மொழி கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த விதியில் **'Without making such arrangements as may be prescribed'** என்று நாம் சொல்லப் போகிறோம். அதன் கீழ் வந்து விடுவதால் இந்தக் குறைபாடு இருக்க வழியில்லை.

திரு கே. எஸ். கணபதி : நான் வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 29, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 30.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:—

**"In clause 30, sub-clause (a) the words 'of not less than such value as may be prescribed'."**

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

திரு செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தப் பிரிவில் சொத்துக்களைப்பற்றி, "மூவபிள் பிராபர்டி" பற்றி, சொல்லப்பட்டிருக்கிறது. ரூபாய் 100 என்று "பிரிஸ்கிரைப்" பண்ணினால், மீதியிருக்கின்ற பொருள்களை அங்கே கட்டாயமாக வைத்திருக்கின்ற நிலையோ, எடுத்துக் கொள்கின்ற நிலையோ இருக்கிறது. ஆகையால் அது இல்லாமல் இருந்தால், "மூவபிள் பிராப்பர்டி" என்று சொல்லும்போது வசதியாக இருக்கும். அப்போது தவறு செய்வதற்கு வழியிருக்காது. இப்போது தவறு செய்வதற்கு வழியிருக்கிறது. அதை நீக்கிவிட்டால், நியாயமாக இருக்கும் என்று கருதுகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது போதுமானது என்ற கொள்கையின் அடிப்படையில் தான் நாம் இந்த விதிகளைச் செய்திருக்கிறோம். ரூபாய் 100 என்றோ, ரூ. 25 என்றோ வைக்கலாம். ஒரு குறிப்பிட்ட தொகையை வைக்காவிட்டால். பென்சில், குண்டூசிகள் கூட அவற்றின் கீழ் வந்தாலும் வந்துவிடலாம். 20, 25 ரூபாய் என்று வைத்தால் தான், அதற்கு மேலே உள்ள பொருள்களைக் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும் அதைக் கணக்குப் பார்த்து, துவக்கப் பள்ளிக்கு இவ்வளவு, உயர்நிலைப்பள்ளிக்கு இவ்வளவு என்று வைத்துக் கொள்ளலாம். ஆகவே, அதனால் பாதகம் ஒன்றும் ஏற்படாது.

திரு செ. முத்துசாமி : நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள், பள்ளிக்கூடத்தில் உள்ள பொருள்களைக் காப்பதற்கு, சிறிய பொருள்களைத் தவிர, மற்றவை எல்லாம் வரும் முறையில் விதிகள் வகுக்கப்படலாம் என்று கூறியதற்கு இணங்க, நான் இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.



THIRU C.V. RAJAGOPAL : On a point of order, Sir. The hon. Member Thiru S. Muthuswami was a member of the Joint Select Committee and he could have said all these things in the Committee itself. After having been on the Committee, why should he bring in so many amendments here?

MR. CHAIRMAN: The hon. Member may please resume his seat. For the reason that he was on the Committee, we cannot deny his rights to bring in amendments.

திரு செ. முத்துசாமி : ஏற்கெனவே என்னுடைய கருத்தை dissenting note ஆக ரிப்போர்ட்டில் பதிவு செய்திருக்கிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 30, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 31.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : நான் எனது திருத்தத்தை முன்மொழியவில்லை.

பிரிவு 31, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 32.

திரு செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**"In clause 32 sub-clause (2)."**

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆங்கிலோ-இந்திய பள்ளிகளும் பெர்மிஷன் வாங்கித்தான் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோம். அந்தக் கிளாஸ் இருந்தால்தான், அவர்கள் ஏதாவது நன்கொடை போன்றவைகள் வசூலித்தால் சொல்லிவிட்டுத்தான் செய்ய வேண்டுமென்று சொல்லலாம். இந்தக் கிளாஸ் இல்லாமல் இருந்தால் அவரவர்கள் இஷ்டப்படி செய்கின்ற நிலைமை ஏற்படும் ஆகவே, அந்தக் கிளாஸ் இருப்பது நல்லது தான்.

திரு. செ. முத்துசாமி : புரொவிஷன் இல்லாமல் இருந்தால் வசூல் செய்ய முடியாமல் இருக்குமோ என்பதால்தான் அவ்வாறு கொடுத்திருந்தேன். இந்தக் கிளாஸ் அவர்களைக் கட்டுப்படுத்துவதாக இருந்தால், ஒழுங்குபடுத்தி, அவர்களுடைய நிதிக்குக் கணக்குக் காட்ட வேண்டும் என்று இருப்பதால், நான் என்னுடைய திருத்தத்தை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 32, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 33, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 34.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

" In clause 34, *for* the existing sub-clause (2), *substitute* the following :

"(2) Before making an order under sub-section (1), the Government shall give the educational agency an opportunity of making its representations and state the reasons for such take-over."

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, பள்ளிகளை அரசு திரும்ப எடுத்துக் கொள்ளுதல் என்ற அடிப்படையில், விதி முறைப்படி பார்த்தால், அது பெரிய ஆபத்து இல்லாவிட்டாலும் கூட 5 ஆண்டுகள் கழித்து திருப்பிக் கொடுத்து விடுவதுபோல் இருந்தாலும் கூட, "டேக்கிங் ஓவர் தி மானேஜ்மெண்ட்" என்ற வார்த்தையானது ஏதோ அரசு பள்ளியை எடுத்துக் கொள்வது போல் இருக்கிறது. அதற்கு மாறாக, ஸ்பெஷல் ஆபீசர் மாதிரி போட்டு நிர்வாகம் செய்வது என்பது போல், வார்த்தைகளுக்கு வடிவம் கொடுத்தால், திரு. கணபதி அவர்கள் சொல்லியது போல், வழக்கு மன்றத்திற்குப் போகின்ற வாய்ப்புக்களைத் தவிர்த்து விடலாம். "டேக்கிங் ஓவர்" என்று தலைப்பு இருக்கிறதே தவிர, அரசின் நோக்கம் அந்தப் பள்ளியை எடுத்துக்கொள்வது போல் அல்ல. தற்காலிக ஏற்பாடாக அந்தப் பள்ளியைத் திருத்துகின்ற அடிப்படையில் இருக்கிறது. தலைப்பு "டேக்கிங் ஓவர் தி மானேஜ்மெண்ட்" என்று இருப்பது, அந்தப் பள்ளியை எடுத்துக்கொள்வது போன்று ஒரு உணர்வைத் தருகிறது. அரசு இதை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்பெஷல் ஆபீசர் போட்டு, திருத்தமாக நடத்தி பிறகு திரும்பக் கொடுப்பது என்று விதி இருக்க வேண்டும். அது போன்ற சலுகையை எல்லா தனியார் பள்ளிகளுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. செ. முத்துசாமி : "ஆன் ஏ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்" இப்போது "கோரம்" அவையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நாம் ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போட வேண்டுமென்றால், சட்டப்படி "டேக் ஓவர்" செய்தால் தான் முடியும். "டேக் ஓவர்" செய்யாமல் சட்டப்படி போட முடியாது. இதிலே தவறு எதுவும் இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : இந்த விதியை எல்லோருக்கும் விதியாக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : திருத்தத்தை வலியுறுத்துகிறீர்களா ?

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை.—

"In clause 34, *for* the existing sub-clause (2), *substitute* the following:—

'(2) Before making an order under sub-section (1), the Government shall give the educational agency an opportunity of making its representations and state the reasons for such take-over.' "

திருத்தம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 34, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 35, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 36.

MR. CHAIRMAN : The amendment given notice of by Thiru S. Muthuswamy and Thavathiru Kundrakkudi Adigalar is out of order, as it is negative in character.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, மைனாரிட்டி பள்ளிகளுக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது. மெஜாரிட்டி பள்ளிகளை டேக் ஓவர் பண்ணும் போது, ஆசிரியர்களுடைய பணிக்காலத்திற்கோ, மாணவர்களுக்கோ எந்தவித சங்கடமும் ஏற்படுவதில்லை. ஆனால் மைனாரிட்டியினர் நடத்தும் பள்ளிகளை "டேக் ஓவர்" செய்ய முடியாது.

[திரு. செ. முத்துசாமி]

ரெகக்னிஷனைத்தான் "கான்சல்" செய்ய முடியும். அப்படிப்பட்ட நிலைமையில் மாணவர்களை அது வெகுவாகப் பாதிக்காது. அவர்களை வேறு பள்ளியில் சேர்ந்து கொள்ளலாம். ஆனால், ஆசிரியர்களுடைய நிலைமைதான் ரொம்பச் சங்கடமாகப் போய்விடுகிறது. இந்த ஆசிரியர்களுக்கு உத்தியோகப் பாதுகாப்பற்ற நிலைமை வந்து விடுகிறது.

They will be thrown out in the streets. There is discrimination between teachers working in minority schools and those in other schools.

மைனாரிட்டியினர் நடத்தும் பள்ளியில் வேலை செய்தால் ஒரு மாதிரி, மெஜாரிட்டியினர் நடத்தும் பள்ளியில் வேலை செய்தால் ஒரு மாதிரி
4.50 பி.ப. யென்று ஆசிரியர்களுக்கு "டிஸ்கிரிமினேஷன்" இருக்கக்கூடாதென்பதற்காக, இதிலே ஒரு "புரவிஷன்" ஏற்படுத்த வேண்டும். மைனாரிட்டியார் நடத்தும் பள்ளிகளை "டேக் ஓவர்" பண்ண முடியாததால், அங்கீகாரம் மட்டும்தான் கான்சல் செய்யப்படுமென்று சொல்லும்போது, பக்கத்திலேயே ஒரு பள்ளியைத் திறந்து, அந்த ஆசிரியர்களை அதிலே எடுத்துக் கொள்வதற்கான ஏற்பாட்டை, சட்ட ரீதியாகக் கொடுத்தால், சிறுபான்மையினர் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு நியாயத்தை அளிக்க முடியும். அந்த ஆசிரியர்களுக்கு இப்போது பாதுகாப்பு இல்லாமலிருப்பதால், உடனடியாகப் பாதுகாப்பு அளிப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மைனாரிட்டி சமுதாயம் புனிதமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடில்லை. அப்படிப்பட்ட பாதுகாப்பு மைனாரிட்டியார் நடத்தும் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மைனாரிட்டி நிர்வாகத்தின் கீழ் வேலை செய்பவர்களுக்காக, இந்த செக்ஷனின்கீழ் ஒரு கிளாஸ் போட்டு, அவர்களுக்கு பாதிப்பு இல்லாமல், சம்பளம் கிடைப்பதற்கான, வேலை செய்வதற்கான வாய்ப்பினைச் செய்துவிட்டீர்களென்றால், ஆசிரியர்கள் மத்தியில் "டிஸ்கிரிமினேஷன்" இராது. எனவே, அந்த "டிஸ்கிரிமினேஷன்"-கள் நீக்கப்பட வேண்டும். "கான்ஸ்டிடியூஷன்"-படி டிஸ்கிரிமினேஷன் இருப்பது சரியா? பண்டமெண்டல் ரைட்ஸ் என்பது எல்லோருக்கும் இருக்கிறது. எனவே எய்டட் பள்ளிகளுக்கு ஒரு மாதிரி, இன்னொரு பள்ளிக்கு இன்னொரு மாதிரி என்றிருப்பது சரியா? அந்த ஆசிரியர்களுக்கு பாதுகாப்பு எப்படி? இதற்கு "புரொடக்ஷன் பில்-" என்று பெயர். அதை எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள். எனவே அந்த ஆசிரியர்களைப் பாதுகாப்பதில் மாறுபாடு இருக்கலாமா? இவைகளைச் சிந்தித்து, முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, "அப்சார்ப்ஷன்"—எடுத்துக் கொள்வதைப் பொறுத்து, சிறுபான்மையினர், பெரும்பான்மையினர் என்ற நிலைமை வராது. 26-வது விதியே "அப்சார்ப்ஷன்" கீழ் வரலாம் அல்லது "எக்சிகியூடிவ் ஆர்டர்" மூலம் செய்யலாம். எனவே ஒரு பள்ளியை மூடுவதற்கு நிர்வாகிகள்





[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

காரணம் என்று வரும்போது—ஆசிரியர்கள் அல்ல என்று வரும்போது, அவர்களுக்கென்று "எக்சிகியூடிவ் ஆர்டர்"-ல் ஒரு தனிப் பள்ளியை ஏற்படுத்தி, அவர்களை அதிலே சேர்த்துக் கொள்ளலாம். அப்படிச் சேர்த்துக் கொள்ளும்போது, நாம் மற்ற பள்ளிகளுக்கு எப்படி அவர்களுடைய பணிக்காலம் மற்றவைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறோமோ, அப்படி இவர்களுக்கும் எடுத்துக் கொள்ளப்படும். ஆக, அதை இந்தச் சட்டத்திலே கொண்டு வர இயலாது. ஆனால், அதை 'எக்சிகியூடிவ் ஆர்டர்'-ல் செய்யலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, ஒரு விளக்கம் அறிய விரும்புகிறேன். ஒரு பள்ளியின் அங்கீகாரத்தை "கான்சல்" செய்து, அங்குள்ள ஆசிரியர்களை நீக்கி, மறுபடியும் சேர்த்துக் கொள்வதற்கு இடையிலே இருக்கக்கூடிய காலத்திற்கு அவர்கள் சம்பளம் இல்லாமல், வாழ்க்கையை நடத்த வழியில்லாமல் இருக்கிறார்கள். மில்லிலே ஒரு தொழிலாளிக்கு வேலையில்லாமல் போய்விட்டாலும், "சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ்" என்று அவர்களுக்குக் கொடுக்கும்போது, தெருவிலே நிற்கக்கூடிய ஆசிரியர்களுக்கு, மற்றொரு இடத்தில் அவர்களை ஏற்றுக் கொள்ளுகிற வரையில் அவர்கள் வாழ்க்கைக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்வதற்கு, விதிகளிலே தக்க மாறுதல்களைச் செய்ய முடியுமாவென்று அறிய விரும்புகிறேன். மேலும் அப்படிச் செய்வதற்கு அரசு முன்வருமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சிறுபான்மையினர் பள்ளிகளைப் பொறுத்த மட்டுமல்லாமல், எல்லாப் பள்ளிகளுக்கும் இந்தத் தன்மைகள் வரும். அதற்கான ஏற்பாடுகளைப் பண்ணும்போது, விதி முறைகளினாலோ அல்லது "எக்சிகியூடிவ் ஆர்டர்" மூலமாகவோ நாம் அதைக் கவனிக்கலாம்.

பிரிவு 36, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 37 முதல் 41 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:—

பிரிவு 42.

"In clause 42, *add* the following as new sub-clause (5) :—

"(5) The Government shall appoint an Appellate Tribunal who will be in the rank of Judge of the High Court or a person qualified to be Judge of the High Court. The Appellate Tribunal shall deal with the appeals against the orders of the Government under section 34."

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தில், "டிரிபியூனல்", சப்-ஜட்ஜ் தரத்தில் நியமிக்கப்படுமென்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் விதி 34-ல் பள்ளிகளை எடுத்துக் கொள்கிற அதிகாரத்தையும், அது சம்பந்தமான உத்தரவையும் அரசு பிறப்பிக்கும் என்றிருக்கிறது. ஒரு அரசு பிறப்பிக்கும் உத்தரவை ஒரு "சபார்டினேட் ஜட்ஜ் லெவல்"-ல் இருக்கிறவர்கள் எவ்வளவு தூரம் நடுநிலை உணர்வோடு பரிசீலிக்க முடியுமென்பதை எண்ணிப் பார்த்து, அரசினுடைய உத்தரவுக்கு மேலாகப் பரிசீலிக்கிற "அப்பலேட் டிரிபியூனல்" ஏற்படுத்தி, அதற்கு உயர்நீதி மன்றமாக, அந்த அந்தஸ்து, தரம் போன்றவைகளை வைக்கச் சொல்கிறேனேயொழிய வேறு ஒன்றுமல்ல. அரசினுடைய ஆணைகளைப் பரிசீலிப்பதற்கு டிரிபியூனலாக உயர்நீதி மன்ற அளவில் வைப்பது பாதுகாப்பாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனால் ஒன்றும் தவறில்லை. "அதற்கும் குறையாத அளவுக்கு நீதிபதிகளைப் போட வேண்டும்" என்று சொல்லியிருக்கிறோம். ஹைகோர்ட் நீதிபதியைப் போட்டாலும் போடலாம்; டிஸ்டிரிக்ட் ஜட்ஜைப் போட்டாலும் போடலாம்; சபார்டினேட் ஜட்ஜைப் போட்டாலும் போடலாம் டிரிபியூனல் எவ்வளவு ஏற்படுத்தப் போகிறோமென்பதைப் பொறுத்துத் தான், நீதிபதிகளை நியமிக்கும் வாய்ப்பு இருக்கிறது. சாதாரணமாக அரசாங்கத்தினுடைய உத்தரவை, இப்போதே பல்வேறு கோர்ட்டுகளிலே கொண்டுவருவதற்கான வழி இருப்பதன் காரணமாக, இதனால் எவ்வித பாதகமும் ஏற்படாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 42, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 43 முதல் 45 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவுகள் 46 முதல் 48 வரை.

MR. CHAIRMAN : The amendments given notice of by Thavathiru Kundrakkudi Adigalar are out of order as they are negative in character.

பிரிவுகள் 46 முதல் 48 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



பிரிவு 49.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

"In clause 49, *for* the words 'such offence made by an authority or officer authorised by the Government in this behalf.' *substitute* the words 'such offence made by the Director of School Education in this behalf.' "

திருத்தம் முறையாக வழிமொழியப்பட்டது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின்கீழ் கிரிமினல் வழக்குகளைத் தொடரும்போது, "காம்பிடன்ட் அதாரிடி" என்று, மாவட்ட அளவில் அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பிராசிகியூஷனுக்குப் பெர்மிஷன் கொடுப்பதை, மாநிலக் கல்வி இயக்குநர் அளவுக்கு, கொஞ்சம் உயர்வான அந்தஸ்தில் வைப்பது பாதுகாப்பாக இருக்கும்; கௌரவமாகவும் இருக்கும். இந்தத் திருத்தத்தை, அந்த அடிப்படையில் நான் கொடுத்துள்ளேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, யார் அதாரிடி என்று நாம் விதி முறைகளில் நிர்ணயிக்கப் போகிறோம். பள்ளிக் கல்வி இயக்குநர் புகார் ஒன்றைக் கொடுத்தால் மட்டுமே, ஒரு நீதி மன்றமானது இச் சட்டத்தின்கீழ் செய்யப்படும் ஒரு குற்றம் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று இத் திருத்தத்தில் கூறப்படுகிறது. இச் சட்டத்தின்கீழ் செய்யப்படும் ஒவ்வொரு குற்றம் தொடர்பாகவும் பள்ளிக் கல்வி இயக்குநர் நேரடியாகக் கவனிக்க இயலாமல் போகக்கூடும். ஆகவேதான், இருக்கிற அளவுக்கு நிலைமைகளை அறிந்து, அதற்கான அதிகாரிகளை நாம் நியமித்துக்கொள்ளலாம். இயக்குநர் என்று சொல்லி, மாநிலம் முழுவதும் வரும்போது, காலத் தாழ்வு ஏற்படலாம். ஆதலால் இந்த விதி முறையே இருக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, நான் எனது திருத்தத்தை வலியுறுத்தவில்லை.

திருத்தம், அவையின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 49, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 50.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : நான் எனது திருத்தத்தை முன்மொழியவில்லை.

பிரிவு 50, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 51 முதல் 55 வரை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 56.

MR. CHAIRMAN: The amendment given notice of by Thiru S. Muthuswamy is out of order, as it is an amendment consequential on an earlier amendment which has been put and lost.

பிரிவு 56, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 57, அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1.

8·00 பி.ப. THIRU K. S. ABDUL WAHAB: Sir, I move the following amendment:—

"In clause 1, sub-clause (3) *add* the following at the end :—

'excepting those maintained and administered or proposed to be established, maintained and administered by all the religious and linguistic minorities in the State.'"

திரு.எம்.எம். பக்கர்: தலைவர் அவர்களே, நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, என் திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"In clause 1, sub-clause (3) *add* the following at the end :—

'excepting those maintained and administered or proposed to be established, maintained and administered by all the religious and linguistic minorities in the State.'"

திருத்தம் அவையின் முடிவிற்கு விடப்பட்டது.



மாண்புமிகு மேலவைத் தலைவர்: மறுப்போரே அதிகம்.

THIRU K. S. ABDUL WAHAB: Mr. Chairman, Sir, I want a division.

அழைப்பு மணி ஒலிக்கப்பட்டது. வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

ஏற்போர்.

1. திரு. கே. எஸ். அப்துல் வகாப்.
2. திரு. எம். எம். பக்கர்.

மறுப்போர்.

1. மாண்புமிகு திரு. என். வி. நடராசன்
2. திரு. ஜி. பராங்குசம்.
3. திரு. டி. கே. பொன்னுவேலு.
4. திரு. சி. வி. இராசகோபால்.
5. திரு. எ. பி. ஜனார்த்தனம்.
6. திரு. கே. அறிவழகன்.
7. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி.
8. திரு. ஈ. எம். ஹனிபா.
9. திரு. ஆர். சக்திமோகன்.
10. திரு. ஜார்ஜ் கோமகன்.
11. திரு. இராம சுப்பையா.
12. திரு. மு. மாசிலாமணி.
13. திரு செ.முத்துசாமி.

நடுநிலையாளர்.

ஒருவருமில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஏற்போர் இருவர் ; மறுப்போர் 13. திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 1, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு, ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/72) நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை : "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973ஆம் ஆண்டு, ஏற்புப் பெற்ற தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/72) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் யாவும் முடிந்தன. அவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுகிறது.

8·04 பி.ப. அவை, பின்னர் காலவரையறையின்றி, ஒத்திவைக்கப்பட்டது.

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

**114. Notification issued with Roc. No. 218951/72 E4, dated 20th July 1973, in regard to extension of certain provisions relating to Building Regulations of the Tamil Nadu District Municipalities Act, 1920, to Komaralingam Town Panchayat in Coimbatore district. [*Laid on the table of the House under section* 199(2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958) ].**

**115. Notification issued with G. O. Ms. No. 2173, Rural Development and Local Administration, dated the 1st October 1973, regarding the reconstitution of the Tamil Nadu Khadi and Village Industries Board with effect from the 3rd October 1973. [*Laid on the table of the House under section* 29 (3) *of the Tamil Nadu Khadi and Village Industries Board Act*, 1959 (*Tamil Nadu Act* 18 *of* 1959).]**



### *B. Reports, Notifications and Other Papers.*

*** 58. The Tamil Nadu Recognised Private Schools (Regulation) Bill, 1973 (L.A. Bill No. 24 of 1972), as passed by the Legislative Assembly.**

---

*Circulated to all M.L.C.s' on 4th December 1973.

[202 [illegible] 4-[illegible]]

## L.A. BILL No. 24 OF 1972.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the regulation of recognised private schools in the State of Tamil Nadu.*

**Be** it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows:—

## CHAPTER I.

### PRELIMINARY.

